ஸ்ரீ ராமானுஜன்

[illegible] 7—8, 9—10.

[illegible]

[illegible], [illegible] —

1955.

[illegible]
208231

ஸ்ரீ:

1513

ஸ்ரீராமாநுஜன் 79, 80

வருடச் சந்தா ரூ. 5.

750
4-56

OFFICE OF THE REGISTRAR OF ...
12 NO. 1956
MADRAS

இராமாநுச நூற்றந்தாதி.

பொய்யைச்சுரக்கும் பொருளைத்துறந்து * இந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்கு மிராமானுசன்நிற்க * வேறுநம்மை
உய்யக்கொள்ளவல்ல தெய்வ மிங்கியாதென்றுலர்ந்தவமே
ஐயப்படாநிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. 79

நல்லார்பரவு மிராமானுசன் * திருநாமம் நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள்யவர் * அவர்க்கே
எல்லாவிடத்திலு மென்றுமெப்போதிலு மெத்தொழும்பும்
சொல்லால் மனத்தால் கருமத்தினால் * செய்வன் சோர்வின்றியே. 80

P. B. அண்ணங்கராசாரியர்,
க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்

1955 ஜூலை௴ மன்மத௵ ஆனி௴

ஸ்ரீராமாநுஜன் 79, 80

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 8	1955ளு ஜூலை மன்மதளு ஆடி, ஆவணி	மலர் 7, 8

பவித்ரயாத்திரையின் அறிவிப்பு.

முன்னிதழ்களில் விரிவாகத் தெரிவித்திருந்தபடி 16—6—55 முதல் பவித்ரயாத்திரை பரமபோக்யமாகவும் பரமபாவனமாகவும் நடைபெற்று வருகின்றது. 76 நபர்கள் சுகமாக இருந்து பிரயாணம் செய்வதற்கு ஸௌகரியமான ஸ்பெஷல் ரைல் போகியை ஸ்வாதீனமாக வைத்துக் கொண்டு இந்த யாத்திரை செய்யப் படுவதால் எங்கும் சிரமமென்பதைக் காணாமல் யாத்திரை பேரின்பமாக நடந்து வருகிறது. கோதாவரி, ஸிம்ஹாசலம், ஸ்ரீகூர்மம் என்கிற ஸ்தலங்களை வரிசையாக அநுபவித்தோம். ஸ்ரீகூர்மத்தில் அமாவாஸ்யையும் ஸூர்யோபராகமும் ப்ராப்தமானபடியாலே அங்கு உத்தேசத்திற்கு மேல் அதிகநாள் தங்கியிருக்க நேர்ந்தபடியாலே புரீஜகன்னாத ஸேவையொன்று மாத்திரம் இழக்க நேர்ந்தது. மற்றபடி ஓரிடத்திலும் ப்ரோக்ராம் தவறாமல் யாத்திரை ஸக்ரமமாக நடந்து வருகிறது. ஸ்ரீகூர்மத்திற்குப் பிறகு கல்கத்தாவில் தாமதித்து, பிறகு கயாக்ஷேத்திரம், காசீ, பிரயாகை, சித்ரகூடம், அயோத்யை, கான்பூர், நைமிசாரணியம் இவை ஸேவித்துக் கொண்டு 8—7—55ல் ஹரித்வாரம் வந்து சேர்ந்திருக்கிறோம். இந்த பவித்ரயாத்திரையில் அந்வயித்திருக்கிற அத்யாபகஸ்வாமிகளும் வேதபாராயணங்களை எங்கும் ஆனந்தமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஸ்ரீமத் உபயவே. பண்டிதராஜ. (ஸ்ரீரங்கம்) மெ. ஸுந்தராசார்யஸ்வாமி வைதிக கோஷ்டிக்குத் தலைமை வஹிப்பவர்; ஸ்ரீ. உ. வே. (அட்வகேட்) கள்ளக்குறிச்சி ஆராவமுதாசாரியர் ஸ்வாமி லௌகிக கோஷ்டிக்குத் தலைமை வஹிப்பவர்.

இனி ஹரித்வாரத்திலிருந்து பதரிகாச்ரமயாத்திரை நடைபெறப் போகிறது. (மற்றது பின்வரும்.)

அ 8 ஹ 31
1033

ஸ்ரீ:

விரோதமும் பரிஹாரமும்.

பகவானுடைய படைப்பு விசித்திரமானது. சிலவஸ்துக்களை ஒன்றோடொன்று விரோதப்படுமவையாகவும், சில வஸ்துக்களைப் பரஸ்பரம் ஆநுகூல்யம் பொருந்தியவைகளாகவும் படைத்திருப்பதைக் காணுகின்றோம். ஆநுகூல்யம் பொருந்திய வஸ்துக்களை விட்டிட்டு, ஒன்றோடொன்று விரோதப்படுமவையான வஸ்துக்களைப் பற்றி இங்குச் சிறிது பேசுவோம்.

இருட்டுக்கு விளக்கு விரோதி; ஸர்ப்பத்திற்கு கருடன் விரோதி; பசுவுக்குப் புலி விரோதி; எலிக்குப் பூனை விரோதி......என்றிப்படி ப்ரத்யக்ஷமாகப் பார்த்து வருகின்றோம். இந்த விரோதங்களுக்குப் பரிஹாரமுறையையும் பகவான் ஒருவாறு செய்துவைத்திருக்கக் காண்கிறோம். இருட்டுக்கு விளக்கு விரோதி என்பதை எடுத்துக்கொள்வோம். விளக்கினொளியைக்கண்டவாறே இருள் அகன்றுபோகிறதென்பது ப்ரத்யக்ஷம். ஸர்ப்பமானது கருடன்வாயிலகப்பட்டுத் துன்புறுவதுபோலவும், எலி பூனைவாயில் சிக்கித்துன்புறுவதுபோலவும் இருள் விளக்கின்வாயிலகப்பட்டுத் துன்புறுவதென்பது கிடையாது. விளக்கு உள்ளவிடத்தே இருள் தலைகாட்டாது அகன்று போகின்றது. இருட்டென்று தனியேயொரு பதார்த்தம் கிடையாதென்றும் ப்ரகாசத்தின் அபாவமே இருட்டென்றும் கொள்ளுவாருளர்.

இப்படிப்பட்ட விரோதங்கள் பரிஹரிக்கக் கூடியவைகளா? என்று பார்க்குமளவில்; இந்த விரோதங்கள் ஈச்வரஸ்ருஷ்டியிலேயே ஏற்பட்டவைகளாதலால் பரிஹரிக்கமுடியாதவையென்றே சொல்லவேணும். ஆனால் இதிஹாஸபுராணங்களில் ஸுமுகனென்கிற ஸர்ப்பராஜனுக்கும் கருத்மானுக்கும் ஸஹஜவிரோதம் நீங்கி ஸ்நேஹமேற்பட்ட கதையைக் காணுகின்றோம். ம்ருகங்களை வைத்துக்கொண்டு விநோதக்காட்சிகள் காட்டுமவர்கள் [ஸர்க்கஸ் காரர்கள்] புலியையும் எருதையும், யானையையும் சிங்கத்தையும் ப்ரதிகூலபாவம் நீங்கி ஆநுகூல்யத்தோடு வாழும்படி பழக்கிவைத்திருக்கிறார்கள்.

பெரியாழ்வார் திருமொழியில் கோவர்த்தனமலையை வருணிக்கும் பதிகத்தில் "இலை வேய் குரம்பைத் தவமா முனிவர் இருந்தார் நடுவே சென்று அணுர் சொறியக், கொலைவாய்ச் சின வேங்கைகள் நின்று உறங்குங் கோவர்த்தன மென்னுங் கொற்றக்குடையே" என்கிற பாசுரத்தில் பதினறடி வேங்கைப் புலிகள் பர்ணசாலைகளில் வாழும் முனிவர்களினருகே வந்து நின்று கொண்டு அவர்கள் கழுத்தைச் சொறிய நித்ராஸுகமநுபவிப்பதாகச் சொல்லப்படுகிறது. இது யோகஸித்தியின் பிரபாவத்தினுல் விரோதம் கழிந்த நிலை.

கம்பராமாயணத்தில் சித்திரகூடப் படலத்தில் பெருமான் இளையபெருமாளை நோக்கிக் கூறுவதாக ஒருபாட்டு உள்ளது;—

"இடிகொள்வேழத்தை யெயிற்றோடு மெடுத்துடன் விழுங்குங்
கடியமாசுணம் கற்றறிந்தவரென வடங்கிச்
சடைகொள்சென்னியர் தாழ்விலர் தாமிதித்தேறப்
படிகள்தாமெனத் தாழ்வரை கிடப்பனபாராய்."

யானைகளை விழுங்குமாற்றல் வாய்ந்த மலைப் பாம்புகள் சித்திரகூடமலைத் தாழ்வரைகளிலே வரிசையாகக் கிடப்பதாகவும், அவற்றைப் படிகளாகக் கொண்டு முனிவர்கள் மிதித்தேறுவதாகவும் இதிற் சொல்லப்படுகிறது. இதுவும் யோகஸித்தியின் பிரபாவத்தினுலாயதே.

மஹான்களின் உக்திகளில் விரோதம் காணப்படுவதுண்டு. ஒரு பெரியார் சொல்லியிருப்பதற்கு முரணுக மற்றொரு பெரியார் சொல்லியிருந்தால் அவ்விருவர்தம் உக்திகளுக்கு விரோதம் கருதப்படுகிறது. ஒருவர்தாமே எழுதிய நூற்களுள் ஓரிடத்திற் சொன்னதற்கு முரணுக மற்றோரிடத்தில் சொல்லப்பட்டிருக்குமானுல் அங்கும் விரோதம் கருதப்படுகிறது. இத்தகைய விடங்களில் பரிஹாரம் காண்பது பலநூல்களில் ஆராய்ச்சிவல்லமை பெற்ற நுண்ணறிவாளிகளுக்கே எளிதாகும். இவ்விஷயத்தில் பல வகைகளுண்டு; விரோத முள்ள விடங்களிலே அது தோன்றுமற் போகும் சிலர்க்கு. விரோதமில்லாத விடங்களிலே அஃதிருப்பதாகத் தோன்றும் சிலர்க்கு. நேரியவழியிற் காணவேண்டிய பரிஹாரத்தை விபரீதமான வழியிற் காண்பர் சிலர். மிக வெளியவழியிற் காணக்கூடிய பரிஹாரத்தை அங்ஙனங் காணுது காடுபாய்ந்த கொடுவழியிற் காண்பர் சிலர். இத்தகைய பல் வேறுவாசிகளைப் பண்டிதர்களிடத்தே பார்க்கின்றோம்.

பெரியார்களின் உக்திகளில் உண்மையில் விரோதம் இருக்கவேமாட்டாது. புல்லறிவாளிகளின் ஆபாத ப்ரதீதியில் விரோதம் தோன்றுவது ஸஹஜம். அங்ஙனம் தோன்றுமிடத்துப் பரிஹாரமுறை காட்டவேண்டியது அவசியமேயாகும். பூர்வாசாரியர்கள் தங்களுடைய க்ரந்தங்களிலே சில பல விரோதங்களைச் சங்கித்துப் பரிஹார முணர்த்துவதுண்டு. சில விரோதங்களைச் சங்கித்துப் பரிஹாரம் வந்தவிடத்தே கண்டுகொள்க வென்று எழுதிப் போவது முண்டு.

ஸூர்யன் ஏழு குதிரைகள் பூட்டின ஒற்றைச் சக்கரத் தேரின் மீதேறித்திரிவதாக வடமொழி வேதத்திலும் தென்மொழி வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. "ஸப்த யுஞ்ஜந்தி ரதமேகசக்ரம்" — [ஸப்த யுஞ்ஜந்தி ரதமேக சக்ரம்] என்பது வடமொழிவேதம்; "காரார்புரவியேழ்பூண்ட தனியாழித் தேரார் நிறைகதிரோன் மண்டலத்தை" என்பது தமிழ்வேதம். இங்ஙனே சொல்லியிருக்கச் செய்தேயும் வடமொழி வேதத்திலேயே "ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமா — ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமா" என்கிற வாக்யமும் ஓதப்பட்டு வருகிறது. ஒரு குதிரையே உள்ளதாக இந்த வாக்யம் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கின்றது. ஆக, "ஸப்த யுஞ்ஜந்தி ரதமேகசக்ரம்" என்கிற (முன்னே உதாஹரிக்கப்பட்ட) வாக்யத்திற்கும் "ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமா" என்கிற (பின்னே காட்டப்பட்ட) வாக்யத்திற்கும் பரஸ்பர விரோதமிருப்பது வ்யக்தமாகத் தெரிகிறது. இந்த விரோதத்தை ஆசார்ய ஹ்ருதயத்தில் (53) "புரவியேழொருகாலுடையதேரிலே" என்னும் சூர்ணையின் வியாக்கியானத்திலே மணவாளமாமுனிகள் திருவுள்ளம்பற்றி இதற்குப் பரிஹாரம் வந்த விடத்தே கண்டு கொள்வதென்று அருளிச் செய்துள்ளார்; அவ்விடத்து ஸ்ரீஸூக்திகளாவன — "* ஸப்த யுஞ்ஜந்தி ரதமேகசக்ரம் * என்றும் * ஹயாஸ்ச ஸப்த ச்சந்தாம்ஸி.......* ஹரயோ ரவே: * என்றும் சொல்லக்கடவதிறே; * ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமா * என்றதுக்கு ஹ்ருதயம் ஏததநுகுணமாக வ்யாக்க்யாதமான விடங்களிலே கண்டுகொள்வது" என்று. இரண்டு உக்திகளுக்குப் பரஸ்பரவிரோத மிருப்பதாய் ஸ்பஷ்டமாக எடுத்துக்காட்டாமல் ஸ்ரீஸூக்தி விந்யாஸம் செய்தருளினது மணவாளமாமுனி

களுக்கு அஸாதாரணமான இயல்பு. *ஸப்த யுஞ்ஜந்தி* என்கிற வாக்யமும் *ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமா* என்கிற வாக்யமும் வெவ்வேறிடங்களில் இருப்பதல்ல. ஒரே யிடத்தில் அடுத்தேயிருப்பது. [தைத்திரீயாரண்யகத்தில் மூன்றாம் ப்ரச்நத்திலுள்ளது.]

ஸ்ரீவசநபூஷணத்திலே நான்காம் பிரகரணத்தில் பகவானுடைய நிர்ஹேதுகவிஷயீகாரத்தை அருளிச் செய்து முடித்து உடனே ஒரு சூர்ணை (397) யருளிச் செய்கிறார்— "இவ்வர்த்த விஷயமாக ஆழ்வார்கள் பாசுரங்களில் பரஸ்பர விருத்தம்போலே தோற்றும்; அவற்றில் சொல்லுகிற பரிஹாரம்...............விஸ்தரபயத்தாலே சொல்லுகிறிலோம்" என்று. பகவானுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு இலக்கான ஆழ்வார்கள் தங்களுடைய உக்திகளிலே பரஸ்பர விருத்தம்போலே தோற்றும்படியாகச் சொல்லிவைத்திருப்பதாக இந்த சூர்ணையில் காட்டப்பட்டிருக்கிறது. வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் அப்படி விருத்தம் பொலே தோற்றும்படியாகவுள்ள பாசுரங்களை (ஏழெட்டு) எடுத்துக்காட்டி விரோதத்தை நிரூபித்துப் பரிஹாரத்தையும் காட்டியுள்ளார். உபநிஷத்துக்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் விருத்தம்போல் தோற்றுமவற்றை யெடுத்துக்காட்டிப் பரிஹாரப்ரகாரங்களும் காட்டியுள்ள வகைகள் ஸ்ரீபாஷ்யச்ருதப்ரகாசிகாதிகளிலும் ஸ்ரீவிஷ்ணுசித்தீயகோவிந்தராஜீயாதிகளிலும் காணப்படுகின்றன. அவற்றை மந்தமதிகளும் எளிதாகத் தெரிந்துகொள்ளுமாறு எளியநடையில் எடுத்துக்காட்டினால் உலகுக்கு மஹோபகாரமாகும். இது க்ரமேண வெளிவரும். நாநாக்ரந்த பரிசீலநமுள்ள ப்ராஜ்ஞர்களும் இப்பணியை மேற்கொள்ள வேணுமென்று பிரார்த்திக்கிறோம்.

பரிஹாரம் வேண்டும் விரோதங்கள்.

1. ப்ரஹ்லாதாழ்வானுக்கு அருள் செய்ய நரஸிம்ஹ மூர்த்தி திருவவதாரம் செய்தது ஸ்வாதீ நக்ஷத்திரத்திலென்று ப்ரஸித்தமாயிருக்க, பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் "திருவோணத் திருவிழவில் அந்தியம்போதிலரியுருவாகி" என்றருளிச் செய்திருப்பதை எங்ஙனே பொருந்தவிடுவது?

2. ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம் ரோஹிணீ நக்ஷத்திரத்திலென்பது ப்ரஸித்தமாயிருக்க "நீ பிறந்த திருவோணமின்று" என்று அஸக்ருத் பெரியாழ்வாரருளிச் செய்திருப்பதை எங்ஙனம் பொருந்தவிடுவது?

3. குபேர புத்திரர்களான நளகூபரனும் மணிக்ரீவனும் நாரத சாபத்தாலே திருவாய்ப்பாடியில் யமளார்ஜுநங்களாக [இரட்டை மருதமரமாக]ப் பிறந்ததாய்ப் புராண வரலாறு இருக்கிறதேயொழிய கம்ஸன் ஏவிட்ட அசுரர்கள் அந்த மரங்களானதாக இதிஹாஸமில்லையே; அப்படியிருக்க, "பொய்ம்மாய மருதானவசுரரைப் பொன்றுவித்தின்று நீ வந்தாய்" என்று பெரியாழ்வாரருளிச்செய்திருப்பதை எங்ஙனம் பொருந்த விடுவது?

4. சித்திரகூடத்தில் நடந்த காக விருத்தாந்தத்தை ஸீதாபிராட்டி திருவடிக்கு ரஹஸ்யமான அடையாளமாகக் கூறுவதாய் ஸ்ரீராமாயணத்திலுள்ளதேயன்றி, திருவடி

(தொடரும்)

COHERENCE OF SRI PILLAILOKACHARYA'S STATEMENTS

(By Sri T. Aravamudu Tatacharya, Advocate, Kallakkurichi.)

Draupadi-Saranagati is a well-known episode of the Mahabharata. When the Pandavas and Kauravas gambled, the former began to lose their stakes one after another and finally their wife, Draupadi, too. Then the wicked Dussasana brought poor Draupadi amidst the great assembly and tried to outrage her modesty. At that stage, she chanced to remember a certain teaching of the great Vasistha and accordingly she sought shelter at the feet of Lord Krishna (i. e. offered Saranagati or Prapatti), as a result of which her garments began to multiply themselves, to the utter confusion and dis-appointment of Dussasana and others. In other words, Draupadi obtained her cherished object (of being spared her modesty) by means of Saranagati This fact has been mentioned by Pillai Lokachariar in his famous Sri Vachanabhushanam (vide Chapter I, sutras 29, 32, 33 etc.) and explained in detail by Manavalamamunigal in his inimitably lucid commentary there-upon. Two conclusions follow from these discussions: viz., that Draupadi's cherished object at that time was only to have her honour saved and that that object was secured by Saranagati.

But then, we find the same Pillai Lokachariar state in the Mumukshuppadi, another popular work among his famous eighteen Rahasyas, "Verily, it was the Lord's auspicious name that blessed Draupadi with endless garments." From this, it would appear that because Draupadi happened to utter the Lord's names, Govinda, etc., while offering Prapatti, those names, by themselves, blessed her, i. e. saved her from dishonour. Now the qustion arises as to how the same author can say that Draupadi gained her cherished object by Saranagati, in one text, and by Nama Sankeerthana, in another. Are not the two statements mutually contradictory? To speak outright, this question is silly. Let us explain ourselves by means of an illustration. Suppose a poet says, at one time, that Rama was born in Kosala, and at another, that He was born in Ayodhya. No sane person who knows that Kosala is the name of a province, of which Ayodhya is the capital, can easily see that the above two statements are both correct and can, by no strach of imagination, be considered mutually

contradictory. If a person, out of ignorance, thinks that Kosala is also the name of a town, and consequently a different one from Ayodhya, he may say that the above-mentioned two statements are incongruous. Saint Nammalwar is variously described as belonging to Valudinadu and Kurugur. Saint Poygai Alwar is said to have been born in Kancheepuram and in Thiruvehka. Thirumangai Alwar is variously described as Ali Nadan, Mangai Vendan and Kuraiyalali. In all such statements, ignorant people, that do not understand the full meaning and significance of the terms employed may complain that they are all incongruous statements and so, need explanation. But wise people can never entertain such doubts. In the same way, the two Rahasya texts in question differ in form, but not in substance.

Saranagati can be performed in three ways—mentaly, orally and physically. Some people resort to, but one of these; some others take to two; while yet others perform all the three. Oral Saranagati includes Nama Sankirtana as a part of it. Now, it is clear from the Maha Bharata that Draupadi performed Prapatti not only mentally, but also orally. So her Nama Sankeertana is, but a form of oral Saranagati.

It may next be asked as to why the learned author of the sacred texts should describe the same act of Draupadi by different names in different works and land us in all this confusion. The reason is quite simple. In Sri Vachana Bhushana Pillai Lokacharyar was discussing the merits of Prapatti as such and therefore, he made mention of Draupadi Saranagati along with others. There can be no difficulty in appreciating this. In Mumukshuppadi the context was different. There, the greatness of the Lord's name was being extolled and it was asserted that the name was greater than the Lord Himself, because He would not always appear before us, especially in times of our need, whereas His name is always at our beck and call—at the very tip of our tongue—and of course, ready to dispel our woes and grant our desires. A suitable example was needed to illustrate this point. The versatile teacher noticed that Draupadi had really uttered the Lord's names while making Saranagati and that she obtained her cherished object, although the Lord Himself did not appear before her, then and there. So, it fitted his purpose very well, to say that Draupadi was saved by Nama Sankirtana, in the absence of the Lord Himself. It would have been inappropriate to mention Draupadi's act by the name of Prapatti, in this connection. Therefore, it is neither necessary nor proper to assume that Pillai Lokacharya had in his mind anything contrary to Saranagati, while he made the mention of Nama Sankirtana.

Such statements, which appear incongruant at the outset, but reconcile themselves upon second thought, abound in the Sastras and even in ordinary conversations. Suppose a person says that Ravana's Lanka was destroyed by Hanuman; and another proclaims that Sri Rama alone destroyed it. Need these two statements be considered antagonastic to each other? Certainly not. It is said, in the sacred texts that salvation can be granted by the Lord, His Royal Consort, the spiritual guru, or even a single verse from the Thiruvaimozhi. Surely, no learned person will dare to say that these are mutually contradictory statements. On the other hand, each considered to be correct in its own way. Similarly, it is quite proper to say that Draupadi was saved by Nama Sankirtana, Prapatti, the Lord Himself, or even His mercy. The truth underlying all these statements is the same; only the forms of expression differ. We beleive that Ravana was killed by Rama. But Mandodari, his widow, cries, *Indriyani pura jitwa jitam tribhuvanam twaya, Smaradbhiriva tadwairam indriyaireva nirjitah.* "you had conquered your senses and thus conquered the three worlds. Those senses, now conquered you in return, and killed you. Again she exclaims:—*Pathivrathayas tapasa noonam dagdhosi me prabho.* "Surely, my Lord! you have been burnt to death by the fire of chastity (of Sita). An ordinary man like Rama could not have killed you." In all these places, no scholar has, till now, come forward with the criticism that these are incorrect, incongruent statements. Grammarians say that the same act of cooking might be mentioned in many ways, such as 'Devadatta cooks', 'The pot cooks', 'Firewood cooks' etc., the difference in the meaning being only upon emphasis In the same manner it must be clearly understood that whether we say that Draupadi gained her objective by Saranagati or Nama-Sankirtana, the underlying idea is the same; because the Nama-Sankitana mentioned here is only an aspect of Oral Prapatti and not a rival upaya by itself. Thus the two texts in question of Pillai Lokacharya are perfectly in congruity with each other. If however, it is persisted that the Mumukshuppadi text does not allow this interpretation, then either it or the other text (i. e. Sri Vachanabhushanam) would have to be considered wrong, i. e. anti-Sastraic.

Some people however maintain that there is an inherent inconsistency between the said two texts of Pillai Lokacharya and that it must be resolved by some method or other. For this purpose they claim that Draupadi was saved by Nama-Sankirtana only and not Prapatti. So the Mumukshuppadi text is quite correct. Srivachanabhushana only says that she performed Saranagati with the object of getting (endless) robes; but it

does not expressly say that she got the desired object by that means. We will explain this statement clearly. Draupadi performed Saranagati, no doubt. But, she forgot to get the Purushakara (recommendation) of Lakshmi, as ordained by the Sastras. So, her Prapatti was out of order. Again, it is clear from the Mahabharata, that while offering Saranagati she repeated many names of the Lord. Now this was tantamount to Nama-Sankirtana, which is proclaimed in the Sastras as a separate upaya by itself. So much so, Draupadi adopted *two means* or upayas to gain her objective. Now, the Sastras *proclaim that Prapatti, fails* to yield results if it is mixed with other upayas. Therefore, also, Saranagati failed to secure her objective. So the Srivachanabhushana text must not and need not be interpreted to mean that Draupadi achieved her object by Prapatti, but only to mean that she desired to do so.

This type of argument is beset with many difficulties. It would not be proper, in the first place, to say that Draupadi's Saranagati was out of order, for want of Purushakara*;* because, many others (like Gajendra) have gained their objective by offering Prapatti, without Purushakara. Again, Srivachanabhushana lays down that the Mahabharata exemplifies the greatness of Upaya (the Lord), because it explains how He took upon Himself the duties of the guru, Purushakara etc. Varavaramuni explains:—"The usual practice is, that the guru imparts divine knowledge, Lakshmi recommends and then the sadhaka offers Prapatti, which is then accepted by the Lord, who next proceeds to grant the *sadhaka's request*. But in the Mahabharata, this procedure is not found. The Lord has played the part of guru and Purushakara, as well. This is His greatness." So, to say that Draupadi's Saranagati went futile for want of Purushakara amounts to nullifying this greatness of the Lord, so zealously praised by our great Acharyas.

Again the next statement, that Nama-sankirtana spoiled Prapatti cannot be proved by any passage in the Srivachanabhushana or Mahabharata. In fact, their tendency is to show that Prapatti alone saved Draupadi, because they state that she offered Saranagati and her objective was obtained. This can only mean that her Saranagati was fruitful. There is no necessity to seek the help of any out-of-the-way book in this *matter*. The original work, viz., Mahabharata, the great Srivachanabhushana which purposely describes this topic, and its commentary by Varavaramuni would suffice to decide this point. These works, as already explained, pronounce unanimously that the Saranagati in question was fruitful. Therefore, the Mumukshuppadi statement must be interpreted to suit these other works; and this has already been done by us, above.

We actually find, that wherever people offer oral Saranagati, they almost invariably recite some names of the Lord, as an address etc. The verses of Saint Nammalwar (Tiruvoimoli 6-10-10), Sri Ramanuja (Saranagati-gadya) and Vibhishana (Sri Ramayana VI-17-17) might be cited as some glaring examples. The Dwaya-mantra itself contains a name, and that, twice. Can it be seriouly maintained that these names constitute a rival upaya, nullifying Prapatti? Or, can it be *maintained that* Draupadi's verses alone, are of a different nature?

Now, gentle readers! we have explained two theories—viz., that the Srivachanabhushana and Mumukshuppadi texts are mutually incongruent and that they are not at all so. Of these, the former theory is propounded by Sri Karappangadu Swami, who holds that Draupadi's Saranagati was futile. The latter theory is held by Kanchi Swamy who has clearly explained through many articles published in his journal "Sri Ramanujan", the beauty and unassailability of his ideas and the *shallowness of the opponents'* arguments. The main point to be noted down here is, that Karappangadu Swamy gave expression to his ideas not recently, but about fourteen years ago, when he wrote an article on the subject in the Sri V. M. Gopalakrishnamacharya Sastiabdapurti Memorial Volume. Kanchi Swami's first article on the subject appeared a few months ago. In that article, he has expressly stated that it was written by him in answer to a question put to him by a *truth-seeker;* he has not referred to Karappangadu Swami or his article even implicitly. It was a bonafied discussion of the subject without purposely refuting or proving anybody's ideas. Of course, the arguments advanced in that article, do, by their very nature, appear to refute Karappangadu Swami's views. Nevertheless it is important to bear in mind that no mention is made of any opponent, much less of Karappangadu Swami, in that article.

Recently we came across a pamphlet, which does not bear its author's name, place or date of publication and which showers very base abuses *upon* Kanchi Swami. It is said to be published by the members of Karappangadu Swami's Kalakshepa goshti. *If this is true, then it ought* to have borne the signatures of at least a few leading members of that august body. But we see no such thing. As such, issuing a pamphlet, without disclosing the identity of its author, and heaping mean abuses upon a reputed scholar and his famous works, does not appear to be, to say the least, fair play. If at all, it only betrays this boundless jealousy towards him (Kanchi Swami).

In this connection I wish only to quote a few lines from a well-known *gentleman, before closing this article.*

Sri. Rao Saheb S. Raghava *Ayyangar Swami of* Theagaroyanagar, Madras, is a well-known, aged and much-respected gentleman. Recently, in January, 1955, he compiled 372 essays and articles of Kanchi Swami and published them under the title Satsampradayartha-Sara-nidhi. In his foreword to the book, he writes as follows:—

"It is a well-known fact that Mahavidwan Sri Kanchi P. B. Annangaracharya Swami has written many books on a variety of subjects and in many languages. I have gone through all his works, at least those in Sanskrit and Tamil languages, and enjoyed them heartily. Among others he has written many books on controversial subjects, too. If he comes across any in-correct, anti-Sastraic, or unfair statements made by others, he does not fail to correct them, then and there, without fear or favour. Many gentlemen have appreciated this quality of our Swami and I will now quote two of them, by way of illustration.

Sri. S. R. S. Raghavan, New Delhi, writes:—

"Sri P. B. Annangaracharya, as Sri Vedanta Desikar has shown himself to be in his works like Satha Dushani, is a strong controversialist. But he will enter into a controversy only on important matters and again, only when absolutely necessary. On such occasions he is never afraid to be hit hard, nor does he hesitate to hit back with vigour and persistency and with arguments which will never fail to convince and carry the world with him."

Sri. D. Ramaswami Iyengar, Advocate, Madras, writes:—

"Controversy had always a fascination and grip over the mind of Sri P. B. A. Swamy................As can be expected, the Swami's powerful personality has been the target for hostile and adverse criticism from several quarters; and it must be said to his credit that he never felt vanquished in any verbal warfare, and would always have the last word on any subject.

It is very gratifying to note that these gentlemen have given free expression to their opinion, without any reservation. Some people do not like controversies; but yet such books are very useful, because they bring into light many subtle points and elucidation on many knotty problems, which can hardly be obtained elsewhere Sri P. B. A. Swami has published many essays and books elucidating our Sri Vaishnava Sampradaya. As these are scattered among hundreds of volumes, it would not be easy for posterity to go through all of them. Therefore, it was suggested by certain friends that it would be better if we have a compilation of all his important essays, worked out into a comprehensive volume. I also felt similarly and so have prepared and published this compilation"

These then, are the words of Sri Raghava Ayyangar Swami When wise people speak of Kanchi Swami in such terms, jealous men try to defame him by publishing nameless, vulgar pamphlets! Poor people! They cannot understand that their base act cannot blind the eyes of the public from having a look at the truth.

In conclusion, I invite learned pandits of the opposite camp, if any, to explain their view-point with cogent reasons couched in clear non-abusive language and carry public opinion with them.

ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியஸ்வாமிகள்

எழுதிய ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனத்தில்

யுத்த காண்டம்

1. இராமபிரான் அனுமானைப் புகழ்ந்துகூறி ஆரத்தழுவுதலும், தான் கடல்கடந்து செல்வது எங்ஙனேயென்று சிந்தை யுறுதலும்.

ஸ்ரீராமன் அனுமான் மொழிந்த உண்மையான விருத்தாந்தங்களை யெல்லாம் கேட்டு மிருந்த சந்தோஷமடைந்து சுக்கிரீவன் முதலானோரை நோக்கி "அனுமான் செய்த காரியம் இப்பூமியில் எவர்க்கும் செய்யமுடியாதது. அதுவன்றி நினைப்பதற்குங்கூட இவ்வுலகில் மற்ற எவர்க்கும் முடியாதது. கருடன் வாயுதேவன் ஆகிய இருவருமே சமுத்திரத்தைத் தாண்ட வல்லவர்கள். என்னே! அனுமான் செயல்! லங்கையோ தேவதைகளுக்கும் தானவர்களுக்கும், யக்ஷர்களுக்கும், நாகர்களுக்கும், ராக்ஷசர்களுக்கும் எதிரிடமுடியாதபடி ராவணனால் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட பலவானாயினும் தன் முயற்சியினால் ஒருக்கால் அதில் புகுவானாயினும் மறுபடி உயிரோடு திரும்பிவரமுடியாது. அப்படிப்பட்ட அளவில்லாத ராக்ஷசர்களால் பத்திரமாக்கப்பட்ட லங்கைக்குள் அனுமான் நுழைந்து, சீதையைக் கண்டுவந்ததல்லாமல், அசோக வனத்தை யழித்தல் முதலிய தீரமான செயல்களைத் தன் அரசனான சுக்கிரீவனது கட்டளையில்லாமலே செய்து சுகமாகத் திரும்பி வந்தவிது மிகவும் மெச்சத்தக்கதன்றோ. உலகில் வேலைக்காரர்கள் மூன்று வகைப்பட்டிருப்பார்கள். எவன் தன் எஜமானன் சொன்ன காரியத்தை மாத்திரம் செய்வதன்றி, அவனிடத்திலுள்ள பக்தி மிகுதியால், அவன் கட்டளையிடாதிருப்பினும், அக்காரியத்திற்கு அனுகூலமான இதர கர்ரியங்களையும் செய்கிறானோ, அவனைச் சிறந்த ஊழியக்காரன் என்பார்கள். எவன் எஜமானன் சொன்ன காரியத்தைமாத்திரம் செய்து முடித்து வருகிறானோ, அவனை மத்திம (நடுத்தரமான) வேலைக்காரன் என்பார்கள். எவன் தன் பிரபுவின் காரியத்தையுங்கூட நன்கு நிறைவேற்றமாட்டானோ அவனை அதம வேலைக்காரன் என்று சொல்லுவார்கள். இப்பொழுது அனுமான் உத்தம வேலைக்காரனாய் விளங்கி சுக்கிரீவனுக்கும் எனக்கும் மிகுந்த சந்தோஷத்தை விளைவித்தான். தவிர, சீதையின் பிரிவாற்றாமையால் பிராணனை விடவிருந்த எனக்கு அவளுடைய இருப்பிடத்தையும் விருத்தாந்தங்களையும் அறிந்து வந்து கூறினமையால், உயிர்ப்பிச்சையளித்தனன். ஆ! ஆ!! இவ்வனுமானுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! எனக்குள்ள சகல சொத்துக்களையும் (ஐசுவரியங்களையும்) கொடுத்தால்தான் என்மனம் நிம்மதியடையும். இதோ நான் கொடுக்கிற ஆலிங்கனமே அவற்றிற்குச்சமமாகையால் இதையே கொடுத்தேன்" என்று கூறிப் பிரீதியால் அவயவங்களெல்லாம் மயிர்க்கூச்சலுண்டாகப்பெற்று அனுமானை மிக்க ஆர்வத்தோடு ஆலிங்கனம் செய்தனன். மீண்டும் ராமன் சுக்கிரீவன் கேட்டுக்கொண்டிருக்கும் பொழுதே "ஐயோ! இப்பொழுது சீதையின் சமாசாரத்தைக் கேட்கப் பெற்று சந்தோஷமடைந்திருப்பினும், அக்கரை காணமுடியாததும் ஆழமுள்ளதுமான மகா சமுத்திரத்தை எப்படி தாண்டுவது' என்பதை நினைத்துக்கொண்டால் மீண்டும் எனக்கு துக்கமே உண்டாகிறது. வானரர்கள் சமுத்திரத்தை எங்ஙனம் தாண்டப்போகிறார்கள்?" என்று கூறி சோகத்தினால் தடுமாற்ற முற்றுச் சிந்திக்கத்தொடங்கினன். ... ... (1.)

2. சுக்கிரீவன் ராமனுடைய துக்கத்தைப் போக்கும் வசனங்களைக் கூறுதல்.

பிறகு சுக்கிரீவன் ராமனது கவலையைப் போக்க விரும்பி அவனை நோக்கி "வீரர்களின் தலைவனே! அற்பனைப்போல் நீ இங்ஙனம் விசாரப்படலாகாது. சீதையின் விருத்தாந்தமும் ராவணன் இருக்குமிடமும் தெரிந்த பின்பும் உனக்கு வருத்தம் உண்டாவதற்குத் தகுதியில்லையே? நீ சாஸ்திரங்களின் கரையைக் கண்டவனாகையால் இனிமேல் நடக்கப்போகும் விருத்தாந்தங்களையும் கண்டறியும்படியான ஸூக்ஷ்ம புத்தியுடையை. மிகுந்த தேஜஸ்ஸும், பலமும், ஆண்மையும், பராக்கிரமமுமுடைய உனக்குச் சோகம் உண்டாக வழியில்லையே. 'சமுத்திரத்தை எப்படி தாண்டுவது?' என்பதைப்பற்றி நீ சிறிதும் வருந்தவேண்டியதில்லை. நாங்கள் சமுத்திரத்தைத் தாண்டி லங்கையுள் புகுந்து ராவணனை நிச்சயமாகக் கொன்றுவிடுகிறோம். சோகத்தினால் உற்சாகம் குறையப் பெற்று அதைரியமடைந்தவனுக்கு எல்லாக் காரியங்களும் பாழாய்விடுமாகையால் நீ வருந்தலாகாது. 'சூரர்களும் சாமர்த்தியசாலிகளுமான எனது வானர வீரர்கள் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு நெருப்பில் குதிப்பதற்கும் உற்சாகங்கொண்டிருக்கிறார்கள். இனி மற்றைக் காரியங்களைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? ராமா! நாம் சமுத்திரத்தில் அணை கட்டும்படிக்கும், ராவணனைக் காணும்படிக்கும் நீ மிகுந்த உற்சாகம் கொள்ளவேண்டும். சமுத்திரத்தில் அணைகட்டி இவ்வானர சைனியம் லங்கையைக் காணுமளவே தாமதம். உடனே ராவணனும் அவனது கூட்டத்தாரும் மாண்டார்களென்று நிச்சயிப்பாயாக. ஆகையால் நீ தைரியத்தைக் கைக்கொண்டு துக்கத்தைத் துறக்கவேண்டும். ராஜாதி ராஜனே! யுத்தத்தில் நீ வில்லைத்தாங்கி நிற்கையில் உன்னெதிரில் நிற்க வல்லவன் இம்மூவுலகிலுமில்லை. ஆகையால் உனது பராக்கிரமத்தினால் சமுத்திரத்தைத் தாண்டி, ராவணனைக்கொன்று சீதையைக் காணப்போகிறாய். எனவே, நீ துக்கத்தை விட்டுக் கோபத்தைக் கைப்பற்றி சமுத்திரத்தைத் தாண்டும்படியான உபாயத்தைப் பற்றி இங்கேயே ஸூக்ஷ்ம புத்தியுடன் எங்களுடன் கூடி ஆலோசிப்பாயாக. கோபமுடைய க்ஷத்திரியர்களுக்கு எப்படிப்பட்டவர்களும் பயப்படுவார்கள். ராமா! நீ யுத்தத்தில் மிகுந்த உத்சாகமுடையவனல்லவா? அணைகட்டி சமுத்திரத்தைத் தாண்ட முடியாவிடினும் வேறு எந்த விதத்தினாலாவது தாண்டுவோம். தாண்ட வேண்டியதே தடை. உடனே ராவணன் முடிந்தான் என்று நினை. உனக்கு ஜயமுண்டாகுமென்பதற்கு எனக்குச் சுப சகுனங்கள் தோன்றுகின்றன. என் மனமும் மிகுந்த சந்தோஷமுற்றிருக்கிறது" என்றனன். ... ... (2.)

3. ரர்மன் அனுமானை லங்காபுரத்தின் கோட்டை முதலிய அமைப்பை வினவுதலும் அவற்றை அனுமான் விரிவாகக் கூறுதலும்.

இங்ஙனம் சுக்கிரீவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட ராமன் மிகுந்த உத்சாகமும் தைரியமுமடைந்து அனுமானைப் பார்த்து "அனுமானே! தவப்பெருக்கினாலாவது, அணைகட்டியாவது, தண்ணீரை முற்றும் உலர்த்தியாவது இந்த சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு நான் வல்லவனாகவே இருக்கிறேன். அதைப்பற்றிச் சிறிதும் எனக்குச் சிந்தையில்லை. ஆயினும், லங்கையினுடைய கோட்டை, சைனியங்களின் எண்ணிக்கை, பாதுகாப்புகள், மதில், அகழி முதலிய ஏற்பாடுகள், ராக்ஷசர்கள் குடியிருக்குமிடங்கள் முதலியவற்றை நீ கண்ணால் கண்டபடி மீளவும் நன்றாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேனாகையால் அவற்றையெல்லாம் உள்ளபடி எனக்கு மீண்டுமொருதரம் கூறுவாயாக" என்றனன். அனுமான் கைகுவித்த வண்ணம் ராமனை நோக்கி "லங்கையிலுள்ள ஜனங்களெல்லாரும் எப்பொழுதும் சந்தோஷமுற்றிருப்பார்கள். அதில் மதம் பிடித்த யானைகளும் கூட்டங்கூட்டமான ராக்ஷசர்களும் நிரம்பியிருக்கின்றமையால் ஒருவராலும் அதில் பிரவேசிக்க முடியாது. அதில் விசாலமான நான்கு வாயில்கள் இருக்கின்றன. அவற்றின் கதவுகள் இரும்புப்பூட்டு முதலியவற்றால் திடமாக நிருமிக்கப்பட்டும் பெரிய உழல் தடிகளையுடையனவாயும் இருக்கும். அந்த வாசற்படிகளில் பாணங்களையும் கற்களையும் இறைக்கும்படியான யந்திரங்கள் சன்னத்தமாக நிருமாணிக்கப்பட்டிருக்கும். பகைவர்கள் வருங்காலத்தில் அந்த யந்திரங்களின் உதவியால் பாணங்களும் கற்களும் அவர்கள்மேல் வீசப்பட்டு அவர்களை உட்புகவொட்டாமல் தடுப்பார்கள். மேலும் அவ்வாயில்களில் சூரர்களான ராக்ஷசர்கள் பயங்கரமான பெரிய இரும்புத் தடிகளை நூற்றுக் கணக்காக வைத்திருக்கின்றனர். லங்கையைச் சுற்றி மிகவும் உயர்ந்ததும் ஒருவராலும் ஏற முடியாததும் நவரத்தினங்களிழைக்கப்பெற்றதுமான ஒரு பெரிய மதில் சுவர் இருக்கிறது. அம்மதிலைச்சுற்றி மிகவும் ஆழமுள்ளதாய், முதலைகளும் திமிங்கிலங்களும் நிறைந்திருக்கப்பெற்ற பயங்கரமான காட்சியையுடைய அகழிகள் பல இருக்கின்றன. வாசற்படிகளின் அருகில் அவ்வகழிகளின்மேல் போகவும் வரவும் சுகமாய் இருக்கும்படி மரப்பலகையால் செய்யப்பட்ட நான்கு சாரங்கள் இருக்கின்றன. மிகுந்த அகலமுள்ள அப்பலகைகளை வேண்டும்பொழுது எடுக்கும்பொருட்டு அவற்றில் பெரிய யந்திரங்கள் பல இருக்கின்றன. சாதாரண சமயங்களில் அப்பலகைகள் போக்குவரவிற்காக அவ்வகழிகளின்மேல் இருக்கும். பகைவர்கள் வரும்பொழுது அவற்றிலுள்ள யந்திரங்களால் அப்பலகைகளை மேல் தூக்கிவிடுவார்கள். அகழிகள் அகலமும் ஆழமும் உடையனவாகையால் பகைவர்கள் அவற்றைத் தாண்டி லங்கையில் புகமுடியாது. லங்கை திரிகூட பர்வதத்தின் மேலிருக்கையால் அதிலேறி மேலே போவதற்குப் பிடிப்பு ஒன்றுமேயில்லை. தேவதைகளாலும் அதில் நுழைய முடியாதபடி அவ்வளவு பாதுகாப்புகளுடன் ஜலம், மலை, வனம், மதில் முதலியவற்றுடன் லங்கை விளங்குகிறது. மேலும் லங்கை விசாலமான சமுத்திரத்தின் அக்கரையில் இருக்கிறது. அதைத் தாண்டக் கப்பல் வழியும் கிடையாது. தேவ நகரம்போல் அவ்விலங்கை பர்வதத்தின் நுனியில் கட்டப்பட்டு குதிரைகளும் யானைகளும் நிறைந்து எவர்க்கும் புகமுடியாததாய் இருக்கிறது. லங்கையின் கீழ் வாசற்படியில் பதினாயிரம் ராக்ஷசர்களும், தெற்கு வாசற்படியில் லக்ஷம் ராக்ஷசர்களும், மேற்கு வாயிலில் பத்துலக்ஷம் ராக்ஷசர்களும், வடக்கு வாயிலில் நூறுகோடி ராக்ஷசர்களும், கத்தி, சூலம், ஈட்டி, உலக்கை முதலிய ஆயுதங்களுடன் ஜாக்கிரதையாகக் காவல் புரிகின்றனர். ராமா! நான் அந்த சாரங்களையும், அகழிகளையும் அழித்துவிட்டதுடன் மதில் சுவரையும் இடித்து லங்கை முழுவதையும் கொளுத்திவிட்டேனாகையால், இப்பொழுது அவ்வளவு கஷ்டமில்லை. தவிர ராவணன் சைன்னியங்களில் பாதிக்குட்பட்ட மகாபராக்கிரமமுள்ள ராக்ஷசர்களையெல்லாம் தொலைத்துவிட்டேன். ராமா! எந்த விதத்தினாலாவது சமுத்திரத்தைத் தாண்டுவோம். பிறகு ராவணன் அவனது கூட்டங்களுடன் ஒழிந்தானென்று நிச்சயிப்பாயாக. அங்கதன், மைந்தன், துவிவிதன், ஜாம்பவான், நலன், நீலன் ஆகிய இவர்கள் ஆகாயத்திற் கிளம்பி சமுத்திரத்தைத் தாண்டிப்போய், லங்கையை அதன் பர்வதங்களோடும், காடுகளோடும், அகழிகளோடும், வெளிவாசற்படிகளோடும், மதில்களோடும், வீடுகளோடும் பிடுங்கி இங்குக்கொண்டுவர வல்லவர். எங்களுக்கு இங்ஙனம் கட்டளையிடுவாயாக. நல்ல முகூர்த்தத்தில் பிரயாணத்தைத் துவக்கும்படி அனுமதி செய்வாயாக" என்று விநயமுடன் விளம்பினன். ... ... — ... ... (3.)

4. ராமனும் சைன்னியங்களும் சமுத்திரக்கரை சேருதல்.

இங்ஙனம் அனுமானது வசனங்களைக் கேட்ட ராமன் "பாதகனான ராவணனது பட்டணத்தைச் சீக்கிரத்திலேயே நிச்சயமாக நான் பாழாக்கி விடுவேன்" என்று கூறி, சுக்கிரீவனைப் பார்த்து "சுக்கிரீவா! இச்சமயம் சூரியன் நடுப்பகலில் இருக்கிறானாகையால் இத்தருணம் ஜயத்தைத் தரவல்ல அபிஜித் என்னும் முகூர்த்தம் நடக்கிறது. மேலும் இன்று உத்தரபல்குனி (பங்குனி மாதத்துப் பௌர்ணமி) நக்ஷத்திரம், புனர்வஸுவில் பிறந்த எனக்கு இது ஸாதன தாரையாய் இருக்கிறது. மற்றும் சுபத்தை அறிவிக்கின்ற பல சகுனங்களும் தோற்றுகின்றன. ஆகையால் இந்த நல்ல முகூர்த்தத்திலே நான் பிரயாணத்தைத் துவக்கினால் நான் ராவணனைக் கொன்று சீதையை மீட்டுவருவேனென்பதில் சந்தேகமில்லை. உடனே சமஸ்த சைன்னியங்களுடனும் இன்றைத்தினமே பிரயாணப்படுவோமாக," என்றனன். இங்ஙனம் ராமனது கட்டளையின்படி நீலன் லக்ஷம் வானரர்கள் பின் தொடர, காய் கிழங்குகள் ஏராளமாய் இருக்-

கப்பெற்றுச் செழித்த வனங்களும் குளிர்ந்த ஜலங்களும் அமைந்து தேன் மிகுதியாகக் கிடைக்கக்கூடிய மார்க்கத்தில் வழிகளைச் சீர்ப்படுத்தி, விரோதிகள் எவரும் அங்குப் புகாவண்ணம் வெகு ஜாக்கிரதையாய் சமுத்திரக் கரைவரையில் சிறந்த பாதைகளை ஏற்படுத்தி, அவற்றைத் தகுந்த பாதுகாப்புக்களுடன் வைத்துக்கொண்டே சென்றனன். வானர சைன்னியங்கள் நூறு நூறாகவும் ஆயிரம் ஆயிரமாகவும், லட்சம் லட்சமாகவும் கூடித் தென் சமுத்திரத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தன. கஜனும், கவயனும், கவாக்ஷனும் சேனையின் முன்பு நடந்து சென்றனர்கள். ருஷபன் வானர சைன்னியத்தின் வலப்பக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டு சென்றனன். கந்தமாதனன் சைன்னியத்தின் இடது பக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டு போயினன். ராமன் ஐராவதத்தின்மேல் தேவேந்திரன் செல்வதுபோல் அனுமான் மேலேறி சேனைகளுக்கு உத்சாகத்தை வளரச் செய்துகொண்டு சைன்னியத்தின் இடையில் சென்றனன். குபேரன் ஸார்வபௌமமென்னும் யானையின் மேலேறிச் செல்லுவதுபோல் லக்ஷ்மணன் அங்கதன் மேலேறிக்கொண்டு சென்றனன். ஜாம்பவான், சுஷேணன் வேகதர்சி, தூமரன் ஆகிய இந்நால்வரும் சேனையின் பின்பாகத்தைப் பாதுகாத்து வந்தார்கள். இங்ஙனம் அனைவரும் தென் திசையைக் குறித்து மிகுந்த உற்சாகத்துடன் சென்றனர். வீரனாகிய சதவலியென்னும் வானரன் பத்துகோடி வானரர்களால் சூழப்பட்டு வானர சைன்னியங்களையெல்லாம் பாதுகாத்துக் கொண்டிருந்தனன். சேனாபதியான நீலன் முன்னமே கூறியபடி நாற்புறங்களிலும் திரிந்துகொண்டு வானர சைன்னியங்களைப் பாதுகாத்து வந்தனன். இங்ஙனம் பெரிய சமுத்திரத்தைப்போன்ற அவ்வானர சைன்னியம் மிகுந்த உத்சாகத்துடன் சிம்மநாதங்களைச் செய்துகொண்டு, காடு, மலை, வனாந்தரம் முதலியவற்றைத் தாண்டித் தென் திசையை நோக்கிச் சென்றது. ராம லக்ஷ்மணர்கள் அனுமான் மேலும் அங்கதன் மேலும் ஏறிக்கொண்டிருக்கையால் பெரிய கிரகங்களாகிய சுக்கிர வியாழன்களுடன் கூடிய சந்திர சூரியர்களைப்போல் பிரகாசித்தனர். அப்பொழுது லக்ஷ்மணன் ராமனைப் பார்த்து "ராமா! மங்களகரமான சகுனங்கள் தோன்றுவதைப் பார்ப்பாயாக. இதோ காற்று மெதுவும் இதமும் சுகத்தைக் கொடுப்பதும் மங்களத்தை அறிவிப்பதுமாகி மெல்லமெல்ல சேனையின் பின்னே வீசுகின்றது. மிருகங்களும் பட்சிகளும் மதுரமான பூரண சப்தங்களைச் செய்கின்றன. திசைகளெல்லாம் ஒளியுற்று விளங்குவதுடன் சூரியனும் நிர்மலனாகித் தோற்றுகின்றனன். சுக்கிரன் பாபக்கிரக சம்பந்தமின்றி உனக்குப் பின்புறத்தில் பிரகாசிக்கின்றனன். ஸப்த ரிஷிகளும் (ஸப்தரிஷி மண்டலமென்கிற நட்சத்திரக் கூட்டங்கள்) சிறந்த ஒளியுடன் தென்திசைக்குப்போய்த் திரும்பி வருபவராகி துருவனை வலம் செய்துகொண்டு மிகவும் பிரகாசிக்கின்றனர். நமது வமிசத்தின் பிரதான அரசனும் ராஜரிஷியுமான திரிசங்குவும் விசுவாமித்திரரால் படைக்கப்பட்ட ஸப்த ரிஷிகளிலடங்கிய வஸிஷ்டருடன் கூடி நிர்மலனாகி பிரகாசிக்கின்றனன். நமது இக்ஷ்வாகு வம்சத்தரசரது சிறந்த நக்ஷத்திரமாகிய விசாகையென்னும் இரண்டு நக்ஷத்திரங்கள் குரூர கிரகங்களால் அணுகப்படாமல் தெளிவுற்று பிரகாசிக்கின்றன. நிருதியென்னும் தேவதையுடையதும் ராக்ஷசர்களின் நக்ஷத்திரமுமாகிய மூல நக்ஷத்திரம் அருகேயுள்ள தூமகேதுவால் தீண்டப்பட்டு பரிதாபமுற்று மிகுதியும் பீடிக்கப்பட்டிருக்கின்றது. இதெல்லாம் ராக்ஷச விநாசத்தின் பொருட்டே ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் நீ நிச்சயமாக ராவணனையும் மற்ற ராக்ஷசக் கூட்டங்களையும் கொன்று சீதையை மீட்டுவரப் போகிறாய்" என்றனன். அப்பொழுது வானர சைன்னியமானது பூமி முழுவதும் பரந்து சென்றது, வானரர்களின் கைகளாலும் கால்களாலும் கிளம்பின தூள் சூரியனுடைய ஒளியை மறைத்து நின்றது. அவ்வானரர்கள் தெளிந்த நீரையுடைய தாமரையோடைகளையும் நதிகளையும் தாண்டி ராம காரியத்தின் நிமித்தமாக மிகுந்த பராக்கிரமம் அதிகரிக்கப்பெற்று, ஒருவர்க்கொருவர் தமது சந்தோஷப் பெருக்கையும் வீரியத்தின் மிகுதியையும், பலத்தின் பெருமையையும் காட்டிக்கொண்டு நடந்தனர். மிகுந்த உத்சாகத்தினால் சிலர் வேகமாகச் சென்றனர். சிலர் மேலே கிளம்பினர். சிலர் 'கிலா கிலா' சப்தங்களைச் செய்தனர், சில வானரர்கள் தங்கள் வால்களைப் பூமியில் அடித்தனர், சிலர்

கால்களைப் பூமியில் அதிரும்படி உதைத்தனர். சிலர் கைகளை நீட்டி, மரங்களை முறித்துப் பர்வதங்களைப் பிளந்தனர். இங்ஙனம் இரவு பகலாக விடாமல் பிரயாணம் செய்து முடிவில் ஸஹ்யபர்வதத்தையும் மலயபர்வதத்தையு மடைந்தனர். பிறகு அங்கிருந்து புறப்பட்டு, வழியிலுள்ள நானாவிதமான மரங்களை முறித்துக்கொண்டும், நதி குளங்களைக் கலக்கி தாண்டிக்கொண்டும் சென்றனர், வழியிலுள்ள சிறந்த மரங்களிலுண்டான இனிய பழங்களைத் தின்று ஆங்காங்குத் தொங்குகின்ற தேன் கூடுகளை நாசம்செய்து யதேஷ்டமான தேனைப் பருகினர். கடைசியில் ராமன் மகேந்திர பர்வதம் சேர்ந்து பலவகை மரங்களால் பிரகாசிக்கின்ற அதன் சிகரத்தின் மேலேறினன். அங்கிருந்து ஆமைகளும் மீன்களும் நிறைந்த சமுத்திரத்தைக் கண்டனன். உடனே சமஸ்தவானர சைன்னியங்களுடன் அச்சிகரத்தினின்றும் கீழே இறங்கி சமுத்திரக் கரையோரத்திலுள்ள காட்டைக்குறித்து வேகமாகச் சென்றனன். இங்ஙனம் சமுத்திரக்கரையை யடைந்த ராமன் சுக்கிரீவனை நோக்கி "சுக்கிரீவா! தாண்ட முடியாத பெரிய சமுத்திரத்தை யடைந்துவிட்டோம். சமஸ்த சைன்னியங்களுடன் இவ்விடத்தில் தங்குவோமாக. சமுத்திரத்தைத் தாண்டும் உபாயத்தைப்பற்றி இனி ஆலோசிக்கவேண்டுமல்லவா," என்றனன். பிறகு ராமனது கட்டளையின்படி அனைவரும் அங்கு இறங்கினர். சூரர்களான வானர வீரர்கள் நான்கு பக்கங்களிலும் சதா திரிந்துகொண்டு பகைவர்கள் எவரும் அங்கு வராதபடி சேனைகளைப் பாதுகாத்துக்கொண்டிருந்தனர், வானரர்கள் உத்சாகத்தினால் செய்த ஆரவாரத்தின் பேரொலி சமுத்திரத்தின் பெருங்கோஷத்தினும் மிகுந்து ஒலித்தது. அந்த சமுத்திரமோ மிகவும் விசாலமாய் ஆழமாய் அக்கரை இன்னதென்று சொல்லமுடியாமலிருந்தது. பயங்கரமான ராக்ஷசர்களும், முதலைகளும், நூறுயோசனை நீளமுள்ள திமிங்கிலங்களும், சிறந்த மாணிக்கங்களையுடைய கொடிய விஷப்பாம்புகளும், கொடிய பெரிய நீர்யானைகளும் நிறைந்த அம் மகா சமுத்திரமானது ஒருவர்க்கும் தாண்டமுடியாமலிருந்தது. இன்னுமதில் தண்ணீரில் மறைந்து கிடக்கும் பெரிய கற்பாறைகளும், மலைகளும் நிறைந்திருந்ததுடன் அசுரர்களுக்கும் அது இருப்பிடமாகவிருந்தது, இப்படிப்பட்ட சமுத்திரத்தைக் கண்ட வானர வீரர்கள் இதை எப்படி தாண்டப்போகிறோமென்று பெருந்துயர முற்றனர். எல்லாவிதத்திலும் ஆகாயத்தைப் போல் காணப்பட்ட அம் மகாசமுத்திரத்தில் கிளம்புகின்ற அலைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு யுத்தத்தில் பெரிய பேரி வாத்தியங்கள்போல் பயங்கரமான சப்தத்துடன் ஒலித்துக்கொண்டு இருந்தன. அந்த சமுத்திரத்தை வானர வீரர்கள் ஆச்சரியத்துடன் கண்டு திகைத்தனர், ... (4)

5. ராமன் சமுத்திரத்தைக்கண்டு சீதையை நினைத்துக்கொண்டு வருந்துகையில், லக்ஷ்மணன் சமாதானம் கூறுதல்.

சைன்னியமெல்லாம் சமுத்திரக் கரையில் இறங்கினவுடனே ராமன் தன்பக்கத்தில் பணிந்து விநயத்துடன் நின்றுகொண்டிருந்த லக்ஷ்மணனைப் பார்த்து "விசனமானது காலம் செல்லச்செல்லக் குறைந்துகொண்டே வருமென்று உலகத்தவர் சொல்லுவார்கள். ஆயினும் சீதையைப் பிரிந்த என்னுடைய விசனமோவென்றால் அதற்கு நேர்மாறாக விருக்கின்றது. அவ்விசனம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. ஐயோ! நான் சீதையை மீளவும் மீட்டுக்கொண்டுவரச் சக்தி யுடையவனாய் இருந்தும் வருந்துவது தகுமோவென்று நீ சங்கிக்க வேண்டா. எனக்கு சீதை தூரத்திலிருக்கிறாளென்பதைப் பற்றியாவது ராக்ஷசன் கொண்டு போனானென்கிறதைப் பற்றியாவது சிறிதும் வருத்தமில்லை. அவளது இளமைப் பருவம் வீணாகக் கழிந்து போகிறதேயென்றுதான் வருந்துகிறேன்" என்று கூறி, அங்கு வீசும் காற்றைப்பார்த்து "வாயுவே! நீ சீதை இருக்குமிடம் சென்று அவள்மீது பட்டு அப்படியே வந்து என்மீது வீசுவாயாக. அதனால் நான் அவளையே தொட்டவனாவேன். ஸமஸ்தமான சுகபோகங்களையும் துறந்து என்னைப் பின்பற்றி வனத்திற்கு வந்த சீதை தன்னை ராவணன் கொண்டு போகும்பொழுது தன் ஒப்பற்ற கற்பெனும் நெருப்பினால் அவனை நீறுசெய்ய வல்லவளாயினும் என்னிடத்திலுள்ள பக்தியினால் என்னையே கதியாக நினைத்து 'ஐயோ! நாதா!' என்று முறை

யிட்ட உரை என் இருதயத்தைத் தகிக்கின்றது. மன்மதனென்னும் நெருப்பானது என் தேகத்தை இரவும் பகலும் குளிர்காலமென்றும் வெயிற்காலமென்றும் பேதமில்லாமல் எரிக்கின்றது. என்னால் இந்த தாபத்தைப் பொறுக்கமுடியவில்லை யாகையால் சமுத்திரத்தில் புகுந்து படுத்துக்கொள்கிறேன். அப்பொழுது எனது தேகம் தாபம் குறையப்பெற்று சற்று குளிர்ந்திருக்கும். இப்பொழுது சீதை பிழைத்திருக்கிறாளென்று கேள்விப்படுகையால் நான் உயிர் தரித்திருக்கிறேன். ஐயோ! லக்ஷ்மணா! நான் ராவணனையும் ராக்ஷசர்களையும் கொன்று லக்ஷ்மியைப்போன்ற சீதையை எப்பொழுது காண்பேனோ! அழகிய கோவைப்பழம் போன்ற அதரமுடையதும் தாமரை மலர் போன்றழகியதுமான சீதையின் முகத்தை உயர நிமிர்த்தி, வியாதிஸ்தன் ரசாயனமென்கிற ஓர்வித மருந்தைப் பருகுவதுபோல் அதரத்தின் அமிர்தத்தை எப்பொழுது பருகப்போகிறேனோ! அவள் என்னைத்தழுவி யணைக்கையில் ஒன்றோடொன்று இணைந்தவைகளும், பருத்துப் பனம்பழம் போன்றவைகளுமான அவளது கொங்கைகள் அசைந்துகொண்டு என் மேனியில் எப்பொழுது மோதப் போகின்றனவோ! ஐயோ! பூங்கொடிபோன்ற சீதை ராக்ஷச ஸ்திரீகளின் நடுவில் அகப்பட்டுக்கொண்டு வருந்துவது ஏனோ! நான் ராக்ஷசர்களைத் தொலைத்து எப்பொழுது சீதையை மீளவும் அடையப்போகிறேனா! தேவகன்னிகையையொத்தவளும் சிறந்த பதிவிரதையுமான சீதை மிகுந்த சந்தோஷத்துடன் என் கழுத்தைத் தழுவியணைத்து ஆனந்த பாஷ்பங்களை எப்பொழுது பெருக்கப்போகின்றனளோ? சீதையைப் பிரிந்ததனாலுண்டான இவ்விசனத்தை எப்பொழுது விடப்போகிறேனோ?'' என்று புலம்பினன். இங்ஙனம் புலம்பின ராமனை லக்ஷ்மணன் தகுந்த சமாதானங்களைச் சொல்லித் தேற்றினன். ... ... (5)

6. லங்கையில் அனுமான் செய்த காரியங்களைப்பற்றி ராவணன் சிந்தித்து பகைவர்கள் வருவதற்கு முன்செய்யவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி ஆலோசித்தல்.

லங்கையில் அனுமான் செய்த பயங்கரமான காரியங்களைக் கண்ட ராவணன் வெட்கத்தினால் தலை வணக்கமுற்று ராக்ஷசர்களெல்லோரையும் பார்த்து "கேவலம் ஓர் குரங்கு பகைவர்க்கு எவ்விதத்திலும் எதிரிடமுடியாத இவ்விலங்கைமாநகரில் புகுந்ததல்லாமல் சீதையையும் கண்டு போயிற்று. நகரத்திற்கு முக்கியமான மாளிகையும் நாசம் செய்யப்பட்டது. வலிமை மிக்க பல ராக்ஷசர்களும் கொல்லப்பட்டனர். இங்ஙனம் ஓர் குரங்கு வந்து லங்கையையெல்லாம் பாழ் செய்துவிட்டதே! இதை நினைக்கின் சற்று பயமாகத்தான் தோன்றுகிறது. ஆகையால் இனிச் செய்யவேண்டியதைப்பற்றி ஆலோசித்துச் சொல்லுங்கள். 'மிகுந்த பலமுடைய உனக்கு மந்திராலோசனை எதற்கு?' என்கிறீர்களோ; சொல்லுகிறேன் கேளுங்கள். பெரியோர் மந்திராலோசனையே ஜயத்திற்கு மூலகாரணமென்று சொல்லுவார்கள். உலகத்தில் அரசர்கள் உத்தமர், மத்திமர், அதமர் என்று மூன்றுவகைப்பட்டிருப்பர். எவன் சிறந்த புத்தியையுடைய மந்திரிகளோடாவது, தன் சுகதுக்கங்களையே தமது சுகதுக்கங்களாக நினைத்திருக்கும் நண்பர்களோடாவது, தன் இதத்தையே விரும்பும் பந்துக்களோடாவது கலந்து ஆலோசனை செய்து செய்யவேண்டிய காரியங்களை ஆரம்பித்து தெய்வத்தின்மேல் பாரத்தை இட்டிருப்பானோ அவனே உத்தம புருஷன் எனப்படுவான். எவன் தான் ஒருவனே காரியத்தை ஆலோசனைசெய்து தெய்வத்தை நம்பித் தானே காரியங்களைச்செய்வானோ அவன் மத்திம புருஷன் எனப்படுவான். எவன் நன்மை தீமைகளை நிச்சயித்துக்கொள்ளாமல், தெய்வத்தையும் பொருள் செய்யாமல் ஒருவரையும் ஆலோசனை கேட்காமல் மனம் போனபடி காரியங்களைச் செய்வானோ அவனை அதம புருஷனென்று சொல்வார்கள். இதுபோலவே மந்திராலோசனைகளும் உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்றுவகைப்பட்டிருக்கும். மந்திரிகளெல்லாரும் ஒற்றுமையாய் இருந்து சாஸ்திரஞானம் என்னும் பார்வையுடன்கூடி ஆதரவுடன் எந்த ஆலோசனை செய்வார்களோ அது உத்தமமான மந்திராலோசனை எனப்படும். எந்த சபையில் மந்திரிகள் ஆலோசனை செய்யும்பொழுது ஒருவர்க்கொருவர் அபிப்பிராயபேதம் உண்டாகப் பெற்றிருந்து கடைசியில் எல்லரும் ஒருமனப்பட்ட அபிப்பிராயம் அடைவார்களோ அதை மத்திம

மந்திராலோசனை என்று கூறுவர். எந்த ஆலோசனை சபையில் மந்திரிகள் ஒருவர்க்கொருவர் வாதம் செய்து மிகுந்த பிடிவாதத்துடன் அவரவர் தம் தம் எண்ணத்தையே போற்றி ஒருமனப்பட்ட அபிப்பிராயம் கொள்ளாமலிருக்கிறார்களோ அது அதமமான மந்திராலோசனை எனப்படும். இப்பொழுது ராமன் விஷயத்தில் நான் மந்திராலோசனை செய்ய விரும்புகிறேனாகையால் நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்ட அபிப்பிராயத்துடன் இருக்கும்படியாக நன்கு ஆலோசனை செய்து இனி நடக்கவேண்டிய காரியத்தைக் கூறுங்கள். ராமன் தனது பராக்கிரமத்தினால் சமுத்திரத்தில் அணைகட்டியோ அல்லது அதை உலர்த்தியோ அதைத் தாண்டி வருவானென்று எனக்குத் தோன்றுகிறபடியால், ராமன் வானர சைன்னியங்களுடன் கூடி லங்கையைத் தகையும் காலத்தில் நம் பட்டினத்திற்கும் ராக்ஷசர்களுக்கும் மேன்மையை விளைவிக்கவல்ல உபாயங்களை யெல்லாம் நன்கு ஆலோசிப்பார்களாக'' என்றனன். ... (6)

7. ராவணனது மந்திரிகள் பகைவரது பலத்தை அறியாமல் அவனது பராக்கிரமங்களைப் புகழ்ந்து அவனை சந்தோஷப்படுத்துதல்.

இங்ஙனம் ராவணன் கூறக்கேட்ட ராக்ஷசர்கள் பகைவரின் பலத்தையறியாமல் அவனைப் பார்த்துக் கைகூப்பிக்கொண்டு "ராஜனே! நம்மிடம் பல பேர்களை ஒரே தடவையில் கொல்லவல்ல பெரிய கதைகளும் ஈட்டிகளும் கத்திகளும் சூலங்களும் ஏராளமாய் இருக்கும்போது நமக்கென்ன பயம்? உனக்கு சைன்னியங்களின் உதவிதான் எதற்கு? நீ ஒருவனே போதுமானவனல்லையோ? பிரபூ! நீ பாதாளத்திற்புகுந்து நாகர்களை வென்றவனல்லவா? குபேரனையும் யக்ஷர்களையும் வென்று கைலாச சிகரத்தினின்று இப்புஷ்பக விமானத்தைக் கொண்டுவந்தவனல்லவா? ராக்ஷசர் தலைவனே! காலபாசத்தையுடைய யமனும் உனக்குப் பயந்து உன் நட்பை விரும்பவில்லையா? மிகுந்த சூரர்களும் மாயச் செய்கைகளையுடையருமான காலகேயர்களை வென்று அவர்களை உன்வசமாக்கிக் கொள்ளவில்லையோ? இத்துடன் நில்லாமல் தேவலோகம்சென்று இந்திரனையும் ஜயித்தனை. வருணபுத்திரர்களை வென்றனை. இங்ஙனம் நீ செய்த அல்பமான யுத்தத்திற்கே உலகங்களெல்லாம் கிடுகிடுவென்று நடுக்கமுற்றன. பலம் மிகப்பெற்ற கோடிக்கணக்கான க்ஷத்திரியர்களை யுத்தத்தில் வென்ற தீரனான உனக்கு அற்பனான அந்த ராமன் எம்மாத்திரம்? மிகுந்த புஜபல பராக்கிரமமுடைய இவ்விந்திரஜித்து ஒருவனே வானரர்களெல்லாரையும் உருமாய்க்க வல்லவன். இவன் சிவனைக் குறித்து நிகரில்லாத யாகத்தைச் செய்து அதனால் ஒருவர்க்கும் கிடைக்கமுடியாத அருமையான வரங்களைப் பெற்றிருக்கின்றானல்லவா? இவன் தேவேந்திரனை வென்றதுடன் அவனைப்பிடித்து விலங்கிட்டு லங்கைக்குக் கொண்டுவந்தானல்லவா? இவன் ஒருவனையே நீ யுத்தத்திற்கு அனுப்புவாயாக. இவனே எளிதில் பகைவர்களனைவரையும் மாய்த்து வருவான். ராஜனே! அற்பனாகிய ஒரு அனுமானால் இவ்வாபத்து இருந்தாற்போலிருந்து எதிர்பாராமல் சம்பவித்துவிட்டது. எனினும் இதைப்பற்றி நீ எள்ளளவும் சிந்திக்கலாகாது. நீ நிச்சயமாக ராமனைக் கொல்லப்போகிறாய். கவலையை ஒழித்து சந்தோஷமாய் இருப்பாயாக'' என்றனர். ... ... (7)

8. பிரஹஸ்தாதி மந்திரிகள் தாம் ஒவ்வொருவரே ராமனை ஜயித்துவருவோமென்று கூறுதல்.

பிறகு ராக்ஷச சேனாபதியான பிரகஸ்தன் ராவணனைப் பார்த்து "தேவதைகளாவது, அசுரர்களாவது' நாகர்களாவது, கந்தருவர்களாவது, பிசாசர்களாவது எவரும் யுத்தத்தில் உன்னை எதிர்க்கவல்லவரல்லர். இனி இவ்வானரர்கள் நமக்கு எம்மாத்திரம்? நாம் மனவூக்கமின்றி ஏமாந்திருந்த சமயத்தில் அந்த அனுமான் நம்மை வஞ்சித்துப் போயினன். இல்லாவிடில் அவ்வானரன் உயிருடன் இங்கிருந்து போகமுடியாது. நான் ஒருவனே சென்று சமஸ்த வானரர்களையும் கொன்று இவ்வுலகிலேயே வானரர்கள் இல்லாமலிருக்கும்படி செய்துவிடுகிறேன். ராவணா! இனி உனக்குக் கவலைவேண்டாம்'' என்றனன். பிறகு துர்முகனென்னும் ராக்ஷசன் மிகுந்த ஆத்திரத்துடன் எழுந்து "கேவலம் ஓர் குரங்குவந்து நம்மெல்லார்க்கும் இப்படிப்பட்ட அவமானத்தை விளைவித்தது. அதுடன் நிற்காமல் நமது பட்டணத்தையும் கொளுத்தி

நமதரசனையும் அவமதித்தது. இதை எள்ளளவும் பொறுக்கலாகாது. இப்பொழுது நானொருவனே சென்று வானரர்களெல்லாரையும் சமுத்திரத்தில் பிரவேசிக்கினும் ஆகாயத்தில் கிளம்பினும் பாதாளத்தில் மறையினும் விடாமல் கொன்று திரும்பிவருகிறேன்" என்றனன். பிறகு வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் என்னுமரக்கன் பயங்கரமான இருப்புத்தடியைக் கையில் பிடித்த வண்ணம் "இதோ நான் ஒருவனே சென்று ராமனையும் லக்ஷ்மணனையும் சுக்கிரீவனையும் இருப்புத்தடியால் கொன்று வானரர் எல்லாரையும் கலக்கிவிட்டு வருகிறேன். ராஜனே! நான் இன்னொரு யுக்தி சொல்லுகிறேன் கேட்பாயாக. நமது ராக்ஷசர்களில் சில ஆயிரம் பேர்கள் மானிட தேகங்களைத் தரித்து ராமனிடம் போய் 'நாங்கள் உன் தம்பியான பரதனால் அனுப்பப்பட்டு வந்தனம். நீ உடனே அயோத்திக்கு மீண்டு வருவதைப்பற்றி வேண்டிய பிரயத்தனங்கள் செய்யவேண்டும்' என்று சொல்வார்களாக. உடனே ராமன் சேனைகளைவிட்டு சீக்கிரமாக அவர்களைத் தொடர்ந்துசெல்வான். பிறகு நாம் இங்கிருந்து சூலம், கத்தி, கதை, பாணம் முதலியவற்றைத் தரித்துச் சீக்கிரமாக அவ்விடம் செல்வோம். அப்பொழுது நாம் கூட்டங் கூட்டமாக ஆகாயத்தினின்று கற்களையும் ஆயுதங்களையும் பெரிய மழையாகப் பெய்து அவ்வானர சைன்னியங்களையெல்லாம் பாழ்செய்து யமலோகத்திற்கு அனுப்பிவிடுவோம். ராமலக்ஷ்மணர்கள் இதைக் கண்டு கபடம் அறியாமையால் நம்முடையவர்களைத் தம்முடையவர்களாக நம்பி நீதியினின்றும் தவறினர்களென்கிற உறுதியினால் நிச்சயமாகத் தம் பிராணன்களை விடுவார்கள்" என்றனன். பிறகு கும்பகர்ணனது புத்திரனான நிகும்பனென்பவன் மிகுந்த கோபாவேசத்துடன் ராவணனைப் பார்த்து "நீங்களனைவரும் மகாராஜனான ராவணனுடன் இங்கேயே இருப்பீர்களாக. நானொருவனே சென்று ராம லக்ஷ்மண சுக்கிரீவர்களையும் அனுமானையும் கொன்று வருகிறேன்" என்றனன். பிறகு அவன் கூறினபடியே வஜ்ஜிரஹனுவென்னும் ராக்ஷசன் வீரமொழிகளைக் கூறினன். ... ... (8)

9. நிகும்பாதிகள் எழுந்து யுத்தத்திற்குப் புறப்படுகையில் விபிஷணன் வேண்டாமென்று தடுத்தல்.

பிறகு நிகும்பன், ரபஸன், சூரியசத்துரு, ஸுப்தக்னன்; யஜ்ஞஹன், மஹாபார்சுவன், மகோதரன், அக்கினிகேது, இந்திரஜித்து, பிரகஸ்தன், விரூபாக்ஷன், வஜ்ஜிரதம்ஷ்ட்ரன், தூமராக்ஷன், அதிகாயன், துர்முகன் ஆகிய இவ்வரக்கர்களனைவரும் பட்டயங்களையும் ஈட்டிகளையும், கத்திகளையும், விற்களையும் பாணங்களையும், கண்ட கோடாலிகளையும் ஏராளமாக எடுத்துக்கொண்டு ராவணனைப் பார்த்து "நாங்கள் இப்பொதே சென்று ராமனையும் சுக்கிரீவனையும், லங்கையில் ரகசியமாகப் புகுந்து கெடுதிசெய்த அனுமானையும் கொன்றுவிட்டு வருகிறோம்" என்றனர். இங்ஙனம் பிரயாணமாகப் போக முயன்றிருக்கிற அவ்வரக்கர்களையெல்லாம் விபீஷணன் நிறுத்தி மீளவும் உட்கார வைத்து, கைகூப்பி ராவணனைப் பார்த்து "அண்ணலே! சாம தான பேதங்களென்கிற மூன்று உபாயங்களும் பயன்படாமற்போகும் சமயங்களில்தான் 'தண்டம்' என்கிற பராக்கிரமத்தைக் காட்டவேண்டியதாகுமென்பர். நாம் இன்னும் முற்கூறிய மூன்று விதமான உபாயங்களை உபயோகிக்கவில்லை. ஆகையால் இது தண்டிப்பதற்குக் காலமல்ல. மேலும் பகைவனான ராமன் தண்டிக்கக் கூடியவனல்லன். நிலைநின்ற பலமுடையவன்; வெற்றியடையவிருப்பமுடையவன்; அக்காலத்தில் ரோஷத்தை ஏற்றுக்கொள்பவனல்லன். ஒருவராலும் எதிர்க்கமுடியாதவன். அனுமான் பயங்கரமான சமுத்திரத்தைத் தாண்டி ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தைச் செய்தானே! இப்படியாகுமென்று எவனேனும் நினைத்ததுண்டா? ஆகையால் ராமனுக்குத் தெய்வமும் பிரதிகூலமன்று. ராக்ஷசர்களே! பகைவர்களின் பலங்களும் பராக்கிரமங்களும் அளவிறந்தவையாகையால் முன்பின் பாராமல் நீங்கள் திடீரென்று அவர்கள் அற்பர்களென்று நினைத்து அவமதித்துச் செல்லலாகாது. ராமனது மனைவியை ஜனஸ்தானத்தினின்றும் ராவணன் கொண்டு வந்தனனே. இதற்கு, ராமன் இந்த ராவணனுக்கு முன்பு என்ன அபகாரஞ் செய்தான்? கரனைக் கொன்றதனால்தான் என்னில், கரன் தானே மிதம்விஞ்சி ராமனைக் கொல்லப் போகையில் ராமன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு அவனைக் கொல்ல நேர்ந்தது. இதில் என்ன தோஷம்? ஆகையால் ராமன் தண்டிப்பதற்குத் தகுந்தவனேயல்லன். அவன் மனைவியை அபகரித்துக்கொண்டு வருவது சிறிதும் யுக்தமன்று. பிறர் மனைவியைத் தீண்டுவது அபகீர்த்தியையும், ஆயுளின் முடிவையும், தனநாசத்தையும் விளைவிக்கும். ராமனோ மகா பராக்கிரமசாலி. தர்மத்தில் தவறாமல் நடப்பவன். அப்படிப்பட்டவனோடு வீண் வைரம் (விரோதம்) வைத்துக்கொள்வது நமக்கு யுக்தமன்று. ஆகையால் சீதையை அவனுக்குக் கொடுத்து அவனால் நாம் பந்துமித்திரர்களுடன் நாசமடையாமல் இன்னும் கொஞ்சகாலம் சுகமாகக் காலம் கழிப்போமாக. நான் நன்மையை விளைப்பதும் நீதியுடையதுமான வசனத்தைக் கூறுகிறேன். ராமன் தனது கூரான பாணங்களால் இந்நகரத்தைப் பிளந்து நம்மைப் பாழ்படுத்துவதற்குமுன் சீதையைக்கொண்டு அவனிடம் சேர்த்து விடுவீர்களாக" என்றனன். இங்ஙனம் விபீஷணன் கூறியதும் ராவணன் அனைவர்க்கும் விடை கொடுத்தனுப்பித் தானும் தன் அரண்மனையை அடைந்தனன். ... ... (9.)

10. சீதையை விட்டுவிடும்படி விபீஷணன் ராவணனுக்குப் புத்திமதி கூறுதல்.

மறுநாள் பொழுது விடிந்ததும் விபீஷணன் ராவணனது அரண்மனையை அடைந்தனன். அவ்வரண்மனை ஆகாயத்தை யளாவியதாய் உயர்ந்து பிரிவினையுடன் நன்கு நிருமிக்கப்பட்ட பல கட்டுகளையுடையதாய் இருந்தது. வீணை, பிடில் முதலிய வாத்தியங்களின் ஒலி அங்கு எப்பொழுதும் கேட்டுக்கொண்டிருந்தது. அழகிற் சிறந்த இள மங்கையர்கள் கணக்கின்றி நிறைந்திருந்தனர். இப்படிப்பட்ட ராவணனது மாளிகையில் நுழைந்த விபீஷணன் சிம்மாசனத்தில் வீற்றிருந்த ராவணனுக்கு வணக்கம் செய்து அவனை நோக்கி "சீதை நமது பட்டணத்திற்கு வந்ததுமுதல் கெட்ட சகுனங்கள் பலவும் புலப்படுகின்றன. நெருப்பு (அக்கினி) மந்திரங்களைச் சொல்லி ஹவிஸ்ஸுக்களை விதிப்படி ஹோமஞ்செய்யினும் புகை மூடிக்கொள்ளுகையால் அடிக்கடி அணைந்தணைந்து எரிகின்றதேயன்றி நன்கு ஜ்வலிக்கிறதில்லை. இதுவன்றி சமையல் செய்யும் அடுப்புகளிலும், அக்கினிஹோத்திர வீடுகளிலும் வேதமோதுமிடங்களிலும் சர்ப்பங்கள் காணப்படுகின்றன. ஹோமஞ் செய்வதற்காக வைத்திருக்கிற ஹவிஸ்ஸுக்களுக்கு எறும்புகள் வருகின்றன. பசுக்களுக்குப் பால் உலர்ந்துபோகின்றது. மதங்கொண்ட யானைகளுக்கு மதம் குறைகின்றது. குதிரைகள் தீனமாகக் கனைத்துக்கொண்டு ஆகாரத்தின்மேல் இச்சையில்லாதிருக்கின்றன. ராஜனே! நமது கழுதைகளும் ஒட்டகங்களும் மயிர் சிலிர்த்து கண்ணீர் பெருக்குகின்றன. காக்கைகள் கொடியனவாகி எங்கும் கூட்டம் கூட்டமாகக் கூடிக் கூவுகின்றன. கழுகுகள் வீடுகளின்மேல் குவியல் குவியல்களாக வந்து நிற்கின்றன. நரிகள் காலை மாலைகளில் பட்டணத்திற்கருகாமையில் வந்து அமங்கலமாகக் கூவுகின்றன. நாய்கள் இடி இடித்தாற்போல் குரைக்கின்றன. தவிர எவர்க்கும் புக முடியாத நமது லங்கையில் ஓர் குரங்கு நுழைந்து பலமுள்ள அநேக ராக்ஷசர்களைக் கொன்றதல்லாமல் உன்னையும் அவமதித்து பட்டணத்தையே கொளுத்திவிட்டது. ராவணா! இவற்றையெல்லாம் யோசிக்கில் நமக்கு அபஜயமே உண்டாகுமென்று தோன்றுகின்றது. நம்முடைய ராக்ஷச வீரர்களான மந்திரிகள் உன்னுடைய முகமலர்ச்சிக்காகச் சத்துருக்களின் பலத்தைத் தெரிந்துகொள்ளாமல் உன்னைத் தூண்டிவிட்டு சண்டையை நடத்த விரும்புகின்றனர். நான் உனக்குச் சகோதரனாகையால் உனக்கு நேரும் கஷ்ட நிஷ்டூரங்கள் என்னுடையதேயென்று நினைத்து உனக்கு நியாயமானதும் நன்மையை விளைவிப்பதுமான நீதிகளைச் சொன்னேன். சீதையை உடனே ராமனிடம் விட்டுவிடுவாயாக. அதனால் நாம் நமது பந்துமித்திரர்களுடன் ராமனது கூரான பாணங்களுக்கு இலக்காகாமல் சுகமாக வாழலாம். இப்படி நான் சொல்லுவதைப்பற்றி நீ என்னைக் கோபிக்காமல் நான் சொன்ன விஷயங்களை நன்கு ஆலோசித்து எது உசிதமோ அதன்படி நடப்பாயாக" என்றனன். இங்ஙனம் விபீஷணன் சொன்ன தருமமொழிகளைக் கேட்ட ராவணன், தான் நினைத்ததே நன்மை என்கிற பிடிவாதமுடையவனாகையால் மிகுந்த கோபங்கொண்டு விபீஷணனை நோக்கி "எனக்கு எவனிடத்திலும் பயமில்லை

என் கையிலகப்பட்ட சீதையை ராமன் தேவேந்திரனுடன் கூடி வரினும் பெறமுடியாது. சீதையை நான் விடமாட்டேன்." என்று கூறி விபீஷணனை விடைகொடுத்தனுப்பினன். (10.)

11. ராவணன் மனக்கலக்கமுற்று மீளவும் ஆலோசனை செய்யும்பொருட்டு மந்திரிகளுடன் சபைக்கு வருதல்.

ராவணன் சீதையினிடத்திலுள்ள காமமோகத்தாலும், விபீஷணன் தனக்கு மிகவும் இதமான வார்த்தைகளைச் சொல்லினும், அதை பிரதிகூலமானதாக நினைத்ததாலும், சீதையை எடுத்துக்கொண்டுவந்த பாபகர்மத்தினாலும் சிந்தையிலாழ்ந்து மிகுந்த வியாகுலமடைந்து மீண்டும் மந்திராலோசனை சபையைக்கூட்டி ஆலோசிக்க விரும்பினன். உடனே அவன் நன்கலங்கரிக்கப்பட்ட ரதத்தின்மேலேறி மந்திராலோசனை சபைக்குச் சென்றனன். அவனுக்கு முன்னும் பின்னும் கணக்கில்லாத ராக்ஷச வீரர்கள் கவச கேடயங்களைத் தரித்துச் சென்றனர். ராவணனது கட்டளையின்படி லங்கையிலுள்ள ராக்ஷசர்களனைவரும் ஒருங்கே வந்துகூடினர். அவர்களில் சிலர் வாகனங்கள் மேலும், சிலர் ரதங்களின் மேலும், சிலர் வண்டிகளிலும் வந்திறங்கினர். விசுவகர்மாவால் நிருமாணிக்கப்பட்டதும் நவரத்தின கசிதமாய் மிகுந்த காந்தியுடன் விளங்குவதுமான மந்திராலோசனை சபையையடைந்த ராவணன் வைடூரியமணி மயமான உயர்ந்த சிம்மாசனத்திலமர்ந்தனன். பல்லாயிரக்கணக்கான ராக்ஷச வீரர்கள் அவரவர்களந்தஸ்திற்குத் தகுந்த ஆசனங்களில் உட்கார்ந்தனர். சிறந்த ஞானமும் அனுபவமும் உடைய மந்திரிகள் அநேகம்பேர் வந்து சேர்ந்தனர். அப்பொழுது தர்மாத்மாவான விபீஷணனும் உத்தமமான தேரில் ஏறிக்கொண்டு அண்ணனது சபைக்குப்போயினன். பிறகு விபீஷணன், பிரகஸ்தன், சுகன் முதலானோர் ராவணனுக்கு வணக்கம் செய்து, தகுந்த ஆசனங்களிலமர்ந்தனர். அப்பொழுது ராவணன் ராக்ஷசர்களின் நடுவில் வஸுக்களினிடையில் தேவேந்திரன் போல் தன் தேக காந்தியால் பிரகாசித்துக்கொண்டிருந்தனன். ... ... (11.)

12. ராவணன் சீதையை விட்டுக்கொடாமலே ராமனை வெல்வதற்கு உபாயத்தை ஆலோசித்தல்.

பிறகு ராவணன் பிரகஸ்தனை நோக்கி "சேனாதிபதி! ரத கஜ, துரக பதாதிகளென்று சொல்லப்பட்ட நான்குவிதமான சைன்னியங்களுக்கு, முன்பைவிட மிகுந்த மனவூக்கத்துடன் பட்டணத்தைப் பாதுகாக்கும்படி கட்டளை இடுவாயாக" என்று ஆஞ்ஞாபித்தனன். பிரகஸ்தன் உடனே அவ்விராவணனது ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு அவ்வண்ணமே செய்தனன். ராவணன் ஜயத்தை விரும்பாமல் காமசுகத்தையே விரும்பி நண்பர்களைப் பார்த்து "நீங்கள் எல்லா விதத்திலும் நன்கு ஆலோசித்து நிச்சயித்து ஆரம்பித்த காரியங்களில் ஒன்றுயினும் எப்பொழுதும் பயன்படாமற்போனதே இல்லை. இப்பொழுது நாம் யோசிக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி முன்னமே உங்களுக்குக் கூறியுள்ளேன். கும்பகரணன் அப்பொழுது நித்திரையிலிருந்தபடியால் அவனுக்குமாத்திரம் இவ்விஷயம் தெரியாது. அவனும் இதை அறிவானாக" என்று மொழிந்து, கும்பகரணனை நோக்கி "ராமனது மனைவியான அழகிய சீதையை ஜனஸ்தானத்தினின்று கொண்டுவந்தேன். அந்த சுந்தராங்கி நான் எவ்வளவு வேண்டிக்கொண்ட போதிலும் என் படுக்கையில் ஏற இஷ்டப்படவில்லை. எல்லா சாமுத்திரிகா லக்ஷணங்களுடனும் கூடிய அம்மாதரசியின் ஒவ்வொரு அழகிய அங்கமும் என்னை மன்மதனுக்கு ஆளாகும்படி செய்கின்றன. மாரனது மலர்க்கணையால் அடிக்கப்பட்டு இரவும் பகலும் நான் வருந்துகிறேன். 'அப்படியாயின் பலாத்காரம் செய்தாயினும் அவளைக் கூடலாகாதா?' என்னில் அம்மாதரசி ராமனது வரவை எதிர்பார்ப்பவளாகி 'ஒரு வருஷத்திற்குள் ராமன் வராதபட்சத்தில் நீ சொன்னபடி செய்கிறேன்' என்று ஒரு வருஷகாலம் கெடுவேண்டிக் கொண்டனள். அவளது கண்ணழகிலும் இனிய பேச்சுக்களிலும் ஈடுபட்டு அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டேன். இப்பொழுது ராமலக்ஷ்மணர்கள் யுத்தத்தின் பொருட்டுக் கணக்கற்ற வானரர்களுடன் கூடி சமுத்திரத்தின் அக்கரையில் தங்கியிருக்கின்றனர். அவர்கள்

பெரிய ஆழமான சமுத்திரத்தை எங்ஙனம் தாண்டுவார்கள்? ஒருக்கால் தாண்டி வந்துவிட்டால் பெரிய யுத்தம் செய்ய நேரிடும்போல் தோன்றுகிறது. கேவலம் ஓர் அனுமான் என்ற குரங்கினால் நமக்குப் பெரிய மனவருத்தம் நேர்ந்ததே! ஆகையால் காரியங்கள் எப்படி எப்படி நேருமோ என்று சிறிது விசாரமாகத்தான் இருக்கிறது. ஆகையால் நீங்கள் அனைவரும் நீர ஆலோசித்து சீதையை நான் இழக்காமலிருக்கும்படிக்கும், ராம லக்ஷ்மணர்களை நான் கொல்லும்படிக்கும் தகுந்த வழியைக் கூறுவீர்களாக" என்றனன். இங்ஙனம் ராவணன் மொழிந்த வசனங்களைக் கேட்ட கும்பகரணன் மிகுந்த கோபமுற்று அவனைப் பார்த்து "ராவணா! நீ சீதையை முன்பு கொண்டுவந்தபொழுதே எங்களுடன் ஆலோசித்திருப்பாயாயின், இப்பொழுது உன்மனம் சஞ்சலமில்லாமலிருக்கும். இப்பொழுது விஞ்சிப்போயின பின்பு ஆலோசிப்பதெல்லாம் வீணேயாகையால் உன்மனம் குதிராமலிருக்கின்றது. பத்துத் தலையனே! எவன் முன்னதாக ஆலோசித்து நியாயத்தை அறிந்து, பின்பு அந்த நியாயத்தின்படி ராஜகாரியங்களைச் செய்கிறானோ, அம்மன்னவன் காரிய சித்தியடைந்து மனம் நிர்மலமாய் இருக்கப்பெறுவானாதலால் உன்னைப்போல் பின்பு சஞ்சலமான புத்தியை அடையமாட்டான். தசக்கிரீவா! இப்பொழுது நீ சீதையைக் கொண்டுவந்த காரியமோ மிகப்பெரியது. எவ்வளவோ அபாயகரமான இக்காரியத்தை நீ ஆலோசிக்காமலே செய்தனை. இதுவரை உனது பாக்கிய வசத்தினால் ராமன் உன்னைக் கொல்லாதிருக்கின்றனன். ராவணா! 'இனிக்கதியென்?' என்னில், இங்ஙனம் நீ உனக்குத் தகாத காரியம் செய்தனையாகையால், அதை நான் தவிர மற்றெவராலும் சரிப்படுத்த முடியாது. நான் உன் பகைவர்களை யழித்து அதைச் சீர்திருத்துகிறேன். பெரியோனே! நான் பர்வதம்போன்ற உருவத்துடன் பெரிய இரும்புத் தடியைத் தரித்துக் கூரான கோரப் பற்களுடன் சிம்மநாதஞ் செய்துகொண்டு யுத்தத்திற்குத் தொடங்குகையில் தேவேந்திரனும்கூட பயந்து ஓடிப்போவானே! மற்றவரைப் பற்றிச் சொல்ல வேண்டுமோ? அந்த ராமன் என்மேல் ஒரு பாணத்தை எய்து மீளவும் இரண்டாவது பாணத்தைத் தொடுத்து அடிப்பதற்குள் நான் அவனது ரத்தத்தைப் பருகிவிடுவேன். அங்ஙனமே லக்ஷ்மணனையும் கொன்று வானரர்களெல்லோரையும் தின்று விடுகிறேன். இனி நீ கவலையையொழித்து நல்ல மதுபானங்களைக் குடித்து உல்லாசமாக விளையாடிக்கொண்டு உனக்கிஷ்டமான காரியங்களைச் செய்வாயாக. நான் சென்று ராமனை யமபுரத்திற்கனுப்பி விடுகிறேன். பிறகு சீதை வெகுகாலம் உன் வசத்திலிருப்பாள்" என்றனன். ... . (12.)

13. மகர்பார்சுவன் சீதையை பலாத்காரம்செய்து அநுபவிக்கும்படி ராவணனுக்கு உரைத்தலும் அதற்கு ராவணன் கூறும் சமாதானமும்.

மகா பார்சுவன் என்பவன் உடனே கைகுவித்தவண்ணம் ராவணனைப் பார்த்து "ராஜனே! நீ மிகவும் பிரயாசப்பட்டு சீதையைக் கொண்டுவந்தும் அவளை யணையாமல் வெறுமனே இருப்பது யுக்தமல்ல. இவ்வுலகில் உன்னை ஜயிப்பவன் எவனுமில்லை. ஆகையால் நீயே அனைவர்க்கும் கட்டளையிடுபவன். ஆகையால் நீ அதர்மத்திற்குச் சிறிதும் பயப்படாமல் பகைவர்களின் தலையை மிதித்து சீதையுடன் கூடி இன்பம் நுகருவாயாக. உன்னை அவள் விரும்பாவிடினும் நீ மேல்விழுந்து வஞ்சனையிற்புகுந்து பலவந்தமாக அநுபவிப்பாயாக. 'இதன் காரணமாக மேல்வரும் பயத்தைத் தடுக்காமல் இவ்வண்ணம் எப்படிச் செய்யலாம்?' என்னில், இங்ஙனம் நீ காமத்தைத் தீர்த்துக்கொண்ட பின்பு உனக்கு ஏதேனும் பயம் சம்பவிக்குமாயின் உனக்கது எம்மாத்திரம்? ராக்ஷச ராஜனே! கும்பகரணனும் இந்திரஜித்தும் எங்களை சகாயமாக அழைத்துக்கொண்டு சென்று பகைவர்களை மாய்த்துவிடுவார்கள். இதில் சந்தேகமில்லை" என்றனன். இதைக் கேட்ட ராவணன் புன்முறுவலுடன் மகாபார்சுவனை நோக்கி "உன் வார்த்தைகளுக்கு சந்தோஷித்தேன். என்னிடத்தில் ஒரு ரகசியம் உளது. அதைச் சொல்லுகிறேன் கேள். முன்பு ஒரு காலத்தில் ஆகாயத்தில் புஞ்சிகஸ்தலையென்னும் அப்சரமடந்தை என்னைக் கண்டஞ்சி ஒதுங்கி யொதுங்கி மறைந்து பிரமதேவனை வணங்கும்பொருட்டுப் போய்க்கொண்டிருக்கக் கண்டேன். பிறகு நான் அப்பெண்மணியைப் பலவந்தமாகப் பிடித்துத் துன்

பங்களை விளைத்து அதிக்கிரமம் செய்தேன். அவள் வாடிவதங்கின தாமரைக் கொடிபோல் நலுங்கி, பிரமதேவனிடம் சென்றனள். அவளது கற்பை நானழித்த விஷயம் பிரமதேவனறிந்து மிகவும் கோபமுற்று 'இது முதலாக நீ இங்ஙனம் அன்னிய ஸ்திரீகளைப் பலவந்தமாகப் புணருவாயாயின் அப்பொழுதே உனது தலை நூறு சுக்கல்களாக வெடித்துப்போகக்கடவது' என்று சாபங் கொடுத்தனன். இதனால்தான் நான் சீதையைப் பலவந்தப்படுத்தப் பயப்படுகிறேன். மகா பார்சுவனே! அந்த ராமனுக்கு எனது வீரபராக்கிரமங்கள் சிறிதும் தெரியாது. விவேகமில்லாத அந்த அற்பமனிதன் எனது கொடிய பாணங்களால் வீணில் மடியப்போகிறான். பிறகு அந்த வானர சைன்னியங்களையும் சின்னபின்னப்படுத்தி நாசம் செய்யப்போகிறேன். இதில் சிறிதும் சந்தேகமில்லை" என்றனன். ... ... (13.)

14. விபீஷணன் ராமனது ஒப்புயர்வற்ற பராக்கிரமங்களைக்கூறி சீதையை விட்டுவிடுவதே யுக்தமென்று சொல்லுதல்.

பிறகு விபீஷணன் ராவணனைப் பார்த்து "ராஜனே! சீதையைக் கொடாமலே ராமனைக் கொல்லும் உபாயத்தைக் கேட்டனை. ஐயோ! சீதை என்பவள் அணுகின மாத்திரத்திலேயே மனிதனை முடிக்கவல்ல கொடிய சர்ப்பமென்பதை இன்னும் நீ தெரிந்துகொள்ளவில்லையே! அந்த சர்ப்பத்தை நீ என்னென்று விரும்பினை? இது உனக்கு மாத்திரமின்றி உன்னைச்சேர்ந்த அனைவர்க்குமே நாசத்தை விளைவிப்பதாகும். மிகுந்த பலமும் வீரமும் பொருந்திய கணக்கற்ற வானரர்கள் லங்கையின்மேல் எதிர்த்து வருவதற்கு முன்பே சீதையை ராமனுக்குக் கொடுத்து விடுவாயாக. இம் மூவுலகிலும் எங்குச் சென்றபோதிலும் விடாமல் தொடர்ந்து கொல்லக்கூடிய ராம பாணங்கள் லங்கையில் புகுவதற்கு முன்பே சீதையை விட்டுவிடுவாயாக" என்று மொழிந்து, பிரகஸ்தனை நோக்கி, "ஓ பிரகஸ்தனே! மிகுந்த வேகமும் கூர்மையும் பொருந்திய ராம பாணங்கள் இன்னும் உன் தேகத்தைப் பிளந்துகொண்டு உள் நுழையாதிருக்கின்றன. ஆனதுபற்றியே நீ உன்னை இங்ஙனம் புகழ்ந்து கொள்கின்றனை. சேனாதிபதி! கும்பகரணனாவது இந்திரஜித்தாவது ராவணனாவது மகாபார்சுவனாவது மற்றும் எவராவது ராமனுக்கு எதிரில் யுத்தத்தில் நிற்கவல்லரல்லர். நீங்கள் சூரியனது பாதுகாப்பிலிருப்பினும், தேவதைகளெல்லோரும் உங்களைக் காக்கவரினும், யமனது மடியில் ஏறியிருப்பினும், ஆகாயத்திற் கிளம்பினும், பாதாளத்தில் புகினும் நீங்கள் உயிரோடிருக்கும் வரையில் உங்களை ராமன் விடமாட்டான். கொன்றே தீருவான். பிரகஸ்தா! ராம லக்ஷ்மணர்களை எவராலும் கொல்ல முடியாது. ராமன் தருமத்தை முக்கியமாகக் கடைப்பிடித்தொழுகுபவன். யுத்தத்தில் தன்னையும் சாரதியையும் ரக்ஷித்துக்கொண்டே பகைவரை முடிக்கும்படியான மகாரதன். தவிர, விராதன், கபந்தன் முதலிய மகா சூரர்களான அரக்கர்களையும் மிக எளிதாகக் கொன்ற வீரன். நீ சீக்கிரத்தில் ராம பாணங்களாலடியுண்டு சாகப்போகிறவனாகையால் உனக்கு இவ்வித மதிமயக்கமேற்பட்டு உன்னையே புகழ்ந்து கொள்கின்றனை. விநாசகாலத்தில் விபரீதபுத்தி உண்டாகுமென்பார்களே; அது உன்னிடத்திலேயே உண்மையாயிற்று. ராவணனோ நமக்கரசன். எதையும் ஆலோசித்துச் செய்பவனல்லன். அன்றியும், காமம், குரோதம் முதலியவற்றால் மனநிலைமை தப்பியிருப்பவன். அப்படிப்பட்ட இவனுக்கு நன்மை செய்யவேண்டியிருக்க, அங்ஙனம் செய்யாமல் அவனது விநாசத்தையே விளைவிக்கவல்ல யோசனைகளைக் கூறி அவன் போகிற வழியே போகிறீர்கள். இதனால் ராக்ஷசர்களனைவர்க்குமே விநாசத்தை உண்டாக்கப் போகிறீர்களே யன்றி வேறில்லை. ராக்ஷசர்களே! ராவணனை நீண்ட உடலும் கொடிய விஷமுமுள்ள ராம துவேஷம் என்கிற ஓர் பெரிய சர்ப்பம் சுற்றிக்கொண்டிருக்கின்றது. நீங்கள் அந்த சர்ப்பத்தினின்று இவனை இழுத்து விடுவிப்பீர்களாக. ராவணன் சீதையை ராமனுக்குக் கொடாதிருப்பின் இருக்கட்டும். நான் சொல்லுகிற இவ்வார்த்தையைக் கேளுங்கள். இது லங்கைக்கும் ராவணனுக்கும் அவனைச் சேர்ந்த நமக்கும் நன்மையைத் தரவல்லது. ராவணனது சம்மதியை எதிர்பாராமல் நாமாகவே ராமனுக்கு சீதையைக் கொடுத்துவிடுவோம்" என்றனன். ... ... (14.)

15. இந்திரஜித்து விபீஷணனைக் கண்டிக்கையில் விபீஷணன் அவனுடைய துர்ப்புத்தியைச் சொல்லி தூஷித்தல்.

உடனே மிகுந்த கோபத்துடன் எழுந்த இந்திரஜித்து, விபீஷணனை நோக்கி "சிற்றப்பனே! நீ கடைசியில் சொன்ன வார்த்தை நடக்கப்போகிறதில்லை யாதலால் பயனற்றது. புலஸ்திய வம்சத்தில் பிறந்த நீ இங்ஙனம் கூறுதல் சரியோ? இந்த வமிசத்தில் நீ ஒருவன் மாத்திரமே பலமும், கீர்த்தியும், முயற்சியும், சாகசத்தன்மையும், மன உறுதியும், கர்வமும் இல்லாதிருப்பவன். ஆகையால் நீ கூறின வார்த்தைகள் உன் சுபாவத்திற்குத் தகுந்தனவே. ஓ ராக்ஷசா! மூன்று லோகங்களுக்கும் அதிபதியான இந்திரனையும் நான் பூமியில் விழத் தள்ளினேன். எல்லா தேவதைகளும் எனக்குப் பயந்து வருந்தி மூலைக்கொருவராக ஓடிப்போயினர். ஐராவதம் என்னால் தள்ளுண்டு விகாரமான சப்தத்துடன் வீறிட்டுக்கொண்டு தரையில் வீழ்ந்தது. தேவதைகளையும் சிதறடித்த மகா பராக்கிரமசாலியான எனக்கு அந்தச் சிறிய மானிடப்பதர்கள் எம்மாத்திரம்? மிகவும் துர்ப்பலரான அவ்வரசகுமாரர்களை எம்மில் மிகவும் துர்ப்பலனான ஒரு ராக்ஷசனே மிக்க சுலபமாகக் கொன்றுவிடக் கூடும்" என்றனன். இங்ஙனம் இந்திரஜித்து கூறினதைக் கேட்ட விபீஷணன் "அடா! குழந்தாய்! நீ நேற்றுப் பிறந்தவன். நன்மை தீமைகளைப்பற்றி ஆராயும் சக்தி உனக்குக் கிடையாது. 'இளங்கன்று பயமறியாது' என்னும் பழமொழிக்கிணங்க நீ கூறும் வார்த்தைகள் பயனற்றவை. இந்திரஜித்தே! நன்மை பயக்கக்கூடிய என் வார்த்தைகளைக் கேட்டும் நீ அறிவின்மையால் வாய் வந்தபடி பிதற்றுகின்றனையே! ஆகையால் நீ ராவணனுக்குப் பிள்ளையென்னும் பேர் கொண்டு நண்பன்போல் வெளிக்குத் தோன்றும் பகைவனே யாகின்றனை. இங்ஙனம் தந்தையின் விநாசத்திற்கு சம்மதிக்கையால் துர்ப்புத்தியுடைய உன்னைக் கொன்றுவிடவேண்டும். நன்மை தீமைகளை அறியும் விவேகமில்லாத உன்னை இவ்வாலோசனை சபைக்கு அழைத்து வந்தவனையும் கொல்லவேண்டும். பிரகஸ்தனும், மகாபார்சுவனும் மிகுந்த துர்ப்புத்தி யுடையவர்கள். நீயோ இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாத கெட்டபுத்தி யுடையவன். அதனால்தான் மனம் போனபடி பிதற்றுகின்றனை. பயங்கரமான ராமனது பாணங்களை எவன் சகிக்கவல்லன்?" என்று கூறி ராவணனை நோக்கி "ராஜனே! சீதையை ராமனிடம் கொண்டுபோய்ச் சமர்ப்பித்துவிட்டு நாம் மேல்வரும் வருத்தத்தைத் துறந்து சுகமாக இருப்போமாக" என்றனன். ... ... (15.)

16. ராவணன் விபீஷணனை அவமானம் செய்ய அவன் நான்கு மந்திரிகளுடன் ஆகாயத்தில் கிளம்பிச் சென்று மீளவும் இதோபதேசம் செய்தல்.

இங்ஙனம் தெளிவான இதவசனங்களைச் சொன்ன விபீஷணனைப் பார்த்து ராவணன் "ராக்ஷசாதமனே! உலகத்தில் 'பங்காளிக்காய்ச்சல்' என்று சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன்: அதை இன்றே கண்டேன். பங்காளிகள் தமது தாயாதிகளுக்கு வருத்தம் நேரும் பொழுதெல்லாம் சந்தோஷமுற்றிருப்பார்கள். சமயம் பார்த்து அவர்களைப் படுகுழியில் தள்ளிவிடுவார்கள். தமது அபிப்பிராயங்களை வெளிக்காட்டாமல் மறைவாகவே வைத்துக்கொண்டு நட்புள்ளவர் போலவே நடித்துத் தக்க சமயத்தில் துரோகம் செய்வார்களென்பது பிரசித்தமான விஷயம். ஒருகாலத்தில் பத்மவனமென்னும் பெரிய காட்டில் சில யானைகள், தம்மைப் பிடிக்கும்பொருட்டுக் கயிறு கொண்டு வந்தவர்களும், தமது இனத்து யானைகளை வைத்துக் காப்பவருமான சில மனிதர்களைப்பார்த்து முறையிட்ட வசனங்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவற்றை கூறுகிறேன் கேள். அந்த யானைகள் கூறியதாவது 'ஓ மானிடர்களே! எங்களுக்கு நெருப்பினாலும், ஆயுதங்களாலும், கயிறுகளாலும் சிறிதேனும் பயமில்லை. ஆனால் எங்களுடைய இனத்தவையாயிருந்தும் எம்மேல் விசுவாசமின்றி எங்களைப் பிடித்துக் கொடுப்பவைகளும் எமது பங்காளிகளுமான யானைகளாலேயே எமக்குப் பயம் நேரிடுகின்றது. ஏனெனில் அந்த யானைகளேயன்றோ உங்களுக்கு எம்மைப் பிடிக்கும் உபாயத்தை அறிவிப்பவை. பசுக்களிடத்தில் சம்பத்திருப்பது போலும், பிராமணர்களிடத்தில் இந்திரியத்தை யடக்கும்

தன்மை இருப்பதுபோலும், ஸ்திரீகளிடத்தில் சபலபுத்தி இருப்பது போலும், பங்காளிகளிடத்தில் பொறாமையிருப்பது சகஜம். ஆகவே பங்காளிகளின் பொறாமை காரணமான பயம் அனைவர்க்குமுண்டு' என்கிற வார்த்தைகளைச் சொல்லின. விபீஷணா! நீ எனக்குப் பங்காளியாகையால், நான் இங்ஙனம் லோகங்களால் பூசிக்கப்பட்டவனாகி, மிகுந்த ஐசுவரியம் பெற்று ராக்ஷசர்களுக்கெல்லாம் தலைவனாய் இருப்பது உனக்குப்பொறுக்க முடியவில்லை. வண்டு புஷ்பங்களிலுள்ள தேனை ஆசையுடன் பருகிவிட்டுப் பிறகு அப்புஷ்பங்கள் தேன் கொடுத்த உபகாரத்திற்காக அங்குச்சிறிதும் நிற்கமாட்டாதல்லவா? அதுபோல் துஷ்டர்களுக்குத் தம்மைப் போஷித்தவர்களிடத்திலும் நல்ல மனம் உண்டாகாது. ஆகவே, நீயும் என்னால் சகலவிதமான சுகங்களை யநுபவித்தும் என் மேன்மையைப் பொறாதவனாயிருக்கின்றனை. ராக்ஷசாதமா! நீ தவிர மற்றொருவன் இப்படிப்பட்ட வசனங்களைப் பேசுவானாயின் அவன் இந்த க்ஷணத்திலேயே உயிரை இழந்திருப்பான். நீ குடியைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு. சீ! சீ!! அப்புறம் போவாய்" என்றனன். விபீஷணன் இங்ஙனமவன் கூறின இழிவுரைகளைக் கேட்டு அங்கு நிற்கப் பொறாமல் கதையைக் கையிலெடுத்துக்கொண்டு நான்கு ராக்ஷசர்களோடு ஆகாயத்தில் கிளம்பினன். அப்பொழுது அவனுக்கு ராவணனை விட்டு ராமனைச் சரணமடைந்து சுகம்பெற வேணுமென்கிற எண்ணம் உண்டாயிற்று. விலகிச்சென்ற விபீஷணன் ஆகாயத்திலிருந்தவண்ணமே ராவணனை நோக்கி 'ராஜனே! நீ எனக்கு அண்ணனாகையால் தந்தையைப் போல் பூஜிக்கத் தகுந்தவன். ஆயினும் நீ தரும மார்க்கத்தில் நிற்கமாட்டாமல் என்மேல் இல்லாத தோஷத்தை ஏறிட்டுப் பேசினை. இதை நான் எள்ளளவும் பொறுக்கமாட்டேன். ராவணா! நான் உன் மேன்மையை விரும்பி நன்றாக ஆலோசித்து உனக்கு நன்மை பயக்கக்கூடிய வசனத்தைக் கூறினும் நீ எமன் வசம் அகப்பட்டு எனது வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. எரிகிற நெருப்பைப் போல் தகதகவென்று ஜ்வலிப்பவைகளும் பொன்னால் அலங்காரம் செய்யப்பெற்றவையுமான பாணங்களால் ராமன் உன்னை அடிக்கையில் அதைப்பார்க்க என் மனம் பொறுக்கமுடியாதிருக்கின்றது. மூத்தவனென்று உனது நன்மையை விரும்பி நான் மொழிந்த வசனங்களை நீ பொறுக்கவேண்டும். நீ உன்னையும் இவ்வரக்கர்களையும் லங்கை நகரையும் பாதுகாத்துக் கொள்வாயாக. உனக்குச் சுபம் உண்டாகுக. நான் சென்று வருகிறேன். என்னை விட்டு நீ சுகமாய் இருப்பாயாக" என்றனன். ... ... (16.)

17. விபீஷணன் ராமனிடம் போதலும் வானரர்கள் அவனை விரட்டுதலும் ராமன் அவனை அங்கீகரித்து வரவழைத்தலும்.

விபீஷணன் இங்ஙனம் ராவணனுக்குக் கூறிவிட்டு ஒரு முகூர்த்தகாலத்தில் ராமலக்ஷ்மணர்கள் தங்கியிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தனன். ஆகாயத்தில் வந்துகொண்டிருந்த விபீஷணனைக் கண்ட சுக்கிரீவன் நான்கு மந்திரிகளுடன் கூடி வானரர்களுடன் ஆலோசித்து அவர்களைப் பார்த்து "வானரர்களே! அதோ நான்கு ராக்ஷசர்களுடன் ஒரு பெரிய ராக்ஷசன் சமஸ்த ஆயுதங்களையும் தரித்து வருகின்றனன். இவன் நிச்சயமாக நம்மைக் கொல்ல வருகின்றவனேயாவன்" என்றதும், வானரர்கள் அவனை நோக்கி "ராஜனே! எங்களுக்குக் கட்டளை இடுவாயாக. இவ்வற்பர்கள் மறுபடி ஆகாயத்திலிருந்து கிளம்ப முடியாதபடி அவர்களை நொடிப்பொழுதில் அடித்து வீழ்த்துகின்றோம்" என்றனர். இவர்கள் இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையில் விபீஷணன் 'எவர் என்ன சொன்னபோதிலும் ராமன் ரக்ஷிக்காமல் கைவிடான்' என்னும் நம்பிக்கையால் அவ்வார்த்தைகளைப் பாராட்டாமல் சமுத்திரத்தின் வடகரைக்கு வந்து ஆகாயத்திலேயே சிறிதும் பயமின்றி நிலையாக நின்றனன். அப்பொழுது அவன் அனைவர்க்கும் கேட்கும்படி பெரிய குரலில் "ஓ வானரோத்தமர்களே! துன்மார்க்கனான ராவணனுக்குத் தம்பியான நான் விபீஷணனென்னும் பெயருடையவன். அந்த ராவணன் ஜனஸ்தானத்தில் ஜடாயுவைக்கொன்று சீதையை அபகரித்து வந்து லங்கையில் சிறை வைத்திருக்கின்றனன். அவளோ இரவும் பகலும் ராமனையே நினைத்து உருகுகின்றனள். 'சீதையை ராமனுக்குத் திருப்பிக்கொடுத்து விடு' என்று நான் அவனுக்குப் பல நியாயமான வார்த்தைகளால் தெரிவித்தும் அவன் காலனால் தூண்டப்பட்டு என்வார்த்தையை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலுமவன் என்னை வெறுத்து விரட்டி ஓட்டிவிட்டனன். ஆகையால் நான் ராமனையே சரணம் புகுந்தவனானேன். ராமனுக்கு எனது வரவைத் தெரிவிப்பீர்களாக" என்றனன்.

உடனே சுக்கிரீவன் சீக்கிரமாக ராமனிடம் சென்று "ராமா! விபீஷணனென்பவன் நான்கு ராக்ஷசர்களுடன் வந்து உன்னைச் சரணமடைவதாகக் கூறுகின்றனன். இவன் ராவணனிடமிருந்து வந்திருப்பதால் இவனிடம் நம்பிக்கை வைக்கலாகாது. இவன் ராவணனால் அனுப்பப்பட்ட வேவுகாரனாகவிருப்பான். வேவுகாரர்கள் தங்கள் சொந்த பெயர்களை மறைத்துத் தங்கள்மேல் எதிரிகளுக்கு நம்பிக்கையுண்டாகும் வண்ணம் மிகவும் இனிமையாகப்பேசி அனுகூலர்போல் நடித்து நம்மில்புகுந்து சமயம் பார்த்து நமக்குள் ஒருவர்மேல் ஒருவர்க்கு மித்திரபேதம் விளையச்செய்வார்கள். அந்த வகையில் இவ்விபீஷணன் நம்மை வஞ்சிக்க வந்தவனே. இவன் ராவணனது தம்பியாகையால் நமக்கு நிச்சயமாகத் தீங்கிழைப்பான். 'சரணமடைந்தவனைக் கைவிடலாமோ?' வென்னில் இவன் ராவணனால் ஏவப்பட்ட வேவுகாரனாகையால் இவனது சரணாகதி மேல்வேஷமாகும். இவன் வேவு பார்க்க மாத்திரம் வந்தவனல்லன். சமயம் பார்த்து உன்னையும் லக்ஷ்மணனையும் கொல்லும்படி ராவணனால் ஏவப்பட்டு வந்திருக்கவுங்கூடும். இவனைக்கொன்று விடுவதே நலம்" என்றனன். இங்ஙனம் ராமனிடத்திலுள்ள மிகுந்த அன்பினால் கூறின சுக்கிரீவனது வார்த்தைகளைக் கேட்ட ராமன் இந்த சுக்கிரீவன் நம்மேலுள்ள பிரீதியால் கண்மண் தெரியாமல் நமது வார்த்தைகளைக் கேட்கமாட்டான் என்பதை நினைத்து அநுமான் முதலிய வானர வீரர்களைப் பார்த்து "நீங்கள் சுக்கிரீவன் கூறினதைக் கேட்டீர்களல்லவா? விபீஷணன் விஷயத்தில் எது செய்வது யுக்தமென்பதை நன்கு ஆலோசித்துத் தெரிவிப்பீர்களாக." என்றனன். இப்படி ராமனால் வினவப்பட்ட வானரர்கள் அவனை நோக்கி "ராமா! மூன்று லோகங்களிலும் உனக்குத் தெரியாதது எதுவுமில்லை. அப்படியிருந்தும் வானரர்களுக்கு நண்பன் என்னும் புகழை உலகத்தில் வெளிப்படுத்துவதற்காக எங்களை இங்ஙனம் வினவுகின்றனை போலும். நீயோ 'தஞ்சமென்று அடைந்தவனை அஞ்சேல்' என்று கூறி அபயமளிக்கும் தன்மையன். எதையும் ஆலோசித்துச் செய்பவன். கணக்கில்லாத கலியாண குணங்களையுடையவன். உனக்கு நாங்கள் என்ன கூறவல்லோம்? ஆனாலும் உனது மந்திரிகள் ஒவ்வொருவரும் தம் தம் அபிப்பிராயத்தைத் தக்க காரணங்களுடன் கூறுவார்களாக" என்றனர். பிறகு இளவரசனான அங்கதன் ராமனைப் பார்த்து "இவன் உன்னைச் சரணமடைந்தவனாயினும் பகைவனிடத்திலிருந்து வந்தவனாதலால் நம்பத் தகுந்தவனல்லன். நாம் விபீஷணனைப் பரீக்ஷிக்காமல் ஏற்றுக்கொள்ளலாகாது. குணம் உளதென்று ஏற்படுமாயின் அங்கீகரிக்கலாம். தோஷமுடையவன் என்று ஏற்படுமாயின் விட்டுவிட வேண்டும்" என்றனன். பிறகு சரபனென்பவன் அங்கதனது அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாமல் ஒரு சாரனை (வேவுகாரன்) விபீஷணனிடம் அனுப்பி அவனது குணதோஷங்களைப் பரீக்ஷித்துப் பிறகு நியாயப்படி அவன் தோஷமற்றவனாயின் அவனை ஏற்றுக்கொள்ளலாமென்றனன். பிறகு ஜாம்பவான் ராமனைப் பார்த்து "ராமா! விபீஷணனோ ராவணனின் தம்பி. அவன் வந்த காலமும் தேசமும் தகுந்தவைகளல்ல. ஆகையால் இவனை நம்பலாகாது" என்றனன். பிறகு மைந்தன் அங்கதனுடைய அபிப்பிராயத்தைத் தழுவிப்பேசினன். கடைசியாக அனுமான் பேசத்தொடங்கி "ராமா! உனக்கிருக்கும் புத்தியோ பிருஹஸ்பதிக்கும் கிடையாது. ஆயினும் கேவலம் வானரனான என்னை கௌரவித்து என் அபிப்பிராயத்தைச் சொல்லும்படி கேட்டபடியால் கூறுகிறேன். இதுவரை உனது மந்திரிகள் கூறியது ஒன்றுகூட சரியல்லவென்பது எனதபிப்பிராயம். ஏனெனில் குண தோஷங்களைப் பரீக்ஷித்த பின் அவனுடன் உரையாட வேண்டுமென்றும், உரையாடின பின்பே குணதோஷங்களைப் பரீக்ஷிக்கவேண்டுமென்றும் கூறின அபிப்பிராயங்கள் ஒன்றையொன்று பற்றியிருக்கையால் இந்த யோசனை சரிப்படாது. தூரத்திலிருப்பவனுக்கே வேவுகாரனையனுப்பி ரகசியமாக அவனது ரகசியங்களை யறிவது யுக்தம். சமீபத்திலிருக்கின்ற விபீஷணனுக்குச் சாரனையனுப்புவது சரியல்ல. மேலும் அவன்

வந்த தேசகாலங்களும் சரியானவையென்றே எனக்குத் தோன்றுகிறது. விபீஷணன் உன்னிடத்திலுள்ள குணத்தையும் ராவணனிடத்திலுள்ள தோஷத்தையும் ஆராய்ந்து, ராவணனுக்கு நல்ல வார்த்தை சொல்லியும் அவன் கேளாமையால் அவனை வெறுத்து, உன்னிடத்தில் கரதூஷண வதம், வாலியைக்கொன்றது முதலிய பராக்கிரமங்களையும் கண்டு புத்தியில் ஆலோசித்ததனால் உன்னைப் பணிந்துய்யவேண்டி இப்போது இங்குவந்து சேர்ந்தது அவனுக்குத் தகுந்ததேயாகும். மேலும் இவனது முகத்தில் புழுக்கமாவது தழதழப்பாவது ஒன்றுமில்லை. வானரர்கள் மரம் செடிகளைக் கொண்டு மேல் விழுவதைக் கண்டும் இவர்கள் விரோதிகளென்று சந்தேகம் கொள்ளாமலே வந்தனன். கெட்ட எண்ணமுடையவன் இங்ஙனம் மனத்தெளிவுடன் எதிர்கொண்டு வரமாட்டான். இவன் முகம் தெளிவுற்று சுத்தமான வார்த்தைகளைப் பேசுகிறான். ஆனால் 'தன் பந்துக்களையும் ஐசுவரியங்களையும் விட்டு வெறுமனே நமது நட்பை மாத்திரம் எதிர்பார்த்து வருவானோ? இதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கவேண்டுமே' என்னில், நீ ராவணனைக் காட்டிலும் பலவானான வாலியை உன்னைப்பற்றின சுக்கிரீவனுக்காக ஒரே பாணத்தினால் கொன்றதையும், பிறகு வானர ராஜ்யத்தில் நீ ஆசை வைக்காமல் அதில் அவ்வாலியின் தம்பிக்குப் பட்டங் கட்டினதையும் இவன் கேட்டிருக்கையால் அங்ஙனமே தன தண்ணனைக்கொன்று சுக்கிரீவனைப்போல் உன்னைப் பற்றின தனக்கு ராக்ஷச ராஜ்ஜியத்தைக் கொடுப்பாய் என்கிற நினைவினால் இராஜ்ஜியத்தை விரும்பியே இங்கு வந்தவன். ஆகையால் இவனை ஏற்றுக்கொள்ளலாம்" என்றனன். ... ... (17.)

18. ராமன் தகுந்த காரணம் சொல்லி விபீஷணனை அழைத்துக் கொண்டுவரக் கட்டளையிடுதல்.

பிறகு ராமன் பேசத் தொடங்கி "வானர சிரேஷ்டர்களே! தஞ்சமென்று அடைந்தவனை அவனிடம் எவ்வளவு தோஷங்களிருப்பினும் நான் எவ்விதத்திலும் கைவிடமாட்டேன். அங்ஙனம் செய்வது பெரியோர்களால் புகழத் தக்கதேயன்றி நிந்திக்கப்படுவதன்று" என்றனன். உடனே சுக்கிரீவன் ராமனைப் பார்த்து "ராமா! இவனோ ராவணனது தம்பி. அவனால் சகல சுகங்களையும் பெற்று அநுபவித்து வந்தவன். இப்படிப்பட்டவன் அண்ணனுக்கு மிகுந்த ஆபத்தான சமயத்தில் அவனைக் கைவிட்டு இங்கு ஓடி வந்தனனே! இவனைப்போன்ற நன்றி கெட்டவன் ஒருவனுமில்லை. ஆகையால் இவனை ஏற்றுக்கொள்வது ஆபத்துக்கிடமாகும்" என்றனன். இதைக்கேட்ட ராமன் "சுக்கிரீவா! அண்ணனைவிட்டு இவன் ஓடி வந்ததில் நீதி சாஸ்திரத்தில் சொல்லிய ஒரு நியாயம் உளது. அது என்னென்னில் பங்காளிகளும் அக்கம் பக்கத்து தேசத்திலுள்ள அரசர்களும் ஆபத்து நேரும்பொழுது மேல் விழுந்தடிப்பார்களாகையால் பகைவரென்றே கூறப்படுவார்கள். இவ்விபீஷணனும் ராவணனுக்கு உடன் பிறந்த பங்காளியாகையால் அண்ணனுக்கு ஆபத்து நேர்ந்திருக்கிற இப்பொழுது அவனைக் கொல்லும் பொருட்டு இவ்விடம் வந்தனன். அல்லது இவ் விபீஷணன் அனுமான் சொன்னபடி ராஜ்ஜியத்தின்மேல் ஆசையுடையவனாயும் இங்கு வந்திருக்கக்கூடும். இங்ஙனம் ராவணனைக் கொல்வித்து லங்கைக்குத் தானே அரசனாகலாம் என்கிற எண்ணத்துடன் வந்திருக்கின்ற விபீஷணன் நம்மை அநுசரித்தாலல்லாமல் அவனெண்ணம் நிறைவேற வழியில்லை யாகையால் அவன் நமக்கு அபகாரம் செய்யமாட்டான். மேலும் இவனது குரலானது மிகுந்த பேரொலியுடன் செவிப்படுகின்றமையால் பலவானான ராவணனால் இவனுக்கு பயம் சம்பவித்திருக்கிறதென்று தெரிகிறது. ஆகையால் இவன் ஏற்றுக்கொள்ளத் தகுந்தவனே. இவனிடத்தில் சிறிதும் சந்தேகம் கொள்ளவேண்டிய அவசியமில்லை" என்றனன். ராமன் இங்ஙனம் மொழிகையில் சுக்கிரீவன் லக்ஷ்மணனும் தானுமாக எழுந்து அவனை வணங்கி "ராமா! இந்த ராக்ஷசன் ராவணனால் தூண்டப்பட்டு இவ்விடம் வந்து தன் உண்மையை மறைத்துக்கொண்டு நமக்கு நம்பிக்கையை விளைவித்து, நாம் ஏமாறி இருக்கையில் நம்மைக் கொல்லவிருக்கின்றனன். ஆகையால் இவனை இவனது நான்கு மந்திரிகளுடன் கொன்றே தீரவேண்டும்" என்றனன். ராமன் அவனுக்கு சமாதானம் சொல்லத் தொடங்கி "சுக்கிரீவா! இந்த ராக்ஷசன் துஷ்ட

னாயினும் சரி. நல்லவனாயினும் சரி. இவனால் என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் ஒன்றும் செய்ய முடியாது. குரக்கரசனே! இப்பூமண்டலத்திலுள்ள சமஸ்த ராக்ஷசர்களும் ஒன்றாகக்கூடி என்மேல் எதிர்த்து வரினும் எனக்கு இச்சை உளதாயின் ஆயுதங்களில்லாமலே விரல் நுனியால் எளிதில் கொன்றுவிடுவேன். முன்பொரு காலத்தில் ஆண் பெண்ணாகிய இரண்டு புறாக்கள் ஓர் மரத்தில் இனிது வசித்து வந்தன. ஒரு நாள் வேடனொருவன் இரைதேடிக் கொண்டிருந்த பெண் புறாவைக் கொன்று அதைத் தன் வலைப் பையில் வைத்துக்கொண்டு நடுக் காட்டில் வந்துகொண்டிருந்தபொழுது களைத்து ஓர் மரத்தின்கீழ் தங்கினன். தற்செயலாக அம்மரமே அவ்விரண்டு புறாக்களும் வசித்துவந்த மரமாய் இருந்தது. அதில் தன் மனைவியை இழந்து மிகவும் பரிதபித்துக்கொண்டிருந்த ஆண் புறாவானது வேடன் கீழே வந்ததையும் அவனது பையில் தன் மனைவியின் உடல் இருந்ததையும் கண்டு அவனிடம் கோபங்கொள்ள வேண்டியதற்கு மாறாக அவன் மிகவும் களைத்துத் தன் மரத்தின்கீழ் வந்ததற்காக அவனைக் குளிர்காயச் செய்வதற்காக தீ மூட்டி அவனது ஆகாரத்திற்காகத் தன் சரீர மாமிசத்தையும் கொடுத்தது. கேவலம் ஓர் புறா தன்னை நோக்கி வந்த வேடனை அங்கீகரித்ததல்லவா? இனி என்னைப் போன்றவன் என்ன செய்யவேண்டுமோ, அதை நீயே ஆலோசித்துச் சொல்வாயாக. கையைக் கூப்பிக்கொண்டு அடைக்கலம்புக வந்தவன் விரோதியாயினும், நண்பனாயினும், கஷ்டமுடையவனாயினும் மற்ற எவனாயினும் அவனைப் பாதுகாக்க வேண்டியதே நியாயமாகும். அப்படிச் செய்யாவிடில் பாபம் சம்பவிக்கும். ஒருவன் ஒருவனை 'ரக்ஷிக்கவேண்டும்' என்று சரணம் அடைகையில் அவன் ரக்ஷிக்கவல்லவனாய் இருந்தும் அவனை ரக்ஷிக்காமல் பார்த்துக்கொண்டிருப்பானாயின், அதனால் அவன் தன் பகைவனால் நாசம் அடைவானாயின் அவன் (அந்த ரக்ஷிக்காதவன்) பலகாலமாக சம்பாதித்த புண்ணியங்களையெல்லாம் அவன் பெற்று நல்லகதி அடைவான். ஆகையால் சரணமடைந்தவனை ரக்ஷிக்காவிட்டால் பெரிய தோஷம் சம்பவிக்கும். எனக்கு நரகம் நேரும். ஆகையால் வானரோத்தமனே! 'சரணம்' என்றபொழுதே அவனுக்கு நான் அபயம் கொடுத்தாய்விட்டது. அவன் விபீஷணனாயினும், விபீஷண வேடம்பூண்ட ராவணனேயாயினும் நான் அவனை ரக்ஷித்தே தீருவேன். உன்னையே புருஷகாரமாகக்கொண்டு அவன் வந்தமையால் நீயே சென்று அவனை அழைத்து வருவாயாக" என்றனன். இங்ஙனம் ராமன் கூறினதைக் கேட்ட சுக்கிரீவன் நன்கு மனம் தெளியப்பெற்று ராமனது குணத்தைவியந்து அவனைப் பார்த்து "ராமா! நீ தர்மசூக்ஷ்மங்களை அறிந்தவன். சர்வலோக ரக்ஷகன். பிறர்க்கு சுகத்தை விளைவிப்பதற்கே பிறந்தவன். உனது கருத்து மிகவும் புகழத்தகுந்தது. நீ கூறின காரணங்கள் மிகவும் நியாயமானவைகளாய்க் காணப்படுகின்றன. எனது மனமும் விபீஷணனைத் தூயவனென்றே நம்புகின்றது; ஆகையால் நான் சென்று விபீஷணனை அழைத்து வருகிறேன்" என்று கூறி விபீஷணனிடம் சென்று ராமன் அவனுக்கு அபயம் கொடுத்ததைக் கூறி அவனை ராமனிடத்திற்கு அழைத்து வந்தனன். ... ... (18.)

19. விபீஷணனை ராமன் லங்கா ராஜ்ஜியத்தில் பட்டாபிஷேகம் செய்தலும் சமுத்திரத்தைத் தாண்ட ஆலோசித்தலும்.

பிறகு விபீஷணன் தனது நான்கு மந்திரிகளுடன் ராமனது பாதாரவிந்தங்களில் விழுந்தனன். அவன் "ராமா! ராவணனது தம்பியான நான் அவனால் அவமதிக்கப்பட்டபடியால் சமஸ்த பூதங்களுக்கும் ரக்ஷகனான உன்னைச் சரணமடைந்தேன். நான் லங்கையிலுள்ள எனது மனைவி மக்களையும் ஐசுவரியங்களையும் விட்டு நீயே கதியென்று வந்தவன். இனி என் பிராணனும், என் சுகங்களும் உன்னதீனமே" என்றனன். ராமன் விபீஷணனை நோக்கி "சரணம் என்றபொழுதே உன்னை நான் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். இதுவரையில் தாமதம் செய்த குற்றத்தைப் பொறுப்பாயாக" என்று இனிய உரைகளால் சமாதானப்படுத்தி அவன் மனத்தைக் குளிரச் செய்து அவனை மிக்க ஆதரத்துடன் பார்த்துக் கொண்டே "எனக்கு ராக்ஷசரது பலாபலங்களை உண்மையாகச் சொல்லவேண்டும்" என்று வினவினன். விபீஷணன்கூறத் தொடங்கி "ராமா! ராவணன் பிரமதேவனிடமிருந்து பெற்ற வரத்தின்

மகிமையால் கந்தருவர்களாலும், அசுரர்களாலும், ராக்ஷசர்களாலும், மற்றுமுள்ள சமஸ்தப் பிராணிகளாலும் அவன் கொல்ல முடியாதவன். அவனுக்குப் பின்பு பிறந்தவனான கும்பகர்ணன் தேவேந்திரனைப்போன்ற வீரியமும் பலமும் உடையவன். ராவணனது சேனாதிபதி பிரகஸ்தனாவன். ராவணனது குமாரனான இந்திரஜித்து எப்பொழுதும் பாணப் பிரயோகம் செய்துகொண்டிருப்பவனாகையால் நாணடி படாதிருக்குமாறு கைவிரல்களுக்கு உடும்புத் தோலால் செய்த கவசத்தையும், உடம்பிற்கு பிளக்கமுடியாத பெரிய கவசத்தையும் பூண்டிருப்பான். யுத்தத்தில் பகைவர்களது கண்களுக்குப் புலப்படாமலே அவர்களைக் கொல்லும் திறமையுடையவன். மகோதரன், மகாபார்சுவன், அகம்பனன் என்கிற இம்மூன்று பேரும் அவனது சேனாதிபதிகள். மாயச்செயல்களை யுடையவரும் மிகவும் பலிஷ்டர்களுமான இப்படிப்பட்ட ராக்ஷசர்கள் பதினாயிரம் கோடிப் பேர் லங்கையில் இருக்கிறார்கள். ராவணன் இவர்களுடைய சகாயத்தால் லோக பாலர்களையும், தேவதைகளையும் தோல்வி யடையச் செய்தனன்'' என்றான். பிறகு ராமன் விபீஷணனை நோக்கி "நான் ராவணனையும் அவனைச் சேர்ந்த சமஸ்தமான ராக்ஷசர்களையும் கொன்று லங்கைக்கு உன்னை அரசனாக்க விரும்புகிறேன். இந்த ராவணன் பாதாளம் புகினும், தனக்கு வரங்கொடுத்த பிரமனது லோகம் சென்றாலும், என்னிடமிருந்து பிராணனைத் தப்புவித்துக்கொள்ள வல்லனல்லன். நான் ராவணனை அவனது கூட்டத்தாருடன் கொல்லாமல் அயோத்திக்குப் போகேன். இங்ஙனம் கீர்த்தியையுடைய எனது தம்பிமார் மூவர் மேலும் ஆணையிடுகிறேன்'' என்றனன். ராமன் இங்ஙனம் கூறின மொழிகளைக் கேட்ட விபீஷணன் அவனைத் தலைசாய்த்து வணங்கி "நீ ராக்ஷசர்களைக் கொல்லும்பொழுது நான் சகாயம் செய்து என் பலமுள்ளவளவும் பகைவர்களை எதிர்த்துச் சண்டை செய்கிறேன்'' என்றனன். இங்ஙனம் மொழிந்த விபீஷணனை ராமன் அழுந்தக் கட்டியணைத்து சந்தோஷமுற்று லக்ஷ்மணனைப் பார்த்து "சமுத்திரத்தினின்று தீர்த்தம் கொண்டு வருவாயாக. அந்த நீரினால் விபீஷணனை ராக்ஷச ராஜனாக எனது விருப்பத்தின்படி அபிஷேகம் செய்வாயாக'' என்றனன். உடனே லக்ஷ்மணன் வானரர்களினிடையில் விபீஷணனை ராக்ஷச ராஜனாக அபிஷேகஞ் செய்தனன். பிறகு அனுமானும் சுக்கிரீவனும் ஏகாந்தத்தில் விபீஷணனை நோக்கி சமுத்திரத்தைத் தாண்டக்கூடிய உபாயத்தைப்பற்றி ஆலோசனை கூறுமாறு கேட்டனர். விபீஷணன் அவர்களை நோக்கி "ராமன் சமுத்திர ராஜனைச் சரணமடைய வேண்டும். இம்மகா சமுத்திரம் ராமனது மூதாதையான சகரனால் தோண்டுவிக்கப்பட்டு அளவிடமுடியாதபடி வளர்ந்திருக்கிறது. ஆகையால் சமுத்திர ராஜன் அந்த உபகாரத்தை நினைத்து ராம காரியமென்று அறிந்து தன்னைத் தாண்டும்படியான வழியைக் கூறுவான்'' என்றனன். சுக்கிரீவன் உடனே ராமனிடம் சென்று விபீஷணனுடைய அபிப்பிராயத்தைக் கூறினன். ராமன் அக்கருத்துக் கிசைந்து சமுத்திரத்தின் கரையில் தர்ப்பைகளைப் பரப்பி அதன்மேல் படுத்துக்கொண்டனன். ... ... (19.)

20. ராமன் சைன்னியங்களுடன் சமுத்திர தீரத்திற்கு வந்ததை ராவணன் அறிந்து, சுக்கிரீவனை ராமனிடத்திலிருந்து வேறுபடுத்த சுகனை அனுப்புதல்.

பிறகு ராவணனுடைய சாரனாகிய (வேவு பார்ப்பவன்) சார்த்தூலன் என்னுமரக்கன் இக்கரைவந்து வானர சைன்னியங்களையெல்லாம் உள்ளபடி கண்டு மீளவும் வேகமாக லங்கைக்குச்சென்று ராவணனைப் பார்த்து "அதோ குரங்குகளும் கரடிகளும் நிறைந்த ராம சைன்னியம் ஆழமும் விசாலமுமான இரண்டாவது சமுத்திரம்போல் விளக்கமுற்று லங்கையின்மேல் எதிர்த்து வருகின்றது. ராம லக்ஷ்மணர்கள் சமுத்திரக் கரையில் இறங்கியிருக்கின்றனர். ராஜனே! நான் சாமான்யமாகப் பார்த்து வந்தேன். கண்ணுக்கெட்டாத தூரம்வரை ஒரே குரங்குமயமாக விருக்கின்றது. உள்ளபடி அவர்களின் எண்ணிக்கையை அறிந்துகொள்ள எவனையேனும் அனுப்புவாயாக'' என்றனன். உடனே ராவணன் சுகனென்னும் ராக்ஷசனைப் பார்த்து "நீ சுக்கிரீவனிடம் சென்று நான் சொன்னதாகக் கூறுவாயாக. 'வானர ராஜனே! நீ வீணில் அற்பனான ராமனுடன் கூடி என்னோடு விரோதம் வைத்துக்கொள்ளலாகாது. எனக்

கும் உனதண்ணனான வாலிக்கும் மிகுந்த நட்புண்டு. அது பற்றி நீ எனக்குச் சகோதரனாயினை. தவிர நீ பிரமதேவனது குமாரனான ருக்ஷரஜஸ்ஸின் புதல்வனாகையால் எனக்கு நெருங்கிய உறவினனுமாவாய். ஆகையால் ராமனைவிட்டு என்னோடு நட்புக்கொள்வதே உனக்கு உரியதாகும். நீ வெறுமனே கிஷ்கிந்தைக்கு உனது சைன்னியங்களுடன் திரும்பிச் செல்வாயாக. உன்னாலும் ராமனாலும் மற்ற தேவதைகள், கந்தருவர்கள் முதலியவர்களாலும் லங்கையில் பிரவேசிக்க முடியாது. ஆகையால் நீ வீணில் அவமானமடையாமல் வந்த வழியே செல்வாயாக' என்று தெரிவித்து வருக'' என்றனன். உடனே சுகன் ஓர் பக்ஷியினுருவம் தரித்து ஆகாயத்தில் கிளம்பி சுக்கிரீவன் இருக்கும் இடத்திற்கு வந்தனன். அவன் ஆகாயத்திலிருந்துகொண்டே சுக்கிரீவனைப் பார்த்து ராவணன் சொன்ன வார்த்தைகளையெல்லாம் ஒன்றும் விடாமல் சொல்லினன். அவன் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது அவன்மேல் கோபங்கொண்ட வானரர்கள் பலாத்காரமாக அவனைப் பிடித்து ஆகாயத்தினின்று கபீலென்று விழும்படி பூமியில் தள்ளி முட்டிகளால் குத்திச் சிறகுகளையுடைய இறக்கைகளை முறிக்க முயன்றனர். இதனால் மிகவும் வருந்தின சுகன் பயத்துடன் உடல் நடுங்க ராமனைப் பேர் சொல்லியழைத்து "ராமா! உனக்குத் தூதுவர்களைக் கொல்லுவது நியாயமாகுமோ? இவ்வானரர்கள் என் இறகுகளை முறித்ததன்றி என்னைக் கொல்லவும் விரும்புகின்றனர். அங்ஙனம் வேண்டாமென்று ஆஞ்ஞாபித்து என்னை விடுவிப்பாயாக'' என்றனன். பிறகு ராமனது கட்டளையினால் விடுபட்ட சுகன் மீளவும் சுக்கிரீவனை நோக்கி "சுக்கிரீவா! ராவணனது மொழிகளுக்கு உனது பதிலை நான் தெரிந்துகொள்ளாமல் செல்வேனாயின் அவன் என்னைக் கொன்றுவிடுவான். ஆகையால் அவனுக்கு நான் கூறவேண்டியதை சீக்கிரம் சொல்வாயாக'' என்றனன். சுக்கிரீவன் அவனை நோக்கி "நீ ராவணனிடம் சென்று நான் சொன்னதாகச் சொல்லுக;—'நீ எனக்கு பந்துவல்ல, நண்பனுமல்ல. நீ எனக்கு எவ்வித உபகாரமும் செய்ததில்லை. ஆகையால் சகோதரன் எப்படியாவாய்? எனது நண்பனான ராமனுக்கு நீ விரோதியாதலால் எனக்கும் நீ விரோதியே. வாலி எனது பகைவனாகையால் அவனது நண்பனானதுபற்றியும் நீ எனக்கு விரோதி. லங்கையில் என்னால் புகமுடியாது என்கிறாய். உன்னை வெல்ல ஒருவர்க்கும் சாத்தியமில்லையென்கிறாய். மூடனான உனது பேச்சுக்கள் பயனற்றவை. நீ சூரியமண்டலம் சென்றபோதிலும், தேவதைகள் தேவேந்திரனுடன்கூடி உன்னைப் பாதுகாக்கவரினும் நீ பாதாளத்தில் புகினும் நீ ராமபாணத்திற்குத் தப்பிப் பிழைக்கமாட்டாய்; சீக்கிரத்தில் சமுத்திரத்தைத் தாண்டி லங்கையை வளைத்து உன்னையும் உன் பந்துமித்திரர்களையும் நாசம்செய்யப் போகிறேன்' என்று ராவணனிடம் கூறுவாயாக'' என்றனன். பிறகு அங்கதன் சுக்கிரீவனைப் பார்த்து "இவன் இராவணனது தூதனல்லன்; வேவுபார்க்க வந்தவன். இவன் நமது சேனைகளின் நிலைமையை யெல்லாம் கண்டுகொண்டனன். ஆகையால் இவனை லங்கைக்குப் போகவிடாமல் தண்டிக்க வேண்டும்'' என்றனன். உடனே சுக்கிரீவனது கட்டளையின்படி வானரர்கள் ஆகாயத்திற் கிளம்பி, அந்த சுகன் அலறிப் புலம்புமாறு அவனைப் பிடித்துக் கீழே தள்ளி சிறகுகளை முறித்து, கண்களைப் பிடுங்க முயன்றனர். சுகன் ஓ வென்று கதறி ராமனை யழைத்து "ராமா! தூதனான என்னை இவர்கள் துன்புறுத்துகிறார்கள். நான் உயிரை விடுவேனாயின் நான் இதுவரையில் செய்த பாபங்களெல்லாம் உன்னையே சேரும்'' என்று கூறி ஓலமிட்டனன். ராமன் அவனது அழுகுரலைக் கேட்டு அவனை விட்டுவிடும்படி வானரர்களுக்குக் கட்டளை இட்டனன். ... ... (20.)

21. ராமன் தர்ப்பசயனத்தில் மூன்று இரவுகள் இருந்து ஆராதித்தும் சமுத்திர ராஜன் வரக்காணாமையால் பாணப்பிரயோகம் செய்ய முயலுதல்.

பிறகு ராமன் கடலைச் சரணமடைபவனாய் தருப்பைகளைப் பரப்பிக் கடலரசனுக்கு அஞ்சலிசெய்து கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்துக்கொண்டனன். "இப்பொழுது நான் சமுத்திர ராஜனை வழி விடும்படி வணங்கி வேண்டிக்கொள்ளுகிறேன். என் சரணாகதிக்கு இவன் இசைந்து வழிவிடுவானாயின் சமுத்திரத்தை தாண்டுகிறேன். இல்லையாயின் இந்த சமுத்திரத்தின் கரையிலேயே உயிர்துறந்து விடுகிறேன்'' என்று ராமன் மனதில்

எண்ணி ஸ்னானாதிகளால் சரீர சுத்திசெய்துகொண்டு சாஸ்திரங்களில் சொல்லிய விதிப்படி
மௌன விரதத்துடன் சமுத்திர ராஜனை தியானித்தவண்ணம் தருப்பைகளின்மேல் படுத்துக்
கொண்டனன். இங்ஙனம் மூன்று இரவுகள் சென்றும் சமுத்திர ராஜன் வந்து முகங்காட்ட
வில்லையாதலால் ராமன் மிகுந்த கோபத்துடன் லக்ஷ்மணனைப் பார்த்து "லக்ஷ்மணா! மிகுந்த
கர்வமுடைய சமுத்திர ராஜன் இன்னும் தன்னைக் காட்டாதிருக்கின்றனன். இனிய வசனங்க
ளால் இவனை வணங்கி ஆராதித்தும் இவன் மனமிரங்கவில்லை. ஆகையால் வில்லையும் கொடிய
சர்ப்பங்கள்போன்ற பாணங்களையும் கொண்டுவருவாயாக. சமுத்திரத்தை முழுவதும் வற்றச்
செய்து விடுகிறேன். வானரர்கள் இதைக் கால்நடையாகவே நடந்து செல்வார்களாக. இதோ
இந்த மகாசமுத்திரத்தையும் அதில் நிறைந்திருக்கும் தானவர்களையும் கலக்கிப் பாழ்செய்துவிடு
கிறேன்" என்றனன். இங்ஙனம் மொழிந்து ராமன் பயங்கரமான வில்லை இடையில் முஷ்டி
யால் கெட்டியாகப் பிடித்து உலகத்திலுள்ள ஜந்துக்களெல்லாம் பயந்து கிடுகிடுவென்று
நடுங்க, தேவேந்திரன் வஜ்ஜிராயுதங்கள் பலவற்றைப் பிரயோகிப்பதுபோல்பயங்கரமான
பாணங்களைப் பிரயோகித்தனன். அந்த சிறந்த பாணங்கள் மிகுந்த வேகமுடையவையாகிப்
பேரொளியுடன் தகதகவென்று ஜ்வலித்துக்கொண்டு சர்ப்பங்கள் பயந்து வருந்தும்படி சமுத்
திர ஜலங்களில் பிரவேசித்தன. உடனே சமுத்திரம் கரையோரத்தில் பெரிய பெரிய அலைகள்
வரிசை வரிசையாக மேல்கிளம்பப் பெற்று விளங்கியது. நடுவில் பாணம் புகுந்திருக்கையால்
புகை உண்டாகப்பெற்றும், பாணத்தினுடைய நெருப்பினால் சோஷிப்பதுமாய் இருக்கையால்
அலைகள் சுழித்துக்கொண்டிருந்தன. பாணங்கள் பாதாளம்வரை நுழைகையால் சமுத்திரத்தி
லுள்ள சர்ப்பங்கள் வாயால் விஷத்தைக் கக்கிக்கொண்டு ஜ்வலிக்கின்ற முகமுடையவைகளும்
கண்கள் மினுமினுக்கப் பெற்றவைகளுமாகி மிகவும் வருத்தமுற்றன. அங்ஙனமே பாதாளத்தி
லுள்ள தானவர்களும் பீடிக்கப்பட்டனர். இன்னும் சமுத்திரத்திலுள்ள ராக்ஷசர்களும்
பெரிய மீன்களும், முதலைகளும், சர்ப்பங்களும் அலைகளால் மேலே வீசி எறியப்பட்டு சமுத்
திரம் மிகவும் கோரமாகக் கலக்கப்பட்டது. பின்னும் ராமன் பாணங்களைத் தொடுக்கும்
பொருட்டு வில்லை இழுத்துக் கோபத்தினால் பெருமூச்சு விடுகையில் லக்ஷ்மணன் 'இனி நான்
வெறுமனே இருந்தால் உலகங்களெல்லாம் கொளுத்தப்படும்' என்று நினைத்து திடீரென ஓடி
வந்து 'வேண்டாம் வேண்டாம்' என்று கூறி வில்லைப் பிடித்துத் தகையலுற்றனன். (21.)

22. ராமன் சமுத்திரத்தின்மேல் பிரமாஸ்திரம் விடத்தொடங்குதலும் சமுத்திர ராஜன் அஞ்சி ஓடிவந்து சேதுகட்ட அனுமதித்தலும்.

பிறகு ராமன் சமுத்திரத்தைப் பார்த்து "சமுத்திர ராஜனே! உன்னை இப்பொழுதே
பாதாளம் வரை உலரும்படி செய்கிறேன். ஜலமெல்லாம் உலர்ந்துபோகையில் பாதாளம்வரை
உலர்ந்துபோகும். பாதாளத்திற்குப்போவது அசாத்தியமாகையால் ஆகாச மார்க்கமாகவே
போகவேண்டியதாய் வரும். ஆகையால் இப்பொழுதே ஆகாய வழியாய்ப்போவது மேலாகை
யால் கோபமேன்? என்னில்; வருணனே! நான் சேதுகட்டுவதற்கு கஷ்டப்படவேண்டிய அவ
சியமேயில்லை. நான் வில்லினின்றும் பெய்த பாணவர்ஷங்களால் பாணங்களே சேதுவாக
அமையப்பெற்று இப்பொழுதே வானரர்கள் கால் நடையாகவே உன்னைத்தாண்டி அக்கரை
சேருவார்கள். நீ ராக்ஷசர்களுக்கு இருப்பிடமானவனாகையால் அவர்களுடைய சகவாசத்தினால்
எனது பலத்தையும் பராக்கிரமத்தையும் தெரிந்து கொள்ளாதிருக்கின்றனை" என்றனன்.
இங்ஙனம் கூறிக்கொண்டே ராமன் ஓர் பாணத்தை யெடுத்து அதை பிரமாஸ்திர மந்திரத்தி
னால் அபிமந்திரித்து மேலான வில்லில் தொடுத்துக் காதுவரையிலும் இழுத்தனன்! அப்
பொழுது ஆகாயமும் பூமியும் இருபிளவாகும் போலிருந்தன. பர்வதங்களெல்லாம் நடுங்கின.
உலகமெல்லாம் இருள் மூடிக்கொண்டது. திசைகளெல்லாம் ஒளி மழுங்கப்பெற்றன. குளங்
களும் நதிகளும் கலங்கின. சந்திர சூரியர்களும் நக்ஷத்திரங்களும் கோணல்களாகச் சேர்ந்து
திரிந்தன. ஆகாயத்தினின்று பெரிய சப்தத்துடன் இடிகள் விழுந்தன. பெரிய காற்றுகள்
கனமாக வீச அதனால் மரங்கள் முறிந்து மலைகள் நிலை குலையப்பெற்றன. பெரிய மேகங்கள்

ஆகாயத்தினின்று 'வைத்யுதம்' என்கிற நெருப்புகளைக் கக்கின. அப்பொழுது சமுத்திரம்
மிகவும் கலக்கப்பட்டு ஒரு யோசனை தூரம் கரையைக்கடந்து வந்தது. சமுத்திர ஜலத்தின்
நடுவிலிருந்து சமுத்திர ராஜன் பொன்னால் செய்த ஆபரணங்களை யணிந்து சிறந்த பூமாலைகளை
யும் ஆடைகளையும் தரித்து வேகமாக ஓடிவந்து ராமனை வணங்கி கைகூப்பியவண்ணம் "ராமா!
நிலம் நீர், தீ, கால், விசும்பு என்கிற பஞ்சபூதங்களும் நிலைநின்ற ஏற்பாட்டில் இருப்பவைக
ளாகித் தம் தமது குணத்தை என்றும் கடவாதிருப்பவை. ஆகவே நான் இப்படியே ஆழமாக
இருக்கவேண்டியவன். ஆழமில்லாமல் தாண்ட சுகமாய் இருத்தல் என் சுபாவத்திற்கு இணங்
காததாகும். இதுபற்றியே நான் உன் எதிரில் வராதிருந்தனன். ஆயின் 'ஆழமாகவே இருந்து
ஜலத்தையாவது அசையாமல் நிறுத்தி நமக்கு வழி விடலாகாதா?' என்னில்; நான் அங்ஙனம்
செய்வேனாயின் பீடை உண்டாகும். ஆகையால் ஜலத்தைக்கூட சிறிதும் நிற்கச்செய்ய வல்ல
னல்லேன். ராமா! ஆயினும் என்னால் கூடிய வேறு ஒரு உபகாரம் செய்கிறேன். அதாவது
உன் சேனைகள் சமுத்திரத்தைத் தாண்டும்வரையில் ஜலத்தில் போகுமவர்களை 'முதலை'
முதலிய ஜல ஜந்துக்கள் துன்புறுத்தாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளுகிறேன். வானரர்கள்
என்னைத் தாண்டும்பொருட்டு அணை கட்டுவதற்கு உபயோகிக்கிற மலை, மரம், கல் முதலிய
வற்றை கலையச்செய்யாமல் சேது (அணை) மார்க்கம் உண்டாகும்படி செய்கிறேன். தசரத
குமாரனே! இந்த நலன் என்பவன் விசுவகர்மாவின் புதல்வன். சில்ப வித்தைகளில் தந்தைக்கு
நிகரானவன். இவனே என்மீது அணையைக் கட்டுவானாக. அந்த அணை முழுகாதிருக்கும்படி
நான் தாங்கிக் கொள்ளுகிறேன்" என்றனன். அப்பொழுது ராமன் சமுத்திர ராஜனைப்
பார்த்து கடலரசனே! நான் தொடுத்த பாணம் வீணாகாதல்லவா? இதற்கு இலக்கென்?",
என்று வினவினன். சமுத்திர ராஜன் ராமனைப் பார்த்து "இவ்விடத்திற்கு அருகான வட
பாகத்தில் 'துருமகுல்யம் என்னும் ரமணீயமான பிரதேசத்திலுள்ள எனது விரோதிகளின்
மீது அப்பாணத்தை விடுவாயாக" என்றனன். ராமன் அங்ஙனமே துருமகுல்ய மென்னும்
பிரதேசத்தின் மேல் அந்த பாணத்தைப் பிரயோகித்தனன். அந்த பாணம் பூமியைப் பிளந்து
கொண்டு உள்ளே நுழைகையில் அந்த அடிபட்ட இடத்தில் 'மருகாந்தாரம்' என்கிற பாலை
வனப் பிரதேசம் ஏற்பட்டது. ஏனெனில் அங்குத் தேங்கியிருந்த ஜலங்களையெல்லாம் ராம
பாணம் உறிஞ்சிவிட்டது. பிறகு அப்பாணம் சமுத்திர ராஜனது விரோதிகளை நாசம் செய்
தது. ராமன் சமுத்திரத்தின் நடுவிலுள்ள பிரதேசமான அம்மருகாந்தாரத்திற்கு, புல், காய்
கிழங்குகள், நானாவித மூலிகைகள் முதலியவை அதில் உண்டாகும்படி வரமளித்தனன். பிறகு
வானரர்கள் ராமனது கட்டளையினால் காடுகளிலுள்ள நானாவித மரங்களையும், மலைகளையும்
குன்றுகளையும், பாறைகளையும் கொண்டுவந்து சமுத்திரத்தை நிறைத்தனர். நலன் அவற்றைக்
கொண்டு சமுத்திரத்தின் நடுவில் பெரிய அணையைக் கட்டினன். அவ்வானரர்கள் நலனைக்
கொண்டு முதல் நாள் பதினான்கு யோசனை தூரம் அணையையும், இரண்டாவது நாள் இருபது
யோசனை தூரம் அணையையும், மூன்றாவது நாள் இருபத்தொரு யோசனை தூரம் அணையையும்,
நான்காவது நாள் இருபத்திரண்டு யோசனை தூரம் அணையையும், ஐந்தாவது நாள் சுவேல
பர்வதம் வரையில் இருபத்து மூன்று யோசனை தூரமும் நிருமாணித்து அணையைக்கட்டி முடித்
தனர். தேவதைகளும், கந்தருவர்களும், சித்தர்களும், மகரிஷிகளும் ஆகாயத்தில் வந்து நின்று
பத்து யோசனை அகலமும், நூறு யோசனை நீளமுமுள்ள அவ்வழகிய அணையைக் கண்டு
ஆச்சரியமடைந்தனர். வானரர்கள் அப்பெரிய சேதுவைக் கண்டு மிகுந்த சந்தோஷத்தால்
குதித்துப் பலவிதமான சேஷ்டைகளையும் செய்தனர். வானரர்களெல்லாரும் அவ்வணையின்
மேல் நடந்து சென்று சுகமாக சமுத்திரத்தின் தென்கரைக்குச் சென்று கொண்டிருந்தனர்.
பிறகு ராமன் அனுமானின் தோளிலும் லக்ஷ்மணன் அங்கதனுடைய தோளிலும் ஏறிக்
கொண்டு விபீஷணன் சுக்கிரீவன் முதலியவர்களால் சூழப்பட்டு சமுத்திரத்தின் தென்கரையை
யடைந்தனர். பயங்கரமான அப்பெரிய வானர சைன்னியம் சமுத்திரத்தைத் தாண்டும்போது
விளைந்த சப்தமானது பயங்கரமாய் சமுத்திர கோஷத்திற் காட்டிலும் விஞ்சி இருந்தது. அப்
பொழுது தேவர்களும், சித்தர்களும், சாரணர்களும், மகரிஷிகளும் ராமனிடம் வந்து அவனை

மங்கல நீரால் ஸ்நானம் செய்வித்து "ராமா! நீ பகைவர்களை யெல்லாம் வெல்லுவாயாக. பூமண்டலத்தை யெல்லாம் பாதுகாத்து வருவாயாக" என்று பலவகையான சுப வசனங்களால் பூஜித்துச் சென்றனர். ... ... (22.)

23. ஸ்ரீராமன் யுத்தத்தை அறிவிக்கிற சகுனங்களைக் கண்டு அவற்றை லக்ஷ்மணனுக்குக் காண்பித்தல்.

பிறகு ராமன் லக்ஷ்மணனை நோக்கி "லக்ஷ்மணா! குளிர்ந்த நீரும் நல்ல காய் கிழங்குகளும் நிறைந்த காடுகளோடு கூடின பிரதேசங்களை வாஸஸ்தானமாக ஏற்படுத்திக்கொண்டு, சேனைகளை, குரங்குகள் கரடிகள் கொண்டை முசுக்கள் என்னும் அந்தந்த பாகங்களாகப் பிரித்து கருட வியூகமாக ஏற்பாடு செய்து சுகமாய் இருப்போம். இப்பொழுது பெரிய பயங்கரமான யுத்தம் நடக்கப்போகிறதென்று எனக்குத் தோன்றுகிறது. லக்ஷ்மணா! காற்றுகள் கலக்கமுற்று வீசுகின்றன. பூமியும் கிடுகிடுவென்று நடுங்குகிறது. மலைச்சிகரங்கள் அல்லாடுகின்றன. மரங்கள் காரணமின்றி முறிந்து விழுகின்றன. மேகங்கள் ரத்தத்துளிகளோடு கூடின ஜலத்தைப் பொழிகின்றன. சூரியனிடமிருந்து பிண்டப்போன்ற நெருப்பு விழுகிறது. மிருகங்களும் பக்ஷிகளும் தீனஸ்வரத்துடன் கத்துகின்றன; இரவில் சந்திரன் தாபத்தை விளைவிக்கின்றனன். நரிகள் அமங்களகரமான சப்தத்தைச் செய்கின்றன. இனிச் சூரர்களான வானரர்களும் ராக்ஷசர்களும் ஒருவர்க்கொருவர் பிரயோகிக்கும் பர்வதங்களாலும் சூலம் கத்தி முதலிய ஆயுதங்களாலும் பூமி முழுவதும் மறைக்கப்பட்டு ரத்தங்களும் மாமிசங்களும் நிறைந்ததாகும். ஆகையால் தாமதமில்லாமல் இப்பொழுதே வேகமாக லங்காபுரிக்குச் செல்வோமாக" என்றனன். உடனே அனைவரும் லங்கையை நோக்கிச் சென்றனர். (23.)

24. ராமன் சேனையைக் கருடவியூகமாக ஏற்படுத்துதலும், சுகன் ராவணனிடம் போய் சீதையைக் கொடுக்கும்படி விண்ணப்பஞ் செய்தலும்.

வானரர்கள் குளிர்ந்த நீர் முதலிய சௌகரியங்களமைந்த இடத்தில் இறங்கி லங்கையினின்று சைன்னியங்களின் இரைச்சலையும் பேரி மிருதங்கம் முதலிய வாத்தியங்களின் சத்தங்களையும் கேட்டனர். அவர்கள் அந்த சப்தங்களைக் கேட்கப்பொறுமல் அதைக்காட்டிலும் அதிகமான சப்தம் கிளம்பும்படி சிம்மநாதங்களைச் செய்தனர். ராக்ஷசர்களும் அவ்வானரர்களின் பேரிரைச்சலைச் செவியுற்று நிலை கலங்கினர். ராமன் விசித்திரமான கொடிகளாலும், கோபுரங்களாலும், மாளிகைகளாலும் விளங்குகின்ற லங்காபுரியைக்கண்டு சிறிதும் மனக்களிப்பின்றி சீதையை நினைத்து வருந்தினன். பிறகு வருத்தத்தை யடக்கிக்கொண்டு லங்கையின் விநோதமான காட்சிகளையும் அமைப்பையும் லக்ஷ்மணனுக்குக்காட்டி வானரத் தலைவர்களைப் பார்த்து "அங்கதனும் நீலனும் தமது வானர சைன்னியங்களை யழைத்துக்கொண்டு சேனையின் நடுப்பிரதேசத்தில் இருப்பார்களாக. ருஷபன் தனது சைன்னியங்களோடு வானர சேனையின் வலப்பக்கத்தில் காத்திருப்பானாக. கந்தமாதனன் தன் சைன்னியங்களுடன் வானர சேனையின் இடது பக்கத்தில் இருப்பானாக. நானும் லக்ஷ்மணனும் சேனையின் தலைப்பாகத்தில் இருக்கின்றனம். ஜாம்பவன், சுஷேணன், வேகதர்சி இம்மூவரும் சேனையின் வயிற்றுப் பாகத்தைக் காப்பார்களாக. சுக்கிரீவன் வானர சைன்னியத்தின் பின்பாகத்தைப் பாதுகாப்பானாக" என்று ஆஞ்ஞாபித்தனன். இங்ஙனம் பெரியதான அவ்வானர சைன்னியம் கருடவியூகமாக நன்கு ஒழுங்கு செய்யப்பெற்று வானரவீரர்களால் பாதுகாக்கப்பட்டுப் பெரிய சமுத்திரம் போல் விளங்கியது. அப்பொழுது ராமன் அதுவரையில் வானரர்களால் கட்டுண்டு கிடந்த சுகனை அவிழ்த்து விட்டுவிடும்படி சுக்கிரீவனுக்குக் கட்டளையிட சுகன் விடுபட்டு வெகு சீக்கிரமாக ராவணனிடம் சென்றனன். ராவணன் சுகனைப் பார்த்து "சுக்கிரீவன் எனக்கு என்ன பதில் சொல்லியனுப்பினன்?" என்று வினவ, சுகன் ராவணனை நோக்கி "பிரபுவே! நான் உனது விருப்பப்படி சுக்கிரீவனிடம் சென்று நீ சொன்ன வார்த்தைகளை ஒன்றும் விடாமல் தெளிவாகக் கூறினேன். அவ்வானரர்கள் என்னைக் கண்டவுடன் மிகுந்த கோபத்துடன் மேற்கிளம்பி என்னைப் பிடித்துக்கொண்டு வலியப் புடைத்தும், எனது சிறகுகளை முறித்தும்

படாதபாடுகள் படுத்தி என்னைக் கொல்லவும் முயன்றனர். ராக்ஷசேச்வரா! ஐயோ! நான் என்னவென்று சொல்லுவேன்? அவ்வானரர்கள் கொடியர்; அளவற்ற பராக்கிரம முடையவர். ராமன் இதுவரையில் ஒருவராலும் நினைப்பதற்கும் அசாத்தியமான பெரிய அணையை சமுத்திரத்தில் கட்டி அதன் வழியாக சமுத்திரத்தைத் தாண்டி இதோ லங்கைக்கு அருகாமையில் கணக்கற்ற வானர வீரர்களுடன் வந்திருக்கின்றனன். இதோ அவர்கள் லங்கையின் கோட்டைமேல் வரப்போகின்றனர். சீக்கிரத்தில் சீதையையாவது ராமனுக்குக் கொடுப்பாய்; அல்லது யுத்தத்தையாவது ஆரம்பிப்பாய். அவ்வானரர்களை எதிர்ப்பது நமது ராக்ஷசர்களுக்குச் சிறிதும் சாத்தியமில்லை. ஆயினும் நான் கூறின இரண்டிலொன்றைச் சீக்கிரம் செய்வாயாக" என்றனன். இவற்றைக்கேட்ட ராவணன் கோபத்தினால் கண்கள் சிவக்கப்பெற்று சுகனைப்பார்த்து "தேவர்களும் கந்தருவர்களும், தானவர்களும் மற்றுமுள்ள எல்லாரும் என்மேல் எதிர்த்து யுத்தஞ் செய்யினும் சீதையை மாத்திரம் கொடுக்கமாட்டேன். வெகு காலமாக யுத்தமில்லாமையால் அம்பறாத் தூணிகளில் வீணே கிடந்து ஜ்வலிக்கின்ற எனது பாணங்கள் வெகுவிரைவில் ராமனைக் கொல்லப்போகின்றன. எனது ஆற்றலும் பலமும் பராக்கிரமங்களும் உனக்கு நன்கு தெரிந்திருந்தும் அற்பனான ராமனது சைன்னியங்களைப் பற்றிப் புகழ்ந்து கூறினை. அடா! சுகனே! ஆயிரங்கண்களையுடைய இந்திரனாயினும், வருணனாயினும், யமனாயினும் குபேரனாயினும் யுத்தத்தில் நெருப்புப்போன்ற பாணங்களைப் பிரயோகிக்கின்ற என்னை எதிர்க்க வல்லராகாமற் போயினரல்லவா?" என்றனன். (24.)

25. ராவணன் சுகசாரணர்களை அனுப்புதலும் வானர சேனையில் அவர்களடைந்த துன்பமும் அவர்கள் வானர சேனைகளைப்பற்றி ராவணனிடம் சென்று கூறுதலும்.

ராமன் பெரிய சைன்யங்களுடன் சமுத்திரத்தைத் தாண்டி வந்ததைக்கேட்ட ராவணன் தனது மந்திரிகளான சுகசாரணர்களைப் பார்த்து "ராமன் சைன்னியங்களுடன் சமுத்திரத்தைத் தாண்டிவந்துவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். இதுவரையில் என்றும் கண்டதும் கேட்டதுமல்லாத பெரிய அணையை ராமன் கட்டினனென்று என் காதில் விழுகின்ற இவ்விஷயம் எனக்கு சிறிதும் நம்பத்தகுந்ததாகவில்லை. நிற்க: எனக்கு அவ்வானர சைன்னியங்களின் விதமெல்லாம் தெரியவேண்டும். ஆகையால் நீங்கள் எவர்க்கும் தெரியாதபடி ஏகாந்தமாக அவர்களது சைன்னியத்தில் புகுந்து அதன் பரிமாணத்தையும் (அளவையும்) அவர்களது பராக்கிரமங்களையும், ராமன் சுக்கிரீவன் இவர்களது மந்திரிகள் எவர் என்பதையும், யுத்தத்தில் முன் நிற்கும் சூரர்கள் எவர் என்பதையும், அவர்கள் சேது (அணை) கட்டினவிதத்தையும், ராமனது மனநிலைமையையும் பராக்கிரமத்தையும் ஆயுதங்களையும் உள்ளபடி தெரிந்துகொண்டு வருவீர்களாக" என்று கட்டளை யிட்டனுப்பினன். வீரர்களான அந்த சுகசாரணர்கள் உடனே மாயமாக வானரரூபம் தரித்து வானரசைன்னியத்தில் வந்து புகுந்தனர். அவர்கள் சிந்திக்க முடியாததும், காண்போர்க்கு மயிர்க்கூச்சலை விளைவிப்பதுமான அப்பெரிய வானர சேனையைப் பார்த்து ஆச்சரியமடைந்து அதை இவ்வளவென்று கணக்கிடமுடியாமல் திகைத்தனர். வானர வேடம் பூண்டிருந்த அவர்களை சிறிது நேரத்தில் விபீஷணன் தெரிந்துகொண்டு அவர்களிருவரையும் பிடித்து ராமனிடம் கொண்டுவந்து "ராமா! இதோ ராவணனது மந்திரிகளான இவ்விரண்டு ராக்ஷசர்களும் நமது ரகசியங்களைத் தெரிந்துகொண்டுபோகும் விருப்பத்தினால் வந்திருக்கின்றனர். இவர்களைத் தகுந்தபடி தண்டிப்பாயாக" என்றனன். அந்த சுகசாரணர்கள் இருவரும் மிகவும் துக்கித்தவர்களாகி பிழைப்பதில் ஆசையை இழந்து கைகளைக்கூப்பிக்கொண்டு பயத்துடன் ராமனைப்பார்த்து "நல்லியற்கை யுடையவனே! நாங்கள் ராவணனாலனுப்பப்பட்டு உன் சைன்னியத்தை யெல்லாம் பார்த்துத் தெரிந்துகொள்வதற்காக இவ்விடம் வந்தோம்" என்றனர். ராமன் கருணைக்கடலாகையால் அவர்களை நோக்கி "என் சைன்னியங்களையெல்லாம் நன்றாகப் பார்வையிட்டுச் செல்வீர்களாக. நீங்கள் பாராதது இன்னுமிருக்குமாயின் விபீஷணனே உங்களுக்கு அவற்றைக் காட்டுவான். நீங்கள் ஆயுதமின்றி இருப்பதால், உங்களைக் கொல்லமாட்டோம். ஓ சுகசாரணர்களே! நீங்கள் ராவண

னிடம் சென்று நான் சொன்னதாகக் கூறுவீர்களாக. 'அடா ராவணா! நீ எந்த பலத்தைக் கொண்டு சீதையைத் திருடிக்கொண்டு போயினையோ, அந்த பலத்தை இப்பொழுது நீயும் உன் சைன்னியமும் உன் பந்துக்களும் இஷ்டப்படி காட்டுவீர்களாக. நாளை விடியற் காலத்தில் லங்கையையும் அதிலுள்ள ஸமஸ்த ராக்ஷசக்கூட்டங்களையும் துவம்சம் செய்யப்போகிறேன், வல்லமையைக் காட்ட வரலாம்' என்று கூறவேண்டும்'' என்றனன். உடனே சுகசாரணர்கள் ராமனைப்புகழ்ந்து லங்கையில் நுழைந்து ராவணனைப்பார்த்து ''லங்கேச்வரா! விபீஷணன் எங்களைப்பிடித்துக் கொல்ல வேண்டுமென்று ராமனிடம் கொண்டுபோயினன். ராமன் தரும சுபாவமுடையவனாகையால் ஆயுதமில்லாத எங்களைக் கொல்லாமல் உயிர்பிச்சையளித்துப் போகவிட்டனன். ராம லக்ஷ்மணர்களும், விபீஷணனும் சுக்கிரீவனும் லோக பாலர்களைப் போன்ற சூரர்களும் பாணம் விடுவதில் சமர்த்தர்களும் திடமான பராக்கிரம முடையவர்களுமாய் இருக்கின்றனர். லங்கையைப் பாழ் செய்யும்பொருட்டு ஒற்றுமையாயிருக்கின்றனர். மற்ற வானர சைன்னியங்களின் சகாய மில்லாமலே இந்நால்வரும் லங்கையைப்பெயர்த்து வீசி எறியவல்லவரென்று தோன்றுகிறது. ராவணா! ராமனது உருவத்தையும் ஆயுதங்களையும் பார்க்கில் அவனொருவனே லங்கைமுழுவதையும் நாசம் செய்ய வல்லவன் என்று எமக்குத் தோன்றுகின்றது. இவ்வளவு அவ்வளவென்று கணக்கிட முடியாத பெரிய சமுத்திரத்தைப் போன்ற அவ்வானர சைன்னியங்கள் பத்து யோசனை தூரம் வியாபித்திருக்கின்றன. அதைப் பலவானான லக்ஷ்மணன் பாதுகாக்கின்றனன். அந்த ராமனையும் அவனது சைன்னியங்களையும் தேவதைகளாலும் அசுரர்களாலும் அல்லது ஒன்று சேர்ந்த தேவாசுரர்களாலும் எதிர்க்க முடியாது. ராமன் சமுத்திரத்தின் மேல்கட்டின அணையானது பத்துயோசனை அகலமும் நூறு யோசனை நீளமுமுடையதாய் விளங்குகிறது. சைன்னியங்கள் இன்னும் அணையின் மூலமாய் வந்துகொண்டேயிருக்கின்றன. அதற்கு முடிவே தெரியவில்லை. அவ்வானரர்களனைவரும் யுத்தம் செய்ய மிகுந்த உத்சாகமும் சந்தோஷமும் கொண்டிருக்கின்றனர் ராவணா! அவர்களை உன்னால் ஜயிக்க முடியாது. அவர்களோடு விரோதம் வைத்துக்கொண்டதுபோதும். கோபத்தை யடக்கிக்கொண்டு சீதையைக் கொண்டுபோய் ராமனிடம் விட்டுவிடுவாயாக'' என்றனர்.

26. வானர சேனைகளைப் பார்க்கும்பொருட்டு மாளிகையின் மேலேறின ராவணனுக்கு சாரணன் அவ்வானரர்களின் பராக்கிரமங்களைத் தனித்தனியே கூறுதல்.

உடனே ராவணன் வானர சைன்னியங்களைப் பார்க்க விரும்பி மிகவும் உயர்ந்த தனது அரண்மனை மேல்மாடத்தின்மேல் சுகசாரணர்களோடு ஏறினன். அவன் திரிகூடத்தின் கீழுள்ள பூமியெல்லாம் வானரர்களால் இடைவெளியின்றி நிறைந்திருக்கக் கண்டனன். அம் மகா சைன்னியத்தைப் பார்த்து ராவணன் வியப்புற்று சாரணனை நோக்கி ''இவர்களில் எவர் சூரர்? எவர் மிகுந்த பலமுடையவர்? எவர் யுத்தத்தின்முன் நிற்பவர்?, சுக்கிரீவன் இவர்களில் எவருடைய வார்த்தையைக் கேட்பான்?'' என்று வினவினன். சாரணன் சொல்லத்தொடங்கி ''ராவணா! அதோ லங்காபுரிக்கு எதிர்முகமாக சிம்மநாதம் செய்துகொண்டு நூறாயிரம் வானரர்களால் சூழப்பட்டிருப்பவன் சுக்கிரீவனது சேனாபதியான நீலன் என்பவன், அதோ மிகுந்த கோபத்துடன் சண்டை செய்ய விரும்பி வாலைப் பூமியின்மேல் அடித்துக் கொண்டு நிற்பவன் வாலி புத்திரனும் இளவரசனுமான அங்கதன் எனப்படுவான். அவன் மிகுந்த பலமும் சாதுரியமும் வீரியமுமுடையவன். அவனுக்குப் பின்புறத்தில் பெரிய சைன்னியத்தினால் சூழப்பட்டு நிற்பவன் நலன் என்பவன். இவனே சமுத்திரத்தில் பெரிய அணை கட்டினவன். அவனுடைய சைன்னியத்திலுள்ள வானரர்கள் பயங்கரமான உருவமுடையவர்கள். அவர்களை எவராலும் வெல்ல முடியாது. அதோ கணக்கில்லாத வானரர்களால் சூழப்பட்டிருக்கும் வீரர்கள் சுவேதன், குமுதன், ரம்பன், சரபன், பனஸன், விநதன், குரோதனன், கவயன் முதலியவர்களாவர். இவர்களுடைய சைன்னியத்திலுள்ள வானரர்களை எதிர்த்து நிற்க எவருக்கும் சாத்தியமன்று. மிகுந்த பயங்கரத் தன்மையுடையவர்களும் பலிஷ்டர்களும் காமரூபிகளுமான இவர்கள் ஒவ்வொருவருக்கும் வேறுவேறு சைன்னியங்கள் இருக்கின்றன. (26)

27. சாரணன் ராவணனுக்கு முக்கியமான வானர வீரர்களைக் காட்டுதல்.

''ராமன் நிமித்தமாகப் பராக்கிரமத்தைக் காட்டி உயிரையும் பொருள் செய்யாமல் யுத்தம் செய்யத் தயாராகவிருக்கும் பிரதான வீரர்களைச் சொல்லுகிறேன். அதோ நிற்பவன் ஹரன். அவன் ஆயிரங்கோடி வானரர்களுடன் கூடி உன்னை யுத்தத்தில் வெல்ல விரும்புகின்றனன். அதோ கறுத்த மேகம்போலும் கறுத்த மைபோலும் நிற்கின்ற கரடிக் கூட்டங்களைக் காண்பாயாக. இவைகள் கணக்கிட முடியாமல் உண்மையான பராக்கிரம முடையவையாகி உன்மேல் எதிர்த்து வருகின்றன. இக்கரடிகளுக்கெல்லாம் 'தூம்ரன்' என்பவனே அதிபதியாவான். அவனுடைய தம்பியே அதோ நிற்கும் ஜாம்பவான். இவனே மிகவும் முக்கியமானவன். யுத்தத்தில் விரோதிகளைக் கொல்லாமல் திரும்பமாட்டான். இவன் முன்பு தேவாசுர யுத்தத்தில் இந்திரனுக்குப் பெரிய உதவி செய்து பல வரங்களைப் பெற்றிருப்பவன். இவன் தன் பெரிய கரடிக் கூட்டங்களுடன் உன்னை எதிர்த்து வருகின்றனன். ராவணா! அதோ நிற்பவர்கள், தம்பன், ஸந்நாதன் என்பவர். அந்த ஸந்நாதன் வானரர்கள் எல்லோர்க்கும் பாட்டன். ஒரு யோசனை தூரம் அகன்ற சரீரமுடையவன். ஒரு யோசனை உயரமுடையவன். இவன் முன் அசுரர்களோடு யுத்தம் செய்து வெற்றியடைந்திருக்கிறான். இவன் அக்கினிதேவனுக்கு ஒரு கந்தருவ கன்னிகையிடத்தில் பிறந்தவன். இவனை வெல்ல ஒருவராலும் முடியாது. அதோ நிற்கும் கிரதனன் என்கிற வானரன் ஆயிரம் கோடி வானரர்களுடன் கூடி லங்கையை எதிர்க்க விரும்புகின்றனன், ரஅவனையடுத்து ஆயிரம் லக்ஷம் வானரர்களால் சூழப்பட்டு நிற்பவன் பிரமாதியென்னும் வானரன். இவனை ஒருவராலும் எதிர்க்க முடியாது. கவாக்ஷன் என்பவன் முயல்களுக்கெல்லாம் தலைவன். பற்பல நூறு லக்ஷங்களான கொண்டை முசுக்களுடன் சண்டைக்குத் தயாராக இருக்கின்றனன். அதோ நடுவில் நிற்பவன் வானரர்களுக்குத் தலைவனான சதபலி என்பவன். இவன் வெற்றியை விரும்பி சூரியனைப் பூஜிக்கின்றனன். இவனொருவனே லங்கையைப் பாழ் செய்ய விரும்புகின்றனன். இன்னும் கஜன், கவாக்ஷன், கவயன், நலன், நீலன் இவர்கள் ஒவ்வொருவரும், பப்பத்துக் கோடி சைன்னியங்களுக்குத்தலைவராவர். ராவணா! அந்த வானரர்கள் கண்செல்லுமளவும் வியாபித்திருக்கையால் அவர்களைக் கணக்கிடமுடியாது. இவ்வானரர்கள் ஒவ்வொருவரும் பெரியமலைபோன்ற உருவமுடையவர். மிகுந்த பலமுடையவர். ஒருவராலும் எதிர்க்க முடியாதவர்'' என்றனன். (27.)

28. சாரணன் சொன்னது போக மிகுந்ததையெல்லாம் சுகன் சொல்லுதல்

பிறகு சுகன் சொல்லத்தொடங்கி ''ராஜனே! பயங்கரரான இவ்வானரர்களை எதிர்க்க சாத்தியமன்று. மிகுந்தபலிஷ்டரும் காமரூபிகளுமான இவர்கள் தேவதைகளைப்போன்ற பராக்கிரம சாலிகள். தேவதைகளுக்கும் கந்தருவர்களுக்கும் பிறந்தவர்கள். பிறந்தது முதல் மாயச் செயல்களை யுடையவர். அதோ நிற்கும் இரண்டு யௌவன வானரர்களைப்பார். அவர்கள் மைந்தன், துவிவிதன் என்பவர். அவ்விருவரும் பிரம்மதேவனது அனுமதியால் அமிருத பானம் செய்தவர். ஆகையால் அவர்களை எதிர்த்து நிற்பவர் எவருமில்லை. அவர்களது பக்கத்தில் மலைபோன்ற உருவமுடைய இருவர் பத்துகோடி சைன்னியங்களால் சூழப்பட்டு லங்கையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்; பார். அவர்கள் யமனது புதல்வர்களான சுமுகனும் துர்முகனுமாவர். தந்தையை நிகர்த்த பராக்கிரமமுடையவர். ஆ! அதோ நிற்கும் அனுமானைப் பார்ப்பாயாக. அவனே முன்பு லங்கையில் புகுந்து சீதையைப் பார்த்துச் சென்றவன். இவன் கேசரியின் மனைவியிடத்தில் வாயுதேவனுக்குப் பிறந்தவன். இவனது பலமும் பராக்கிரமமும் அளவிட முடியாதவை. ஒருவராலும் வெல்லமுடியாத அந்த அனுமான் இப்பொழுது லங்கையை இஷ்டப்படி பாழ் செய்யப்போகின்றனன். பொன் சிகரத்தின்மேல் ஏறின கறுத்த மேகம்போல் அனுமானது தோளின்மேல் வீற்றிருக்கு மழகனைப்பார். அவனே கரன் முதலிய பதினாலாயிரம் ராக்ஷசர்களையும், விராதன், கபந்தன், வாலி முதலிய பலிஷ்டர்களையும் கொன்ற தீரனான ராமன். சத்தியம், பராக்கிரமம், பலம், கருணை முதலியவற்றிற்கு இருப்பிடமானவன். பிரம்மாஸ்திர மந்திரங்களையும் வேதங்களையும் அறிந்தவன். இப்பொழுது உன்னைக் கொல்லும்

பொருட்டு வந்திருக்கின்றனன். ராமனுக்கு வலதுபக்கத்தில் நிற்பவன் அவனது தம்பியான லக்ஷ்மணன். இவனும் எல்லாவிதத்திலும் தனதண்ணனுக்கு சமானமானவன். ராமனுக்கு வலக்கை போன்றவன். இவன் ஒருவனாகவே ராக்ஷசர்களைக் கொல்லவேண்டுமென்று விரும்புகின்றனன். ராமனுக்கு இடது பக்கத்திலிருப்பவன் உன் தம்பியான விபீஷணன். இவனையே லங்கா ராஜ்ஜியத்திற்கு அரசனாக ராமன் அபிஷேகம் செய்தனன். ஆகையால் இவன் பரபரப்புடன் உன்னோடு யுத்தம் செய்ய விரும்புகின்றனன். ராமனுக்கும் விபீஷணனுக்கு மிடையில் நிற்பவன் வானரர் தலைவனான சுக்கிரீவன். எங்கும் என்றும் தோல்வியடையாதவன். இவனது மார்பில் நூறு கமலங்களையுடைய பொன் மாலையொன்று விளங்குகிறது பார். அதில் வீரலக்ஷ்மி நிலைபெற்றிருக்கு மாகையால் அதைத் தரித்தவன் என்றும் தோல்வி யடையமாட்டான். ராமன் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு இந்தப் பொன் மாலையையும் (வாலியின் மாலை) தாரையையும் நிலையான வானர ராஜ்ஜியத்தையும் சுவாதீனப் படுத்தினன். லங்கேசுவரா! பண்டிதர்கள் நூறு லக்ஷங்களைக் கோடியென்பார்கள். நூறாயிரம் கோடிகளைச் சங்கமென்பார்கள். நூறாயிரம் சங்கங்கள் மகா சங்கமெனப்படும். நூறாயிரம் மகா சங்கங்கள் பிருந்தம். நூறாயிரம் பிருந்தங்கள் மகா பிருந்தம். நூறாயிரம் மகா பிருந்தங்கள் பத்மம். நூறாயிரம் பத்மங்கள் மகா பத்மம். நூறாயிரம் மகா பத்மங்கள் கர்வம். நூறாயிரம் கர்வங்கள் மகா கர்வம். நூறாயிரம் மகா கர்வங்கள் சமுத்திரம். நூறாயிரம் சமுத்திரங்கள் ஓகம். நூறாயிரம் ஓகங்கள் மஹௌகம். இங்ஙனம் அந்தந்த சேனாபதிகளின்கீழ் வேறு வேறாக ஆயிரம் கோடிகளும், நூறு சங்கங்களும், ஆயிரம் மகா சங்கங்களும் நூறு பிருந்தங்களும், ஆயிரம் மகாபிருந்தங்களும், நூறு பத்மங்களும், ஆயிரம் மகாபத்மங்களும் நூறு கர்வங்களும் நூறு சமுத்திரங்களும் நூறு மஹௌகங்களும் கோடி மஹௌகங்களுமாகிய சமுத்திரம்போல் கரையுமற்று விளங்கும் சேனையுடன் கூடி ராமன் உன்னை யெதிர்த்து வருகின்றனன். நீ உடனே நமக்குத் தோல்வி நேரிடாதிருக்கும்படி பிரயத்தனம் செய்வாயாக" என்றனன். ... (28.)

29, 30. ராவணன் சுகசாரணர்களை விரட்டி சார்தூலன் முதலான அரக்கர்களை அனுப்புதலும் அவர்கள் வானரர்க்ளால் அடைந்த துன்பமும் அவர்கள் ராமனால் விடுவிக்கப்பட்டு ராவணனிடம் வந்து செய்தி கூறலும்.

இங்ஙனம் சுகசாரணர்கள் தன் விரோதிகளைப்பற்றித் தோத்திரம் செய்து கூறின வார்த்தைகளைக்கேட்ட ராவணன் மிகுந்த சீற்றங்கொண்டு அவர்களை நோக்கி "அரசனான என்னிடம் பிழைத்து வரும் மந்திரிகளான நீங்கள் எனக்குப் பிரியமல்லாத வார்த்தைகளைச் சொல்லி விரோதிகளைப்பற்றி இங்ஙனம் தோத்திரம் செய்தீர்கள். இது உங்களுக்குத் தகுமா? என் நாக்கு அசைந்த மாத்திரத்தில் என் விரோதிகளுக்குத் தீமை விளையுமென்பது உங்களுக்குத் தெரியாதா? அல்லது உங்களுக்குத் தண்டனை சம்பவியாதென்கிற தைரியமா? இங்ஙனம் என்னெதிரில் பகைவர்களைத் தோத்திரம் செய்த உங்களைக் கொன்றுவிடுவதே யுக்தமாயினும், முன்பு நீங்கள் செய்த சில உபகாரங்கள் நினைவுக்கு வருகிறபடியால் உங்களைக் கொல்ல நான் விரும்பவில்லை. சீ! சீ!! என் கண்முன் நிற்காமல் ஓடுங்கள்" என்று விரட்டினன். பிறகு ராவணன் சார்தூலன் முதலிய சாரர்களை வரவழைத்து "ஓ சாரர்களே! நீங்கள் ராமனிடம் சென்று அவன் செய்ய வேண்டியதாக நிச்சயித்திருக்கும் காரியம் எதுவென்று பரீக்ஷித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட நிச்சயம் தளர்ந்திருக்குமாயின், அவனைப் பயமுறுத்துவோம். அவனது அந்தரங்கரான மந்திரிகளையும், நண்பர்களையும் பரீட்சியுங்கள். அந்த நட்பும் திடமாய் இராத பக்ஷத்தில் அவர்களை அவனிடத்தினின்று வேறுபடுத்தி விடுவோம். அவன் எங்கு எப்படி நித்திரை செய்கிறான்? சிந்தையுற்ற மனதுடன் இருக்கிறானா? திடமான மனதுடன் இருக்கிறானா? பட்டணத்தின்மேல் இப்பொழுதே படையெடுக்கப் போகிறானா? கொஞ்சகாலம் தாமதித்து எதிர்க்கப் போகிறானா? நீங்கள் மறைந்திருந்து நான் சொன்ன விஷயங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து தெரிந்துகொண்டு வருவீர்களாக" என்றனன். உடனே அந்த சாரர்கள் (வேவு பார்க்கிறவர்கள்) சார்த்தூலனென்கிற ராக்ஷசனை முன்னிட்டுக்கொண்டு மாறுவேடம் பூண்டு ராம லக்ஷ்மணர்கள் இருக்கும் இடத்திற்குப் போயினர். அவர்கள் ராம லக்ஷ்மணர்களையும் விபீஷண சுக்கிரீவாதிகளையும் மற்றுமுள்ள வானர சைன்னியங்களையும் கண்டு பயத்தினால் விலவிலத்தனர். அவர்கள் அந்த சேனையில் உலாவிக்கொண்டிருக்கையில், திடீரென்று விபீஷணனால் பார்க்கப்பட்டுப் பிடியுண்டனர். சார்த்தூலன் ஒருவனைமாத்திரம் மிகவும் கொடிய செய்கையுள்ள ராக்ஷசனென்று விபீஷணன் வானரர் கையில் பிடித்துக் கொடுத்தனன். வானரர்கள் அவனைச் சாகும்படி அடித்துக் கொண்டிருக்கையில் ராமன் தயையினால் அவனையும் மற்ற சாரர்களையும் வானரர் செய்யும் துன்பத்தினின்றும் விடுவித்தனன். அந்தச் சாரர்கள் 'செத்தோம், பிழைத்தோம்' என்று கூறிக்கொண்டே நெடுமூச்செறிந்துகொண்டு மிக மனவருத்தத்துடன் லங்கைக்குச் சென்றனர். அவர்கள் ராவணனிடம் சென்று "ராஜனே! அந்த வானரர்களின் ரகசியங்களைக் கண்டுபிடிப்பது எங்களுக்கு சாத்தியமன்று. அவர்கள் மிகுந்த பலமும் பராக்கிரமும் உடையவர்கள். மேலும் ராமனால் பாதுகாக்கப்பட்டிருப்பதால் அவர்களுடன் பேசுவதற்கே முடியாமல் போய்விட்டது. இனி வானரர்களைப் பரீக்ஷிப்பது எங்கே? நான்கு பக்கங்களிலும் பர்வதம்போன்ற உருவமுடைய வானரர்கள் காவலராய் இருக்கின்றனர். ஆகையால் நாங்கள் சேனையுள் புகுந்த உடனே விபீஷணன் எங்களைக் கண்டு கொண்டனன். இதனால் மற்றெங்கும் திரிந்து பார்க்கவும் முடியவில்லை. அந்தோ! அந்த வானரசேனையின் மருமம் சாரர்களால் கண்டுபிடிக்கக் கூடியதல்ல. விபீஷணனால் கண்டுபிடிக்கப்பட்ட எங்களை அக்கொடிய வானரர்கள் அடித்தும் குத்தியும், பற்களால் கடித்தும், உள்ளங்கைகளால் அறைந்தும் துன்பப்படுத்தி நாங்கள் மூர்ச்சிக்குமளவும் படாதபாடு படுத்தினர். ராமன் தனது இயற்கைக் குணமான அருளால் எங்களை விடுவித்து எங்களுக்கு உயிர்ப்பிச்சை யளித்தனன். அதோ ராமன் வில்லும் கையுமாய் சைன்னியங்களுக்கு முன்னின்று லங்கையின் கோட்டை வாயிலுக்கருகில் யுத்தம் செய்யும்பொருட்டு திடமான மனதுடன் நிற்கின்றனன். சீக்கிரத்தில் கோட்டையைத் தகர்க்கப் போகின்றனன். ஆகையால் நீ சீக்கிரம் இரண்டிலொன்று செய்வாயாக. சீதையையாவது விரைவில் கொடுத்துவிடுவாயாக. அல்லது யுத்தத்தையாவது நன்றாக நடத்துவாயாக" என்றனர். பிறகு ராவணன் சிறிது பீதியடைந்தபோதிலும் அதை வெளிக்காட்டாமல் "சாரர்களே! எவ்விதத்திலும் நான் கொண்டுவந்த சீதையைக் கொடுக்கமாட்டேன். அது விஷயம் இருக்கட்டும்" என்று கூறி, சார்த்தூலனை நோக்கி "சார்த்தூலா! வானரர்களின் உருவமும் பிரபாவமும் எப்படிப்பட்டது? அவர்கள் எவருடைய பிள்ளைகள்? அவர்களுடைய நிலைமையையெல்லாம் உள்ளபடி எனக்குச் சொல்லுவாயாக" என்றனன். சார்த்தூலன் ராவணனை நோக்கி "ராஜனே! சுக்கிரீவன் ருக்ஷரஜஸ்ஸின் புதல்வன்; யுத்தத்தில் ஒருவராலும் ஜயிக்க முடியாதவன். தூம்ரனும் ஜாம்பவானும் கத்கனுடைய பிள்ளைகள். அனுமானின் பிதாவான கேசரி என்பவன் பிருகஸ்பதியின் புதல்வன். சுஷேணன் தருமதேவதையின் புதல்வன். ததிமுகன் சந்திரனுடைய குமாரன். சுமுகன், துர்முகன், வேகதர்சீ இம்மூவரும் பிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட யமனைப் போன்றிருப்பவர். அங்கதன் தேவேந்திரனுடைய பேரன். பலிஷ்டர்களான மைந்தனும் துவிவிதனும் அசுவினி தேவதைகளின் புதல்வர்கள். கஜன், கவாக்ஷன், கவயன், சரபன, கந்தமாதனன் ஆகிய இவ்வைந்து பேர்களும் யமனுடைய புதல்வர்கள். இங்ஙனம் தைரிய வீர்யாதி லக்ஷ்மீவிலாசம் பொருந்தி, மிகுந்த உற்சாகப் பெருக்குடன் விளக்கமுற்றவர்களும், தேவதைகளுக்குப் பிறந்தவர்களும், யுத்தத்தில் மகா சூரர்களுமான பத்துகோடி வானரர்கள் இருக்கின்றனர். அவர்கள் பிறந்த இடம் முதலிய மற்ற விசேஷங்களைச் சொல்ல என்னால் தரமன்று. ராமனது பலம், வீரியம் முதலியவற்றை முன்னமே சுகன் சொல்லக் கேட்டிருக்கிறாய். லக்ஷ்மணனும் ராமனைப் போன்றவனே. சுவேதன், ஜோதிர்முகன் என்பவர் சூரியனது புத்திரர்கள். ஹேமகூடன் என்பவன் வருணனது புதல்வன். நலன் விசுவகர்மாவுக்குப் பிறந்தவன். இனிமேல் நீ செய்யவேண்டியதைச் செய்வாயாக" என்றனன். ... ... (29, 30.)

31. ராவணன் ராமனது மாயத் தலையையும் மாய சூடாமணியையும் சீதைக்குக் காட்டுதல்.

இங்ஙனம் ராமன் வந்திருக்கிறானென்று சாரர் மூலமாகக் கேள்விப்பட்ட ராவணன் சிறிது பயமடைந்து மந்திரிகளுடன் கலந்து செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி நன்கு ஆலோசித்தபின் அவர்களை யனுப்பிவிட்டனன். பிறகு அவன் மாயைகளில் நிபுணனும் மகா பலவானுமாகிய வித்யுஜ்ஜிஹ்வன் என்னும் ராக்ஷசனை அழைத்து "ராக்ஷசா! நீ மாயையால் ராமனது தலை ஒன்றுசெய்து அதையும் பாணத்துடன் கூடின பெரிய வில்லையும் எடுத்துக்கொண்டு என்னிடம் வருவாயாக" என்று கட்டளையிட்டனன். உடனே அவனுக்குப் பரிசாக ஓர் விலையுள்ள ஆபரணத்தைக் கொடுத்தனன். பிறகு ராவணன் சீதையைக் காணவேண்டுமென்கிற விருப்பத்துடன் அசோக வனத்திற்குச் சென்று சீதையை யணுகி "கல்யாணி! நான் எவ்வளவு கூறினும் நீ என் கருத்துக் கிசையாமல் ராமனை நம்பி யிருக்கின்றனை. அந்த ராமனோ யுத்தத்தில் எனது ராக்ஷசர்களால் மடிந்தனன். இனி உன் கருவம் அடங்கியதல்லவா? இனி நான் உன்னை வேண்டிக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. உனக்கு இனி யாரும் கதியில்லை. அறிவு கெட்டவளே! இனியுன் கருத்தை மாற்றுவாயாக. எனது மனைவிமார்களுக்கெல்லாம் நீயே தலைவியாய் இருப்பாய். உனது கணவன் கோரமான மரணமடைந்தனன். எனது சேனாதிபதியான பிரஹஸ்தன் பெரிய ராக்ஷச சைன்னியங்களுடன் சென்று ராம லக்ஷ்மணர்களைக் கொன்றதுமன்றி, சுக்கிரீவன் முதலிய வானர சைன்னியங்களையும் அதமாக்கினன். தப்பிப் போன வானரர்கள் திசைக்கொருவராய் ஓடிப்போயினர். அனுமான் ராக்ஷசர்களால் அடிக்கப்பட்டு தவடைகள் முறிந்து விழுந்து கிடக்கின்றனன். அங்கதன், நீலன், கவாக்ஷன், மைந்தன், துவிவிதன், ஜாம்பவான், சுஷேணன் முதலிய பலமான வானரர்கள் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு கீழே விழுந்துகிடக்கின்றனர். சில வானரர்கள் ஆகாயத்தில் கிளம்பிச் சென்றனர். கரடிகள் மரங்களில் தொத்தி ஏறிக்கொண்டன. ராமனது தலையும் லக்ஷ்மணனது தலையும் ரத்த வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன. அவற்றை இதோ கொண்டுவரச் செய்கிறேன். உனது கண்களால் பார்ப்பாயாக" என்றனன். பிறகு ராவணனது கட்டளையினால் வித்தியுஜ்ஜிஹ்வன் தான் செய்த ராமனது மாயத் தலையையும் பெரிய வில்லையும் சீதைக்கு முன்னே கொண்டுவைத்தனன். பிறகு ராவணன் அந்தப் பெரிய வில்லையெடுத்து சீதையை நோக்கி "ஏ! தரித்திரம் பிடித்தவளே! இதோ உனது ராமனுடைய வில்லைக் காண்பாயாக. இதோ உனது கணவனின் வெட்டுண்ட தலையைக் காண்பாயாக. இனி உன் கஷ்டம் தொலைந்தது. எனக்குட்பட்டு இஷ்ட போகங்களை யனுபவிப்பாயாக" என்றனன். ... ... (31.)

32. சீதை மாயத் தலையைப் பார்த்துப் புலம்புதல்.

இங்ஙனம் வித்யுஜ்ஜிஹ்வனால் கொண்டுவரப்பட்ட மாயத் தலையானது உண்மையில் ராமனது தலைபோலவே காணப்பட்டது. ராமனுக்குத் தகுந்திருக்கிற கண்களின் அழகையும் அம்முகத்தின் நிறத்தையும், முகத்தையும், தலை மயிரையும் அந்தச் சூடாமணியையும் கண்டு அது ராமனது தலையே என்று பிரமித்து சீதை மிகுதியும் வருந்திப் புலம்பத் தொடங்கினள். "ஆ! கைகேயி! ரகுகுல திலகன் இதோ பாழாயினன். இனி உன் கருத்து ஈடேறிற்றல்லவா? உன் கலக வார்த்தையினாலல்லவோ ராமன் மாண்டனன்? ஐயோ! பெரிய தோள்களையுடையவனே! சத்துருவைக் கொல்லாமல் திரும்பமாட்டாத வீரனான நீ இன்று பாழாயினையே! இதென்ன கொடுமை! ஐயோ! நான் விதவையாயினனே! முதலில் மனைவிக்கு முன் கணவன் மரணமடைவானாயின் அதற்கு மனைவியினிடத்தில் குணமில்லாமையையே காரணமாகச் சொல்லுவார்கள். நான் பிழைத்திருக்கையில் நீ மரணமடைந்தனையே! இப்படி நேர்ந்ததற்கு என்னிடத்தில் குணமில்லாமையே அன்றி நன்னடத்தையுடைய உன்மேல் யாதொரு தோஷமுஞ் சொல்லவொண்ணாது. ராமா! இனி நான் என் செய்வேன்? நினைக்கமுடியாத பராக்கிரமமுடையவனே! உன தன்னைமார்கள் புத்திரசோகத்தினால் வருந்தித் தவிப்பார்களே! ஐயோ முன்பு நீ வெகுகாலம் நீண்ட ஆயுளுடன் இருப்பாயென்று கூறின சோதிடர்களின் வார்த்தை

பொய்யாகிவிட்டதே! நீ அற்பாயுளாய்ப் போயினையே! ஐயோ! ராமா! திக்கற்றவளும் மனஇரக்கத்திற்கு இடமுமாகிய என்னை விட்டு, பூமியை என்னைக் காட்டிலும் அன்பிற்கிடமான ஓர் பெண்மணியைப்போல் கட்டியணைத்துப் படுத்திருக்கின்றனையே! சுவர்க்கத்திலுள்ள உனது தந்தையான தசரத ராஜனை நினைத்துக்கொண்டு அங்குச் சென்றுவிட்டாய்போலும்! என்னை எப்பொழுதும் விட்டுப் பிரியேன் என்று கூறின உனது வார்த்தை பொய்யாயிற்றே! ஐயோ! என்னுடன் ஒரு வார்த்தையேனும் பேசாதிருக்கின்றனையே! காகுத்தா! எப்பொழுதும் உன்னைவிட்டுப் பிரியாத என்னை இப்பொழுது தனியேவிட்டுத் தவிக்கச்செய்வது உனக்கு நீதியோ? என்னையும் உன்னிடம் அழைத்துக்கொண்டு போவாயாக. ஐயோ! கரன் முதலான பதினாலாயிரம் ராக்ஷசர்களை எளிதில் ஒரு முகூர்த்த காலத்தில் கொன்ற தீரனான நீ அற்பனான பிரஹஸ்தனால் எப்படிக் கொலையுண்டனை? இதென்ன ஆச்சரியம்? ராவணா! ராமனை அடித்தாற்போல் என்னையும் சீக்கிரமாக அடித்து அவன்மேல் விழத் தள்ளுவாயாக. அவன் தலையோடு என் தலையையும், அவன் சரீரத்தோடு என் சரீரத்தையும் சேர்ப்பாயாக. நானும் அவன் சென்றவழியே செல்கிறேன்" என்று சீதை கண்களை மலர விழித்து அந்தத் தலையையும் வில்லையும் அடிக்கடி பார்த்து வருத்தத்தினால் பரிதபித்துப் புலம்பினள். அப்பொழுது வாயில் காப்போனொருவன் அங்கு விரைந்து வந்து ராவணனை நோக்கி "ராஜனே! பிரஹஸ்தன் மந்திரிகளுடன் வந்திருக்கின்றனன். பெரிய கஷ்டசாத்தியமான காரியத்தைப்பற்றி இப்பொழுதே சீக்கிரம் ஆலோசிக்க வேண்டுமாம்" என்றனன். உடனே ராவணன் அவ்விடத்தை விட்டு மந்திரிகளிடம் சென்றனன். ராவணன் சென்றவுடன் ராமனது மாயத்தலையும் வில்லும் கண்ணுக்குப் புலப்படாமல் போயின. பிறகு ராவணன் மந்திரிகளுடன் கலந்தாலோசித்து ராமனைக் குறித்துத் தான் செய்யவேண்டிய காரியத்தை நிச்சயித்தனன். ... ... (32.)

33. விபீஷணனது மனைவியான சரமை என்பவள் சீதையை சமாதானப்படுத்துதல்.

சீதை ராமனை நினைத்து மிகவும் வருந்திப் புலம்பி மூர்ச்சித்துக் கீழே விழுந்தபொழுது அவளிடத்தில் ப்ரீதியுள்ள விபீஷணனது மனைவியான சரமை யென்பவள் அவளைத் தேற்றும் பொருட்டு ஓடி வந்தனள். அந்த சரமை ராவணனது கட்டளையினால் சீதையைப் பாதுகாத்துக் கொண்டிருந்தவள். அவள் மிகவும் இரக்கமுடையவளாகையால் சீதையைத் தன் உயிர்த் தோழியாக மதித்துவந்தனள். அவள் சீதையை நிதானமாகக் கைகளால் தடவிக் கொடுத்து சமாதானப்படுத்தி "சீதே! மனதில் சமாதானமடைவாயாக. இப்பொழுது ராவணன் உன்னிடம் வந்ததும் ராமனது தலையையும் வில்லையும் உனக்குக் காட்டினதும் நீ அவற்றைப் பார்த்துப் புலம்பினதும் ஆகிய இவையெல்லாம் எனக்குத் தெரியும். வைதேகி! நீ சிறிதும் மனவருத்தமடைய வேண்டாம். ஜானகி! ராமனே சிறந்த வில்லாளி. வீரியம், பலம், மேன்மை முதலியவற்றிற் சிறப்பிடமானவன். அவனை ஒருவராலும் கொல்ல முடியாது. வானரர்கள் இறந்ததாகச் சொல்வதும் பொருந்தாது. அவர்கள் மரங்களைப் பிடுங்கிக்கொண்டு சண்டை செய்யும் தன்மையர். அன்றியும் தேவேந்திரனால் தேவதைகள் பாதுகாக்கப்படுவது போல் ராமனால் நன்கு பாதுகாக்கப்பட்டிருப்பவர். ஆகையால் அவர்களைக் கொல்வதும் சாத்தியமன்று. ராமன் புருஷ ச்ரேஷ்டனாகையால் எப்படிப்பட்ட தசையில் இருப்பினும் அவனைக் கொல்வதற்கு எள்ளளவும் உபாயம் புலப்படவில்லை. 'ஆயின் அவன் தலையும் வில்லும் எங்ஙனம் அகப்பட்டன?' என்னில், மாயாவியான ராவணன் ராமனது தலையைப் போலும் வில்லைப் போலும் தன் மாயையினால் செய்து அவற்றை உனக்குக் காட்டி உன்னைத் தன் வசமாக்குவதற்குச் செய்ததேயன்றி வேறில்லை. அவன் இங்கிருக்கும்பொழுது ப்ரஹஸ்தனும் மந்திரிகளும் கூப்பிடுவதாக அழைக்கப்பட்டானல்லவா? அதன் காரணத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக. இப்பொழுது ராம லக்ஷ்மணர்கள் அளவில்லாத வானர சைன்னியங்களுடன் சமுத்திரத்தைத் தாண்டி லங்கையின் கோட்டைவாயிலில் வந்திருக்கின்றனர். அவர்களது வருகையால் பீதியடைந்த ராவணன் தக்க ஆலோசனை செய்வதற்கே மந்திரிகளுடன்

சென்றனன். ஸீதே! அதோ பேரி வாத்தியங்களும், முரசங்களின் சப்தமும் கேட்கின்றன பார். யுத்தம் செய்வதற்காக ராவணனது கட்டளையினால் ராக்ஷசர்கள் கூட்டம் கூட்டமாய் தேர்களிலும், குதிரைகளிலும், யானைகள் மேலும் ஆரோகித்துச் செல்லும் சத்தங்களைக் கேட்பாயாக. ராமன் கொலையுண்டிருப்பின் இப்படிப்பட்ட பரபரப்பும் ரணபேரி வாத்தியங்களின் ஓசையும் ஏற்படமாட்டாதன்றோ? ஜானகீ! இனி உன் கஷ்டங்கள் தொலைந்தன. ராமன் நிச்சயமாக யுத்தத்தில் ராவணனையும் அரக்கர்களையும் கொல்லப் போகின்றனன். தேவேந்திரனது மடியில் இந்திராணி உட்காருவதுபோல் நீ ராமனது மடியில் வீற்றிருக்கப் போகின்றனை. அப்பொழுது உன் முக மலர்ச்சியைக் கண்டு நான் சந்தோஷிக்கப் போகிறேன். கல்யாணீ! பரந்த மார்பையுடைய ராமன் உன்னிடம் வந்து கலந்து, உன்னைக் கட்டியணைக்கையில் நீ அவனது மார்பில் ஆனந்தத்தினால் விளையும் கண்ணீர்களைப் பெருக்கப் போகின்றனை. பயிர்களோடு கூடின பூமி நல்ல மழை பெய்யப்பெற்று விளக்க முறுவதுபோல் நீ ராமனுடன் கூடி அவன் பராக்கிரமத்தைக் கண்டு மிகுந்த சந்தோஷம் அடையப் போகின்றனை. நீ ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனை வணங்குவாயாக. இந்த தேவன் சமஸ்த உயிர்களுக்கும் விரோதிகளைத் தொலைத்து வெற்றியைக் கொடுக்கக் கூடியவன்" என்றனள். ... ... (33.)

34. சரமை ராவணனது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு சீதையிடம் வந்து சொல்லுதல்.

ஸீதை ராவணனது வார்த்தைகளினால் வஞ்சிக்கப்பட்டு வருத்தமுற்றிருக்கையில், சரமை தான் மொழிந்த நல்ல வார்த்தைகளால் ஆகாயம் நீரினால் பூமியைக் குளிரச் செய்வதுபோல் அவளை சந்தோஷப்படுத்தினள். பிறகு சரமை ஸீதையை நோக்கி "ஸீதே! உனது சௌக்கியத்தின்பொருட்டு நான் எங்கு வேண்டுமென்றாலும் எவர்க்கும் தெரியாமல் செல்வேன். நான் ஆகாயத்தில் செல்லும்போது என்னைப் பின் தொடர்ந்து வருவதற்கு வாயுவாயினும், கருடனாயினும் சமர்த்தரல்லர்" என்றனள். அப்பொழுது ஸீதை சரமையை நோக்கி "நேசியே! எனக்கு நன்மை செய்யவேண்டுமென்று உனக்கு விருப்பமுளதாயின், உனக்கு இந்நினைவு திடமாய் இருக்குமாயின் நீ ராவணனிடம் சென்று அவன் என்ன செய்கிறானென்பதைத் தெரிந்து கொண்டு வருவாயாக. அவன் என் விஷயத்தில் என்ன செய்ய நிச்சயித்திருக்கிறான் என்பதைக் கண்டு வருவாயாக" என்றனள். உடனே சரமை ஒருவர்க்கும் தெரியாமல் ராவணனது மந்திராலோசனை சபையை அடைந்து அங்கு பேசப்பட்ட சமஸ்த வார்த்தைகளையும் உற்றுக் கேட்டு மீண்டும் ஸீதையை அடைந்தனள். ஸீதை அவளைத் தழுவி யணைத்து உட்கார வைத்தனன். அப்பொழுது சரமை பேசத் தொடங்கி "ஸீதே! ராவணனது தாயான கைகஸியும், வயது சென்றவனான அவித்தனென்னும் மந்திரியும் உன்னை விட்டுவிடும்படி ராவணனுக்குப் பெரிய புத்திமதிகள் கூறினர். அவர்கள் ராவணனை நோக்கி 'நீ ராமனுக்குத் தகுந்த மரியாதைகளுடன் ஸீதையைக் கொண்டுபோய்க் கொடுத்து விடுவாயாக. அப்படி நீ செய்யாவிடில் உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பெரிய அனர்த்தம் விளையும். ஜனஸ்தானத்தில் அவன் அற்புதமாகச் செய்த கரதூஷணாதிகளின் வதமாகிற ஒன்றே இதற்குச் சான்றாகும். அது அப்படி இருக்கட்டும். சமுத்திரம் தாண்டுவதும், ஸீதையைக் காண்பதும், ராக்ஷசர்களெல்லோரையும் ஒருவனே யுத்தத்தில் கொல்லுவதுமாகிய இந்தச் செயல்களை அவனது வேலைக்காரனான ஒரு அனுமான் செய்தனனே! இது போதாதோ?' என்று கூறினர். அப்பொழுதும் ராவணன் உன்னை விடுவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஸீதே! ராவணன் தன் மந்திரிகளுடன் இங்ஙனம் நிச்சயித்துக் கொண்டிருக்கிறானாகையால், யுத்தத்தில் மரணமடைந்தாலல்லது உன்னை விடப் போவதில்லை. ராமன் தப்பாமல் யுத்தத்தில் கொடிய பாணங்களால் ராவணனைக் கொன்று உன்னை மீட்கப்போகிறான்" என்றனள். இங்ஙனம் சரமை சொல்லிக் கொண்டிருக்கையில் அவளது வார்த்தை உண்மையென்பதற்கு அறிகுறியாக பேரிவாத்தியத்தின் முழக்கமும் சங்க வாத்தியங்களின் துவனிகளும் நிறைந்த வானர சைன்னியங்களின் சிம்மநாதமும் செவியிற்பட்டுக் குளிர்ந்தது. ... ... (34.)

35. மலியவான் ராமனுக்கு சீதையைச் சமர்ப்பிப்பதே நியாயமென்று ராவணனுக்குப் போதித்தல்.

அப்பொழுது ராமன் சங்கத் துவனிகளும் பேரி வாத்தியத்தின் சப்தங்களும் 'இன்னது இனையது' என்று தோன்றாமல் ஒரே கோஷமாகக் கிளம்பும்படி செய்துகொண்டு லங்கையின் மேல் எதிர்த்துச் சென்றனன். ராவணன் அந்த சப்தங்களைக் கேட்டுச் சிறிது பயந்து மந்திரிகளைக் கூட்டி ஆலோசித்தனன். அவன் அவர்களை நோக்கி "நீங்கள் பயங்கரமான பராக்கிரமமுடையவராய் இருந்தும், ராமனது சைன்னியங்களைக் கண்டு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு உத்சாகமற்றிருப்பதற்கென்ன காரணம்?" என்றனன். அப்பொழுது ராவணனுக்குப் பாட்டனோடுகூடப் பிறந்தவனும், மிகவும் மதியுள்ளவனுமான மாலியவான் என்னும் ராக்ஷசன் ராவணனை நோக்கி "ராஜனே! ஓரரசன் தன் விரோதியின் பலத்தைக் காட்டிலும் தன் பலம் குறையப் பெற்றிருப்பினும், தன் விரோதியின் பலத்தினோடு சமமான பலமுடையனாயிருப்பினும், தான் அப்படிப்பட்ட விரோதியுடன் நட்புக் கொள்ளவேண்டும். அவ்வரசன் தன் பகைவனைக் காட்டிலும் பலமுள்ளவனாயின் அவனோடு விரோதம் பாராட்டவேண்டும். ராவணா! நீதி சாஸ்திரத்தில் இங்ஙனம் சொல்லியிருப்பதால், பலம் குறைந்திருக்கப் பெற்ற நீ பலவானான ராமனுடன் சமாதானம் செய்துகொள்வதே எனக்கு சம்மதமாய் இருக்கிறது. ஆகையால் ஸீதையைக் கொடுத்து விடுவாயாக. ராவணா! தேவரிஷிகள், கந்தருவர் முதலிய அனைவரும் ராமனுக்கு ஜயம் உண்டாக வேண்டுமென்று விரும்புகின்றனர். அப்படிப்பட்ட தேவபலமுடைய ராமன் பலவானாகையால் அவனோடு விரோதம் வைத்துக்கொள்ளவேண்டாம். தேவாதிகள் ராமனது ஜயத்தை விரும்புவதற்கென்ன காரணம்? என்னில்; பிரமதேவன் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அவலம்பமாக தர்மம், அதர்மம் என்கிற இரண்டையும் சிருஷ்டித்தனன். அவ்விரண்டில் நல்லியற்கையுடைய தேவர்கள் தர்மத்தையும், துஷ்ட குணமுடையவர்களான ராக்ஷசர்களும் அசுரர்களும் அதர்மத்தையும் அங்கீகரித்தனர். இங்ஙனம் தேவாதிகள் தர்ம பக்ஷத்தைக் கைப்பற்றியிருப்பது பற்றியும், ராமனும் தர்மத்தைக் கைப்பற்றியிருப்பதனாலேயும் தேவதைகள் அந்த ராமனிடம் பக்ஷபாதிகளாகையால், அவன் மிகுந்த பலவானாயிருக்கின்றனன். பத்துத் தலையனே! நம்மினத்தவர்களான ராக்ஷசர்கள் காடுகளில் திரிந்து பரிசுத்தர்களான மகரிஷிகளுக்குச் செய்யும் தீங்குகள் அளவற்றவையாகையால் அந்த ரிஷீச்வரர்கள் ஓயாமல் அக்கினிஷ்டோமம் முதலிய யாகங்களைச் செய்வதும் வேதங்களை ஓதுவதுமாய் இருக்கின்றனர். அவர்கள் அங்ஙனம் செய்வதால் ராக்ஷசர்கள் அவர்களை அணுக முடியாமல் நான்கு திசைகளிலும் பயந்து ஓடிப்போகின்றனர். இன்னும் அந்த ரிஷிகள் ஹோமஞ் செய்கின்ற அக்கினிகளினின்று கிளம்பும் புகைகள் பத்துத் திசைகளிலும் பரவி ராக்ஷசர்களின் பலத்தைக் குறைக்கின்றன. அவர்கள் செய்யும் தவமகிமையினால் ராக்ஷசர்கள் தபிக்கப்படுகிறார்கள். இங்ஙனம் நமது அதர்மங்களால் ரிஷிகளுக்குண்டான கோபம் நம்மை நாசம் செய்து தேவாதிகளுக்கு பலத்தை வளரச் செய்கின்றது. நீ தேவதைகள், தானவர்கள், யக்ஷர் முதலானவர்களால் மரணம் நேராதிருக்கும்படி வரம் பெற்றனை. இப்பொழுது பலிஷ்டர்களும் மகா பராக்கிரமசாலிகளுமான மானிடர்களும், வானரர்களும் கரடிகளும், கொண்டை முசுக்களும் பெரிய சைன்னியத்துடன் இவ்விடம் வந்து கர்ஜிக்கின்றனர். உனக்கு இவர்களிடத்தில் மரணம் விளையாதபடி வரமில்லை. தசக்கிரீவனே! அதுமட்டுமல்ல. ராக்ஷசர்களுக்கு விநாசம் விளையப் போகிறதென்று தெரிவிக்கிற பல பயங்கரமான கெட்ட சகுனங்களையேனும் நீ கவனிக்கவேண்டும். மேகங்கள் கொடிய சப்தங்களுடன் கர்ஜித்துக்கொண்டு லங்கை முழுவதும் ரத்தங்களைப் பெய்கின்றன. குதிரை முதலிய வாகனங்கள் ரோதனம்செய்துகொண்டு கண்ணீர்களைப் பெருக்குகின்றன. நரிகள் பயங்கரமாக ஊளையிடுகின்றன. இன்னும் இவைபோன்ற கெட்ட சகுனங்களை நீ காணவில்லையோ? இந்த ராமன் கேவலம் மானிடனல்லன். விஷ்ணு தேவனே அரக்கர்களைக் கொல்ல மானிட உருவம் தாங்கி வந்திருக்கின்றனனென்று தோன்றுகிறது. ஆகையால் அவனுடன் சமாதானம் செய்து கொள்வாயாக" என்றனன். ... (35)

36. ராவணன் லங்கையைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யல்.

ராவணனுக்கு மரணகாலம் சமீபித்து விட்டமையால் மாலியவான் சொன்ன இதமான வசனங்களை ஏற்றுக்கொள்ளாமல் மிகுந்த கோபத்துடன் அவனை நோக்கி "கிழவனே! ராமன் ஓர் மானிடனுகையால் அற்பபலமுடையவன். குரங்குகளை சகாயமாகக் கொண்டமையால் நல்ல பலமில்லாதவன். தந்தையால் துரத்தப்பட்டு வந்தவனுகையால் ராஜ்ஜியமில்லாதவன். நானோ ராக்ஷசர்களுக்கெல்லாம் அதிபதி. தேவர்களுக்கும் பயத்தை விளைவிப்பவன். எல்லாவித பராக்கிரமங்களாலும் குறைவற்றிருக்கின்றனன். இப்படிப்பட்ட என்னை நீ குறைந்தவனுகப் பேசின காரணம் என்ன? எனது ராக்ஷச ஜாதியில் இத்தகைய வீரன் இருக்கிறான் என்னும் துவேஷத்தினுலா? பகைவர்களிடத்திலுள்ள பக்ஷபாதத்தினுலா? பயத்தினுலா? நீ சொல்லியவை யனைத்தும் உண்மையாய் இருப்பினும் லக்ஷ்மீதேவியைப்போன்ற சீதையை ராமனுக்கு பயந்து நான் கொடுக்கமாட்டேன். பாட்டனே சீக்கிரத்தில் அந்த ராம லக்ஷ்மணர்கள் சமஸ்த வானர சைன்னியங்களுடன் என்னால் நாச மடையப்போவதை நீ காணப்போகின்றனை" என்று கூறிச் சிறிது கோபம் குறையப்பெற்று வயதுசென்ற பாட்டனை அங்ஙனம் கோபமாகப் பேசி அவமதித்ததைப் பற்றி சிறிது பச்சாத் தாபங்கொண்டு மீண்டுமவனை நோக்கி "ராமனே வந்து என்னை பயப்படுத்தி என்னை இருதுண்டுகளாக வெட்டினும், ராமனுக்கே அன்று; மற்ற எப்படிப்பட்டவனுக்கும் வணங்கமாட்டேன். இது என் ஜன்மத்தில் பிறந்த குணமாகையால் விடத்தக்கதன்று" என்றனன். பிறகு மாலியவான் தான் செய்த உபதேசம் பயன்படாமைக்கு லஜ்ஜைப்பட்டு விடைபெற்றுக் கொண்டு தன் வீட்டிற்குப்போயினன். பிறகு ராவணன் லங்கைக்குக் கிழக்கு வாசற்படியில் பிரகஸ்தனையும், தெற்கு வாசற்படியில் மகாபார்சுவனையும், மேற்கு வாசற்படியில் இந்திரஜித்தையும் அநேக ராக்ஷசர்களுடன் பாதுகாவல் புரியும்படி ஆஞ்ஞாபித்தனன். வடக்கு வாசற்படியில் சுகசாரணர்களை நியமித்து தானும் அங்கேயே இருப்பதாக மொழிந்தனன். பட்டணத்தின் நடுவிலுள்ள குல்மத்தில் விரூபாக்ஷன் என்னும் ராக்ஷசனை அநேக ராக்ஷசர்களுடன் இருக்கும்படி ஏற்பாடு செய்தனன். ... ... (36.)

37. ராமன் வானர சைன்னியங்களுக்குப் பாதுகாப்புகளை ஏற்பாடு செய்தல்.

ராமன், லக்ஷ்மணன், சுக்கிரீவன், விபீஷணன், அங்கதன் முதலியோர் ஒன்றுகூடி ராவணனை ஜயிப்பதற்குத் தக்க ஆலோசனைகளைச் செய்யத்தொடங்கினர். அப்பொழுது பக்ஷிரூபம் தரித்து விபீஷணன் ஆஞ்ஞையால் லங்கைக்குச் சென்று திரும்பிவந்த அவனது நான்கு மந்திரிகளும் ராவணன் யுத்தத்திற்காகச் செய்திருக்கும் சகலவித ஏற்பாடுகளையும் தாங்கள் நேரில் கண்டபடி விஸ்தாரமாகக் கூறினர். லங்கையின் நான்கு வாயில்களிலும் கோடிக் கணக்கான ராக்ஷச வீரர்கள் கணக்கற்ற பலவிதமான ஆயுதங்களுடன் காவல்புரிந்து வருவதைத் தாங்கள் கண்டபடி கூறினர். உடனே ராமன் உரத்த குரலில் வானரர் அனைவர்க்கும் கேட்கும்படி "நீலன் பல வானரர்களுடன் கூடி லங்கையின் கீழ் வாசலில் சென்று பிரகஸ்தனுடன் சண்டை செய்வானாக. அங்கதன் தெற்கு வாசற்படிக்குச் சென்று மஹா பார்சுவனைத் துன்புறுத்துவானாக. அனுமான் கோடி வானரர்களால் சூழப்பட்டு மேற்கு வாசற்படிக்குச் சென்று இந்திரஜித்துடன் யுத்தம் செய்வானாக. வடக்கு வாயிலிலுள்ள ராவணனையும் சுகசாரணர்களையும் நானே லக்ஷ்மணனுடன் கூடி எதிர்த்து யுத்தம் செய்கிறேன். சுக்கிரீவனும் ஜாம்பவானும் விபீஷணனும் ஆகிய இம்மூவரும் ராவணனிருக்கும் வடக்கு வாசலுக்கும் இந்திரஜித்து இருக்கிற மேற்கு வாசலுக்கும் இடையிலிருந்துகொண்டு அனுமானுக்கும் எனக்கும் சகாயம் செய்வார்களாக. எல்லா வானரர்களும் இனி இப்பொழுது இருக்குமாறு மானிட உருவம் தரித்திருக்கலாகாது. நமது ஜனங்களில் நம்முடையவரென்று தெரிவதற்கு வானரர்களாய் இருக்கையே நமக்கு அடையாளமாகும்" என்று கூறிவிட்டு சுவேல பர்வதத்தின் தாழ்வறை மிகுதியும் அழகாய் இருப்பதைக் கண்டு அதன் மேலேற விருப்பங்கொண்டனன். (37.)

38. ராமன் லங்கையைப் பார்க்கும்பொருட்டு சுவேல பர்வதத்தின் மேலேறுதல்.

பிறகு ராமன் லக்ஷ்மணன் பின் தொடர்ந்து வரப்பெற்று சுவேல பர்வதத்தின்மேல் ஏற நினைத்து சுக்கிரீவ விபீஷணர்களை நோக்கி "நாம் எல்லோரும் இந்த சுவேல பர்வதத்தின்மேல் ஏறி இன்றிரவெல்லாம் இதன்மேல் தங்கியிருந்து ராவணனது பட்டணமாகிய லங்காபுரியைக் காண்போம். அப்படுபாவி சீதையைக் கொண்டுபோயினனல்லவா? அவனொருவனைப் பற்றியே யன்றோ இதர ராக்ஷசர்களையும் கொல்ல நேருகிறது" என்றிங்ஙனம் கூறிக்கொண்டே சுவேல பர்வதத்தின் மேலேறினன். அப்பால் சுக்கிரீவன், வீபீஷணன், அனுமான், அங்கதன் முதலிய வானர சிரேஷ்டர்களும் அவனைப் பின்பற்றி ஏறினர். பிறகு மற்றுமுள்ள பல வானரர்களும் மிகுந்த வேகத்துடன் கூட்டங் கூட்டமாய் அம்மலையின் மேலேறினர். சீக்கிரத்தில் அந்த ராமாதிகள் அந்த சுவேல பர்வதத்தின் நாற்புறத்திலும் மேலேறி, திரிகூட பர்வதத்தின் சிகரத்தில் ஆகாயத்தில் தொங்குவதுபோல் புலப்படுகின்ற லங்காபுரத்தைக் கண்டனர். அப்பொழுது கறுத்த ராக்ஷசர்கள் லங்கையின் பிராகாரத்தின் குறடுகளைச் சுற்றி நின்று அப்பொழுதுதான் கட்டப்பட்ட மற்றொரு பிராகாரம்போல் பிரகாசிக்கையில் அதை வானரோத்தமர்கள் கண்டனர். அப்பொழுது சூரியன் அஸ்தமித்தனன். அந்த ராமாதிகள் அன்றிரவு சுவேல பர்வதத்தின் நுனியில் சுகமாக வாசஞ்செய்துகொண்டிருந்தனர். ... ... (38.)

39. ராமன் லங்காபுரியைக் காணுதல்.

அதன் மறுநாள் பொழுது விடிந்தவுடன் அவ்வானரர்கள் லங்கையிலுள்ள அழகிய அரண்மனைகளையும், உத்தியான வனங்களையும், கோபுரங்களையும், மண்டபங்களையும், குளங்களையும் கண்டு 'தேவேந்திரனுடைய நகரமான அமராவதியோ? அல்லது குபேரனுடைய பட்டணமோ?' என்று ஐயமுற்று ஆச்சரியமடைந்தனர். சில வானர வீரர்கள் சுக்கிரீவனுல் கட்டளையிடப்பெற்று லங்காபுரிக்குப் போயினர். அவர்களுடைய காலடிகளால் கிளம்பின தூள் ஒரு நிமிஷத்திற்குள் ஆகாயத்தில் பரவிச் சென்றது. லங்கையின் வனங்களிலுள்ள கரடிகளும், சிம்மங்களும், பன்றிகளும், யானைகளும், எருமைக்கடாக்களும் வானரர்களது சிம்மநாதங்களைக் கேட்டவுடன் மிகவும் பயந்து மூலைக்கு ஒன்றாக ஓடின. இங்ஙனம் போய்க்கொண்டிருக்கிற அவ்வானரர்களுக்கு திரிகூட பர்வதத்தின் மூன்று சிகரங்களில் ஒன்றாகிய நடுச்சிகரம் புலப்பட்டது. ஆகாயத்தையளாவி மிகவும் உயர்ந்த அச்சிகரம் நூறு யோசனை அகன்று நிர்மலமாகிப் பார்க்க மிகவும் அழகாயிருந்தது. மற்றும் அது மழமழப்புற்றதும் ரமணீயமாயிருப்பதுமான காந்தி விளங்கப்பெற்று பக்ஷிகளுக்குங்கூட ஏற முடியாததாய் இருந்தது. ராவணனுடைய நகரமான லங்கை அச்சிகரத்தின்மேல் நூறு யோசனை விஸ்தாரமுடையதும் முப்பது யோசனை நீளமுடையதுமாக ஏற்பட்டிருந்தது. அந்த லங்கா நகரமானது வெளுத்த மேகம் போன்ற உயர்ந்த கோபுரங்களாலும் பொன் மயமான மதில்களாலும் வெள்ளி மயமான மாடமாளிகைகளாலும் அலங்கரிக்கப்பட்டு மிகவும் அழகு திகழப்பெற்று விளங்கியது. நகரத்தின் நாற்சந்தி வீதியின் நடுவில் ஆயிரம் ஸ்தம்பங்களால் அலங்கரிக்கப்பட்டு உயர்ந்து கயிலாயத்தை நிகர்த்த ராவணனது கண்போன்ற சிறந்த மாளிகை ஒன்று விளங்கியது. அதை எப்பொழுதும் குறையாமல் நூறு ராக்ஷசர்கள் பாதுகாத்துக்கொண்டிருப்பர். இங்ஙனம் மனத்திற்கு மிகவும் இனியதாகி நல்ல அடவிகளும் விளையாடுவதற்குரிய மலைகளும் விசித்திரமான உத்தியான வனங்களும் அமைந்து விளக்கமுற்றிருப்பதும், பலவகை ராக்ஷசர்கள் வசிக்கப்பெற்றதும் எல்லா பதார்த்தங்களும் நிறைந்து விளங்குவதுமான லங்காபுரத்தை ராமன் வானரர்களுடன் கண்டு ஆச்சரியமுற்றனன். ... ... (39.)

40. சுக்கிரீவனும் ராவணனும் துவந்தயுத்தம் செய்தல்.

அப்பொழுது ராமன் அந்த லங்காபுரியின் கோபுரத்து நுனியில் ராவணன் இருக்கக் கண்டனன். அவனுடைய இரண்டு பக்கங்களில் இரண்டு வெண்சாமரங்களும், தலைமேல் வெற்றியை விளைவிக்கும்படியான வெண்கொற்றக் குடையும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. சுக்கிரீவன் ராவணனைப் பார்த்தவுடனே 'ராமனுக்கெதிரில் துர்ப்புத்தியாகிய இவன் ராஜோப

சாரத்துடன் எங்ஙனம் இருக்கலாகும்?' என்று கோபத்தின் மிகுதியால் விரைந்து மனோபலமும் தேக பலமும் மிகப்பெற்று வானரர்களும் ராமனும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அப்பர்வத சிகரத்தினின்று ராவணனிருக்கும் கோபுரத்திற்குக் கிளம்பினன். சுக்ரீவன் ராவணனை நோக்கி "அடே! ராக்ஷசா! நான் லோகநாதனாகிய ராமனது நண்பனும் வேலைக்காரனுமான சுக்ரீவனென்பவன். உன்னுடன் சண்டை செய்ய வந்துளேன்" என்று கூறிக்கொண்டே அவனது கிரீடங்களைப் பிடித்து இழுத்துத் தரையில் விழும்படி தள்ளித் தானும் கீழே குதித்தனன். மீண்டும் மேலே கிளம்பித் தன்மேல் எதிர்த்துவரும் அந்த சுக்ரீவனை ராவணன் மிகுந்த கோபத்துடன் கைகளால் பிடித்துத் தரையில் விழத்தள்ளினன். சுக்ரீவன் பந்துபோல் எழும்பித் தனது இரு கைகளாலும் ராவணனை இழுத்துத் தள்ளினன். பிறகு அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் முட்டிகளால் குத்துவதும், உள்ளங் கைகளால் அறைவதும், முழங்கைகளால் இடிப்பதும் நகங்களால் பீறுவதுமாகிப் பல வகைகளில் கடூரமான மல்லயுத்தஞ் செய்தனர். பின்னும் அவ்விருவரும் நெடுநேரம் மல்லயுத்தஞ் செய்து பிறகு மேலெழும்பிக் குதிப்பதும், ஒருவரையொருவர் பிடித்திழுப்பதும் கைகளாலும் கால்களாலும் பின்னிக்கொள்வதுமாகி ஒருவர்க்கொருவர் தேகங்களை அழுந்தக் கட்டிக்கொண்டே மதிலுக்கும் அகழிக்கும் இடையில் வீழ்ந்தனர். மறுபடியுமெழுந்து ஒருவரையொருவர் பிடித்து மேல் தூக்கித் தரையில் தள்ளுபவராகி இங்ஙனம் பலவிதமாகவும் விசித்திரமாகவும் நெடுநேரம் அமராடினர். பிறகு மண்டலகதி முதலான பலவகைப் போர்த் துறைகளைப்பற்றி யுத்தஞ் செய்தனர். அப்பால் அவ்விருவரும் விசித்திரமான வகையில் வட்டமாயோடுவதும், பலவாறு நிற்பதும் வளைந்து வளைந்தோடுவதும், முன் செல்வதும், பின் வருவதும், குறுக்கே செல்வதும், இடசாரி வலசாரியாகச் செல்லுவதும் எதிரியின் அடி தன்மேல் படாதபடி சாதுரியமாக விலகுவதும், ஒருவன் நிற்க மற்றொருவன் அவனைச் சுற்றியோடுவதும், ஒருவனை யொருவன் எதிர்த்து விரைந்தோடுவதும், உடம்பை ஒடுக்குவதும் விரிப்பதுமாகி மெதுவாகச் செல்வதும், தவளை போற் செல்வதுமாகிய பலவகை வழிகளில் சென்று ஒருவரையொருவர் வெல்ல வழி பார்த்தனர். இங்ஙனம் சண்டை செய்து கொண்டிருக்கும்போது ராவணன் இளைப்புற்று எங்குப் பார்க்கிலும் ராவணனாகவே தோற்றுவிக்கும்படியான தன் மாயா பலத்தைக் காண்பிக்கத் தொடங்கினன். ஜயசீலனான சுக்ரீவன் அவனது நினைவை யறிந்து சிறிதும் இளைப்படையாமல் வெற்றி வீரனாகவே ஆகாயத்தில் கிளம்பி, கபடத்தில் நுழையாமல் தர்ம யுத்தத்திலேயே ராவணனைக் கொல்ல வல்லவனாயினும், அது ராமனது காரியமாதலால் அங்ஙனம் செய்யாது ராமனை யடைந்தனன். ராவணன் சுக்ரீவன் மீளவும் வருவானென்று ஏமாறி அங்கேயே நின்றுகொண்டிருந்தனன். ... ... (40.)

41. ராவணனிடஞ் சென்று மிக்க சாகசஞ் செய்துவந்த சுக்ரீவனிடத்து ராமன் தனது உள்ளன்பைத் தெரிவித்தலும், ராம சைன்னியங்கள் அணிவகுக்கப் பெறுதலும், அங்கதன் தூதுசென்று பிரபல காரியங்கள் செய்து வருதலும்.

ராமன் சுக்ரீவனைக் கட்டியணைத்து "என்னுடன் ஆலோசிக்காமல் இப்படிப்பட்ட பெரிய சாகசம் செய்தனையே. ராவணனால் உனக்கு என்ன தீங்கு நேருகிறதோ வென்கிற அச்சத்தினால் நானும் விபீஷணனும் பரிதவித்தனம். இனிமேலாயினும் இப்படிப்பட்ட சாகசம் செய்யாதிருப்பாயாக. ஏனெனில், உனக்கு ஏதேனும் கெடுதி நேரிடுமாயின், எனக்கு சீதையாலாவது, லக்ஷ்மணனாலாவது, பரதனாலாவது, சத்துருக்கனனாலாவது விளையும் பிரயோஜனமென்? சுக்ரீவா! சற்றுமுன்பு நீ வராதிருக்கும்போது உனது பராக்கிரமம் எனக்குத் தெரிந்திருப்பினும், உன்னிடத்திலுள்ள அன்பின் மிகுதியால் 'உனக்கு அபாயம் விளையுமோ? என்னவோ?' என்று சங்கித்து, அப்படி ஒருக்கால் நேர்ந்தால் ராவணனைக் கொன்றபின் விபீஷணனுக்கு லங்கையில் முடி சூட்டி குலதர்மம் இடையில் அழிந்து போகாதபடி அயோத்திக்குச் சென்று பரதனை ராஜ்ஜியத்தில் நிறுத்தி, பிறகு என் தேகத்தை விடவேண்டுமென்று இங்ஙனம் மனதில் எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன்" என்றனன். சுக்ரீ

வன் ராமனைப்பார்த்து "ரகுகுல வீரனே! ராமா! உனக்குப் பணிசெய்வதே எனக்கு ஸ்வரூபமாய் இருக்க நீ இங்ஙனம் கூறுவதழகோ? நான் செய்த காரியம் ஒரு வேலைக்காரன் தன் எஜமானனுக்குச் செய்யவேண்டிய காரியமே யன்றி வேறல்லவே" என்றனன். பிறகு ராமன் லக்ஷ்மணனை நோக்கி "லக்ஷ்மணா! நாம் பெரிய இவ்வானர சைன்னியங்களை அந்தந்த வானர சேனாபதிகளுக்கு வெவ்வேறாகப் பங்கிட்டுக் கொடுத்து, கருடவியூகம் முதலிய வியூகங்களால் ஒழுங்கு படுத்திக்கொண்டிருப்போம். மிகப் பெரிய வீரர்களான கணக்கற்ற வானரர்களுக்கும் ராக்ஷசர்களுக்கும் விநாசம் நேருமென்டதை அறிவிக்கின்ற பயங்கரமான சகுனங்களைக் காணுகின்றோம். காற்று வேகமாய் வீசுகின்றது. பூமி நடுங்குகின்றது. பர்வத சிகரங்கள் அல்லாடுகின்றன. மரங்கள் காரணமில்லாமலே முறிந்து விழுகின்றன. மேகங்கள் ரத்தமழைகளைப் பெய்கின்றன. அமங்களமாக குள்ளநரி முதலிய மிருகங்களும், கழுகு பருந்து முதலிய பறவைகளும் பலஹீனமான குரலில் கத்துகின்றன. சந்திரன் இரவில் வெப்பத்தை விளைவிக்கின்றனன். சீக்கிரமாக சைன்னியங்களுடன் லங்கைக்குச் செல்வோமாக" என்றனன். அப்பால் விடியற்காலையில் ராமன் வில்லைத்தரித்துப் பெரிய சைன்னியம் சூழ்ந்துவரப்பெற்று லங்காபுரத்தைக் குறித்துச் சென்றனன். விபீஷணன், சுக்ரீவன், அனுமான், ஜாம்பவான், நலன், சுஷேணன், நீலன், லக்ஷ்மணன் ஆகிய இவர்கள் ராமனைப் பின் சென்றனர். பிறகு அனைவரும் சீக்கிரத்தில் லங்கையை யடைந்து தம் தமக்குச் சொன்ன இடங்களைக் கடவாமல் விடுதிகளை ஏற்படுத்திக்கொண்டு இறங்கினர். ராமன் வில்லைத்தரித்து லக்ஷ்மணனுடன் கூடி, லங்கையின் வடக்கு வாசற்படியைத் தன் சேனையைப் பிறர் துன்புறுத்தாதபடி பாதுகாத்துக்கொண்டு தகைந்தனன். ராமன் அந்த வடக்கு வாயிலுள்ள வேதிகையின்மேல் ராக்ஷசர்கள் வைத்திருக்கிற நானாவிதமான பல ஆயுதங்களையும் கவசங்களையும் கண்டனன். நீலன் கிழக்கு வாசலில் மைந்தனோடும் துவிவிதனோடும் கூடி நின்றிருந்தனன். அங்கதன், ருக்ஷன், கவாக்ஷன், கஜன், கவயன் ஆகிய இவர்களோடு கூடித் தெற்கு வாசற்படியைத் தடுத்து நின்றனன். அனுமான் பிரமாதியோடும், பிரகசனோடும் மற்றும் பல வானரர்களோடும் கூடி மேற்கு வாசலில் காத்துக்கொண்டிருந்தனன். சுக்ரீவன் சகல வானரர்களோடும் கூடி பலிஷ்டர்களான ராவண இந்திரஜித்துக்களுடன் யுத்தம் செய்கிற ராமன் அனுமான் ஆகிய இருவரில் எவர்க்கு வேண்டினும் சகாயம் செய்யும்பொருட்டு வடக்கு வாசலுக்கும் மேற்கு வாசலுக்கும் மிடையில் மிக்க அவதானத்துடன் இருந்தனன். இங்ஙனம் புகழ்பெற்ற வானரசேனா வீரர்களின் கீழ்ப்படிந்து நடப்பவரான முப்பத்தாறுகோடி வானரர்கள் லங்காபுரியைத் தகைந்துக்கொண்டு நின்றனர். அவ்வானர வீரர்கள் ஒவ்வொரு வாசலிலும் ஒவ்வொரு கோடி வீதம் நிற்கும்படி ஆஞ்ஞாபிக்கப்பட்டனர். பிறகு அவர்கள் கோரப் பற்களுடன் கூடின பெரும்புலிகள் போன்று மரங்களையும் பருவத சிகரங்களையும் பெயர்த்துப் பிடித்துக்கொண்டு மிகுந்த உத்சாகத்துடன் யுத்தம் செய்யத் தயாராக இருந்தனர். அவர்களில் சிலர் பத்து யானை பலமுடையவர்களும், சிலர் நூறு யானை பலமுடையவர்களும் ஆயிரம் யானை பலமுடையவர்களும், சிலர் ஓகக்கணக்குடைய யானைகளின் பலமுடையவர்களும், மற்றும் சிலர் இவ்வளவு அவ்வளவென்று அளவிட முடியாத பலமுடையவர்களுமாயிருந்தனர். இங்ஙனம் அவ்வானர வீரர்களால் அந்தத் திரிகூட பர்வதமெல்லாம் நாற்புறத்திலும் சூழப்பட்டிருந்தது. அப்பொழுது ராமன் அங்கதனை நோக்கி "நீ ராவணனிடம் சென்று நான் சொன்னதாக இங்ஙனம் சொல்லுவாயாக; 'அடே! ராக்ஷசா! உனது செல்வமும், பிரபுத்துவமும், பிழைக்கும் விருப்பமும், அறிவும் சீக்கிரத்தில் நாசமடையப் போகின்றன. நீ கர்வமுற்று ரிஷிகளுக்கும், தேவதைகளுக்கும், கந்தருவர்களுக்கும் அப்சரஸ்திரீகளுக்கும், நாகங்களுக்கும், யக்ஷர்களுக்கும், அரசர்களுக்கும் எந்தெந்த அபகாரம் செய்தனையோ, அதற்கெல்லாம் மூலகாரணமான பிரமாவின் வரத்தினாலுண்டான கொழுப்பெல்லாம் இப்பொழுது நிச்சயமாக அழியப் போகிறது. தேவதைகளும் மகரிஷிகளும் உன்னால் என்ன துன்பமடைந்தார்களோ அந்தத் துன்பத்தை நீ என்னால் அடையப் போகின்றனை. ராக்ஷசாதமா! மாரீசனது மாயையால் என்னை அப்புறம் போகச்செய்து எந்த பலத்தைக்கொண்டு சீதையை அப

கரித்தனையோ அந்த பலத்தையெல்லாம் இப்பொழுது காட்டுவாயாக. இப்பொழுது நீ சீதையைக் கொடுத்து என்னை சரணமடையாவிடில் எனது கொடிய பாணங்களால் உலகம் முழுவதிலும் ராக்ஷசன் ஒருவனும் இல்லாது முடியும்படி செய்துவிடுகிறேன்: விபீஷணன் என்னைச் சரணமடைந்தமையால் சீக்கிரத்தில் லங்கைக்கு அரசனாகப் போகின்றனன். நீ சீதையைக் கொடுத்துச் சரணமடைவாயாயின் விபீஷணனுக்கு ராஜ்ஜியங் கொடுத்து உன்னை உயிரோடு விடுவேன் இல்லாவிடில் தைர்யத்தை ஊன்றி, வீரியத்தையும் கைப்பற்றி என்னுடன் யுத்தம் செய்வாயாக. நீ யுத்தத்தில் என் பாணங்களாலடிக்கப்பட்டு மரணம் அடைந்து அதனால் பாவங்களைத் துறந்து பரிசுத்தனாவாய். அப்படியன்றி நீ பறவை யுருவமெடுத்து மனோவேகத்துடன் மூன்று லோகங்களுக்குப் போயினும், என் கண்களில் பட்டபின். பிராணனோடு திரும்பிப்போக வல்லனல்லை. இனி உகைத்தில் ஒரு ராக்ஷசனைக் கூட பிழைத்திருக்கும்படி விடமாட்டேனாகையால் உனக்கு சாவுச் சடங்குகளைச் செய்பவன் எவனுமே இருக்கமாட்டான். ஆகையால் இப்பொழுது நீயே உனக்கு மரணச் சடங்குகளைச் செய்துகொள்வாயாக. நீ சாகப் போகிறாயாகையால் இப்பொழுதே லங்கை முழுவதையும் நன்கு பார்த்துக் கொள்வாயாக' என்று சொல்லு'' என்றனன். உடனே அங்கதன் ஆகாயத்தில் கிளம்பி ஒரு முகூர்த்த காலத்தில் ராவணனது அரண்மனையை யடைந்து, அங்கு மந்திரிகளுடன் உட்கார்ந்திருக்கின்ற ராவணனைக் கண்டனன். முதலில் தன் ஊரையும் பெயரையும் தெரிவித்து பிறகு அனைவர்க்கும் கேட்கும்படி ராவணனை நோக்கி ராமன் மொழிந்த வார்த்தைகளனைத்தினையும் ஒன்றுகூட விடாமல் கூறினன். இங்ஙனம் அவன் கூறுகையில் ராவணன் கோபத்தினால் கண்கள் சிவக்கப்பெற்று அவ்வங்கதனைக் கொல்லும்படி மந்திரிகளுக்குக் கட்டளையிட்டனன். உடனே நான்கு ராக்ஷசர்கள் அவனைப் பிடித்துக்கொள்ள, அவர்களைத் தன் இரு கரங்களாலும் பக்ஷிகளைப்போல் இறுகப் பிடித்துக்கொண்டு பர்வதம் போன்ற மாளிகையின்மேல் கிளம்பினன். அந்த ராக்ஷசர்கள் ராவணன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அவ்வங்கதனுடைய வேகத்தினால் ஆகாயத்தினின்று உதறப்பட்டு பூமியில் விழுந்தனர். பிறகு அங்கதன் ராவணனுடைய உயர்ந்த அவ்வழகிய மாளிகையைக் காலால் உதைக்க, அது பல சுக்கல்களாகப் பிளந்து பூமியில் விழுந்தது. உடனே அங்கதன் ஆகாயத்தில் வேகமாய்க் கிளம்பி சீக்கிரத்தில் வானர சைன்னியத்தை யடைந்து ராமனது பக்கத்தில் நின்றனன். ராவணன் தனது அழகிய உயர்ந்த மாளிகை அங்ஙனம் முறிந்ததற்கு மிகவும் வருந்தினன். பிறகு வானரர்களெல்லோரும் சுக்கிரீவனது கட்டளைப்படி லங்கையைச் சுற்றிலும் வளைத்துக்கொண்டு தகைந்தனர். இங்ஙனம் லங்கையில் இறங்கி சமுத்திரக் கரையோரம் வரையிலும் நிறைந்திருக்கிற பல நூறு அக்ஷௌஹிணிக் கணக்குடைய அவ்வானர சைன்னியங்களைக்கண்டு தீரர்களான சில ராக்ஷசர்கள் ஆச்சரியமுற்றனர். தீரரல்லாதவர் பயமடைந்தனர். சிலர் யுத்த விருப்பத்தினால் சந்தோஷமடைந்தனர். மதிலுக்கும் அகழிக்கும் இடையிலுள்ள இடமெல்லாம் வானரர்களால் சூழப்பட்டு, மிகுதியும் வானரர்கள் நிறைந்திருக்கையால் அது வானரமயமான மற்றொரு மதில்போல் தீனர்களான ராக்ஷரர்களுக்குப் புலப்பட்டது. ராக்ஷசர்களெல்லோரும் பயத்தினால் உடம்பு தெரியாமல் 'ஹா! ஹா!!' என்றனர். ... ... (41.)

42, 43. வானரர்களுக்கும் ராக்ஷசர்களுக்கும் யுத்தாரம்பம்.

ராவணன் லங்காபுரத்தை வானரர்கள் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு தடுப்பதைக் கேள்விப்பட்டு மிகவும்கோபமுற்று மாளிகையின் மேலேறிக் கணக்கிடமுடியாத வானர சைன்னியங்களைக் கண்டு அவர்களை எங்ஙனம் முடிக்கலாமென்று சிந்தித்துக் கொண்டிருந்தனன். வானரர்கள் பர்வத சிகரங்களையும், பெரிய மலைத்துண்டங்களையும், கைகளில் ஏந்திக்கொண்டும், நானாவித மரங்களைப் பிடுங்கி எடுத்துக்கொண்டும் யுத்தத்திற்கு ஆயத்தமாயிருந்தனர். உடனே ராமனது கட்டளையினால் அவ்வானரோத்தமர்கள் மரங்களாலும் மலைச் சிகரங்களாலும், முட்டிகளாலும், லங்கையின் மதில் சிகரங்களையும் உத்தியான வனங்களையும், பட்டணத்து வாயிற் படிகளையும் முறித்துச் சிதைத்துப் பாழ்செய்தனர். பின்னும் மண் புழுதிகளை

யும் மலைச் சிகரங்களையும் புற்களையும் கட்டைகளையும் போட்டுத் தெளிந்த ஜலமுடைய அகழிகளைத் தூர்த்துவிட்டனர். அவர்கள் பெரிய மதில்கள் மேலேறி வாயிற்படிகளை இடிப்பதும், கோபுரங்களை இடிப்பதும் இங்குமங்கும் கிளம்பிப் போவதும் வருவதும் கர்ஜனை செய்வதுமாகியிருந்தனர். கவாக்ஷனென்னும் கொண்டை முசு வீரன் கோடி கொண்டை முசுக்களால் சூழப்பட்டு ராமனது பக்கத்தில் நின்றனன். தூம்ரன் பயங்கரமான கோடி கரடிகளோடுகூடி ராமனது அருகில் நின்றனன். பிறகு ராவணனது கட்டளையினால் கணக்கற்ற ராக்ஷச வீரர்கள் கத்தி கோடாலி முதலிய ஆயுதங்களைத்தரித்து பேரி வாத்தியங்கள் பயங்கரமாக முழங்க யுத்தம் செய்யக் கிளம்பினர். பலிஷ்டர்களான ராக்ஷசர்கள் செய்யும் சிம்மநாதங்கள் சங்கத்துவனிகளோடும் யானைகளின் கீங்காரங்களோடும், குதிரைகளின் கனைப்புகளோடும், ரதங்களின் சக்கரக்கட்டுகளுடைய சப்தங்களோடும் மற்ற ராக்ஷசர்களின் இரைச்சலோடும் கூடி பூமியிலும் ஆகாயத்திலும் சமுத்திரம் முழுவதிலும் எதிரொலி உண்டாகும்படி வியாபித்தன. கிளம்பின ராக்ஷசர்கள் பளபளவென்று விளங்குகிற கதைகளாலும் கத்திகளாலும் சூலங்களாலும் கோடாலிகளாலும் வானரர்களை யடித்தனர். வானரர்கள் மரங்களையும் மலைச் சிகரங்களையும் வீசியெறிந்தும் நகங்களால் பிறியும் பற்களால் கடித்தும், ராக்ஷசர்களைத துன்புறுத்தினர். அப்பொழுது அங்கதன் இந்திரஜித்தோடும், விபீஷணனுடைய மந்திரி சம்பாதியென்பவன் பிரஜங்கனென்னும் ராக்ஷசனுடனும், அனுமான் ஜம்புமாலியோடும், விபீஷணன் மித்திரக்னன் என்னும் ராக்ஷசனுடனும், கஜன் தபனனோடும், நீலன் நிகும்பனோடும், சுக்கிரீவன் பிரகஸ்னனோடும், லக்ஷ்மணன் விரூபாக்ஷனோடும், ராமன் அக்கினிகேது, ரச்மிகேது, ஸுப்தக்னன், யஜ்ஞகோபன் ஆகிய இந்நால்வருடனும் யுத்தம் செய்தனர். மைந்தன் வஜ்ஜிரமுஷ்டி யென்பவனோடும், துவிவிதன் அசனிப்ரபன் என்பவனோடும், நலன் பிரதபனென்பவனுடனும், சுஷேணன் வித்தியுன்மாலியோடும், நானாவிதமான யுத்தங்கள் செய்தன. அந்த யுத்தத்தில் வானரர்களுடையவும் ராக்ஷசர்களுடையவும தேகங்களினின்று தலை மயிர்களே வேலமபாசியாகவும், கைகால் முதலிய அவயவங்களே கட்டைக் குவியல்களாகவும் பெற்ற ரத்தப் பிரவாகங்களாலாகிய நதிகள் பெருகின. இந்திரஜித்து பெரிய கதையினால் அங்கதனையடித்தனன். அங்கதன் இந்திரஜித்தினுடைய பொன்மயமான தேரையும் சாரதியையும் குதிரைகளையும் மடியும்படி அடித்தனன். ஜம்புமாலி சக்தியை எடுத்து அனுமானது மார்பைப் பிளந்தனன். அனுமான் விரைவுடன் ஜம்புமாலியின் ரதத்தின மேலேறி அவ்வரக்கனுடன் கூடவே அந்த ரதத்தை உள்ளங்கையால் அறைந்தனன். பிரதபனன் பாணங்களால் நலனை நலிந்தனன். நலன் மிகுந்த கோபங்கொண்டு அவனது கண்களைப் பிடுங்கியெறிந்தனன். சுக்கிரீவன் பிரகஸனை ஒரு எழில் பாலைமரத்தினால் அடித்து முடித்தனன். ராமன் தன்னை யெதிர்த்துவந்த நான்கு ராக்ஷசர்களையும் சில பாணங்களை யெய்து கொன்றனன். மைந்தன் வஜ்ஜிரமுஷ்டியைக் கொன்றனன். வித்தியுன்மாலி சுஷேணனை அடித்து அடிக்கடி சிமமநாதம் செய்தனன். அப்பால் சுஷேணன் ஒரு பெரிய மலைச் சிகரத்தை வீசியெறிந்து அவனது ரதத்தை விரைவில் முறித்துத் தள்ளினன். பின்னுமொரு மலைச்சிகரத்தை வீசி யெறிந்து அவ்வித்தியுன்மாலியை முடித்தனன். இங்ஙனம் சூரர்களான அவ்வானரர்கள் வீரர்களான அவ்வரக்கர்களை தேவதைகள் அசுரர்களைப்போல் துவந்துவ யுத்தத்தில் நன்கு துன்புறுத்தினர். தேவாசுர யுத்தத்தை நிகர்த்த அநத யுத்தத்தில் வானரர்களுடையவும், ராக்ஷசர்களுடையவும் முண்டங்கள் நாற்றிசைகளிலும் உயரக் கிளம்புவதும் விழுவதுமாய் இருந்தன. அப்பொழுது ராக்ஷசர்கள் வானர வீரர்களால் பிளக்கப்பட்டு சரீரம் முழுவதும் ரத்தம் பெருகப்பெற்றுத் தமக்குப் பலத்தைக் கொடுப்பதான சூரிய அஸ்தமயத்தை எதிர் பார்த்துக்கொண்டு மீளவும் பலத்துடன் பெரிய யுத்தம் செய்யத் தயாராகவிருந்தனர். ... ... (42, 43.)

44. ராத்திரி யுத்தம்.

சிறிது நேரத்திற்குள் சூரியன் அஸ்தமித்தனன். இரவு நேரத்தில் ராக்ஷசர்களுக்கு வலிவு அதிகப்படுமாகையால் அவர்கள் மிகுந்த தீரத்துடன் வானரர்களை யெதிர்த்தனர். பயங்

காப்பக
2084231

…ின் மிகுதியால் வானரர்கள் ராக்ஷசர்களென்று மயங்கி வானரர் கரயான அவ்விரவில் இருளாலென்று ராக்ஷசர்களையும், கண்மண் தெரியாமல் தம்மினத்த களையும், ராக்ஷசர்கள் வானரர்களென…ர். அந்த இருட்டில் கறுத்த சரீரமுடையவரும் வர்களைத்தாங்களே அடித்துக்கொண்ட… மேகங்களுடன் கூடின பர்வதங்கள்போல் பொன் கவசம் பூண்டிருப்பவருமான ராக்ஷசர்க… தின்றுகொண்டு யுத்த பூமியில் விளங்கினர். அவர்கள் மிகுந்த வேகத்துடன் வானரர்க… மேற்கிளம்பிக் கூரான தமது சஞ்சரித்தனர். வானரர்களும் மிகுந்த கோபமுடையவர்களாகி பற்களால் குதிரைகளையும் துவஜங்களை (கொடிகள்)யும் கிழித்தனர். …ணும் அவர்கள் கோபத்தினால் மெய்மறந்தவராகி யானைகளையும் யானைமேலிருப்பவர்களையும் ரதங்களையும் இழுத்துப் பற்களால் கடித்து இங்ஙனம் யுத்தத்தில் ராக்ஷச சைன்னியத்தைப் பலவாறு கலக்கினர். ராம லக்ஷ்மணர்கள் கொடிய சர்ப்பங்கள் போன்ற பலபல பாணங்களால் கணக்கற்ற ராக்ஷசர்களை கொன்றனர். யுத்தபூமியில் ரத்தவெள்ளம் ஆறுபோலோடியது. வானரர்களாலடிக்கப்பட்டுக் கூச்சலிடுகிற ராக்ஷசர்களுடையவும் ராக்ஷசர்களால் இம்சிக்கப்பட்டு இரைச்சலிடுகின்ற வானரர்களுடையவும் மிடறுரோசைகள் பயங்கரமாய்க் கிளம்பின. பிறகு பயங்கரமான அவ்வந்தகாரத்தில் ராக்ஷசர்கள் பாண மழைகளைப் பெய்து ராமனையே எதித்தனர். ராமன் ஒரு நொடிப்பொழுதில் அந்த ராக்ஷசர்களில் அறுவரை ஆறுபாணங்களாலடித்தனன். யமசத்துருவும், மஹாபார்சுவனும், மஹோதரனும் வஜ்ஜிரதம்ஷ்ட்ரனும், ராவணனால் வடக்கு வாசற்படியில் காவலிருக்கும்படி கட்டளையிடப்பட்ட சுகஸாரணர்களும் ஆகிய இவ்வரக்கர்களறுவரும் ராமனால் மருமஸ்தானங்களில் (உயிருக்குச் சீக்கிரத்தில் அபாயம் விளைவிக்கக்கூடிய இடங்களில்) பாணங்கள் எய்யப்பட்டு மிகவும் வருந்தி முதுகுகாட்டி ஓடினர். ராமன் அவ்விருட்டில் அக்கினி ஜ்வாலைகள்போல் விளங்குகிற பாணங்களைப் பரப்பி வெளிச்சம் உண்டாகச் செய்தனன். ராமனை எதிர்த்து நின்ற மற்ற ராக்ஷசர்களனைவரும் நெருப்பில் விழும் விட்டில் பூச்சிகளைப்போல் நாசம் அடைந்தனர். கொண்டைமுசுக்கள் ராக்ஷசர்களை இருகரங்களாலும் அழுந்தக் கட்டிக்கொண்டு தின்றன. அப்பொழுது அங்கதன் தன்னுடன் யுத்தம் செய்துகொண்டிருந்த இந்திரஜித்தின் சாரதியையும் குதிரைகளையும் நாசம் செய்து அவனையும் கொல்வதற்கு மிகவும் பயங்கரமான யுத்தம் செய்ய ஆரம்பிக்கையில், இந்திரஜித்து அவனெதிரில் நிற்கமுடியாமல் திடீரென்று ஆகாயத்தில் மறைந்துவிட்டனன். இது கண்ட வானரர்களனைவரும் இந்திரஜித்து தோல்வியடைந்து ஓடிவிட்டதாக நினைத்து 'நல்லது, நல்லது' என்று சந்தோஷப்பட்டனர். பாபிஷ்டனான அவ்விந்திரஜித்து மாயாவியாகையால் கண்ணுக்குப் புலப்படாதவனாகி மிகுந்த கோபாவேசத்துடன் ராமனையும் லக்ஷ்மணனையும் சர்ப்பங்களின் உருவமுடைய பயங்கரமான பாணங்களால் ஸமஸ்த அவயவங்களிலும் துன்புறுத்தினன். மேலுமவன் கபடயுத்தம் செய்ய முயன்று மாயையை உண்டுபண்ணி ஒருவருக்கும் புலப்படாதவனாகி யுத்தத்தில் ராமலக்ஷ்மணர்களை மதிமயங்கச் செய்து அவர்களை சர்ப்பங்களின் உருவமுடைய பாணங்களால் துன்புறுத்தினன். இங்ஙனம் துஷ்டனான இந்திரஜித்து ராமலக்ஷ்மணர்களை எதிரில் நின்று எதிர்க்கமுடியாமல் மாயையை உண்டாக்கி அவர்களை நாகாஸ்திரங்களால் கட்டிவிட எண்ணங் கொண்டனன். … … … … (44.)

45. இந்திரஜித்து நாகபாசங்களால் ராம லக்ஷ்மணர்களை பந்தஞ் செய்தல்.

ராமன் மாயாவியான இந்திரஜித்து இருக்குமிடம் தெரியவிரும்பி வானர சேனாபதிகள் பதின்மருக்குக் கட்டளையிட்டனன். அங்ஙனமே அங்கதன், நீலன், சரபன், விநதன், ஜாம்பவான் முதலிய பத்து சேனாபதிகளும் பெரிய மரங்களைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு பத்து திக்குகளிலும் இந்திரஜித்தைத் தேடும்பொருட்டு ஆகாயத்தில் கிளம்பினர். இந்திரஜித்து சிறந்த பாணங்களால் அவர்களை வாட்டினன். அவ்வானர வீரர்கள் மிகுந்த பலமுடையவராயினும் அவனது பாணங்களால் சரீரங்கள் பிளக்கப்பெற்று மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியனைப்போல் இருட்டிலிருக்கிற இந்திரஜித்தைக் கண்டிலர். அச்சமயம் அம்மாயாவி ராம லக்ஷ்மணர்களையே குறிவைத்து சர்ப்பரூபமுடைய கொடிய பாணங்களைப் பிரயோகித்தனன்.

அங்ஙனம் பாண உருவமுடைய சர்ப்பங்களால் அடிக்கப்பட்ட ராம லக்ஷ்மணர்களின் குருதி வெள்ளம் பெருகிவந்தது. அவர்களது உடலில் ஊசி நாட்டவும் இடமில்லாதிருந்தது. அந்த ராம லக்ஷ்மணர்களிருவரும் பாணங்களால் கட்டுண்டு ஒரு க்ஷணத்திற்குள் கண்ணெடுத்துப் பார்க்கவும்கூடச் சக்தியற்றவராயினர். கூரான பாணங்களின் நுனிகள் சமஸ்த அவயவங்களிலும் நன்கு பாய்ந்து விட்டபடியால் அவர்கள் மிகவும் நடுங்கிக் கயிறறுந்து விழுகின்ற துவஜங்கள் (கொடிகள்)போல் தரையில் விழுந்தனர். அவ்வீரர்களிருவரும் பாணரூபங்களான சர்ப்பங்கள் உடம்பு முழுவதும் பின்னிக்கொள்கையால் கட்டுண்டு ரத்தவெள்ளத்தில் நனைந்து வீரர்களின் படுக்கையாகிற யுத்த பூமியில் படுத்து மனவருத்தமுற்றுச் சரீரம் முழுவதும் நோவெடுக்கப்பெற்றிருந்தனர். அவர்களது அவயவங்களில் பாணங்களினால் பிளக்கப்படாத ஓரங்குலம் இடங்கூட இல்லை. அவர்கள் மிகுந்த வேகத்துடன் ரத்தத்தை அளவில்லாமல் பெருக்கினர். வானரர்கள் அவர்களைக் கண்டு மிகுதியும் பரிதாபமடைந்தனர். அனுமான் முதலிய வீரர்கள் நாகபாசங்களால் கட்டுண்டு விழுந்துகிடக்கிற ராம லக்ஷ்மணர்களைச் சூழ்ந்து நின்று மிகவும் துக்கித்தனர். … … … (45.)

46. வானரர்கள் துக்கித்தலும் இந்திரஜித்து தன் வெற்றியை ராவணனுக்கு மொழிதலும்.

சற்றுநேரம் யுத்தம் ஓய்ந்திருக்கும் சமயத்தில் ராமனிருக்கிற அந்த இடத்திற்கு விபீஷணனும் சுக்கிரீவனும் வந்து திகைத்து வருந்தினர். அங்ஙனம் வீரசயனத்தில் படுத்து இடையிடையில் (சிறிது கைகாலசைத்தல் முதலிய) சேஷ்டையுடையவரும் உடம்பு முழுவதும் பாணங்கள் நிறைந்திருப்பவரும், நினைவு தவறி விழுந்திருப்பவருமான ராமலக்ஷ்மணர்களை வானர வீரர்களனைவரும் விபீஷணனோடுகூட நாற்புறங்களிலும் சூழ்ந்து, கண்ணும் கண்ணீருமாயிருந்து மிகவும் வருந்துபவராயினர். இந்திரஜித்து இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க விபீஷணன் தானும் மாயையைக் கைப்பற்றி ஆகாயத்தில் கிளம்பினன். சிறிது நேரத்தில் பாவியான இந்திரஜித்தைக் கண்டனன். இந்திரஜித்து தன்னுடைய நாகாஸ்திரங்களினால் ராம லக்ஷ்மணர்கள் கட்டுண்டு படுத்திருப்பதைக் கண்டு, மிகுந்த சந்தோஷமடைந்து ராக்ஷசர்களை உத்சாகப்படுத்திக்கொண்டு அவர்களை நோக்கி "கரதூஷணன் முதலிய பதினாலாயிரம் ராக்ஷசர்களையும் வென்ற சூரர்களான ராமலக்ஷ்மணர்கள் என் பாணங்களால் அடியுண்டு கட்டுண்டு விழுந்து வருந்துவதைக் காண்பீர்களாக. தேவதைகள் அசுரர்கள் ரிஷிசமூகங்கள் ஆகிய எல்லோரும் ஒன்று சேர்ந்து வரினும் இவ்விருவரையும் இந்த நாக பாசங்களின் கட்டிலின்று விடுவிக்கமுடியாது. எவன்பொருட்டு என் தந்தை துக்கத்தினால் பரிதபித்து இரவு பகல் தூக்கம் உண்டாகப் பெறாமல் வருந்தினனோ, எவன் நிமித்தமாக லங்கையிலுள்ள பிரஜைகளனைத்தும் கலக்கமுற்றுத் தடுமாற்றமடைந்தனரோ, அப்படிப்பட்டவனை; நம்மெல்லாரையும் நாசம்செய்ய முயன்ற ராமனை நான் இதோ கொன்றுவிட்டேன். வானரர்கள் சமுத்திரத்தில் அணை கட்டினது முதலான அரிய செயல்களெல்லாம் வீணாயின" என்றனன். பிறகு அவ்விந்திரஜித்து மீண்டும் யுத்தம்செய்ய விரும்பி நீலனை ஒன்பது பாணங்களாலும், மைந்தன் துவிவிதன் இவ்விருவர்களில் ஒவ்வொருவனையும் மேலான மும்மூன்று பாணங்களாலும், ஜாம்பவானை ஒரு பாணத்தினாலும், அனுமானைப் பத்து பாணங்களாலும், கவாக்ஷனையும் அங்கதனையும் பற்பல பாணங்களாலும் அடித்து மிகவும் துன்புறுத்தினன். வானரர்களெல்லாம் அவனைக் கண்டஞ்சி ஓடினர். ராக்ஷசர்கள் அவனது வெற்றியைக் கண்டு வியந்தனர். பிறகு அவ்விந்திரஜித்து ராம லக்ஷ்மணர்களிருவரும் இப்படியப்படி அசையவும் மூச்சு விடவும் சக்தியற்றுத் தரையில் விழுந்திருப்பதைக் கண்டு இறந்தார்களென்று நினைத்துக்கொண்டு ஜயசீலனாக லங்கையுள் பிரவேசித்தனன். அப்பொழுது ராம லக்ஷ்மணர்களைக் கண்டு கண்ணும் கண்ணீருமாய்ப் புலம்பும் சுக்கிரீவனை விபீஷணன் நோக்கி "வீரனே! இங்ஙனம் நீ அழலாகாது. நமக்குப் புண்ணிய வசமான பாக்கியம் இருக்குமாயின் இவ்விருவரும் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கக் கூடும். நீ தைரியத்தைக் கைக்கொண்டு வேறு கதியின்றியிருக்கும் எனக்கு தைரியத்தை உண்டு பண்ணுவாயாக. தைரியத்தையும் தருமத்தையும் கைப்பற்றுகிற

வர்களுக்கு எப்பொழுதும் துர்மரணமுண்டாகாது'' என்றனன். உடனே விபீஷணன் தண்ணீர் கொண்டுவந்து சுக்கிரீவனது கண்களைத் துடைத்து மீண்டுமவனை நோக்கி "நண்பனே! இந்த ராம லக்ஷ்மணர்கள் மரணமடையவில்லை. அவர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்தவுடனே நமது பயத்தைப் போக்கடிப்பார்கள். இந்த நாகபாசம் ராமனைக் கொல்லவல்லதன்று. இது எப்படியெனில்? காந்தியின் பெருக்கு ராமனை விடாதிருக்கின்றது பார். இவ்வழகு மரணமடைந்தவர்க்கு ஒருபோதும் நேராது. ஆகையால் நான் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் மீளவும் குதிரச்செய்யும் வரையில் நீ தைரியத்தை ஏற்றுக்கொண்டு உன் சைன்னியங்களுக்கும் தைரியத்தை விளைவிப்பாயாக'' என்றனன். அப்பொழுது விபீஷணனைக் கண்ட வானரர்கள் அவனை இந்திரஜித்து என்று பிரமித்து பயத்தால் உடல் நடுங்கி ஓட யத்தனித்தனர். அவர்களை விபீஷணன் கூவியழைத்து "நான் இந்திரஜித்தல்லேன். விபீஷணனே யாவன்'' என்று கூறி அவர்களது பயத்தைப் போக்கினன். பிறகு இந்திரஜித்து சமஸ்த ராக்ஷச சைன்னியங்களும் சூழ வரப்பெற்று ராவணனையடைந்து அவனை வணங்கி "ராம லக்ஷ்மணர்களைக் கொன்றுவிட்டேன்'' என்று இந்த பெரிய செய்தியைக் கூறித் தான் அந்த ராம லக்ஷ்மணர்களை நாகபாசங்களால் பந்தித்து அசையாதிருக்கச் செய்து ஒளிப் பெருக்கையகற்றின வண்ணத்தையெல்லாம் நடந்தபடியே தெரிவித்தனன். ராவணன் சந்தோஷத்தையடக்க முடியாமல் ஆசனத்திலிருந்து விரைந்தெழுந்து புதல்வனை யழுந்தக் கட்டியணைத்தனன்.

47, 48. ராவணன் சீதைக்கு நாகபாசத்தால் கட்டுண்டிருக்கின்ற ராம லக்ஷ்மணர்களைக் காட்டலும், சீதை பலவாறு புலம்புதலும்.

பின்பு அனுமான் அங்கதன் நீலன் சுஷேணன் முதலிய வானர வீரர்கள் வந்து ராம லக்ஷ்மணர்களைச் சுற்றிச் சூழ்ந்து பாதுகாத்துக்கொண்டிருந்தனர். மற்ற வானர சேனாபதிகள் சேனைகளையெல்லாம் வியூகங்களாகப் பிரித்து நாற்புறத்திலும் மனவூக்கத்துடன் மரங்களைக் கைகளில் ஏந்தி ராக்ஷசர்கள் எவரும் வராதபடி பாதுகாத்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது ராவணனது கட்டளையினால் சீதைக்குக் காவலாய் இருந்த ராக்ஷச ஸ்திரீகளும் விபீஷணனது மகளான திரிசடையும் புஷ்பக விமானத்தில் சீதையை ஏற்றிக்கொண்டு அமர்க்களம் சென்று அடியுண்டு வீழ்ந்திருக்கிற ராம லக்ஷ்மணர்களைக் காட்டினர். சீதை தரையில் விழுந்துகிடக்கிற அந்த வானர சைன்னியத்தை யெல்லாம் கண்டனள். ராக்ஷசர்கள் மனத்தில் மிகவும் சந்தோஷமுற்றிருப்பதையும் வானரர்கள் ராம லக்ஷ்மணர்களுக்கருகில் துக்கித்திருப்பதையும் கண்டனள். சீதை ராம லக்ஷ்மணர்கள் பாணங்களால் பீடிக்கப்பட்டுக் கவசங்கள் முறிந்து விற்கள் நழுவி பாணங்களால் சமஸ்த அவயவமும் பிளக்கப்பெற்று பாணங்களாகிற படுக்கையில் படுத்திருக்கக் கண்டு மிகவும் வருந்தி வெகு நேரம் கதறினள். அவள் ராமனை நோக்கி "ஐயோ! ரகுகுல திலக! முன்பு என்னைப் பதிவிரதையென்றும், விதவையாகாளென்றும் கூறின சோதிடர்களின் மொழி இப்பொழுது பொய்யாயினவே! என்னை மாங்கல்யவதி என்று மொழிந்த ஞானிகளின் வாக்குப் பலியாதொழிந்ததே! இதோ என் பாதங்களில் பத்ம ரேகைகள் நன்குகப் புலப்படுன்றன. இந்த ரேகையுடைய பெண்மணிகள் மகாராஜனுக்கு மனைவிகளாகி அவருடன் ஸாம்ராஜ்ஜியத்தில் பட்டாபிஷேகம் பெறுவார்களென்று சொல்வார்களே! இவை என்னிடத்தில் ஏன் வீணாயினவோ? தௌர்ப்பாக்கியமுடைய பெண்டிர்கள் எந்த லக்ஷணங்கள் (அடையாளங்கள்) இருந்தால் விதவையாகிவிடுவார்களோ, அந்த கெட்ட அடையாளங்கள் எவ்வளவு தேடிப்பார்க்கினும் என்னிடத்தில் புலப்படவில்லையே. துவஜம், வஜ்ரம் முதலிய மற்றை ரேகைகளும், பத்மரேகைகளும் லக்ஷ்மீ விலாசத்தை வளர்ப்பவைகளாகி உண்மையான பெயருடையவைகளாய் இருக்குமென்று லக்ஷண சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்பொழுது ராமன் இறந்ததனால் என் விஷயத்தில் மாத்திரம் அவை பொய்யாயின. எனது தலை மயிர்கள் நுண்ணியவைகளும் ஏற்றக் குறைவில்லாதவைகளும், கறுத்தவைகளுமாய் இருக்கின்றன. புருவங்கள் ஒன்றோடொன்று சேராதிருக்கின்றன. என் பற்கள் இடைவெளியின்றி நெருக்கமாயிருக்கின்றன. எனது சமஸ்த அவயவங்களும் பருத்து

அழகாயிருக்கின்றன. இங்ஙனம் சமஸ்த சுப லக்ஷணங்களும் பொருந்திய எனது உருவத்தைக் கண்ட கற்றறிந்த பெரியோர்களும் சோதிடர்களும் என்னை சௌபாக்கியவதியென்றும், எனக்குக் கணவனுடன் சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் நடக்குமென்றும் மொழிந்தனரே! இப்பொழுது அவையெல்லாம் வீணாயினவே! ஐயோ! தேவேந்திரனை நிகர்த்த ராம லக்ஷ்மணர்களை மாயாவியான இந்திரஜித்து கபட யுத்தஞ் செய்து கொன்றனனே! நான் திக்கற்றவளாயினேனே! ராமனது கண்ணில்பட்ட பகைவன் எவ்வளவு மனோவேகமுடையவனாயினும் பிராணன்களோடு திரும்பிப்போக வல்லனல்லன். அப்படிப்பட்ட ராமனுங்கூட யுத்தத்தில் தம்பியும் தானுமாய் அடியுண்டு தரையில் விழுந்துகிடக்கின்றனனே! ஆகையால் இது தெய்வத்தின் செயலேயன்றி வேறில்லை. ஐயோ! எனது மாமியாரான கௌசலை இவ்விஷயத்தைக் கேட்டு எங்ஙனம் பொறுத்திருப்பள்?'' என்று புலம்பினள். இங்ஙனம் புலம்புகின்ற சீதையை திரிசடை என்கிற ராக்ஷசி தேற்றத் தொடங்கி "அம்மே! நீ துக்கப்படவேண்டாம், ராம லக்ஷ்மணர்கள் இன்னும் இறந்துபோகவில்லை. அதற்குரிய அநுபவசித்தமான காரணங்களுங் கூடச் சொல்லுகிறேன் கேள். ராம லக்ஷ்மணர்கள் இறந்திருப்பார்களானால் வானரர்களின் முகங்கள் இங்ஙனம் கோபாவேசமுடையனவாகவும், சந்தோஷத்தினால் தெளிவுற்றவைகளாகவும் இருக்கமாட்டா. மற்றும் அவர்கள் பிராணன்களை இழந்திருப்பார்களாயின், இந்த புஷ்பக விமானம் பரிசுத்தமாகையால் உன்னை இங்ஙனம் ஏற்றுக்கொண்டிராது. முக்கியனான பிரபு (ராமன்) இறந்து விட்டிருப்பானாயின், சைன்னியங்கள் யுத்தங்களை நடத்துபவனில்லாமல் தடுமாற்றமுற்றிருக்கும். இவ்வானர சேனையோ அங்ஙனம் புலப்படாமல் பரபரப்பின்றி பயமுறாமல் பலம் மிகப்பெற்று, பிழைத்திருக்கிறார்களாகையால் அந்த ராமலக்ஷ்மணர்களை மனவூக்கத்துடன் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது. சீதே! இவ்விருவரும் மூர்ச்சித்திருப்பினும் இவர்களின் முகக்காந்தியின் பெருக்கு சிறிதும் மாறாதிருக்கின்றது. இறந்தவர்களின் முகம் மிகவும் பயங்கரமாய் விகாரமாகக் காணப்படும். ஆகையால் இவர்கள் இறந்தார்களென்று நீ பிரமிக்கவேண்டாம். சீக்கிரத்தில் மூர்ச்சை தெளிந்து எழுந்து மிகுந்த வீரத்துடன் ராவணனைத் தொலைக்கப் போகிறார்கள்'' என்று கூறி அப்புஷ்பக விமானத்தைத் திருப்பி சீதையை மீண்டும் அசோகவனத்தில் கொண்டு விட்டனள். ... ... (47, 48.)

49, 50. ராமன் மூர்ச்சை தெளிந்து லக்ஷ்மணனைக் குறித்து வருந்துதலும், கருடன் வந்து நாகபாச விமோசனஞ் செய்தலும்.

பிறக, ராமன் பாணபாசங்களால் கட்டுண்டிருப்பினும் தீரனும் பலவானுமாகையால் மூர்ச்சை தெளிந்து, பக்கத்தில் ரத்தத்தில் நனைந்து முகம் வாடப்பெற்றிருக்கிற லக்ஷ்மணனைக் கண்டு துக்கத்தையடக்க முடியாமல் "ஐயோ! என் தம்பி யுத்தத்தில் தோல்வியடைந்து தரையில் படுத்திருக்க, நான் இப்பொழுது காணலானேனே! இனி எனக்கு சீதையால் பிரயோஜனம் என்? என் பிராணனும் இனி எதற்கு? பூலோகத்தில் தேடினால் சீதைக்கு நிகரான பெண்மணியை சம்பாதித்துக் கொள்ளலாம். அன்றி, உபகாரம் செய்பவனும் யுத்தத்தில் வெல்ல முடியாதவனுமான லக்ஷ்மணனைப் போன்ற தம்பியை மாத்திரம் பெறமுடியாது. இவன் மரணம் அடைவானாயின், நான் இவ்வானரர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே பிராணனை விடப்போகிறேன். நான் அயோதிக்குச் செல்வேனாயின் சுமித்திரைக்கு என்னவென்று சொல்லுவேன்? அவள் 'லக்ஷ்மணன் எங்கே?' என்று கேட்பின் நான் என்ன சொல்வேன்? ஐயோ! அவளுடைய பரிதாபத்தைக் கண்டு சகிக்க வல்லேனல்லேன். என்பொருட்டல்லவா லக்ஷ்மணன் உயிர் துறந்தாற்போல் மூர்ச்சித்திருக்கின்றனன்'' என்று புலம்பினன். மீண்டும் ராமன் சுக்கிரீவனை நோக்கி "நண்பனே! நான் இப்பொழுது லக்ஷ்மணனுடன் யமபுரத்திற்குச் செல்லப் போகிறேனாகையால் விபீஷணனை ராக்ஷச ராஜனாகச் செய்யாது போயினன். நான் அவனை இங்ஙனம் அரசனாக்குகிறேனென்று சொன்ன வார்த்தையும் பொய்யாகி என்னைத் தகித்துவிடும். சுக்கிரீவா! நீ இப்பொழுதே உன் சைன்னியங்களுடன் கிஷ்கிந்

தைக்குச் செல்வாயாக. நான் இறந்து போனது தெரிந்தால் ராவணன் உன்னைத் துரத்தியடிப்பான். ஆகையால் நீ அங்கதன், நலன், கஜன், கவாக்ஷன், ஜாம்பவான், மைந்தன், த்விவிதன் முதலிய வானர சேனாபதிகளோடு கிஷ்கிந்தைக்குச் செல்வாயாக. அவ்வானரோத்தமர்கள் என்பொருட்டு மிகவும் பயங்கரமான யுத்தம் செய்தனர். நான் மிகவும் அவர்களைப் பாராட்டி சந்தோஷிக்கின்றனன். நான் உனக்கு இதோ விடை கொடுக்கின்றேன்'' என்றனன். அனைவரும் அங்ஙனம் ராமன் புலம்புவதைக் கண்டு துக்கத்தினால் கண்கள் சிவக்கப் பெற்றுக் கண்ணீர்களைப் பெருக்கினர். அப்பொழுது விபீஷணன் கையில் கதையைப் பிடித்தவண்ணம் வானர சைன்னியத்தை யெல்லாம் நிலை நிறுத்தி வேகமாக ராமனிருக்குமிடத்திற்கு வந்தனன். அவனைக்கண்ட வானரர்கள் இந்திரஜித்தென்று நினைத்து பயத்தினால் நடுங்கி ஓடிப்போயினர். அப்பொழுது சுக்கிரீவன் அங்ஙனம் வானரர்கள் பயந்து ஓடுவதற்குக் காரணம் தெரியாமல் திகைத்தனன். பிறகு விபீஷணனால் காரணம் தெரிந்துகொண்டு பக்கத்திலுள்ள ஜாம்பவானை நோக்கி ''நீ சென்று ஓடுகிற வானரர்களைக் கூவியழைத்து 'வந்தவன் விபீஷணன்; இந்திரஜித்தன்று' என்று சொல்லி அழைத்து வருவாயாக'' என்றனன். பிறகு ஜாம்பவானால் அந்த வானரர்கள் பயம் நீங்கப்பெற்றுத் திரும்பி வந்தனர். அப்பால் விபீஷணன் ஜலம் கொண்டுவந்து ராமலக்ஷ்மணர்களின் கண்களைத் துடைத்து சோகத்தினால் மிகவும் வருந்தி ''இந்த ராமலக்ஷ்மணர்களோ கபடமில்லாமல் பராக்கிரமத்தை நிறைவேற்றுபவர்கள். ஆகையால் துராத்துமாவான இந்திரஜித்து ராக்ஷசர்களுக்குரிய குடிலபுத்தியால் இவர்களை வஞ்சித்தனன். ஐயோ! நான் எவர்களை நம்பி உயர்வடையலாமென்று விரும்பினேனோ அப்படிப்பட்ட ராமலக்ஷ்மணர்கள் தேகத்தை விடுவதற்காகப் பெரு நித்திரையில் இருக்கின்றனர், எனக்கு ராஜ்ஜியம் பெறவேண்டுமென்ற விருப்பமும் போயிற்று. இனி பிழைத்திருந்தால் எனக்கு விபத்து நேரிடும். ராவணன் தன் கருத்து ஈடேறப் பெற்றனன்'' என்று புலம்பினன். சுக்கிரீவன் விபீஷணனை அழுந்தக் கட்டிக்கொண்டு ''தர்மங்களை உணர்ந்தவனே! நீ லங்கா ராஜ்ஜியம் பெறுவாய். ராவணனது கருத்து நிறைவேறாது. ராமலக்ஷ்மணர்கள் இப்பொழுது சிறிது மூர்ச்சை யடைந்திருக்கின்றனரன்றி வேறல்ல. சீக்கிரம் மூர்ச்சை தெளிந்தெழுந்து ராவணனை ராக்ஷசக் கூட்டங்களுடன் கொல்லப்போகின்றனர்'' என்று தேறுதல் கூறினன். பிறகு சுஷேணன் சுக்கிரீவனை நோக்கி ''முன்பு தேவாசுரர்களுக்கு நடந்த மகாயுத்தம் எனக்குத் தெரியும். அப்பொழுது அசுரர்களின் மாயையால் மறைந்து அடிக்கப்பட்ட தேவதைகளில் சிலர் பாணங்களால் பீடிக்கப்பட்டு மூர்ச்சையடைந்தனர். பிருகஸ்பதி மந்திரங்கள் நிறைந்த மிருத சஞ்சீவினி முதலிய வித்தைகளாலும் மூலிகைகளாலும் அவர்களுக்குச் சிகிச்சை செய்தனர். அந்த ஔஷதிகளைக் கொண்டு வரும்பொருட்டு சம்பாதி, பனஸன் முதலிய வானரர்கள் மிகுந்த வேகத்துடன் பாற்கடலுக்குச் செல்வார்களாக, பாற்கடலினிடையில் சந்திரமென்றும், துரோணமென்றும் இரண்டு பர்வதங்களுண்டு. அவற்றில் தேவதைகளால் வைத்துக் காப்பாற்றப்பட்ட சஞ்சீவிகரணி, விசல்லியகரணி என்கிற திவ்விய மூலிகைகளைக் கொண்டுவரும் பொருட்டு அனுமான் வேகமாகப் பறந்து செல்வானாக'' என்றனன். இதற்குள் மின்னல்களோடு கூடின மேகங்களைப் பறக்கப்படிப்பதும், சமுத்திர ஜலங்களை உயரக்கிளம்பச் செய்வதுமாகி பூமி முழுவதையும் நடுங்கச் செய்வதுபோன்ற ஓர் பெருங்காற்று வீசியது. அது கருடனுடைய சிறகுகளின் காற்று. அந்தச் சிறகுகளிலிருந்து கிளம்பின பெருங்காற்றினால் லங்கையிலுள்ள பெரிய மரங்களெல்லாம் கிளைகள் முறியப்பெற்று வேர்களுடன் சமுத்திரத்தில் விழுந்தன. சர்ப்பங்களெல்லாம் நடுங்கின. சிறிதுநேரம் கழித்து மகாபலவானான கருடன் அங்குவந்து தோன்றினன். அவனது வருகையைக் கண்ட ராமலக்ஷ்மணர்களைச் சுற்றிக்கொண்டிருந்த பாண ரூபங்களான ஸர்ப்பங்களெல்லாம் பயத்தினால் ஓடிப்போயின. கருடன் வானரர்களால் பூஜிக்கப்பெற்று சந்திரபிம்பம் போன்ற ராமலக்ஷ்மணர்களது முகங்களைத் தடவிக் கொடுத்தனன். இங்ஙனம் கருடனால் தடவப்பட்டவுடனே அவ்விருவருடைய தேகங்களிலுள்ள ரணங்களெல்லாம் உலர்ந்து, தேகங்களும் சீக்கிரத்தில் சிறந்த நிறமுடையனவாகி

நிருநிருப்புற்றறைகளுமாயின. உடனே அவர்களுக்கு சிறந்த தேஜஸ்ஸும், வீரியமும் சரீர பலமும், காந்தியும், உத்சாகமும், விவேகமும் முன்பைவிட இரு மடங்கதிகமாக உண்டாயின. கருடன் அந்த ராமலக்ஷ்மணர்களை அன்புடன் தழுவி ஆலிங்கனஞ் செய்தனன். அப்பால் ராமன் கருடனை நோக்கி ''உனது அருளினால் நாங்களிருவரும் இப்பொழுது இந்திரஜித்தினால் உண்டான பெரிய கஷ்டத்தைத் தவிர்த்து, முன்போல் மிகுந்த பலமுடையவர்களாயினம். உன்னைப் பார்க்கில் எனது தந்தையான தசரத மகாராஜரையும் பாட்டனான அஜமகாராஜரையும் கண்டாற்போல என்மனம் மிகுதியும் தெளிவுற்றிருக்கின்றது. நல்ல அழகிய உருவமுடையவனாகி திவ்வியமான பூமாலைகளை யணிந்து, நல்ல சந்தனாதி வாசனைகளைப் பூசி, நிர்மலமான வஸ்திரங்களை உடுத்து உயர்ந்தழகிய ஆபரணங்களால் அலங்காரம் கொண்டிருக்கிற உன்னைப் பார்க்க ஆச்சரியமாய் இருக்கிறது. நீ யார்?'' என்று வினவினன். கருடன் மிகுந்த சந்தோஷத்துடன் கண்களில் நீர் பெருகப்பெற்று ''ராமா! உனக்கு நண்பனும் பிரியமானவனும், உனக்கு வெளியில் திரியும் பிராணன் போன்றவனுமான நான் கருடன் என்னும் பெயருடையவன். உங்களுக்கு உதவி செய்யும்பொருட்டு இவ்விடம் வந்துளேன். மாயாவியான இந்திரஜித்து பிரயோகித்த இந்த நாகபாச பந்தத்தை விடுவிப்பதற்கு தேவர்களும், அசுரர்களும், தானவர்களும், கந்தருவர்களும் மற்று எவரும் வல்லரல்லர். ராமா! நீயும் லக்ஷ்மணனும் பாக்கியமுடையவர். உங்களுக்கு யாதொரு பயமுமில்லை. உனக்கு நேர்ந்த இவ்விபத்தைக் கேள்விப்பட்டு உங்களிடத்திலுள்ள நட்பினால் இங்குவந்து உங்களை நாகபாசக் கட்டினின்று விடுவித்தேன். வீரர்களே! இனி நீங்கள் ராக்ஷசர்களிடத்தில் அவதானத்துடன் யுத்தம் செய்ய வேண்டும். அவர்கள் மாயச் செயல்களை யுடையவர்களாகையால் யுத்தத்தில் அவர்களைச் சிறிதும் நம்பலாகாது. ராகவா! 'எனக்கும் உனக்கும் எப்படி நட்பு?' என்பதைத் தெரிந்து கொள்ள இப்பொழுது விரும்பாதே. நீ யுத்தத்தில் ராவணனைக்கொன்ற பிறகு என்னைத் தெரிந்துகொள்வாய். நான் சென்று வருகிறேன். விடை கொடுப்பாயாக'' என்று கூறி நேயம் விளங்க ராமனை அணைத்துக்கொண்டு அவ்வானரர்களுக்கிடையில் ராமலக்ஷ்மணர்களை வலம் செய்து வணங்கிவிட்டு வாயுவைப்போல் ஆகாயத்தில் கிளம்பிப் போயினன். பிறகு வானர வீரர்கள் ராமலக்ஷ்மணர்கள் வருத்தம் நீங்கிச் சுகமாயிருப்பதைக் கண்டு சந்தோஷத்தினால் சிம்மநாதங்களைச்செய்து வால்களை உதறலாயினர். பேரிவாத்தியங்களை யடித்தனர். மிருதங்க வாத்தியங்களை முழக்கினர். சங்குகளை ஊதினர். இன்னும் பெரிய சத்தம் உண்டாகும்படி இரைச்சலிடுவதும் ராக்ஷசர்களுக்கு பயத்தை விளைவிப்பதுமாகி யுத்தம் செய்யத் தொடங்கி நானாவிதமான மரங்களைப் பிடுங்கிக் கையில் பிடித்துக்கொண்டு லங்கையின் வாசல்களைத் தகைந்தனர். ... ... (49, 50.)

51, 52 ராவணனது ஆஞ்ஞையால் தூம்ராக்ஷன் யுத்தம்செய்ய வந்து அனுமானால் அடியுண்டு மாளுதல்.

வானரர்களது மிகவும் கம்பீரமான சிம்மநாதங்களையும் இரைச்சலையும் கேட்ட ராவணனும் ராக்ஷசர்களும் வியப்புற்றனர். ராமலக்ஷ்மணர்கள் நாகபாசத்தினால் கட்டுண்டதால் வானரவீரர்கள் வருத்தமுற்றிருக்க வேண்டியிருக்க, இங்ஙனம் மிகுந்த உத்ஸாகத்துடன் பேரிரைச்சலிடுவதைக்கேட்டு ராவணன் சந்தேகமடைந்து சில மந்திரிகளை யனுப்பி அதன் காரணத்தை விவரமாகத் தெரிந்துகொண்டனன். ராவணன் ராமலக்ஷ்மணர்கள் மீண்டும் எழுந்திருந்து முன்னிருந்ததைவிட கம்பீரமாக நடந்து கட்டுத்தறியை அறுத்துக்கொண்ட மத்த கஜங்கள்போல் உலாவுவதை தன் மந்திரிகளின் மூலமாயறிந்து சிந்தையும சோகமும் மிகவும் மேலெழப்பெற்று முகம் விலவிலக்கப்பெற்று ''ஆ! என்ன ஆச்சரியம்! ஒருவராலும் விடுவிக்க முடியாத சிறந்த வரத்தின் மகிமையால் பிரயோகிக்கப்பட்ட இந்திரஜித்தின் நாகபாசங்களால் கட்டுண்டும் என் பகைவர் விடுவிக்கப்பட்டனரே! இனி ராக்ஷசர்களின் சைன்னியங்களுக்கெல்லாம் பிராண சந்தேகம் உண்டானாற்போலவே எனக்குத் தோன்றுகிறது. முன்பு பலதடவைகளில் யுத்தத்தில் எனது பகைவர்களின் பிராணன்களைத் தவறாமல் போக்கடித்த அந்த ஸர்ப்ப

பாணங்கள் கடைசியில் வீணாயினவே!" என்றனன். பிறகு ராவணன் சர்ப்பம்போல் பெருமூச்செறிந்துகொண்டு மிகுந்த பராக்கிரமமுடைய தூம்ராக்ஷன் என்னும் ராக்ஷசனைப் பார்த்து "நீ பெரிய ராக்ஷச சைன்னியத்தை யழைத்துக்கொண்டு சென்று ராமனையும் வானரர்களையும் கொன்று வருவாயாக" என்றனன். தூம்ராக்ஷனும் தாமதமின்றிக் ணக்கற்ற ராக்ஷச வீரர்களால் சூழப்பட்டுச் சிறந்த தேரிலேறி வானர சைன்னியங்களை நோக்கிச் சென்றனன். அவன் அனுமான் இருக்கிற மேற்கு வாயிலுக்குச் சென்றனன். அங்ஙனமவன் புறப்பட்டுச் செல்கையில் ஆகாயத்தில் திரியும் பறவைகள் பயங்கரமாக இரைச்சலிட்டன. ரதத்தின் நுனியில் மிகவும் பயங்கரமான ஓர் பெரிய கழுகு உட்கார்ந்து கத்தியது. ரத்தத்தினால் நனைந்த ஓர் பெரிய முண்டம் விகாரமான சப்தத்துடன் ரோதனம் செய்துகொண்டு தூம்ராக்ஷனுக்கெதிரில் தரையில் விழுந்தது. மேகம் ரத்த மழை பெய்தது. பூமி கிடுகிடுவென்று நடுக்கமுற்றது. அந்த தூம்ராக்ஷன் ராக்ஷசர்களுக்கு பயத்தை அறிவிப்பவைகளும் மகா கோரங்களுமான அந்த கெட்ட சகுனங்கள் உண்டாவதைக்கண்டு துக்கமுற்றனன். ராக்ஷசர்களெல்லாரும் துக்கத்தினால் ஒன்றும் தோன்றாதிருந்தனர். தூம்ராக்ஷன் அச்சகுனங்களைப் பொருள் செய்யாமல் ராக்ஷசர் பலர் சூழ்ந்து வரப்பெற்று வானர சேனையை நெருங்கினன். பிறகு வானரர்கள் மரங்களைக் கொண்டு ராக்ஷசர்கள் சூலம் முதலிய ஆயுதங்களைக் கொண்டும் ஒருவரையொருவர் பயங்கரமாக அடித்துக்கொண்டனர். ராக்ஷசர்கள் ஒன்று கூடி பயங்கரமான நானாவித பரிகங்களாலும் திரிசூலங்களாலும் நாற்புறத்திலும் வானரர்களை கண்டங்கண்டமாகச் செய்தனர். வானரர்கள் மரங்களையும் பெரிய கற்பாறைகளையும் மலைச் சிகரங்களையும் கொண்டு ராக்ஷசர்களையடித்துச் சாகும்படி விழத்தள்ளினர். சில ராக்ஷசர்கள் வானரர்களால் அடிக்கப்பட்டு வாயால் ரத்தத்தைக் கக்கினர். சிலர் உயிர் நீத்தனர். வானரர்கள் ராக்ஷசர்களை மரங்களாலடித்துத் திரள் திரளாகக் குவித்தனர். சிலரைக் கற்களால் சூரணம் செய்தனர். சிலரைப் பற்களால் கடித்துக் கிழித்தனர். சிலரை முட்டிகளால் குத்தியும், கால்களால் உதைத்தும், பற்களால் கடித்தும், மரங்களால் அடித்தும் துன்புறுத்தினர். இதனால் ராக்ஷசர்கள் வானரர்களுக்கு முன் நிற்கமுடியாமல் ஓடிப்போயினர். இவற்றைக் கண்ட தூம்ராக்ஷன் மிகுந்த கோபங்கொண்டு அளவற்ற பாணங்களைப் பிரயோகித்து வானரர்களை வாட்டினன். சில வானரர்கள் ராக்ஷசர்களால் அடியுண்டு பூமியில் விழுந்தனர். சிலர் ஈட்டியினால் குத்தப்பட்டு குடல்கள் வெளிப்பட்டு இறந்தனர். சிலர் ரத்தத்தைப் பெருக்கிக்கொண்டு உயிர் துறந்தனர். சிலர் பலிஷ்டர்களான ராக்ஷசர்களால் துரத்தப்பட்டு யுத்தத்தில் அவர்களுக்கெதிரில் நிற்க முடியாமல் ஓடிக் கண்ணுக்குப் புலப்படாமல் போயினர். தூம்ராக்ஷன் பாணங்களாகிய மழைகளைப் பெய்து வானரர்களை மூலைக்கு மூலை ஓடும்படி துரத்தினன். இப்படி வானரர்கள் பயந்தோடுவதைக் கண்ட அனுமான் மிகுந்த கோபத்துடன் ஓர் பெரிய சிலையைக் கையில் கொண்டு தூம்ராக்ஷனுடைய ரதத்தின்மேல் விழும்படி வீசி எறிந்தனன். அப்பெருஞ் சிலை வருவதற்குள் தூம்ராக்ஷன் கதையைக் கையில் பிடித்தவண்ணம் ரதத்தினின்றும் கீழே குதித்துவிட்டனன். அச்சிலை விழுந்த மாத்திரத்தில் அவனுடைய தேரும், சாரதியும், குதிரைகளும் நசுக்கப்பட்டு நாசமடைந்தன. பிறகு அனுமான் அடிப்பாகங்களோடும் கிளைகளோடும் கூடின மரங்களைப் பிடுங்கிக்கொண்டு ராக்ஷசர்களை அடித்தோட்டினன். அவற்றால் கணக்கற்ற ராக்ஷசர்கள் மடிந்தொழிந்தனர். கடைசியாக அவ்வாயு குமாரன் ஓர் பர்வத சிகரத்தைக் கொண்டு தூம்ராக்ஷன்மேல் எதிர்த்தனன். தூம்ராக்ஷன் தானும் ஒரு கதையைக் கையில் ஏந்தி சிம்மநாதஞ் செய்துகொண்டு அனுமானை எதிர்த்தனன். பிறகு அவன் கோபித்து பல ஆணிகளோடு கூடின அந்த கதையை அனுமான்மேல் வேகத்துடன் வீசி எறிந்தனன்; அக்கதையால் அனுமான் அடியுண்டபோதிலும், மிகுந்த பலமுடையவனாகையால் அவ்வடியைப் பொருள் செய்யாமல் தூம்ராக்ஷன்மேல் ஓர்பெரிய மலைச்சிகரத்தை எறிந்தனன். தூம்ராக்ஷன் அம்மலைச் சிகரத்தினால் நசுக்கப்பட்டு திடீரென்று பூமியில் விழுந்து உயிர் துறந்தனன். இதைக் கண்ட மற்ற ராக்ஷசர்கள் மிகவும் பயந்து லங்கைக்கு ஓடிப் போயினர். ... ... (51, 52.)

53, 54. வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் யுத்தம் செய்ய வருதலும், அவன் அங்கதனால் மாண்டொழிதலும்.

ராவணன் தூம்ராக்ஷன் மாண்டொழிந்ததைக் கேட்டு ஸர்ப்பம்போல் பெருமூச்செறிந்துகொண்டு சூரனும் மகாபலனுமான வஜ்ஜிரதம்ஷ்ட்ரனென்னும் ராக்ஷசனைப் பார்த்து "ராக்ஷசா! நீ கோடிக்கணக்கான ராக்ஷசர்களை யழைத்துக்கொண்டு சென்று ராமனையும் வானர வீரர்களையும் கொன்று வருவாயாக" என்று கட்டளையிட்டனன். உடனே வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் யானைகளோடும் குதிரைகளோடும் ஒட்டகங்களோடும் கழுதைகளோடும் துவஜங்களோடும் விளங்கப்பெற்ற அற்புதமான ரதங்களோடு கூடின பெரிய சைன்னியங்களோடு தானும் ஒரு பெரிய ரதத்தில் ஏறிக்கொண்டு யுத்தத்திற்குப் புறப்பட்டனன். அவன் தென்வாசற்படியினின்று அங்கதன் இருக்கிற இடத்திற்குச் செல்ல வெளிப்பட்டனன். அவன் புறப்படும்பொழுதே பலவிதமான கெட்ட சகுனங்கள் புலப்பட்டன. எனினும் அவன் தைரியத்தை விடாமல் யுத்தத்தில் உற்சாகமுடையவனாகவே சென்றனன். உடனே சிறிது நேரத்திற்கெல்லாம் வானரர்களும் ராக்ஷசர்களும் ஒருவர்மேல் ஒருவர் பாய்கையில் உடலும் கழுத்தும் முறியவும், ஸமஸ்த அவயவங்களும் ரத்தப் பெருக்கினால் நனையவும் பெற்றுத் தரையில் விழுந்தனர். யுத்தத்தில் பின்வாங்காத சூரர்களான சில ராக்ஷசர்கள் கத்தி, ஈட்டி, சூலம், கோடாலி முதலிய ஆயுதங்களைப் பிரயோகித்து வானரர்களை எதிர்த்தனர். வானரர்கள் மரங்களையும் சிலைகளையும் பிரயோகித்து ராக்ஷசர்களை துன்புறுத்தினர். மற்றும் அவர்களில் சிலர் ராக்ஷசர்களை உள்ளங்கையாலறைந்தும், கால்களாலுதைத்தும், முட்டியால் குத்தியும், மரங்களாலடித்தும், முழங்கால்களால் குமுக்கியும் துன்புறுத்தினர். இதைக்கண்ட வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் மிகுந்த கோபத்துடன் பயங்கரமான வில்லை யிழுத்து வானர சைன்னியங்களின்மேல் பாண மழைகளைப் பெய்தனன். அப்பொழுது ராக்ஷசர்கள் வானரர்களின்மேல் அநேகமாயிரம் ஆயுதங்களை ஓயாமல் பெய்தனர். வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் ஒவ்வொரு அடியிலும் வானரர்களை எழுவரையும், எண்மரையும், ஒன்பதின்மரையும், ஐவரையுமாகப் பிளந்து துன்புறுத்தினன். இங்ஙனம் வஜ்ஜிரதம்ஷ்ட்ரனால் பறக்கடிக்கப்பட்ட வானரர்கள் 'அங்கதனைச் சரணமடைந்தனர். உடனே அங்கதன் வஜ்ஜிரதம்ஷ்ட்ரனை எதிர்த்தனன். அந்த ராக்ஷசன் அங்கதனை மரும ஸ்தானங்களில் ஆயிரம் பாணங்களை எய்து துன்புறுத்தினன். அங்கதன் அங்கங்கள் முழுவதும் ரத்தத்தினால் நனையப்பெற்று வஜ்ரதம்ஷ்ட்ரன்மேல் ஓர் பெரிய மரத்தை எறிந்தனன். அவ்வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் அம்மரத்தை பாணங்களால் பலதுண்டங்களாகக் கண்டித்தனன். அங்கதன் அவனுடைய பராக்கிரமத்தைக் கண்டு ஓர் பெரிய பர்வதத்தை எடுத்து அவன்மேல் எறிந்து சிம்மநாதம் செய்தனன். அப்பர்வதம் தன்மேல் வந்து விழுவதற்குமுன் வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் பரபரப்பின்றித் தன் தேரினின்று கீழே குதித்துவிட்டனன். அப்பர்வதம் விழுந்ததனால் அவனது தேர் சூரணமாகியது. பிறகு வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் அங்கதனோடு வெகுநேரம் குத்துச்சண்டை செய்தனன். பிறகு இருவரும் மரங்களால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டனர். அப்பால் இருவருக்கும் கத்திச் சண்டை நடந்தது. இங்ஙனம் நெடுநேரம் அவ்வானர ராக்ஷசர்கள் மிகவும் கோபமுற்று ஒருவரையொருவர் வெல்ல விரும்பி நானாவிதமான மண்டலாதிகதிகளில் பயங்கரமான யுத்தஞ் செய்துகொண்டு ஒருவரையொருவர் அடித்துக்கொணடனர். பிறகு இருவரும் இளைப்படைந்து முழந்தாள்களை யூன்றித் தரையில் உட்கார்ந்தனர். அப்பால் அங்கதன் வேகமாக எழுந்து நன்கு தீட்டப்பட்டு பளபளவென்று விளங்குகின்ற கத்தியினால் வஜ்ஜிரதம்ஷ்ட்ரனுடைய பெரிய தலையை வெட்டித் தள்ளினன். வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் மாண்டுபோனதைக் கண்ட ராக்ஷசர்கள் பயத்தினால் லங்கைக்கு ஓடிப் போயினர். ... ... (53, 54.)

55, 56. அகம்பனனை அனுமான் கொல்லுதல்.

வஜ்ஜிரதம்ஷ்ட்ரன் அங்கதனால் அடியுண்டு மாண்டதைக் கேட்ட ராவணன் அகம்பனன் என்னுமரக்கனைப் பெரிய ராக்ஷச சைன்னியங்களுடன் சண்டைக்கனுப்பினன். தேவதை

களுக்கும் எப்படிப்பட்ட மகாயுத்தத்திலும் அசைக்க முடியாதவனாகையால் அவனுக்கு அகம்பனன் என்னும் பெயர் விளைந்தது. அவன் யுத்தஞ் செய்ய விரும்பி தேரிலேறிப் புறப்படுகையில் அவனது தேர்க் குதிரைகளுக்கு திடீரென்று சோர்வு உண்டாயிற்று. அவனது இடக்கண் துடித்தது; முகவொளி மழுங்கியது. அப்பொழுது கொடிதான பெருங்காற்று வீசியது. பறவைகள் பயங்கரமாகக் கத்தின. அவ்வகம்பனனும் அந்த கெட்ட சகுனங்களைப் பொருள் செய்யாமல் யுத்த பூமிக்குச் சென்றனன். பிறகு ராமன் நிமித்தமாகவும் ராவணன் நிமித்தமாகவும் பிராணன்களைவிட முயன்றிருக்கிற வானரர்களுக்கும் ராக்ஷசர்களுக்கும் மிகவும் பயங்கரமான யுத்தம் நடந்தது. வானரர்களும் ராக்ஷசர்களும் பாதங்களைப் பூமியில் உதைத்து உலாவுதலால் பூமியினின்று கிளம்பின தூள் பறந்து மிகவும் பயங்கரமாகப் பத்துத்திசைகளையும் மறைத்துவிட்டது. இங்ஙனம் தூள் நிரம்புகையால் இருள் மூடுகையில் வானரர்கள் இன்னார் பகைவர் என்று தெரியாமல் மிகுதியும் கோபாவேசமுற்று வானரர்களையே அடித்தனர். அங்ஙனமே ராக்ஷசர்களும் ராக்ஷசர்களையே அடித்தனர். யுத்த பூமியெல்லாம் பிணவுடல்களால் நிறைந்தது. குமுதன், நலன், மைந்தன், துவிவிதன் ஆகிய இந்நான்கு வானரயூதபதிகளும் ஒன்று சேர்ந்து பெரிய மரங்களையும் மலைச் சிகரங்களையும் வீசியெறிந்து ராக்ஷசர்களைக் கூட்டங் கூட்டமாக அளவின்றிக் கொன்றனர். அகம்பனன் கோபத்தினால் உடம்பு தெரியாமல் வில்லை நாணேற்றி பாணங்களைப் பெய்து வானரர்களை மிகவும் துன்புறுத்தினன். வானரர்கள் அவ்வகம்பனனுக்கெதிரில் நின்று யுத்தம் செய்ய முடியாமல் ஓட்டமெடுத்தனர். இதைக் கண்ட அனுமான் மனம் பொறுக்கமுடியாமல் அகம்பனனை யெதிர்த்து வந்தனன். இந்திரன் பர்வதத்தின்மேல் மழையைப் பொழிவதுபோல் அகம்பனன் அனுமான்மேல் பாணங்களைப் பெய்தனன். அனுமான் மிகுந்த பலவானாகையால் தன் தேகத்தில் விழுந்த கொடிய பாணங்களைப் பொருள் செய்யாமல் ஓர் பர்வதத்தைப் பிடுங்கி அகம்பனன்மேல் கிருகிருவென்று சுழற்றியெறிந்தனன். அகம்பனன் சிறந்த பாணங்களைப் பிரயோகித்து அம்மலையை இரு துண்டங்களாகப் பிளந்தனன். இங்ஙனம் தன்னால் எறியப்பட்ட மலை வீணானது கண்டு மிகவும் கோபங்கொண்டு ஓர் மாமரத்தைப் பிடுங்கிச் சுழற்றி அதனால் யானைகளையும் யானைப்பாகர்களையும், தேர்களையும் தேர்வீரர்களையும் நாசம் செய்தனன். ராக்ஷசர்கள் அனுமானை எதிர்த்து நிற்க முடியாமல் பயந்து ஓடிப்போயினர். அகம்பனன் அதுகண்டு மிகுந்த கோபாவேசத்துடன் கொடிய பதினான்கு பாணங்களை எய்து அனுமானைத் துன்புறுத்தினன். அனுமான் பாணங்கள் பலவாறு தன் சரீரத்தில் பொத்துக்கொள்கையில், மரங்கள் முளைக்கப் பெற்ற பர்வதம்போல் புலப்பட்டனன். பிறகு அந்த அனுமான் மற்றொரு பெரிய மரத்தைப் பிடுங்கி மிகுந்த வேகத்தையேற்றுக்கொண்டு விரைந்தோடி அகம்பனனைத் தலையில் அடித்தனன். அவ்வடியைத் தாங்கமுடியாமல் அகம்பனன் தரையில் விழுந்து மரணமடைந்தனன். பிறகு வானரர்களால் துரத்தப்பட்ட ராக்ஷசர்கள் மிகுந்த பயத்துடன் லங்கையை நோக்கி ஓடினர். வானரர்களால் மிகவும் கொண்டாடப் பெற்ற அனுமான் மதுகைடவர்களைக் கொன்ற விஷ்ணு தேவனைப்போல் சேனைகளின் நடுவில் வீர சோபையுடன் பிரகாசித்தனன். பின்னும் அந்த அனுமானை ஆகாயத்தில் கூடியிருந்த தேவதைகளனைவரும் நன்கு பூசித்தனர். (55, 56.)

57, 58. பிரகஸ்தன் யுத்தம் செய்ய வருதலும், அவன் நீலனால் அடியுண்டு மாளுதலும்.

ராவணன் அகம்பனன் மரணமடைந்தானென்று கேட்டுச் சிறிது நேரம் சிந்தையிலாழ்ந்து பிறகு யுத்தத்தில் சமர்த்தனான பிரகஸ்தனை வரவழைத்து அவனுடைய வீரப் பிரதாபங்களையெல்லாம் சொல்லி, அவனுக்கு யுத்தத்தில் நிச்சயமாக வெற்றி கிடைக்குமென்று தைரியம் கூறி அவனைப் போருக்கனுப்பினன். பிரகஸ்தன் ராவணனால் தானடைந்திருக்கும் ஐசுவரியங்களையெல்லாம் நினைத்து அவனை நோக்கி "ராஜனே! உன் விஷயத்தில் நான் எதையும் செய்வேன். உனக்காக யுத்தமாகிய நெருப்பில் என் பிராணனை ஹோமஞ் செய்கிறேன்" என்றனன். பிரகஸ்தன் மிகுதியும் பெரிதாகிய ராக்ஷச சைன்னியத்தை சித்தம் செய்து யுத்தத்

தின் பொருட்டுத் தேரின்மேலேறினன். ராக்ஷச வீரர்கள் விற்களைப்பிடித்துக் கவசங்களையணிந்து, ஜயத்தைக் கொடுக்கும் மந்திரங்களால் மந்திரிக்கப்பட்ட நானாவித புஷ்ப மாலைகளைத் தரித்து பிரகஸ்தனைப் பின் தொடர்ந்தனர். சேனாதிபதியான பிரஸ்தன் புறப்பட்டவுடனே மேக சப்தங்கள் போன்ற பேரி வாத்திய கோஷங்களும், சங்கத்துவனிகளும் மிகுதியும் அதிகமாகச் செவிப்பட்டன. நராந்தகன், கும்பஹனு, மகாநாதன், சமுந்நதன் என்கிற பிரகஸ்தனுடைய மந்திரிகள் நால்வரும் அவனைச் சுற்றிக்கொண்டு சென்றனர். பிரகஸ்தன் வியூகங்களாக ஏற்படுத்தப்பட்டு அதி பயங்கரமாயிருக்கின்ற அப் பெரிய சைன்னியத்துடன் கூடிக் கிழக்கு வாசல் வழியாய் வெளிப்பட்டு வந்தனன். பிரகஸ்தன் புறப்படும்பொழுது லங்கையிலுள்ள சமஸ்த ஜந்துக்களும் விகாரமான சப்தத்துடன் கூச்சலிட்டன. மாமிசங்களையும் ரத்தங்களையும் ஆகாரமாகவுடைய பக்ஷிகள் மேகமில்லாத ஆகாயத்தில் சேர்ந்து அவனது தேரை இடமாகச் சுற்றின. நரிகள் வாயால் நெருப்பு ஜ்வாலைகளைக் கக்கிக்கொண்டு பயங்கரமாக ஊளையிட்டன. ஆகாயத்திலிருந்து கொள்ளிக்கட்டைகள் விழுந்தன. மேகங்கள் தேரின்மேல் ரத்தமழையைப் பொழிந்தன. ஓர் பயங்கரமான கழுகு அவனது துவஜத்தின் (கொடியின்) நுனியில் தெற்கு முகமாக உட்கார்ந்துகொண்டு இரண்டு இறகுகளையும் மூக்கினால் கீறிக்கொண்டிருந்தது. பிரகஸ்தனது தேரோட்டியின் கையிலிருந்த சாட்டைக்கோல் திடீரென்று நழுவித் தரையில் விழுந்தது. மேடுபள்ளமில்லாத சமமான பூமியிலேயே அவனது குதிரைகள் தடுக்கிவிழுந்தன. அப்பால் பிரகஸ்தன் ஜயம் பெறவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, சுக்கிரீவனது சைன்னியத்திற்கு எதிரே வந்து, விட்டில்பூச்சி சாகவேண்டி நெருப்பில் விழுவதுபோல் அவ்வானர சைன்னியத்தில் பிரவேசித்தனன். பிறகு ராமன் பிரகஸ்தனது வீரம் குணம், ஐசுவரியம் முதலியவற்றை விபீஷணன் சொல்லக் கேட்டனன். அப்பொழுது ராக்ஷசர்கள் தரித்திருந்த கத்தி, சூலம், உலக்கை, கதை, கோடாலி முதலிய ஆயுதங்களும், விசித்திரங்களான விற்களும் மற்றும் பலவித ஆயுதங்களும் பிரகாசித்தன. வானர வீரர்களும் யுத்தஞ் செய்யும்பொருட்டு புஷ்பித்த மரங்களையும், அகன்று நீண்ட கற்களையும் பிடித்துக்கொண்டு நின்றனர். பிறகு அவ்வானரர்களும் ராக்ஷசர்களும் பலர் ஒருவரையொருவர் எதிர்த்துக்கிட்டி கல் மழைகளையும் அம்பு மழைகளையும் பெய்துகொண்டு சண்டை செய்கையில் அவர்களுக்குள் மிகவும் பெரிய யுத்தம் நடந்தது. ராக்ஷசர்கள் சில வானரர்களைச் சூலங்களாலடித்தனர். சிலரைச் சக்கராயுதங்களினாலடித்தனர். சிலரை உலக்கைகளால் உருவழித்தனர். சிலரைக் கோடாலிகளால் பிளந்தனர். இங்ஙனம் ராக்ஷசர்களாலடியுண்ட வானரர்களில் சிலர் தரையில் வீழ்ந்தனர். சிலர் இருதயம் முறிந்து பிராணன்களை விட்டனர். சிலரை ராக்ஷசர்கள் கத்தியால் வெட்டுகையில் அவர்கள் துடிதுடித்துத் தரையில் விழுந்தனர். சில வானரர்கள் சூலங்களால் குத்தப்பட்டும் சிலர் கோடாலிகளினால் பிளக்கப்பட்டும் மரணமடைந்தனர். அப்பொழுது சில வானரர்கள் மிகுந்த கோபாவேசத்துடன் நாற்புறத்திலும் ராக்ஷசர்களைக் கூட்டங் கூட்டமாக மரங்களாலும் மலைச்சிகரங்களாலுமடித்துத் தரையில் வீழ்த்தினர். பின்னுமவ்வானரர்கள் உள்ளங்கைகளாலும், முஷ்டிகளாலும், அறைந்து குத்துகையில், சில ராக்ஷசர்கள் கண்களும் பற்களும் சிதறப்பெற்று வாயால் ரத்தத்தைக் கக்கினர். இங்ஙனம் அவ்விருதரத்தவர்களும் நானாவிதமான யுத்தங்களைச் செய்தனர். பிரகஸ்தனது நான்கு மந்திரிகளும் ஒன்றுசேர்ந்து வானரர்களைத் துன்புறுத்தலாயினர். அதைக்கண்ட துவிவிதன் அவர்களில் ஒருவனான நராந்தகனைப் பர்வத சிகரத்தாலடித்துக் கொன்றனன். துர்முகன் ஸமுன்னதனென்னும் ராக்ஷசனை ஒரு மரத்தினாலடித்துக் கொன்றனன். ஜாம்பவானால் எறியப்பட்ட ஓர் பெரிய சிலையினால் மகாநாதன் என்பவன் நசுங்கி மாண்டனன். தாரன் ஓர் மரத்தினால் கும்பஹனுவின் தலையிலடித்துக் கொன்றனன். பிரகஸ்தன் இங்ஙனம் தனது நான்கு மந்திரிகளும் மாண்டொழிந்ததைக் கண்டு, பொறுக்கமுடியாமல் வில்லில் பாணங்களைத் தொடுத்து வானர வீரர்களை வாட்டினன். அந்த யுத்தபூமியில் வானரர்களுடையவும் ராக்ஷசர்களுடையவும் பெரிய சரீரங்கள் முழுவதும் நிரம்பியிருக்கையால் அவை பர்வதம்போல் மிக

வும் பயங்கரமாயிருந்தது. இன்னும் ரத்தவெள்ளமானது ஓர் பெரிய நதிபோல் ஓடியது. பிரகஸ்தன் பாணங்களை எய்து வானரர்களை வாட்டுவதைக் கண்ட நீலன் (வானர சேனாதிபதி) ஓர் மரத்தைப்பிடுங்கி அதனால் பிரகஸ்தனை யடித்தனன். பலவானான பிரகஸ்தன் அம்மரத்தினாலடிபட்டுக் கோபம் மிகப்பெற்று சிம்மநாதம் செய்துகொண்டு நீலன்மேல் பாணமழைகளைப் பெய்தனன். நீலன் அந்த பாணங்களைத் தடுக்க முடியாதவனாகிக் கண்களை மூடிக்கொண்டு எல்லாவற்றையும் பொறுத்திருந்தனன். பிறகு திடீரென்று ஓர் பெரிய மரத்தினால் பிரகஸ்தனது குதிரைகளைக் கொன்றதுமல்லாமல் அவனது கையிலிருந்த பெரிய வில்லையும் பிடுங்கி ஒடித்துப் போட்டனன். உடனே பிரகஸ்தன் பெரியதொரு உலக்கையைக் கையிலேந்திக் கொண்டு தேரினின்றும் கீழே குதித்தனன். பிரகஸ்தன் அந்த உலக்கையால் நீலனை நெற்றியிலடிக்கையில் ரத்தம் பெருகிற்று. இங்ஙனம் தேகம் முழுவதும் ரத்தத்தினால் நனையப்பெற்ற நீலன் மிகுந்த கோபாவேசத்துடன் ஓர் பெரிய சிலையை எடுத்து பிரகஸ்தனது தலையின்மேல் எறிந்தனன். உடனே பிரகஸ்தனது தலை பல சுக்கல்களாகப் பிளந்துபோக அவன் தரையில் விழுந்து நசுக்குண்டு உயிர்விட்டனன். இதைக்கண்ட ராக்ஷச சைன்னியமெல்லாம் மனக்களிப்பற்று வருத்தத்துடன் லங்கையை நோக்கி ஓடின. பலசாலியும் ஜயசீலனுமான நீலன் மிகுந்த சந்தோஷத்துடன் ராம லக்ஷ்மணர்களருகே சென்று அவர்களால் மிகவும் கௌரவிக்கப் பட்டனன். ... ... (57, 58.)

59. ராவணன் தானேவந்து யுத்தம் செய்தலும், சக்தி ஆயுதத்தினால் லக்ஷ்மணனை மூர்ச்சிக்கச் செய்தலும்.

மகா பலவானான பிரகஸ்தன் நீலனால் கொல்லப்பட்டதைக் கேட்ட ராவணன் பகைவர்கள் மிகுந்த பலமுடையவர்கள் என்பதைத் தெரிந்துகொண்டு தானே நேரில் யுத்தஞ்செய்ய விரும்பி மிகவும் சூரர்களும் பலாட்டியர்களுமான கணக்கற்ற ராக்ஷசர்களால் சூழப்பட்ட அழகிய தேரின் மேலேறினன். உடனே அந்த ராக்ஷசாதிபதி லங்கையினின்று புறப்பட்டு பயங்கரமாயிருப்பதும் பெரிய சமுத்திரம்போலும் மேகம்போலும் மிகப் பெரிய கோஷம் உண்டாகப் பெற்றதுமான வானர சைன்னியத்தைக் கண்டனன். பிறகு விபீஷணன் ராவணனுடன் யுத்தத்தின் பொருட்டு வந்த சூரர்களான அகம்பனன், ராவணனது புதல்வனான இந்திரஜித்து, அதிகாயன், மகோதரன், பிசாசன், திரிசிரன், கும்பன், நராந்தகன், முதலிய ராக்ஷச வீரர்களின் புஜபல பராக்கிரமங்களையும் பெருமையையும் ராமனுக்கு எடுத்துக் கூறினன். கடைசியில் அழகிய தேரில் வீற்றிருப்பவனும் வெண்கொற்றக்குடையின்கீழ் பிரகாசிப்பவனுமான ராக்ஷச ராஜனை (ராவணனை) ராமன் கண்டு மிகவும் வியந்து "ஆ! இந்த ராவணன் சூரிய கிரணங்களைக் கண்ணெடுத்தும் பார்க்க முடியாததுபோன்ற எவ்வளவு காந்தியுடன் ஒளி விளங்கப்பெற்றுக் காணப்படுகின்றனன்! தேவ தானவர்களில் எப்படிப்பட்டவருடைய தேகமும் இப்படிப்பட்ட காந்தியுடன் விளங்காது. இவனது போர்வீரர்களெல்லாரும் மலைபோன்ற உருவமுடையவராகி மகாதேஜஸ்விகளா யிருக்கின்றனர். இந்த ராக்ஷசராஜன் மிக விளக்கமுற்ற பயங்கர பராக்கிரமங்களையுடையவனாகி, சிறந்த தேகம் பொருந்தின கொடிய பூதங்களால் சூழப்பெற்ற யமனைப்போல் பிரகாசிக்கின்றனன். தெய்வாதீனமாய் இந்தப் பாபிஷ்டன் என் கண்களில் பட்டனன். இவன் சீதையை யபகரித்து எனக்கு விளைவித்த கோபத்தை இப்பொழுது இவன்மேல் விட்டு ஆற்றி விடுகிறேன்" என்றனன். உடனே ராவணன் வானர சைன்னியமாகிய சமுத்திரப் பிரவாகத்தினுட்புகுந்து மிக விசித்திரமாகத் திளைக்க ஆரம்பித்தனன். அந்த ராவணன் வில்லையும் பாணத்தையும் கையிற்கொண்டு யுத்தத்திற்காக மேல் விழுந்து வருவதைக் கண்ட சுக்கிரீவன், பெரியதொரு மலைச் சிகரத்தைப் பிடுங்கி எடுத்து அந்த ராவணன்மேல் வீசி எறிந்தனன். ராவணன் மிகக் கொடிய பாணங்களை எய்து அதைத் துண்டு துண்டாகத் துண்டித்தனன். அன்றியும், பெரிய சர்ப்பத்தைப் போன்றதொரு பாணத்தை வில்லில் தொடுத்து சுக்கிரீவனைக் கொல்லும்பொருட்டு அவன்மேல் எய்தனன்.

பட்டு, மதிமயக்கமுற்றுக் கூச்சலிட்டுக்கொண்டு தரையில் வீழ்ந்தனன். இதைக் கண்ட ராக்ஷஸர்கள் சந்தோஷித்து சிம்மநாதஞ் செய்தனர். பிறகு கொடிய கோரப் பற்களையுடைய கவாக்ஷன், கவயன், ருஷபன், ஜோதிர்முகன் முதலிய வானர வீரர்கள் தங்கள் சரீரத்தை வளரச் செய்து பெரிய மலைகளை எடுத்துக்கொண்டு ராவணன்மேல் எதிர்த்து வந்தனர். ராவணன் அவர்களால் எறியப்பட்ட பர்வதங்களையெல்லாம் கொடிய பாணங்களால் உடைத்து வீண் செய்ததுமல்லாமல் அவ்வானரோத்தமர்களையும் பொன்னால் இயற்றப்பெற்ற விசித்திரமான பிடியுடைய பாணங்களை நாட்டிப் பிளந்தனன். அவ்வானரர்கள் அங்ஙனம் துன்புறுத்தப்பட்டு ராவணனுடைய வேகத்தைப் பொறுக்கமுடியாமல் தரையில் வீழ்ந்து தம்மைக் காப்பவர் எவரும் அருகிலில்லாமையால் மிகவும் உரக்கக் கூச்சலிட்டுக்கொண்டு ராமனைச் சரணமடைந்தனர். அப்பொழுது ராமன் கையில் வில்லைப்பிடித்து வானரர்களைக் காக்கும்பொருட்டுப் போயினன். லக்ஷ்மணன் அவனைத் தடுத்துக் கைகுவித்த வண்ணம் "ராமா! மேன்மையான குணங்கள் பொருந்திய நீ இந்த துர்ப்புத்தியான ராவணனோடு யுத்தம் செய்யத் தகுந்தவனல்லை. உனது அடியனான நானிருக்கும்பொழுது நீ யுத்தஞ் செய்வது சரியல்ல. இதோ நான் சென்று பகைவனை நொடிப்பொழுதில் முடித்து வருகிறேன்" என்று கூறி ராமனை வலம் செய்து வணங்கி உடனே யுத்தத்திற்குச் சென்றனன். இதைக் கண்ட அனுமான் "ஊழியஞ் செய்பவனான நானிருக்கும்போது அவனுக்கு ஏன் கஷ்டம்?" என்று ராவணனது பாணங்களைத் தடுத்துக்கொண்டு அவன்மேல் எதிர்த்துச் சென்று சில ரோஷ வார்த்தைகளை மொழிந்தனன். அதைக் கேட்ட ராவணன் மனம் பொறுக்கமுடியாமல் அனுமானை உள்ளங்கையால் மார்பிலறைந்தனன். அவ்வடியால் அனுமான் சிறிது நடுக்கமுற்றானன்றி மிகுந்த பலமுடையவனாகையால் நன்கு திடம் உண்டாகப்பெற்று மிகுந்த கோபத்துடன் தானும் அந்த ராவணனை உள்ளங்கையா லறைந்தனன், ராவணன் அவ்வடியால் மிகவும் நடுக்கமுற்றனன். பிறகு ராவணன் தெளிவுற்று அனுமானைப் பார்த்து "வானரா! நல்லது; எனக்கு நீ பராக்கிரமத்தினால் புகழத்தக்க பகைவனாய் இருக்கின்றனை. நீ எனக்கு விரோதியாயினும் உன் பராக்கிரமத்திற்கு நான் சந்தோஷிக்கிறேன்" என்றனன். இதுகேட்ட அனுமான் "சீ! எனது பராக்கிரமம் பாழாய்ப் போகுமாக. இதென்ன வீரியம்? ராவணா! என்னாலடிக்கப்பட்டும் நீ சாகாமல் உயிருடனிருக்கின்றனையே! இப்படிப்பட்ட எனது வீரியம் எரிந்து போகுமாக" என்றனன். அப்பால் ராவணன் கோபத்தினால் கண்கள் சிவக்கப்பெற்று வலக்கையை கெட்டியாக மடக்கிப் பிடித்துக்கொண்டு வேகத்துடன் அனுமானது மார்பிலறைந்தனன். இங்ஙனம் ராவணனாலடிக்கப்பட்ட அனுமான் மிகவும் நடுநடுக்கமுற்று மூர்ச்சையாயினன். அந்த அனுமான் மூர்ச்சையடைந்ததும் மிகுந்த பலவானாதலால் அப்பொழுதும் பிறரால் துன்புறுத்த முடியாதிருப்பதைக் கண்ட ராவணன் இவன் தெளிவு பெறுவானாயின் மீண்டும் தன்னைவிடாமல் வருத்துவானென்று எண்ணி சீக்கிரமாக அவ்விடத்தை விட்டகன்று சேனாதிபதியான நீலன்மேலெதிர்த்துச் சென்றனன். நீலன் தன்மேலெதிர்த்து வரும் ராவணனைப் பெரிய பெரிய மரங்களாலும் பர்வத சிகரங்களாலும் அடித்தனன். ராவணன் அவற்றையெல்லாம் சிறந்த பாணங்களால் தடுத்து நாசம் செய்ததன்றி நீலனை அப்படி இப்படி கைகால்களை யசைக்கவொட்டாமல் பாணங்களை யெய்து மிகவும் துன்பப்படுத்தினன். இங்ஙனம் மிகவும் வருத்தப்பட்ட நீலன் தனது உருவத்தைச் சுருக்கிக்கொண்டு ராவணனது துவஜத்தின் (கொடி) நுனிமேல் எழும்பிக் குதித்து சிம்மநாதஞ் செய்தனன். அப்பால் ராவணனுக்குக் குறி ஏற்படாதபடி துவஜத்தின் நுனியிலும், வில்லின் நுனியிலும், கிரீடத்தின் நுனியிலும் சஞ்சரிக்கின்ற நீலனைப் பார்த்து ராம லக்ஷ்மணர்களும் அனுமானும் வியப்புற்றனர். வானரர்களெல்லாம் நீலனுடைய லாகவத்திற்கு மிகவும் வியப்புற்றனர். அங்ஙனம் துவஜத்தின் நுனியிலிருந்த நீலன்மேல் ராவணன் ஆக்கினேயாஸ்திரத்தைப் பிரயோகிக்க அதனால் நீலன் உடலெல்லாம் கொளுத்தப்பட்டுத் திடீரென்று துவஜத்தின் நுனியினின்றும் தரையில் வீழ்ந்தனன். அந்த நீலன் அக்கினி தேவனது குமாரனாகையால் அந்த ஆக்கினேயாஸ்திரத்தினால் கொளுத்தப்பட்ட

போதிலும் சிறிதும் தாபமின்றி உயிரை யிழக்காமல் பிராணனோடு இருந்தனன். பிறகு ராவணன் லக்ஷ்மணனை எதிர்த்தனன். லக்ஷ்மணன் அவனை நோக்கி "ராக்ஷஸ ராஜனே! ஜன சஞ்சாரமில்லாத பிரதேசத்தில் சன்னியாசி வேடத்துடன் வந்து சீதையைத் திருடிக்கொண்டு வந்த உன் பராக்கிரமத்தைச் சீக்கிரம் காட்டுவாயாக" என்று கூறினன். உடனே ராவணன் மிகுந்த கோபாவேசமுற்று லக்ஷ்மணன்மேல் ஏழு கொடிய பாணங்களை எய்தனன். லக்ஷ்மணன் அவ்வேழு பாணங்களையும் தன்னுடைய பாணங்களால் கண்டித்தனன். இங்ஙனம் ராவணன் லக்ஷ்மணனைக் கொல்லும்பொருட்டு எய்த கணக்கற்ற பாணங்களையெல்லாம் லக்ஷ்மணன் அவ்வப்பொழுது சீக்கிரமாக பாணங்களைப் பிரயோகித்துக் கண்டித்தனன். ராவணன் இங்ஙனம் தனது சகல பாணங்களையும் லக்ஷ்மணன் வீணாக்குவதைக் கண்டு அவனது பாணப் பிரயோக லாகவத்திற்கு மிகவும் வியந்தனன். பிறகு ராவணன் தனக்கு பிரமதேவன் கொடுத்ததும், பிரளய காலாக்கினிபோல் பிரகாசிப்பதுமாகிய ஓர் பாணத்தை லக்ஷ்மணனுடைய நெற்றியில் பிரயோகித்தனன். லக்ஷ்மணன் அந்த ராவண பாணத்தினால் மிகவும் பீடிக்கப்பட்டு வில்லைத் தளர்ச்சியாகப் பிடித்துக்கொண்டு நடுங்கி மூர்ச்சித்து, மீளவும் சிறிது நேரத்தில் பிரக்ஞை தெளியப்பெற்று ராவணனது வில்லை ஒடித்தனன். பிறகு லக்ஷ்மணன் கூரான நுனிகளையுடைய மூன்று பாணங்களால் ராவணனை அடித்தனன். அதனால் ராவணன் நடுக்கமுற்று மூர்ச்சித்து மிக வருத்தத்துடன் மீளவும் பிரக்ஞை தெளியப்பெற்றனன். அந்த ராவணன், யுத்தத்தில் வில் ஒடிந்து பாணங்களாலடிக்கப்பட்டு உடம்பெல்லாம் பாணமயமாகி ரத்தங்களால் அபிஷேகஞ் செய்யப்பெற்றவன்போல் ஈரமாகி, முன்பு தனக்கு பிரமதேவன் கொடுத்த சக்தியை எடுத்து லக்ஷ்மணன்மேல் விரைவாகப் பிரயோகித்தனன். லக்ஷ்மணன் உக்கிரமான பாணங்களால் அதை அடித்துத் தடுத்தனன். அந்த சக்தி அங்ஙனம் அடிக்கப்பட்டும் வேகம் குறையாமல் லக்ஷ்மணனது விசாலமான மார்பில் வந்து விழுந்தது உடனே லக்ஷ்மணன் மிகவும் பரிதபித்து நடுங்கி மூர்ச்சித்தனன். ராவணன் இங்ஙனம் மூர்ச்சித்து விழுந்த லக்ஷ்மணனைத் தனது கைகளால் பிடித்துத் தூக்கிக்கொண்டு போகமுயன்றனன். ஆனால் மானிட உருவந் தரித்து தானவர்களின் கர்வத்தை யடக்கவல்ல விஷ்ணுவின் அம்சமாகிய லக்ஷ்மணனை அவனால் சிறிதும் அசைக்க முடியவில்லை. பிறகு அனுமான் ராவணனை எதிர்த்து வஜ்ஜிரம் போன்ற முட்டியால் அவனை மார்பில் அடித்தனன். அதனால் ராவணன் முழந்தாள்களை ஊன்றிக்கொண்டு ரதத்தினிடையில் வீழ்ந்து நடுக்கமுற்று கண், வாய், மூக்கு ஆகிய இவற்றிலிருந்து அளவின்றி ரத்தத்தைக் கக்கினன். இங்ஙனம் ராவணன் யுத்தத்தில் மூர்ச்சையடைந்திருப்பதைக் கண்டு வானரர்களும் ரிஷிகளும், தேவதைகளும் சந்தோஷத்தினால் பேராரவாரம் செய்தனர். அனுமான் தரையில் மூர்ச்சித்து விழுந்திருக்கும் லக்ஷ்மணனைக் கைகளால் எடுத்துக்கொண்டு ராமனது சமீபத்திற்குக் கொண்டுவந்தனன். அந்த லக்ஷ்மணன் விஷ்ணுவின் அம்சமுடையவனாகையால் ராவணனுக்கு அசைக்கவும் முடியாதவனாகி, மிகுந்த பக்தனாகிய அனுமானுக்கு லேசாகவும் இருந்தனன். அப்பால் அந்த சக்தியானது லக்ஷ்மணனை விட்டுத் திரும்பி ராவணனிடம் போய்ச் சேர்ந்தது. லக்ஷ்மணன் விஷ்ணுவின் அம்சமாகி நினைக்க முடியாத தன் ஸ்வரூபத்தை நினைத்தமையால் மூர்ச்சை தெளிந்து விரணங்களெல்லாம் ஆறப்பெற்றனன். பிறகு ராவணனும் மூர்ச்சை தெளிந்து கொடிய பாணங்களையும் பெரிய வில்லையும் எடுத்துக்கொண்டு ராமனை எதிர்த்து வந்தனன். விஷ்ணுதேவன் கருடன்மேல் ஆரோகிப்பதுபோல் ராமன் அனுமான் மேலேறிக்கொண்டு ராவணனை எதிர்த்தனன். ராமன் ராவணனை மிகுந்த கோபத்துடன் சில வீரவாக்கியங்களைக் கூறிக்கொண்டே எதிர்த்தனன். ராவணன் ராமனுக்கு வாகனமாயிருந்த அனுமானைக் கொடிய பாணங்களாலடித்தனன். அனுமான் இங்ஙனம் ராவணனது பாணங்களாலடிக்கப்பட்டும், அவன் இயற்கையாகவே மிகுந்த பலமுடையவனாகையால் அவனது தேஜஸ்ஸு இன்னுமதிகமாயிற்றே யன்றிச் சிறிதும் குறையவில்லை. பிறகு ராமன் ராவணனுடைய ரதத்தை அடிக்கடி அணுகிச் சக்கரங்களோடும் குதிரைகளோடும், துவஜங்களோடும், சாரதியோடும், சமஸ்த ஆயுதங்களோடுங்கூட மேலான

பாணங்களை விடுத்து நாசம் செய்தனன். மீண்டும் ராமன் வஜ்ஜிரத்தையும் இடியையும் நிகர்த்த பாணங்களால் ராவணனுடைய விசாலமான மார்பில் பலமுள்ளளவும் அடித்தனன். ராவணன் ராம பாணத்தினாலடியுண்டு அந்த பாதையைப் பொறுக்கமுடியாமல் மிகவும் வருந்தி நடுநடுங்கிக் கையிலிருந்த வில்லை நழுவவிட்ட வண்ணம் கீழே விழுந்து மூர்ச்சித்தனன். ராமன் உடனே ஓர் அர்த்த சந்திர பாணத்தை யெடுத்து அதனால் அந்த ராவணனது கிரீடங்களையுடைத்து அவனை மானபங்கஞ் செய்தனன். ராமன் இங்ஙனம் கிரீடங்கள் கண்டிக்கப்பெற்று விஷமில்லாத சர்ப்பம் போலவும் ஜ்வாலையில்லாத நெருப்புப் போலவும், ஒளியில்லாத சூரியனைப் போலவும் ஒளியற்றிருக்கிற ராவணனைப் பார்த்து "ராக்ஷஸா! நீ மிகவும் பயங்கரமான காரியத்தைச் செய்தனை. மற்றும் என் பக்கத்திலுள்ள மேலான பல வீரர்களையு மடித்தனை. ஆகையால் நீ இளைப்புற்றிருக்கிறாயென்று நிச்சயித்து இப்பொழுதே பாணங்களாலடித்து உன்னைக் கொல்லாமல் விட்டனன். அரக்கர் தலைவனே! நீ இலங்கைக்குச் சென்று இளைப்பாறி மறுபடியும் ரதத்தின் மேலேறி வில்லைப்பிடித்துப் புறப்பட்டு வருவாயாக. இதோ நான் உனக்கு அனுமதி கொடுக்கிறேன். சென்று வருவாயாக. நீ மறுபடியும் வில்லை ஏந்தியிருக்கும் பொழுது என் பலத்தைக் காட்டுகிறேன், காண்பாய்" என்றனன். ராவணன் மிகுந்த அவமானத்துடன் கர்வம் தொலையப்பெற்று சந்தோஷத்தை இழந்து ராமன் சொன்னதைக் கேட்டு வெட்கமடைந்து விரைவாக லங்கையுள் பிரவேசித்தனன். ராமன் லக்ஷ்மணனுடன் கூடி யுத்த பூமியில் விழுந்திருக்கிற வானரர்களின் தேகங்களிலுள்ள பாணங்களைப் பிடுங்கி அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தனன். தேவர்களும், ரிஷிகளும் மற்றுமுள்ள சமஸ்த பூதங்களும் ராவணன் தோல்வியடைந்ததைக் கண்டு சந்தோஷமடைந்தனர். ... (59)

60. ராவணன் கும்பகரணனை எழுப்பி யுத்தத்திற்கு அனுப்புதல்.

அப்பொழுது ராவணன் லங்காபுரத்தில் பிரவேசித்து ராம பாணங்களுக்குப் பயந்து வருந்தி கர்வத்தை இழந்து இந்திரியங்கள் கலங்கப்பெற்று பொன்மயமான சிம்மாசனத்தில் உட்கார்ந்து ராக்ஷஸர்களைப் பார்த்து "தேவேந்திரனைப் போன்ற நான் கேவலம் ஒரு மானிடனால் தோல்வியடைந்தேனே! நான் செய்த அரிய பெரிய தவங்களெல்லாம் வீணேயல்லவா? 'மனிதர்களால் உனக்கு பயமென்றறிவாய்' என்று முன்பு பிரமதேவன் மொழிந்த பயங்கரமான வாக்கியமானது இப்பொழுது எனக்குப் பலித்தது. அவனது வார்த்தை ஒரு போதும் வீணாகாது. நான் மனிதர்கள் அற்பரென்று நினைத்து அவர்களால் சாவில்லாதிருக்கும்படி வரம் வேண்டாமற்போயினேனே, ராக்ஷஸர்களே! முன்பு இக்ஷ்வாகு குலநாதனான அனரண்ய மகாராஜனை நான் கொன்றபொழுது அவன் என்னை நோக்கி 'ராக்ஷஸாதமா! துர்ப்புத்தியுடையவனே! உன்னை உன் கூட்டத்தாருடன் நாசமடையச் செய்யவல்ல மகா புருஷன் ஒருவன் என் வமிசத்தில் பிறக்கப் போகின்றனன். இது நிச்சயம்' என்று பிரதிக்ஞை செய்தனன். அதன்படி அவன் குலத்தில் பிறந்த இந்த ராமன் இதோ என்னை யுத்தத்தில் தோற்கடித்தனன். முன்பு நான் வேதவதி என்னும் பெண்ணை பலாத்காரமாகப் பிடித்து அவமதிக்கையில் அவள் என்னைச் சபித்தனள். அந்த வேதவதியே தன் சாபத்தை நிறைவேற்றும் பொருட்டு ஜனகனது புதல்வியாகிய சீதையாகப் பிறந்தனள், இன்னும் பார்வதியும், நந்திகேசுவரனும் ரம்பையும் வருணனது கன்னிகையான புஞ்சிகஸ்தலையும் தவமகிமையால் தாம் முன்பு எப்படி மொழிந்தனரோ அப்படியே ஆயிற்று. ஆயினும் ராக்ஷஸர்களே! நீங்கள் அந்த சாபங்களையெல்லாம் மறந்து இப்பொழுது பகைவரை வெல்லும் விஷயத்தில் மனவூக்கமுற்றிருக்க வேண்டும். தேவதானவர்களின் கர்வத்தையடக்கும் தன்மையனான கும்பகரணன் பிரமசாபத்தினால் நித்திரைக்குட்பட்டிருக்கின்றனன். அவனை எழுப்புவீர்களாக" என்றனன். உடனே ராக்ஷஸர்கள் கும்பகரணனது வீட்டுக்குப் போயினர். அவர்கள் பெரிய வாசற்படியையுடையதும், நாற்புறத்திலும் ஒன்றரை யோசனை விஸ்தாரமுடையதும், குகை போன்றதுமான கும்பகரணனது வீட்டிற்குப்போய் அவனுடைய மூச்சுக் காற்றுவேகத்தினால் பின்

வாங்கும்படி தடுக்கப்பட்டு மிக வருத்தத்துடன் எதிர்கொண்டுபோய் மிகுந்த பிரயாசையுடன் அதனுள் பிரவேசித்தனர். அங்கு தரையில் விழுந்த பர்வதம்போல் கம்பீரமாகப் புலப்படுகின்றவனும் எழுப்ப முடியாதபடி கடுநித்திரையிலாழ்ந்திருப்பவனுமாகிய கும்பகரணனை அவர்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து எழுப்பத் தொடங்கினர். மிகவும் பயங்கரமான மூக்குத் துவாரங்களையுடையவனும், பாதாளம்போல் அகன்று ஆழ்ந்த முகமுடையவனும், மாமிச ரத்தங்களின் நாற்றம் வீசப்பெற்றவனும், ராக்ஷஸப் புலியுமான கும்பகரணனை ராக்ஷஸர்கள் திருப்தி செய்விக்கக் கருதி அவனுக்கெதிரில் மேருபர்வதத்தைப்போன்ற மாமிசக் குவியல்களையும், பலவகை அன்னங்களையும் ராசிகளாகக் குவித்து வைத்தனர், பின்னும் ரத்தம் நிறைந்த குடங்களையும், பலவகை மதுபானங்களால் நிரப்பப்பட்ட குடங்களையும் வைத்தனர். அவனது தேகம் முழுதும் மேலான பரிமளம் வீசப்பெற்ற சந்தனக்குழம்பைப் பூசி, திவ்வியமான பூமாலைகளால் அவனை அலங்கரித்து, நல்ல வாசனையுடைய தூபங்களையிட்டு அந்த கும்பகரணனைப் புகழ்ந்தனர். பின்னும் அந்த ராக்ஷஸர்கள் சங்கங்களை உரக்க ஊதினர்; அனைவருஞ் சேர்ந்து பெரிய கூச்சலிட்டனர். இன்னும் அவனை அடித்து இப்படியும் அப்படியும் பிடித்து அசைத்தனர். இங்ஙனம் செய்த பெரிய பயங்கரமான சப்தங்களால் பக்ஷிகளும் பிராணிகளும் மிகவும் பயந்து திகில் மாறாமையால் கபீரென்று தரையில் வீழ்ந்தன. ஆனால் கும்பகரணனோ சிறிதும் விழித்துக் கொள்ளவில்லை. அது கண்ட ராக்ஷஸர்கள் இருப்புத் தடிகளையும் உலக்கைகளையும் கதைகளையும் எடுத்துக்கொண்டு கும்பகரணனை அடித்தனர். அந்த ராக்ஷஸர்கள் மிகுந்த பலமுடையவராயினும், கும்பகரணனுடைய மூச்சுக் காற்றால் அவன் முன்னே நிற்க வல்லராகவில்லை. அப்பொழுதும் கும்பகரணன் கண் விழித்திலன். ஆகவே ராக்ஷஸர்கள் வியப்படைந்து குதிரைகளையும் ஒட்டகங்களையும் கழுதைகளையும் யானைகளையும் தடி, கொரடா, மாவெட்டி இவற்றாலடித்துக் கும்பகரணன் மேலோட்டினர். பேரிகைகளையும், மிருதங்கங்களையும், சங்கங்களையும் தமது பலமுள்ள வளவும் வாசித்தனர். அப்பொழுதும் கும்பகரணன் எழுந்திருக்கவில்லை. இதனால் மிகவும் சளைக்கப்பெற்ற ராக்ஷஸர்கள், சிலர் கும்பகரணனது தலைமயிர்களைப் பிடுங்கினர். சிலர் காதைக் கடித்தனர். மற்றுஞ் சிலர் அவனது காதுகளில் பல நூறு குடம் தண்ணீரைக் கொட்டினர். சிலர் இருப்புத் தடிகளாலும் சம்மட்டிகளாலும் அவனுடைய தலையிலும் மார்பிலும் மற்றை அவயவங்களிலும் பலங்கொண்டமட்டும் அடித்தனர். அப்பொழுதும் கும்பகரணன் எழுந்திருக்கவில்லை. அப்பால் ஆயிரம் யானைகளை அவனது தேகத்தின் மேலோட்டித் துவைத்தனர். அப்பொழுதுதான் கும்பகரணன் விழித்துக்கொண்டனன். அவனுக்கு அந்த ஆயிரம் யானைகளும் ஏறித் துவைப்பது எறும்பு முதலியன உடம்பில் ஊர்வதுபோல் உணர்ச்சிமாத்திரம் இருந்ததேயன்றி அவை மற்றொரு வருத்தத்தையும் விளைவிக்கவில்லை. அவன் எழுந்தவுடன் பசியினாலும் அகாலத்தில் எழுப்பினார்களே என்னும் வருத்தத்தினாலும் பீடிக்கப்பட்டு உடம்பை முறித்துக் கொண்டனன். குகைபோன்ற பெரிய வாயைத் திறந்து விகாரமாகக் கொட்டாவி விட்டனன். அவனது பெரிய கண்கள் பிறர்க்குப் பீடையை விளைவிக்கின்றமையால் சனி அங்காரகன் ஆகிய பெரிய கிரகங்களைப்போல் புலப்பட்டன. பிறகு கும்பகரணன் தனக்கு முன் வைத்திருக்கும் கடா மாமிசங்களையும், பன்றி மாமிசங்களையும் தின்று தாகத்தினால் வருந்தி ரத்தக் குடங்களையும் மதுபானக் குடங்களையும் காலி செய்தனன். பிறகு தன்னை அவ்விதம் அகாலத்தில் எழுப்பின காரணத்தினுண்மையை அந்த ராக்ஷஸர்களால் தெரிந்துகொண்ட கும்பகரணன் தனதண்ணனாகிய ராவணன் யுத்தத்தில் ராமனால் தோல்வியடைந்ததை நினைத்து மிகுந்த கோபத்தினால் கண்கள் சுழலப்பெற்று யூபாக்ஷன் என்னும் அரக்கனை நோக்கி "யூபாக்ஷ! நான் இப்பொழுதே சென்று சமஸ்த வானர சைன்னியங்களையும், ராம லக்ஷ்மணர்களையும் யுத்தத்தில் கொன்று அப்பால் ராவணனை வந்து பார்க்கிறேன். ராக்ஷஸர்களுக்குத் திருப்தியுண்டாகும்படி நானே ராம லக்ஷ்மணர்களது குருதியைப் பானஞ்செய்கிறேன்" என்றனன். இங்ஙனம் கர்வித்து ரோஷத்தினால் மொழிகின்ற கும்பகரணனது வார்த்தையைக்கேட்ட ராக்ஷஸர்களில் முக்கியனான மகோதரன்

கைகளைக் குவித்து "மகாபாகுவே! நீ ராவணனிடம் வந்து அவன் சொல்வதைக்கேட்டு, குண தோஷங்களை யாலோசித்து அதன் பிறகு யுத்தத்திற்குச் செல்வாயாக" என்று கூறி அவனை ராவணனது அரண்மனைக்கு அழைத்துச் சென்றனன். லங்கைக்கு வெளியிலுள்ள வானரர்களும் சேனாதிபதிகளுங்கூட அளவிட முடியாத பெரிய உருவமுடையவனும் மிகவும் பயங்கரமான தோற்றமுடையவனுமான கும்பகரணன் ராஜமார்க்கத்தில் செல்லும்பொழுது அவனைக் கண்டு மிகவும் பயந்தனர். சிலர் வருந்தித் தரையில் விழுந்தனர். சிலர் 'ஓ' வென்றலறிய வண்ணம் ராமனைச் சரணமடைந்தனர். சிலர் பயத்தினால் பீடிக்கப்பட்டு திசைகளைக் குறித்து ஓடிப்போயினர். சிலர் தரையில் படுத்தனர். ... ... (60)

61. விபீஷணன் கும்பகரணனுடைய விருத்தாந்தத்தை ராமனுக்குக் கூறுதல்.

ராமன் கிரீடந்தரித்துப் பெருந்தேகத்துடன் ராவணனது அரண்மனைக்குச் செல்கின்ற கும்பகரணனைக் கண்டு ஆச்சரியத்துடன் விபீஷணனை நோக்கி அவனது (கும்பகரணனது) பெயரையும் விருத்தாந்தங்களையும் நன்கு கூறும்படி வினவினன். விபீஷணன் ராமனைப் பார்த்து "ராமா! இவன் ராவணனது தம்பியான கும்பகரணனென்பவன். யுத்தத்தில் யமனையும் தேவேந்திரனையும் வென்றவன். உருவத்தின் உயர்த்தியும் பருமனுமாகிய அளவில் இவனைப்போன்ற ராக்ஷஸன் மற்றொருவனுமில்லை, ராமா! மகாபலவானான கும்பகரணன் கையில் சூலத்தை ஏந்தி அகன்ற கண்களுடன் யுத்தத்தின் முனையில் வந்து நிற்கையில் தேவதைகளும் இவனை யடிக்கமுடியாமல் 'இவன் உலகங்களை நாசம் செய்யும் காலனே' என்று பிரமித்து ஓடிப்போயினர். இவன் வரம் பெற்றமையால் மாத்திரமேயன்று, இயற்கையாகவும் மிகுந்த பலமுடையவன். இவன் பிறந்த உடனே மிகுந்த பலவானாகிப் பசியினால் வருந்திப் பலவாயிரம் பிரஜைகளைத் தின்றனன். இங்ஙனம் ஜனங்களையெல்லாம் பிடித்துத் தின்றுகொண்டிருக்கையில் அவர்கள் பயத்தினால் பீடிக்கப்பட்டு தேவேந்திரனைச் சரணமடைந்தனர். உடனே இந்திரன் கோபமுற்றுத் தனது வஜ்ஜிராயுதத்தினால் கும்பகரணனை அடித்தனன். அதனால் கும்பகரணன் சிறிதுநேரம் வருத்தமுற்றிருந்து உடனே கோபத்தினால் உரக்க இரைச்சலிட்டனன். பின்னும் அந்தக் கும்பகரணன் கோபத்தினால் ஐராவதத்தினுடைய (இந்திரனது யானை) தந்தத்தைப் பிடுங்கி இந்திரனுடைய மார்பிலடித்தனன். தேவேந்திரன் மிகவும் வருந்தி சமஸ்தப் பிரஜைகளுடன்கூடி பிரமதேவனை யடைந்து கும்பகரணனால் ஏற்பட்ட பயத்தைக் கூறினன். ஜனங்களைத் தின்பதும் தேவதைகளை அவமதிப்பதும், ரிஷிகளின் ஆச்சிரமங்களை துவம்ஸம் செய்வதும், பரஸ்திரீகளை யபகரிப்பதுமாகிய இவை முதலிய கும்பகரணனுடைய கொடிய செயல்களை யெல்லாம் கேட்ட பிரமதேவன் கும்பகரணனை அதுமுதல் செத்தாற்போல் படுத்துத் தூங்கும்படியாகச் சபித்துவிட்டனன். இதைக் கேட்ட ராவணன் பிரமதேவனை வணங்கி 'தேவ! நன்கு வளர்ந்து சுவர்ணம்போல் ரமணீயமாகிய ஓர் மரத்தை, அது பலிக்குங்காலத்தில் வெட்டிப் போடுவதுபோல் உமது பேரனான இவனை (கும்பகரணனை) இங்ஙனம் சபிப்பது யுக்தமன்று. ஆகையால் உமது வார்த்தை பொய்யாகாமல் இவன் தூங்கிக் கொண்டே இருக்கட்டும். ஆயினும் இவன் தூங்குவதற்கும் விழித்துக்கொள்வதற்கும் ஒரு கால வரம்பையாவது ஏற்பாடு செய்யவேண்டும்' என்றனன். பிரமதேவன் 'சரி' யென்று கூறி 'கும்பகரணன் ஆறு மாதங்களுக்குக் குறையாமல் தூங்குவதும், ஆறு மாதங்களுக்கொரு நாள் விழித்துக்கொள்வதுமா யிருப்பான். விழித்துக்கொள்ளும் காலத்தில் பசித்து வாயைத் திறந்துகொண்டு பூமியில் திரிபவனாகி நெருப்புப்போல் உலகங்களை நாசம் செய்வான்' என்றனன். ராமா! இப்பொழுது ராவணன் உனது பராக்கிரமத்திற்கஞ்சி விசனமடைந்து தூங்கிக் கொண்டிருந்த கும்பகரணனை எழுப்பி விட்டனன். வானரர்கள் இப்பொழுதே இவனைக் கண்டு பயந்தோடுகின்றார்களே! இவன் கோபத்துடன் எதிர்ப்பானாயின் எப்படித் தடுப்பார்கள்? 'இது ராக்ஷஸர்களால் மிக உன்னதமாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு யந்திரமேயல்லது வேறொன்றுமன்று' என்று வானரர்களெல்லோர்க்கும் சொல்லி அவர்களை பயமில்லாதவர்களா

யிருக்கும்படி செய்யவேண்டும்" என்றனன். இவற்றைக்கேட்ட ராமன் மிகவும் ஆச்சரியப்பட்டு சேனாபதியான நீலனைப் பார்த்து "நீ போய் சமஸ்த சைன்னியங்களையும் வியூகங்களாக ஏற்படுத்தி லங்கையிலுள்ள வாசற்படிகளையும், நடமாடுமிடங்களையும் சாரங்களையும் ஆக்கிரமித்து நிற்பாயாக. யுத்தத்திற்கு வேண்டிய பர்வத சிகரங்களையும் பெரிய மரங்களையும் சிலைகளையும் இப்பொழுதே குவியல் குவியல்களாக சித்தப்படுத்தி வைப்பாயாக" என்றனன். நீலனும் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு அங்ஙனமே செய்தனன். ... (61)

62. ராவணன் தனக்கு ராமனால் விளைந்த ஆபத்தைக் கும்பகரணனுக் கறிவித்து அதைத் தீர்க்கும்படி அவனை வேண்டுதல்.

கும்பகரணன் ராவணனது அரண்மனையில் பிரவேசித்து சிம்மாசனத்தி லுட்கார்ந்திருக்கும் ராவணனைக் கண்டு வணங்கினன். ராவணன் அவனை எடுத்துத் தழுவி அவனை யொரு ஆசனத்திலிருத்தினன் கும்பகரணன் ராவணனை நோக்கி "அண்ணா! நீ நித்திரை போய்க் கொண்டிருந்த என்னை இவ்வளவு ஆதரவுடன் ஏன் எழுப்பினை? உனக்கு எவனால் பயமுண்டாகி யிருக்கிறது? எவன் இப்பொழுது என்னால் மரணமடைய விரும்புகின்றான்?" என்றனன். ராவணன் அவனை நோக்கி 'கும்பகரணா! மகா பலவானான ராமன் சுக்கிரீவனோடும் வானர சேனைகளோடுங் கூடி சமுத்திரத்தைத் தாண்டி இவ்விடம் வந்து நம்மை வேரோடு நாசம் செய்கின்றனன். மூல பலத்தையெல்லாம் பாழ் செய்கின்றனன். சமுத்திரம்போல் கரையில்லாத வானர சைன்னியங்களினால் லங்கையைச் சூழ்ந்துகொண்டு நம்மைத் துன்பப்படுத்துகின்றனன். தம்பி! இந்த துக்கத்தை என்னவென்று சொல்லுவேன்? நமது ராக்ஷஸர்களில் மேன்மையுற்றவர் பலரும் வானரர்களால் யுத்தத்தில் கொல்லப்பட்டனர். நான் ஒருபொழுதாயினும் யுத்தத்தில் வானர வீரர்களில் ஒருவனாவது செத்து வானரசேனை சீர்குலைந்ததாகக் காணவே இல்லை. ஆகையால் நீ இப்பொழுது அவ் வானரர்களை யெல்லாம் நாசம்செய்து லங்காபுரத்தைக் காப்பாயாக. எனது ஐசுவரியமெல்லாம் பாழாய்விட்டது. லங்கையிலுள்ள மேலான ராக்ஷஸர்களெல்லாரும் மாண்டு இப்பொழுது சிறுவர்களும் கிழவர்களுமே மிகுந்திருக்கின்றனர். ராக்ஷஸ திலகனே! தேவாசுர யுத்தங்களில் நீ பல தடவைகளில் தேவதைகளைத் தனித்தனியே வென்றிருக்கின்றனை. அசுரர்களையும் வென்றிருக்கின்றனை. உனது பராக்கிரமம் பயங்கரமாயிருக்குமல்லவா? ஆகையால் உன் வீரியத்தையெல்லாம் இப்பொழுது கைப்பற்றி உன் தேஜஸ்ஸினால் பகைவர் சேனைகளை அழிப்பாயாக. மஹாபாஹோ! நீ உனதண்ணனுக்காகப் பிறரால் செய்யமுடியாத இந்தக் காரியத்தை நிறைவேற்றுவாயாக" என்றனன். ... (62)

63. இதமுரைத்த கும்பகர்ணனை ராவணன் கோபித்தலும், கும்பகரணன் அவனிஷ்டப்படி யுத்தஞ்செய்ய விரும்புதலும்.

ராவணன் புலம்பினாற்போல் மொழிந்த வார்த்தைகளைக் கேட்ட கும்பகரணன் சிரித்து "அண்ணா! முன்பு நாம் ஆலோசனை செய்த சமயத்தில் எந்த தோஷம் சம்பவிக்குமென்று நிச்சயித்தோமோ, அந்த தோஷம் இப்பொழுது விபீஷணன், மாலியவான் முதலியவர்களின் வார்த்தையைக் கேளாமையால் உனக்கு நேரிட்டது. மகா பாதகர்களுக்கு நரகத்தில் விழுவது தவறாமல் சம்பவிப்பது போல் சீதையைத் திருடி வந்தமையாகிற நீ செய்த பாப காரியத்தின் பலன் சீக்கிரமாகவே உனக்கு நேரிட்டது. நீ கேவலம் வீரிய கர்வத்தினால் சீதையை யபகரித்த இந்த காரியத்தை அபகரிப்பதற்கு முன்னமே 'நல்லதா? அன்றா?' என்று ஆலோசிக்காமற் போயினை. நீ உன் காரியங்களை முன்னதாகவே நன்கு ஆலோசித்துச் செய்திருந்தால் இங்ஙனம் துன்பமடைந்திருக்கமாட்டாய். ராக்ஷஸேச்வரா! நீ சாஸ்திரங்களில் சொன்னபடி தருமத்தையும், அர்த்தத்தையும் காமத்தையும் கைப்பற்றவில்லை. கேவலம் நீ காமத்தையே அனுசரித்துத் தகாத காரியத்தைச் செய்தனை. மேலும் அக்காமத்தை அகாலத்தில் அனுசரித்தனை. எந்தக் காலத்திலும் கேவலம் காமத்தையே அனுசரிப்பவன் புருஷர்களில் கடைப்பட்டவனாவன். கீழ்ச்சொன்ன தருமம், அர்த்தம், காமம் (அறம், பொருள், இன்பம் என்னும்) மூன்றில் சிறந்ததான தருமத்தை நீ சிறிதும் கைப்பற்றாமல் தகாத காரியத்தில் தலையிட்டுக் கொண்டனை.

உனது மந்திரிகளோவென்றால் நீதி சாஸ்திரங்களைக் குருமுகமாகக் கேட்டறியாமல் வேஷத்தினால் மாத்திரம் உனக்கு நன்மையை விரும்புபவர்கள்போல் உன் முக உல்லாசத்தின்பொருட்டு நீ கூறுகிறது மிகவும் சரியென்று தலை யசைக்கிறார்கள். அவர்களது முகஸ்துதியான வசனங்களைக் கேட்டு நீ சிறிதும் ஆலோசனையின்றிப் பெரிய ஆபத்துக்குள்ளாயினை. அண்ணா! இது விஷயத்தில் நமது தம்பியான விபீஷணன் யாது மொழிந்தானோ அதுவே நமக்கு இப்பொழுது நன்மையாய் இருக்கிறது. ஆகையால் சீக்கிரம் சீதையை விட்டுவிடுவாயாக." என்றனன். இங்ஙனம் கும்பகரணன் கூறக்கேட்ட ராவணன் கோபித்துப் புருவத்தை நெறித்துக்கொண்டு "கும்பகரணா! சிறியவனான நீ மூத்தவனான எனக்குப் புத்தி புகட்டவேண்டாம். நீதிகாலம் கடந்துபோய்விட்டதாகையால் அந்த வார்த்தைகளால் என்ன பயன்? நீதியைக் கடந்த சமயத்திற்குத் தகுந்திருக்கிற பராக்கிரமத்தை உபயோகப்படுத்துவாயாக. அநீதியை நீதியாக பிரமித்தோ, மனத்தில் தெளிவு பிறவாமையாலோ, பல வீரியங்களால் விளைந்த கர்வத்தினாலோ செய்யவேண்டியதைச் செய்யாமற் போனேன். இப்பொழுது நீதியைப் பாராட்டுங் காலம் கடந்துபோயிற்றாகையால், அப்படிச் செய்யவில்லையே என்று அடிக்கடி சொல்வது வீணேயாகும். உனக்கு என்னிடத்தில் நட்பு உளதாயின், உன் பராக்கிரமம் உனக்குத் தெரிந்திருக்குமாயின் இப்பொழுது இந்த யுத்தம் செய்யவேண்டியது அவசியமென்று உனக்குத் தோன்றுமாயின், என் அநீதியால் விளைந்த தோஷத்தை உன் பராக்கிரமத்தினால் சரிப்படுத்துவாயாக. நீதியினின்று நழுவித் தடுமாற்றமுற்றிருப்பவர்க்கு சகாயஞ் செய்யத் தெரிந்தவனே உறவினனாவான்" என்றனன். இங்ஙனம் ராவணன் கோபத்தால் கூறின வசனங்களைக் கேட்டு கும்பகரணன் அவனை நல்ல வார்த்தைகளால் சமாதானம் செய்ய விரும்பி "ராக்ஷஸேச்வரா! உனக்கு மனவருத்தம் வேண்டாம். கோபத்தைவிட்டு சமாதான மடைவாயாக. நீ எவன்பொருட்டு இங்ஙனம் பரிதபிக்கின்றாயோ, அந்த ராமனையும் அவனது சைன்னியங்களையும் நான் இப்பொழுதே சென்று கொன்றுவிடுகிறேன். சாதாரண சிநேகத்தைப்பற்றியும் விசேஷித்து அண்ணன் தம்பிகளென்கிற சிநேகத்தைப் பற்றியும் நீ கோபமுற்றாவது சந்தோஷமுற்றாவது எப்படியிருப்பினும் உனக்கு நான் அவசியம் நன்மை சொல்லவேண்டு மாகையால் அதைச் சொல்லினேன். மிகுந்த சிநேகமுடைய பந்துவுக்கு இப்படிப்பட்ட ஆபத்துக் காலத்தில் செய்யவேண்டியது பகைவர்களை யழிக்கையே. அதை யுத்தத்தில் நடத்திக் காட்டுகிறேன்; காண்பாய். அண்ணா! இப்பொழுதே நான் யுத்தம் செய்து ராமனது தலையைத் துண்டித்துக் கொண்டு வருகையில் நீ கண்டு சுகமடைவாயாக. நான் ஒருவனே சென்று சமஸ்த வானர சைன்னியங்களையும் கொன்றுவிடுகிறேன். ராவணா! எனது பராக்கிரமம் உனக்குத் தெரியாதோ? நான் கோபித்துக் கண்களை விழித்துப் பார்ப்பேனாயின் தேவதைகளும் தரையில் வீழ்ந்துபோவார்கள். யமனையும் அடக்கிவிடுவேன், அக்கினி தேவனையும் விழுங்கிவிடுவேன். சூரியனையும் நக்ஷத்திரங்களுடன்கூட ஆகாயத்தினின்று தரையில் விழத் தள்ளுவேன். சமுத்திரத்தை யெல்லாம் பானஞ் செய்வேன். பர்வதங்களைப் பொடியாக்கிவிடுவேன். பூமியைப் பிளப்பேன். இம் மூன்று லோகங்களுஞ் சேர்ந்து என் ஒருவேளை ஆகாரத்திற்கே போதாது. இனி ராமன் எனக்கு எம்மாத்திரம்? அவ் வானரர்களை யெல்லாம் பிடித்துத் தின்றுவிடுகிறேன். நீ இஷ்டப்படி கிரீடித்துக் கொண்டிருப்பாயாக. உயர்ந்த மதுபானங்களைக் குடித்து மனக் கவலையை யொழிப்பாயாக. நான் இப்பொழுதே ராமனை யம பட்டணத்திற்கனுப்புவேன்; உடனே உனக்கு சீதை ஸ்வாதீனமாய் விடுவாள்" என்றனன். .... (63)

64. மகோதரன் கும்பகரணனை விரட்டுதல்:

கும்பகரணன் மொழிந்த வசனங்களைக் கேட்ட மகோதரன் "கும்பகரணா! நீ பெரிய குலத்தில் பிறந்தவனாயினும் உனது புத்தி அற்பமாக இருக்கின்றது. நீ மிகுந்த கர்வமுற்றவனாகையால் எந்தக் காரியத்திலும் செய்யவேண்டிய ஆலோசனை இன்னதென்று அறியவல்ல

னல்லை. நீ கூறியபடி நமதரசன் பராக்கிரம கர்வத்தினால் மேல்வரும் கெடுதிகளை ஆலோசியாமல் போகவில்லை. நியாய அநியாயங்களை அறியாமலும் போகவில்லை. (தருமத்தை விடவில்லை) நீ பாலியத்தின் கொழுப்பால் வெறும் துணிச்சலுடையவனாகி இங்ஙனம் அரசனை இகழ்ந்து கூறினையன்றி வேறில்லை. தருமத்திற்கு நல்ல பலனும் அதர்மத்திற்குக் கெட்ட பலனும் தவறாதாகையால் சீதையை யபகரித்த அதர்மத்திற்கு இப்படிப்பட்ட பலன் உண்டாயிற்றென்று நீ கூறினையல்லவா? தர்ம அர்த்த காமங்களுக்குத் தனித்தனியே அந்தந்த பலன்கள் தவறாதென்று உள்ளபடி அறிவதற்கு உனக்குப் பிரமாணம் யாதிருக்கின்றது? ஒன்றுமே இல்லையல்லவா? நாம் செய்யும் கருமங்களில் புண்ணிய கருமங்களுக்கே நல்ல பலன்களென்றும், பாப கருமங்களுக்கே தீய பலன்களென்றும் திட்டமாகச் சொல்லமுடியாது. பாப கருமங்களுக்கும் நல்ல பலனே உண்டாகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்கிற இந் நான்கும் நன்மையையே விளைவிக்கின்றன. ஆயினும் அவற்றுள் அதர்மத்திற்கு ஒருகால் கெடுதியும் நேரிடுவதுண்டு. ஆகையால் தரும அதருமங்களுக்கு நன்மை தீமைகளிரண்டும் பலனாகுமேயன்றித் தீமையே பலனென்று சொல்வது யுக்தமன்று. கும்பகரணா! தன் மனம் போனபடி கருமங்களை ஆசரிப்பவனும் மங்களகரமான நல்ல பலன்களைப் பெறுவதுண்டு. இங்ஙனம் சமஸ்த தருமங்களுக்கும் பலனில் நியதியில்லாமல் எல்லாவற்றிற்கும் எல்லாம் பலனாகுமென்கிற மதத்தைப் பற்றி, நமது மன்னவன் காமத்தை ஆசரித்து சுகம் பெறலாமென்று சீதையைக் கவருகையாகிற இந்தக் காரியத்தை மனத்தில் நன்கு ஆலோசித்தே செய்தனன். அதனை நாங்களும் செய்யத் தகுந்ததேயென்று சம்மதித்தனம். ஆதலால் பகைவர் விஷயத்தில் முன் ஆலோசனையின்றி காரியம் செய்துவிட்டதாக நீ நமதரசனை இடித்துக் கூறுவது சரியல்ல. மலைபோன்ற உருவமுடையவனே! நீ யொருவனே சகாயமின்றி யுத்தத்திற்குப் புறப்படுகிறேனென்றுகூறி, அதற்குச் சாதகமாக உனது பல பராக்கிரமங்களை யெடுத்துரைத்தனையே, அது விஷயத்திலும் நீ சிறிதும் ஆலோசனையில்லாதவனே. எந்த ராமன் முன் ஜனஸ்தானத்தில் பதினாலாயிரம் ராக்ஷஸர்களை ஒரு முகூர்த்த காலத்தில் கொன்றானோ அவனை நீ ஒருவனாகவே எப்படி ஜயிக்கவல்லவனாவாய்? நமது ராக்ஷஸ ஜாதியைச் சேர்ந்த அனைவரும் இப்பொழுதும் ராமனது பேரைச் சொல்லினும் பயப்படுவதைக் காண்கிறாயல்லவா? ராமனை மிகவும் சீற்றங் கொண்டிருக்கிற சிம்மமென்று அறியாமல், தூங்குகிற பாம்பை எழுப்புவதுபோல், உன்மேல் எதிர்க்கும்படி எழுப்ப விரும்புகின்றனை. யமனைப் போல் சகிக்கமுடியாத பராக்கிரமமுடைய அந்த ராமனை எவன்தான் அணுகவல்லவன்? ராமனுக்கெதிரில் நிற்க இந்த நமது ராக்ஷஸ பலம் முழுதும் பிராண சந்தேகத்தை யடைகின்றது. இப்படியிருக்க நீ யொருவன் மாத்திரம் அவனை எதிர்த்துப் போர்வது எனக்குச் சிறிதும் ருசிக்கவில்லை" என்றனன். பிறகு அம் மகோதரன் ராவணனைப் பார்த்து "ராவணா! நீ என்னவோ சீதையைக் கைப்பற்றியாகி விட்டது. இன்னும் எதுக்காகப் பலவாறு பேசுகின்றனை? சீதை தானே உன்னிடம் வருவதற்கு நான் ஓர் உபாயம் கண்டு பிடித்திருக்கிறேன். அதாவது நானும் துவிஜிஹ்வனும், ஸம்ஹ்ராதியும், கும்பகரணனும், விதர்த்தனுமாகிய நாங்கள் ஐவரும் ராமனைக் கொல்லும் பொருட்டுப் போக வேண்டுமென்று விளம்பரஞ் செய்வாயாக; அப்பால் நாங்கள் கஷ்டப்பட்டு ராமனோடு யுத்தஞ் செய்கிறோம். நாங்கள் அந்த ராம லட்சுமணர்களை யுத்தத்தில் கொன்று விடுவோமாயின் அப்பொழுது நமக்கு உபாயங்களால் சாதிக்கவேண்டியது ஒன்றுமில்லை. அப்படியில்லாமல் ராமன் ஜயிக்கமுடியாதவனாகி ஜீவித்திருப்பானாயின் இப்பொழுது ஆலோசித்த உபாயத்தைச் செய்வோமாக. நாங்கள் ராம பாணங்களால் எங்கள் தேகம் முழுதும் பிளவுண்டதாகச் செய்து கொண்டு ரத்தம் பெருகப் பெற்று ராமனோடு யுத்தஞ் செய்தோமென்று சீதைக்கு நம்பிக்கை உண்டாகும்பொருட்டு ராம நாமங்களோடு கூடின கொடிய பாணங்களோடு யுத்தத்தினின்று இவ்விடம் வருகிறோம். நாங்கள் அங்ஙனம் வந்து ராம லட்சுமணர்களைக் கொன்று தின்றுவிட்டோமென்று சொல்லிக்கொண்டு உன் பாதங்களில் நமஸ்காரஞ் செய்கிறோம். அப்பொழுது நீ எங்கள் விருப்பங்களை யெல்லாம் நிறைவேற்றவேண்டும். ராஜனே! பிறகு நீ எங்களில்

ஒருவனை யானையின்மேலேற்றி 'ராமலட்சுமணர்களும் வானரர்களும் மாண்டொழிந்தார்கள்' என்று பட்டணம் முழுவதும் விளம்பரஞ் செய்யவேண்டும். எங்களுக்கு அளவற்ற ஐசுவரியங்களைக் கொடுக்கவேண்டும். பிறகு இந்த விஷயம் பட்டணம் முழுதும் நன்கு பரவி சீதைக்கும் எட்டிவிடும். நீ உடனே அவளிடஞ் சென்று அவளது வருத்தத்தை நீக்கி 'என்னிடத்தில் பிரீதி செய்வாய்' என்று ஏகாந்தத்தில் நல்ல வார்த்தைகளைச் சொல்லி சுவர்ணம் முதலிய தனங்களையும், ரத்னங்களையும் மற்றும் அவளுக்கிஷ்டமான மேலான பதார்த்தங்களையும் வேண்டிய வளவு கொடுத்து அவளுக்கு ஆசையை மூட்டுவாயாக. ராஜனே! இந்தக் கபட உபாயத்தினால் சீதை பயமும் துக்கமும் உண்டாகப்பெற்று முன்பு உன்னை விரும்பாதிருப்பினும் நாதனில்லாமையால் இப்பொழுது உனக்கு மனைவியாவாள். இந்த உபாயத்தை நான் என் புத்தியினாலேயே நன்கு ஆலோசித்து நிச்சயித்தனன். நீ ராமனது கண்களில் படுவாயாயின் அனர்த்தமே விளையும். இந்த என் உபாயத்தினால் உனது கருத்து நிறைவேறக்கூடும். ஆகையால் யுத்தத்தின் பொருட்டு விருப்பங்கொள்ள வேண்டாம்" என்றனன். ... (64.)

65-66. கும்பகரணன் யுத்தஞ்செய்ய வருதலும், வானரர்கள் அஞ்சி ஓடுதலும்.

மகோதரன் இங்ஙனஞ் சொல்லுகையில் கும்பகரணன் 'இனி இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்; ஜாக்கிரதை' என்று அவனை விரட்டி ராவணனைப் பார்த்து "இப்பொழுதே நான் சென்று பகைவர்களை நாசம்செய்து வருகிறேன். கவலையற்றிருப்பாயாக" என்று கூறி பிறகு மகோதரனை நோக்கி "மதிகேடனே! உன்னைப் போன்றவருடைய வார்த்தைகளைக் கேட்பதனால் மன்னவன் இந்த ஆபத்தைப் பெற்றனன். நீங்கள் இம் மன்னவனை மேலுக்கு நண்பனாகச் சொல்லிக்கொண்டிருப்பினும் உண்மையில் நீங்கள் இவனைப் பகைவனாகக் கொண்டிருக்கையால், இவனை இவன் போகும் வழிவிட்டு, இவனொருவனே மிகும்படி செய்தீர்கள். பொக்கசத்தையெல்லாம் பாழாக்கினீர்கள். சைன்னியத்தை யெல்லாம் நாசம் செய்தீர்கள். நீங்கள் செய்த அட்டூழியங்களை யெல்லாம் இந்த யுத்தத்தினால் சரிப்படுத்தும்பொருட்டு, பகைவர்களை ஜயிக்க முயன்று இதோ நான் யுத்த பூமிக்கு இப்பொழுதே போய்க்கொண்டிருக்கிறேன்" என்றனன். இங்ஙனம் கூறின கும்பகரணனை ராவணன் நோக்கி சிரித்துக்கொண்டே "இந்த மகோதரன் ராமனிடம் மிகவும் பயந்திருப்பதால் யுத்தத்தை விரும்பா திருக்கின்றனன். கும்பகரணா! எனக்கு உன்னைப்போன்ற நண்பனும் பலவானும் எவனுமில்லை. நீ போய் ஜயத்துடன் திரும்பிவருவாயாக" என்று விடை கொடுத்தனுப்பினன். அப்பொழுது ராவணன் திடீரென்று எழுந்து இடையிடையில் ரத்தினங்களிழைக்கப்பெற்ற ஒரு பொன் மாலையை கும்பகரணனுக்குக் கட்டினன். மற்றும் சிறந்த விலையுயர்ந்த ஆபரணங்களை யணிவித்தனன். நறுமணம் கமழப்பெற்ற அழகிய மாலைகளை யவனுக்குச் சூட்டினன். உடனே கும்பகரணன் பொன் மயமான கவசத்தை யணிந்து மிகவும் பயங்கரமான பெரிய சூலத்தைக் கையிலேந்தி யுத்தத்திற்குப் புறப்பட்டனன். லக்ஷக்கணக்கான ராக்ஷஸர்கள், சூலங்களையும், கத்திகளையும், கூரான கண்டக் கோடாலிகளையும், கதைகளையும், உலக்கைகளையும் வீசி யெறியத் தகுந்தவைகளான பனைமரங்களின் அடிப்பாகங்களையும் ஏந்திக்கொண்டு கும்பகரணனைப் பின் சென்றனர். பிறகு அக் கும்பகரணன் நூறு வில்லளவு அகன்றதும், அறுநூறு வில்லளவு உயர்ந்ததும் வண்டியின் சக்கரங்களைப் போன்ற கண்களையுடையதும் பயங்கரமுமாகிய உருவத்தைத் தரித்து, எரிக்கப்பட்ட பர்வதம்போல் கறுத்த பெருஞ் சரீரமுடையவனாகி வானர சேனைகளைக் கிட்டினன். இங்ஙனம் அவன் யுத்தஞ்செய்யச் சென்றுகொண்டிருக்கையில் பயங்கரமான கெட்ட சகுனங்கள் அவனுக்கு நாற்புறத்திலும் புலப்பட்டன. பூமி சமுத்திரங்களோடும் காடுகளோடும் கிடுகிடுவென்று நடுங்கிற்று. நரிகள் பயங்கரமான உருவத்துடன் வாயினால் தீயை உமிழ்ந்துகொண்டு ஊளை யிட்டன. வழியில் கழுகுகள் மாலைபோல் வரிசையாகக் கூட்டங்கூடி அவன் தலைக்குமேல் ஆகாயத்தில் கிளம்பி வட்டமிட்டன. அவனுடைய இடது கண் துடித்தது; இடது கையும் நடுக்கமுற்றது. அப்

பொழுது ஓர் கொள்ளிக்கட்டை எரிந்துகொண்டு பயங்கரமான ஒளியுடன் ஆகாயத்தினின்று விழுந்தது. சூரியன் ஒளியற்றவனானன். கும்பகரணன் இவற்றை யெல்லாம் சிறிதும் பொருள் செய்யாமல், பர்வதம் போன்றவனாகையால், பாதங்களாலேயே மதிலைத் தாண்டி வானர சைன்னியங்களைக் கண்டனன். அப்பொழுது அந்த வானரர்கள் மலைபோன்ற அவ்வரக்கனைக் கண்டு பயந்து காற்றினாலடியுண்ட மேகங்கள்போல் எல்லாத் திசைகளுக்கும் பறந்தோடினர். இதைக் கண்ட கும்பகரணன் சந்தோஷம் உள்ளடங்காமல் அடிக்கடி சிம்மநாதஞ் செய்தனன். மேக கர்ஜனை போன்ற அவனது சிம்மநாதத்தைக் கேட்டு, பல வானரர்கள் வேரற்ற மரங்கள் போல் தரையில் வீழ்ந்தனர். அனேக வானரர்கள் மூலை மூலையாக ஓடத் தொடங்கினர். இங்ஙனம் பயந்து ஓடும் வானரர்களை அங்கதன் கண்டு சகிக்க முடியாதவனாகி நலன் நீலன் கஜன் கவாக்ஷன் குமுதன் முதலியவர்களைப் பார்த்து "ஓ! வானர வீரர்களே! சற்று நின்று நான் சொல்லுவதைக் கேளுங்கள். இந்த ராக்ஷஸன் யுத்தத்திற்கு ஏவப்பட்டவனல்லன். இது நமக்கு பயம் விளைக்கும்பொருட்டு ராக்ஷஸர்களால் ஏற்படுத்தப்பட்ட ஓர் பெரிய மிரள் பொம்மையேயாகும். இதை நமது பராக்கிரமத்தினால் துவம்சம் செய்வோம். திரும்பி வாருங்கள்" என்றனன். உடனே வானரர்களனைவரும் சமாதானமடைந்து மலைகளையும் மரங்களையும் கைகளில் ஏந்திக்கொண்டு வந்து அவற்றால் கும்பகரணனை அடித்தனர். மிகுந்த பலவானான அக் கும்பகர்ணன் உயர்ந்த பர்வத சிகரங்களாலும், கற்களாலும், பெரிய மரங்களாலும் எவ்வளவு அடிக்கினும், அவற்றைப் பொருள் செய்யாமல் அசையாதிருந்தனன். கற்கள் முதலியவை கும்பகரணன் மேல்பட்டுப் பல சுக்கலாய் உடைந்தும், மரங்கள் முறிந்தும் தரையில் வீழ்ந்தன. பிறகு கும்பகரணன் மிகுந்த கோபங்கொண்டு அவ் வானர சைன்னியங்களை மிக முயற்சியுடன் துன்புறுத்திப் பாழ் செய்தனன். வானர வீரர்கள் கும்பகரணனால் வீசி எறியப்பட்டு தேகம் முழுவதும் ரத்தத்தினால் நனைந்து நிலத்தில் விழுந்து பரிதவித்தனர். சில வானர வீரர்கள் பின் திரும்பிப் பாராமல் ஒருவர்மேலொருவர் தாண்டுகாலிட்டு ஓடத் தொடங்கினர். கும்பகரணனது அடிகளைப் பொறுக்கமுடியாத அவ் வானர வீரர்களில் சிலர் சமுத்திரத்தில் வீழ்ந்தனர்; சிலர் ஆகாயத்தில் கிளம்பினர்; சிலர் முன்பு தாம் சமுத்திரத்தை தாண்டிவந்த சேது மார்க்கத்தில் ஓடத் தொடங்கினர். சிலர் பயத்தினால் முகம் விலவிலக்கப்பெற்று மேட்டுப் பூமிகளுக்கும் சிலர் பள்ளங்களுக்கும் ஓடிப் போயினர். சில கரடிகள் மரங்களில் ஏறிக்கொண்டன. சில பர்வதங்களைப் பற்றின. சில சமுத்திரங்களில் வீழ்ந்து மூழ்கின; சில குகைகளையடைந்தன. சில வானரர்கள் மூர்ச்சையடைந்து செத்தாற்போல் தரையில் வீழ்ந்து கிடந்தனர். அங்கதன் தோல்வியடைந்து ஓடுகின்ற வானரர்களைக் கண்டு "ஓ வானர சிரேஷ்டர்களே! எதிரில்லாத பராக்கிரமமுடைய நீங்கள் ஆயுதத்தைத் துறந்து ஓடிப்போவீர்களாயின் உங்கள் மனைவிகளே உங்களைப் பரிகாசஞ் செய்வார்கள். மானத்துடன் பிழைக்கின்ற ஆண்களுக்கு அதுவே மரணமல்லவா? இதைக் காட்டிலும் வேறு மரணம் வேண்டுமோ? மிகவும் உயர்ந்த நற்குலத்தில் பிறந்த நீங்கள் யுத்தத்தில் இங்ஙனம் ஓடிப்போவது சரியோ? வானரர்களே! முன்பு நீங்கள் யுத்தம் ஆரம்பிக்குமுன் 'நாங்கள் அப்படிப்பட்டவர்; இப்படிப்பட்டவர்' என்று பலவாறாக உங்களை நீங்களே புகழ்ந்து கொண்டீர்களல்லவா? அளவிறந்து கம்பீரங்களான அந்தப் பிதற்றல்களெல்லாம் இப்பொழுது எங்குப் போயின? எவன் தோல்வியடைந்து உயிருடன் இருக்கின்றானோ அவனைப்பற்றி பயங்கொள்ளி யென்னும் அபவாதங்கள் பலவாறு ஜனங்கள் சொல்லச் செவிபடுகின்றன. ஆகையால் வீரத்துடன் திரும்பி வருவீர்களாக. வயது அற்பமே யாகையால் எவரும் வெகுகாலம் பிழைத்திருக்கப் போகிறதில்லை. யுத்தத்தில் அடியுண்டு மாண்டு போகையால் எப்படிப்பட்டவருக்கும் பெறமுடியாத பிரம்மலோகத்தையாவது பெறுவோம்; அல்லது பகைவர்களைக் கொன்று கீர்த்தியையாவது பெறுவோம். எரிகின்ற நெருப்பைப் பார்த்தபின் விட்டில் பூச்சி பிராணனுடன் திரும்பமுடியாதாப்போல், கும்பகரணன் ராமனைப் பார்த்தபின் பிராணனோடு திரும்பிப் போகவல்லனல்லன். நாம் இதுவரையில் நல்ல பெயரெடுத்து இன்று கும்பகரணனால் தோல்வியடைந்து ஓடிப்போய்

பிராணன்களைப் பாதுகாத்துக் கொள்வோமாயின் நாம் இத்தனை நாள் சம்பாதித்த கீர்த்தியெல்லாம் நசித்துப்போகும்" என்றனன். இதைக்கேட்ட ஓடுகின்ற வானரர்கள் உத்சாகமடைந்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு யுத்தத்திற்கு சித்தமாயிருந்தனர். ... (66)

67. கும்பகரணன் சுக்கிரீவனால் அவமானமடைந்து ராமனோடு யுத்தஞ் செய்து மாண்டுபோதல்.

பிறகு அவ் வானரர்கள் பெரிய மரங்களையும், தாழ்வரைகளையும் எடுத்துக்கொண்டு கும்பகரணனை மீண்டும் எதிர்த்து வந்தனர். ஆனால் கும்பகர்ணனுடைய ஒவ்வொரு அடிக்கும் வானரர்கள் துன்பத்தையடைந்து அவயவங்கள் தளர்ந்து எழுநூறும், எண்ணூறும் ஆயிரமுமாகத் தரையில் வீழ்ந்தனர். அக் கொடியவரக்கன் மிகவும் கோபித்து கருடன் சர்ப்பங்களைத் தின்பதுபோல் வானரர்களை எட்டும், பத்தும், பதினாலும் இருபதும் முப்பதுமாக கைகளால் பிடித்து வாயில் போட்டுத் தின்றுகொண்டே யுத்தரங்கத்தில் விளையாடினன். ஆயினும் வானரர்கள் ஆங்காங்கு ஒன்றாகக் கூடி மரங்களையும் பர்வதங்களையும் கையில் ஏந்திக்கொண்டே யுத்தத்தின் முனையில் நின்றனர். ரதங்களில் நின்று சண்டை செய்கிற வீரர்களான ராக்ஷஸர்கள் பிரளயகால யமன்களைப்போல் பாணங்களை யெய்து வானரர்களின் தலைகளை வேகமாக அறுத்துத் தள்ளினர். வானரர்களும் பெரிய பெரிய மரங்களைப் பிடுங்கி அவற்றால் ரதங்களை முறித்துக் குதிரைகளையும் யானைகளையும் ஒட்டகங்களையும் ராக்ஷஸர்களையும் உருமாய்த்தனர். அனுமான் ஒரு பெரிய மலைச் சிகரத்தைக் கும்பகரணனது மார்பின்மேல் வீசி எறிந்தனன். அதனால் கும்பகரணன் வருந்தி மேதஸ்ஸும் ரத்தமும் பெருகி உடம்பெல்லாம் நனையப்பெற்றுக் கலக்கமுற்றனன். சற்று நேரம் கழித்து கும்பகரணன் கொடிய சூலாயுதத்தைக் கிருகிருவென்று சுழற்றி அனுமானுடைய மார்பைப் பிளந்தனன். அதனால் அனுமான் மூர்ச்சையடைந்து வாயினால் ரத்தத்தைக் கக்கி வீழ்ந்தனன். வானரர்கள் வீசி யெறியும் பர்வதங்களைக் கும்பகரணன் கையினால் சூரணம் செய்தனன்; அவர்களெறிந்த மரங்களை முறித்தனன். வானரர்கள் முட்டிகளாலும் பாதங்களாலும் அவனைத் தகைந்தனர். அந்த அடிகளை யெல்லாம் அவன் வெறுமனே தொடுவதுபோல் நினைத்தானன்றி சிறிதும் வருந்தவில்லை. கும்பகரணன் ருஷபனை இரண்டு கைகளாலும் அழுந்தக் கட்டியிறுக்கினன். உடனே ருஷபன் வாயினால் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு தரையில் வீழ்ந்தனன். பின்னுமந்த கும்பகரணன் யுத்தத்தில் முட்டியால் சரபனை யடித்து முழங்காலால் நீலனை இடித்து உள்ளங்கையால் கவாக்ஷனை அறைந்தனன். கந்தமாதனனைப் பாதத்தாலுதைத்தனன். பிறகு பல வானர வீரர்கள் மலைமேல் கிளம்பி உட்காருவதுபோல், கும்பகரணன்மேல் ஏறி உட்கார்ந்து அவனைப் பற்களால் கடித்தனர். பிறகு அவனை நகங்களால் பீறுவதும், முட்டிகளால் குத்துவதும், முழங்கால்களால் குமுக்குவதுமாகிப் பலவாறு துன்புறுத்தினர். கும்பகரணன் பலவானாகையால் கருடன் பாம்பைத் தின்பதுபோல் வானரர்களெல்லோரையும் கையால் பிடித்துத் தின்னத் தொடங்கினன். அங்ஙனம் அவன் வானரர்களைக் குகைபோன்ற வாயில் போட்டுக்கொண்டவுடனே அவர்கள் மூக்கின் துவாரங்களினின்றும் காதுகளினின்றும் புறப்பட்டு வெளி வந்தனர். இதைக்கண்ட அப் பெரும் பூதம்போன்ற அரக்கன் கோபித்தவனாகி வானரர்களை யெல்லாம் முறித்துத் தின்னத் தொடங்கினன். அவன் பிரளய காலாக்கினிபோல் ரௌத்திராகாரனாகி மெய்மறந்து பூமி முழுதும் ரத்த மாமிசங்களால் நனைத்துக்கொண்டு வானர சைன்னியங்களிடையில் விளையாடினன். இதைக்கண்ட சுக்கிரீவன் மிகுந்த கோபத்துடன் கும்பகரணனை எதிர்க்க விரும்பி வஜ்ஜிரமும் இடியும்போன்ற ஒரு பருவதத்தைக் கிருகிருவென்று சுழற்றி கும்பகரணனது மார்பில் விழும்படி அடித்தனன். ஆனால் அந்தப் பர்வதம் கும்பகரணனது மார்பில் பட்டுச் சூரணமாகியது. பிறகு கும்பகரணனால் எறியப்பட்ட மிகவும் பெரிய இரும்பினால் செய்யப்பட்ட சூலாயுதம் அனுமானால் தடுக்கப்பட்டு ஒடிந்துபோயிற்று. கும்பகரணன் ஒரு பெரிய மலைச் சிகரத்தைப் பிடுங்கிக்கொண்டுவந்து சுக்கிரீவன்மேல் வீசி எறிந்தனன். அதனாலடியுண்ட சுக்கிரீவன் மூர்ச்சித்து யுத்த பூமியில் வீழ்ந்தனன். அதுகண்டு

ராக்ஷஸர்களெல்லோரும் சந்தோஷமுற்று சிம்மநாதஞ் செய்தனர். வானரர்கள் மிகவும் துக்கித்தனர். உடனே கீழே மூர்ச்சித்து விழுந்துகிடந்த சுக்ரீவனைக் கும்பகரணன் கிட்டி அவனை எடுத்துக்கொண்டு ‘இவனைக் கொண்டுபோனோமாயின் ராம லக்ஷ்மணர்களோடு கூடின இவ் வானர சைன்னியத்தை யெல்லாம் பிடித்துக் கொண்டாற்போலவேயாகும்’ என்று நினைத்து லங்கையை நோக்கி நடந்தனன். இதுகண்ட அனுமான் அப்பொழுதே சென்று சுக்ரீவனை விடுவிக்கக்கூடிய சாமர்த்தியமுடையவனேயாயினும், அப்படிச் செய்யின் சுக்ரீவனது கீர்த்தி பாழாய்விடுமென்று கருதி வாளாவிருந்தனன். அனுமான் அந்த சுக்ரீவன் தானே தன்னை விடுவித்துக்கொண்டு வந்து அவனது பராக்கிரமத்தை அனைவரும் காண வேண்டுமென்று வாளாவிருந்தனன். வானரர்களெல்லோரும் மிகவும் வருந்தி உத்சாகமிழந்தனர். பிறகு கும்பகரணன் லங்கையில் பிரவேசித்து ராஜ மார்க்கத்தில் சென்றுகொண்டிருக்கும்பொழுது ராக்ஷஸர்கள் சந்தோஷத்தினால் கும்பகரணன்மீது புஷ்ப வர்ஷங்களையும் பன்னீர்த் துளிகளையும் பொழிந்தனர். இதனால் சுக்ரீவன் மூர்ச்சை தெளிந்து கும்பகரணனுடைய மார்பில் இருந்துகொண்டு அவனை எவ்விதம் அவமானம் செய்து தப்பிப் போகலாமென்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தனன். பிறகு சுக்ரீவன் திடீரென்று தனது கூரிய நகங்களால் கும்பகரணனுடைய காதுகளைப் பீறிப் பற்களால் மூக்கைக் கடித்துக்கொண்டு பக்கங்களிலுள்ள கன்னங்களையும் தோள்களையும் வயிற்றின் பக்கங்களையும் பாதங்களால் பிளந்தனன். கும்பகரணன் அங்ஙனம் சுக்ரீவனால் மூக்கையும் காதையும் இழந்து மிகவும் கோபமுற்று சுக்ரீவனைக் கிருகிருவென்று சுழற்றித் தரையில் போட்டுத் துவைத்தனன். இங்ஙனம் கும்பகரணன் துவைக்கினும், ராக்ஷஸர்கள் பலவாறு புடைத்துக் கொண்டிருப்பினும், சுக்ரீவன் அவற்றைப் பொருள்செய்யாமல் வேகமாக ஆகாயத்திற் கிளம்பி ராமனிடம் வந்து சேர்ந்தனன். சுக்ரீவன் தப்பித்துக்கொண்டு போனவுடன் கும்பகரணன் காது மூக்குகளை யிழந்து லங்கைக்குச் செல்ல வெட்கி மீண்டும் யுத்தஞ்செய்ய விரும்பி வானர சைன்னியங்களை நோக்கி வந்தனன். அவன் வேகமாக அந்த சைன்னியத்தில் புகுந்து மிகுந்த கோபத்துடன் வானரர்கள் கணக்கற்ற பர்வதங்களாலும் மரங்களாலும் அடிப்பினும் அவற்றைச் சிறிதும் பொருள் செய்யாமல் அளவற்ற வானரர்களைப் பிடித்துத் தின்று கொண்டிருந்தனன். இதனால் வானரர்கள் அவனுக்கு முன் நிற்கமுடியாமல் ராமனைச் சரணமடைந்தனர். அப் பெரும் பூதம் வானரர்கள் ஓடிக்கொண்டிருக்கையில் அவர்களைப் பின் தொடர்ந்து எழுநூறும் எண்ணூறும் முப்பது நூறுமாக இரண்டு கைகளாலும் இறுக்கிப் பிடித்துத் தின்றுகொண்டே தொடர்ந்தோடியது. பிறகு அக் கொடிய வரக்கன் ராமனை எதிர்த்து வந்தனன். ராமன் பயங்கரமும் கூரானவைகளுமான பாணங்களை அவனது மார்பில் நாட்டினன். அதனால் வருந்தின கும்பகரணனது வாயினின்றும் நெருப்புப் போன்ற ஜ்வாலைகள் வெளிப்பட்டன. அவன் கையிலிருந்த பெரிய கதை நழுவித் தரையில் விழுந்தது. அவனது கத்தி முதலிய ஆயுதங்கள் அனைத்தும் சிதறித் தரையில் வீழ்ந்தன. அப்பால் கும்பகரணன் தான் ஆயுதமில்லாதிருப்பதை யறிந்து முட்டிகளாலும் கால்களாலும் பெரிய யுத்தஞ் செய்தனன். பிறகு கும்பகரணன் ஓர் பர்வத சிகரத்தை யெடுத்து கிருகிருவென்று சுழற்றி ராமனைக் குறித்து வீசி எறிந்தனன். ராமன் அதை ஏழு பாணங்களால் கண்டித்துச் சூரணமாக்கினன். உடனே லக்ஷ்மணனது விருப்பத்தின்படி கணக்கற்ற வானரர்கள் கும்பகரணன்மேல் ஏறிக்கொண்டனர். அவன் மிகவும் கோபமுற்று மதம் பிடித்த யானை மாவெட்டிக்காரர்களை உதறுவதுபோல் அவ் வானரர்களெல்லோரையும் உதறிப் போட்டனன். இதைக்கண்ட ராமன் மேலான வில்லை யெடுத்துக்கொண்டு கோபத்தினால் கண்கள் சிவக்கப்பெற்று கும்பகரணனை எதிர்த்து வந்தனன். அவன் அவ் வரக்கனை நோக்கி “ராக்ஷஸாதிபதீ! நீ இந்திரனை ஜயித்தோமென்று கர்வங்கொள்ளவேண்டாம், என்னை ராமனென்றறிவாயாக. நான் இந்திரனல்லேன். இன்னும் சிறிது நேரத்திற்குள்ளாக என்னால் உயிரை இழக்கப் போகிறாய்” என்றனன். இதைக்கேட்ட கும்பகரணன் ராமனை நோக்கி “நான் விராதனல்லேன்; கபந்தனுமல்லேன்; கரனுமல்லேன்; மாரீசனுமல்லேன்; வாலியு

மல்லேன். நீ இவர்களைக் கொன்றேனென்று கர்வங் கொள்ளவேண்டாம். என்னைக் கும்பகர்ணனென்று அறிவாயாக” என்று கூறி சிறந்த இரும்பினால் செய்யப்பட்ட ஓர் பெரிய கதாயுதத்தைச் சுழற்றினன். ராமன் வஜ்ஜிரத்தோடொத்த வேகமுடைய கூரான பாணங்களால் கும்பகரணனை அடித்தனன். கும்பகரணன் அங்ஙனம் அடிபட்டும் சிறிதும் கலக்கமுறவில்லை, வருத்தத்தையும் அடையவில்லை. எந்த பாணங்களால் முன்பு மேலான ஏழு ஸால மரங்கள் பிளக்கப் பெற்றனவோ, வாலியும் மாண்டு போயினனோ, அப்படிப்பட்ட பாணங்கள் இப்பொழுது கும்பகரணனது சரீரத்தில் சிறிதும் வருத்தம் விளைவிக்கவில்லை. கும்பகரணன் பயங்கரமான இரும்புக் கதாயுதத்தைக் கிருகிருவென்று சுழற்றியவண்ணம் ராம பாணங்களின் வேகத்தைத் தடுத்துக்கொண்டு வந்தனன். மீண்டும் அந்த கதாயுதத்தினால் வானர சைன்னியங்களை அடித்து விரட்டி ஓட்டினன். இதுகண்ட ராமன் அஸ்திரங்களிற் சிறந்த வாயவ்யாஸ்திரத்தை யெடுத்து அந்த ராக்ஷஸன்மேல் பிரயோகித்தனன். அது இரும்பு கதாயுதத்தோடு கூடின அவனது கையைத் துண்டித்தது. அவன் கை யறுப்புண்டு பெருங் கோஷமாக இரைச்சலிட்டனன். பிறகு அவ் வரக்கன் இரண்டாவது கையினால் ஓர் மரத்தைப் பிடுங்கி எடுத்து ராமனை எதிர்த்து ஓடி வந்தனன். ராமன் தாமதியாமல் ஓர் விசித்திரமான பாணத்தை ஐந்திராஸ்திர (இந்திரனது அஸ்திரம்)த்தினால் அபிமந்திரித்து கும்பகரணனுடைய இரண்டாவது கையையும் அம் மரத்தோடு கூடவே துண்டித்தனன். மீண்டும் அந்த கும்பகரணன் இரைச்சலிட்டுக்கொண்டு தன்மேல் வேகமாக எதிர்த்து வருவதைக் கண்ட ராமன் தீக்ஷணமான அர்த்த சந்திர பாணங்களால் அவனது இரண்டு கால்களையும் துண்டித்தனன். அப்பொழுதும் அக் கொடியவன் வாயைத் திறந்துகொண்டு அறுந்து விழுந்த துடைகளால் ராமன்மேல் வேகமாக எதிர்த்து வந்தனன். முடிவில் ராமன் வஜ்ஜிராயுதம் போலும் இடி போலும் மிகுந்த வேகமுடைய ஐந்திராஸ்திரத்தை மீண்டுமொருதரம் பிரயோகித்து அந்தக் கும்பகரணனுடைய தலையை அறுத்துத் தள்ளினன். பர்வதம்போன்ற அவனது தலை நிலத்தில் விழுகையில் அந்த அதிர்ச்சியினால், சய்யா கிருஹங்களும், பட்டணத்து வாசற்படிகளும், உயர்ந்த பிராகாரங்களும் முறிந்து தரையில் வீழ்ந்தன. பூமியும் பர்வதங்களும் நடுக்கமுற்றன. தேவதைகள் சந்தோஷத்தினால் பெரிய ஆரவாரத்துடன் சிம்மநாதஞ் செய்தனர். ஆகாயத்தில் நின்றிருந்த தேவர்களும், ரிஷிகளும், உரகர்களும், கருடர்களும், யக்ஷர்களும், கந்தருவர்களும் ராமனது பராக்கிரமத்தைக் கண்டு மிகவும் சந்தோஷித்தனர். பிறகு ராக்ஷஸர்கள் தீரர்களாயினும், மகாபலமுடைய கும்பகரணன் மாண்டதற்கு மிகுதியும் வருந்தி அசுரர்கள் விஷ்ணுவைப் பார்த்து பயப்படுவதுபோல் ராமனைப் பார்த்து பயந்து உரக்கக் கூச்சலிட்டனர். வானரர்களனைவரும் கும்பகர்ணன் மாண்டதைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் விருத்திராசுரனைக் கொன்ற தேவேந்திரனைப்போல் கும்பகரணனைக் கொன்ற ராமனைச் சூழ்ந்து அவனைப் பூஜித்தனர். … … … … (67.)

68. ராவணன் கும்பகரணனை நினைத்துப் புலம்புதல்.

யுத்தத்தில் தோல்வியடைந்த ராக்ஷஸர்கள் லங்கைக்குச் சென்று ராமபாணத்தினால் கும்பகரணன் மாண்டொழிந்தானென்று ராவணனுக்குச் சொல்லினர். இதைக் கேட்ட ராவணன் மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்தனன். தேவாந்தகன் நராந்தகன், திரிசிரன், அதிகாயன் ஆகிய இவர்கள் சிற்றப்பன் மாண்டதை அறிந்து சோகத்தினால் வருந்திப் புலம்பி அழுதனர். மகோதரனும் மஹாபார்சுவனும் மத யானை போன்ற கும்பகரணன் இறந்ததைக் கேட்டு துக்கத்தினால் பீடிக்கப் பெற்றனர். பிறகு ராவணன் மூர்ச்சை தெளிந்து கும்பகரணனை நினைத்து “ஆ! வீரனே! பகைவர்களின் கர்வத்தை அழிப்பவனே! கும்பகரணா! நீ தெய்வகதியினால் என்னைவிட்டு இப்பொழுது யமலோகத்திற்குப் போயினையே! நான் எதைப்பற்றி தேவாசுரர்களுக்கும் பயப்படாதிருப்பேனோ அப்படிப்பட்ட எனது வலது புஜம் விழுந்து போனமையால் (நீ பட்டுப் போனமையால்) நான் உயிருடனிருந்தும் இல்லாதவனாகவே

ஆயினன். ஐயோ! கும்பகரணா! உனக்கு வஜ்ஜிராயுதத்தினடியும் இடியும் எப்பொழுதும் வருத்தம் விளைவிக்க வல்லவையாகமாட்டாவே. அப்படிப்பட்ட நீ எப்படி கேவலம் மானிடனை ராமனது பாணங்களால் பீடிக்கப்பெற்றுத் தரையில் வீழ்ந்து உறங்குகின்றனை? அதோ ஆகாயத்தில் தேவர்களும் ரிஷிகளும் கூட்டங் கூடி நீ மாண்டமைபற்றி மிகவும் சந்தோஷமுற்றிருக்கின்றனரே! நீ மாண்டமையால் வானரர்களும் மிகுந்த தைரியமடைந்து நுழைய முடியாத லங்கையின் வாயிற்படிகளில் நுழைந்து பட்டணத்தை நாசம் செய்வார்களே. அந்தோ! இனி ராஜ்ஜியத்தினால் எனக்குப் பிரயோஜனமில்லை. இனி சீதையைக் கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன்? கும்பகரணனைப் பிரிந்த பின்பு எனக்குப் பிழைப்பதிலேயே இஷ்டமில்லை. நான் எனது தம்பியைக் கொன்ற ராமனை யுத்தத்தில் கொல்லாது போவேனேயாயின், எனது பிழைப்பு வீணேயாகும். அதைக் காட்டிலும் எனக்கு மரணமே நன்மை. இப்பொழுது என் தம்பி எவ்விடம் போயினனோ அங்கு நானும் செல்கிறேன். ஐயோ! கும்பகரணா! நீ மாண்டு போயினையே! இனி நான் இந்திரனை எப்படி வெல்வேன்? புண்ணியாத்துமாவான விபீஷணன் என் க்ஷேமத்தை விரும்பிச் சொன்ன வார்த்தைகள் இப்பொழுது எனக்கு உண்மையாகவே தோன்றுகிறது. அவற்றை நான் முன்பு அறியாமையால் கேளாமற் போயினேன். நான் தருமவானான விபீஷணனைத் துரத்தினேனல்லவா? அந்தப் பாவ காரியத்தின் பலனே இப்பொழுது எனக்கு துக்கத்தை விளைக்கின்றதுபோலும்'' என்று புலம்பி துக்கத்தைப் பொறுக்க முடியாமல் வருத்தத்தின் மிகுதியால் மூர்ச்சித்து வீழ்ந்தனன். ... (68.)

69. ராவணன் அனுப்பின மகோதரன் முதலிய ராக்ஷசர்கள் யுத்தத்திற்கு வருதல்.

கும்பகரணனது மரணத்தினால் மிகவும் வருத்தமுற்றிருக்கும் ராவணனை அவனது மகனான திரிசிரன் அநேக தைரிய மொழிகளைக் கூறித் தேற்றினன். அப்பொழுது ராவணனது மற்ற குமாரர்களான தேவாந்தகன் நராந்தகன் அதிகாயன் முதலியவர்கள் மிகுந்த உத்சாகத்துடன் 'நான், நான்' என்று கர்ஜித்துக்கொண்டு யுத்தம் செய்யத் தயாராக விருந்தனர். அந்த ராவணனது மைந்தர்கள் அனைவரும் மாயையில் கைதேர்ந்தவர்; தேவதைகளுடைய கர்வத்தையும் அடக்கும் தன்மையர்; சிறந்த பலமும் பரந்த புகழுமுடையவர். உயர்ந்த வரங்கள்பெற்றுச் சிறந்த சாஸ்திர ஞானமுடையவர். அப்படிப்பட்ட வீரர்களான தனது புதல்வர்களை ராவணன் அணைத்துச் சிறந்த பூஷணங்களால் அலங்கரித்து மேலான ஆசீர்வாதங்களால் உத்சாகப்படுத்தி யுத்தத்திற்கு அனுப்பினன், அவர்களுக்குத் துணையாகத் தனது உடன் பிறந்தவர்களான மகோதரனையும் மகா பார்சுவனையும் அனுப்பினன். உடனே ராவணன் குமாரர்கள் நான்கு பேர்களும் அந்த மகோதர மகாபார்சுவர்களுடன் ராவணனை வணங்கி மிகுந்த உத்சாகத்துடன் யுத்தத்திற்குப் புறப்பட்டனர். மகோதரன் சுதர்சனமென்னும் சிறந்த யானையின்மேல் ஏறிச் சென்றனன். ராவணனது புத்திரனான திரிசிரன் தன் மூன்று தலைகளிலும் மூன்று கிரீடங்களை யணிந்து மேலான ரதத்தில் ஏறிச் சென்றனன். அதிகாயன் தேவதைகளால் சூழப்பட்ட தேவேந்திரன்போல் ராக்ஷஸர்களால் சூழப்பட்டுச் சிறந்த அலங்காரஞ் செய்யப்பெற்ற தேரில் ஏறிச்சென்றனன். நராந்தகன் இந்திரனது குதிரைபோல் தோன்றுவதும் பொன் பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டதும் மனோவேகமுடையதுமான வெளுத்த குதிரையின் மேலேறிச் சென்றனன். பின்னுமவன் சக்தியென்னு மாயுதத்தைத் தரித்து வேலாயுதம் பிடித்த சுப்ரமணியனைப்போல் பிரகாசித்தனன். தேவதைகள் நிகரில்லாத சைன்னியங்களால் சூழப்பட்டு அமராவதியினின்று புறப்படுவதுபோல் அந்த ராக்ஷஸர்கள் அளவிறந்த சைன்னியங்களால் சூழப்பட்டு லங்கையினின்று புறப்பட்டனர். அவர்கள் 'பகைவர்களையாயினும் ஜயிக்கவேண்டும் அல்லது அவர்களால் மரணத்தையாவது அடையவேண்டும்' என்று நிச்சயித்துக்கொண்டு புறப்பட்டனர். அவர்கள் மிகுந்த செருக்கினால் பயங்கரமான சிம்மநாதங்களைச் செய்துகொண்டு பளபளப்பான ஆயுதங்களை யேந்தி வானர சேனைகளை நோக்கிச் சென்றனர். வானர வீரர்கள் தங்களை நோக்கிவரும் ராக்ஷஸ சைன்னியங்

களைக் கண்டு தமது பராக்கிரமத்தை வெளியிட அவகாசம் கிடைத்ததென்று பெரிய மலைகளை ஏந்திக்கொண்டு அவர்களை எதிர்க்கத் தயாராயிருந்தனர். பின்னும் அவ் வானர வீரர்கள் பயங்கரமான ராக்ஷஸ சேனையில் புகுந்து பர்வதங்களைக் கைகளில் ஏந்திச் சிகரங்களோடு கூடின மலைகள்போல் உலாவினர். அவர்களிற் சிலர் பெரிய அடிபாகத்தையுடைய மரங்களைப் பிடுங்கி ஏந்திக்கொண்டு பெருங் கோபாவேசத்துடன் ஆகாயத்திலிருந்தும் பூமியிலிருந்தும் ராக்ஷஸர்களை யெதிர்த்து பயங்கரமான யுத்தஞ் செய்தனர். ராக்ஷஸர்கள் வானரர்மேல் எவ்வளவு கூரான பாணங்களைப் பிரயோகிப்பினும், வானரர்கள் அவற்றை மலைகளாலும் கற்களாலும் தடுத்து ராக்ஷஸர்கள்மேல் மரங்களையும் சிலைகளையும் நிகரில்லாதபடி மழைபெய்தாற்போல் பெய்தனர். சில வானரர்கள் ராக்ஷஸர்களைக் கற்களாலடித்துச் சூரணம் செய்தனர். சிலர் ராக்ஷஸ வீரர்கள்மீது தபீலென்று குதித்துப் புடைக்கலாயினர். யானைமேலும் குதிரைமேலும் உட்கார்ந்திருப்பவரை அங்ஙனமே மேல்விழுந்து துன்புறுத்தினர். அந்த யுத்தத்தில் ராக்ஷஸர்கள் குத்து வரிசைகளால் கண் மண்டை பிதுங்கி வெளித்தோற்றவும் பெற்று இங்குமங்கும் திரிந்து தரையில் விழுந்து இரைச்சலிட்டனர். ராக்ஷஸர்களும் கொடிய பாணங்களால் வானரர்களைப் பிளந்தனர். சூலங்களாலும் இருப்புத் தடிகளாலும், கத்திகளாலும், ஈட்டிகளாலும் வானரர்களைக் கொன்றனர். பிறகு ஒரு முகூர்த்த காலத்தில் அந்த யுத்தபூமி முழுவதும் வானரர்களும் ராக்ஷஸர்களும் ஒருவர்மேல் ஒருவர் பிரயோகித்த பர்வதங்களாலும் கத்திகளாலும் மறைக்கப்பட்டு ரத்த வெள்ளத்தினால் நிறைந்தது. அந்த யுத்தபூமியில், ராக்ஷஸர் வானரர்களால் அடிக்கப்பட்டு, கவசங்கள் முறியப்பெற்று, கத்தியால் வெட்டுண்ட மரங்கள் ரசத்தைப் பெருக்குவதுபோல் ரத்தத்தைப் பெருக்கினர். சில வானரர்கள் யுத்தத்தில் ரதத்தினால் ரதத்தையும், யானையால் யானையையும், குதிரையால் குதிரையையும் அடித்துக் கொன்றனர். ராக்ஷஸர்கள் பல பல பாணங்களை யெய்து வானரர்கள் போடுகிற மரங்களையும் கற்களையும் தடுத்தனர். யுத்தத்தில் சிதறி யிருக்கின்ற மலைச் சிகரங்களும் முறிந்திருக்கின்ற மரங்களும் மாண்டுபோன வானர ராக்ஷஸர்களும் நிறைந்திருக்கையால் பூமி நடந்துபோக முடியாதிருந்தது. அந்த யுத்தத்தில் வானரர்கள் சந்தோஷத்தினால் வளர்ந்து வருவதையும், ராக்ஷஸர்கள் பலம் குறைந்து கீழ் விழுவதையும் பார்த்து மகரிஷிகளும் தேவதைகளும் சந்தோஷத்தினால் இரைச்சலிட்டனர். அப்பொழுது நராந்தகன் ஒப்பற்ற தன் குதிரையின் மீதேறிக்கொண்டு கூரான சக்தியெனும் ஆயுதத்தை ஏந்தி வானர சைன்னியத்தில் மிகுந்த ஆத்திரத்துடன் புகுந்து ஜ்வலிக்கின்ற தனது ஈட்டியினால் எழுநூயிரம் வானரர்களைப் பிளந்து கொன்றனன். இங்ஙனம் அவன் ஒருவனாகவே ஒரு க்ஷணநேரத்தில் மேலான வானர சேனையை அடித்துக் கலங்கச் செய்தனன். பின்னுமவன் ஜ்வலிக்கின்ற கூரான ஈட்டியைப் பிடித்துக்கொண்டு யுத்தத்தின் முனையில் காட்டுத் தீ காட்டைக் கொளுத்துவதுபோல் வானர சைன்னியங்களை மிகவும் துன்புறுத்தினன். வானரர்கள் மரங்களையாவது மலைகளையாவது பெயர்த்தெடுத்துப் போடுவதற்குள்ளாகவே நராந்தகனுடைய ஈட்டியாலடிக்கப்பட்டு வஜ்ஜிரத்தினால் அறுக்கப்பட்ட மலைகளைப்போல் தரையில் வீழ்ந்தனர். அவனது பராக்கிரமத்தினால் வானரர்கள் ஓடவும் நிற்கவும் இப்படி அப்படி அசையவும் வல்லமையற்றிருந்தனர். இதைக்கண்ட சுக்கிரீவன் பொறுக்க முடியாமல் அங்கதனை நோக்கி நராந்தகனைக் கொல்லுமாறு கட்டளையிட்டனன். உடனே அங்கதன் யாதொரு ஆயுதமுமின்றி நராந்தகனை அணுகி 'ராக்ஷசா! இதோ என்மீது உனது ஈட்டியை எறி, பார்ப்போம்' என்றனன். நராந்தகன் மிகுந்த கோபத்துடன் ஜ்வலிக்கின்ற தனது ஈட்டியை கிருகிருவென்று சுழற்றி அங்கதன்மீது எறிந்தனன். அது அவனது மார்பில் பட்டு முறிந்து தரையில் வீழ்ந்தது. உடனே அங்கதன் தனது உள்ளங்கையால் நராந்தகனது குதிரையின் தலையிலடித்தனன். அதனால் அம் மேலான குதிரை கண்விழி பிதுங்கி நாக்கு வெளிப்பட்டுத் தரையில் வீழ்ந்தது. இதனால் மிகுந்த கோபங்கொண்ட நராந்தகன் தனது கை முஷ்டியினால் அங்கதன் தலையின்மேல் அடித்தனன். அதனால் அங்கதன் தலை பிளக்கப்பெற்று மிகவும் உஷ்ணமான ரத்தத்தை வெள்ளமாகப் பெருக்கிக்கொண்டு

மூர்ச்சை யடைந்தனன். சிறிது நேரத்தில் அங்கதன் பிரக்ஞை தெளிந்தெழுந்து நராந்தகனுடைய பலத்திற்கு ஆச்சரியமுற்றுத் தனது கைப் பிடியினால் நராந்தகனுடைய மார்பில் ஓங்கி அடித்தனன். அதனால் நராந்தகன் மார்பு முறியப்பெற்று பர்வதம்போல் தரையில் வீழ்ந்து உயிரை விட்டனன். இதுகண்டு ஆகாயத்திலுள்ள தேவதைகளும் மகரிஷிகளும் சந்தோஷத்தினால் இரைச்சலிட்டனர். ராமன் அங்கதனுடைய வீரச் செயலுக்கு மெச்சினன்.

70. அனுமான் தேவாந்தகனையும் திரிசிரனையும், நீலன் மகோதரனையும், ருஷபன் மகாபார்சுவனையும் கொல்லுதல்.

நராந்தகன் மாண்டதைக் கண்டு தேவாந்தகனும் திரிசிரனும் மகோதரனும் கூச்சலிட்டனர். அவர்கள் மூவரும் அங்கதன்மேல் மிகுந்த ரோஷத்துடன் எதிர்த்துச் சென்றனர். அங்கதன் பெருங்கிளைகள் அமைந்த ஓர் மரத்தைப் பிடுங்கி தேவாந்தகன்மேல் வீசி எறிந்தனன். திரிசிரன் அதுகண்டு சர்ப்பம்போன்ற பாணங்களால் அம் மரத்தைப் பிளந்தனன். அங்கதன் தானெறிந்த மரம் வீணானதைக் கண்டு ஆகாயத்திற் கிளம்பிக் கணக்கற்ற மலைச் சிகரங்களையும் மரங்களையும் அந்த ராக்ஷஸர்கள்மீது மழைபோல் பொழிந்தனன். திரிசிரனும் தேவாந்தகனும் கொடிய பாணங்களை யெய்து அவற்றையெல்லாம் தடுத்தனர். அப்பொழுது மகோதரன் மிகுந்த கோபாவேசத்துடன் வஜ்ஜிரம்போன்ற தோமரத்தினால் அங்கதனுடைய மார்பிலடித்தனன். தேவாந்தகனும் திரிசிரனும் பின்னும் விடாமல் பாண மழைகளைப் பெய்துகொண்டேயிருந்தனர். இங்ஙனம் மூன்று ராக்ஷஸர்களும் ஒரே காலத்தில் அங்கதனை எதிர்த்தபோதிலும் அவன் சிறந்த பராக்கிரமமும் பலமுமுடைய வனாகையால் சிறிதும் வருத்தமுறவில்லை. உடனே அங்கதன் தனது உள்ளங்கையினால் அம் மகோதரன் வீற்றிருந்த யானையைத் தலையில் அடித்தனன். அக்கணமே அது கண்கள் பிதுங்கி ரத்தத்தைப் பெருக்கிக்கொண்டு கீழே விழுந்து உயிர் துறந்தது. அங்கதன் அத் துர்ப்பியின் தந்தங்களைப் பிடுங்கி அவற்றால் அவ் வரக்கர்களை அடித்தனன். இதனால் அவர்கள் காற்றினாலசைக்கப்பட்ட மரத்தைப்போல் அவயவங்களெல்லாம் விலவிலக்கப்பெற்று ரத்தத்தைக் கக்கினர். மீண்டுமவ் வரக்கர்கள் மூர்ச்சை தெளிந்தெழுந்து அங்கதன்மேல் கணக்கற்ற கூரிய பாணங்களை யெய்தனர். அச் சமயம் அனுமானும் நீலனும் அங்கதனுக்கு உதவி புரிய ஓடிவந்தனர். அனுமான் மிகுந்த ஆத்திரத்துடன் மேற்கிளம்பி வஜ்ஜிரம்போன்ற தனது முஷ்டியினால் தேவாந்தகனைத் தலையிலடித்தனன். அதனால் தேவாந்தகன் தலை உடைந்து பற்களும் கண்களும் வெளித் தோன்றவும் நாக்குத் தொங்கவும் பெற்று உயிரிழந்து தரையில் வீழ்ந்தனன். இதைக்கண்ட திரிசிரன் அனுமானைக் கூரான பாணங்களால் பிளந்தனன். அனுமான் மிகுந்த கோபத்துடன் மிகவும் பெரிய பர்வதங்களையும் மரங்களையும் அவன்மேல் எறிந்துகொண்டேயிருந்தனன். ஆயினும் திரிசிரன் தனது கூரான பாணங்களால் அவற்றையெல்லாம் தடுத்துப் பொடி செய்தனன். பின்னும் அத் திரிசிரன் அனுமான்மேல் சக்தி யென்னும் பயங்கரமான ஆயுதத்தை வீசி எறிந்தனன். அது தன்மேல் படுவதற்கு முன்னமே அனுமான் அதைப் பிடித்து முறித்து சிம்மநாதஞ் செய்தனன். உடனே திரிசிரன் மிகுந்த ரோஷத்துடன் கத்தியை யெடுத்து விசாலமான அனுமானுடைய மார்பிலடித்தனன். அனுமான் அக் கத்தியாலடிக்கப்பட்டும் சிறிதும் வருந்தாமல் அவனைத் தன் உள்ளங்கையால் மார்பில் அறைந்தனன். அதனால் அவ் வரக்கன் மூர்ச்சித்து ஆயுதம் நழுவப்பெற்று பூமியில் வீழ்ந்தனன். உடனே அனுமான் அவனது கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக்கொண்டு ராக்ஷஸர்கள் பயமுறும்படி சிம்மநாதஞ் செய்தனன். திரிசிரன் சீக்கிரம் கிளம்பியெழுந்து அனுமானைத் தானும் முஷ்டியினால் புடைத்தனன். அனுமான் அதைச் சிறிதும் லக்ஷியம் செய்யாமல் அவனைக் கிரீடத்துடன் கெட்டியாகப் பிடித்து கூரான அவனது கத்தியால் அவனது மூன்று தலைகளையும் வெட்டினன். அதே சமயத்தில் நீலன் ஓர் பர்வதத்தைப் பிடுங்கி மகோதரனுடைய தலையிலடித்தனன். மகோதரன் அதனால் உடல் நசுங்கப்பெற்று ஆவி துறந்தனன். இவற்றையெல்லாம் கண்ட மகாபார்சுவன் மிகவும் பொறுக்க முடியாத

Rgd. No. 5297 ஸ்ரீராமாநுஜன்.

(1) க்ரந்தமாலா ஆபிஸ், காஞ்சீபுரம்.

(2) கராலபாடி ராதாகிருஷ்ணய்யா,
147, அண்ணாப்பிள்ளை தெரு, மதராஸ்.

G. ரங்கைய நாயுடு, மதராஸ்.

(இவர் சென்னையில் பிரசாரம் செய்ய நியமிக்கப்பட்டவர்.)

If Un-delivered please return to:

P. B. Annangaracharya, Kancheepuram.

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Sathgrantha Prakasana Sabha
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press,
Sannidhi Street, Little Kancheepuram.

751

ஸ்ரீ:



12 NOV 1956 MADRAS

ஸ்ரீராமாநுஜன் 81, 82

வருடச் சந்தா ரூ. 5.

751 / 4-56

இராமாநுசநூற்றந்தாதி.

சோர்வின்றியுன்றன் துணை யடிக்கீழ் * தொண்டுபட்டவர்பால்
சார்வின்றி நின்றவெனக்கு * அரங்கன்செய்யதாளிணைகள்
பேர்வின்றி யின்றுபெறுத்து மிராமாநுச ! இனியுன்
சீரொன்றியகருணைக்கு * இல்லைமாறுதெரிவுறிலே. 81

தெரிவுற்றஞானம் செறியப்பெறாது * வெந்தீவினையால்
உருவற்றஞானத் துழல்கின்றவென்னை * ஒருபொழுதில்
பொருவற்ற கேள்வியனாக்கிநின்றா னென்னபுண்ணியனோ ?
தெரிவுற்றகீர்த்தி யிராமாநுசனென்னும் சீர்முகிலே. 82

P. B. அண்ணங்கராசாரியார்,
க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்

1955 ஆகஸ்டுமீ மன்மதவருஷ ஆடிமீ

ஸ்ரீராமாநுஜன் 81, 82.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.
ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 7 | 1955ளு செப்டம்பர்மீ மன்மதளு ஆவணிமீ | மலர் 9, 10.

அடியேன் செய்யும் விண்ணப்பம்.

(ப்ர. அ.)

16—6—55ல் அடியேன் ஸபரிவாரனாய்ப் புறப்பட்டு வடநாட்டுத் திருப்பதி யாத்திரை விடைகொண்ட விஷயம் அன்பர்களுக்குத் தெரிந்தேயிருக்கும். பகவத்பாகவத பரமக்ருபையினால் யாத்திரையை உத்தேசித்தபடி நிறைவேற்றிக்கொண்டு 29—8—55 தேதியில் ஸ்வஸ்தானம் வந்து சேர்ந்தேனென்பதை இதனால் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன். இந்த யாத்திரையில், பரமாப்தர்களான ஸ்ரீ. உ. வே. ஸ்ரீரங்கம் பண்டிதராஜ. மெ. ஸுந்தரராஜாசார்யஸ்வாமியும், கள்ளக்குறிச்சி அட்வகேட் T. A. தாதாசார்ய ஸ்வாமியும் ஆரம்பத்திலிருந்து அவஸானம் வரையில் பொறுப்புகளை வஹித்து அந்வயித்திருந்தார்கள். ஸ்ரீமதுபய வே. (கோயமுத்தூர்) வேதவ்யாஸபட்டர் திருமலை ஐயங்கார் ஸ்வாமி டில்லிமாநகரில் வந்து கூடி கடைசி வரையில் வைதிக லௌகிக கார்ய நிர்வாஹ துரந்தரராக அந்வயித்திருந்தார். இங்ஙனே மஹான்கள் மூவர் இந்த யாத்திரையின் ஸகலவித யோகக்ஷேமங்களுக்கும் பர்யவேக்ஷகர்களாக அமைந்தது உண்மையில் பகவத்ஸங்கல்பத்தினாலத்தனை. வஸ்துஸ்திதியில் இம்மஹான்களுடைய ஸஹயோகத்தினாலேயே இந்த யாத்திரை விசேஷ கௌரவமடைந்தது. இதற்காக இம்மஹான்களிடத்தில் * தலையல்லால் கைம்மாறிலேன் * என்று விஜ்ஞாபிப்பது தவிர வேறொன்றும் நானறியேன்.

அடியேன் வாழ்நாளில் பதரிகாச்ரமபர்யந்தமாக மூன்று தடவையும், ஹரித்வார ஹ்ருஷீகேச பர்யந்தமாகப் பதினெட்டு தடவையும் யாத்திரை செய்யும் பாக்கியம் நேர்ந்திருக்கின்றது. * பதியே பரவித்தொழும் தொண்டர்தமக்குக் கதியே! * என்று திருமங்கையாழ்வார் விளித்த பாசுரம் அடியேனுள்ளத்தில் விசேஷித்து ஊறியிருப்பதனால் இரண்டு மூன்று வருஷங்களுக்கொருமுறை க்ஷேத்ர தீர்த்த யாத்திரை செய்தாலொழிய மனம் சாந்தி பெறுவதில்லையடியேனுக்கு. எந்த யாத்திரையிலும் பத்திருபது நபர்களைக் கூட்டிக்கொண்டே போவது வழக்கம். சில யாத்திரைகளில் அநுயாயிகள் பரிமிதர்களாகவுமிருப்பர்கள். இப்போது நடந்த யாத்திரை எழுபத்தைந்து நபர்களுடன் நடைபெற்றது. இவர்களுள் இருபத்தைந்து ஸ்வாமிகள் விலக்ஷணர்களாக அமைந்தார்கள். மற்றவர்கள் வைச்யர்களாயும் பாகவதர்களாயும் பரிசாரகர்களாயுமிருந்தார்கள்.

இந்த யாத்திரையின் க்ரமங்களைப்பற்றி ஒரு சிறு புத்தகமாவது அவசியம் அச்சிட்டு வெளியிடவேணுமென்று பல ஆப்தர்கள் அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். அடியேனும் இதில் கைவைக்க நினைத்திருக்கையில், அம்ருதலஹரீ ஸஹகாரி ஸம்பாதகரான ஸ்ரீரங்கம் ஸ்வாமி தாம் எழுத முன்வந்தார். "பவித்ரயாத்ரா பரமானந்தம்" என மகுடமிட்டு அந்த ஸ்வாமி யெழுதிய வியாஸம் அம்ருதலஹரியில் வெளிவந்திருப்பதல்லாமல் தனிப்புத்தகமாகவும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் இந்த யாத்திரையின் முக்கியமான விஷயங்கள் பெரும்பாலும் விசதமாகும்.

இந்த யாத்திரைக்கு ஸப்தபுண்யபுரீ வாக்யஜ்ஞ யாத்திரையென்று பெயரிட்டிருந்தோம். பிறகு ஸம்க்ஷேபருசியாலே பவித்ரயாத்திரையென்று பெயரிட்டோம். தங்குமிடங்களிலெல்லாம் வேதபாராயண திவ்யப்ரபந்த ஸேவைகளை நடத்திக்கொண்டே யாத்திரையைச்செய்யவேணுமென்று ஒரு மநோரதம் அடியேனுக்கு உண்டாயிற்று. 50, 60 ஸ்வாமிகளோடு கூடிச்சென்று இதை நடத்தவேணுமென்று பாரிப்பு இருந்தது. அதற்குப் போதுமான ஸௌகரியம் நேர்படவில்லை. ஸௌகரியம் ஒருவாறு ஏற்பட்டாலும் ஆங்காங்கு நிர்வாஹம் செய்வது மிகவும் சிரமஸாத்யமாகுமென்று தோன்றிற்று. இப்போது நடந்தமுறை ஸகலவிதத்திலும் த்ருப்திகரமாக இருந்தது. ஓரிடத்திலும் ஒன்றுக்கும் ச்ரமப்பட நேரிடாமல் அநாயாஸமாகவே நடைபெற்று வந்தது. முன்னுடியே ரைல்வே கம்பெனிக்குப் பன்னிரண்டாயிரத்துச்சொச்சம் ரூபாய் கட்டணம் செலுத்தி ரைல்வண்டித்தொடரை ஸ்வாதீனமாக அமைத்துக்கொண்டபடியால் ஸௌகரியங்களில் இதுவே சிகரமாக நின்றது. ஸொந்தக்ருஹத்தில் வாழ்வது போலவே யிருந்ததென்றும் சொல்லலாம். வண்டி மாற்றவேண்டும் ஜங்ஷன்களில் இறங்கியலைச்சல் படுவது, பாமரர்களோடு நெருக்குண்டு கிலேசிப்பது முதலான ஒருவகை ச்ரமமுமின்றிக்கே பரமஸௌக்கியமாக இந்த யாத்திரை நடந்தவிதம் நினைதொறும் சொல்லுந்தொறும் தேனூறியெப்பொழுதும் தித்திக்குமே.

இப்படிப்பட்ட வாக்யஜ்ஞ யாத்திரையை நடத்தி ஆனந்திக்க அடியேனுக்குச் சிறு நாட்களில் உத்ஸாஹமுண்டாகாமலிருந்ததற்கு மிகவும் வருந்தவேண்டியதாயிற்று. ஜ்ஞான சக்திகளில் குறையற்ற பல மஹான்கள் ஆங்காங்கு எழுந்தருளியிருப்பதால் வருஷந்தோறும் சில மஹான்கள் முன்னின்று இப்படிப்பட்ட பவித்ரயாத்திரையை நடத்திவருவது நன்று என்று விஜ்ஞாபிக்கிறேன். வடநாடுகளில் தற்காலம் ஸ்ரீவைஷ்ணவமத ப்ரசாரம் மிகவும் குறைவுற்றுவருகிறது. ஸாம்ப்ரதம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி வடநாட்டு யாத்திரையாக எழுந்தருளியாகிறது. ச்ரமத்தைக் கவனியாமல் நெடுக வெழுந்தருளி ஸித்தாந்த ப்ரசாரம் செய்தருளவேண்டுவது மிக அவசியம் என்கிற பிரார்த்தனையோடு இந்த விண்ணப்பத்தை முடித்துக்கொள்ளுகிறேன். .... *

வான்மீகிராமாயண வசனம்.

முன்னிதழில் வான்மீகிராமாயண வசனம் யுத்தகாண்டத்தில் 70 ஸர்க்கம் வெளிவந்திருக்கின்றது. அடுத்த இதழில் காண்டம் பூர்த்தியாகி வெளிவரும். சந்தாத்தொகையை பாக்கியில்லாமல் செலுத்தினவர்களுக்கே இது அனுப்பப்படும். புதுவருஷமும் பிறக்கப்போகிறது. சந்தாதாரர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.

இப்படிக்கு,

மானேஜர், ஸ. ப்ர. ஸபா

ஸ்ரீ:

அறுபத்துநான்கு விருந்துகள்.

(K. திருவேங்கடாசாரி B. A. B. L. அட்வகேட். சென்னை.)

ஸ்ரீராமாநுஜன் ஆசிரியரான நம் ஸ்வாமிகள் நான்குவருஷகாலமாக வருஷந்தோறும் தம்முடைய திருநக்ஷத்திர பூர்த்தியை முன்னிட்டு அனேக விதமான உபந்யாஸமாலைகளைப் பிரசுரம் செய்துவருவது யாவருமறிந்ததே யாகும். சென்ற ஜயவருஷ பங்குனித் திங்களில் அறுபத்துநான்கு ஆண்டு நிறைவை முன்னிட்டுப் பலதுறைகளில் அறுபத்துநான்கு உபந்யாஸ மாலைகளை ஸ்ரீஸ்வாமி வெளியிட்டிருக்கிறார். "அறுபத்துநான்கு ஆராய்ச்சி மாலை" என்னும் பெயரால் மிகப் பெரிய நூல் எழுதப்பட்டு அது அம்ருத லஹரீபத்திரிகையில் ஆறுமாத காலமாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அஃது ஒன்றே அபூர்ணமானது. அது தவிர அனேக அறுபத்துநான்கு மாலைகள் பூர்த்தியாகியிருக்கின்றன. ஸ்ரீராமாநுஜன் 74—76 ஸஞ்சிகைகளில் "அறுபத்துநான்கு நல்வார்த்தைகள்" என்கிற உபந்யாஸமாலை பூர்த்தியாகி வெளிவந்திருக்கின்றது. த்ரௌபதீ சரணாகதி விஷயமாக ஒரு அறுபத்துநான்கு வார்த்தாமாலை ஸ்ரீராமாநுஜனிலேயே (74 முதல்) வெளியாகி, ஸமீபகாலத்தில் தனிப் புத்தகமாகவும் "ஜகதாசார்யஸூக்தி ஸுதாநிதி" என்னும் பெயரால் பிரசுரமாகி யிருக்கின்றது.

இப்போது இரண்டு அறுபத்துநான்கு மாலைகள் உலகமெல்லாம் ஆனந்தமாக அநுபவிக்க வெளிவருகின்றன. (1) சக்ரவர்த்தி திருமகனறுபத்துநான்கு. (2) அறுபத்துநான்கு நன்மொழிகள். இவற்றுக்கு விஷய ஸூசிகையும் சேர்த்திருப்பதால் அவரவர்களுக்கு அவசியமாகத் தோன்றும் விஷயங்களைக் குதூஹலத்தோடு வாசிக்கலாம். ஒவ்வொரு விஷயமும் மிக அவசியமாகவேதோன்றி, பூர்த்தியாக வாசிக்க உத்ஸாஹமூட்டும் என்பது அடியேனுடைய நம்பிக்கை.

1. அறுபத்துநான்கு நல்வார்த்தைகள்.
2. சக்ரவர்த்தி திருமகனறுபத்துநான்கு.
3. அறுபத்துநான்கு நன்மொழிகள்.

ஆகிய இம் மூன்று வியாஸங்களும் ஒரே வால்யமாகத் தனிப்புத்தகமாகவும் கிடைக்கும்படி செய்திருக்கிறது.

அதன்விலை ஒருரூபா மட்டுமே. கிடைக்குமிடம்:
க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

அம்ருதலஹரீபத்ரிகையில் வெளிவந்து கொண்டிருக்கிற அறுபத்துநான்கு ஆராய்ச்சி மாலை ரஸிக பண்டிதர்களால் அவசியம் அநுபவிக்கத்தக்கது.

அது கிடைக்குமிடம்:
ஸ்ரீவிலாஸம் பிரெஸ்.
கீழச்சித்திரைவீதி. ஸ்ரீரங்கம்.

இப்படிக்கு,
K. திருவேங்கடாசாரி, B.A., B.L.
ஸத்க்ரந்தப்ரகாசநஸபையின் செயலாளர்.

ஸ்ரீ

சக்ரவர்த்தி திருமகனருபத்து நான்கிலுள்ள விஷயங்களுக்கு அட்டவணை

பாரா லக்கம்

1. சௌர்யம், வீர்யம், பராக்ரமம் என்பவற்றின் விவரணமும் இராவணன் மதித்த ராமவிக்ரமமும்.
2. மூலபலவதத்தினன்று இராமன் காட்டின வாசாமகோசரமான வீரச்செயல்.
3. மஹாவீரனுன இராமன் இராவணனை வதைக்கத் தாமதித்தது பற்றின ஆராய்ச்சி.
4. அஸஹாய சூரரான பெருமாளுக்கு ராவணவதம் அவலீலையென்பது.
5,6. இராவணன் அபிமுகனுகவேணுமென்று பெருமாள் ஆசைப்பட்டிருந்ததை *மரணாந்தாநி வைராணி ச்லோகார்த்த விவரணத்தினுல் மூதலித்தது.
7. அப்ரதிஷேதத்தையே எம்பெருமான் நம்மிடத்து எதிர்பார்த்திருக்கிருனென்பதை ப்ராஸங்கிகமாக நிரூபித்தல்.
8. 'இன்றுபோய் நாளைவா' என்று விடுத்த பெருமாளுடைய திருவுள்ளத்தைத் தெரிவித்தல்.
9. *விஷயே தே மஹாராஜ* இத்யாதி ஸுமந்த்ரவசனத்தின் படி அசேதனப் பொருள்களையும் விகாரப்படுத்துகை யாகிற வீர்யகுணத்தை விளக்குதல்.
10 இராமபிரானைக் காருணிகனென்றதும் அதன் கருத்தும்.
11. இராமனுடைய காருணிகத்வத்தை அயோத்யாவாஸி ஜனங்கள் தசரதமன்னவனிடத்து விளக்கியது.
12. காருணிகத்வத்தின் உண்மைப் பொருளை நிலை நாட்டுதல்.
13. அதில் பிறர்கூறும் ஆக்ஷேபங்களைக் களைந்தொழித்தல்.
14. வாலியை வதைத்தபிறகு பெருமாள் காட்டிய கருணை.

பாரா லக்கம்

15. பிராட்டியின் சேர்க்கையினுலேயே பெருமாள் ரக்ஷகராகிருரென்பது.
16. பிராட்டி கூடியிராமையினுலேயே தாடகாவதமாயிற்றென்பது.
17. விராதவதமும் பிராட்டியின் அருகில் நடைபெறவில்லை யென்பது.
18. கரதூஷணாதிவதம் மாரீசவதம் போல பிராட்டியின் முன்னிலையில் நடைபெறவில்லை யென்பது.
19. தாடகையை வதஞ்செய்ததுபோல் சூர்ப்பணகையையும் வதஞ்செய்யாது அங்கபங்கத்தோடு விட்டது பிராட்டி அருகேயிருந்தமையால்.
20. பிராட்டி அருகில்லாமையினுலேயே வாலி வதைக்கப்பட்டான்.
21. பிராட்டியின் ஸன்னிதியாலே காகம் தலைபெற்ற செய்தியின் விவரணம்.
22. காகாஸுரவ்ருத்தாந்தத்தில் பாத்ம புராணப்ரக்ரியையையும் ஸ்ரீராமாயணப்ரக்ரியையையும் விளக்குதல்.
23. காகம் செய்த சரணாகதியின் மருமம்.
24. பிராட்டி அருகில்லாமையினுலேயே ராவணன் முடிந்தானென்று ப்ரக்ருதவிஷயத்தை நிகமித்தல்.
25. ஸ்ரீராமபிரானுடைய ஸௌசீல்ய குணத்தையநுபவிக்க இழிதல். அவதாரம் செய்ததே சீலகுணகார்யமென்றது.
26. அவதாரம் என்கிற சொல்லின் பொருளை விவரிக்கும் முகத்தால் சீலகுணத்தைக் காட்டுவது.
27. குறைப்பெருமானுடைய அன்பின் பெருமையும் அவனிடத்திலே காட்டிய சீலகுணத்தின் சிறப்பும்.
28,29. குஹனோடு தோழமை கொண்டதைப்பற்றின ஆராய்ச்சி. (இதில் குறை நினைப்பார்க்குத் தெளிவு பிறப்பித்தல்.)

பாரா லக்கம்

30 சபரியின் சிறப்பைப்பற்றின ஆராய்ச்சியின் தொடக்கம்.
31 32. பெருமாள் குஹனிடத்து உணவை மறுத்து சபரியினிடத்து உணவை ஸ்வீகரித்தது பற்றிய தத்துவ முணர்த்தல்.
33,34. கூரத்தாழ்வானும் பிள்ளை லோகாசார்யரும் காட்டியருளின மஹா குணங்களின் நிரூபணம்.
35. ஸ்ரீராமபிரானுடைய க்ருதஜ்ஞதா குணத்தின் ப்ரஸ்தாவம்.
36. ஸுக்ரீவ விபீஷணர்களிடத்தில் இராமன் காட்டியருளின திருவருள்.
37,38. தவணைகடந்த ஸுக்ரீவனைப் பெருமாள் நிக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றியதின் மருமம்.
39. ஜ்ஞாதஸுக்ருதம், அஜ்ஞாதஸுக்ருதம் என்கிற ஸுக்ருதவிபாகம்.
40 அவ்விரண்டு ஸுக்ருதங்களைப் பற்றின விவரணம்.
41. அஜ்ஞாத ஸுக்ருதத்தைப்பற்றின விரிவான விவரணம்.
42,47. யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிகம் என்னும் அஜ்ஞாத ஸுக்ருதங்களை உதாஹரணங்களுடன் நன்கு நிரூபித்தல்.
48,50. ஸ்ரீராமனுடைய க்ருதஜ்ஞதா குணத்தை நிகமித்தல்.
51. ஸ்ரீராகவனுடைய ஸத்தியவாதித்வ ப்ரஸ்தாவத்தில் ஸத்யமாவது இன்னதென்று விவரித்தல்.

பாரா லக்கம்

52. அதை கீதாபாஷ்ய—தாத்பர்ய சந்த்ரிகா ஸூக்திகளினுல் விளக்குதல்.
53. வீதஹவ்யோபாக்யான விவரண முகத்தினுல் ஸத்யத்தின் ஸ்வரூபத்தை சிக்ஷித்தல்.
54. இராமனுடைய ஸத்யவாதித்வத்தை அவன்றன்னுடைய திருவாக்கு கொண்டே நிரூபித்தல்.
55. ப்ராஸங்கிகமாக தசரதனுடைய ஸத்யவாதித்வத்தைப் பற்றி.
56. தசரதனுக்கும் ததிபாண்டனுக்குமுள்ள நெடுவாசியை நிரூபித்தல்.
57. "ஸத்யேந லோகாந் ஜயதி" என்கிற வசனத்தைப் பற்றின விரிவு.
58. நடுவில் திருவீதிப் பிள்ளைபட்டருடைய இதிஹாஸமொன்று கொண்டு *ஸத்யேந லோகாந் ஜயதிவிசதீகரணம்.
59,61. ஸ்ரீராமனுடைய ஸத்யவாதித்வத்தில்குறை சங்கித்து விரிவான ஸமாதானங்கூறுதல்.
62. ஆச்ரித ரக்ஷணத்தில் இராமனுடைய திடமான உறுதியை நிரூபித்தல்.
63,64. ஆரண்யகாண்டத்தில் மஹர்ஷிகளுக்கும், யுத்தகாண்டத்தில் விபீஷணாழ்வானுக்கும் அபயமளித்த சரிதைகளை விரிவாக நிரூபித்துத் தலைக்கட்டுதல்.

சக்ரவர்த்திதிருமகனருபத்துநான்கின்

விஷயஸூசிகை

முற்றிற்று

ஸ்ரீ:

சக்ரவர்த்தி திருமகனறுபத்துநான்கின் மேற்கோள் விவரணம்

பாரா லக்கம்

ஸ்ரீ ராமாயண வசனங்கள்

31 ச்ரமணீம் தர்ம நிபுணுமபிகச்ச ஸம்க்ஷேப. 57

30, 36 சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:. ஸம்க்ஷே. 58.

36 பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ. ஸம்க்ஷேபே 58

8, 34 அஹம் வேத்மி மஹாத்மாநம். பாலகா. 19-14

34 இமௌ ஸ்ம முநிசார்தூல கிங்கரௌ. ,, 31-4

15, 24 இயம் ஸீதா மம ஸுதா. ,, 73-27

35, 37 கதஞ்சிதுபகாரேண...நஸ்மரதி அயோத். 1-11

11 பஹவோ ந்ருப கல்யாண. ,, 2-26

51 ப்ரிய வாதீ ச பூதாநாம். ,, 2-32

11 வ்யஸநேஷு மநுஷ்யாணும். ,, 2-40

57 ஸத்யேந லோகாந் ஜயதி ,, 12-29

54 ராமோ த்விர் நாபிபாஷதே-தத்ப்ருஹி ,, 18-30

59 மா ச லக்ஷ்மண...வநவாஸோ மஹோதய: ,, 22-29

28 தத்ர ராஜா குஹோ நாம ராமஸ்யாத்ம ஸமஸ் ஸகா. ,, 50-33

28 தமார்த்தஸ் ஸம்பரிஷ்வஜ்ய. ,, 50-36

31 யத்த்விதம் பவதா...ந ஹி வர்த்தே ப்ரதி க்ரஹே. ,, 50 43

9 விஷயே தே மஹாராஜ. ,, 59- 4

17 ஸ வித்தோ பஹுபிர் பாணை:. ஆர 4-9

34 ப்ரஸீதந்து பவந்தோமே. ,, 10- 9

63 அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம். ,, 10-19

63 ஸத்ருசஞ் சாநுரூபஞ்ச ,, 10-22

18 தஸ்மாத் க்ருஹீத்வா. ,, 24-12

4 சதுர்தச ஸஹஸ்ராணி ,, 26-34

10, 56 ராமோ விக்ரஹவாந் தர்ம:. (மாரீசவாக்யம்) ,, 37-13

59 ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ: ,, 67-25

58 மயா த்வம் ஸமநுஜ்ஞாத: ,, 68-33

பாரா லக்கம்

31 ச்ரமணீ சபரீ நாம. ,, 73-26

31 கச்சித் தே குருசுச்ருஷா. ,, 74- 8

31 அர்ச்சிதோஹம் த்வயா பக்த்யா. ,, 74-32

36 லோகநாத: புரா-கிஷ்கி 4-18

36 ஸுக்ரீவம் சரணம் கத: ,, 4-20

54 அந்ருதம் நோக்தபூர்வம் ,, 7-22

53 ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ் ,, 18-15

14 இத்யேவமார்த்தஸ்ய ,, 24-24

14 ஸுக்ரீவஞ்சைவ ,, 25-1

14 ஸுக்ரீவேணைவ தீநேந. ,, 25-52

15, 24 விதிதஸ் ஸ ஹி தர்ம. ஸுந் 21-20

21 நசாப்யுபாரமந்மாம்ஸாத் ,, 38-16

22 வதார்ஹமபி காகுத்ஸ்த: ,, 38 35

10 ஆந்ருசம்ஸ்யம் பரோ ,, 38-41

3 த்வயா விஜ்ஞாத பூர்வச் ,, 51-11

36 ஸர்வலோக சரண்யாய யுத்த 17-15

64 ஸக்ருதேவ ப்ரப...ஏதத் வ்ரதம் மம. ,, 18-33

23 த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் ,, 36-11

24 சசால சாபஞ்ச முமோச வீர: ,, 59-137

33 கச்சாநுஜாநாமி ,, 59-141

2 சிந்நம் பிந்நம் சரைர் ,, 94-22

2 தே து ராமஸஹஸ் ,, 94 27

2 புந: பச்யந்தி ,, ,, ,,

1 சத்ரோ: ப்ரக்க்யாதவீர் ,, 106-6

5 மரணாந்தா நி வை ,, 141-102

பாத்ம புராணம்

21 ஸத்ருஷ்ட்வா ஜாநகீம் தத்ர கந்தர்ப்பசர பீடித:

22, 23 புரத: பதிதம் தேவீ......

மஹாபாரதாதிகள்

13 கோவிந்தேதி யதாக்ரந்தத்

53 தர்மஸ்ய தத்த்வம் நிஹிதம் குஹாயாம்

53 நேஹாஸ்தி க்ஷத்ரிய: கச்சித்

12 விகர்த்தா கஹநோ குஹ: (ஸஹ-

10 க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்

பாரா லக்கம்

பகவத் கீதை

41 ந ஹி கச்சித் க்ஷணமபி 3-5

16, 38 பரித்ராணுய ஸாதூநாம் 4-8

52 புத்திர் ஜ்ஞாநமஸம் 10-4

56 ஸர்வதர்மாந் பரித்யஜ்ய 18-66

பகவச்சாஸ்த்ராதி

6 ஸர்வஜ்ஞோபிஹி விச்வேச:

22 லக்ஷ்ம்யாஸஹஹ்ருஷீகேச:

52, 53 ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத்

55 விவாஹகாலே ... பஞ்சாந்ருதாநி

29 ஹீநப்ரேஷ்யம் ஹீநஸக்க்யம்

அமர கோசம்

10 காருண்யம் கருணுக்ருணு

நன்னூல்

54 மன்னுடை மன்றத்து............

கவிவாக்கு

55 உர்வ்யாம் கோபி மஹீதர:... ......புண்யையர்யசோலப்யதே.

ஆழ்வாரருளிச் செயல்கள்

1 இலங்கைமன்னனைந் தொடைந்து திருச்சந்த. 56.

1 மாறு செய்தவாளரக்கன் (,, 116)

25 பிறந்தவாறும் (திருவாய் 5-10-1)

26 நீராய் நிலனுய் (,, 6-9-1)

2 திருக்கடித்தானமும் (,, 8-6-2)

2 ஒருவரிருவரோர் (,, 8-6-3)

35 வெறிதேயருள் செய் (,, 8 7-8)

28 சீரணிந்த தோழமை (பெரியழ்வார் 3-10-4)

2 பொல்லாவரக்கனைக் கிள்ளி (திருப்பாவை 13)

10 கருமமறியாக் குறும் பனை (நாச் 14-6)

2 சதுரமாமதிள் சூழ் (அமலனு. 4

40 பேராயிரமுமோது மின்கள் (பெரிய திரு. 1-5-10)

33 சுரி குழற் கனிவாய்த் (,, 5-7-7)

27, 28 ஏழையேதலன் (,, 5-8-1)

36 செல்வவிபீடணற்கு (,, 6-8-5)

56 தாயெடுத்த சிறு (,, 8-3-5)

பாரா லக்கம்

பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகள்

48 வசீவதாந்ய: (ஆளவந்தார்)

23 ரகுவர யதபூஸ்த்வம் (,,)

7 யத்ப்ரஹ்ம கல்ப (ஆழ்வான்-வை.)

25 சீல: கஏஷ தவ (,, அதிமா.)

58 ப்ருச்சாமி கிஞ்சந (,, ,,)

58 அக்ஷுண்ண யோகபதம் (,, ,,)

33 யத்தாத் ருசாகஸமரிம் (,, ,,)

9 ம்ருகநாபிகந்த (பட்டர் ஸ்ரீ ர-உத்)

பிள்ளை லோகாசார்யர்

33 தனித்வய ஸ்ரீ ஸூக்தி.

23, 27, 30, 36, 40 } ஸ்ரீ வசநபூஷண ஸ்ரீ ஸூக்திகள்

15, 22, 56 } முமுக்ஷுப்படி ஸ்ரீ ஸூக்திகள்

வேதாந்ததேசிக ஸ்ரீஸூக்திகள்

1 ஜயஜய மஹாவீர! (ரகுவீரக)

1 அஸஹாயசூர ,,

15, 62 பாராவாரபயோவிசோ (தசாவ)

10 இச்சாமீநவிஹார ,,

22 ஸஹதர்மசரீம்சௌரே:(யதிராஜ)

30 நிஷாதாநாம் நேதா (தயாசதகம்)

32 பகவதி பரத்வாஜே (ஸங்கல்ப.)

20 நிரவதி குணக்ராமேராமே ,,

62 நமஸ்தஸ்மைகஸ்மை (அபயப்ர)

23 பத்திமுதலாமவற்றில் (அடைக்)

30, 31 மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீ ஸூக்திகள்

கம்பராமாயணச் செய்யுள்கள்

63 ஆழி சூழுலகமெல்லாம்.

34 இப்பொழுதெம்மனோரால்.

15 கோவியல் தருமமுங்கள்.

33 பஞ்செனச் சிவக்கு மென்கால்.

29 குகனொடுமைவரானோம்.

ஐதிஹ்ய, உபாக்க்யானங்கள்

58 நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டரைதிஹ்யம்.

53 வீதஹவ்யோபாக்கியானம்.

64 சிபிசக்ரவர்த்தியின் கதை.

64 கபோதோபாக்கியானம்.

—மேற்கோள் விவரணம் முற்றிற்று.—

ஸ்ரீ:

அறுபத்துநான்கு நன்மொழிமாலையிலுள்ள விஷயங்களுக்கு அட்டவணை

பாரா லக்கம்

1. எம்பெருமானுக்கு நாம் வழிபாடுகள் செய்வது நம்ஸ்வரூபம் நிறம்பெற.
2. எம்பெருமானோடு நாம் விவாதப் படாமலிருப்பதேபெரியபணிவிடை.
3. அதைப்பற்றி மநுமஹர்ஷியின் வசனம்.
4. அதைப்பற்றியே கூரத்தாழ்வானுடைய ஸ்ரீஸூக்தி விவரணம்.
5. பட்டருடைய *த்வம் மேஹம்மே* ச்லோகப்ரஸ்தாவம்.
6. ஸம்பந்தவுணர்ச்சியினாலாகும் நன்மையைப்பற்றின கதை யொன்று.
7. அக்கதையை ப்ரக்ருத விஷயத்திலே ஸங்கமனம் செய்தல்.
8. ஸம்பந்த ஜ்ஞானத்தைப் பற்றின மற்றொரு சிறுகதை.
9. எம்பெருமானுக்கும் நமக்கும் நவவிதஸம்பந்த முள்ளவாறு கூறல்.
10,18. நவவிதஸம்பந்தங்களை விவரித்துத் தலைக்கட்டுதல்.
19. அர்த்தபஞ்சகப்ரஸ்தாவம்.
20. லக்ஷ்மண பரத சத்ருக்நர்கள் அநுஷ்டித்துக் காட்டினவை.
21. சேஷத்வ பாரதந்திரியங்களின் விவேசனம்.
22,24. லக்ஷ்மண பரதர்களின் பரிமாற்றங்களை விவரித்துக் காட்டுதல்.
25. ஆஜ்ஞாகைங்கர்ய அநுஜ்ஞாகைங்கரியங்களின் வகை.
26. சத்ருக்நாழ்வானுடைய நிஷ்டையின் சிறப்பு.
27. அந்தநிஷ்டையின் அருமை பெருமைகள்.
28. பாகவத சேஷத்வத்தின் சீர்மையை நிகமித்தல்.
29. ஸ்ரீராமாயண புருஷர்கள் நால்வரின் அநுஷ்டானக்ரமங்களைத் தொகுத்துரைத்தல்.

பாரா லக்கம்

30. கைங்கரியத்தின் வகைகளும் அவற்றுள் உத்தமம் இன்னதென்பதும்.
31. காயிக கைங்கர்யமே சிறந்த தென்பதை இளையபெருமாளுடைய அநுட்டானத்தினால் மூதலித்தல்.
32. பரஸ்வரூபஜ்ஞானமின்னதென்பது.
33. எம்பெருமானுடைய பரத்வாதி பஞ்சப்ரகார நிரூபணம்.
34. ஸதா பகவத் குணாநுபவமே நமக்கு ப்ராப்தமென்பது பற்றி.
35. குணாநுபவத்திற் கென்றே அமைந்த திவ்யப்ரபந்தங்களின் ப்ரஸ்தாவம்.
36. ஸ்தோத்ரரத்ந பாஷ்ய ஸ்ரீஸூக்தியினால் தேறிய திவ்யப்ரபந்த மஹிமை.
37. யதிராஜஸப்ததி ஸூக்தியினால் தேறின திவ்யப்ரபந்தப்ரபாவம்.
38. த்ரமிடோப நிஷத்தாத்பர்ய ரத்நாவளி காட்டிய மஹிமை.
39. அம்ருதாஸ்வாதினிப்பாசுரமொன்று காட்டி நிகமித்தல்.
40. ஆழ்வார்களின் அவதாரக்ரமத்தைப் பற்றி நவீன ஆராய்ச்சியாளர்களது விமர்சங்களின் ஹேயதை.
41. ஆழ்வார்களின் காலத்தைப் பற்றின விசாரம் அவசியமற்றதென்பது.
42. ஆழ்வார்களின் விக்ரஹப்ரதிஷ்டை புராதனமென்பது பற்றி.
43. சடகோபரந்தாதியிற் செய்யுளொன்று காட்டுதல்.
44,45. நவீனர்கள் சில சாசனங்களைப் பற்றிக் கொண்டு பேசுபவை பயனற்றவை யென்று நிரூபித்தல்.
46,47. ஆழ்வாரருளிச் செயல்களின் பரமபோக்யதை.
48. ஆழ்வார்களின் அவதாரம் மஹர்ஷிகளாலும்தெரிவிக்கப்பட்டதென்பது
49,50. திருவாய்மொழியில் சைவர்கள் கூறும் அபார்த்தங்களின்நிராஸம்.

பாரா லக்கம்

51. நம்மாழ்வார் திருநெற்றியில் ஊர்த்வபுண்டரமே அணிந்திருந்தாரென்பதற்கு அவர் பாசுரம் காட்டுதல்.

[இனி, ஸம்ஸ்க்ருத த்ராவிட சப்த ஸ்வரூபங்களைப்பற்றின சில விமர்சங்கள்.]

52. சாப்பிடுதலன்று, சாப்படுதல் என்பதேதகுமென்று நிரூபித்தல்.
53. "யோக்யதாஸித்தி மநுக்ரஹாண" என்றுசொல்லுதல்தவறு என்பது
54. ச்ராத்தப்ரயோகத்தில் "இதம் க்ஷேத்ரம் கயாக்ஷேத்ரஸத்ருசம் பூத்வா" என்பதைப்பற்றின சோதனம்.
55,57. க்ருஹஸ்தாச்ரமத்தினேற்றம்.
58. ஈட்டில் உதாஹரித்த கம்பர் வாக்கைப்பற்றின திருத்தம்.

பாரா லக்கம்

59. வடமொழியில் 'துர்ஜ்ஞேயம்' என்கிற சொல்வடிவம் தேறாது; துர்ஜ்ஞாநம்' என்றே தேறும் என்பது.
60. 'துர்ஜ்ஞேயம்' என்கிற சொல்வடிவமும் ஸாது வென்பது பற்றி.
61. ச்ருதப்ரகாசிகையில் மிக முக்கியமான வொரு திருத்தம் காட்டுதல்.
62. *தரித்திருந்தேனாகவே* என்கிற நான்முகன் திருவந்தாதிப் பாசுர வியாக்யான விமர்சம். நவீனர்களின் ஆராய்ச்சி தவறென்பது.
63. குவலயானந்தத்தில் உதாஹரித்த "ஸஞ்ஜாதபத்ரப்ரகராந்விதாநி" என்னும் ச்லோகத்தில் பாடஸ்கலநம்.
64. அப்பயதீக்ஷிதருடைய வரதராஜஸ்தவச்லோக மொன்றில் பாடத் தவறுகாட்டுதல்.

அறுபத்துநான்கு நன்மொழிமாலையின்

விஷயஸூசிகை

முற்றிற்று

ஸ்ரீ:

அறுபத்துநான்கு நன்மொழிகளின் மேற்கோள் விளக்கு

பாரா லக்கம்	
	ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள்
3.	யமோவைவஸ்வதோ. (மநுஸ்)
28.	மத்பக்தஜந வாத்ஸல்யம். (பகவத்சா)
10.	அகாரோவை ஸர்வாவாக் (?)
17.	பிதாசரக்ஷகச்சேஷீ. ,,
23.	அதிரோஹார்ய (ஸ்ரீராமா.)

பாரா லக்கம்		
23.	ஆரோஹரதம்.	,,
26.	சத்ருக்நோநித்யசத்ரு.	,,
27.	பும்ஸாம்த்ருஷ்டிசித்தாப.	,,
29.	விச்வாமித்ரஸ்யசாஸநாத்	,,
29.	அகஸ்த்யவசநாத்	,,
29	பிதுர்வசநநிர்தேசாத்	,,
29.	பரத்வாஜஸ்யசாஸநாத்	,,

பாரா லக்கம்

31. பவாம்ஸ்துஸஹ வைதேஹ்யா ,,
34. கோந்வஸ்மிந் ,,
34. மூநேவக்ஷ்யாம்யஹம் ,,
34. பஹுவோந்ருபகல்யாண ,,
34. கருணௌஸுபஸம்பந்நௌ ,,
31. தாதுகாமிவசைலேந்த்ர: ,,
31. விதிதஸ்ஸஹிதர்மஜ்ஞ: ,,
59. ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ,,
48. கலௌகலுபவிஷ்யந்தி. (ஸ்ரீபாக)

திவ்யப்ரபந்தப் பாசுரங்கள்

62. தரித்திருந்தேனுகவே. (திருமழிசை)
(நம்மாழ்வார் பாசுரங்கள்)
7. பொன்னுலகாளீரோ.
97. அடியாரடியார்தம்மடியார்.
33 விண்மீதிருப்பாய்.
34. உயர்வறவுயர்நலம்.
35. செவிக்கினிய செஞ்சொல்லே.
46. தொண்டர்க்கமுதுண்ண.
48. கரியமேனிமிசை.
50. நீறுசெய்வேயிடக்காணில்
50. மாயன்தமரடிநீறுகொண்டு.
51. நெற்றியுள்நின்றென்னையாளும்.
58. பிறந்தவாறும்வளர்ந்தவாறும்.
13. கண்டாரிகழ்வனவே (குலசேகர)
7. உன்றன்னோடுறவேல் (ஆண்டாள்)
பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகள்.

பாரா லக்கம்

27. த்வத்ப்ருத்யப்ருத்ய. (முகுந்தமாலை)
27. ஸமஸ்த கல்யாணகுண...... (ஆளவந்தார்)
36. மாதாபிதாயுவதய: ,,
4. த்வத்தாஸ்யமஸ்யஹி (ஆழ்வான்)
5, 7. த்வம்மேஹம்மே. (பட்டர்)
42. பராங்குசாத்யா: ,,
47, 50. ஈட்டு ஸ்ரீஸூக்திகள்.
6. ஈட்டிலுள்ள கதையொன்று.
61. ச்ருதப்ரகாசிகா, பாவப்ரகாசிகா.
31. பசியராயிருப்பார். (ஸ்ரீவசநபூ.)
(தேசிகன்)
36, 62. ஸ்தோத்ரபாஷ்ய ஸூக்தி.
50. ஸச்சரித்ரரக்ஷாஸூக்தி.
37. யதிராஜஸப்ததி.
38, 49. த்ரமிடோபநிஷத்தாத்.
59. பாதுகாஸஹஸ்ரம்.
48. யாதவாப்யுதயம்.
39. அம்ருதாஸ்வாதிநீ.

ஸம்ஸ்க்ருத த்ராவிட கவிகள்

41. புராணமித்யேவந. (காலிதா)
54. திலீபாநந்தரம். ,,
64. பாதூர் நிசாஸ (அப்பயதீ)
63. ஸஞ்ஜாதபத்ர, (குவலயா)
10. அகரமுதல. (திருக்குறள்)
43. அந்தமிலாமறை (கம்பர்)
58. தருணமங்கையை ,,

அறுபத்துநான்கு நன்மொழிகளின்

மேற்கோள் விளக்கு

முற்றிற்று

ஸ்ரீ:

சக்ரவர்த்திதிருமகனறுபத்துநான்கு.

— ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியர் —

சக்ரவர்த்திதிருமகனுடைய திருக்குணங்களை 64 வார்த்தைகளினால் அற்புதமாக அநுபவிக்க விரும்புகிறோம்.

(1) ஸ்ரீராமன் மஹாவீரன். [ஜயஜய மஹாவீர !]

1. உலகத்தில் போர்வீரர்களைப்பற்றிப் பேசும்போது, சௌர்யம் வீர்யம் பராக்ரமம் என மூன்று சொற்களைப்பெய்து பேசுவர்கள். (1) எதிரிகளின் சேனை எவ்வளவு பிரபலமாக இருந்தாலும் அதைக்கண்டு சிறிதும் அஞ்சாமை. (2) அந்தச் சேனையினுள்ளே ஒருவனாகவே புகுந்து எதிரிகளை அநாயாஸமாகக் கொன்று முடிக்கும் வல்லமை. (3) அப்படிச் செய்யுமளவில் தனக்குச் சிறிதளவேனும் பங்கம் நேராதபடி ஸகலவித பங்கங்களும் எதிரிகளுக்கே சார நிற்றல். ஆக இங்ஙனே மூன்றுவகையான ஆற்றல்கள் பெரும் போர்வீரர்களுக்கு இருக்க வேண்டியவையுண்டு. இவையெல்லாம் ஸ்ரீராமபிரான்பக்கலில் புஷ்கலங்கள். ஸ்ரீராமாயணத்திலும் மற்றும் இராமபிரானைப்பற்றிப் பேசும் பல நூல்களிலும் இராமனை வீரனென்றும் சூரனென்றும் பராக்ரமசாலியென்றும் பாராட்டிக்கூறுவது விசேஷமாகக் காணப்படுகிறது. இராமனுக்கு மஹாவீரனென்ற ஒரு திருநாமமுண்டு. "ஜயஜய மஹாவீர!" என்றே ரகுவீரகத்யத்தின் தொடக்கம். வீராகவனென்றே ஒரு திவ்யதேசத்தில் திருநாமம் பெற்று விளங்குகின்றமை ப்ரஸித்தம். பவபூதி மஹாகவி மஹாவீரசரிதமென்றே பெயரிட்டு நூலியற்றினன். ஆழ்வார்கள் இராமனது செயலைச்சொல்லி வீரனென்றே வாய் வெருவுவர்கள்; "இலங்கை மன்னனைந்தொடைந்து பைந்தலை நிலத்துகக் கலங்கவன்று சென்று கொன்று வென்றி கொண்ட வீரனே!" என்றும் 'மாறுசெய்த வாளரக்கன் நாளுலப்ப அன்றிலங்கை நீறுசெய்து சென்றுகொன்று வென்றிகொண்ட வீரனார்" என்றுமுள்ள [திருச்சந்த விருத்தம்] பாசுரங்கள் காண்க. இவை யெல்லாவற்றிலுங்காட்டில் எதிரி கையாலே விடுதீட்டென்னுங் கணக்கிலே இராவணனே வியந்து போற்றும் வீரியம் இராமனுக்குள்ளது. [வால்மீ. யுத்த. 106-6] "சத்ரோ: ப்ரக்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்பது இராவணனுடைய மொழி. இராமனை ப்ரக்க்யாதவீர்யனென்று இராவணன் தன்வாயினால் போர்க்களத்திற் சொல்லுவதானது அந்த வீர்யத்தைத் தான் மிக நன்றாகவநுபவித்ததனாலன்றோ! "விக்ரமை: ரஞ்ஜநீயஸ்ய" என்றும் அடுத்தபடியே சொல்லுகிறான்.

2. இங்ஙனே சொல்லும்படியாக இராமன் செய்த வீரச்செயல்கள் பலபல விருப்பினும் ஒன்றெடுத்துக் காட்டுவோமிங்கு. யுத்த காண்டத்தில் தொண்ணூற்று நான்காம் ஸர்க்கம் காண்க. அங்கு மூலபலம் திரண்டவன்று இராமனுடைய அதிமாநுஷப் போர்வல்லமையைப் பேச வான்மீகிமுனிவரும் தடுமாறுகின்றார். "சிந்நம் பிந்நம் சரைர் தக்தம் ப்ரபக்நம் சஸ்த்ரபீடிதம். பலம் ராமேண தத்ருசுர் ந ராமம் சீக்ரகாரிணம்." என்று, இராமனால் பலவாறு தகர்ப்புண்ட அரக்கரதுசேனைகளைக் கண்டார்களேயொழிய பம்பரமாகச் சுழல்கின்ற இராமனை ஒருவரும் காண மாட்டிற்றிலர் என்கிறார். மேலே *தே து ராமஸஹஸ்ராணி ரணே பச்யந்தி ராக்ஷஸா:* என்று, ஆயிரக்கணக்கான ஸ்ரீராமமூர்த்திகளைக் கண்டார்களென்கிறார். உடனே

புந: பச்யந்தி காகுத்ஸ்தம் ஏகமேவ மஹாஹவே என்று, அந்தப் போர்க்களத்தில் இராமனொருவனையே கண்டார்களென்கிறார். இராமனைக் காணவே யில்லை யென்பது, ஆயிரக்கணக்கான ராமர்களைக் கண்டார்களென்பது, ஒரு ராமனையே கண்டார்களென்பது— ஆகவிப்படி ஒன்றோடொன்று சேராதவண்ணம் பேசும்படியாகவன்றோ ராகவன் மிக விசித்திரமான போர்த்தொழில் நிகழ்த்திற்று. திருவாய்மொழியில் (8-6-3.) *ஒருவரிருவரோர் மூவரென நின்று, உருவுகரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான்* என்ற பாசுரத்திற்குப் பூருவாசாரியர்கள் பொருள் நிர்வஹித்திருக்கிற விதம் இதரபண்டிதர்களின் புத்திக்குச் சிறிதும் எட்டமாட்டாதது. ஒருவரிருவரோர் மூவரென நின்றதும் உருவுகரந்ததும் எப்போதென்று தெரிந்துகொள்ள முடியாதபடி ஆழ்வார்பாசுரம் தோன்றியுள்ளது. இதற்குக் கீழ்ப்பாட்டு *செருக்கடுத்தன்று திகைத்த வரக்கரை, உருக்கெட வாளிபொழிந்த வொருவனே* என்று முடிந்திருக்கிறது. மேற்பாட்டின் முன்னடிகட்குக் கீழ்ப்பாட்டின் பின்னடிகளோடு அந்வயமென்று கண்டு உரை செய்தருளியுள்ளார்கள். இங்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் இவை காண்மின்;- "ஒருவரிருவரோர் மூவரென நின்று உருவு கரந்து—உருக்கெடவாளி பொழிந்த வொருவன் என்று கீழோடே அந்விதமாகக் கடவது. மூலபலம் சாம்படி அருளுகிறவன்று முந்துற ஒருவனாய்த்தோற்றி, சாரிகையில் வேகம் மிகமிக இருவரும் மூவருமாய்த் தோற்றி, வேகம் மிக்கவாறே இந்த்ரிய ஸம்யோகத்துக்கு இடமில்லாதபடியாகையாலே ரூபக்ரஹணம் அரிதாகி உருக்கெட வாளி பொழிந்த வொருவனென்று அந்வயம். வ்யாபரித்த சடக்காலே ரூபம் கண்ணுக்குப் பிடிபடாதொழிகை" என்று. இதனால் இராமனது வீரம் வாசாமகோசரமென்றதாயிற்று.

3. இராமன் இவ்வளவு மஹாவீரனாயிருக்கும்போது இராவணனை ஒரு நொடிப்பொழுதில் கொன்றிருக்கலாமே; அங்ஙனங் கொல்லாது வெகு ப்ரயாஸங்கள் பட்டதாகத் தெரிகிறதே, அஃது ஏன்? என்று சிலர் கேட்கக்கூடும். கேண்மின்; "பொல்லாவரக்கனைக் கிள்ளிக் களைந்தானை" என்று ஆண்டாளும், "சதுர மாமதிள் சூழிலங்கைக் கிறைவன் தலைபத்துதிரவோட்டி ஓர் வெங்கணையுய்த்தவன்" என்று திருப்பாணாழ்வாரு மருளிச்செய்தபடியே ராவண ஸம்ஹாரத்தைப் பெருமாள் அவலீலையாகவேதான் செய்தார். அதில் ஐயமொன்றுமில்லை. 'எப்படியாவது ராவணன் உடன்பட்டு வழிபட்டு உஜ்ஜீவிக்கவும் ஜீவிக்கவும் ப்ராப்தமாமோ?' என்கிற நசை பெருமாளுக்கு இருந்தமையினாலேயே அவனை ஸம்ஹரிப்பதில் காலதாமதம் செய்யப்பட்டதென்கிற தத்துவம் உணரத்தக்கது. இராவணனைக்காட்டிலும் பன்மடங்கு வலிமைமிக்கவனென்று ப்ரஸித்திபெற்றிருந்த வாலியை அநாயாஸமாக முடித்தவர் பெருமாள். [ஸுந்தரகாண்டம் ஸர். 51. ச்லோ. 11] திருவடி இராவணனுக்கு ஹிதோபதேசம் செய்கையில் *த்வயா விஜ்ஞாதபூர்வச் ச வாலீ வாநரபுங்கவ:, ராமேண நிஹதஸ் ஸங்க்யே சரேணைகேந வாநர:* என்று, 'அப்பா ராவணா! வாலியென்கிற வானரேச்வரரை ஏற்கெனவே நீ அறிவாயன்றோ, அவர் இராமனால் ஒரே யம்பினால் முடிக்கப்பட்டார்காண்' என்கிறார். அன்றியும், இராவணனைப் பலவாறு பங்கப்படுத்தியவன் கார்த்தவீரியார்ஜுனன்; அன்னவனைப் பரசுராமன் தனது கோடாலிப்படையினால் ஆயிரங் கைகளையும் வெட்டிக்கொன்றவன். அப்பரசுராமன் இராமபிரானிடம் பட்டபாடு தெரிந்ததே. இத்தகைய ஒப்புயர்வற்ற ஆற்றல்பெற்ற இராகவன் இராவணனைச் சங்கரிக்கச் சிரமப்படவேண்டுமோ? சிரமப்பட்டதாகக் கதையிலே கண்டால் ஸத்யஸங்கல்பனும் மஹாவீரனுமான இராமன் எதற்காக இப்படிச் சிரமப்பட்டானென்று ஆராயவேண்டுமன்றோ. ஆராய்ந்தவளவில், கீழே நாம் தெரிவித்த காரணமே ஊர்ஜிதமாகும். அதாவது ராவணனுடைய ஆபிமுக்யத்தை யெதிர்பார்த்திருத்தல்.

4. சூர்ப்பணகை மூக்கறுப்புண்டு ஜனஸ்தானத்திலிருந்த தன் தமையனாகிய கரனிடஞ்சென்று செய்தியறிவித்துப் புரண்டழுது அவனுக்குக் கோபத்தையுண்டாக்க, அவன் பதினாலாயிரம் ஸேனாதிபதிகளையும் ஸேனைகளையும் இராமனோடு போர்புரியவனுப்ப, இராகவன் அவர்களத்தனை பேரையும் தாம் ஒருவராகவே கொன்று வென்றிட, பிறகு கரன்தானே நேரில் வந்து எதிர்க்க, இராமன் "அஸஹாய சூர!" என்று ரகுவீரகத்யத்தில் விளிக்கும்படியாக லக்ஷ்மணனையும் துணைகொள்ளாமல் ஏகாகியாய் அவனது தலையை யறுத்திட்டதும் ப்ரஸித்தம். "சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம், ஏகச்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி!" என்று வயிறுபிடித்த மஹரிஷிகளும் வியக்கும்படி அவலீலையாகவன்றோ நீறு செய்தது. அத்தகைய பேராற்றல்பெற்ற பெருவீரனுக்கு இராவணன் ஒரு பதார்த்தமோ? ஒரேயடியில் அவனைத் தொலைக்கமாட்டாமையில்லை. எவ்வகையினாலாவது அவன் அபிமுகனாக வருகிறானாவென்று பார்த்திருந்தாரத்தனை. இது பெருமாளுடைய வார்த்தையினாலேயே நன்கு விளங்கும்படியை நிரூபிப்போமிங்கு.

5. ஸ்ரீராமாயண யுத்தகாண்டத்தில் "மரணாந்தானி வைராணி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம், க்ரியதாம் அஸ்ய ஸம்ஸ்காரோ மமாப் யேஷ யதா தவ." என்பது விபீஷணாழ்வானை நோக்கிப் பெருமாளருளிச் செய்ததொரு ச்லோகம். இராவணன் மாண்டபின்பு 'இந்த மஹாபாபிக்கு நான் உத்தரக்ரியை [ஈமக்கடன்] பண்ணமாட்டேன்' என்று ஒருநிலைநின்ற விபீஷணாழ்வானை நோக்கிக் கூறினது இது. ஸாதாரணமாக வடமொழி பயின்ற அனைவரும் ஸ்ரீராமாயணத்தில் இறங்கி அர்த்தம் சொல்லப்புறப்படுவது வழக்கமாதலால், அப்படிப்பட்டவர்கள் இதற்குக் கூறும் பொருள் எங்ஙனே யென்னில், உலகத்தில் ஒருவனிடத்து ஒருவனுக்குப் பகை மரணம் வரைக்குமே யாதலால் இந்த ராவணன் மாண்டொழிந்த பின்பும் இவனிடத்து நாம் பகை வைப்பது ஏதுக்கு? இவனை வதை செய்வதும் பிராட்டியைக் கைக்கொள்வதுமே நமக்கு ப்ரயோஜனமாதலால் அது நிறைவேறப்பெற்ற பின்பும் இவன்மீது நாம் பகை பாராட்டலாகுமோ? பகையை மறந்து இனி இவனுக்குச் செய்யவேண்டியதைச் செய்—என்று பெருமாள் கூறுவதாகவே பலரும் பொருள் சொல்லுவர் இப்பொருள் பொருத்தமுடையதன்றென்றும் இது இராமபிரானுடைய திருவுள்ளத்திற்கு ஒவ்வாதென்றும் நம்பிள்ளை திருவுள்ளம்பற்றி இன்சுவைமிக வியாக்கியானம் செய்தருளியுள்ளார். (அதனையே இங்கு விவரிக்கிறோம்.) இதுவரை பெருமாள்மீது இராவணன் பகை பாராட்டியிருந்தானேயல்லாது இராவணன்மீது பெருமாள் சிறிதும் பகை பாராட்டியிருந்ததில்லை; விபீஷணாழ்வானைப் பரிக்ரஹிப்பதா விட்டிடுவதா? என்று விசாரம் நடந்து பரிக்ரஹிப்பதென்று நிச்சயித்து "ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட! தத்தமஸ்யாபயம் மயா" என்று ஸுக்ரீவனை ஏவி விபீஷணனை அழைத்துக்கொண்டு வர நியமித்தபோது "விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவணஸ் ஸ்வயம்" என்று பெருமாள் கூறியுள்ளார்; வந்தவன் விபீஷணனாயிருந்தாலும் ஸரி; இராவணனே மாறுவேஷம் பூண்டு வந்திருந்தாலும் ஸரி; விடாதே கொண்டுவா என்றார். அங்ஙனே சொன்ன பெருமாளுடைய திருவுள்ளத்திற்கு இணங்கவல்ல பொருளன்றோ பணிக்கவேணும். இது கேண்மின்; விபீஷணா! இவ்விராவணன் ஜீவித்திருக்கும் நாளிலேயே இவனுக்குச் சில நன்மைகள் நான் செய்யக் கருதியிருந்தேன்; அவை ஈடேறாதபடிக்கு இவன் பலவகையான த்வேஷ காரியங்களைச் செய்து வந்தான்; மஹரிஷிகளின் குடியிருப்பை யழித்தான், பிராட்டியைப் பிரித்தான்; நம் உயிர்நிலையான ஸ்ரீஜடாயு மஹாராஜரை நலிந்தான்; இப்படிப்பட்ட வைரங்களை இவன் தான் சாகிறவரையில் செய்து தீர்த்தானாயினும் இனிச் செய்யப்போகிறதில்லையே—என்

பதே "மரணாந்தானி வைராணி" என்றதற்குப் பொருள். (வைராணி என்றது வைரகார்யாணி என்றபடி.) இப்பொருளில்தான் பஹுவசனம் பொருந்தும்.

6. இனி "நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜனம்" என்றதுதான் இங்கு உயிரான வார்த்தை. இதன் பொருளைத்தான் செவ்வனே உணரப்பெற வேணும். "இவனை முடிக்கவேண்டியது நமக்கு ப்ரயோஜனம், அது நிறைவேறிவிட்டது" என்று பெருமாள் சொல்லுவதாகக் கொள்ளவே கூடாது; அப்பொருள் நெஞ்சாலும் நினைக்கத்தக்கதன்று; எடுத்துக்கழிக்கவும் தகாத பொருள் அது. இதற்கு நம்பிள்ளை யருளிச்செய்திருக்கிற ஸ்ரீஸூக்தியை அப்படியே எழுதுகிறோமிங்கு; "[நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம்] இவன் ஜீவித்திருக்கிற நாளிலே நாம் செய்யும் நன்மையை இவன் விலக்காதொழிய வேணுமென்று இத்தனையே பெறப்பார்த்திருந்தோம்; அது அந்நாளில் பெற்றிலோம்; நாம் தேடியிருந்தவது மூந்துற முன்னம் ஸித்திக்கப்பெற்றோமிறே" என்று. இதைச் சிறிது விவரிப்போம். பகவான் சேதநர்களுக்கு நன்மைபுரியக் கடமைப்பட்டவன்; தான் செய்ய நினைத்த நன்மைகளை நிர்ஹேதுகமாகத் தானே செய்துவிடலாமாகிலும் "ஸர்வஜ்ஞோபி ஹி விச்வேசஸ் ஸதா காருணிகோபி ஸந், ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்று சாஸ்த்ரங்களிற் கூறியிருப்பதனால் சேதநர்களிடமிருந்து சிறிது எதிர்பார்க்கிறான் என்று ஏற்படுகிறது. அப்படி பகவான் எதிர்பார்ப்பது எது? என்னில்; அதை நாம் ஒருவிதமாக நிஷ்கர்ஷித்துச் சொல்லமுடியாது. கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பக்தியோகம் முதலானவற்றில் ஏதேனுமொன்றை எதிர்பார்க்கவும் கூடும்; "நாம் செய்யும் நன்மையை இவன் விலக்காதிருக்கவேணும்" என்று இவ்வளவே யெதிர்பார்ப்பதுமுண்டு. இதற்கு அப்ரதிஷேதம் என்று பெயர்.

7. ப்ரதிஷேதமாவது விலக்குகை; அப்ரதிஷேதமாவது விலக்காமை. பகவானுடைய கருணை நம்மேல் பெருகவொண்ணாதபடி நாம் தந்தலைவெட்டிகளாய்த் திரிவதுண்டே அதுதான் விலக்குகை; நம்முடைய விபரீத ப்ரவ்ருத்திகளைக்கண்டு பகவான் "ஐயோ! நம்முடைய கருணை புகுவதற்கு இடம்தாமல் இப்படித் தடை செய்கிறானே பாவி" என்று கண்ணீர் பெருக்கி நிற்பன். சேதநன் அநுகூல ப்ரவ்ருத்தியொன்றும் செய்யாமற்போனாலும் விபரீத ப்ரவ்ருத்திகளைச் செய்யாமலாவதிருந்தால் அவனுடைய அருள்வெள்ளம் தடையின்றிப் பெருகியே தீரும். இதை ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் கூரத்தாழ்வான் வெகு அற்புதமாக அருளிச்செய்கிறார், (61.) *யத்ப்ரஹ்மகல்பநியுதாநுபவேபி* என்கிற ச்லோகங் காண்க. இதில் "க்ஷாம்யஸ்யஹோ ததபிஸந்தி விராம மாத்ராத்" என்பது உயிரான வார்த்தை. சேதநன் ஸுக்ருதவிசேஷங்களைச் செய்யாமற்போனாலும் துஷ்க்ருதமாவது ஒன்றும்செய்யாமலிருந்தால் அவ்வளவையே பற்றாசாகக் கொண்டு எம்பெருமான் அருள்புரிந்து தீருகிறான் என்பதுதான் கூரத்தாழ்வானது இந்த ஸ்ரீஸூக்தியில் காட்டப்பட்ட விஷயம். நாமாக வொரு ஸுக்ருதமும் செய்யாதவளவில் அதைப்பற்றிச் சிறிதும் கவலையில்லை. எம்பெருமானது கருணைப் பெருக்குக்குத் தடையாக அவனோடு எதிரம்புகோப்பதும், அவனாக அருள் செய்யத் திருவுள்ளம் பற்றினாலும் அதையும் தடைசெய்வதுபோல் நாம் விபரீத ப்ரதிகூலப்ரவ்ருத்திகளிலே கைவைப்பதுமாயிருந்தால் அதுகண்டு எம்பெருமான் ஐயோ வென்று சோகிக்கவே நேர்கின்றது.

8. இராவணன் பிராட்டியைக் கவர்ந்தது, ஜடாயுவை நலிந்தது, பரம பாகவதர்களைக் குடியிருக்கவொட்டாது தீங்கிழைத்தது முதலியன செய்தாலும் இவற்றைப் பொருள்படுத்தாமல் கருணைக்கடலான காகுத்தன் "இன்றுபோய் நாளைவா" என்பது முதலிய வார்த்தைகளினால் இரக்கக் குறி காட்டியிருந்தும் அந்தோ!

அவன் பெருமானுடைய திருவுள்ளத்தை யறியப்பெற்றிலன். "கச்சாநுஜாநாமி" என்ற பெருமாள்நியமனத்தைப்பெற்று இல்லம் சென்றவவன் திரும்பவும் போர்புரிய வாராதிருந்தானாகில் பெருமாள் அவனையே இலங்கைக்கரசனாக்கி வைத்தருள்வரே. இப்பேற்றுக்கு அவகாசம் கொடுத்திலனே யவன். ஆகவே, அவன் இறந்துப் பெருமாள் செய்ய நினைத்த நன்மை அவனுடைய ப்ராதிகூல்யத்தினால் தடைபட்டுப்போயிற்று. அவன்றானே இப்போது இறந்தொழிந்தனனாதலால் இனி ப்ராதிகூல்யமொன்றுஞ் செய்யகில்லானே. இதனையே பெருமாள் பரம ப்ரயோஜனமாக நினைத்து "நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம்" என்றார். நாம் செய்ய நினைக்கும் நன்மைக்கு ஒரு தடை செய்யாமையாகிற இந்நிலைமையில் நாம் இவனுக்குச் செய்யக்கூடிய நன்மை யாதெனில், இவனுடலைக் காக்கையும் கழுகும் தின்னவிடாமல் பெரியார்களுக்குச் செய்கிற க்ரமத்திலே ஸம்ஸ்காரம் செய்வதுதான்; அதை விபீஷணா! நீ செய்வாயாக; நீ செய்யாயாகில் இதோ நான் செய்தேதீருவேன்- என்று பெருமாளருளிச் செய்வதே *மரணாந்தானி வைராணி யென்றெடுத்த விந்த ச்லோகத்தினால் தேறியது. இப்படிப்பட்ட பெருமாள் இராவணனை ஒரே அம்பினால் முடிக்காது மிகவும் தாமதித்தது தம்முடைய சௌர்ய வீர்ய பராக்ரமங்களில் குறையினாலன்று என்பது நன்கறியத்தக்கது. விச்வாமித்ர முனிவர் தம் வேள்வியை முடிக்க இராமனை வேண்டித் தயரத மன்னவனிடம் வந்தபோது "அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்" என்றார். இதில் 'ஸத்ய பராக்ரமம்' என்றதன் உட்கருத்தை உய்த்துணரவேணும். எதிரியின் சோர்வுபார்த்து அவனை வதைத்திடாமல் ஆந்தனையும் ஆபிமுக்ய்யம் கொள்ளப்பார்த்து அது கைகூடாவிடில் கடைசியாகக் கொன்றொழிப்பதே ஸத்யபராக்ரமமுடைமையென்று முன்னோர் உரை செய்துள்ளார்களென்பதும் இங்கு உணரத்தக்கது.

9. பகவானை ஷாட்குண்யபரிபூர்ணனென்னும்போது ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு என ஆறுவகைக் குணங்கள் கொள்ளப்படுகின்றன; இவற்றுள் வீர்யமாவது என்ன? என்பதை பட்டர் "ம்ருகநாபிகந்த இவ யத் ஸகலார்த்தாந் நிஜஸந்நிதேரவிக்ருதோ விக்ருணோஷி, ப்ரியரங்க! வீர்யமிதி தத் துவதந்தே" என்கிற சுலோகத்தினால் நிரூபித்தருளுகிறார்; கஸ்தூரீ பரிமளமானது தான் சிறிதும் விகாரமடையாமலிருந்துகொண்டே பிறருடைய மனங்களை எப்படி விகாரப்படுத்துகின்றதோ, அப்படியே பகவான் தான் விகாரப்படாமலே ஸகல பதார்த்தங்களையும் விகாரப்படுத்துவதுதான் வீர்யம் என்றதாயிற்று. இக்குணமும் இராமனிடத்து நன்கு காணத்தக்கது. சுமந்திரன் இராமனைக் கங்கைக் கரையில் விட்டிட்டுத் தேருடன் திரும்பி வந்து தசரதனிடம் செய்தி சொல்லுகையில், இராமனது பிரிவினால் மரம் செடி கொடி முதலியனவும் வாடி வதங்குமதை, "விஷயே தே மஹாராஜ! ராமவ்யஸநகர்சிதா:, அபி வ்ருக்ஷா: பரிம்லாநாஸ் ஸபுஷ்பாங்குர கோரகா:; உபதப்தோதகா நத்ய: பல்வலாநி ஸராம்ஸி ச, பரிசுஷ்க பலாசாநி வநாநி உபவநாநி ச" என்கிறான். 'அரசனே! உனது நாட்டிலுள்ள மரங்களுங்கூட இராமனது பிரிவைப் பொறுக்க மாட்டாமல் இளைத்துப் புஷ்பங்களோடும் தளிர்களோடும் மொக்குகளோடும் வாடிவதங்கிக்கிடக்கின்றன. குளங்குட்டைகளில் தண்ணீர் அடியிடமுடியாதபடி கொதிக்கின்றது; காடுகளிலும் நந்தவனங்களிலும் மரங்களின் இலைகளெல்லாம் உலர்ந்திருக்கின்றன—என்று கூறினன். இதைக் கூரத்தாழ்வானும் அதிமாநுஷஸ்தவத்தில் *வம்சம் ரகோ:* என்கிற ச்லோகத்தில் *தவத்ஸந்நிதிப்ரபவசைத்யஜுஷோ யதா ஹி வ்ருக்ஷாச்ச தாந்நிமலபந்த பவத்வியோகே* என்பதனாலருளிச் செய்தார். இப்படி, சேதநம் அசேதநம் என்கிற வாசியற ஸகல பதார்த்தங்களையும் விகாரப்படுத்துகையாகிற வீர்ய குணமும் இராமனிடத்துள்ள தென்பதை மனனஞ்செய்க. 1

(2) ராமோ விக்ரஹவாந் தர்ம:. (அல்லது) கருணாகாகுத்ஸ்தன்.

10. ஸ்ரீராமபிரானைத் தருமமே வடிவெடுத்தவனாகக் கூறுவர்கள். ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் (14—6) *தருமமறியாக் குறும்பனை* என்று கண்ணபிரானைத் தருமமறியாதவனென்றாள். "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்றதுபோலே "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று சொல்லியிருக்கச் செய்தேயும் கண்ணபிரான் ஆண்டாளால் தருமமறியாக் குறும்பனெனப் பட்டான். ஸ்ரீராமன் தருமமே வடிவெடுத்தவன். ஸுந்தரகாண்டத்தில் (38—41) *ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம ஸ்த்வத்த ஏவ மயா ச்ருத:" என்பது பிராட்டியின் வார்த்தையாகக் காண்கிறது. ஆந்ருசம்ஸ்யமாவது இரக்கம்; அதுதான் பரம தர்மமென்று இராமனுடைய கொள்கையாம். இராமனை இரக்கமறிந்தவன் என்றும் இரக்கமுடையவன் என்றும் சொல்லுவர்கள். வேதாந்த தேசிகர் தசாவதார ஸ்தோத்ரத்தில் ஒவ்வோரவதாரத்திற்கும் தனித்தனியே ஒவ்வொரு ச்லோகமிட்டு முடிவில் பத்து அவதாரங்களையும் சேர்த்து ஒரே ச்லோகத்தில் சொல்லும்போது [*இச்சாமீந! விஹாரகச்சப!* என்னும் ச்லோகத்தில்] ஒவ்வோரவதாரத்தையும் ஒவ்வொரு விசேஷணமிட்டுச் சொல்லிவருகையில் ஸ்ரீராமாவதார ப்ரஸ்தாவத்தில் "கருணாகாகுத்ஸ்த!" என்று கூறியிருப்பதனால் இராமன் கருணையே வடிவெடுத்தவனென்று சொல்லத் தகுதி யுடையவன். கருணையாவது என்ன என்பதையும், ஸ்ரீராமனிடத்தில் காணும் கருணை எப்படிப்பட்டது என்பதையும் இங்கே விவரிக்க விரும்புகிறோம். அமரகோசத்தில் (1—7—18) "காருண்யம் கருணா. க்ருணா, க்ருபா தயா அநுகம்பா ஸ்யாத் அநுக்ரோசோபி" என்று ஏழு பதங்கள் பர்யாய நாமங்களாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள், அநுகம்பா, அநுக்ரோச: என்னும் பதங்களும் பர்யாயமாகச் சேர்ந்திருக்கின்றபடியால் அப்பதங்களின் பொருளேதான் கருணையின் பொருளுமாகக் கூடியது. துக்கத்தினால் நடுங்குபவனைக் கண்டு தானும் நடுங்குகை அநுகம்பா; துக்கத்தினால் அழுகிறவனைக் கண்டு தானும் அழுகை அநுக்ரோசம் என்பது உலகில் அனைவருமிசையவேண்டிய பொருளாகும். இதுதான் கருணையெனப்படும். ஆகவே, பிறர்படும் துயரைக் கண்டு தானும் ஐயோவென்று துயருற்றிருக்கை கருணை, அதை நன்கறிந்து அப்படியே வர்த்திப்பவன் இராகவன். இக்குணம் ஸ்ரீராமாயணத்தில் பலவிடங்களில் காணப்படுமாயினும் சிலவிடங்களை இங்கெடுத்துரைத்து அநுபவிப்போம்.

11. தசரதமன்னவன் இராமனுடைய திருக்குணங்களையும், அவனுக்கு ஜனங்களிடத்திலும் ஜனங்களுக்கு அவனிடத்திலும் அமைந்துள்ள அளவுகடந்த அன்பையும் நோக்கி அவனை இளவரசாக முடிசூட்டி அரசாட்சிச் செல்வத்தை அவனிடத்தில் ஒப்புவித்துத் தான் இளைப்பாறவேண்டுமென்று விருப்பங்கொண்டு மந்திரிகளோடுங்கலந்து ஆலோசித்துத் தனது கருத்தைத் நிடப்படுத்திக்கொண்டு விரைவாகவே அதனைச் செய்துமுடிக்கக் கருதி அந்நாட்டிலுள்ள மன்னவர்களையும் மஹாஜனங்களையுமெல்லாம் வரவழைத்துப் பெருஞ்சபை கூட்டி அவர்களுக்குத் தன் கருத்தை வெளியிட்டனன்; அப்போது அவர்கள் யாவரும் அளவற்ற ஆனந்தமடைந்து "கிழவரே! நீர் ஒழிந்துபோம், இராமனுக்கே முடி சூட்டுவீராக" என்று மிகப்பெரிய கோஷமாகக் கூறினர்; தன் விருப்பத்தை அனைவரும் ஆமோதித்தமைபற்றி உள்ளம் பூரித்த தயரதன், இராமனிடத்தில் ஸகல ஜனங்களுக்கும் இங்ஙனம் அன்பு நிறைந்திருக்குங் காரணத்தைத் தான் அறிந்திருந்தும், அவர்கள் வாயிலாகவே அதை இனிதாகத் தெரிந்துகொள்ள விரும்பி அவர்களை நோக்கி "ஓ மன்னவர்களே! மஹா ஜனங்களே! என் மனத்தில் தோன்றிய விருப்பத்தை நானே சுதந்திரனாய்ச் செய்து முடித்துக்கொள்ள வல்லேனாயிருந்தும் உங்கள் கருத்தையும் அநுஸரித்து நடந்துகொள்ளவேணுமென்றெண்ணி உங்களையும் வரவழைத்துக் கேட்டேன்; கேட்டவுடனேயே நீங்கள் 'கிழவா! ஒழிந்துபோ,

கிழவா! ஒழிந்துபோ; இராமனுக்கே முடி சூட்டவேணும்' என்று பேரிரைச்சல் செய்து கூறுவதை நோக்குங்கால், என் அரசாட்சியில் நீங்கள் யாவரும் மிகக் கஷ்டமடைந்திருந்தீர்கள் போலவும் அந்தக் கஷ்டத்தை எப்போது தவிர்த்துக்கொள்ளப் போகிறோமென்று சமயம் பார்த்திருந்தீர்கள் போலவும் நினைக்கவேண்டியதாகின்றதே; "சக்ரவர்த்தியாகிய நீர் உம்முடைய இஷ்டப்படி செய்துகொள்ளலாம், எங்களைக் கேட்கவேணுமோ?" என்று மரியாதையாக வார்த்தை சொல்லியிருக்கலாமே; அப்படிச்சொல்லாமல் என்பால் மிகவும் வெறுப்புத் தோற்றச் சொன்னீர்களே, இதற்கு என்ன காரணம்? கூறுமின்" என்றனன். அதற்கு அனைவரும் 'மன்னர்பிரானே! உன்மீது நாங்கள் யாதொரு குற்றமும் நினைத்திலோம்; நீ பெற்ற புதல்வன் எல்லையில்லாத நற்குணங்கள் அமையப்பெற்றவனாதலின் அவனது திருக்குணங்களில் ஈடுபட்ட நாங்கள் அவனை அரசனாகப்பெற்று அவன்கீழ்க் குடிவாழ விரும்பினோம்; அவனது திருக்குணங்களைக் கேட்க விரும்புவாயாயின் சொல்லுகின்றோம், கேட்டருள் கோமானே!" என்று பீடிகையிட்டு இராமனது திருக்குணங்கள் பலவற்றையும் சொல்லிவருமளவில் (அயோ. 2—40.)

"வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:கித:,
உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி." என்றார்கள்.

பிறர் துயருறக் கண்டால் தான் அபரிமிதமாகத் துயருறுபவன்; பிறர்க்கொரு மகிழ்ச்சியுண்டானால் தான் மிக மகிழ்பவன்—என்பது மேலே குறித்த ச்லோகத்தின் பொருள். பிறருடைய மகிழ்ச்சியில் மகிழ்பவன் என்றது இருக்கட்டும். 'பிறர் துயருறக் கண்டால் தான் அபரிமிதமாகத் துயருறுபவன்' என்றார்களே—இதுதான் தயாளுவான புருஷனின் மிகச் சிறந்த தன்மை. இங்கு இராமனது திருக்குணங்களைக் கூறத்தொடங்கினபோது (ச்லோ. 26.) "பஹவோ ந்ருப! கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே" என்று கலியாண குணங்களைச் சொல்லுவதாக மகுடமிட்டுச் சொல்லிவருகையில் அக்குணங்களினிடையே பரது:க்க து:க்கித்வமாகிற இக்குணத்தைக் கூறியிருக்கையாலே இது மிகச் சிறந்த நற்குணமேயொழியத் தீயகுணமன்றென்பது வெளிப்படை.

12. ஆனால் சிலர், துக்கப்படுகையென்பது எவ்விதத்திலும் தீயகுணமேயன்றோ வென்று கலங்கி ஆக்ஷேபங்கள் செய்வதுண்டு. ஸஹஸ்ரநாமத்தில் "விகர்த்தா" என்கிற திருநாமத்திற்கு பாஷ்யம் அருளிச்செய்யாநின்ற பட்டர் அவர்களது கலக்கம் நீங்க ஆக்ஷேப பரிஹாரம் செவ்வனே செய்தருளியிருப்பதால் இங்கு விரிவு வேண்டா. அகில ஹேய ப்ரத்யநீக கல்யாண குணநிதியான எம்பெருமானைத் துக்கப்படுபவனாகச் சொல்லவே கூடாதென்றும், துக்கப்படுவதென்பது ஹேய குணமேயாகுமென்றும் நினைப்பவர்களைச் சுருக்கமாகத் தெளிவிக்கிறோமிங்கு. துக்கப்படுவதென்பது இரண்டுவிதம்; ஸ்வார்த்தமென்றும் பரார்த்தமென்றும். தனக்கொரு கஷ்டம் நேர்ந்ததென்று துக்கப்படுவதானது ஸ்வார்த்த துக்கமெனப்படும். பிறர்க்கு நேர்ந்த கஷ்டத்தைப்பற்றி துக்கப்படுவதானது பரார்த்த துக்கமெனப்படும். முந்தினதான ஸ்வார்த்த துக்கத்தை ஹேயகுணமாக நினைக்க நியாயமுண்டு. பிந்தின துக்கத்தை [அதாவது பரார்த்த துக்கத்தை] ஹேயகுணமாக நினைத்தல் மிகப் பிசகு. குணங்களில் தலையானது இதுவேயாகும். உலகத்தில் ஒருவன் துக்கப்படும்போது அந்தத் துக்கத்தைக் கண்டுகொண்டிராநின்ற மற்றொருவன் தானும் துக்கப்படாமல் வாளாகிடந்தால் அவனைக் கல்நெஞ்சனென்றும் ஈரநெஞ்சு இளநெஞ்சு இல்லாதவனென்றும் வசை கூறுகிறோம் பிறர் துக்கிப்பதைக்கண்டு பரவசமாக ஒருவன் துக்கிப்பானாகில் அவனை ஈரநெஞ்சனென்றும் இரக்கமுள்ளவனென்றும் பரம தயாளுவென்றும் சொல்லிப் புகழ்கிறோம். இவை இன்றாக ஒருவராலும் அபலாபம் செய்ய வொண்ணாதவை. ஆகவே கருணை

யின் பொருளான பரதுக்க துக்கித்வமென்பது மிகச் சிறந்த குணங்களில் முதன்மையாகக் கணக்கிடக்கூடியதேயன்றித் தியகுணமாக ஒருவராலுங் கூற வொண்ணாதது. எம்பெருமானிடத்தில் இக்குணமொன்றை மறந்துவிட்டு மற்றும் பலபல குணங்களை யிசைந்தாலும் பலனில்லை.

13. ஆனால் இங்கு ஒன்று சொல்லலாம்; பிறர்படும் துயரத்தைப் பரிஹரிக்கக்கூடிய சக்தி நமக்கில்லாமையாலே நாம் பிறர் துயரைக்கண்டு துயருறுவது ஸஹஜம்; ப்ரணதார்த்திஹரனென்று பெயர் படைத்துப் பரிபூர்ண சக்தியுக்தனை எம்பெருமான் பிறருடைய துயரத்தைக்கண்டு தானும் துயருறக் காரணமேயில்லை யென்னலாம். இங்கே அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைத் தெளிவாகத் தெரிவிக்கிறோம். பிறர்படும் துயரத்தைக்கண்டு துயருறுகை என்கிற வொரு தன்மையும், பிறர்படுந் துயரத்தை நீக்கத் தக்க சக்தியுடைமை என்கிற வொரு தன்மையும் ஒன்றோடொன்று முரண்பட்டவையென்று நினைக்கலாகாது; ‘அசக்தனே துயருறுவன், சக்தன் துயருறமாட்டான்’ என்று நினைப்பது மருள். தன் குழந்தைக்கு ஒரு துன்பம் நேர்ந்துவிட்டால் அதனை உடனே பரிஹரிக்கக் கூடிய சக்தி மாதாவுக்கு இருக்கச்செய்தேயும் அப்படியே அத்துன்பத்தை அவள் பரிஹரித்துவிடச்செய்தேயும் ‘குழந்தைக்குத் துன்பம் நேராமல் காக்கவேண்டியது நமது கடமையாயிருந்தும் ஏமாந்து போனோமே; அந்தோ! அநியாயமாய்க் குழந்தையைத் துடிக்கவிட்டோமே!’ என்று பலவாறாகக் கதறி வருந்தும்படியைக் காணாதாருண்டோ? துச்சாஸனன் கையிலே த்ரௌபதி பரிபவப்பட்டுக் கூவின போது கண்ணபிரான் ஒருவாறு அவளது துயரைத் தீர்த்திருக்கச்செய்தேயும் ‘ஐயோ! அவள் கூவினபோது நான் நேரில் சென்றிருந்து உதவா தொழிந்தேனே, ஐயோ அவளுக்குப் பரிபவம் நேர்ந்து அவள் கதறினபின்பு நான் காரியம் செய்தேனேயன்றி முதல்தன்னிலே பரிபவமே அவளுக்குண்டாகாதபடி ஜாகரூகனாயிராதுபோனேனே! அவளுக்கு நான் பெரிய கடனாளியாய்விட்டேனே, என் பிறப்பு என்னாயிற்று!’ என்று, தன் காவற் சோர்வை நினைத்துத் திருவுள்ளம் வேவுண்டு வருந்தினபடி யுண்டே; ‘கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம், ருணம் ப்ரவ்ருத்த மிவ மே ஹ்ருதயாத் நாபஸர்ப்பதி’’ என்பதன்றோ கண்ணபிரானுடைய திருவாசகம். மடுவின் கரையிலே முதலைதன்னாலடர்ப்புண்ட ஸ்ரீகஜேந்திராழ்வானுடைய இடரை எம்பெருமான் தீர்த்தருளினனேனும் அவன்றான் பட்ட பரிதாபம் பேச்சுக்கு நிலமன்றே. ஆழ்வாரும் பட்டருமன்றோ அதையெடுத்துரைத்து உருகினவர்கள். ‘கெட்டேன்! கெட்டேன்!!’ என்று நொந்துகொண்டே எம்பெருமான் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்தானென்கிறார்களே. இங்ஙனே பல்லாயிர மெடுத்துக்காட்டத்தக்கவை யுண்டு. இவற்றால் பரதுக்க துக்கித்வ ரூபமான எம்பெருமானது காருணிகத்வம் அசைக்க வொண்ணாதபடி தேறிநிற்கும்.

14. இதை ஸ்ரீராமாயணத்தில் அநுபவிக்கலாமிடம் காட்டுதும் காண்மின்;— பெருமாள் ஸுக்ரீவனுக்காக வாலியைக் கொன்றார்; வாலி மாண்டபின் ஸுக்ரீவன் மிக வருந்தினன்; அவனது வருத்தத்தைக் கண்டு பெருமாள் ஆற்றகில்லாது தாமும் அபரிமிதமாக வருந்தியழுதாரென்பதைக் கூறுகின்ற வான்மீகி முனிவர் (கிஷ்கிந்-24 - 24).

“ இந்யேவமார்த்தஸ்ய ரகுப்ரவீர: ச்ருத்வா வசோ வால்யநுஜஸ்ய தஸ்ய
ஸஞ்ஜாதபாஷ்ப: பரவீரஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ ’’

என்றார். இந்த ச்லோகத்தில் “ஸஞ்ஜாதபாஷ்ப:” என்றதும் “முஹூர்த்தம் விமநா: பபூவ” என்றதும் கல்நெஞ்சையுமுருக்குஞ் சொற்கள். ஸுக்ரீவனுடைய

அழுகை ஓய்ந்தும் இராமனுடைய அழுகை ஓயவில்லையென்கிறது ‘ஸஞ்ஜாதபாஷ்ப:’ என்பது. சிலர் உள்ளே பசையில்லாமல் வெளியில்மாத்திரம் கண்ணீரை விட்டு துக்காபிநயஞ்செய்வதுண்டு, அப்படியல்ல; மதியெல்லா முள்கலங்கி நின்றாரென்கிறது ‘ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ’ என்பது. மேலே 25-ஆம் ஸர்க்கத்தின் முதல் ச்லோகம்—“ஸுக்ரீவஞ் சைவ தாராஞ்ச ஸாங்கதம் ஸஹலக்ஷ்மண:, ஸமாந சோக: காகுத்ஸ்த: ஸாந்த்வயந் இதமப்ரவீத்’’ என்பது. வாலியின் மரணத்தினால் தாரைக்கும் அங்கதனுக்கும் எவ்வளவு சோகமோ அவ்வளவு சோகம் பெருமாளுக்கு மிருந்ததென்கிறார் முனிவர், “ஸமாந சோக: காகுத்ஸ்த:’ என்பதனால். அந்த ஸர்க்கத்தின் முடிவிலும் (52) “ஸுக்ரீவேணைவ தீநேந தீநோ பூத்வா மஹாபல:, ஸமாநசோக: காகுத்ஸ்த: ப்ரேத கார்யாண்யகாரயத்.” என்று அதையே மீண்டும் மொழிகின்றார்.

15. ஸீதா விவாஹகாலத்தில் ஜனக சக்ரவர்த்தி கூறிய “இயம் ஸீதா மம ஸுதா’’ என்கிற ச்லோகத்தில் ‘ஸஹதர்மசரீ தவ’ என்று சொன்னதின் கருத்திற்கு இணங்கவும் தருமமூர்த்தியான இராமபிரானைப்பற்றிச் சில நிரூபணங்களைச் செய்வோம், நாமெல்லாரும் விவாஹம் செய்துகொள்ளும்போது “இமாம் கந்யாம் தர்மப்ரஜார்த்தம் வ்ருணீமஹே’’ என்று சொல்லி [அதாவது, இந்தப் பெண்ணை தர்மானுஷ்டானத்திற்காகவும் ஸந்தான அபிவிருத்திக்காகவும் பரிக்ரஹிப்பதாகச் சொல்லி] கைப்பற்றுகிறோம். நம்போல்வாருடைய தர்மானுஷ்டானம் எதுவென்னில், இல்லறம் எனப்படுகிற க்ருஹஸ்தாச்ரம தர்மாநுஷ்டானமேயாகும். இல்வாழ்க்கைத் துணைவியாக அமைகின்ற மனைவியோடுகூடி சாஸ்த்ரோக்தங்களான தருமங்களை க்ருஹஸ்தாச்ரமிகள் அனுட்டித்துவருவதுண்டு. இராமபிரானுக்கு ஸீதாபிராட்டியை ஜனகசக்ரவர்த்தி கன்யகாதானம் செய்யும்போது “இயம் ஸீதா தவ ஸஹதர்மசரீ’’ [இராமா! நீ அனுட்டிக்கும் கருமத்திற்குத் துணைவியாமவள் இந்த ஸீதை] என்று சொல்லிக் கொடுத்திருக்கிறார். இராமன் அனுட்டிக்கும் தருமம் எதுவென்று பார்க்கவேணும். பிராட்டி இராவணனுக்கு ஹிதோபதேசம் செய்யும்போது (ஸுந்தரகா 21—20.) “விதிதஸ் ஸ ஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல:” என்று கூறுகின்றாள், பெருமாளை தர்மஜ்ஞரென்று சொல்லி உடனே அதை விவரிக்கிற வார்த்தையாக ‘சரணாகத வத்ஸல:’ என்றுரைத்தாள். இதனால், இராமபிரான் இவ்வவதாரத்தில் கைப்பற்றின தருமம் சரணாகத பரித்ராணமே [அதாவது அடைக்கலம் புகுந்தவர்களைக் காத்தருள்வதே] என்று தேறுகின்றது. வேதாந்த தேசிகனும் தசாவதார ஸ்தோத்ரத்தில் ராமாவதாரத்திற்கு இட்ட ச்லோகத்தில் “ஸர்வாவஸ்த ஸக்ருத்ப்ரபந்நஜநதா ஸம்ரக்ஷணைகவ்ரதீ தர்மோ விக்ரஹவாந்’’ என்று இந்த மருமத்தை வெளியிட்டுக்கொண்டே யருளிச்செய்தார். ப்ரபந்நஜந ஸம்ரக்ஷணமே பெருமாளுக்குப் பரமதர்மம். இத்தருமத்திற்குத் துணைவியாகவே பிராட்டி அமைந்தாள். ஆனது பற்றியே திருமந்த்ரார்த்தத்தில் பிள்ளை லோகாசாரியர் “ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகையாலே இதிலே ஸ்ரீஸம்பந்தம் அநுஸந்தேயம்’’ என்றும் “இவள் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது, அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்’’ என்றும் அருளிச்செய்துள்ளார். இது ஸ்ரீராமாயணத்தில் பலபலவிடங்களிலும் காணப்படுகிறது. கம்பராமாயணம் வாலிவதைப் படலத்தில் ஒரு செய்யுளினால் இது நன்கு மூதலிக்கப்படுகிறது.

“ கோவியல்தருமமுங்கள் குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத் தெழுதவொண்ணா வுருவத்தா யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன்பெற்ற வன்னத்தை அமிழ்தின்வந்த
தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை.’’

இச்செய்யுள் இன்சுவையே வடிவெடுத்தது. பிராட்டி அருகே யில்லாமையினால்

தான் இராமன் வாலிவதஞ்செய்ய நேர்ந்ததென்கிற தத்துவம் இங்கு வெளியாகின்றது. இச்செய்யுளில் "தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை" என்றது ஸ்ரீராமாயணக்கடலில் மிக முக்யமாகக் கொள்ளத்தக்க மஹாரத்னம்போன்றவொரு சம்பிரதாயப்பொருளை யுணர்த்துகின்றது. அதைச் சிறிது விவரிப்போமிங்கு.

16. கீதாசார்யன் பகவத்கீதையில் தன்னுடைய அவதார ப்ரயோஜனத்தை அருளிச்செய்யுமிடத்து *பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்* என்கிறான். ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதும் துஷ்டர்களைத் தொலைப்பதுமாகிய செயல்களை அவதாரத்திற்குப் பயனாகக் கூறியுள்ளான். இவ்விரண்டு செயல்களும் ஸ்ரீராமாவதாரத்தில் விசேஷமாக நடைபெற்றிருப்பதை நாம் ஸ்ரீராமாயண முகத்தினால் அறிகிறோம். இதில் அரிய பெரிய விசேஷமொன்றும் தெரியவருகிறது. அது யாதெனில்; சீதாபிராட்டி இராகவனோடு கூடியிருக்குங்காலத்தில் எப்படிப்பட்ட அபராதிகளுக்கும் விநாசம் ப்ராப்தமாகிறதில்லை; பெருமாள் அவளைவிட்டுப் பிரிந்திருக்கிற காலத்தில்தான் அபராதத்தில் குறையின்றவர்களையும் கண்ணற்றுக் கொலைசெய்து தொலைக்கிறார் என்பதேயாம். இது ஸ்ரீராமாயணத்தில் ஆதியோடந்தமாகவுள்ள கதைகளினால் நன்கு தெரிகின்றது. இராமன் முதன்முதலாகச் செய்தது தாடகையினுடையவும் ஸுபாஹு முதலிய அரக்கர்களினுடையவும் வதம். முதன் முதலாகப் பெண்கொலை புரிந்தாரென்னு மபவாதம் இற்றைக்கும் அழிந்ததில்லை. அப்படிப்பட்ட கொலைத்தொழில் செய்த காலத்தில் பெருமாளுக்குப் பிராட்டியின் ஸம்பந்தமுண்டாகவேயில்லை; பிரமசாரியாயிருக்கும்போது தானே மாமுனி வேள்வியைக் காத்தது. அப்போது பிராட்டி அருகேயிருந்திருந்தால் தாடகாவதம் நேர்ந்தேயிராது. அவள் அருகே யில்லாதது பற்றியே பெருமாள் பெண்கொலையென்றும் பாராமல் தாடகாவதம் பண்ண நேரிட்டது. பிறகு மிதிலாபுரிக்குச் சென்று பிராட்டியை மணம் புணர்ந்தார். அது முதலாகப் பிராட்டியோடு கூடியிருக்கிறவரையில் ஒரு கொலைத்தொழிலும் நடந்ததில்லை. தீவ்ரமான அபராதம் செய்தவர்களுக்கும் ரக்ஷணம் நேர்ந்திருக்கின்றதேயன்றி, கொலையென்பது ஒருவர்க்கும் கிடையாது.

17. இதன்மேல் சிலர் சொல்லக்கூடிய ஆக்ஷேபங்களையும் பிரசங்கித்துப் பரிஹரிக்கிறோம். விராதனென்னும் அரக்கனை வதம் செய்தது பெருமாளும் பிராட்டியும் கூடியிருந்த காலத்தில்தானே; கரன் தூஷணன் முதலிய பதினாலாயிரமரக்கர்களின் வதமும் பிராட்டியோடு கூடியிருக்கும்போதுதானே நடைபெற்றிருக்கிறது. ஆகவே, பிராட்டியருகே யிருக்கும்போது பெருமாள் ஒருவரையும் வதஞ் செய்ததே கிடையாதென்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? என்று சிலர் கேட்கக்கூடும். அவர்களுக்குச் சொல்லுகிறோம். விராதனுடைய பிரஸ்தாவம் ஆரணியகாண்டத்தில் இரண்டாவது ஸர்க்கத்தில் வருகிறது. அங்கே கதைப்போக்கு உள்ள விதத்தை நன்கு கவனிக்கவேணும். விராதன் வந்ததும் பிராட்டியைக் கொள்ளை கொள்கிறான். பிறகு அவளை விட்டுவிட்டு இராமனையும் இலக்குமணனையும் தூக்கிக்கொண்டு வேறொரு வனத்தில் நுழைகிறான். அப்போது பிராட்டி தான் தனித்து நின்றுபோனதைக் குறித்துப் புலம்புகிறாள். இவ்விஷயம், ஆரணியகாண்டம் மூன்றாவது ஸர்க்கத்தின் முடிவிலும் நான்காவது ஸர்க்கத்தின் முதலிலும் ஸ்பஷ்டமாகவுள்ளது. சீதை தன்னைத் தனியாக விட்டிட்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்களை விராதன் வேறொரு காட்டுக்குத் தூக்கிச் சென்றபோது 'ஓ அரக்கனே! இனி என்னைச் செந்நாய்களும் புலிகளும் சிறுத்தைகளும் கொன்று தின்றுவிடுமே: அவ்விருவரையும் விட்டு என்னைக் கொண்டுபோகலாகாதா?' என்று கதறுகின்றாள். இதனால் விராதவதம் செய்யப்படுகிற காலத்திலும் இடத்திலும் பிராட்டியின் ஸந்நிதானமில்லை யென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது.

இங்கு மற்றொரு விஷயமும் முக்யமாகக் கவனிக்கத்தக்கதுண்டு; ராமலக்ஷ்மணர்கள் விராதனை எவ்வளவு நலிந்தும் அவன் மரணமடையவேயில்லை. இதை வான்மீகி முனிவரே கூறுகின்றார்—* ஸ வித்தோ பஹுபிர் பாணை: கட்காப்யாஞ்ச பரிக்ஷத:, நிஷ்பிஷ்டோ பஹுதா பூமௌ ந மமார ஸ ராக்ஷஸ:* ,என்றார்—பல அம்புகளைப் பிரயோகித்தும், இருவரும் இரண்டு கத்திகளினால் வெட்டியும் தரையில் தள்ளிப் பலவாறு உதைத்துங்கூட அவ்வரக்கன் மரணமடையவேயில்லை—என்பது மேற்குறித்த சுலோகத்தின் கருத்து. பிறகு அவன் எவ்வாறு மரணமடைந்தானென்னில்; அவன் தனது வரலாறுகளைத் தானே சொல்லிக்கொண்டு 'இராமா! இப்பொழுது உன்னால் நான் ஒரு சாபத்தினின்று விடுபட்டவனாயினேன்; என்னைப் பள்ளம்வெட்டிப் புதைத்துவிடு' என்றான்; பிறகு அவ்விதமே செய்யப்பட்டிருக்கிறது. இதனால், விராதன் தன் வதையைத் தானே வேண்டிச் செய்வித்துக் கொண்டானென்பது விளங்குகின்றது. இதுவும் பிராட்டியின் முன்னிலையில் நடைபெறவில்லையென்றும் தெரிகின்றது. ஆகவே, விராதவதச் செய்தியையெடுத்துக்கொண்டு செய்யும் ஆட்சேபம் வலியற்றதென்று காட்டப்பட்டதாயிற்று.

18. இனி, பிராட்டியின் முன்னிலையிலேயே கரதூஷணாதிகளின் வதம் நடந்திருக்கின்றதேயென்கிற ஆக்ஷேபத்திற்குப் பரிஹாரம் கேண்மின்: ஜனஸ்தானத்து ராக்ஷசப் பெருஞ் சேனைகள் இராமனைக் கிட்டிவந்தபோது இராமன் லக்ஷ்மணனை நோக்கிக் கூறியதாவது—'லக்ஷ்மணா! நீ வில்லையும் அம்புகளையுங் கொண்டு சீதையுடன் அப்பால் போய்விடு; அதோ மரங்களால் மறைக்கப்பட்டு நுழையக் கூடாமலிருக்கின்ற குகைக்குள் சீதையையு மழைத்துக்கொண்டு சென்று அவளைக் காத்துக்கொண்டிரு; தாமதம் செய்யாமல் விரைந்து செல். இத்தனையரக்கர்களையும் நீயே வதைக்க வல்லையாயினும் இப்பொழுது நானே இவர்களையெல்லாம் கொலைசெய்யக் கருதியிருக்கின்றேனாதலால் நீ சீதையுடன் இவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய்விடு' என்று; இக்கட்டளையைச் சிரமேற் கொண்ட லக்ஷ்மணன் சீதையுடன் சென்று குகைக்குள் நுழைந்த பின்பே இராமன் கவசங்களைத் தரித்து வில்லையும் அம்புகளையுமெடுத்துக்கொண்டு போர்புரிய எழுந்தனன் என்று ஆரணியகாண்டத்து இருபத்து நான்காவது ஸர்க்கத்தில் சொல்லப்பட்டுள்ளது. *தஸ்மாத் க்ருஹீத்வா வைதேஹீம் சரபாணிர் தநுர்தர:, குஹாமாச்ரய சைலஸ்ய துர்க்காம் பாதபஸங்குலாம், ப்ரதிகூலிதுமிச்சாமி ந ஹி வாக்யமிதம் த்வயா, சாபிதோ மம பாதாப்யாம் கம்யதாம் வத்ஸ மா சிரம்...தஸ்மிந் ப்ரவிஷ்டே து குஹாம் லக்ஷ்மணே ஸஹ ஸீதயா* என்கிற (வான்மீகி) ச்லோகங்கள் காணத்தக்கன. இதுகொண்டே வேதாந்ததேசிகர் ரகு வீரகத்யத்தில் கரவதத்தைக் கூறும்பிரகரணத்தில் *அஸஹாய சூர!* என்றது. ஆகவே, பிராட்டியின் ஸந்நிதானமில்லாதவிடத்தே தான் கரதூஷணாதிகளின் வதம் நடந்ததென்பது விளங்கிற்று. இதற்கடுத்தபடியாக மாரீசவதம் நடந்திருக்கிறது. அப்போது பிராட்டியை விட்டுப் பெருமாள் (மாரீசன்பின்னே) நெடுந்தூர மெழுந்தருளியிருக்கிறாரென்பது அனைவருமறிந்த விஷயம். அவனை வதைக்கவேண்டியிருந்தபடியாலும், பிராட்டி அருகேயிருந்தால் அவன் வதம்பெறமாட்டானாகையாலும், இதற்காகவே அவனை வெகுதூரம் கொண்டுபோனார் பெருமாள் என்கிற மருமமும் இங்கு உணரத்தக்கது.

19. விராதவதத்திற்கும் கரதூஷணாதிவதத்திற்குமிடையில் சூர்ப்பணகாபங்கம் நடந்திருக்கின்றது. பெருமாள் தாடகையை வதஞ் செய்ததுபோல் சூர்ப்பணகையையும் வதஞ்செய்து முடித்திருக்கலாம். அப்படிச் செய்திருக்குமளவில், மேலே பெருந்தீங்கு விளையாமலுமிருக்கும். அவளை அங்கபங்கஞ்செய்து உயிரோடு விட்டதனாலன்றோ அவள் இலங்கையிற்சென்று முறையிட்டுச் சீதையின் அபஹாரத்திற்குக் காரணமாயினள். அவளைப் பஞ்சவடியிலேயே குழிவெட்டிப் புதைத்திருந்தால் மிகவும் நலமாயிருக்குமே. ஸமர்த்தரான பெருமாள் ஏன் அது

செய்யவில்லையென்று கேட்கில், பிராட்டி அருகேயிருந்ததுதான் இதற்கு இடையூறாயிற்றென்பது முக்கியமாகச் சொல்லத்தக்கது. அமுக்கியமாகச்சொல்லத்தக்கது மொன்றுண்டு; அதுவென் என்னில்; தாடகாவதத்தை விச்வாமித்திர முனிவர் கட்டளையிட்டபடியாலே செய்தார்; அங்ஙனம் சூர்ப்பணகையின் வதத்தைக் கட்டளையிட யாருமில்லாமையினால் அது நடைபெறவில்லை என்பதேயாம். இதுவு மொரு ஸமாதான மெனினும் பிராட்டி அருகேயிருந்ததுதான் வதஞ் செய்யாமைக்கு முக்கிய காரணமென்று கொள்ளத்தக்கது.

20. பிராட்டி பெருமாளைவிட்டுப் பிரிந்து இலங்கை புக்கபின்பு, வாலிவத மென்கிற மிகப் பெரிய காரியம் நடந்திருக்கின்றது. இது நியாயமா; அநியாயமா? என்கிற விசாரணை இற்றைக்கும் அறாது நிகழ்ந்துவருகின்றது. வேதாந்ததேசிகர் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் *நிரவதி குணக்ராமே ராமே* என்னும் சுலோகத்தில் இதைச் சுட்டிக்காட்டியுமிருக்கிறார். வாலிவதம் நியாயமானதே என்று பண்டிதர்கள் எவ்வளவு பொருத்தமான ஸமாதானங்கள் சொன்னாலுங்கூட, அதை ஏற்றுக் கொள்வது மேட்டுமடையாகவே காண்கிறது. "என்னை எப்படி நீ கொன்றாய்?" என்று வலிதாக ஆட்சேபித்த வாலிதானே தன்னை வதம் செய்ததற்குப் பொருத்தமான காரணமிருப்பதைக் கண்டுபிடித்துத் தானே கூறிவிட்டதாகக் கம்பர் எழுதி வைத்துள்ளாரென்பதைக் கீழேகாட்டினோம். *தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனைபோலுஞ் செய்கை* என்பதே அது. 'இராமா! இப்போது பிராட்டி அருகேயிருந்தாளாகில் அநீதியான இவ் வதத்தை நீ செய்திருக்கமாட்டாய்; அவள் அருகில்லாதது காரணமாகவே இது செய்யத்துணிந்தாய்' என்று வாலி கூறின விது மிகப் பொருத்தமாகவே யுள்ளதன்றோ! இதுவொரு சமத்காரமான வார்த்தை போலும் என்று நினைக்காமல், இதுதான் பரமார்த்தம் என்றே நினைக்கத்தக்கதன்றோ.

21. பிராட்டி அருகேயில்லாத சமயங்களில் நடந்த வரலாறுகளை ஆராய்வதுபோலவே அவள் அருகேயிருக்கும் சமயங்களில் நடந்த வரலாறுகளையும் ஆராயவேணும். சூர்ப்பணகையின் விஷயமொன்று கீழே தெரிவிக்கப்பட்டது. அதற்கும் முந்தியதான காகத்தின் கதையைக் காண்போம். இது சித்திரகூட மலைச்சாரலில் நடந்தது. அயோத்யாகாண்டத்தில் கூறப்படவேண்டிய கதை இது; ஆனால், இது அங்குக் கூறப்படவில்லை. சுந்தரகாண்டத்தில் முப்பத்தெட்டாவது ஸர்க்கத்தில் பிராட்டி அனுமானிடம் அடையாளமாகச் சொல்லியனுப்புவதாக இது அமைந்துளது. அங்குச் சொல்லப்பட்டிருக்கிற விதம் யாதெனில்; 'அனுமனே! முன்பு சித்திரகூட பர்வதத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள தாழ்வரையில் ஏகாந்தமானதோரிடத்தில் வாழ்ந்திருக்குங்கால் ஒரு ஸம்பவம் நிகழ்ந்தது. ஒரு ஸமயம் நான் விளையாடிக் களைப்புற்று இராமனது மடியில் உட்கார்ந்திருக்கையில், ஒரு காகம் மாமிசத்தின் விருப்பத்தினால் என் மார்பினிடையில் மூக்கால் குத்தியது. நான் எவ்வளவு அதட்டியோட்டியும் அது போகாமல் என் தனங்களைக் குத்திக்கொண்டு அங்கேயே மறைந்திருந்தது. அதைக்கண்டு இராமன் என்னைப் பரிகசிக்கையில் நான் வெட்கமும் கோபமும் காட்டினேன். பிறகு ராமன் என்னை நல்வார்த்தைகளால் சமாதானப்படுத்தினான். நான் இளைப்புற்று இராமனது மடியில் படுத்துறங்கினேன். தூக்கந்தெளிந்து நானெழுந்திருக்கையில் இராமனும் என் மடிமேல் படுத்துக் கண்வளர்ந்தருளினான். அப்பொழுது அக் காகம் மீண்டும் அவ்விடம் வந்து எனது மார்பினிடையில் அதிகமாகப் பீறி என்னை மிகவும் புண்படுத்தியது. அந்தப் புண்ணினின்று பெருகிய ரத்தத்தினால் ராமன் நனைந்தனன். பிறகு என்னாலெழுப்பப்பட்ட இராமன் எனது கஷ்டத்தைக் கண்டு மிகச் சீறித் தனது தர்ப்பாஸனத்தினின்று ஓர் தர்ப்பத்தை யெடுத்து அதைப் பிரமாஸ்திர மந்திரத்தினால் மந்திரித்து அக் காகத்தின் மேலெய்தனன். அக் காகம் இந்திரனது மகனும். அவனைப்

பிரமாஸ்திரம் ஆகாயத்தில் துரத்திக்கொண்டே போயிற்று. அக் காகம் தன்னை எவரேனும் காப்பாற்றுவாரென்று மூவுலகும் திரிந்தது; தந்தை தாயார் தேவர் முனிவர் முதலிய யாவரும் கைவிட்டதினால் முடிவில் இராமனிடமே வந்துசேர்ந்தது; சரண்யனான ராமன் கருணையினால் கொல்லாது விட்டனன்; ஆனாலும் தனது பிரமாஸ்திரம் வீணாகாதாகையால் அக் காகத்தின் விருப்பத்தின்படி அதன் வலது கண்ணைக் குருடாக்கி உயிரோடு விட்டனன்; பிறகு காகம் தன்னிருப்பிடம் சென்று சேர்ந்தது.'—என்றிங்ஙனே பிராட்டி கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இக் கதையானது பாத்ம புராணத்தில் சிறிது வாசிபடக் கூறப்பட்டுள்ளது. *ந சாப்யு பாரமந் மாம்ஸாத் பக்ஷயார்த்தீ பலிபோஜந:...பக்ஷக்ருத்தேந காகேந* என்று ஸ்ரீராமாயணத்தில் காகம் மாம்ஸ பக்ஷணத்தில் ஆசையினால் வந்ததாகவன்றோ சொல்லப்பட்டது. பாத்மத்திலோ வென்னில் *ஸ த்ருஷ்ட்வா ஜானகீம் தத்ர கந்தர்ப்ப சரபீடித:, விததார நகைஸ் தீக்ஷ்ணை: பீநோந்நத பயோதரௌ* என்று காகனும் இராவணனைப்போல் காமபீடிதனாகவே வந்து அபசாரப்பட்டனனாகச் சொல்லிற்று. இவ்வரலாற்றைப் பிராட்டி தன் திருவாக்கினால் அனுமானிடம் சொல்லும்போது காமபீடிதனாய் வந்தானென்று சொல்ல நாணி மாம்ஸார்த்தியாய் வந்தானென்று மறைத்துச்சொல்லி யிருப்பதாக நினைக்க இடமுள்ளது.

22. அன்றியும், பிராட்டி தானே காகத்தின் தலையையெடுத்துப் பெருமாள் திருவடியோடே சேர்த்து சரணாகதி செய்ததாகக்காட்டி இவனை ரட்சித்தருள வேணுமென்று இராமனை வேண்டினதாகப் பாத்மபுராணத்தில் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது; அவ்விடத்து ச்லோகங்கள் இவை;—*புரத: பதிதம் தேவீ தரண்யாம் வாயஸம் ததா, தச்சிர: பாதயோஸ் தஸ்ய யோஜயாமாஸ ஜாநகீ. ப்ராணஸம்சயமாபந்நம் த்ருஷ்ட்வா ஸீதாத வாயஸம், த்ராஹி த்ராஹீதி பர்த்தாரம் உவாச தயயா விபும்* என்று. இவ்வுண்மையைப் பிராட்டி (ஸ்ரீராமாயணத்தில்) சொல்லாதொழிந்தது ஏனென்னில்; அங்குத் தன்னுடைய பெருமையைச் சொல்லிக் கொள்ளவேண்டிய அவச்யமில்லையன்றோ. 'காகத்தை ரட்சிக்கும்படி நான்தான் செய்தேன்' என்று அவ்விடத்தில் தெரிவிப்பதில் சுவையில்லையே. ஆனாலும், இவ்விஷயத்தை ஒருவாறு காட்டியிருக்கின்றாள்; எப்படியென்னில், "வதார்ஹமபி காகுத்ஸத: க்ருபயா பர்யபாலயத்" என்பது பிராட்டியின் வாக்யம். இதில் 'க்ருபயா' என்கிற சொல் கவனிக்கத்தக்கது. இராமன் தன்னுடைய க்ருபையினாலே ரட்சித்தானென்பது மேலெழுந்த பொருள். க்ருபா என்பது பிராட்டிக்கு வாசகம். "லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா" என்றும் "அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாதநிக்ரஹாம்" என்றும் பிராட்டியை க்ருபை தானே வடிவெடுத்தவளாகச்சொல்லியிருக்கின்றதன்றோ! ஆகவே 'க்ருபயா பர்யபாலயத்' என்று பிராட்டி சொன்னதானது 'இராமன் காகத்தை வதைசெய்யாமல் காப்பாற்றினது என்னாலே தான்' என்று வ்யங்க்யமாகத் தெரிவித்தபடி. இதனைத் திருவுள்ளம்பற்றியே திருமந்திரார்த்தத்தில் பிள்ளை லோகாசாரியர் "இவள் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது" என்று அருளிச்செய்தார். பிராட்டி விஷயத்தில் காகாசுரனுடைய அபராதம் வலிதா? இராவணனுடைய அபராதம் வலிதா? என்று ஆராய்ந்து பார்க்குமளவில், இராவணனுடைய அபராதம் சிறிது, காகத்தின் அபராதமே மிகவும் வலிது என்று நிர்ணயிக்கத் தட்டில்லை. திருமேனியை நலிந்து உதிரவெள்ளம் பெருகும்படியான மஹா அபராதத்தை இராவணன் செய்யவில்லையே! இதை மணவாளமாமுனிகளும் திருமந்திரார்த்த வியாக்கியானத்தில் விளங்கக் காட்டியருளினர். பிராட்டியைக் கவர்ந்து சென்ற இராவணன் இராமபிரானோடு போர்புரியும்போது பிராட்டியை அசோகவனத்தில் வைத்திடாமல் அருகிலேயே வைத்துக்கொண்டு யுத்தம் நடத்தியிருந்தானாகில், காகம் போலவே அவனும் உயிர்பெற்றே உய்ந்திருப்பன் என்பது நம் ஆசாரியர்களுக்குத்

திண்ணமான நம்பிக்கை. ஆகவேதான் "இவள் ஸந்நிதியாலே காகம் தலை பெற்றது" என்றவுடனே "அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்" என்றருளிச்செய்தார் பிள்ளைலோகாசாரியர்.

23. பிராட்டி அருகேயிருந்தால் மாத்திரம் போருமோ? சரணாகதி செய்தாலன்றோ பெருமாள் ரக்ஷிக்கக்கூடும். காகம் சரணாகதி செய்தபடியாலன்றோ உயிர் பெற்றது. "த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்" என்று ஒருவர்க்கும் தலைவணங்கமாட்டேனென்று கண்டிப்பாகக் கூறுகின்ற இராவணன் சரணாகதி செய்ய மாட்டானே; அப்படிப்பட்டவனுக்கு அருகே பிராட்டி இருந்து தான் என்ன பயனாகும்? என்றிப்படி சிலர் கேட்கக்கூடும். அவர்களுக்குச் சொல்லுகிறோம். 'காகம் சரணாகதி செய்தபடியினால்தான் உயிர்பெற்றது' என்று நினைப்பது பொருத்தமற்றது. காகம் மூவுலகும் திரிந்தும் எங்கும் கால்பாவி நிற்க இடம் பெறாமையாலே தரிப்பற்றுக் கீழே விழுந்த வத்தனையேயொழிய, பெருமாள் பக்கலில் சரணாகதி செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு வந்ததன்று. "புரத: பதிதம் தேவீ தரண்யாம் வாயஸம்" என்று பாத்மபுராணத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லிற்று. ஸ்ரீராமாயணத்திலும் 'ஸ தம் நிபதிதம் பூமௌ" என்று, தரிப்பற்றுத் தரையில் விழுந்தமாத்திரமே சொல்லிற்று. ஆளவந்தார் ஸ்தோத்திரத்தில் (63) "ரகுவர யதபூஸ் த்வம் தாத்ருசோ வாயஸஸ்ய ப்ரணத இதி தயாளு:" என்றவிடத்து வியாக்கியானத்தில்—வேதாந்ததேசிகர்—காகம் நமஸ்கரித்து சரணாகதி செய்யவில்லை யென்றும் கருணாகாகுத்ஸ்தனுடைய திருவுள்ளத்தினாலே சரணாகதனாகக் கொள்ளப்பட்டானத்தனை என்றும் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. *எத்திசையுமுழன்றோடி யிளைத்துவிழுங் காகம்போல்* என்று அடைக்கலப்பத்திலும் அவர்தாமே கூறினர். இளைத்துவிழுந்த வத்தனையேயொழிய; சரணாகதி செய்தமையில்லை யென்பதே இதன் கருத்து. காகம் சரணாகதி செய்ததாகவும் ஒரு யோஜனையுண்டு; அதைக் கொண்டே ஸ்ரீவசநபூஷணத்தில் "தர்மபுத்ராதிகளும் த்ரௌபதியும் காகமும் காளியனும்" என்று, சரணம் புகுந்தவர்களில் காகமும் சேர்த்துச் சொல்லப்பட்டது. இந்த மருமத்தையும் சிறிது விவரிப்போமிங்கு: சரணாகதியாவது என்ன? என்று விமர்சிக்குமளவில், அதைப்பற்றிப் பலர் பலவகையாகக் கூறுவர். 'எம்பெருமான் செய்ய நினைக்கும் ரக்ஷணத்திற்கு இடையூறாகத் தான் செய்யும் ப்ரவ்ருத்தியிலிருந்து விலகிநிற்பதே சரணாகதி' என்பதும் ஒரு முடிவாகத் தேறியுள்ளது. இப்படிப்பட்ட சரணாகதிதான் காகத்தினிடத்தில் காண முடியும். இதற்காகப் பெருமாள் காகத்திற்கு உயிர்ப்பிச்சை யளித்தாரென்று சொல்லவேண்டும்.

24. இப்படிச் சொல்வதானால் இராவணனிடத்திலும் இங்ஙனே சொல்வதற்குத் தடையில்லை. எப்படியெனில், 'இன்று போய் நாளை வா' என்றுசொல்லி இராவணனுக்குப் பெருமாள் நியமனம் தந்தருளும்போது, இராவணனது நிலைமை காகத்தின் நிலைமையோடொத்திருந்ததன்றோ? *சசால சாபஞ்ச முமோச வீர:* என்றது, போக்கற்றுச் செயல்மாண்டுநின்ற நிலையே யன்றோ. ஆக, காகத்தினிடத்தில் சரணாகதியென்று சொல்லக்கூடியதான நிலைமை எது காண்கிறதோ, அது இராவணனிடத்திலும் காண்பதனாலே மஹாபராதியான காகத்தையே ரக்ஷித்தருளின பெருமாள் அவ்வளவு அபராத மில்லாதவனான ராவணனை அவசியம் ரக்ஷித்தேயிருக்கவேண்டும். ஏன் ரக்ஷிக்கவில்லையென்று கேட்டால், பிராட்டி அருகிலிருக்கையாகிற ஒரு வாய்ப்பு காகத்திற்கு இருந்தது; அது இராவணனுக்கு இல்லையே, ஆதலால் தான் ரக்ஷிக்கவில்லை—என்று சொல்லக் குறையில்லையாயிற்று. ஆக, இவ்வளவு நிரூபணங்களினால், பிராட்டி இராவணனுக்கு உபதேசித்த ஹிதவசனத்தில் 'தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல:" என்று கூறியதையும், ஸீதாவிவாஹ

காலத்தில் "மம ஸுதா ஸஹதர்மசரீ தவ" என்று ஜநகசக்ரவர்த்தி சொல்லியிருந்ததையும் இணக்கி, தேறின ஸாரப்பொருள் தெளிவிக்கப்பட்டு முடிந்தது.

(3) ஸ்ரீராமன் ஸௌசீல்யநிதி.

25. தன் மேன்மை பாராமல் தாழ்ந்தவர்களோடும் புரையறக் கலந்து பரிமாறும் சீலகுணத்திற்கே ஸௌசீல்ய மென்று மறுபெயர்; எல்லாக் குணங்களிற்காட்டிலும் இக்குணம் மிகச் சிறந்ததாதலால் இதற்கு குணம் என்றே சிறப்புப் பெயர் உண்டு. இத்திருக்குணத்திற்குச் சேர நாம் அநுஸந்திக்கக்கூடிய ஸ்ரீ ராம சரிதைகளைக் கேண்மின். ஸ்ரீமந்நாராயணமூர்த்தி இராமபிரானாக இந்நிலவுலகில் திருவவதரித்தாரென்கிற விதுவே சீலகுணத்தின் பரீவாஹமாகவுள்ளது. கூரத்தாழ்வான் அதிமாநுஷ ஸ்தவத்தில் பத்தாவது ச்லோகம் *சீல: க ஏஷ தவ ஹந்த* என்று தொடங்குகின்றார். அந்தோ! இது என்ன சீலகுணம்! இதை எடுத்துப் பேச யாரால் முடியும்! என்கிறார்; அந்த சீலகுணத்தை எதுகொண்டு நிரூபிக்கிறாரென்னில், *அத்ராவதீர்ய நநு லோசநகோசரோபூ:* என்பதே அந்த ச்லோகத்தில் உயிரானவார்த்தை. கட்கிலியான வெம்பெருமான் ஆஸுர ப்ரக்ருதிகளிடையே வந்து அவர்களுடைய கட்புலனுக்கும் இலக்காகித் திருவவதரித்தானென்பதை நினைக்கும்போதே 'அந்தோ! இது என்ன சீலம்! குணமறிந்து உகக்கமாட்டாதே எதிரம்பு கோப்பதுஞ் செய்யாநின்ற அரக்கர் அசுரர்போன்ற மனிசரிடையே வந்து பிறக்கும்படியான இந்த சீல குணத்தை என்னவென்று சொல்லுவது?' என்று உருகுகிறார் கூரத்தாழ்வான். பிறந்தவாறும்! என்று சொல்லி ஆழ்வார் ஆறுமாஸம் மோஹித்திருக்கும்படியான பகவானது திருவவதாரத்தை நினைத்தவாறே 'இது என்ன சீலகுணம்!' என்று உருகவேண்டியது தவிர வேறில்லை யன்றோ.

26. அவதாரம் என்ற வடசொல்லுக்கு மேலிருந்து கீழேயிறங்குவது என்று பொருள். பரமபதமாகிய மேல்நிலத்திலிருந்து நிலவுலகமாகிய கீழ்நிலத்திற்கு வந்தாரென்பதை அவதார சப்தார்த்தமாக நினைக்கவேண்டா. மேலான தனது நிலைமைகளை விட்டிட்டுக் கீழான நிலைமைகளை ஏற்றுக்கொண்டதே 'அவதார மெனப்படுகிறது. ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதவன், எல்லாவிடங்களிலுமுளன், எல்லாக்காலத்திலுமுளன், எல்லாப்பொருள்களாகவுமுளன் என்கிற விவை பகவானுடைய மேலான நிலைமைகள். இத்தகைய நிலைமைகளை அறவேவிட்டிட்டு இவற்றுக்கு எதிரிடையான தாழ்ந்த நிலைமைகளை ஏற்றுக்கொண்டல்லவோ பகவான் வந்து பிறந்தருளிற்று. ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதிருந்தவன் அரக்கரசுரர்போல்வார் கண்ணுக்கும் புலப்பட்டான்; எல்லாவிடங்களிலுமுளனானவன் 'இப்போது அயோத்தியிலுளன், இப்போது சித்திரகூடத்திலுளன், இப்போது பஞ்சவடியிலுளன், இப்போது கிஷ்கிந்தையிலுளன், இப்போது கடற்கரையிலுளன்' என்னும்படியாகி ஓரிடத்திலிருக்கும்போது மற்றோரிடத்தில் இலனென்று நினைக்கும்படியாயினன். எக்காலத்திலுமுளனானவன் ஒரு குறிப்பிட்ட காலத்திலேயே இராமனாகவிருந்து மற்றைக் காலத்தில் இலனாயினன் என்று நினைக்கும்படி போயினன். *நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனாய்* தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்* என்று ஆழ்வார்கள் அநுஸந்திக்கிறபடி எல்லாப் பொருள்களுமாகவுளனானவன் இராமன் என்கிற வொரு பெயர்க்கு மாத்திரம் பொருளாக விருந்தனன். ஆக இங்ஙனே உயர்ந்த நிலைமைகளை விட்டுத் தாழ்ந்த நிலைமைகளை ஏறிட்டுக்கொண்டு வந்து பிறந்தவாறு என்னே! என்று ஈடுபடும்படி யாக்குகின்றது சீல குணம்.

27. இராமபிரானுடைய சீலகுணத்திற்கு விசேஷித்த இலக்கு குஹப்பெருமாள் போல்வார். திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் (5-8-1) *ஏழை

யேதலன் கீழ்மகனென்னாதிரங்கி* என்று தொடங்கியுள்ள பாசுரத்தில் இந்த சீல குணம் மிகவற்புதமாக அனுபவிக்கப்பட்டிருக்கின்றது. கங்கையில் ஓடம் விடுபவனும் ஆயிரம் ஓடங்கட்குத் தலைவனும் கங்கைக்கரையிலுள்ள ச்ருங்கிபேரபுரத்திற்கு அதிபதியுமாகிய ஒரு வேடர்தலைவன் குஹனென்பவன். இவனிடத்திற்கு இராமபிரான் பிராட்டியோடும் இளையவனோடு மெழுந்தருளியபொழுது இவன் அப்பிரானுடைய வடிவழகில் ஈடுபட்டுப் பரிந்து திருமேனிக்காவல் செய்தவிதம் வெகு ஆச்சரியமானது. [அது, ஸ்ரீவசநபூஷணம்—247ல் காணத்தக்கது.] பெருமாள் ச்ருங்கிபேரபுரத்திலே யெழுந்தருளி இளையபெருமாள் பாங்காக அமைத்த பர்ண சயனத்திலே பிராட்டியோடு பள்ளிகொண்டருளாநிற்க, இச் சேர்த்திக்கு என்ன தீங்கு விளையுமோ வென்று அதிசங்கைகொண்ட இளையபெருமாள் முதுகிலிட்ட அம்பறாத்தூணியும் கையிற்பிடித்த வில்லுமாய் 'நடையாடும் மதிள் போலே' உலாவிக்கொண்டு நிற்க, இதைக்கண்ட குஹப்பெருமாள் 'ஒருதம்பி தாயைக் கொண்டு பெருமாளை நாட்டிலிருந்து காட்டிலே துரத்தினன்; இத் தம்பி தனியிடத்திலே என் செய்யப் பார்க்கிறானோ!' என்று அவ்விளையபெருமாளிடத்திலும் அதிசங்கை கொண்டு 'இவன் அப்படி ஏதேனு மொரு தீங்கு செய்யில் இவனையே முடித்துவிடுவது' என்று தானும் வில்லுமம்புமாய்க் கொண்டு நின்றதாக ஸ்ரீராமாயணத்திற் காண்கிறது. ஆனால், இது எந்த ஸமயத்தில் நடந்ததோ அந்த ஸமயத்தில் வான்மீகிமுனிவரால் சொல்லப்படவில்லை; பிறகு பரதாழ்வான் சித்திரகூடஞ் செல்லப் புறப்பட்டு வருமளவில் அப் பரதனோடு குஹன் இதைச் சொல்லுவதாக அமைக்கப்பட்டுள்ளது. [அயோத்யா காண்டம். 87-வது ஸர்க்கம் 23, 24 ச்லோகங்கள் காண்க.] தொட்டிற்பருவமேபிடித்து இராமபிரான் மீது அளவுகடந்த அன்பு கொண்டிருக்கின்ற இளையபெருமாள்மேலும் அதிசங்கை தோன்றிப் பெருமாளிடத்தில் பரிவுகாட்டின இக் குஹனுடைய அன்பை என்னவென்று சொல்லுவது! இவனுக்கு இவ்வளவான அன்பு இருந்தது பற்றியே பெருமாள் இவனிடத்தில் முதன் முதலாகத் தம்முடைய சீலகுணத்தைக் காட்டியருளினர்.

28. குஹனுடைய தாழ்வை எடுத்துக்காட்டுகின்ற திருமங்கையாழ்வார் 'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாதிரங்கி' என்கிறார். பெருமாள் குஹனைக் கைவிடுகைக்கு இவ் விழிகுணங்களில் ஒரொன்றே அமைவதாயிருக்க, அவை பலவுமுளவென்று கண்டும் அருட் கடலான பெருமான் குஹனிடம் உபேக்ஷை கொள்ளாமலிருந்ததோடு அளவு கடந்தும் கலந்து பரிமாறினன். க்ஷத்ரிய ஜாதியில் ஸூர்ய குலத்தில் இக்ஷ்வாகுவம்சத்தில் திருவவதரித்தவனும் சக்ரவர்த்தியின் திருக்குமாரனும் ஸகலைச்வர்ய ஸம்பன்னனும் மஹா புத்திமானும் பகைவரிடத்தும் அன்பு கொள்பவனுமான இராமபிரான் குஹனை நோக்குங்கால், இவன் இழிவான வேடச்சாதியனென்றும் அதனால் பகுத்தறிவில்லாத அவிவேகி யென்றும் அச்சாதிக்கு இயல்பான கொடுமையினால் எல்லாவுயிர்களோடும் பகைமை கொள்பவனென்றும் இப்படிப்பட்ட தன்மைகளைக்கண்டு இகழ்ச்சி கொள்ள வேண்டியிருந்தும் தனது பெருமைக் குணங்களையும் பாராமல் அவனுடன் கலந்து பரிமாறினவிதம் எத்தகைத்தென்னில், "சீரணிந்ததோழமை கொண்டது மோரடையாளம்" என்று திருவடி வாக்கில் 'சீரணிந்த தோழமை' என்று வரும்படியாகவன்றோ கலந்தது. குகனுடைய அளவுகடந்த அன்பைக்கண்டு பெருமாள் அவனோடு தோழமை கொண்டாரா? அல்லது பெருமாள் சீரணிந்த தோழமை கொண்டதற்காகக் குகன் அன்பு பாராட்டினனா? என்று ஒரு கேள்வி பிறந்தால், எம்பெருமான் திருவுள்ளத்திற்கே தெரிய வெளிதான இவ்விஷயத்தில் நாம் என்ன விடை யிறுப்பது. பெருமாள் கங்கைக்கரை சேர்ந்தவுடனே அதனைக் கேள்விப்பட்ட குகன் தன்னினத்தாரோடு பெருமாளிடம் வந்து சேர்ந்தானென்பதைக் கூறுகின்ற வான்மீகிமுனிவர் "தத்ர ராஜா குஹோ நாம ராமஸ்ய ஆத்மஸமஸ் ஸகா" என்கிறார்:

குஹனைப்பற்றி முதன்முதலாக ப்ரஸ்தாவம் செய்யும்போதே 'ராமஸ்ய ஆத்மஸமஸ் ஸகா' என்று கூறியிருப்பது மிகமிக வியக்கத்தக்கது. இராமனுடைய உயிர்த்தோழனை குகன் இராமனது வரவைக் கேள்விப்பட்டு வந்து சேர்ந்தானென்று கூறியிருப்பதனால் இவ் விருவர்க்கும் தோழமை முன்னேபிடித்தேயுள்ளதுபோல் தோன்றுகிறது. குகன் வரும்போதே இராமனைத் தழுவிக்கொண்டதாகவும் சொல்லப்படுகிறது—'தம் ஆர்த்தஸ் ஸம்பரிஷ்வஜ்ய குஹோ ராகவமப்ரவீத்' என்ற மேல் ச்லோகத்தினால்.

29. ஆனால் ஆழ்வார்களருளிச்செயலினாலும் கம்பருடைய வாக்கினாலும் இந்தத் தோழமை அப்போது தான் தோன்றியதென்று நன்கு தெரிகின்றது. *குகனோடுங் கங்கைதன்னில் சீரணிந்ததோழமைகொண்டதுமோரடையாளம்* என்பது பெரியாழ்வார் திருவாக்கு, கம்பராமாயணம் விபீடணனடைக்கலப்படலத்தில்—

(146) "குகனொடு மைவரானேம் முன்புபின் குன்றுசூழ்வான்
மகனொடு மறுவரானேம் எம்முழை யன்பின்வந்த
அகனமர் காதலைய! நின்னொடு மெழுவரானேம்
புகலருங் கானந்தந்து புதல்வராற் பொலிந்தானுந்தை."

என்ற செய்யுள் மிக இன்சுவையுடைத்து. இதன் கருத்தாவது; நகரில் நான்கு பேர் நாங்கள் தசரதாத்மஜர்களாகப் பிறந்தோம்; நான்கு புத்திரர்கள் பிறந்தவளவிலும் த்ருப்திபெறாத தயரதன் இன்னமும் புத்திரர்கள் வேண்டியே எங்களைக் காட்டுக்கனுப்பினன்; 'நீங்களிருவரும் காடு சென்று இன்னமுஞ் சில தம்பிமார்களைச் சம்பாதித்துக் கொண்டுவாருங்கள்' என்றே எங்களைக் கானகம் போகவிட்டனன்; அப்படியே நாங்கள் பல தம்பிகளைச் சம்பாதித்துக் கொண்டோம்; கங்கைக் கரையிலே குகனைத் தம்பியாகப் பெற்றோம்; பம்பைக் கரையிலே சுக்ரீவனைத் தம்பியாகப் பெற்றோம்; விபீடணா! கடற் கரையிலே உன்னைத் தம்பியாகப் பெற்றோம். ஆக நம் தந்தை ஏழு புத்திரர்களைப் பெற்றானாயினன்—என்பதாம். இங்ஙனம் கூறுகின்ற இராமன், குகனிடத்தும் சுக்ரீவனிடத்தும் விபீடணனிடத்தும் கூடப்பிறந்த தம்பியினிடத்திற்போலத் தான் அன்பு பாராட்டுபவன் என்பதையன்றோ வெளியிட்டானாகிறான். மேலும் இங்கு தசரதனை எந்தை யென்னாமல் உந்தை யென்றதும் உற்று நோக்கத்தக்கது. விபீஷணனது தந்தையாகவேயன்றோ தயரதன் கூறப்பட்டனன். இதனால், பெருமாள் விபீடணனிடத்துப் புரையறக் கலந்த தன்மை புலனாகும். ஆக விப்படி குகன் சுக்கிரீவன் விபீடணன் போல்வாரிடத்து ஒரு நீராகக் கலந்து பழகும் பெருங்குணத்தை உன்னியே ஸ்ரீராமனை ஸௌசீல்ய நிதியென்று குலாவுகின்றனர். இங்கு ஒரு சிறிய சங்கை தோன்றக் கூடியதுண்டு; அதாவது—"ஹீநப்ரேஷ்யம் ஹீநஸக்யம் ஹீநகேஹநிஷேவணம்" என்று உபபாதகங்களிலே படிக்கப்பட்டுள்ளது; நீசர்களுக்குப் பணிவிடை செய்வது, நீசர்களோடு தோழமை கொள்ளுவது, நீசர்கள் மனைகளிலே சென்றிருப்பது ஆகியவிவை பாதகங்களாகச் சொல்லப்படாநிற்க, இவற்றைப் பெருமாள் செய்யலாமோ? செய்தவிது ஓர் ஏற்றமாகுமோ? என்று. கேண்மின்; நம்மைப் போன்றவர்கள் இவை செய்தால் நிறக்கேடாம். உயர்ந்தாரில் ஒப்பற்ற பெருமாள் இவை செய்தால் அவருடைய பெருமை இன்னமும் பொலிந்து தோன்றுமத்தனை. பாண்டவதூதன், பார்த்தஸாரதி என்பனபோன்ற திருநாமங்களெல்லாம் அவருடைய பெருமையைக் குன்றிலிட்ட விளக்காக்குமவை யன்றோ?

30. வேதாந்ததேசிகன் தயா சதகத்தில் "நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி சபரீ" என்னும் ச்லோகத்தில் சபரியையும் எடுத்துக்காட்டியிருக்கையாலே அவ்விடத்தையுங் கொள்வோம். வான்மீகிராமாயணத்திலும் கம்பராமாயணத்தி

னும்; பெருமாள் சபரியினிடம் கலந்து பரிமாறின வரலாறு விசேஷித்து ஸ்பஷ்டமாகக் கூறப்படவில்லையாயினும் இதர ராமாயணங்களிலுள்ளதைக் கொண்டோ, வான்மீகி ராமாயணத்தையே ஆழ்ந்து நோக்கியோ நம் ஆசாரியர்கள் அருளிச்செய்துள்ள விசேஷம் குறிக்கொள்ளத்தக்கது. ஸ்ரீவசனபூஷணத்தில் (233) "பெருமாள் ஸ்ரீ சபரி கையாலே அமுது செய்தருளினர்" என்றவிடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள்—"ரகுகுலதிலகராய் ஆசாரப்ரதாநரான பெருமாள் *சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:* என்னும்படி வேடுவிச்சியாய்வைத்தே குருசுச்ரூஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய் தன் நாவுக்கு இனிதாயிருந்த பலமூலாதிகளெல்லாம் இங்குத்தைக்கென்று ஸஞ்சயித்துக்கொண்டு வரவு பார்த்திருந்த ஸ்ரீ சபரி, தன் ஆதராநுகுணமாகத் தன் கையாலே அமுது செய்யப்பண்ண அதிஸந்துஷ்டராய் அமுதுசெய்தார்" என்றருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் விசேஷித்து அநுஸந்திக்கத் தக்கவை. இதில் "தன் நாவுக்கு இனிதாயிருந்த" என்கிற வார்த்தையை மாமுனிகள் மூலப்ரமாணமின்றி அருளிச்செய்யார். வான்மீகி (ஸம்க்ஷேபத்தில்) "சபர்யா பூஜிதஸ் ஸம்யக்" என்றவிடத்து ஸம்யக் என்பதில் உள்ளுறையும் பொருளே இது என்று கொள்ளலாம். அவளிடத்தில் பெருமாள் இவ்வளவு கலந்து பரிமாறக் காரணமென்ன? என்று சிலர் விமர்சிக்கவும் நேரும்.

31. கேண்மின்; குஹனோடு கலந்து பரிமாறினபோது அவன் சில உணவுப் பொருள்களைக் கொணர்ந்துகொடுத்து இவற்றைத் திருவுள்ளம்பற்றியருளவேணுமென்று வேண்டினன்; அதற்குப் பெருமாள்சொன்ன மறுமொழி—(வால்மீ. அயோ. 50) "யத்த்விதம் பவதா கிஞ்சித் ப்ரீத்யா ஸமுபகல்பிதம், ஸர்வம் ததநுஜாநாமி ந ஹி வர்த்தே ப்ரதிக்ரஹே, ...அச்வாநாம் காதநேநாஹமர்த்தீ நாந்யேந கேநசித், ஏதாவதாத்ர பவதா பவிஷ்யாமி ஸுபூஜித:" என்பது. 'நான் இந்த வனவாஸத்தில் யாரிடத்திலும் ஏதும் பெற்றுக்கொள்வதில்லையென்று விரதம் கொண்டிருக்கிறேன்; இதோ நமது தேர்க்குதிரைகள் விடாய்த்திருக்கின்றன; அவற்றுக்கு வேண்டிய உணவுகளையே நான் விரும்புபவன்' என்று சொல்லி அவற்றைத் தாம் கைப்பற்றாமலே யிருந்துவிட்டார் பெருமாள். இங்கு பெருமாள் "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" [நான் தானம் வாங்கக்கூடாதென்று வைத்துக் கொண்டிருக்கிறேன்] என்பது அவசியம் சொல்லியாகவேண்டிய வார்த்தையோ? குகன் மதுபர்க்கம் முதலிய சில உணவுப்பொருள்களைக் கொணர்ந்து கொடுக்க வந்தானே யல்லது தன தான்ய வஸ்த்ராதிகளொன்றும் கொடுக்க வந்திலன். அவை கொடுக்கவந்தால் அப்போது 'நான் ப்ரதிக்ரஹம் பண்ணுவதில்லை' என்று சொல்லி மறுக்க நியாயமுண்டு. தேன் முதலிய காட்டுணவுப் பொருள்களையே கொடுக்கவந்தபோது "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" என்று சொல்லி மறுத்ததானது அவச்யம் ஆராயத்தக்கதன்றோ? குகனிடம் இப்படிச்சொன்னவிவரே சபரியிடம் மறுத்துக் கூறாமல் "அர்ச்சிதோஹம் த்வயா பக்த்யா" என்று உகந்து கூறி அவளுடைய ஸமர்ப்பணையை ஏற்றுக்கொண்டார். இது எதனாலென்னில், கீழே நாமெடுத்துக்காட்டியுள்ள ஸ்ரீவசநபூஷண வியாக்கியான ஸ்ரீஸூக்தியில் "குரு சுச்ரூஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய்" என்று மருமமாக வருளிச்செய்திருப்பதை இங்கு விவரிக்கிறோம். சபரியிடம் மிகச் சிறந்ததொரு தருமம் குருசுச்ரூஷை யென்பது இருந்தது. இதைக் கபந்தன் பெருமாளுக்குத் தெரிவித்தனன். "ச்ரமணீ சபரீ நாம காகுத்ஸ்த! சிரஜீவிநீ, த்வாம் து தர்மே ஸ்திதா நித்யம்" என்றும் "ச்ரமணீம் தர்மநிபுணாம் அபிகச்ச" என்றுமுள்ள கபந்தன் வார்த்தைகளில் தர்மசப்தத்தினால் கூறப்பட்டது குருசுச்ரூஷாதர்மமேயாகும். பெருமாளும் சபரியைக் கண்டவுடனே க்ஷேமம் வினவுகையில் "கச்சித் தே குரு சுச்ரூஷா ஸபலா சாருபாஷிணி!" என்று உன்னுடைய குருசுச்ரூஷை நிறை

வேறியதா வென்று கேட்டிருக்கிறார். அவளும் தான் செய்த குருசுச்ரூஷையைப் பற்றி ஆனந்தமாக விடை கூறியிருக்கின்றாள். "இங்கு என்னுடைய பணிவிடைகளைக்கொண்ட ஆசாரியர்கள் திருநாடுசென்றிருக்கின்றார்கள். அவர்களது திருவடிவாரஞ் செல்ல எனக்கு அநுமதி தரவேணு" மென்றும் கோரியிருக்கிறாள். இத்தகைய தருமம் குகனிடத்து இல்லாமைபற்றியே அவன் தந்த உணவுகளைத் திருவுள்ளம் பற்றவில்லை - என்பதாகப் பேராசிரியர்களின் நிர்வாஹம்.

32. இங்குச் சிலர் வேறாகக் கூறவருவர்; எங்ஙனே யென்னில்; குகன் சபரியைப் போல் பழம் கொடுத்திருந்தானாகில் பெருமாள் அதை ஸ்வீகரித்தேயிருப்பர். அவன் பழம் கொடுக்கவில்லை யென்பது அந்த பிரகரணத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஆகவே குகனிடம் பெற்றுக்கொள்ளாமைக்கும் சபரியிடம் பெற்றுக்கொண்டமைக்கும் இங்குக் கூறிய காரணம் யுக்தமானதன்று என்று சிலர் சொல்லக்கூடும். அவர்கள் 'நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" என்று குகனிடம் இராமபிரான் கூறியுள்ளதை நன்கு ஆராயவேணும். 'குகனே! நீ காய்கனி ஏதாவது கொணர்ந்து கொடுத்தால் ஸ்வீகரிக்கிறேன்" என்றாவது பெருமாள் கூறியிருக்க வேண்டுமே. அங்ஙனம் கூறாது தாம் ஊர் திரும்பிச் சென்று சேருகிறவரையில் ஒருவரிடத்திலும் ஒன்றுமே பெற்றுக்கொள்வதில்லையென்று ஒரு விரதம் கொண்டிருப்பதாகப் பொருள்படும்படி கூறியது ஏதோ தட்டுக்கழிக்கிற படியாகவன்றோ காண்கிறது. உணவைக் கைக்கொள்ளும்படியான அதிகார பூர்த்தி குகனிடம் இல்லையென்பதே-பெருமாளுடைய திருவுள்ளம். அக்கருத்தைப் பெருமாள் செவ்வனே தெரிவியாமல் 'நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே' என்று கபடமாகக்கூறிக் கழித்தது அவருடைய பெருங்குணத்திற்குக் குறையன்றோ வென்று சிலர் சங்கிக்கக் கூடும். இதற்குச் சமாதானமாவது, "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" என்று பெருமாள் கூறியது 'யாரிடத்திலும் எதுவும் நான் வாங்கிக்கொள்ளமாட்டேன்' என்றே பொருள்படவேணு மென்கிற நிர்ப்பந்தமில்லை. 'உன்னிடத்தில் வாங்கிக்கொள்ள எனக்கு ப்ரியமில்லை' என்று சொல்லுவதாகவும் பொருள்படும். அப்படி விருப்பமில்லாமைக்குக் காரணம் கீழே நாம் விவரித்ததே. வேதாந்த தேசிகன் ஸங்கல்பஸூர்யோதயத்தில் ஆறாவது அங்கத்தில், விவேகன் ஆனந்தமாகப் பாடுவதாய்வைத்து அற்புதமான வொரு ச்லோகமியற்றியுள்ளார்; "பகவதி பரத்வாஜே புக்திஸ் ததா சபரீ க்ருஹே" என்பது அதன் முதற்பாதம். பெருமாள் பரமபவித்ரமான பரத்வாஜாச்ரமத்தில் அமுது செய்தாரென்று கேள்விப்படுவது போலவே சபரி திருமாளிகையிலும் அமுது செய்ததாகக் கேள்விப்படுகிறோம்; இது என்ன நீர்மை! என்று ஈடுபட்டுக் கூறியுள்ளார். அதுவும் இங்கு அநுஸந்தேயம்.

33. கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் (ச்லோ. 27) "கோயம் குண: கதரகோடிகத:கியாந் வா கஸ்ய ஸ்துதே: பதம் அஹோ பத கஸ்ய பூமி:!" என்றொரு குணவிசேஷத்தை யெடுத்துரைத்து மாய்ந்துபோகிறார். அதாவது, [யத் தாத்ருசாகஸமரிம் ரகுவீர! வீக்ஷ்ய விச்ரம்யதாமிதி மூமோசித முக்தமாஜௌ.] போர்க்களத்தில் "ச்சால சாபஞ்ச மூமோச வீர:" என்னும்படியே நிலைகலங்கிநின்ற இராவணனை நோக்கி 'இன்றுபோய் நாளைவா' என்று பெருமாள்கூறி விடைகொடுத்தனுப்பினதுண்டே, இது மிகச் சிறந்ததொரு குணமாகக் குலாவப்படுகின்றது. "சுரி குழற் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையிற் கடுவிசையரக்கன்" என்று திருமங்கையாழ்வார் அருளியபடியும், "பஞ்செனச் சிவக்குமென்கால் பாவையைப் பிரித்தபாவி வஞ்சன்" என்று கம்பர் கூறியபடியும் மஹாபராதிகளில் தலைவனான அவனை ஒரு நொடியிலே வதஞ்செய்து தொலைக்கவேண்டியிருக்க, அங்ஙனம் தொலைத்திடாமல் "கச்சாநுஜாநாமி ரணார்திதஸ் த்வம் ப்ரவிச்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம், ஆச்வாஸ்ய நிர்யாஹி" என்று விடைகொடுத்துப் போகவிட்ட பெருந்தகையாளனது இக்குணம் ஸ்ரீராமாயணத்திற் காணும் ஸகலகுணங்களி

னும் மிக மேம்பட்டது. அஷ்டாதச ரஹஸ்யத்தில் தனித்வய மென்னும் ரஹஸ்யத்தில் "சீலவத்தையாகிறது அபிஷேகவிக்னம் பிறந்ததென்று வெறுப்பின்றியே *வநவாஸோ மஹோதய:* என்று காடேறப் புறப்பட்டுப்போவது, *ஆவாஸம் த்வஹமிச்சாமி* என்று ரிஷிகள் பக்கலிலே சென்று தாழநிற்பது, *கிங்கரௌ ஸமுபஸ்திதௌ* என்பது, ஜன்ம வ்ருத்தங்களில் குறைய நிற்கிறவர்களை *உகந்த தோழனீ* என்பது, இப்படிகளாலே சீலவத்தையை மூதலித்தது" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. அதையும் சற்று விவரிப்போமிங்கு. "ஜன்மவ்ருத்தங்களில் குறைய நிற்கிறவர்களை உகந்த தோழன் நீ என்பது" என்றதைக் கீழே விரிவாக விவரித்தாயிற்று. மற்றைய விரண்டு விஷயங்கள் இனி விவரிக்கப்படுகின்றன. தசரதசக்ரவர்த்தி இராமபிரானை ஒரு தடவைக் கிரண்டு தடவையாக அழைத்து 'உனக்கு ராஜ்யம் தந்தேன், முடிசூட ஸன்னாஹம் செய்' என்று சொல்லிவிட்டு, அப்படியே ஸன்னாஹங்கள் செய்து முடிந்தபின் ஒரு பெண்பெண்டாட்டியின் வார்த்தைக்கு இசைந்துநின்று 'உனக்கு நாடில்லை, காடுதான்' என்று சொல்ல, அப்போது சிறிதும் மனவேதனையின்றிக்கே 'நாட்டையாள்வதிற் காட்டிலும் காடுசென்று உறைவதே எனக்குப் பரமானந்தம்' என்று உள்ளம் பொங்கிக் கூறியது மஹாகுணம் என்று ஆசிரியர் திருவுள்ளம் பற்றுகிறார்.

34. இவ்விஷயத்தைக் கம்பர் கூறுமிடத்து, (அயோத். கைகே. 109).

"இப்பொழுதெம்மனோராலியம்புதற் கெளிதோ? யாருஞ்
செப்பருங்குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகமுரைக்கக் கேட்ட
அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா."

என்றார். 'உனக்கு நாடில்லை; காடுதான் நீ செல்லவேண்டும்' என்று சொன்னபோது இராமபிரானது திருமுகக் கமலத்தில் தோன்றிய விகாஸத்தை அப்பொழுது கட்கூடாகக் கண்டவர்கள் சொல்ல வேண்டுமேயல்லது நாமா அதைச் சொல்ல வல்லோம்!' என்று கைவிட்டவர், ஆகிலுஞ் சொல்லுவோமென்று ஒருவாறு சொல்லுகின்றார். காடு செல்வாயென்கிற சொல் செவிப்படுவதற்கு முன்னே இராமனது முகம் தாமரைபோன்றிருந்ததாம்; அச்சொல் செவிப்பட்டதும் தாமரையை வென்று விளங்கிற்றாம். இதனால், காடு செல்வதைப்பற்றிச் சங்கடமில்லையென்பது மாத்திரமேயன்றி அளவுகடந்த ஆனந்தமுமுண்டாயிற்றென்றவாறு. அவ்வளவு ஆனந்தம் எதற்காக வென்னில்; நாட்டில் அரசனாகிச் சிங்காசனத்து வீற்றிருந்தால் பரத்வகுண மொன்றையே காட்டமுடியுமேயல்லது சீலகுணத்தைக் காட்டு அவகாசமே நேரிடாது. அதிகமாக அக்குணத்தைக் காட்டுதற்கென்றே அவதாரம் செய்த தனக்கு அக்குணம் மிகமிக விளங்குதற்குரிய வனவாஸமேயன்றோ ஆனந்த கந்தமாகும். ஆனதுபற்றியே 'வநவாஸோ மஹோதய:' என்றனன். ரிஷிகள் பக்கலிலே சென்று தாழநின்ற சீலமும் நெஞ்சை யுருக்குவதாகும். மஹர்ஷிகளின் ஆச்ரமங்களிலே தானாகச்சென்று அவர்களைத் தெண்டனிட்டுக் குசலப்ரச்னம் பண்ணவேணுமென்று தானிருக்க, அவர்கள் முற்பட்டுவந்து தந்தம் குறைகளை விண்ணப்பஞ் செய்தபோது *ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹி மமாதுலா, யதீத்ருசை ரஹம் விப்ரை ருபஸ்தேயை ருபஸ்தித:* என்று அவர்களிடம் இராமபிரான் தான் பொறைவேண்டினது சீலகுணத்தை விளக்கினபடியேயாகும். "அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்" என்று சொன்ன விச்வாமித்ர முனிவனை நோக்கி. *இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்* என்று தன்னையும் தம்பியையும் அவனுக்கு வேலையாட்களாகத் தெரிவித்துக்கொண்டதும், உமக்கு விருப்பமானபடி யெல்லாம் எமக்குக் கட்டளையிட்டு எங்களிடம் பணிவிடை பெற்றுக் கொள்ளவேணுமென்றதும் ஒப்புயர்வற்ற மஹாகுணமன்றோ. ... ... *

(4) ஸ்ரீராமன் க்ருதஜ்ஞன்.

35. அயோத்யா காண்டத்தில் (1—11).—"கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி, நஸ்மரத்யபகாராணாம் சதமபி ஆத்மவத்தயா." என்றுள்ள ச்லோகமானது இராமபிரானுடையதான க்ருதஜ்ஞதா குணத்தை நன்குவெளியிடுகின்றது. ஏதேனுமொருவிதத்தில் யாரேனும் ஒருதவி செய்தாலும் அதனால் எப்போதும் உள்ளம் பூரித்திருப்பதாகவும், நூற்றுக்கணக்கான தீங்குகளிழைத்தாலும் அவற்றைச் சிறிதும் நெஞ்சிற் கொள்வதில்லையாகவும் இந்தச்லோகத்தில் ஸ்ரீராமகுணநிசயம் கூறப்பட்டுள்ளது. இதில் கதஞ்சித் என்று முன்னம் பிரயோகிக்கப்பட்டுள்ள பதம் குறிக்கொள்ளத்தக்கது. உபகாரம் செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு செய்கையன்றியே அபுத்திபூர்வகமாகச் செய்ததாயிருந்தாலும் அதையும் பேருதவியாகக்கொண்டு மகிழ்பவனும் இராமன். நெஞ்சாரவே நூற்றுக்கணக்கான தீங்குகள் செய்யினும் அவற்றை நெஞ்சிற் கொள்ளானும். இப்பெருங்குணத்தை நாம் ஸ்ரீராமாயணத்தில் எங்கே கண்டோமென்னில்; பல விடங்களிற் கண்டாலும் சில விடங்களையே இங்கெடுத்துக்காட்டுவோம். ஆனால், இங்கு முன்னம் ஒன்று சொல்லவேண்டியதாகிறது; "வெறிதேயருள் செய்வர்" என்று ஆழ்வாரருளிச்செய்தபடி ஒன்றுமே செய்யாதவர்கட்குங்கூட மிகச்சிறந்த அருளைச் செய்யுமியல்வினனான இராமன் ஒன்று செய்தவர்களுக்கு உகந்திருக்கிறானென்றால் இது வியப்போ? இது பாராட்டத்தக்கதொரு குணமாகுமோ? ஆகாது தான். ஆனாலும், இராமன் தன்னை ஒரு மனிதனாக நடித்துக் காட்டினனாதலால், 'உலகில் மனிதர்களிடத்துக்காணும் குணங்களெல்லாம் இராமபிரானிடத்து உள்ளன' என்று காட்டவேண்டுவது ப்ராப்தமாகிறபடியால் அந்த முறையில் காட்டலாமன்றோ.

36. கேண்மின்; குரக்கரசனை சுக்ரீவனிடத்திலும் அரக்கர் கோமானை விபீடணனிடத்திலும் இராமபிரான் காட்டியருளின திருவருள் வாயாற் சொல்லவொண்ணாதது; நெஞ்சாலும் நினைப்பரிது. இதற்கீடாக அவர்கள் செய்தநன்றி யாதென்று பார்க்குமளவில், விபீஷணன் சரணாகதி செய்தானென்றாவது சொல்லத் தக்கதாகவுள்ளது; ஸுக்ரீவனிடத்திலோ வென்னில் அதுவுமில்லை; "லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி" என்றும் "ஸுக்ரீவம் சரணம் கத:" என்றுமுள்ள பிரமாணங்களின்படி இராமன் ஸுக்ரீவனைச் சரணம் புக்கதாகக் காண்கிறோமேயல்லது சுக்ரீவன் இராமனைச் சரணம்புக்கதாக இல்லை. ஆனாலும், இராமபிரானது திருவுள்ளத்தினால் சுக்ரீவன் பேருதவி செய்தானாகக் கொள்ளப்பட்டான்; அவ்வுதவி யாதெனில்; இராமன் சீதையைப் பிரிந்து மிக வருந்தி இன்னது செய்வதென்று தோன்றாமல் சென்றுகொண்டிருக்கையில் "பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ" என்னும்படி பம்பைக்கரையில் அனுமன் வந்து சந்தித்தானன்றோ; இது சுக்ரீவனது கட்டளையினால்தானே நிகழ்ந்தது. அனுமன் இராமனிடம் வந்து சேர்ந்தும் 'நான் சுக்ரீவனால் அனுப்பப்பட்டு இவ்விடம் வந்தேன் உங்களைக் காண' என்றே சொல்லியிருக்கின்றனன். இத்தகைய மஹாகுணசாலியான ஆஞ்சநேயனை யனுப்பினது ஸுக்ரீவன் தன்னுடைய காரியத்திற்காகவாயினும், இராமன் அங்ஙனம் கொள்ளாது அதனைத் தனக்குச்செய்த பேருதவியாகக் கொண்டே சுக்ரீவனிடத்துப் பேரருள் புரிந்தனன். விபீடணன் "ஸர்வலோகசரண்யாய ராகவாய மஹாத்மநே" என்று சொல்லிக் கொண்டு தன்னிருப்பிடந் தேடிவந்த வொரு சிறிய செயலையே பேருதவியாகக் கொண்டு அவனிடத்து மிக்கபரிவு காட்டியருளினன் இராமன். அந்தப் பரிவு எப்படிப்பட்ட தென்பதை ஸ்ரீவசந பூஷணத்தில் ஒரு வாக்யத்தில் காணலாம்; அதாவது—(228) "விபீஷணனை ராவணன் *குலபாம்ஸநம்* என்றான்; பெருமாள்

இக்ஷ்வாகுவம்ச்யராக நினைத்து வார்த்தை யருளிச்செய்தார்." என்பது. இராமன் விபீடணனை இக்ஷ்வாகுவம்சத்தவர்களுள் ஒருவனாகத் திருவுள்ளம்பற்றி வார்த்தை யருளிச் செய்தானென்பது ஸ்ரீ ராமாயணத்தில் எங்கே காண்கிறதென்னில்; விபீடணனை இராமபிரான் அங்கீகரித்த பிறகு இலங்கையிலுள்ளாருடைய பலாபலங்களைச் சொல்லுமாறு வினவுகின்ற இராமன் "ஆக்யாஹி மம தத்வேந ராக்ஷஸாநாம் பலாபலம்" என்கிறான். ராக்ஷஸர்களின் பலாபலத்தை உள்ளபடி எனக்குச் சொல்லு, என்பது இதன் பொருள். 'விபீஷணா! உன்னினத்தாருடைய பலாபலங்களைச் சொல்லு' என்றோ 'ராவணனுடைய பலாபலங்களைச் சொல்லு' என்றோ சொல்லவேண்டுமிடத்து அப்படிச் சொல்லாமல் 'ராக்ஷஸர்களின் பலாபலங்களைச் சொல்லு' என்றதானது விபீடணனை ராக்ஷஸஜாதியில் வேறுபடுத்திக்காட்டியே தீரும் என்று ஆசார்யர்கள் திருவுள்ளம்பற்றினர். "செல்வ விபீடணற்கு வேறாக நல்லானை" என்கிறார் திருமங்கையாழ்வார், பெரிய திருமொழியில். இராமனுக்கு மற்ற பக்தர்கள் யாவரும் ஒரு தட்டு, விபீஷணாழ்வான் தனித்தட்டு என்பது இப்பாசுரத்தின் கருத்து. ஆக, விபீடணன் சுக்கிரீவன் போல்வார் செய்த செயல்களைக் கனத்ததாகக் கொண்டு அவர்களுக்கு நன்மை புரிந்த விஷயம் நிற்க;

37. பிறர் எவ்வளவு அபகாரங்கள் செய்தாலும் அவற்றைச் சிறிதும் நினைப்பதில்லை' என்று இதுவும் ஒரு பெருங்குணமாக இராமனுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றதே! சுக்கிரீவன் விஷயத்தில் இது மாறுபாடாகக் காண்கிறதே; எங்ஙனேயெனின்; வாலியை வதைத்துச் சுக்கிரீவனுக்கு மகுடாபிஷேகஞ்செய்து, கார்காலம் நீங்கினவுடனே வானரசேனைகளைத் திரட்டிக்கொண்டு வருமாறு கட்டளையிட்டு அவனைக் கிஷ்கிந்தைக்குப் போகவிட்டனன் இராமன். போனவவன் மன்மதலீலைகளில் கால்தாழ்ந்திருந்ததனால் கெடு தவறிப்போனதை நினையாமலேயிருந்தான். அப்போது இராமன் இளையோனை நோக்கிக் கூறுகின்றனன்: 'லக்ஷ்மணா! அரசர்கள் போர்க்குப் புறப்படவேண்டு மிக்காலத்தில் சுக்கிரீவன் என்னை அடியோடு மறந்து வாளாகிடக்கின்றனனே; செய்ந்நன்றி மறந்த காதகனல்லவா அவன்; நீ உடனே அவனிடஞ் சென்று நான் சொன்னதாக இங்ஙனம் கூறுவாயாக; செய்ந்நன்றி மறந்த பாபிஷ்டன் புருஷர்களில் கடையானவன்; மாமிசம் தின்னப்பிறந்த ஜந்துக்களுங்கூட அவனது மாமிசத்தைத் தின்னாதென்று சொல்லு. லக்ஷ்மணா! என் பராக்கிரமத்தை அவன் நன்கறிந்திருந்தும் மழைகாலம் சென்ற பின்பும் சிறிதுமச்சமின்றிக் காம பரவசனாய்க் கிடக்கிறானே; வாலிசென்ற வழி அவனுக்கும் திறந்திருக்கின்றதென்று அவனிடம் கூறு. அவனை உற்றாருறவினரோடுங்கூட யமபுர மனுப்பச் சித்தமாயிருக்கின்றேனென்று தெரிவி; அப்படிப்பட்ட கதியை வரவழைத்துக்கொள்ளவேண்டா மென்று சொல்லு' என்று. இவ்வளவு சீற்றம் இராமனுக்கு ஏன் உண்டாயிற்று? *ந ஸ்மரதி அபகாராணாம் சதமபி ஆத்மவத்தயா*[நூற்றுக்கணக்கான தீங்குகள் கண்டாலும் நெஞ்சு கன்றுவதில்லை] என்று கொண்டாடப்பெற்ற இராமனுக்கு உயிர்த்தோழன் திறத்து இத்தனை சீற்றம் தகுமா? இது குணக்கேடல்லவா? என்கிற கேள்வி பிறக்கக் கூடும்.

38. இதற்குச் சொல்லுகிறோங் கேண்மின்; மேற்சொன்னவிதமாக இராமன் லக்ஷ்மணனிடம் சொன்னபோது அவ்விளையோன் "சத்தியம் தவறின சுக்ரீவனை இன்றே கொன்றுவிடுகிறேன்; வாலியின் மகனான அங்கதன் நமக்குத் துணை புரிவான், சுக்கிரீவனைத் தொலைத்தே விடுவோம்" என்றனன். அதற்கு இராமன் சொல்லுகிறான்—'லக்ஷ்மணா! நன்னடத்தையுள்ள நீ இப்படிப் பட்ட நண்பனை ஆராயாது கொல்லலாகாது; அவனிடம் பழையபடி நல்ல குளிர்ந்த வார்த்தை

களையே பேசு; அவன் நம்விஷயத்தில் நன்றிகெட்டவனே யென்பது நிச்சயமாகத் தெரிந்தால் பிறகு உன் விருப்பத்தின்படி செய்' என்று. இதனால் நாம் தெரிந்து கொள்வதென்ன? உலகில் நன்றிமறத்தலென்பது பெரும் பாதகம், அப்பாதகியை என்ன செய்யினும் குற்றமில்லை' என்கிற நூற்கொள்கையை எடுத்துரைப்பதொன்றே இராமனுக்கு இலக்கியமானது; "தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி" என்று சொல்லித் தருமநெறியை நிலைநாட்டுதற்கென்றே திருவவதாரம் செய்தருளின பெருமாள் இத்தகைய நூற்கொள்கைகளைத் தெரிவிக்கும் முகத்தால் தர்மஸ்தாபனம் செய்யவேண்டுவதும் அவசியமாதலால் இதனால் இராமனுக்குக் குணக்கேடு யாதொன்றுமில்லை யென்றுணர்க. இலங்கைக்கு வழிவிடவேண்டுமென்று கடலரசனை நோக்கிச் சரணாகதி செய்தார் பெருமாள்; அவன் முகங்காட்டவில்லை யென்று சீறிச் சிவந்தார்; உடனே அவன் விநயத்தோடு வந்து நிற்க, அவன்மீது எய்யத்தொடுத்த அம்பை அவனது பகைவர்களின் மேற்செலுத்திப் பரம கருணையைக் காட்டியருளினரென்று இராமாயண கதையுள்ளது: இதனால், சீற்றமும் நன்மைக்கே யாகிறதென்று நன்கு தெரிகின்றதன்றோ. கருணாமூர்த்தியான இராகவனுக்குச் சீற்றமுண்டாக வழியில்லைதான். சீற்றமுண்டானதாகக் காணுமிடங்களில் தருமஸம்ரக்ஷணமேதேனும் தெரியவந்தே தீரும்.

39. க்ருதஜ்ஞதை என்னும் மஹாகுணத்தை மானிடவடிவனான இராமனிடத்தில் நாம் நிரூபித்துக் காட்டுவது ஒரு புறமிருக்கட்டும். பரந்தாமனான ஸ்ரீமந் நாராயணமூர்த்தியிடத்தில் இக்குண முண்மையை நம் ஆசாரியர்கள் வெகு அற்புதமாக நிரூபித்துக் காட்டியருளுகிறார்கள். மனிதர்களின் க்ருதஜ்ஞதாகுணம் ஒருவிதமானது. பகவானுடைய க்ருதஜ்ஞதாகுணம் மிகச் சீரியது; இதனை நம் ஆசாரியர்கள் நிரூபிக்கும் விதம் மிகவும் ஆச்சரியமானது. அஃது இங்கு விவரிக்கப்படுகின்றது. 'க்ருதஜ்ஞ:' என்னுஞ் சொல்லானது (க்ருதம் ஜாநாதி இதி க்ருதஜ்ஞ:) என்கிற வியுத்பத்தியின்படி, செய்கிற காரியங்களை யுணருபவன் என்று பொருள்படும். ஜீவர்களாகிய நாம் செய்கிற காரியங்களை யுணருபவர் பகவான் என்றதாயிற்று. அனந்தகோடி ஜீவராசிகள் ஒவ்வொரு க்ஷணத்திலும் செய்யும் காரியங்களை எம்பெருமான் தன்னுடைய சிறந்த சக்தி விசேஷத்தினால் உடனிருந்து அறிகிறானென்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமன்றே; அதையா இங்குச் சொல்லுகிறது? என்னில்; கேண்மின். ஸர்வேச்வரன் நம்போன்ற சேதனர்களைத் தன்னருளுக்கு இலக்காக்கிக்கொள்வதற்கு உறுப்பாக நாம் செய்யவேண்டிய காரியங்களை சாஸ்திரங்களில் சொல்லிவைத்திருப்பதை யாவரும் அறிவர். அவற்றுக்கு ஸுக்ருதமென்று பொதுவான பெயர் வழங்கும். நன்றாகச் செய்யப்பட்டது' என்பது இதன் பொருள். நாம் செய்யுங் காரியங்களில் நன்றாகச் செய்யப்படுவதும் தீதாகச் செய்யப்படுவதுமாக இரண்டு வகைகள் உள்ளனவன்றோ. அவை வடமொழியில் ஸுக்ருத—துஷ்க்ருத பதங்களாலும் தென்மொழியில் நல்வினை தீவினை யென்னுஞ் சொற்களாலும் வழங்கப்பெறும். ஸுக்ருதத்தைப் பற்றியே இங்குப் பேசுவோம். இது பொதுவாக இருவகைப்படும்—ஜ்ஞாதஸுக்ருத மென்றும் அஜ்ஞாதஸுக்ருதமென்றும். மனப்பூர்வமாகத் தெரிந்து செய்யும் நன்மைகள் ஜ்ஞாதஸுக்ருத மெனப்படும். நமக்கும் தெரியாமல் விளையும் நன்மைகள் அஜ்ஞாதஸுக்ருத மெனப்படும்.

40. இவற்றுள் முதல் வகுப்பான ஜ்ஞாதஸுக்ருதங்கள் பலபலவாயிருக்கும்; தவம்புரிவது தானஞ்செய்வது யஜ்ஞயாகங்களைச் செய்வது கங்கை யமுனை காவேரி முதலிய புண்ணிய தீர்த்தங்களிற் சென்று குடைந்தாடுவது, கோயில் திருமலை பெருமாள்கோயில் திருநாராயணபுரம் முதலான திவ்யதேசங்களிற் சென்று பகவத்ஸேவை செய்வது, 'பேராயிரமு மோதுமின்கள்' என்கிற கட்ட

ளைக்கு உட்பட்டு ஸஹஸ்ரநாமம் முதலான துதிகளை வாயாரச் சொல்லுவது, திருவிளக்கெரிக்கை திருமாலை யெடுக்கை என்று சொல்லப்படுகிற பலவகைக்கைங்கரியங்களைச்செய்வது... ஆகிய இப்படிப்பட்டகாரியங்களை 'இது செய்யக்கடவோம்' என்று ஸங்கல்பித்துக்கொண்டு மனஸ்கரித்துச் செய்வதானது ஜ்ஞாதஸௌக்ருதமெனப்படும். நாம் ஸங்கல்பித்துக்கொண்டு செய்யாவிடினும் கோல்விழுங்காட்டாலே நல்வினையாகப் பரிணமிக்கும் செய்கைகள் அஜ்ஞாதஸௌக்ருதமெனப்படும். நல்லது செய்யவேணுமென்று நாம் நினைத்துச் செய்யாதவற்றை ஸௌக்ருதமென்னுஞ் சொல்லால் வழங்கலாமோ? சாஸ்திரங்களினால் விதிக்கப்பட்டதாய் கர்த்தாவான சேதநனாலே புத்திபூர்வமனுஷ்டிக்கப்பட்டதான செய்கையையன்றோ ஸௌக்ருதமென்று வழங்கலாம். இன்ன ஸௌக்ருதம் பண்ணினேனென்று கர்த்தாவான சேதநன் அறியாதவற்றை ஸௌக்ருதமென்று எப்படிச் சொல்லக்கூடும்?—என்று ஆக்ஷேபிக்க இடமுண்டு. இதற்கு நம் பூருவாசாரியர்கள் அருளிச் செய்யும் ஸமாதானத்தையே இங்குத் தெரிவிக்கிறோம்; ஸ்ரீவசனபூஷணத்தில் பகவந்நிர்ஹேதுகக்ருபாவைபவ ப்ரகரணத்தில்—(396.) "சாஸ்த்ரமும் விதியாதே நாமுமறியாதே யிருக்கிற வித்தை ஸௌக்ருதமென்று நாம் பேரிடுகிறபடி யென்னென்னில், நாமன்று, ஈச்வரனென்று கேட்டிருக்கையாயிருக்கும்" என்றுள்ளது. நம்மையறியாமல் நேர்ந்த நல்வினைக்கு ஸௌக்ருதமென்று பேரிடுகிறது நாமன்று; ஸர்வமுக்திப்ரஸங்கம் வாராமைக்காக ஸர்வஜ்ஞனான ஸர்வேச்வரன்தான் ஸௌக்ருதமென்று பேரிட்டுவைத்தான் என்று ஆசாரியர்கள் அருளிச்செய்வர்களாம். இதனால் என்ன தேறுகிறதென்னில்; நமக்கு அஜ்ஞாதமாயிருந்தாலும் எம்பெருமானுக்கு ஜ்ஞாதமாயிருக்கையாலே ஸௌக்ருதமெனக் குறையில்லை என்றதாயிற்று.

41. இதற்குமேல் ஒருகேள்வி பிறக்கும்; எம்பெருமானே யதார்த்தஜ்ஞானநிதி; அவனுக்கு அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்கள் அடியோடு கிடையாதென்று சாஸ்த்ரங்களாலறிகிறோம். நாம் மனஸ்கரித்துச் செய்யாதவொன்றை அவன் ஸௌக்ருதமென்று கொண்டானாகில் அது யதார்த்தஜ்ஞானமாகுமோ? ஒருவன் ஸந்நிபாதஜ்வரம் முதலான கொடிய நோய்களினால் துன்பப்படுங்காலங்களில் தன்னையறியாமல் ஏதேதோ உளறுகிறான்! அபுத்திபூர்வமாக வெளிவரும் அந்த வுளறல்களில் யாராவது அர்த்தம் காண்கிறார்களோ, இல்லையன்றோ. அப்படியே நம்மையறியாமல் நாம் செய்யும் செயல்களை எம்பெருமான் ஸௌக்ருதமென்று எப்படிக் கொள்ளக்கூடும்?—என்கிற கேள்வி பிறக்கும். கேண்மின்; எம்பெருமான் சேதநர்களிடத்தில் இயற்கையாகவே இன்னருள் பொருந்தியவன். இவனை எவ்வகையினாலாவது தான் அங்கீகரிப்பதற்கு அப்பெருமான் வழிதேடுபவன். இச்சேதநன் புத்திபூர்வமாகச் செய்யும் நல்வினைகளை முன்னிட்டே இவனை அங்கீகரிப்பதாக எம்பெருமான் வைத்துக்கொண்டால், ஒருவனைக்கூட அங்கீகரிக்க அவகாசம் நேராது. ஏனென்னில்; நாம் புத்திபூர்வமாகச் செய்வது தீவினைகளையே யாதலாலும் நல்வினையை நாம் நெஞ்சாலும் நினைப்பவர்களல்லோமாதலாலும் நம்மை அங்கீகரிக்க எம்பெருமானுக்கு அவகாசமேது? நாமும் இழந்து அவனும் இழந்துபோகவேண்டியதாகிறது. நம்முடைய இழவு கிடக்கட்டும், இழந்தோமென்கிற இழவுமின்றிக்கேயிருக்கிற நாம் நம்மிழவைப்பற்றிக் கவலைப்படாதொழிந்தாலும், சொத்துக்கு உடையவனாய் ஸ்வாமியென்று பேர்பெற்றிருக்குமெம்பெருமான் இழந்து தரிக்கமாட்டானன்றோ. 'ஸௌக்ருதம் செய்பவர்களையன்றி மற்றையோரை நான் அங்கீகரிக்க மாட்டேன் என்று சாஸ்த்ரங்களில் அவன் பொறித்துவைத்திருப்பதனால் ஸௌக்ருதம் செய்யாதவர்களை அங்கீகரிக்க முடியாமலிருக்கிறது; சேதநர்களோ புத்திபூர்வமாக ஸௌக்ருதம் செய்யமாட்டாதவர்களாகையாலே இவர்களை அங்கீகரிக்க இடமில்லாமலிருக்கிறது; ஆகவே இழந்தேபோகவேண்டியதாகிறது. இழவாமைக்காக அப்பெருமான் ஒரு கள்ளவழியில் நுழைகிறான். (அதாவது) கரண

களேபரங்களைப் பெற்றிருக்கிற சேதநன் வாளா கிடப்பதில்லை; "நஹிகச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டதி அகர்மக்ருத்" என்று கீதையில் சொன்னபடி எப்போதும் ஏதாவதொரு காரியம் செய்துகொண்டே போதைப் போக்கிவருகின்ற சேதநன்செய்யும் காரியங்களிலே, நாம் நன்மையென்று பேரிட்டுக்கொள்ளும்படியான காரியம் ஏதாவது இருக்குமாவென்று பார்ப்போம்—என்று ஆராயத் தொடங்குகிறான். அவனுடைய அத்ருஷ்டத்தாலே அப்படிப்பட்ட காரியங்கள் நம்மிடத்திலே அவனுக்குக் கிடைத்து விடுகின்றன. அவற்றை ஸௌக்ருதமாகவே அவன் திருவுள்ளம் பற்றுகின்றான். நாம் மனப்பூர்வமாக ஸௌக்ருதமென்று செய்யாததாகையாலே அஜ்ஞாதமென்கிறது. அவன் திருவுள்ளத்தாலே இது ஸௌக்ருதமாகக் கொள்ளப்பட்டுவிட்டபடியால் ஸௌக்ருத மென்கிறது. ஆகவே அஜ்ஞாத ஸௌக்ருதமென்று பேர்பெற்று விட்டது. இந்த அஜ்ஞாதஸௌக்ருதமானது, யாத்ருச்சிக ஸௌக்ருதமென்றும் ஆநுஷங்கிக ஸௌக்ருதமென்றும் ப்ராஸங்கிக ஸௌக்ருத மென்றும் பல பெயர்களை யுடைத்தாயிருக்கும். இவை நம்மிடமிருந்து எம்பெருமானால் எவ்விதமாகக் கொள்ளப்படுகின்றன வென்பதை இனி நிரூபிப்போம்.

42. நாம் ஸம்ஸாரிகளாகையாலே மக்களைப் பெறுகிறோம்; மகளை ஒருவனுக்கு மணம் புரிவிக்க வேண்டியதாகிறது; மகனுக்கு ஒரு பெண்ணைக் கொள்ள வேண்டியதாகிறது; ஆகவே ஸ்ரீரங்கத்திலுள்ள ஒரு வரனுக்குத் தன் மகளைக் கொடுக்கவும், திருவேங்கடத்திலுள்ளவொரு பெண்ணைத் தன் மகனுக்குக் கொள்ளவும் நேருகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த ஸம்ஸாரி அடிக்கடி வியவஹாரங்களில் [வாய்ப்பேச்சுக்களில்] ஸ்ரீரங்கத்தையும் திருமலையையும் வாயால் சொல்ல வேண்டி வருகிறது. 'என்னுடைய மாப்பிள்ளை ஸ்ரீரங்கத்திலிருக்கிறார்' 'ஸ்ரீரங்கத்திலிருந்து என்னுடைய மாப்பிள்ளை நேற்று வந்தார்' 'மாப்பிள்ளையை யழைத்துவர ஸ்ரீரங்கம் போய்வரப்போகிறேன்' 'என்னுடைய நாட்டுப்பெண் திருவேங்கட மலையிலிருந்து வந்தாள்' என்றிப்படி பலகால் வ்யவஹரிக்க நேர்கின்றது. இந்த வ்யவஹாரங்களில் திருவரங்கத்தையும் திருமலையையும் பலகால் சொல்லுவதானது "இந்த திவ்யதேசங்களை நாம் சொன்னால் ஸௌக்ருதமுண்டு" என்கிற எண்ணத்தினாலன்று; அம்பத்தூர், ஆவடி என்கிற ஊர்ப்பெயர்களைச் சொல்லுவதுபோலவே கோயில் திருமலை யென்னுமூர்ப்பெயர்களையும் இவன் சொல்லாநின்றான். ஆனாலும் ஏதேனுமொரு வியாஜத்தை எதிர்பார்ப்பதில் நோக்குடையனான எம்பெருமான் 'என்னூரைச் சொன்னானிவன்' என்று இதையொரு ஸௌக்ருதமாகக் கணக்கிடாநின்றான்.

43. மற்றுங் கேண்மின்; ஸம்ஸாரிகளுக்குப் பிறக்கும் மக்களுக்கு ரங்கன், ராகவன், திருவேங்கடன், கோவிந்தன், கோபாலன், நாராயணன், மாதவன் என்றிப்படி பெயரிட்டு அந்தப் பிள்ளைகளை ஆர்வத்தோடு அழைக்கும்போதெல்லாம் இந்தப் பெயர்களைச் சொல்லி அழைக்க நேருகின்றது; தவிரவும் வ்யவஹாரங்களில் 'ரங்கன் வந்தான், ராகவன் போனான், கிருஷ்ணனைக் கண்டேன், ராமனோடு பேசினேன்' என்றிப்படி பலகாலும் சொல்ல நேருகின்றது. எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லுகிறோமென்கிற எண்ணம் சிறிதுமில்லாமல் இங்ஙனே நிகழும் ஸம்ஸாரிகளின் வியவஹாரங்களில் எம்பெருமான் 'என் பெயரைச் சொன்னானிவன்' என்று இதையொரு ஸௌக்ருதமாகக் கணக்கிடாநின்றான்.

44. சில பாகவதர்கள் திருவேங்கட யாத்திரையாக வழிநடந்து செல்லாநிற்கையில் கள்ளர்கள் அவர்களையடித்துப் பொருள்களை யபஹரிப்பதாக அணுகினார்கள்; அதே சமயத்தில் சில ராஜசேவகர்கள் தங்களுடைய காரியமாக ஆயுதங்களைத்

தாங்கிக்கொண்டு அவ்வழியே வந்துகொண்டிருப்பதைக் கள்ளர்கள் கண்டு ‘இவர்கள் இந்த பாகவதர்களுக்குத் திருமேனிக்காவலாக வருகின்றார்கள்போலும்; இங்கு நம்முடைய எண்ணம் ஒன்றும் நிறைவேறாது’ என்றெண்ணி வாளா விலகியொழிந்தனர். இந்த நிகழ்ச்சி அங்கு யாத்ருச்சிகமாகவந்த ராஜ சேவகர்களுக்கும் தெரியாது, யாத்திரை செல்லுகின்ற பாகவதர்களுக்கும் தெரியாது; ஆனாலும் அங்கீகரிக்க அவகாசம் பார்க்கிற ஸர்வேச்வரன் அந்த ராஜசேவகர்களை பாகவதரக்ஷணம் பண்ணினவர்களாகத் திருவுள்ளம் பற்றுகிறான். அந்த ராஜசேவகர்கள் அந்த பாகவதர்கள் சென்ற வழியில் சென்றதுதன்னையே ஒரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான்.

45. ஒருவன் ஓரிடத்திலே நிலம் வாங்கி அதிலே வெங்காயம் உள்ளி முதலானவற்றைப் பயிர்செய்கிறான். தண்ணீரிறைக்க அங்கே ஸௌகரிய மில்லாமையால் நெடுந்தூரத்திலே நீருள்ள விடத்தில் துலையிட்டு, தன்வயலிலேவந்து சேரும்படி தண்ணீர் இறைக்கின்றான். அந்த நீர் ஒருபெரிய வாய்க்காலாகப் பெருகி வயலுக்குச் செல்லாநின்றது. யாத்திரை செல்கின்ற சில பாகவதர்கள் தாபார்த்தர்களாய் தாஹம் மிகுந்து எங்கும் தண்ணீர் கிடைக்காமல் வருந்தி வருகையில் இந்தத் தண்ணீர்ப்பெருக்கைக் கண்டு பரமானந்தங்கொண்டு காலும் கையும் முகமுங் கழுவி விடாய்தீர்ந்து வாழ்த்திச் சென்றார்கள். நெடுந்தூரத்தில் துலையிட்டுத் தண்ணீரிறைக்கின்ற அவன் இதைச் சிறிதுமறியாதவனாயிருந்தாலும் ஸர்வஜ்ஞனான எம்பெருமான் “என்னடியார்களது விடாயைத் தீர்த்தானிவன்” என்று கொண்டு இதையொருஸுக்ருதமாகக் கணக்கிடாநின்றான்.

46. ஒரு தனிகன் தான் சூது சதுரங்கமாடுவதற்காக ஒரு சாவடி கட்டி அதிலே சூதாடிக் காலம் கழிக்கிறான். ஆனால் இரவு முழுவதும் சூதாடிக் கண் விழித்திருக்க முடியாதே; நடுநிசி வரையில் சூதாடிவிட்டு உறங்குவதற்கு வீடு போய்விடுகிறான். அப்போது, யாத்திரையாக வழிநடந்துவருகின்ற சில பரமபாகவதர்கள் தாங்கள் சயனிப்பதற்கு இடம் கிடைக்காமல் வருந்தியிருந்து இந்தச் சாவடியிலே யொதுங்கநேர்கின்றது. (இப்படி ஒருநாளல்ல; நாடோறும் நேர்கின்றது; இதை அந்தத் தனிகன் அறியான்; அறிந்தானாகில் ஒருவரும் உள்ளே புகாதபடி கதவுகள் போடவும் ஏற்பாடு செய்திடுவன். இப்படி சில பாகவதர்கள் தங்கிப் போகிறார்களென்பதை அவனறியாமையாலே சேமக்காப்பு செய்யப்படாமலிருந்து யாத்திரை செய்வார்க்குப் பேரின்பமளிக்கும் வசதியாக இருந்துவருகின்றது. இது எம்பெருமான் திருவுள்ளத்திலே பட்டு, ‘என்னடியார்க்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தானிவன்’ என்று ஒரு ஸுக்ருதமாகக் கணக்கிடலாகிறது.

47. ஒருவன் கோஹத்தி பண்ணியே ஜீவிக்குமியல்வினன்; அவன் ஒரு நாள் ஒரு பசுவைக்கண்டு அதைப் பிடித்துக் கொல்ல முயன்று தொடரத் தொடங்கினான்; இதையறிந்த அந்தப் பசு அஞ்சியோடத் தொடங்கிற்று; இவனும் விடாது அதைத் தொடர்ந்து ஓடுகிறான். பசு ஓடும் வழியில் ஒரு பெருமாள் கோவில் இருந்தது; இதற்கு வலமாக ஓடிற்று அந்தப் பசு; இந்தக் கிராதகன் அதைத் தொடர்ந்து பிடிக்கவேண்டியதற்காகத் தானும் அந்தக் கோவிலை வலஞ் செய்வானாய் ஓடுகிறான்; ஒரு பகவதாலயத்தை வலஞ் செய்கிறோமென்கிற எண்ணம் அவனுக்கில்லை; கோவிலை வலஞ் செய்வது ஸுக்ருதம் என்கிற அறிவு மில்லையவனுக்கு. ஆனாலும், ஆள்பார்த்துத் திரியும் எம்பெருமான் ‘இவன் என் கோயிலை வலஞ்செய்தான்’ என்று இதையொரு ஸுக்ருதமாகக் கணக்கிடாநின்றான்.

48. இங்ஙனே பல நிகழ்ச்சிகள் ஸம்ஸார வாழ்க்கையில் ஸம்பவிப்பவையுள. இவையே அஜ்ஞாதஸுக்ருதமெனப்படுவன. மேலே நிரூபிக்கப்பட்டவற்றில் யாத்ருச்சிக ஸுக்ருத கோஷ்டியில் சேர்வன சில; ப்ராஸங்கிக ஸுக்ருத கோஷ்டியில் சேர்வன சில. ஆக இப்படிப்பட்ட ஸுக்ருதங்களை எம்பெருமான் தானாக அறிந்து நம்மை விஷயீகரிப்பதற்கு இவற்றை ஹேதுவாகவோ வியாஜமாகவோ கொள்ளுகிறானென்று இதுதன்னையும் நாம் சாஸ்திரங்களாலேயே அறிகிறோம். இப்படிப்பட்ட ஸுக்ருதஜ்ஞானம் எம்பெருமானிடத்திலுள்ளது பற்றியே அவனுக்கு க்ருதஜ்ஞன் என்னும் புகழ் தோன்றிற்று. ஆளவந்தாரும் தமது ஸ்தோத்ர ரத்னத்தில் ‘வசீ வதாந்ய:’ என்னும் ச்லோகத்தில் எம்பெருமானது பல திருக்குணங்களையும் கூறி வருகையில் ‘க்ருதீ க்ருதஜ்ஞ:’ என்று இக்குணத்தையும் கூட்டிக் கூறியுள்ளார். எம்பெருமானுடைய க்ருதஜ்ஞதா குணத்தை இவ்விதமாகவே நம் ஆசாரியர்கள் நிரூபித்தருளி பக்தர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றனர்.

49. இத்தகைய குணம் இராமபிரானிடத்து உள்ளதாக நாம் எது கொண்டு அறிகிறோ மென்னில், ஓரிடத்தையே இங்குக் குறிப்பிடுவோம்; விபீஷணாழ்வான் சேர்ந்தபோது அவனை அங்கீகரிக்கக் கூடாதென்று வாதித்தவர்களில் தலைவன் ஸுக்ரீவன்; இராமபிரான் அவனுடைய வாதங்களைக் கண்டித்து விபீஷணாழ்வானைத் திருவுள்ளம் பற்றியே தீருவதென்கிற தனது உறுதியை வெளியிட்டபின் விபீடணனைத் தன்னிடம் அழைத்துவரும்படி ஸுக்ரீவனுக்கே கட்டளையிட்டுச் சொல்லும்போது ‘ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா’ என்றார். ‘ஸுக்ரீவ! விபீடணனுக்கு நாம் அபயமளித்தோமாதலால் அவனை நீயே அழைத்துவா’ என்று சொல்லி, உடனே “விபீஷணோ வா ஸுக்ரீவ! யதிவா ராவணஸ் ஸ்வயம்” என்றார்; இதன் பொருளாவது, ஸுக்ரீவ! நம்மை அடைக்கலம் புகுவதாக வந்து நிற்பவன் விபீடணனென்று நீங்கள் சொல்லுவதனால் அவனை அங்கீகரித்ததாகச் சொன்னேன்; ஒருகால் விபீஷணனல்லாமல் அவனது வேடம் பூண்ட இராவணனே வந்திருப்பதாகத் தெரியவந்தால் அவ்விராவணனை அங்கீகரிப்பதா? என்று மறுபடியும் விசாரம் வைத்துக்கொள்ளாமல் அவனையே தாராளமாக அழைத்துவா என்றபடி.

50. இங்ஙனம் தம்முடைய உதாரமான திருவுள்ளத்தைக்காட்டுகின்ற இராமபிரான் ராவணனிடத்தில் என்ன ஸுக்ருதங்கண்டு இந்த வார்த்தை சொன்னானென்று ஆராயுமளவில், மஹா பாபியான அவ்விராவணனிடத்தில் புத்திபூர்வமான ஸுக்ருதமொன்றும் காணமுடியாமற்போனாலும் மேலே விவரித்தவகையில் யாத்ருச்சிகம் முதலிய ஸுக்ருதங்கள் காணநேரு மென்கிற துணிவுகொண்டே அங்ஙனமருளிச் செய்யலாயிற்றென்று நம் ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுகின்றனர்.

(5) ஸ்ரீராமன் ஸத்யவாதி

51. அயோத்யாகாண்டம் இரண்டாம் ஸர்க்கத்தில் தசரத சக்ரவர்த்தியிடத்தில் நகரத்து ஜனங்கள் ஸ்ரீ ராம குணங்களைச் சொல்லிவருகையில் *ப்ரியவாதீ ச பூதாநாம் ஸத்யவாதீ ச ராகவ:* என்று ஸ்ரீ ராமபிரானுடைய ஸத்யவாதித்வத்தைக் கொண்டாடிக் கூறியிருக்கிறார்கள். ஸ்ரீ ராமாயணத்தில் ஸ்ரீராமனுடைய ஸத்யவாதித்வம் பலவிடங்களில் புகழப்படுகின்றது. அதைப்பற்றி இங்கு விவரிப்போம். ஸத்யவாதீ என்பதற்கு ஸத்யமே சொல்லுபவன் என்பது கருத்து. ஸத்யமாவது என்ன? என்பதைப்பற்றி முன்னம் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

'உள்ளதை உள்ளபடியே கண்டு உள்ளபடியே சொல்லுவதுதான் சத்தியம் என்று உலகமெல்லாம் கொண்டிருக்கின்றது. இதை நம் ஆசாரியர்கள் ஆராய மிடத்துச் சிறிது சிக்ஷித்துப் பேசுகிறார்கள். "உள்ளதை உள்ளபடியே கண்டு உள்ளபடியே சொல்லுவது" என்பதில், உள்ளதை உள்ளபடியே காண்பதென்ப தையும் சேர்த்திருப்பது கூடாது; ஏனெனில்; உலகில் மனிதர்களுக்கு ஒன்றை வேறொன்றாக மயங்குகையாகிற மருள் ஸஹஜமானது. கயிற்றைக் கண்டு பாம்பு என்று மருளுவது மனிதர்களுக்கு ஸஹஜமேயன்றோ. இப்படிப்பட்ட ப்ரமங்கள் பலபல நேருமாதலால், அந்தப்ரமத்தினால் ஒன்றை வேறொன்றாகத் தெரிந்துகொண்ட வன் தான் தெரிந்துகொண்ட விதமாகவேயன்றோ பிறர்க்குச் சொல்லமுடியும். கயிற்றைக்கண்டு ஸர்ப்பமென்று மருண்டவன் பாம்பு பாம்பென்று கத்தினாலும், அங்கே ஸர்ப்பமுள்ளதென்று ஒருவரிடம் கூறினாலும் அது அஸத்யவசனமாக ஆகவேண்டிவரும். உண்மையில் அது அஸத்யவசனமாகாது. அவன் தான் கிரஹித்தபடியே யன்றோ சொல்லியிருக்கிறான். இது அவன் கருத்தால் ஸத்ய வசனமேயொழிய அஸத்யவசனமாகாது. "ஏனாகாது? இவன் அஸத்யமாகத் தானே க்ரஹித்துவிட்டான்; அது பிசகல்லவோ?" என்று சிலர் வாதிக்கக்கூடும். இந்த வாதம் பொருந்தாது. ஒன்றை வேறொன்றாக க்ரஹிக்கையாகிற ப்ரமம் என்பது தெய்வச் செயலாக நேருமதேயொழிய வேறல்ல. அது, மருள் அல்லது மயக்கு என்கிற குற்றத்தின்பாற்படுமேயல்லது பொய் என்கிற குற்றத்தின்பாற் படாது.

52. பகவத்கீதையில் பத்தாவது அத்யாயத்தில் நான்காவது ச்லோகத்தில் "க்ஷமா ஸத்யம் தமச் சம:" என்றவிடத்து ஸத்யமின்னதென்பதை நிரூபிக்கும் ஸ்ரீராமாநுஜபாஷ்யமும் அதற்கு வேதாந்த தேசிகருடைய டீகையும் இங்கு நோக் கத்தக்கன. 'உள்ளதை உள்ளபடியே கண்டு சொல்வது ஸத்யம்' என்னாமல், 'தான் கண்டபடியே சொல்வது ஸத்யம்' என்றார் பாஷ்யகாரர். இதன் கருத்தை விவரித்தார் தேசிகர். 'தான் கண்டபடியே சொல்வது ஸத்யம்' என்றதிலும் சிக்ஷிக்கவேண்டியதுண்டு; கண்டது கண்டபடியே சொல்லுவதும் ஸத்யமாகாது; ஏனெனில்; வியாஸஸ்மிருதியில் "ஸத்யம் பூதஹிதம் ப்ரோக்தம்" என்று சொல் லப்பட்டுள்ளது. கண்டது கண்டபடியே சொல்லுவதானது பிராணிகளுக்கு ஹிதமாயிருந்தால் நன்றே; அப்படியல்லாமல் அஹிதமாயிருக்குமானால் அது ஸத்யமாகாது, அஸத்யமேயாகும். "ஸத்யம் ப்லீயாத் ப்ரியம் ப்லீயாத் ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம்" என்கிற வசனமும் இங்கு அறியத்தக்கதாகும். பிறர்க்கு வெறுப்பையுண்டாக்கமாட்டாத வார்த்தை எதுவோ அதுவே ஸத்யமென்றும், பிறர்க்கு வெறுப்பை விளைவிக்கும் வார்த்தை உண்மையில் ஸத்யமாயிருந்தாலும் அஸத்யமாகவே கருதப்படுமென்றும் நூற்கொள்கை யுள்ளது. ஒருவன் சொல்லு கிற ஸத்யவசனத்தினால் பிறர்க்கு அனர்த்தம் விளையுமாயின் அது ஸத்யவசன மாகாது, அஸத்யவசனமாகவே கொள்ளத்தகும் என்பர் பெரியோர். இவ் விஷயத்தில் பல சங்கைகள் தோன்றும்; நியாயாலயத்தில் நடக்கும் விவகாரங் களில் உண்மை தெரிவதற்காகச் சில யோக்யர்களான மஹான்களைச் சாக்ஷியிடுவ துண்டே; அவர்கள் உண்மையை யொளிக்காமல் சொல்லித்தானே யாக வேண்டும்; உள்ளதை உள்ளபடி யுரைத்தால் ஒரு தலையில் அனர்த்தம் விளைந்து தானே தீரும்; அப்படி அனர்த்தத்தை விளைவிப்பதான ஸத்யத்தைச் சொல்ல லாகாதென்பது நூற்கொள்கையானால் பிராமாணிகர்களாயுள்ளவர்கள் ஸத்யத்தை மறைத்துத்தீரவேண்டுமே. அது யுக்தமாகுமோ? பிராமாணிகர்களின் செயல் அப்படிக் காணப்படவில்லையே. கொலை, களவு, வஞ்சகம் முதலிய விஷயங்களில் ஸாக்ஷிகளாகக் கோரப்பட்டவர்கள் உண்மையை வெளியிட்டுப் புகழ்பெறுகின்றார் களே; அவர்கள் உண்மையை யொளித்தால் அஸத்யவாதிகளென்று இகழவும்

படுகிறார்களே; அவர்களின் உண்மையுரையினால் ஒரு தலையில் தீங்கு விளைந்தா லும் அதைப் பாபமாக ஒருவரும் நினைக்கக்காணோமே; ஆகவே, பிறர்க்குத் தீங்கு விளைப்பதான ஸத்யவசனம் அஸத்யவசனமே யாகுமென்று எப்படிச் சொல்லக் கூடும்? என்றிப்படிப்பட்ட வாதங்கள் தோன்றக்கூடியவையுண்டு. இதற்குச் சமாதானம் கேண்மின்;

53. "ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம்" என்கிற வசனம் நாம் கற்பித்ததன்று; உலகம் போற்றும் மஹர்ஷி வசனமிது. "ஸத்யமாயிருந்தாலும் பிறர்க்குத் தீங்கு விளைக்குமதாயிருந்தால் அது சொல்லலாகாது" என்று சாஸ்த்ரப்ரவர்த்தகர்களான முனிவர்களே யன்றோ நியமித்துள்ளார்கள். அதை அப்ரமாணமென்று சொல்லித் தள்ளுவதற்கில்லை. லோகாநுபவத்தையும் சாஸ்த்ரத்தையும் ஸமரஸப்படுத்துவதென்பது எளிதான காரியமன்று. எல்லா சாஸ்திரங்களுக்கும் எல்லாருமே, அதிகாரிகளாக முடியாது. உத்தமாதிகாரிகள் மத்யமாதிகாரிகள் அதமாதிகாரிகள் என்னும் பாகுபாடு எங்கு முண்டு. ஸத்யம் சொல்லிப் பிறர்க்கு அனர்த்தம் விளைப்பவர்களை உத்தமாதி காரிகளென்று கொள்ள சாஸ்திரம் இடம் தராது. இங்கு நாம் பலபல இதி ஹாஸங்களை யெடுத்துக்காட்ட வேண்டியதாகிறது; ஆனாலும் விரிவுக்கு அஞ்சி ஒரு இதிஹாஸம் மாத்திரமே ஈண்டெடுத்துக் காட்டலாகிறது;—மஹாபாரதத்தில் அநுசாஸன பருவத்தில் எட்டாவது அத்யாயத்தில் வீதஹவ்ய னென்னும் க்ஷத்ரிய னுடைய கதை ஒன்று சொல்லப்பட்டுள்ளது; இவ்வரசன் தன்னுடைய நூறு புதல்வர்களோடு கூடிப் பகைவருடன் போர்புரிகையில் அப்புதல்வர் நூற்றுவரும் மாண்டொழிய, அரசன் (வீதஹவ்யன்) அஞ்சி நடுங்கித் தன்னகரைத் துறந்தோடி ப்ருகுமஹர்ஷியின் ஆச்ரமத்திற் புகுந்து அம்முனிவரை அடைக்கலம் புகுந்து நிற்க, அம்முனிவர் இவ்வரசனுடைய தீனதசையைக் கண்டிரங்கி அபயமளித்து ஆஸனத்திலே அமர்ந்திருந்தார்; அவனைப் பின்தொடர்ந்தோடிவருகின்ற பகை வன் அவ்வாச்ரமத்திற்கு வந்து அம்முனிவரின் சிஷ்யர்களை நோக்கி 'இங்கு யார் யார் இருக்கிறார்கள்? நான் தெரிந்துகொள்ளவேணும்; ப்ருகு முனிவரையும் நான் காணவேணும்; இங்கு நான் வந்திருப்பதாக அவர்க்குச் சொல்லுங்கள்' என்று சொல்ல, உடனே முனிவர் உள்ளிருந்து வெளியேவந்து அவனை உபசரித்து 'இங்கு உனக்கு ஆகவேண்டியதென்ன?' என்று கேட்க, 'முனிவரே! வீதஹவ்யன் இங்கு வந்து பதுங்கிக்கிடக்கிறான்; அவனை வெளியேவிடும்; அவனைக் கொன்று முடிக்கவேணும்' என்று அப்பகையரசன் கூற, அதற்கு ப்ருகுமுனிவர் விடை கூறுகின்றார்;—[நேஹாஸ்தி க்ஷத்ரிய: கச்சித் ஸர்வே ஹீமே த்விஜாதய:] 'இவ்விடத்தில் க்ஷத்திரியன் ஒருவனுமில்லை; இங்குள்ளார் யாவரும் அந்தணர் களே' என்றார். அதனால் அந்த வீதஹவ்யனுக்கு நேர்ந்த ஆபத்து எளிதாக நீங்கிவிட்டது. க்ஷத்ரியனை வீதஹவ்யன் தம்முடைய ஆச்ரமத்திலிருக்கச்செய் தேயும் 'இங்கு ஒரு க்ஷத்ரியனுமில்லை' என்று முனிவர் சொன்னதானது அஸத்ய மென்று நினைக்கக் கூடியதேயொழிய ஸத்யமென்று நினைக்கக்கூடியதன்று. சரணாகதரக்ஷணம் பரமதர்ம மென்றும், அஞ்சி நடுங்கி சரணம் புகுந்தவனைக் காட்டிக் கொடுப்பது மஹாபாதகமென்றும் கருதியே முனிவர் அவ்விதமாக விடை கூறினார். 'வீதஹவ்யன் இங்கில்லை' என்று பச்சைப்பசும் பொய்யாகச் சொல் லாமல் "இங்குள்ள யாவரும் அந்தணர்களே; அரசன் ஒருவனுமில்லை" என்று சொன்னது முனிவருடைய சாதுரியம். பிறருடைய அனர்த்த பரிஹாரத் திற்காகவும் பச்சைப்பசும் பொய் சொல்லலாகாது என்பது தெரிவிக்கப்பட்ட தாகிறது. சரணாகத ஸம்ரக்ஷணமாகிற மிகச் சிறந்த தருமம் ஸித்திக்கவேண்டில் பச்சைப்பசும் பொய்யும் பேசலாம் என்று கூறுகின்ற பெரியோர்களுமுளர். இவ்விஷயத்தை இப்போது இவ்வளவோடு நிறுத்திக்கொள்வோம். உண்மை

யுரையின் உண்மையை நம்போன்றவர்கள் எளிதாக நிஷ்கர்ஷித்தறியவில்லோம். *தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம்' என்று மஹாபாரதத்திலும், "ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேயஸ் ஸதாம் தர்ம: ப்லவங்கம!" என்று ஸ்ரீராமாயணத்திலும் கூறியுள்ளபடி தரும நுட்பங்கள் 'அல்பச்ருதர்களுக்கு அறியவரிதாதலால், இன்னது ஸத்யம், இன்னது அஸத்யம் என்று இலேசாகக் கண்டறிய முடியாதென்பதை யுணர்த்துதற்கே இங்கு இவ்வளவு விரித்துரைக்கப்பட்டது.

54. இனி ஸ்ரீராமபிரானுடைய ஸத்யவாதித்வத்தைப் பற்றிப் பேசுவோம். ராமனுடைய ஸத்யவாதித்வம் ராமனுடைய திருவாக்கிலிருந்தே வெளிவருகின்ற படியை முந்துற அறிவிப்போம். "ராமோ த்விர் நாபிபாஷதே" என்று ப்ரஸித்தமாக வழங்கும் ச்லோகம் ஸ்ரீராமனுடைய திருவாக்கிலிருந்தே அவதரித்ததாகும். வனவாஸப் புறப்பாட்டுக்கு முன்பு ராமன் கைகேயியிடத்தில் சொல்லுகிற வார்த்தையிது. "தத் ப்ரூஹி வசனம் தேவி! ராஜ்ஞோ யதபிகாங்க்ஷிதம், கரிஷ்யே ப்ரதிஜாநே ச ராமோ த்விர் நாபிபாஷதே" என்பது பூர்ணச்லோகம். "ஆணையிட்டுச் சொல்லுகிறேன். ராமன் வாக்கில் இரண்டு பேச்சு வராது; ஒன்றே யுரைப்பானொரு சொல்லே சொல்லுவானென்கிற புகழ் ராமனுக்கே உரியது" என்று இராமனே சொன்னானாயிற்று. மற்றோரிடத்திலும் இராமன் தன்னைப் பற்றி இங்ஙனே சொல்லிக் கொள்வதைக் காண்கின்றோம்; [கிஷ்.கி. 7-22.] ஸுக்ரீவனை நோக்கிக் கூறுகின்ற வார்த்தை—"அந்ருதம் நோக்தபூர்வம் மே நச வக்ஷ்யே கதாசந, ஏதத் தே ப்ரதிஜாநாமி ஸத்யேநைவச தே சபே" என்பது. 'இதுவரையில் நான் பொய் சொன்னதில்லை; இனிமேலும் ஒருகாலும் சொல்லப் போகிறதில்லை; ஸத்யத்தின் மேலாணையிட்டு உறுதியாகச் சொல்லுகிறேனிதை' என்பது இதன் பொருள். இதே வார்த்தையை அந்த ஸுக்ரீவனிடத்திலேயே மறுபடியும் ஒருமுறை சொன்னதுமுண்டு; [கிஷ்.கி. 14-14 காண்க.] இப்படி தன்னுடைய ஸத்யவாதித்வத்தைத் தானே சொல்லிக்கொள்வது தற்புகழ்ச்சியென்னுங் குற்றத்தின் பாற்படாதோ? "பொய்யனேன் வந்து நின்றேன் பொய்யனேன் பொய்யனேனே" என்று ஆழ்வார்கள் அநுஸந்தித்துக் காட்டுகிற வழியன்றோ சிறந்தது; அவ்வழியை விட்டுத் தன்னைத்தானே மெய்யனாகப் புகழ்ந்து பேசிக் கொள்வது குணக்கடலான இராமனுக்குத் தகுதியோ? என்று சிலர் நினைக்கலாம். "தன்னுடையாற்ற லுணராரிடையினும் தன்னைப் புகழ்தலும் தகும்" என்றார் நன்னூலாசிரியர். வடநூற்களிலும் இங்ஙனே அநுமதியளித்ததுண்டு. தனக்குள்ள பெருமையைச் சொல்லித் தீரவேண்டிய ஸமயத்தில் சொல்லித்தானே யாகவேண்டும். ராமனுடைய ஸத்யவாதித்வம் பிறருடைய வாக்கினாலும் வெளிவந்தபடியையும், அந்த ஸத்யவாக்கின் பெருமையினாலாய பயனையும் எடுத்துரைக்க விரும்புகிறோம். அதற்குமுன், தசரதசக்ரவர்த்தியினது ஸத்யவாதித்வத்தைப் பற்றிச் சிறிது ஆராய்ச்சி செய்ய அவச்யமாகிறது. தசரதாத்மஜனான ஸ்ரீராமபிரான் ஸத்யவாதியென்பது சொல்லவேணுமோ? தந்தையான தசரத சக்ரவர்த்தி ஸத்யவாதிகளில் தலைவனாக ப்ரஸித்தனானமையால் அவன் வயிற்றிற் பிறந்த இராமன் ஸத்யவாதியென்பதில் வியப்புண்டோ? என்று பலர் சொல்வதுண்டு. இதைப்பற்றி இங்குச்சில சொல்ல நினைக்கிறோம்.

55. தசரதசக்ரவர்த்திக்கு ஸத்யவாதியென்கிற விருது விளைந்தது "புண்யைர் யசோ லப்யதே" என்று ஒரு மஹாகவி சொன்ன கணக்கிலே ஏதோ அவனுடைய பாக்யவிசேஷத்தினாலத்தனை என்றே சொல்ல வேண்டும். தசரதனுடைய சரித்திரம் விபுலமாக நமக்கு ஒன்றும் கிடைக்கவில்லை; கிடைக்கின்ற சரித்திரத்தில் சாஸ்திரப்படி அவனை ஸத்யவாதி யென்று கொள்வதற்கு அவகாசமுண்டாவென்று பார்க்கவேணும்: கைகேயிக்கு அவன் என்றைக்கோ வாக்களித்திருந்த

இரண்டு வரங்களை ஸ்ரீராமமகுடாபிஷேக ஸமயத்தில் மறுக்க முடியாமல் ஸ்ரீராமனுடைய வனவாஸத்திற்கு இசைந்திருந்தானென்கிற இவ்வளவே கொண்டு அவ்வரசனுக்கு ஸத்யவாதியென்கிற புகழ் விளைந்துள்ளது. இதன் ஔசித்யத்தைச் சிறிது விமர்சிப்போம். கைகேயிக்கு அவன் வரங்கொடுத்திருந்தது எந்த யுகாந்தரத்திலோ தெரியாது. இன்ன விதமான வரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கவுமில்லை. அதுகிடக்க. இவ்வரசன் இராமனைத் தானாகவரவழைத்து 'நாளை உனக்கு மகுடாபிஷேகம்' என்று சொன்னது நாடு நகரமும் நன்கறிந்தது. அதுதானும் ஒருமுறை சொன்னதன்று, இருமுறை சொன்னது. இங்ஙனே சொன்னதைத் தவறினவன் ஸத்யவாதியாக எங்ஙனம் ஆகமுடியும்? கைகேயிக்கு வரங்கொடுத்திருந்ததற்குக் கண்ணழிவு சொல்லிவிட முடியும்; எப்படியென்னில்; சாஸ்த்ரங்களில் "பஞ்சாந்ருதாநி ஆஹுரபாதகாநி" என்று ஐந்து ஸமயங்களில் பொய் சொல்லலாமென்றும் அதனால் பாதகமில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது. விவாஹகாலம் முதலிய ஐந்து ஸமயங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் "ப்ராணாத்யயே" என்பது மொன்று; உயிர்போகுந்தருணமாயிருந்தால் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பொய்சொல்ல நேர்ந்தால் அது பாதகமன்று—என்று ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது. தசரதன் கைகேயிக்கு இரண்டு வரம்கொடுத்தது சம்பராஸுரயுத்த ஸமயத்தில் உயிர்க்கு அபாயம் விளைவதாயிருந்த காலத்தில்தான் என்பது இதிஹாஸத்தினால் தெரியவருகின்றது. அந்த வரப்ரதானத்தை அவசியம் நிறைவேற்றியே யாகவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஏன் நிர்ப்பந்தமில்லை? உயிர் போகுந் தருணத்தில் பொய்சொன்னால் பாதகமில்லை, என்கிற சாஸ்த்ரம் ஸாமாந்யசாஸ்த்ரமே ஒழிய விசேஷசாஸ்த்ரமன்றே. அதனைப் பின்பற்றியே யாகவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை? ஆகவே கைகேயிக்கு அளித்திருந்த வரத்தின்படி தசரதன் நிறைவேற்றாதிருந்தவனாயின் அது அவனுடைய ஸத்யவாதித்வப் பெருமைக்குப் பெருத்த குறையே யாகுமன்றோ? என்று சிலர் வாதிக்கவுங் கூடும். இங்குத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் கேண்மின்; இராமனுக்கு ராஜ்யம் கொடுப்பதாக ஒருமுறைக் கிருமுறை கூறினது மறைக்க முடியாததாதலால், இதை அரசன் கைகேயியிடம் எடுத்துக் கூறி 'கைகேயீ! உனக்கு நான் வெகுகாலத்திற்குமுன் பொதுவாக இரண்டுவரம்கொடுத்திருப்பது உண்மையே; இன்னது செய்யவேணுமென்று அப்போது நீ கேட்டிருக்கவில்லை; இப்போது நான் இராமனுக்கு ராஜ்யம் கொடுப்பதாகச் சொல்லியானபடியால் அந்த வாக்குத் தவற மாட்டேன்; அதற்கு விரோதமில்லாதபடி நீ கேட்கும் வரத்தையே நான் கொடுக்கமுடியும்; முடிந்துபோன விஷயத்தை நீ கேட்பது தகுதியன்று' என்று திண்ணமாகச் சொல்லியிருக்க வேண்டும். இப்படிச் சொல்லுவதனால் ஸத்தியவாதித்வத்திற்கு யாதொரு பங்கமும் விளையாது.

56. அன்றியும் மற்றொரு விஷயமும் இங்குக் குறிக்கொள்ளத்தக்கதுண்டு; "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்று வடிவெடுத்த ஸித்த தர்மமாகச் சொல்லப்பட்ட இராமனோடு கூடிவாழ்வதை விட்டு ஆபாஸதர்மமான ஸத்யவசனத்தைத் தசரதன் பற்றி நின்றது அவனுக்கு அவத்யமாகவும் சொல்லப்பட்டுள்ளது. முமுக்ஷுப்படியில் சரமச்லோகப்ரகரணத்தில் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்றவிடத்தில் பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி—"சக்ரவர்த்தியைப்போலே இழக்கைக்கு உறுப்பு" என்பதாம்; இங்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்தி வருமாறு:—"முன்பே வரப்ரதானத்தைப் பண்ணி வைத்து இப்போதாக மறுக்கவொண்ணாதென்று ஆபாஸமான ஸத்யதர்மத்தைப் பற்றி நின்று *ராமோ விக்ரஹவாந் தர்ம:* என்கிற பெருமாளோடே கூடிவாழவிருந்த பேற்றை இழந்த தசரத சக்ரவர்த்தியைப் போலே..." என்று. ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் ததிபாண்டனென்னும் இடையனுடைய கதை ப்ரஸித்தமானது. *தாயெடுத்த சிறுகோ

னுக்கு உலைக்கோடிவந்த கண்ணபிரானை மறைத்திட்டுவைத்து, அவனைப்பிடித்தடிப்பதற்காகத் தொடர்ந்துவந்த யசோதை 'என்மகன் இங்கு வந்ததுண்டோ?' என்று கேட்க 'அவன் இங்குவரவில்லை, அவனை நானறியேன்' என்று அஸத்யமே சொன்ன ததிபாண்டன் தனது தயிர்த்தாழிக்குமுட்பட மோக்ஷம் பெற்றுப்போனான்; ஸத்யவாதி யென்று பேர்பெற்ற தசரதசக்ரவர்த்தி நரகபர்யாயமான ஸ்வர்க்கத்தையே பெற்று நின்றான். இதனால், தசரதனுடைய ஸத்யவாதித்வம் எம்பெருமானை யிழப்பதற்குறுப்பானபடியாலே அஸத்யத்தின் பலனையே தந்து நின்றதென்று தெரிந்து கொண்டோம்.

57. இராமபிரானுடைய ஸத்யவாதித்வப் பெருமையை இரண்டு வகையாக மூதலிக்க விரும்புகின்றோமிங்கு. இன்னின்ன சரிதைகளினால் இராமனுடைய ஸத்யவாதித்வம் விசதமாகத் தெரிகின்றதென்று நிரூபணஞ் செய்தல் முதல்வகை. இன்னின்ன கதைகளினால் இராமனுடைய ஸத்யவாதித்வத்திற்குக் குறை காண்கிறதே யென்று க்ஷேபித்துச் சொல்வாருடைய ஆக்ஷேப வார்த்தைகளை யெடுத்துக் காட்டி அவற்றுக்குப் பரிஹார முணர்த்தும் முகத்தால் அந்த ஸத்யவாதித்வத்தை நிலைநாட்டுவது இரண்டாம்வகை. முதல்வகையில் நிரூபணம்கேண்மின் இராமபிரானுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் நடைபெறப்போகின்ற தென்பதையுணர்ந்த கைகேயி மந்தரையினால் மனம்கலங்கப் பெற்றுக் கோபாவேசங் கொண்டு, சக்ரவர்த்திபக்கலிலே இராமனுடைய வன வாஸத்தையும் பரதாபிஷேகத்தையும் பிரஸ்தாவித்த போது, சக்ரவர்த்தி மூர்ச்சித்துக் கிடந்து பிறகு மூர்ச்சை தெளிந்துஅக் கைகேயியைநோக்கிப் பல கூறுகின்றான்; [அயோத்தியாகாண்டம்—பன்னிரண்டாவது ஸர்க்கம்.] "அடீகொடியவளே! இந்த வம்சத்தைக் கெடுக்க வந்த பாவியே! இராமனாவது நானாவது உனக்குச் செய்த தீங்கு ஏதேனுமுண்டோ? இராமன் பெற்றதாய்க்குப்போலவே உனக்கும் பணிவிடை செய்துகொண்டிருக்கின்றானே! அன்னவன் மீது நீ கடியமனம் கொண்டனையே! இந்த துர்ப்புத்தி உனக்கு எங்ஙனம் உண்டாயிற்று? உன்தன்மையறியாது உன்னை இவ்வீட்டினுள் கொணர்ந்து சேர்த்துக்கொண்ட எனது புத்தியையன்றோ நிந்திக்க வேண்டும். பறவைகள் விலங்குகள் முதற்கொண்டு ஸகல பிராணிவர்க்கங்களும் புகழும்படி நற்குண நற்செய்கைகள் வாய்ந்த இராமனை எங்ஙனம் நான் வனம் போகவிடுவேன்? இராமனைவிட்டு ஒரு நொடிப் பொழுதாயினும் என்னுடலில் உயிர் தங்கியிருக்குமோ? அடி பாவி! நீ கொண்ட கொள்கை என்னுயிரையே மாய்க்க வல்லதாகவன்றோ இருக்கிறது; இக் கொடிய கருத்தைக் கூசாது நீ என்னிடம் கூறினவளவே போதும்; இவ்வளவோடு இக்கருத்தை விட்டுத் தொலைப்பாயாக: உனக்கு நான் கணவனாக இருந்தாலும் உன் பாதங்களில் என் தலையை மடுத்துவணங்கி வேண்டிக் கொள்ளவும் கூச்சமற்றிருக்கின்றேன். கலக்கந் தீர்ந்து என்மேல் அருள்புரிவாயாக—என்றினையவார்த்தைகளைச் சொல்லிவரும்போது இராமனுடைய நற்குணங்களை நாலைந்து சுலோகங்களினால் கல்லும் உருகக் கூறுகின்றான் தசரதமன்னவன்; அவற்றுள் தலையான சுலோகம் இது; "ஸத்யேந லோகாந் ஜயதி தீநாந் தாநேந ராகவ:, குரூந் சுச்ரூஷயா வீரோ தநுஷா யுதி சாத்ரவாந்." (இதன் பொருளாவது,) இராமன் ஸத்யவாக்கின் பெருமையினால் ஸகல லோகங்களையும் தானிட்ட வழக்காகக் கொண்டிருக்கிறான்; ஏழைகளைக் கொடையினால் கவர்கின்றான்; ஆசிரியர்களைப் பணிவிடையினால் கவர்கின்றான்; போர்க்களத்தில் வில்லினால் பகைவர்களைக் கவர்கின்றான்; என்பது. இவற்றுள் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்பது தலைமைபெற்ற விஷயம். இதற்கு அடுத்த சுலோகத்திலும் ஸத்யம் என்று தொடங்கி இராமனுடைய மெய்ம்மைப் பெருவார்த்தையின் மேன்மை புகழப்படுகின்றது. இங்ஙனே பலர் பலவிடங்களில் இராமபிரானது ஸத்யத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசியிருந்தாலும் மேலே குறித்த சுலோகத்தில் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்றிருப்பது விலை

யுயர்ந்த ரத்தனமாகக் குலாவப்படுகின்றது. பகவத்விஷயப் பேராசிரியரான நம்பிள்ளையினுடைய வைபவத்தில் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்கிற இந்த ச்லோகத்தின் சார்பான சொற்பெருமை தலைசிறந்து விளங்குகின்றது. அதனைச் சிறிது விவரிப்போமிங்கு.

58. பட்டருடைய ஸந்ததியில் தோன்றி மஹாவித்வானாயிருந்த நடுவில்திருவீதிப்பிள்ளைபட்ட ரென்பவர் நம்பிள்ளை காலத்தில் திருவரங்கப் பெருநகரில் வாழ்ந்தவர். இவரும் ஓரிடத்திலே ஸ்வரூபக்ரந்தங்களைப் ப்ரவசனம் செய்து வந்தார். ஆனாலும் பெரும்பாலோர் நம்பிள்ளை கோஷ்டியிலேயே அந்வயித்ததனால் இவருடைய கோஷ்டியில் மிகச்சிலரே சேர்ந்திருந்தனர். அதனால் இவர்க்கு நம்பிள்ளையிடத்தில் பொறாமை யுண்டாகியிருந்தது. இவர் ஒரு நாள் ராஜசபைக்குச் சென்றிருந்தார். அவ்வரசன் மஹாவிவேகியுமாய், தன்னிடம்வருகிற பண்டிதர்களை யெல்லாம் ஸ்ரீராமாயணம் முதலிய நூல்களில் கேள்வி கேட்பவனுமாயிருந்த படியால் இந்தப் பட்டரையும் ஸ்ரீராமாயணத்தில் ஒரு கேள்வி கேட்டான். அதாவது "ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே இராமபிரானாக வந்து திருவவதாரம் செய்திருந்தும் ஸ்ரீராமன் நாராயணத்வப்ரயுக்தமான பெருமையை அறவே மறைத்துக்கொண்டு மனுஷ்ய பாவனையையே பூர்த்தியாக ஏறிட்டுக்கொண்டு அஜ்ஞரைப் போலவும் அசக்தரைப் போலவுமிருந்தான் என்று தெரியவருகின்றது; ஸ்வாமிகளே! இப்படி நான் கிரகித்திருப்பது யுக்தமானதுதானே, பிசகல்லவே" என்று கைகூப்பிக்கொண்டு சொன்னான். அது கேட்ட பட்டர் "ஆமாம், நீங்கள் கிரகித்திருப்பது யுக்தமே; நாராயணத்வப்ரயுக்தமான பரத்வத்தைக் கழற்றிவைத்துவிட்டு மநுஷ்ய பாவனையில்தான் நடனம் செய்திருக்கிறார் ஸ்ரீராமமூர்த்தி; இதில் என்ன ஸந்தேஹம்? இப்படிக்கு இசைந்தால்தான் ஸ்ரீராமாயண கதைகள் பொருந்தும்" என்று விடை கூறினர். இதைக்கேட்ட அரசன் "ஸ்வாமிகளே! அப்படியானால் இராமன் *மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாந் அநுத்தமாந்* என்று சொல்லி ஜடாயுவுக்கு முக்தியளித்ததாகக் கதை காண்கிறதே, இது பொருந்துமாறு என்? அப்போது இராமன் தன்னுடைய மனைவியான பிராட்டி சென்றவிடம் அறியாமல் அதைப் பற்றி அஃறிணைப் பொருள்களையும் கேட்டுத் தளர்கின்ற நிலையாயிரா நின்றது; அந்நிலையில் ஜடாயுவைநோக்கி 'நான் உனக்குக்கட்டளையிடுகிறேன், மோக்ஷம் போவாயாக' என்று சொன்னார் பெருமாள் என்றால் இது பொருத்தமாக இல்லையே? ஸ்வாமிகள் இதனைப் பொருந்தவிட்டு என் மனம் த்ருப்தியடையும்படி சமாதானம் சொல்லமுடியுமோ?" என்றான். கேள்வியோ வலிதாயிருந்தது. பட்டருக்கு ஸமாதானம் ஸ்புரிக்கவில்லை. கூரத்தாழ்வான் அருளிச்செய்த அதிமாநுஷஸ்தவத்தில் "ப்ருச்சாமி கிஞ்சந யதா கில ராகவத்வே" "அக்ஷுண்ண யோகபதம்" என்று தொடங்கியுள்ள இரண்டு ச்லோகங்களிலும் இதே கேள்வியுள்ளது என்பதை நினைத்துக்கொண்டாரேயல்லது, கேள்விக்கு த்ருப்திகரமான ஸமாதானம் சொல்ல விரகறிந்திலர். இவருடைய அத்ருஷ்டவசத்தால் அப்போது அவ்வரசனுக்கு வேறொரு பணியில் மனவூக்க மேற்பட்டது; அன்றியும், நம்பிள்ளை திருவடிகளில் பழக்கக் கேட்ட வொருபெரியார் யாத்ருச்சிகமாக அவ்வரச சபையில்தென்பட்டார். அவரைக்கண்டவுடனே பெருமகிழ்ச்சி கொண்டு பட்டர் அவரிடத்தில் அரசனுடைய கேள்வியை யெடுத்துரைத்து 'இவ்விஷயம் நம்பிள்ளை கோஷ்டியில் விசாரத்திற்கு வந்திருக்குமே; நம்பிள்ளை நிர்வஹிக்கும் விதம் யாது?' என்று செவியோடு செவியாகக் கேட்டார். கேட்டவுடனே அவர் "ஸத்யேந லோகாந் ஜயதி" என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தைக் கொண்டு நம்பிள்ளை நிர்வஹிக்கக் கேட்டிருந்ததுண்டு" என்று கூற, பட்டர் அதைத் தம் திருவுள்ளத்திலே கொண்டு 'இதுதான் பொருத்தமான ஸமாதானம்' என்று அறுதியிட்டுக்கொண்டார். வேறு பணியில் இருந்த அரசனும் அபிமுகனாகி 'ஸ்வாமிகளே! என் கேள்விக்கு ஸமா

தான மொன்றும் ஸ்புரிக்கவில்லையோ' என்றான். அதற்கு பட்டர், 'மஹாப்ரபோ! ஸ்புரிக்காமலென்ன? அப்போதே சொல்ல ஸஜ்ஜனாயிருந்தேன்; தாங்கள் அந்ய பராய் இருந்தபடியாலே நானும் ஸமயம் எதிர்பார்த்திருந்தேன்; இப்போது கேளுங்கள்' என்று பீடிகையிட்டுக்கொண்டு நம்பிள்ளை சிஷ்யரிடம் கேட்ட நிர்வாஹத்தைப் பன்னியுரைத்தார்; அதாவது, 'இராகவன் ஸத்யவாக்கின் பெருமையினால் ஸகல லோகங்களையும் ஸ்வாதீனமாகவுடையவன்' என்று தசரத சக்ரவர்த்தி சொல்லி யிருப்பதனால் அந்த ஸத்யவாக்கின் பெருமையே ஜடாயுவுக்கு முத்தியளித்ததாம். நாராயணத்வப்ரயுக்தமான பரத்வத்தினால் முத்தியளித்தபடியன்று'. பட்டர் அரசனுக்கு இதை விரிவாக உணர்த்த, அரசன் மேதாவியாகையாலே மிகவுகந்து, இங்ஙனேயல்லது வேறுவகையாக ஸமாதானம் சொல்லப் பொருந்தாதென்று துணிந்து உள்குழைந்து பட்டரை விசேஷமாக ஸன்மானித்துப் போக விட்டான். பட்டர் ப்ராமாணிகராகையாலே அந்த ஸத்காரத்தைத் தம்முடைய க்ருஹத்திற்குக் கொண்டுபோக மனங்கொள்ளாமல், 'நம்பிள்ளையின் ஸ்ரீஸூக்தி ரத்நாகரத்தில் ஒரு சிறு திவலைக்குப் பெற்ற ஸத்காரமன்றோ இது' என்று உள்ள முருகி அதை நம்பிள்ளை திருவடிவாரத்திலே கொண்டு ஸமர்ப்பித்து 'தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப்போன ஒரு சொல்லுக்குப்பெற்ற ஸத்காரமிது; இது காறும் அடியேன் அகன்றிருந்து அனர்த்தப்பட்டது போதும்; இனி நிழலுமடிதாறுமாக அங்கீகரித்து அடியேனை வாழ்வித்தருளவேணும்' என்று வேரற்ற மரம்போலே விழுந்து பிரார்த்தித்து அடிபணிந்து உய்ந்தார் என்பது வரலாறு. இதனால், இராமபிரானுடைய ஸத்யவாக்கின் பெருமையை நம் முன்னோர்கள் நிரூபிக்கும் திறம் அறியலாகும்.

59. இனி இரண்டாவது வகையில் நிரூபணம் கேண்மின். ஸ்ரீராமனுடைய ஸத்யவாதித்வத்திற்கு ஸ்ரீராமாயண கதையைக் கொண்டே குறை சங்கித்து, அதற்குப் பரிஹார முணர்த்துகிறோம். இராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வதாகச் சக்கரவர்த்தி நிச்சயித்து நியமனம் தந்து அதற்குப் பூர்வாங்கமாக ஆக வேண்டிய சடங்குகளும் முடிவுபெற்று அபிஷேகமாக வேண்டிய ஸமயத்தில் கைகேயியின் வாக்குக்குக் கட்டுப்பட்ட மன்னவன் இராமனுக்கு வனவாஸத்தை நியமிக்கவேண்டிவந்ததென்கிற கதாசந்தர்ப்பம் யாவருமறிந்ததே. மகுடாபிஷேகம் கொண்டருள ஸித்தனாயிருந்த இராமனுக்கு, முடிதவிர்ந்து சடைபுனைந்து மரவுரி யுடுத்து நல்லுணவுகளை யொழித்துக் காய்கிழங்குகளைப் புசித்துக் கல்லும் முள்ளுமான காட்டு வழிகளிலே திரிந்து பதினான்கு வருஷகாலம் வனவாஸஞ் செய்ய நேர்ந்ததென்றால், உண்மையில் இது வருத்தமாக இருக்கக்கூடுமா? ஆனந்தமாக இருக்கக்கூடுமா? என்று நாம் ஆலோசிக்குமளவில்; தலைவிதியென்று ஒப்புக் கொள்ளவேண்டியதாக நேர்ந்த இவ்விஷயத்தில் ஆனந்தம் எப்படியிருக்கக்கூடும்? உள்ளபடி வருத்தந்தானிருக்கும் என்றே பலரும் நினைக்கத்தக்கதும் சொல்லத் தக்கதுமாம். ஆனால், இது தவறான அபிப்பிராயமேயாகும். ராஜ்யாபிஷேகத்திற் காட்டிலும் வனவாஸத்தில் இராமபிரானுக்கு மிக்க மகிழ்ச்சியே யென்று அவன்றனது வாக்கினின்று நன்கு தெரிகின்றது. [அயோத்யா காண். 22-29.]

"மாச லக்ஷ்மண ஸந்தாபம் கார்ஷீர் லக்ஷ்ம்யா விபர்யயே,
ராஜ்யம் வா வநவாஸோ வா வநவாஸோ மஹோதய:"

என்பது இராமபிரான் சோதிவாய் திறந்தருளிய வாசகம் இளையோனை நோக்கிக் கூறிய இவ்வார்த்தையில் "நமக்கு ராஜ்யமானாலென்ன? வனவாஸமானாலென்ன?" என்று முதலிற்சொல்லி, உடனே "வநவாஸோ மஹோதய:" என்று, வனவாஸந் தான் பேரின்பமென்று கூறின இராமபிரான் பொய்யாகக் கூறுமவனல்லன்; நெஞ்சிலுள்ளதை உள்ளபடி யுரைப்பவனன்றோ இராமன். இவ்விஷயத்தைக்

கம்பர் கூறுமிடத்து வெகு ஆச்சரியமாகக் கூறுகின்றார்—"இராமன் திருமுகச் செவ்விநோக்கின்...அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா." என்று. கலக்கிய மாமனத்தனளாய்க் கைகேசி வரம்வேண்ட மலக்கிய மாமனத்தனாய் மன்னவனும் மறுதொழிய, குலக்குமரா! காடுறையப்போவென்று விடை கொடுத்த வளவிலே இராமபிரானுக்குண்டான மனமகிழ்ச்சி, இப்பொழுது எம்மனோரால் இயம்புதற் கெளிதோ? = அப்போது அத்திருமுகமண்டலத்தை நேராகச் சேவிக்கப்பெற்றவர்கள் பேசத் தக்கதேயல்லது அதனைக் கண்ணாற் காணாத நான் எனது புல்லிய சொல்லைக்கொண்டு அறிவிக்கப் பார்ப்பது பேதைமையன்றோ வென்று கையொழிந்து நின்ற கம்பர், மீண்டும் அதனைச் சொல்லுவதாகத் தொடங்கி 'வனவாஸ நியமனம் பெறுதற்கு முன்னே இராமபிரானது திருமுகமண்டலம் தாமரையோடொத்ததாக மாத்திரம் சொல்லலாம்படி யிருந்ததென்றும்; வனவாஸ நியமனம் பெற்றபின்போவென்னில்: அப்போதலர்ந்த செந்தாமரைப்பூவின் செவ்வியிற் காட்டிலும் பன்மடங்கு மேம்பட்ட செவ்வியைப் பெற்றதென்றும் கூறி முடித்தனர்.

60. இங்ஙனே அதிசயமாகக் கூறுதற்குக் காரணம் *வநவாஸோ மஹோதய:* என்று இராமபிரானருளிய சொல்லேயாகும். நன்கு ஆராய்ந்து பார்க்குமிடத்து இது அஸத்யமாகச் சொன்னதே யல்லது ஸத்யமாகச் சொன்ன தன்றென்றும், மகுடாபிஷேக மங்களம் தவறிப்போயிற்றே யென்கிற துக்கமே இராமனது அடிவயிற்றில் குடிகொண்டிருந்ததென்றும் கண்டறியும்படியாகவுள்ளது. எங்ஙனே யென்னில்; இராமன் பஞ்சவடியில் ஸீதையைப் பிரிந்த வருத்தத்தினால் புலம்புகையில், [ஆரண்யகாண், 67-25]

"ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸோ நஷ்டா ஸீதா ஹதோ த்விஜ:,
ஈத்ருசீயம் மமாலக்ஷ்மீ: நிர்தஹேதபி பாவகம்"

என்று சொல்லிப் புலம்பியது ஸ்பஷ்டமாகவுள்ளது. இதன் பொருள் யாதெனில்; "கிடைக்கவேண்டிய ராஜ்யம் அந்தோ! கிடைக்காமற் போயிற்று; ராஜ்யம் கிடைக்காமற்போனாலென்ன? நகரத்திலேயே ஒரு மூலையில் வஸிக்கப்பெற்றிருக்கலாமே; அதுவுமில்லாமல் காட்டில் வந்து திண்டாடவேண்டியதாயிற்றே; இப்படிப் பட்டதன்றோ என் தரித்திரம்!" என்பதாம். இங்ஙனே புலம்புகின்றபடியை நோக்கினால் ராஜ்யமிழந்து வனவாஸம் பெற்றது பெருந்துயராகவே பெருமாளுடைய அடிவயிற்றில் உறைந்து கிடக்கிறதென்று தெரியவில்லையா? உண்மை இப்படியிருக்க 'வநவாஸோ மஹோதய:' என்று அப்போது சொன்ன வார்த்தை அஸத்யமென்றே கொள்ளவேண்டியதாகிறதன்றோ. இங்ஙனே பலர் சங்கிக்க இடமுள்ளது. இனி இதற்குப் பரிஹாரம் கூறுவோம்; ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ:" என்று பரிதபித்துச் சொன்னவிது எந்த ஸமயத்தில்? எதனாலே? என்று நன்கு ஆலோசிக்க வேண்டும். பிராட்டியைப் பிரிந்தும் பரமபாகவதோத்தமரான ஜடாயுமஹாராஜரையு மிழந்தும் பரிதாபம் பொறுக்கொணாதிருந்த ஸ்மயத்தில் வெளிவந்த வார்த்தையிது. வநவாஸக் கட்டளை கிடைத்தபோது "வநவாஸோ மஹோதய:' என்று சொன்னது என்ன திருவுள்ளத்தாலென்னில், கேண்மின்; ஜநகசக்ரவர்த்தி ஸீதாபிராட்டியைத் தாரைவார்த்துக் கொடுக்கும்போது "இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ" என்று சொல்லிக்கொடுத்தார்; ஸ்ரீராமபிரான் தான் செய்யக்கடவதான தருமத்திற்கு அவளைத் துணைவியாகக் கைப்பற்றினது இதனால் விளங்கிற்று. இராமன் தான் செய்யக் கடவதான தருமம் எது வென்னில்; சரணாகத பரித்ராணமேயாகும். பிராட்டியுடன் காட்டுக் கெழுந்தருளினது சரணாகதஸம்ரக்ஷணமாகிற பரமதர்மத்தை நிறைவேற்றுதற்குப் பாங்காகு மென்ற குதூஹலத்தாலேயாயிற்று. காகாஸுர பரித்ராணம் முதலிய

தருணங்களில் பிராட்டிகூட விருந்தது ஸபலமாகப் பெற்றதை பெருமாள் நன்கறிந்தவர். அப்படிப்பட்ட பிராட்டியைப் பிரிந்த துக்கம் ஒன்று; பரமபாகவதர்களோடு கூடி வாழலாமென்கிற குதூஹலத்தோடே காடேற வந்தவர்க்கு மஹாபாகவதோத்தமரான ஜடாயு மஹாராஜரை இழந்த துக்கம் மற்றொன்று; இதுவே மிகப்பெரியதுயராம். இவ்விரண்டு துக்கங்களினாலும் திருவுள்ளம் உடைகுலைப்படவே காட்டுக்கு வந்தது விபலமாகவும் விபரீதபலமாகவுமாயிற்றே என்கிற துயரத்தினால் *ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ:* என்கிற ச்லோகம் ஆவிர்ப்பவித்ததில் பிசகொன்றுமில்லை; இதனால் 'வநவாஸோ மஹோதய:' என்று முன்னம் சொன்னது பொய்யாக நினைக்க வொண்ணாததே.

61. ஒரு பெரியவர் தேவப்பெருமாளுடைய மஹோத்ஸவத்தை ஸேவிக்கப் பலவருஷங்களாகப் பாரித்து வெகு குதூஹலத்துடன் அவ்விடம் வந்து சேர்ந்தார்; வந்த விடத்தில் ஒரு விதமான ஸௌகரியமும் கிடைக்காமல் வெய்யில் மழை முதலான கஷ்டங்களில் சிக்கித் தெருவில் திண்டாடிப் பெருமாள் ஸேவையும் ப்ராப்தமாகா தொழிந்தால் அப்போது அவரது வாயினின்று பரிதாபவார்த்தை எவ்விதமாக வெளிவரக்கூடு மென்று பாருங்கள்; 'அந்தோ நாம் நம்மூரிலேயே ஸுகமாக வாழ்ந்திருக்கலாமே; ஏதுக்கு இப்படி வந்து வருந்துகிறோம்! இதுவும் ஒரு விதியா நமக்கு!' என்றிப்படி பலவாறு சொல்லிப் புலம்ப நேர்கின்றது. இது எங்கும் ஸம்பாவிதமே, அஸம்பாவிதமன்று. அதனால் என்னகுறை? ஊரிலிருந்து புறப்பட்டு வரும்போது அவர்க்கிருந்த குதூஹலத்தில் குறைகூறமுடியுமோ? பொய்யான குதூஹலத்தினால் புறப்பட்டாரவர் என்று இது கொண்டு சொல்லமுடியுமோ? எந்த விருப்பத்தினால் முதலில் குதூஹல முண்டாயிற்றோ அந்த விருப்பம் முட்டுப்பட்டால் முன்னிருந்த குதூஹலம் மாறுபடுமன்றோ. இது உலகமெங்கும் காணும் நீதியே யாம். இராமபிரானுடைய திருவாக்கில் 'வநவாஸோ மஹோதய:' என்ற வார்த்தை வெளிவந்தபோது வநவாஸகுதூஹலம் ஸத்யமாகவே யிருந்ததன்றி அதில் பொய்ம்மை சிறிதுமில்லை என்பது இவ்வளவால் நிரூபிக்கப்பட்டது. இங்ஙனே ஸ்ரீ ராமாயணத்தில் மற்றுஞ் சில சங்கைகளும் தோன்றக்கூடியவையுள; அவற்றுக்கும் இவ்வழியானே பரிஹாரம் காணத்தக்கது.

6. "ஏதத் வ்ரதம் மம"

62. ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேணுமென்கிற சங்கற்பத்திற்கு விரதம் என்று பெயர். அந்த சங்கற்பம் சிறிதும் தளராமல் திடமாக இருக்கப் பெறுவது ஒரு சிறந்த குணம். ஏகாதசியன்று உபவாஸ மிருத்தல் முதலியன உலகில் நம்போல்வார்க்கு விரதமெனப்படும். ஆனால் நாம் எதிலும் உறுதியுடையோமல்லோம். ஒரு பணியைத் தொடங்கும்போது அதில் மிகமிக உற்சாகங் கொண்டிருப்போம்; சிலநாள் கழிந்தவாறே அதில் தளர்ச்சியுண்டாகி மற்றொரு பணியில் கை வைப்போம். அதிலும் அப்படியேயாகும். ஆகவே, ஒன்றிலும் உறுதியில்லாதவர்கள் நாம். இராமபிரானோ வென்னில் எதிலும் மிகக வுறுதியுடையவன். இவ்வரிய பெரிய குணத்தை இங்கு நாம் விரிவாக அநுபவிக்க விரும்புகின்றோம். இராமன் எல்லாக் காரியங்களிலுமே திண்ணமான ஊக்கமுடையவனாயினும், அவன் முக்கியமாகக் கொண்ட காரியம் ஒன்றேயாகும். அதுதான் சரணாகதபரித்ராண மென்பது. பிராட்டியும் இராவணனை நோக்கி உபதேசம் செய்யுமிடத்து 'விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல:' என்று கூறினளாதலால் அடைக்கலம் புகுந்தவர்களை அஞ்சலென்று கூறி அபயமளித்து அநிஷ்ட நிவ்ருத்திகளையும் இஷ்டப்ராப்திகளையும் செய்வித்துக்

காத்தருள்வதே இராமனுக்கு இவ்வவதாரத்தில் மிக முக்கியமான காரியமாயிருந்த தென்று நன்குணரலாகிறது. ஸ்ரீவேதாந்த தேசிகனும் அபயப்ரதானஸாரத்தின் முகப்பில் "நமஸ்தஸ்மை கஸ்மைசந பவது நிஷ்கிஞ்சநஜந ஸ்வயம்ரக்ஷா தீக்ஷா ஸமதிக ஸமிந்தாநயசஸே" என்றருளிச்செய்திருப்பது குறிக்கொள்ளத் தக்கது. அகிஞ்சநர்களான ப்ரபன்னர்களைத் தன் பேறாகக் காத்தருள்வதில் தீக்ஷைகொண்டு அதுவே பெரும்புகழாக விளங்குமவன் இராமபிரான் என்பது மேலெடுத்த சுலோகத்தின் கருத்து. "ஸர்வாவஸ்த ஸக்ருத் ப்ரபந்ந ஜநதா ஸம்ரக்ஷணைகவ்ரதீ" என்று தசாவதார ஸ்தோத்ரத்திலருளிச்செய்திருப்பதும் காண்க. அடியார்களைக் காத்தருள்வ தென்பது கிடக்கட்டும்; அதில் திடமான வுறுதியையுடையவன் இராமன் என்பதே இங்கு விஷயம். இதைப் பற்றி ஸ்ரீ ராமாயணத்தில் இரண்டிடங்களை முக்கியமாக எடுத்துக்கொள்வோம். ஆரணிய காண்டத்தில் 6, 9, 10 ஆகிய மூன்று ஸர்க்கங்களின் விஷயங்களை முதலில் நிரூபணம் செய்வோம். அங்கு ஆறாவது ஸர்க்கத்திலுள்ள கதையாவது: சரபங்க முனிவரது ஆச்ரமஞ் சென்றிருந்த இராமபிரான் அம்முனிவர் சுவர்க்கஞ் சென்ற பின் அங்குள்ள முனிவர்களால் இங்ஙனம் வேண்டப்பட்டான். 'ராமா! நீ தேவேந்திரனைப்போல் இந்நிலவுலகுக்கெல்லாம் நாதனாயிருக்கின்றனை; சரபங்கமுனிவரை அநுக்கிரகித்த கீர்த்தியும் விராதனைக் கொன்ற வீரமும் உன்பால் சிறந்து விளங்குகின்றன. தந்தை சொற்பேணி அரசாட்சிப்பெருஞ் செல்வத்தை வெறுத்ததுமன்றி பரதன்வந்து மிகமிக வேண்டினவிடத்தும் மனவூக்கம் குன்றாதிருக்கின்றனை; உன் பக்கல் தருமமும் சத்தியமும் தழைத்தோங்குகின்றன; சரணாகதரக்ஷகனான உன்னிடத்தில் ஒரு விண்ணப்பஞ் செய்கின்றோம்; வருத்தம் தாங்கி நிற்கமுடியாமல் இது சொல்லுகின்றோம்; இங்கு வந்திருப்பவர்கள் யாவரும் அந்தணர்களே; இவர்கட்கு நீ நாதனாயிருந்தும் அந்தோ! இவர்கள் அநாதர்கள்போல் மிக நலிவுறுகின்றனர்; இவர்களது தேகங்கள் அரக்கர்களால் அடிபட்டிருப்பதைக் காண்பாயாக; இங்ஙனம் வனத்தில் அரக்கர்கள் புரியும் நலிவுகளை நாங்கள் பொறுத்திருக்கவும் பரிஹரிக்கவும் வல்லமை அற்றிருக்கின்றோம்; ராமா! இதற்காகவே நாங்களனைவரும் உன்னைச் சரணமடைகின்றோம்—அரக்கர்களிடமிருந்து எங்களைக் காத்தருள்வாயாக' என்று. இவ்வளவுங் கேட்ட இராமன் மிகவும் மனமிரங்கி அவர்களெல்லாரையும் நோக்கி 'முனிவர்காள்! எனக்கு நீங்கள் கட்டளையிட வேண்டுமேயல்லது என்பால் இங்ஙனம் வேண்டலாமோ? உங்களது கஷ்டங்களைத் தீர்ப்பது எனது சொந்தப் பிரயோஜனமாகும். தந்தை சொற்பேணுதலென்னும் வியாஜத்தினால் உங்கள் காரியத்தை நிறைவேற்றுதற்கே இவண் யான் விடைகொண்டு இருக்கின்றேன்; உங்கட்கு இன்னல் விளைக்கின்ற அரக்கர்களையெல்லாம் நான் வதஞ்செய்தொழிப்பது திண்ணம்!' என்று சொல்லி அவர்கட்கு அபயமளித்துச் சென்றனன்—என்பது ஆறாவது ஸர்க்கத்திலுள்ள கதை.

63. பிறகு ஒன்பதாவது ஸர்க்கத்திற் கதையாவது,—பிராட்டி இராமனை நோக்கிச் சொல்லலுற்றாள்; "நாதா! உலகில் மூன்று தீய செயல்கள் மிகக் கொடியனவாகச் சொல்லப்படுகின்றன; பொய் சொல்லுதல், பிறர் மனைவியை வேட்டல், பகையின்றிப் பரஹிம்ஸை செய்தல் என்னுமிம்மூன்றும் மிகக் கொடிய செயல்களாம்; இவற்றுள் முதலிரண்டு செயல்களை நீர் நெஞ்சாலும் நினைக்கமாட்டீரென்பதை நன்கறிவேன்; நீர் சத்தியசந்தர், ஏகபத்தினி விரதமுடையீர்; ஆனால், மூன்றாவதான தீய செயல் இப்போது உம்மிடத்தில் இடம் பெறத் தொடங்கியிருப்பது மிக வருந்தத்தக்கது. நீர் முனிவர்களைக் காக்கவேண்டி அரக்கர்களனைவரையும் கொன்றொழிப்பதாக வாக்குறுதியளித்தீர்; இதற்காகவே காட்டுக்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தீர்; இதுபற்றி நான் மிக வருந்துகிறேன். அரக்கர்கட்கும் உமக்கும் நேராகப் பகையொன்றுமின்றியிருக்க அவர்களை நீர் கொல்ல விரும்புவதை

நூன் தருமமெனக் கொள்ளகில்லேன். முனிவர்கட்குத் தீங்கிழைக்கு மரக்கர்களைக் கொல்வது தருமமே யாகுமென்று நீர் கருதக்கூடும்; நீர் ராஜ பதவியை வஹித்திருந்தால் அப்போது இது தருமமாகும்; க்ஷத்ரிய விருத்தியை விட்டுத் தாபஸ விருத்தியைக் கைப்பற்றியிருக்கு முமக்கு இது தருமமாகுமோ? "அழிகு முலகமெல்லாம் பரதனே யாள நீபோய்த் தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந்தவ மேற்கொண்டு, பூழிவெங்கான நண்ணிப் புண்ணியபுனல்களாடி வா" வென்று நியமிக்கப்பட்டுக் கானகம் வந்திருக்கின்ற நீர் ஆயுதத்தைக் கையால் தொடுவதே உரியதன்று; அரண்யவாஸத்திற்குத் தவம்புரிதலே தகுந்தது. ஆயுதம் தரிப்பதால் கோபமுண்டாகிப் பரஹிம்ஸை செய்ய நேரிட்டுப் பாபமே சம்பவிக்கும். தருமநெறியிலே விருப்பமுடைய நீர் தவவொழுக்கத்தை மேற்கொள்வதே நலம்; உமக்குத் தெரியாததொன்றில்லை; பெண்பிறந்த நான் உமக்குத் தரும முணர்த்துவதென்பது தகாததாயினும் உம்மீது இருக்குமன்பினால் தெரிவித்துக்கொண்டேன்; நீர் இதனைத் தம்பியோடும் நன்கு ஆலோசித்து இஷ்டமானபடி செய்வீராக"—என்று. மேல் பத்தாவது ஸர்க்கத்தில் பிராட்டிக்கு மறுமாற்ற முரைக்கின்ற இராகவன் சொன்ன சொற்களில் மிகவும் ஸாரமான வொரு ச்லோகத்தையே இங்கெடுத்துக் காட்டுவோம்; (ஆரண். 10—19.) "அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம்வா ஸீதே ஸலக்ஷ்மணாம்; ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத:" ஆச்ரிதரக்ஷணத்தில் இராமபிரான் திடமான விரதமுடையவனென்பதை இந்த ச்லோகம் மிக நன்றாக எடுத்துக் காட்டுகின்றது. நம் போன்ற அகிஞ்சநர்கள் நிச்சலும் சிந்தை செய்யவேண்டிய சுலோகமிது. இந்த சுலோகத்தின் பொருளாவது: "ஸீதே! நான் என்னுயிரைவிட்டாலும் விடுவேன், உன்னையும் இலக்குமனையும் விட்டாலும் விடுவேன்; ஆனால், ஒருவருக்குப் பிரதிக்ஞை செய்து கொடுத்து அதைத் தவறுவதென்பது முடியாது; அதிலும் பிராமணர்கட்குச் செய்த பிரதிக்ஞையென்றால் எள்ளளவும் தவறமாட்டேன்" என்பதாம். இதற்குமேல் மற்றொரு ச்லோகமுமுள்ளது காண்மின்: [10—24] "ஸத்ருசம் சாநுரூபஞ்ச குலஸ்ய தவசாத்மந:; ஸதர்மசாரிணீ மே த்வம் ப்ராணேப்யோபி கரீயஸீ." "ஸீதே; நான் செய்ய நினைக்கும் தருமத்தையே நீயும் சங்கற்பிக்கவேண்டும்; வேறொன்றை நீ நினைக்கலாகாது; இப்படிப்பட்ட தருமத்தை அநுஷ்டிக்கத் துணைபுரிவதற்காகவே யன்றோ உன்னை நான் மணம் புரிந்துகொண்டேன்; ஆகவே என்னுயிர்க் காதலியான நீ என் வழியொழுகுவதே உற்றது"—என்னுங் கருத்து மேலெடுத்த சுலோகத்தினுறையும். ஆக, இராமபிரான் ஆச்ரிதரக்ஷணத்தில் திடமான வுறுதி உடையவன் என்பது இக் கதாசந்தர்ப்பங்களினால் நன்கு விளங்கிற்று.

64. மேல் யுத்தகாண்டத்தில் விபீஷணசரணாகதி ப்ரகரணத்திலுள்ள கதாசந்தர்ப்பத்தைக்கொண்டும் இதனை நன்கு நிலை நாட்டுவோம். "ஏதத் வ்ரதம் மம" என்பது அவ்விடத்திலன்றோவுள்ள வசனம். இராவணனுடைய மந்திராலோசனைக் குழுவில் விபீஷணன் அவனுக்குப் பலவாறு ஹிதோபதேசங்கள் செய்தும் பலிக்கக் காணாமையாலே இராமபிரானுடைய திருவடி நிழலிலே யொதுங்கித் தான் வாழ்ந்து போக நிச்சயித்துத் தன்னோடொத்த அன்புடைய நால்வருடன் கிளம்பிவந்து வானத்திலே நின்று வானர முதலிகளை நோக்கி, இராமபிரான் தன்னை அங்கீகரிக்குமாறு செய்யவேணுமென்று பெருமிடறுசெய்து ஓலமிட, அப்போது வானர வீரர்களில் சுக்கிரீவன் முதலானோர் இவனைச் சேர்த்துக்கொள்வது தகுதியற்றதென்று வலிதாக ஆக்ஷேபிக்க, அப்போது இராகவன் தனக்குள்ள ஆச்ரிதரக்ஷண பக்ஷபாதத்தையும் அதில் திடமான விரதத்தையும் எடுத்துரைக்குந் திறன் மிக வியக்கத் தக்கது. அதனை இங்குச் சிறிது விவரிப்போம். அடைக்கலம் புகுந்த இவ்விபீஷணன் தக்க காலத்தில் வந்திலனென்றாவது நல்லெண்ணத்தோடு வந்திலனென்றாவது கைவிடத் தக்கவனல்ல னென்பதைக் கூறத்தொடங்கின ராமன்

இங்ஙனே கூறுகின்றான்;—இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று பலநாள்களாகியும் முன்னமே நம்மிடம் வந்து சேராமல் நாம் எதிரியோடு போர்புரியத் தொடங்கு மிச்சமயத்தில் நம்மிடம் வந்து சேருமிவ்விபீடணன் நம்முடன் கலந்தவன்போன்றிருந்து நமது மருமங்களையெல்லா முணர்ந்துகொண்டு நம்மை வஞ்சனையாற் கொல்லுதற்காகத்தான் வந்தானோ வென்று நீங்கள் கருதுவதற்கிடமில்லை. நன்மதி கூறித் தமையனை எப்படியாவது திருத்தலாமென்று இத்தனை நாளும் பலபடி முயன்று பார்த்தும் அது பலியாமற்போனதுமன்றி அவ்விராவணன் தன்னைக் கடிந்து கூறுதலுஞ் செய்யவே, இவன் தான் வாழவெண்ணிய நம்மிடம்வந்து சேர்ந்தனன்; இவனை நான் ஒருவிதத்திலும் கைவிடகில்லேன்; அடைக்கலம் புகுந்த விவனை அங்கீகரியாது கைவிட்டால் தான் நமக்கு நல்வாழ்வும் வெற்றியுமுண்டாகுமென்று தேறினாலும் அஃது எனக்கு உடன்பாடன்று; சரணாகதனை விவனை அங்கீகரிப்பதனால் நமக்குத் தோல்வியே உண்டாவதானாலும், அதற்குமேல் மரணமே நேர்வதானாலும் அதுவே எனக்கு உடன்பாடாகும். நமக்கு வெகு நாளைப் பழக்கமில்லாமல் இப்பொழுதுதான் புதியவனாக வந்தானென்றாவது மஹாபாதகன் என்றாவது குறை கூறி இவனை அங்கீகரியாது தள்ளிவிடுகலை ஒருகாலும் நான் மனத்திற் கொள்ளேன்; இவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் சரணமென்ற சொல்லைச் சொன்னதுவே காரணமாக, நெடுநாளைப் பழக்கமுள்ள நண்பன்போல் விரும்பத்தக்கவனே யாவன். அங்கீகரிக்கப்பட்ட அவன் ஒருகால் நமக்குத் தீங்கிழைத்தானானாலும் அதனால், சரணாகதனுக்கு அபயமளித்தோ மென்னும் புகழ் நம்மை விட்டகலாது; ஆகவே, இவனை நான் கைவிடகில்லேன்; அன்றியும், எங்கள் குலத்து இதிகாசமொன்று கேண்மின்; சிபி சக்கரவர்த்தி அரசாளுகையில் அவனது மேன்மைக் குணத்தைப் பரிசோதிக்கும்பொருட்டு இந்திரன் பெரும் பருந்தாகவும் யமன் சிறு புறாவாகவும் வடிவமெடுத்து அப்புறாவைப் பருந்து துரத்திவர, அது சக்ரவர்த்தியைச் சரணமடைய, அன்னான் அதற்கு அபயமளிக்க, பின்னே வந்த பருந்து 'என் இரையைக் கொடுத்திடு' என்று கேட்க மன்னவன் 'அடைக்கலம் புகுந்தவரை ஆதரியாது விடுதல் அதிபாதகமாதலால், இதையன்றி எதைக் கேட்டாலுங் கொடுப்பேன்' என்ன, பருந்து 'இந்தப் புறாவின் எடையளவு தசையை உன் உடம்பினின்று அரிந்துகொடு' என்ன, வேந்தன் சம்மதித்து உடனே தனது உடம்பிலுள்ள உறுப்புக்களை யெல்லாம் ஒவ்வொன்றாக அறுத்து வைத்தும் எடை ஒவ்வாதது கண்டு தானே தராசுத்தட்டிலேறி எடையை நிறைக்க, உடனே அத்தேவர்கள் ப்ரத்யக்ஷமாகிச் சக்ரவர்த்தியை மிகக் கொண்டாடி அவனது உடம்பு முன்போல நிறைவுறும்படி வரமளித்துப் போயினரென்று கேட்டிருந்த துண்டு; அன்ன பெருமை வாய்ந்த சக்ரவர்த்தியின் வமிசத்திற் பிறந்த யான் இப்போது உங்களாலோசனையைக் கேட்டுச் சரணாகதனைக் கைவிடுதல் தகுதியன்று; இவனைச் சேர்த்துக் கொள்வதனால் எவ்விதமான அனர்த்தம் விளைவதாயினும் அஃதெனக்குப் புகழாகுமே யன்றிப் பழியாகாதாதலால் இவனை நான் கைவிடமாட்டேன்; ஒரு காட்டில் வேடனொருவன் ஒரு பெண் புறாவைப் பிடித்துத் தனது கைகூட்டிலிட்டுக்கொண்டு திரிகையில் பெருமழை வந்து இருட்டிக்கொள்ள அப்போது அவ்வேடன் நடுக்கமெடுத்து ஒரு மரத்தின் சார்பில் வருந்திநிற்க, அச்சமயத்தில் அம்மரத்தின் மேலுள்ள ஆண்புறா தனது பெட்டையின் பிரிவையாற்றாது புலம்ப, அவ்வேடனது கைக்கூட்டில் அகப்பட்டிருந்த பெண்புறா அப்புலம்பலைக் கேட்டு வருந்தி 'இதோ நான் இவ்வேடனது கைக்கூட்டில் முற்பிறவியின் தீவினைப்பயனாகச் சிறைப்பட்டுக் கிடக்கிறேன்; இதற்காக நீ வருந்தவேண்டா; நமது இருப்பிடம் வந்து வருந்தி நிற்கிற இவ்வேடனுக்குக் குளிர் முதலாகிய துன்பத்தை நீக்கி உதவிபுரியவேணும்' என்றுகூற, அதுகேட்ட ஆண்புறா அவ்வேடனுக்கு மனப்பூருவமாக உபசாரஞ் செய்யவிரும்பி, கொள்ளியொன்றை யெடுத்து வந்து சருகுகளின் மேல்வைத்து மூட்டி வேடனைக் குளிர்காயுமாறு சொல்லி, பின்பு

அவன் பசியால் வருந்துவதைப் பார்த்து 'அப்பா! நான் பறவையாயிருப்பதனால் உன்பசிக்கு ஏற்ற பொருள் என்னிடமில்லையே; துன்பத்திற்கு இடமாய் எதற்கும் உதவாமலிருக்கிற இவ்வுடலைக் கொண்டு உன் ஆத்மாவைத் திருப்திசெய்துகொள்' என்று சொல்லிக்கொண்டே மூண்டெரிகிற நெருப்பில் ஆனந்தத்தோடு விழுந்து அவனுக்கு உணவாகி முடிந்ததென்கிற கபோதோபாக்யானம் சுருதிகளிலுள்ளது. ஓர் அற்பப் பிராணியாகிய புறாவே தன்னிடம் வந்தடைந்தது காரணமாக, தன்மனைவியைக் கவர்ந்ததையும் பாராட்டாமல் தன்னையும் கவரக்கூடிய வேடனொருவனுக்கு உடலையு முயிரையுங் கொடுத்து உதவிசெய்ததென்றால், பேரறிவாளரென்று பேர்வைத்துக்கொண்டிருக்கிற நாம், நமக்கு யாதொரு தீங்கு மிழைக்காமல் நம்மைச் சரணமென்றடைந்துள்ள விவனை 'ஒருகால் நமது உயிர்க்கு ஏதேனும் தீங்கு நேருமோ?' என்று அஞ்சிக் காவாது கைவிடுதல் தகுதியோ? தகாது; இவனை எவ்வகையினும் கைவிடமாட்டேன்; ஒருவன் செய்த நன்றியை மறந்த பாவியும், உண்மைப் பரம் பொருளான கடவுளை இல்லையென்று சாதிக்கின்ற நாஸ்திகனும் போலவே சரணமடைந்தாரைப் பாதுகாவாதவனும் நரகத்தில் நிச்சயமும் வீழ்ந்து வருந்துவானென்பது நூற்கொள்கையாயிருக்க நானோ இவனைக் கைவிடுவேன்? ஒருகாலும் கைவிடமாட்டேன்; இராவணாதியரைக் கொல்வதாக நான் தேவர்கட்கு அபயமளித்தது இராவணன் சீதையைக் கவர்வானென்பதை முன்னமே அறிந்தன்று; நம்மைச் சரண மடைந்தாரைக் காப்பதே நமது கடமை என்ற கருத்தினாலேயே யாகும்; தண்டகாரணிய வாசிகளான 'முனிவர்களிடத்து "அடைக்கலம் புகுந்தவர்களைப் பாதுகாப்பதே எனது கடமை" என்று அப்போது சொல்லிவிட்டு இப்போது அதற்குமாறாக அபயம் வேண்டிவந்த இவ்விபீஷணனைக் கைவிடுதல் எனக்கு உற்றதாகுமோ? ஆகாது; ஆதலால் இவனை நான் கைவிடுகிலேன்; என்றிங்ஙனே பலவாறுகூறி ஸ்ரீராமன் தனது விரதவுறுதியை வெளியிட்டமைகாண்க.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

சக்ரவர்த்திதிருமகனறுபத்துநான்கு முற்றிற்று

— இராமபிரான் வாழ்க —

ஸ்ரீரஸ்து

அறுபத்து நான்கு நன்மொழிகள்.

[பல சுவைகள் பொருந்திய உணவுப்பொருள்களை யுண்ணக் குதூஹலிக்கின்றோம்; அதுபோல பல ரஸங்கள் மலிந்த விலக்ஷண விஷயங்களை யநுபவிக்க விரும்புமவர்களுக்கு விருந்தளிப்பதாமிது.]

—— (o) ——

(ஸ்ரீ காஞ்சீ ப்ர. அண்ணங்கராசார்யர்)

1. எம்பெருமான், சேதனர்களையும் அசேதநங்களையும் சரீரமாகக் கொண்டவன். அவன் பெருமையில் தலைநின்றவன். நாம் சிறுமையில் தலைநிற்பவர்கள். நாம் அப்பெருமானை வழிபடுவதற்கு உரியோம். அப்பெருமான் திறத்து நாம் செய்யக்கூடிய வழிபாடுகள் பலவகைப் பட்டிருக்கும். அவற்றைப் பற்றின விரிவுகள் சாஸ்திரங்களில் விசதமாகக் காணக் கிடைக்கும். அந்த வழிபாடுகளெல்லாம் ஒரு புறமிருக்கட்டும். அவாப்த ஸமஸ்த காமனான பெருமானுக்கு நாம் செய்யும் வழிபாடுகள் என்ன பயனைத் தரப்போகின்றன! நம்முடைய ஸ்வரூபம் நிறம் பெறுதற்காகவே நாம் வழிபடுவோமத்தனை.

2. எம்பெருமான் அல்பஸந்துஷ்டன்; அநாதிகாலமாக அவனோடு எதிரம்பு கோக்கின்ற (அதாவது—விவாதப்படுகின்ற) கொடிய ஸம்ஸாரிகள் நாம். அந்த நிலைமையில் நின்றும் நாம் நீங்கி அவனோடு நமக்குண்டான ஒழிக்க வொழியாத உறவுகளைத் தெரிந்து கொண்டோமாயின் இதுவே பரம பூஜையாகும். ஸம்பந்த ஜ்ஞான மாத்திரமே நமக்கு மேலான நன்மைகளுக்கு எல்லை. அஃது உண்டானால் நாம் எம்பெருமானோடு விவாதப்படமாட்டோம். விவாதம் தொலைந்ததென்னில் எவ்விதப் பணிவிடைகளும் நாம் செய்தோமாவோம். விவாதமற்றிருப்பதே பெரிய பணிவிடையாம்.

3. மநுஸ்ம்ருதியில் (8—92) "यमो वैवस्वतो राजा यस्तवैष हृदि स्थितः। तेन चेदविवादस्ते मा गङ्गां मा कुरून् गमः = யமோ வைவஸ்வதோ ராஜா யஸ் தவைஷ ஹ்ருதி ஸ்திதঃ, தேநசேதவிவாதஸ் தே மா கங்காம் மா குரூந் கமঃ." என்று சொல்லிற்று. இதன் கருத்தாவது:— ஸர்வநியாமகனையும் தண்டதரனையும் (அல்லது ஸூர்ய வம்ஸத்திற் பிறந்தவனையும், அல்லது ஆதித்ய மண்டல வாஸியாயும்) எல்லார்க்கும் இனியனாயுமிருக்கிற எம்பெருமான் உனது உள்ளத்தினுள்ளேயுளன்; அவனோடு விவாதம் நெடுநாளாக அநுவர்த்தித்துக் கொண்டு வருகிறது; அதாவது, இந்த ஆத்மவஸ்துவை அவன் தன்னுடையதாக அபிமானித்தால் அதற்கு இசையாதே 'இது என்னுடையதுதான்' என்று செருக்கியிருப்பதுவே விவாதம். இது தொலைந் தொழியுமாகில், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் குடைந்தாடப் போகவும் வேண்டா; குரு க்ஷேத்ரம் முதலிய புண்ய க்ஷேத்ரங்களை ஸேவிக்கப் போகவும் வேண்டா. அஹங்கார மமகாரங்களை உள்ளே வைத்துக்கொண்டு பிராயச்சித்தம் பண்ணுகை

யாவது ஒரு பாத்திரத்தினுள்ளே அசுத்த வஸ்துவை யிட்டுவைத்து மேலே பளபளவென்று சுத்தி செய்வது போலாதலால், உள்ளே எம்பெருமானோடு விவாதத்தை வைத்துக் கொண்டே க்ஷேத்ர தீர்த்த யாத்திரை செய்வது எதற்கு? அந்த விவாதம் தொலைந்துவிடின் இருந்த விடத்திலேயே பரம சுத்தியுண்டாதலால் ஒரு க்ஷேத்திரத்தையும் ஒரு தீர்த்தத்தையும் தேடிப் போகவேண்டா என்றபடி. ஆகவே விவாதம் நீங்குமளவே வேண்டுவது.

4. கூரத்தாழ்வானும் வரதராஜ ஸ்தவத்தில் "त्वद्दास्यमस्य हि मम स्वरसप्रसक्तं तच्चोरयत्ययमहं किल चस्खल प्राक् । त्वं मामकीन इति मामभिमन्यसे स्म हस्तीश संशमय नस्तमिमं विवादम् — த்வத்தாஸ்யமஸ்ய ஹி மம ஸ்வரஸப்ரஸக்தம் தச்சோரயந்யமஹம் கில சஸ்கல ப்ராக், த்வம் மாமகீந இதி மாம் அபிமந்யஸேஸ்ம ஹஸ்தீஸ ஸம்ஸமய நஸ் தமிமம் விவாதம்" என்ற ச்லோகத்தினால் இதனைத் தெரிவித்தருளினார். இந்த ச்லோகத்தின் கருத்தாவது, பேரருளாளனே! மஹாபாபியான எனக்கு உன் பக்கலில் அடிமையா யிருப்பதன்றோ உற்றது. அப்படியிருந்தும் நான் நெடுநாளாக ஆத்மாபஹாரக் கள்வனாகி அடிமைச்சுவடுதன்னை இழந்து போந்தேன். நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதனாகிய நீ 'இவன் நம்முடையவன்' என்று கொண்டு ஸ்வயமேவ அபிமானித்தருளினாய். ஆனாலும் உனக்கும் நமக்கும் அடிக்கடியொரு விவாதம் நடந்து போருவதுண்டு; 'நான் உன்னுடையவனல்லேன் காண்' என்று ஸம்ஸாரியான நான் அகன்று போவதும், 'நீ என்னுடையவன் காண்' என்று நீ பின் தொடர்வதுமான அந்த விவாதம் இனியொருகாலும் தலையெடுக்க வொண்ணாதபடி ஸமூலசாந்தி செய்தருள வேணுமென்பதாம்.

5. பட்டருளிச்செய்த "த்வம் மேஹம் மே குதஸ் தத் ததபி குத் இதம் வேதமூல ப்ரமாணாத்" என்கிற திருமஞ்சனக் கவியான ச்லோகாத்னம் நம்முடைய விரிவான வியாக்கியானத்தோடு அநுபவிக்கத் தக்கது. ஸர்வேச்வரனுக்கும் சேதநனுக்கு முண்டான விவாதத்தின் ப்ரகாரம் அதில் வெகு அற்புதமாக நிரூபிக்கப்பட்டிருப்பது காண்க.

6. ஸம்பந்தவுணர்ச்சி உறைப்பாக உண்டாவதுதான் விவாதம் தொலைந்தபடியாகக் கருதத்தக்கது. ஸம்பந்தஜ்ஞான முண்டான வளவிலேயே நாம் வாழ்ச்சி பெற்றோமாவோம். இதுபற்றி ஈடு முப்பத்தாறுயிரப் படியில் (1—2—7) ஒரு இதிஹாஸம் காட்டப்பட்டுள்ளது. அதனைத் தெளிய உரைப்போமிங்கு:- ஒரு நகரத்தில் ஒரு வணிகர் தலைவனிருந்தனன். அவன் வெளிநாடுகளில் நீண்டகாலம் வஸித்து வர்த்தகஞ் செய்து விசேஷமாகப் பொருள் படைக்க விரும்பி த்வீபாந்தர யாத்திரை செய்ய முயன்றான். அத்தருணம் அவனது மனைவி கருவுற்றிருந்தாள். அப்போதே அவன் புறப்பட்டு த்வீபாந்தரம் சென்று சேர்ந்தனன். பிறகு இரண்டொரு மாதங் கடந்தபின் அவனது மனைவி ஊரில் ஒரு புதல்வனை யீன்றாள். அம்மகன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சுக்கில பக்ஷச் சந்திரன் போன்று வளர்ந்து வருகின்றான். த்வீபாந்தரத்தில் வர்த்தகஞ் செய்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவ்வணிகன் மகப்பேறு உண்டான செய்தியை யறிந்து பெருமகிழ்ச்சி கொண்டு விரைவிலேயே ஊர்வந்து சேர்தற்குப் பெருமுயற்சி செய்தும், மேன்மேலும் வர்த்தகத்தில் மீதூர்ந்துசென்ற மிலைப்பினால் கடுக மீண்டுவர முடியாமல் நெடுங்காலம் அங்கேயே தங்கிவிட்டான். மகன் தானும் உரிய வயது வாய்ந்தவளவில் தனது குலத் தொழிலாகிய வர்த்தகத்தையே தானும் கைப்பற்றி வந்தான். வயது முதிர்ந்த வளவிலும் இவனது தகப்பன் த்வீபாந்தரத்திலேயே வாழ்கிறான். பின்பொரு

நாள் அவ்வணிகன்மகன் தொழில் முறையில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்து பல சரக்குகளுடன் கடல் வழியாய் ஊர்த்துறைமுகம் வந்து சேர்ந்தான். அவன் வந்த கப்பலிலேயே அவனது தந்தையும் த்வீபாந்தரத்திலிருந்து பல மூட்டைகளுடன் ஊர்வந்தனன். அந்தக் கப்பல் துறைமுகஞ் சேர்ந்தவுடனே குமாரன் தனது மூட்டைகளை இறக்குவதாக உத்தேசித்த ஓர் இடத்திலேயே தகப்பனும் தான் கொணர்ந்த மூட்டைகளை இறக்க நினைத்தனன். இவ்விருவரும் தங்களுக்குள்ள பித்ரு புத்ரபாவ ஸம்பந்தத்தை அறியாதவர்கள்; 'இவன் நம் மகன்' என்று தந்தை அறியான். 'இவர் நம் தகப்பனார்' என்று மகனுமறியான். உண்மையில் இவர்கட்கு இவ்வுறவுமுறை தெரிவதற்கு ப்ரஸக்தியில்லையே. இக்குமாரன் பிறப்பதற்கு முன்னமே யன்றோ அவ்வணிகன் வெளிநாடு சென்றிட்டான். ஆகவே 'இவன் வெளிநாட்டு வர்த்தகன்' என்று மகன் பாவிக்கலானான். தந்தையும் மகனை அங்ஙனமே பாவித்தான். இறக்குமதி யிடத்தைப்பற்றிய விவாதம் இவர்கட்கு முற்றிவிட்டது. 'இவ்விடத்தை நானே முதலில் உத்தேசித்தேன்' என்று இருவரும் நெடும்போதாக வாதாடுகின்றனர். அப்போது இவ்விருவருடையவும் உறவுமுறையை உணர்ந்திருப்பானொரு கிழவன் கண்டு 'அந்தோ! உறவு அறியாமல் இது என்ன விவாதம்?' என வருந்தி 'இவன் உன் தந்தை, நீ அவனது மகன்; ஆயிருக்க ஏதுக்கு இங்ஙனே வீண் விவாதம்?' என்றறிவித்தனன். அதன் பிறகு அங்கு என்ன நடந்திருக்கவேணும்! ஸம்பந்தஉணர்ச்சி யுண்டானவுடனே கிழிழந்த நாளைக்குச் சோகித்து, இருவர் சரக்கும் ஒரு சரக்காய், தந்தை ரக்ஷகனாய், மகன் ரக்ஷ்யனாய் விவாதம் தொலைந்து பரம ரஸம் தலைப்பற்றி வாய்க்கொண்டவாறு பேச்சுக்கு நிலமாமோ?

7. அதுபோலவே நாமும் நிருபாதிக பிதாவாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய "உன்றன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது" என்னும்படியான உறவின் உறுதியை உற்று நோக்கி ஈச்வரன் "த்வம் மே" [நீ எனக்கு அடியன்] என்றால், "அஹம் மே" (நான் எனக்கே உரியேன்) என்னும்படியான விவாதத்தை விட்டொழித்தால் "பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ" என்னும்படியாக உபய விபூதியும் நாம் தாராளமாக அநுபவிக்கும் செல்வமாகுமன்றோ.

8. மாலைப் பொழுதில் விஹாரார்த்தமாக வெளியே சென்ற ராஜகுமாரன் அழகியதொரு தோட்டத்தைக் கண்டு உள்ளே புகுந்து திளைக்க நினைத்தும் கட்டுங்காவலுமாயிருந்தது கண்டு அஞ்சி நிற்குமளவில் 'இஃது உன் தகப்பனாருடைய தோட்டங்காண்' என்று ஒரு பெரியார் தெரிவிக்கவே, பிறகு தேங்காதே புக்கிருந்து திளைக்கலாயிற்று என்றவொரு கதையையுங் காட்டுவர்கள்.

9. எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தம் ஒன்றன்று, இரண்டன்று; ஒன்பது வகையான ஸம்பந்தங்கள் திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்திலிருந்து கிடைக்கின்றன. அத்திருமந்திரம் நமக்கு மங்கலஸூத்ரம் போன்றது என்று ஆசார்யர்கள் அருளிச்செய்கிறார்கள். உலகில் ஒரு கன்னிகையின் கழுத்தில் தாலி ஏறினவாறே தம்பதிகளுக்கு பர்த்ரு பார்யாஸம்பந்தம் என்ற ஒரு உறவு ஏற்பட்டதாகும். திருமந்திரமாகிற மங்கள ஸூத்ரம் நமது கழுத்தில் ஏறினவாறே ஒரு உறவு அல்ல; ஒன்பது உறவுகள் ஏற்பட்டனவாகும்.

10. எங்ஙனே யென்னில்; அதில் முதல் பதம் ப்ரணவம். அது அகாரமென்றும் உகாரமென்றும் மகாரமென்றும் [மூன்றக்ஷரமான] மூன்று பதங்கொண்டது. முதற்பதமான அகாரத்தில் மூன்று உறவுகள் தோன்றும். 1. பிதா புத்ரபாவம். 2. ரக்ஷ்ய ரக்ஷகபாவம்,

3. சேஷ சேஷிபாவம். அந்த ஒரு அக்ஷரத்தில் இந்த மூன்று உறவுகள் எங்ஙனே தோன்றுகின்றன வென்னில்; அகாரத்திற்கு ப்ரக்ருதிசக்தியென்றும் (धातुशक्ति) தாது சக்தி யென்றும் இரண்டுவகையான சக்திகளுண்டு. "अकारो वै सर्वा वाक्—அகாரோ வை ஸர்வா வாக்." என்றும் "அகர முதலவெழுத்தெல்லாம்" என்றும் சொல்லுகிறபடியே அகாரமானது எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாயிருந்துகொண்டு, தனக்கு அர்த்தமான எம்பெருமான் உலகுக்கெல்லாம் முதல்வன் என்று காட்டுதலாகிறவிது ப்ரக்ருதி சக்தியெனப்படும். "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்ற குறளும் இதனையே காட்டிற்றுகும். ஆகவே, அகாரத்தில் ப்ரக்ருதி சக்தியினால் ஏற்பட்ட வுறவு கார்ய காரண பாவம் (அல்லது) ஜந்ய ஜநகபாவம், (அல்லது) பிதா புத்ர பாவம்.

11. அந்த அகாரமானது अव-रक्षणे (அவ-ரக்ஷணே) என்கிற தாதுவிலிருந்து தேறினதாகையாலே எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்றதாகும். இதனால் (ரக்ஷ்ய ரக்ஷக பாவமாகிற வுறவு தேறிற்றுகிறது. இதுதான் தாது ஸக்திஸித்தமெனப்படும்.

12. இந்த அகாரத்தின்மேல் வியாகரண ஶாஸ்த்ரப்படி (வைதிக ப்ரக்ரியையில்) சதுர்த்தீ விபக்தியிருந்து லோபித்ததாகக் கொள்ளப்படுகிறது. இல்லாவிடில் அந்வயிக்கவே மாட்டாது. அந்த விபக்தியானது 'அவனுக்கு ஶேஷப்பட்டது' என்கிற பொருளைக் காட்டுதலால் (3) சேஷ சேஷி பாவம் என்கிற வுறவு தேறிற்று.

13. இனி அடுத்துள்ள உகாரமானது அவதாரணப் பொருளதாய் எம்பெருமானுக்கே சேஷப்பட்டது என்று காட்டுதலால் "கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானை யல்லாலறியாக் குலமகள் போல்" (பெருமாள் திருமொழி) என்கிறபடியே (4) பதிபத்நீபாவமாகிற உறவு தேறுகின்றது.

14. அதற்கு அடுத்துள்ள மகாரமானது "मन-ज्ञाने" "மந-ஜ்ஞாநே" "मन अवबोधने" "மந அவபோதநே" என்கிற தாதுக்களிலிருந்து நிஷ்பந்நமாகி ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுதலால் (5) ஜ்ஞாத்ருஜ்ஞேய பாவமென்கிற உறவு தேறிற்று. எம்பெருமான் அறியப்படுமவன், ஆத்மா அறிகின்றவன் என்றவாறு. "ஒண்தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கு முணர்வு" என்கிற பொய்கையார் பாசுரம் இங்கு அநுஸந்தேயம்.

15. அதற்குப்பிறகு உள்ள நம: பதத்தினால், தன்னை ரக்ஷித்துக்கொள்வதில் தனக்கு எவ்விதமான உரிமையும் இல்லையென்று காட்டுகிறமுகத்தினால் ஆத்மவர்க்கமெல்லாம் எம்பெருமானுடைய ஸொத்து என்று காட்டுதலால் (6) ஸ்வஸ்வாமி பாவம் என்கிற வுறவு தேறிற்று. ஸொத்தை ரக்ஷிக்குமுரிமை ஸ்வாமிக்கேயன்றோவுள்ளது.

16. இனி நாராயண பதத்தை யெடுத்துக்கொண்டால் இதற்குத் தத்புருஷ ஸமாஸமென்றும் பஹுவ்ரீஹி ஸமாஸமென்றும் இருவகையான வ்யுத்பத்தி மார்க்கங்கள் கொள்ளப்பட்டு, நாரபதார்த்தமான ஸகல வஸ்துக்களுக்கும் எம்பெருமான் ஆதாரமென்றும், அந்த ஸகல வஸ்துக்களையும் தான் ஆதாரமாகவுடையவனென்றும் தெரிந்துகொள்ளுகிறோம். ஆதலால் நாராணும் அயநம் என்கிற தத்புருஷனால் (7) ஆதாராதேயபாவமென்கிற உறவு தேறுகின்றது. நாரா: அயநம் யஸ்ய ஸ: என்கிற பஹுவ்ரீஹியால் (8) சரீரசரீரி பாவமென்கிறவுறவு தேறுகின்றது. நாரங்கள் பகவானிடத்திலே யிருக்கின்றன என்பது தத்புருஷ ஸித்தம். நாரங்களிலே பகவானுளன் என்பது பஹுவ்ரீஹி ஸித்தம். அவற்றிலே இவனிருப்பதாவது அவற்றை

உடலாகக்கொண்டு தான் அவற்றுக்கு உயிராக இருப்பதேயாதலால் இதனால் சரீராத்மபாவம் ஸித்தித்ததென்னக் குறையில்லை.

17. இனி அந்த நாராயண பதத்தின் மீதுள்ள சதுர்த்தீவிபக்தியானது, காகாக்ஷிந்யாயத்தாலே தன்னிடத்திலும் அந்வயிக்கின்ற நமஸ்ஸினால் பரிஷ்காரம் பெற்று, நாராயணனுக்குச் செய்யப்படுகின்ற கைங்கரியத்தின் போகமும் அவனுக்கேயன்றி இந்த ஜீவனுக்கில்லையென்று நிஷ்கர்ஷித்துக் காட்டுதலால் (9) போக்த்ரு போக்யபாவம் என்கிற உறவைத் தெரிவிக்கின்றது. எம்பெருமான் போக்தா, ஜீவாத்மா போக்யன் என்றவாறு. ஜீவாத்மாவை போக்தாவாகவும் எம்பெருமானை போக்யனாகவுங் கொள்வதும் ஒருபுடையுண்டெனினும் திருமந்திரத்தில் வடிக்கட்டின பொருள் முந்துறப் பணித்ததேயாகும். ஆகத் திருமந்திரத்தினால் நவவித ஸம்பந்தங்கள் தெரியவந்தன. இவற்றைச் சிந்தையில் பதிய வைத்துக் கொள்வதற்காக "पिता च रक्षकश्शेषी भर्ता ज्ञेयो रमापतिः । स्वाम्याधारो ममात्मा च भोक्ता चाद्यमनूदितः —பிதா ச ரக்ஷகச் சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:. ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்யமநூதித:." என்கிற ச்லோகத்தைப் பெரியார் காட்டியுள்ளார்.

18. இந்த நவவித ஸம்பந்தங்களையும் நாம் உணரப்பெறாவிடினும் "அவன் சேஷி, நாம் சேஷபூதர்" என்று இத்தனையேனும் அறிய ப்ராப்தம். இவ்வளவையே எம்பெருமான் எதிர்பார்த்திரா நின்றான்.

19. ஸகல ஶாஸ்த்ரங்களாலும் நாம் அறியவேண்டிய பொருள்கள் ஐந்தேயாகும். அவையே அர்த்த பஞ்சகம் என்று ஸம்ப்ரதாயஸித்தமாக வழங்கப்பெறுகின்றன. (1) பரமாத்மாவின் ஸ்வரூபம். (2) ஜீவாத்மாவின் ஸ்வரூபம். (3) உபாயஸ்வரூபம். (4) விரோதிஸ்வரூபம். (5) புருஷார்த்த ஸ்வரூபம் என்கிற இவையே அர்த்தபஞ்சகமாம். இவற்றுள் ஜீவாத்ம ஸ்வரூபமே ஸ்வஸ்வரூபமெனப்படுகின்றது. நம்முடைய பூருவாசார்யர்களுக்குப் பரமநிதியாக விளங்கின இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தில் தேறுகின்ற முறையைக் கொண்டு ஸ்வஸ்வரூபத்தை நாம் தெளிந்துகொள்ளும் வழி காட்டுகிறோம்.

20. சேஷத்வமும் பாரதந்த்ரியமும் ஸ்வஸ்வரூபம் என்பது உலகமறிந்ததேயாகும். இவை யிரண்டும் எம்பெருமான் விஷயத்திலும் பாகவதர்களின் விஷயத்திலும் ப்ராப்தம். இவற்றை அநுஷ்டான முகத்தால் காட்டுவதற்காகவே இளையபெருமாளும் பரதாழ்வானும் சத்ருக்நாழ்வானும் அவதரித்தார்கள்.

21. சேஷத்வமாவது என்ன? பாரதந்திரியமாவது என்ன? என்பதை முந்துற முன்னம் தெரிந்துகொள்ளவேணும். "கட்டிப் பொன்போலே சேஷத்வம்; பணிப்பொன் போலே பாரதந்த்ரியம்" என்பர் நம் பூருவாசாரியர்கள். இஷ்டமானபடி உபயோகப்படுவதற்கு உரித்தாயிருக்குமளவே உரித்தாயிருக்கும் நிலைமையே கட்டிப்பொன். உபயோகப்படுவதற்கு உரித்தாயிருக்குமளவே யல்லாமல் உபயோகப்பட்டுத் தீருகின்ற நிலைமையே பணிப்பொன். வேலை செய்யப்பட்டு ஒரு பூஷணமாக முடிந்த பொன் பணிப்பொன் எனப்படும். ஆக, யதேஷ்டமாக விநியோகப் படுவதற்கு ஸ்வரூப யோக்யதாமாத்ரம் சேஷத்வமென்றும் அவ்வளவேயன்றிக்கே யதேஷ்டமாக விநியோகப்பட்டுத் தீர்ந்தமை பாரதந்த்ரியமென்றும் சொல்லிற்றாயிற்று.

22. இளையபெருமாளுடையது சேஷத்வம்; பரதாழ்வானுடையது பாரதந்த்ரியம். எங்ஙனேயென்னில்; பெருமாள் பித்ருவாக்ய பரிபாலநார்த்தமாகக் காட்டுக்குப் புறப்பட

விருக்கையில் இளையபெருமாள் தம்மையும் உடனழைத்துக்கொண்டு செல்லும்படி வேண்டினர். அப்போது பெருமாள் "காட்டுக்கு விதியாகச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் எனக்குப்போலே உனக்கு இல்லாமையாலே நீ திருவயோத்தியிலேயே இருந்து தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்துகொண்டு வாழ்வாயாக" என்று நியமித்தருளச் செய்தேயும் இளையபெருமாள் அதற்கு உடன்படாது நிர்ப்பந்தித்துப் பின்தொடர்ந்து அடிமைசெய்தார்.

23. பரதாழ்வானோவென்னில்; சித்ரகூட பரிஸரத்திலே பெருமாள் பக்கலிலே விடைகொண்டு 'திருவயோத்திக்கு மீண்டெழுந்தருளி மகுடாபிஷேகம் கொண்டருளவேணும்' என்று பலவாறு பிரார்த்தித்தவிடத்திலும் பெருமாள் அதற்கு இசையா தொழியவே பரதாழ்வான் தன்னுடைய பாரதந்த்ரிய ஸ்வரூபத்தை நோக்கி அவர் திருவுள்ளமானபடியே நடந்து கொள்வதுதான் நமக்கு உற்றது என்று துணிந்து "அதிரோஹார்ய! பாதாப்யாம் பாதுகே ஹேம பூஷிதே, ஏதே ஹி ஸர்வலோகஸ்ய யோகக்ஷேமம் விதாஸ்யதः." என்று பிரார்த்தித்து ஸ்ரீராம பாதுகைகளை மஹாப்ரஸாதமாகப் பெற்றுக்கொண்டு "ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்டः" என்று மகிழ்ந்து மீண்டனன்.

24. பெருமாள் பிராட்டியைச் சிறைமீட்டுத் திருவயோத்திக்கு மீண்டெழுந்தருளி மகுடாபிஷேகம் கொண்டருளும்போது, யுவராஜபட்டாபிஷேகம் செய்துகொள்ளும்படி இளைய பெருமாளை நிர்ப்பந்தித்தும் அவர் இசைந்திலர்; பரதாழ்வானை நியமித்தவளவே அவர் இசைந்து போந்தார். ஆக இப்படிப்பட்ட தன்மைகளை நோக்குமிடத்தில் இளையபெருமாளுடைய படி வெறும் சேஷத்வமென்றும், பரதாழ்வானுடைய படி அதனிலும் சிறந்த பாரதந்த்ரியமென்றும் அறியப்படும்.

25. சேஷத்வத்திற்காட்டில் பாரதந்த்ரியமே மிகச் சிறந்ததென்றும் அதுவே திருமந்த்ரத்தில் வடிக்கட்டினதாகத் தேறின ஸ்வரூப யாதாத்மியமென்றும் கூறினோம். சாஸ்த்ரங்களில் ஆஜ்ஞாகைங்கர்யமென்றும் அநுஜ்ஞாகைங்கர்யமென்றும் இருவகைப் பணிவிடைகள் கூறப்படும். ஸ்வாமி நியமித்த கட்டளையை மறுக்காமல் அப்படியே நிறைவேற்றுவது ஆஜ்ஞா கைங்கர்யமென்று சொல்லப்படும். எந்த கைங்கர்யத்தைச் செய்யாமற் போனால் ப்ரத்யவாயம் புகுமோ, அது ஆஜ்ஞாகைங்கர்யமென்று கொள்க. இனி அநுஜ்ஞாகைங்கர்யமாவது, 'செய்யாவிடில் ப்ரத்யவாயம்' என்பதில்லாமல், சேஷியின் முகவிகாஸத்தை விரும்பி அத்தாணிச்சேவகமாகச் செய்யும் கைங்கர்யமாகும். ஆகவே இளையபெருமாள் அநுஜ்ஞாகைங்கர்ய நிஷ்டரென்றும், பரதாழ்வான் ஆஜ்ஞாகைங்கர்ய நிஷ்டரென்றும் கொள்ளத்தகுவர்.

26. எம்பெருமானளவில் அடிமைப்பட்டிருப்பதிலுங் காட்டில் அவனடியார்களான பாகவதர்கள் பக்கலில் அடிமைப்பட்டிருப்பதானது இன்னமும் மிகச்சிறந்தது. இது சத்ருக்நாழ்வான் பக்கலிலே காணத்தகும். பாகவதோத்தமனான பரதாழ்வானை யல்லது அறியாதே யிருப்பர் சத்ருக்நாழ்வான். ஸ்ரீ வால்மீகிமுனிவர் இவரைப்பற்றிக் கூறுமிடத்தில் "சத்ருக்நோ நித்யசத்ருக்நः." என்கிறார். நம்முடன் கூடப்பிறந்து நம்மைவிட்டு அகலாதிருக்கும் இந்திரியங்களே நித்ய சத்ருவெனப்படும். சத்ருக்நாழ்வான் தமது இந்திரியங்களைப் பட்டிமேய வொண்ணாதபடி அடக்கி ஆள்பவர் என்ற கருத்துப்பட நித்யசத்ருக்நः எனப்பட்டது. அவருடைய கருத்தின்படி இந்திரியங்களுக்குப் பட்டிமேய்தலாவது என்னென்னில்; தமக்கு உத்தேச்யமான பரதாழ்வானிடத்தை விட்டுப் பிறிதோரிடத்தில் செல்லுதல் பட்டிமேய்தலாம். ஆகவே அவர்பகவத்விஷயத்தையும் விஷயாந்தரத்தோடொக்க நினைத்திருப்பர், எப்போதாவது

ஸ்ரீராமபிரானையும் அவர் ஸேவிக்க நேருமாகில் தமக்கு உத்தேச்யமாக ஸேவிக்கமாட்டார். தமக்கு
உத்தேச்யரான பரதாழ்வானுக்கு உத்தேச்யர் என்று இவ்வழியாலே ஸேவிப்பாராம்.
27. இப்படிப்பட்ட நிஷ்டை விளைவது மிகவும் அரிது. விஷயாந்தரங்கள் தோஷங்
களை வடிவெடுத்திருக்கிறபடியால் அந்த தோஷங்களை ஆராய்ந்து பார்த்து அவற்றை விட்டுத்
தொலைக்கமுடியும். பகவத்விஷயம் அங்ஙனன்றிக்கே * ஸமஸ்த கல்யாணகுண அம்ருதோததி
யாக இருப்பதனாலும் * பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் * என்கிறபடியே ஆண்களையும்
பெண்ணுடையுடுக்கச் செய்யுமதாக இருப்பதனாலும் அதைவிடுவது மிகவும் அரிது. ஆனால்
குணக்கடலான பகவத் விஷயத்தை விடவேண்டுவானென்னென்னில்; விடவேணுமென்று
சொல்லுகிறதன்று. உலகத்தில் ஒருவஸ்துவிலே ஒருவனுக்கு ப்ரேமமுண்டானால் தத்ஸம்பந்த
ஸம்பந்த ஸம்பந்திகள் பக்கலிலும் அந்த ப்ரேமம் பெருகிச் செல்லும்படியைக் காணுகின்றோம்.
மனைவியினிடத்திலே ஆராத காதல்கொண்ட வொருவன் அந்த மனைவிக்கு யார் யார் உற்றுற
வினரோ அவர்கள் பக்கலிலும் ப்ரேமம் பெருகிச் செல்லப் பெறுகின்றானன்றோ. இஃது என்?
என்று யாரை யார் கேட்பது? ப்ரேமத்தின் ப்ரவாஹஸரணி அப்படிப்பட்டது என்றே
சொல்லவேணும். அதுபோல பகவானிடத்தில் வைக்கின்ற அன்பு அதிசயித்ததாக இருக்கு
மாகில் "அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் தம், அடியாரடியோங்களே?"
என்றும் "த்வத்ப்ருத்யப்ருத்ய பரிசாரக ப்ருத்ய ப்ருத்ய ப்ருத்யஸ்ய ப்ருத்ய இதி மாம் ஸ்மர
லோகநாத!" என்றும் சொல்லுகிறபடியே பகவத் பக்த ஸந்தானங்களிலே அது பெருகிச்
சென்று தீரும். அந்த ப்ரேமத்தை ஒருமடை செய்யவேண்டியதான முறைமையில் பகவத்
விஷயத்தை உபேக்ஷிக்கும்படியான நிலைமையும் வந்துவிடும்.
28. எம்பெருமான் தானே அஷ்டவித பக்திகளை அருளிச்செய்யுமிடத்தில் * மத்
பக்தஜநவாத்ஸல்யம் * என்று, முந்துற முன்னம் பாகவதர்கள் பக்கலில் ப்ரேமம் கனத்
திருப்பதுவே தன் பக்கலில் பக்தி முதிர்ந்தபடி என்று காட்டுகிறான். ஆகவே பகவச் சேஷத்
வத்திற் காட்டிலும் பாகவத சேஷத்வதமே சீரியதென்றும், அது, ராமாயண புருஷர்களில்
சத்ருக்நாழ்வானுடைய அனுஷ்டானத்தாலே ஸித்தமென்றும் தேறிற்று.
29. ஸ்ரீராமபிரான் பரமபுருஷனா யிருக்கச்செய்தேயும் மனிசர்களிலே ஒருவனாய்
வந்து பிறந்து தன்னுடைய நியாமகத்வம் முதலியவற்றை மறைத்துக்கொண்டு நியாம்யர்களிலே
தானும் ஒருவனாக ஆசரித்துக் காட்டினபடியாலே அப்பெருமான் தானும் ஸ்வஸ்வரூபத்தை
ஒருவாறு காட்டியே யிருக்கின்றான். பெரியோர் சொல்லிற்றைச் சிறியோர் கேட்பது என்று
ஒரு ஸாமாந்ய தர்மமுண்டு; இதுவும் ஆத்மஸ்வரூபத்தில் ஒன்றாகும். இதனை ஸ்ரீராமபிரான்
ஸ்வாநுஷ்டாநமுகத்தாலே காட்டியுள்ளான். பெருமாள் செய்த செயல்களைக் கூறுமிடங்களில்
வான்மீகி பகவான் * விச்வாமித்ரஸ்ய ஶாஸநாத் * என்றும் * அகஸ்த்யவசநாத் * என்றும்,
* பிதுர்வசநநிர்த்தேஶாத் * என்றும் * பரத்வாஜஸ்ய ஶாஸநாத் * என்றும் இப்படியே பெரி
யோர்களுடைய நியமனங்களைக் காரணமாகக் கூறி யிருத்தல் காணலாம். பெருமாள் முந்துற
முன்னம் தாடகையை வதம் பண்ணினார்; ஸ்திரீவதம் பண்ணலாமா? என்று சிலர் தர்மஹானி
சங்கிப்பதற்கு இடமில்லாதபடி, "விச்வாமித்ர முனிவர் நியமிக்கவே பெரியோருடைய நியமன
மென்று பெருமாள் செய்தார்" என்று வான்மீகி முனிவர் விளக்கி வைத்தார். இங்ஙனமே
மற்றும் கண்டுகொள்வது. ஆகவே, பெருமாள் அனுட்டித்துக் காட்டினது ஸாமாந்யதர்மம்.
இளையபெருமாள் அனுட்டித்துக் காட்டினது அதனிலும் சிறந்த விசேஷதர்மம். பரதாழ்வான்

அநுஷ்டித்துக் காட்டினது அதனிலும் மிகச் சிறந்த தருமம். சத்ருக்நாழ்வான் அநுஷ்டித்துக் காட்டினது எல்லாவற்றிலும் மிகச் சிறந்த தருமம்.

30. கைங்கர்யத்தில் ஊற்றமுற்றிருப்பதே ஆத்மாவுக்கு மிக முக்கியமாகும். மாநஸிகம், வாசிகம், காயிகம் என்று கைங்கரியம் மூவகைப்படும். இவற்றுள் காயிக கைங்கரியமே மிகவும் சிறப்புப் பெறும். எந்த வஸ்துவிலே நாம் அதிகமான ப்ரேமம் பாராட்டுகின்றேமோ, அந்த வஸ்துவைக்கொண்டு கைங்கரியம் செய்வதன்றோ எம்பெருமானுக்கு உகப்பை விளைக்கும். நாம் நம்முடைய உடலில் எவ்வளவு ப்ரேமம் பாராட்டிவருகின்றேமென்பது ஒவ்வொருவர்க்கும் தெரிந்ததேயாம். பணத்தைக் காட்டிலும் நாம் உடலிலே அதிகமான பற்று வைத்திருக்கிறேம். ராஜஸ்தானத்தில் ஒரு குற்றம் செய்ததற்காகத் தண்டனை விதிக்கப்படும்போது "ஒருநாள் சிறைவாஸம்; அல்லது ஆயிரம்ரூபாய் அபராதம் செலுத்துதல்" என்றால் சரீரத்திலுள்ள அன்பினால், அதற்குக் கஷ்டம் தருவதான சிறைவாஸத்தை வெறுத்துப் பணத்தையே செலுத்தப் பார்க்கின்றவர்கள் பணத்தைவிட உடலிலேயே அதிகமான அன்பு பாராட்டியிருக்கிறார்களென்பது எளிதாகத் தெரியவரும். ஆகவே, நாம் பணத்தைக் கொண்டு கைங்கரியம் செய்வதிற் காட்டிலும் மிக விருப்பமான உடலைக்கொண்டு கைங்கரியம் செய்வதே உத்தமமாகும்.

31. இதுவும் இளையபெருமாளுடைய அநுஷ்டானத்தாலே ஸித்தம். இவர் "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே, அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஃ ஸ்வபதச் ச தே." என்று விண்ணப்பம்செய்து அப்படியே ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமைசெய்து ஸ்வரூபம் நிறம்பெற்றார். இதைப்பற்றி ஸ்ரீவசநபூஷணத்தில் அருளிச்செய்யுமிடத்து "பசியாயிருப்பார் அட்டசோறு முண்ணவேணும் அடுகிறசோறு முண்ணவேணும் என்னுமாபோலே காட்டுக்குப் போகிறபோது இளையபெருமாள் பிரிவில் தரியாமையை முன்னிட்டு அடிமைசெய்யவேணும் எல்லாவடிமையும் செய்யவேணும் ஏவிக்கொள்ளவும் வேணுமென்றார்; படைவீட்டில் புகுந்தபின்பு காட்டில் தனியிடத்தில் ஸ்வயம் பாகத்திலே வயிற்றைப் பெருக்கினபடியாலே ஒப்பூணுண்ணமாட்டாதே ஒரு திருக்கையாலே திருவெண்கொற்றக் குடையையும் ஒரு திருக்கையாலே திருவெண்சாமரத்தையும் தரித்து அடிமை செய்தார்" என்றருளியுள்ள திவ்யஸூக்திகளும் அவ்விடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீ ஸூக்திகளும் ஸேவிக்கத்தக்கன.

32. ஸகலஜகத்காரணபூதனாய், ஸர்வலோகரக்ஷகனாய், ஸர்வசேஷியாய், ஸர்வஸ்வாமியாய், ஸர்வாதாரபூதனாய், ஸகலசேதநாசேதந சரீரகனாய், அகிலஹேய ப்ரத்யநீக கல்யாண குணகண நிலயனாய், உபயவிபூதிநாதனாய், லக்ஷ்மீபதியாயிருப்பன் பரமபுருஷன். மேலே குறிக்கப்பட்ட விசேஷணங்களில் ஒவ்வொன்றிலும் உட்புகுந்து தெரிந்துகொள்வதே பரஸ்வரூபஜ்ஞானமாகும். அவ்வளவு விஸ்தாரத்திற்கு இங்கு அவகாசமில்லாமையாலே முக்கியமாகச் சில விஷயங்களை இங்கு நிரூபிக்கிறேம்.

33. எம்பெருமானுடைய ஸ்வரூபம் பரம் வ்யூஹம் விபவம் அந்தர்யாமி அர்ச்சாவதாரம் என்று ஐவகைப்பட்டிருக்கும். நம்மாழ்வார் * விண்மீதிருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல்சேர்ப்பாய் மண்மீதுழல்வாய் இவற்றுளெங்கும் மறைந்துறைவாய் * என்ற பாசுரத்தினால் இந்த ஐவகைகளையும் நிரூபித்துக்காட்டியருளினார். விண்மீதிருப்பாய் என்றது பரத்வம்; கடல் சேர்ப்பாய் என்றது வியூஹம்; மண்மீதுழல்வாய் என்றது, ஸ்ரீராமக்ருஷ்ணாத்யவதார ரூபமான விபவம்; இவற்றுளெங்கும் மறைந்துறைவாய் என்றது அந்தர்யாமித்வம்; மலைமேல் நிற்பாய் என்றது திருமலை முதலான திவ்யதேசங்களிலெழுந்தருளியிருக்கும் நிலையாகிய அர்ச்சாவதாரம்.

34 எம்பெருமானைப் பேசப்புகுந்த நம்மாழ்வார் திருவாய்மொழியில் முதலடியிலே * உயர்வற வுயர்நல முடையவன் * என்று ஸகலகல்யாண குணாகரத்வத்தையிட்டு உபக்ரமிக்கையாலும், இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணமும் * कोन्वस्मिन् साम्प्रतं लोके गुणवान् कश्च वीर्यवान् ।........मुने वक्ष्याम्यहं बुद्ध्वा तैर्युक्तः श्रूयतां नरः * என்று திருக்கல்யாண குணங்களைக் கொண்டே அவதரித்திருக்கையாலும், மேன்மேலும் * बहवो नृप कल्याणगुणाः पुत्रस्य सन्ति ते * என்றும், * तरुणौ रूपसंपन्नौ सुकुमारौ महाबलौ * என்றும் * धातूनामिव शैलेन्द्रो गुणानामाकरो महान् * என்றும் * विदितस्सहि धर्मज्ञः शरणागतवत्सलः * என்றும் திருக்குணங்களின் ப்ரஸ்தாவமே பெருகிச் செல்லுகையாலும் அப்பெருமானது கடல்போன்ற திருக்குணங்களை ஸதா அநுபவிப்பதே நமக்குப் ப்ராப்தம்.

35. 'ஈரச்சொற்கள்' என்றும் 'செவிக்கினிய செஞ்சொல்' என்றும் போற்றப்படுகின்ற திவ்யப் பிரபந்தங்கள் வேத வேதாந்த வேதாங்கஸாரமென்று உலகங் கொண்டாடநின்றன. இவை தமிழ்ப் பாஷையிலே அவதரித்திருக்கின்றமையால் வடமொழியில் பரிசயமும் பரிசய யோக்யதையும் இல்லாதவர்கள் மாத்திரமே இவற்றைக்கொண்டு போதுபோக்கவேணுமென்றும், ஸம்ஸ்க்ருத வித்வான்களாகவுள்ளவர்கள் உபநிஷத்துக்கள் முதலானவற்றைக்கொண்டே போதுபோக்க வேணுமென்றும் சிலர் வரம்பிட்டுப் பேசுவர்கள். வடமொழிப் பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்தவரான நம்தேசிகனுடைய திருவுள்ளம் இவ்விஷயத்தில் எப்படிப்பட்டது? என்பதைப்பற்றி ஆராயப்புகுந்து ரஸிகர்களுக்குச் சில விஷயங்களை உணர்த்துகிறேம். இவ்வாசார்யஸார்வபௌமர் தென்மொழியிலும் வடமொழியிலும் ஆழ்வாரைப்பற்றியும் அருளிச்செயல்களைப்பற்றியும் அருளிச்செய்திருக்கின்ற திவ்யஸூக்திகள் பலபல. பாதுகாஸஹஸ்ரமென்கிற ஒரு திவ்ய சாஸ்திரத்தில் ஆழ்வார் விஷயமாக அருளிச்செய்துள்ள ச்லோகரத்நங்களை ஆராய்ந்தாலோ, ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை அநுசந்தித்த வாயினால் மற்றொரு ஸரஸ்வதியைப் பேசவும் கூசவேண்டும்படி, அருளிச் செயல்களின் பெருமை அற்புதமாக அறையப்பட்டுளது. அந்த பாதுகா ஸஹஸ்ரத்திற்கு ஆழ்வார் பெருமையையும் திவ்யப்ரபந்த மஹிமையையும் பேசுவதுதான் ஜீவநாடி.

36. ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்நத்தில் "மாதா பிதா யுவதயஃ" என்கிற ச்லோகத்தினால் ஆழ்வாரை இறைஞ்சினார். அங்கு ஸ்தோத்ரபாஷ்யத்தில் தேசிகன் அருளிச்செய்துள்ள அவதாரிகா ஸ்ரீஸூக்திகள் ஆஸ்திகர்களுக்கு அநவரதம் அநுஸந்தேயமாகக் கண்டபாடம் செய்யத்தக்கவை. "अथ पराशरप्रबन्धादपि वेदान्तरहस्यवैशद्यातिशयहेतुभूतैः सद्यः परमात्मनि चित्तरञ्जकतमैः सर्वोपजीव्यैरुपबृंहणैः मधुरकविप्रभृति संप्रदायपरम्परया नाथमुनेरप्युपकर्तारम्, कालविप्रकर्षेऽपि परमपुरुषसङ्कल्पात् कदाचित् प्रादुर्भूय साक्षादपि सर्वोपनिषत्सारोपदेष्टारम् पराङ्कुशमुनिं - * मातापिताभ्रातेत्याद्युपनिषत्प्रसिद्धभगवत्स्वभाव-दृष्ट्या प्रणमति मातेति" ॥ என்பவை அங்கு ஸ்ரீஸூக்திகள். பராசர மஹர்ஷிபணித்த ஸ்ரீவிஷ்ணு புராணத்திற் காட்டிலும் வேதாந்த ரஹஸ்யார்த்தங்களை மிகத் தெளிவாகக் காட்டுகின்றவை ஆழ்வாருளிச் செயல்கள் — என்பது மேற்குறித்த ஸ்தோத்ர பாஷ்ய ஸ்ரீஸூக்திகளில் செவ்வனே கூறப்பட்டதாம்.

37. யதிராஜ ஸப்ததியில் நம்மாழ்வாரைப்பற்றி ஒரு ச்லோகம் அருளிச்செய்கிறார் காண்மின்; *"यस्य सारस्वतं स्रोतो वकुलामोदवासितम् । श्रुतीनां विश्रमायालं शठारिं तमुपास्महे ॥' என்பதாமது. இதில் பிற்பாதியின் தாற்பரியம் யாதெனில்; ஸம்ஸ்கிருத வேதங்கள் தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிய வெளியிடவேணுமென்று மிகவும் சிரமப்பட்டன; ஆனால் சிரமத்திற்குத் தகுதியான பலன் கிடைக்கவில்லை. 'அந்தோ! நமக்கு ச்ரமமே மிக்கதே!' என்று அந்த வேதங்கள் விடாய்த்தனவாம். அந்த நிலைமையில் மகிழ்மாலை மார்பினரான ஆழ்வார் திருவவதரித்து ஈரச்சொற்களாலே வேதங்களுக்கு உத்தேச்யமான பொருள்களைத் தெளிய வெளியிட்டருளினமையால் வேதங்களுக்கு உண்டாயிருந்த விடாய் தொலைந்ததாம் என்பதே. அன்றி, 'பகவத் ஸ்வரூப ரூபகுணவிபூதிகளை ப்ரதிபாதிக்கும் திறத்தில், வேதங்களே! நீங்கள் ஏன் வீணாக ச்ரமப்படுகின்றீர்கள்? அந்தத் தொழிலை நான் வஹிக்கக்கடவேன்; நீங்கள் இளைப்பாறலாம்" என்று சொல்லி ஆழ்வார் திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்வாராயினர்—என்பதும் கருத்தாகும். அதிகம்பீரமான தேசிக திவ்யஸூக்திகளிலே இன்னமும் விசேஷ தாத்பர்யங்களை ஊஹித்து உணரலாம்.

38. தேசிகனுடைய திருவுள்ளத்தில் திவ்யப்ரபந்தங்களின் பெருமை இடைவிடாது குடிகொண்டிருந்ததென்று நன்கு புலப்படுகின்றது. இதிஹாஸ புராணாதிகளைக்கொண்டு உபநிஷத்துக்களின் தாற்பரியத்தை உணர்வதிற் காட்டிலும் ஆழ்வார் திவ்ய ஸூக்திகளைக்கொண்டு அறிவதே மிகச் சிறந்தது என்கிற திருவுள்ளத்தை த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் மிக விரிவாக அருளியுள்ளார். அதில் நான்காவது ச்லோகத்தில்—

"यत्तत्कृत्यं श्रुतीनां मुनिगणविहितैस्सेतिहासैः पुराणैः तत्रासौ सत्त्वसीम्नः शठमथनमुनेः संहिता सार्वभौमी"

என்றுள்ளது. வேதங்களுக்கு உபப்ரும்ஹணமாக மஹர்ஷிகள் இயற்றிய இதிஹாஸ புராணங்களைக்கொண்டு நாம் எந்த உபயோகத்தை அடைகின்றோமோ அந்த உபயோகமே திருவாய்மொழியினாலுமுள்ளது; ஆனால் அந்த புராணாதிகள் ராஜஸ தாமஸத்வ ஹேதுக்களாலே த்யாஜ்யங்களாகவுமாகின்றன. இங்கு அப்படியில்லை. ஸத்வகுணத்திற்கு எல்லை நிலமான ஆழ்வாராலே அருளிச்செய்யப்பட்டதாகையாலே கேவலம் ஸாத்விகமாயிருக்கின்ற இத் திருவாய்மொழியாகிற த்ராவிட ப்ரஹ்ம ஸம்ஹிதையானது வேதோப ப்ரும்ஹணங்களில் தலைமை பெற்றதாகும்—என்பது மேற்குறித்த ஸ்ரீஸூக்தியின் பொருள்.

39. அம்ருதாஸ்வாதிநி யென்னும் ப்ரபந்தத்திலுள்ள—"அந்தமிலாப் பேரின்ப மருந்தவேட்கும் அடியோமை யறிவுடனே யென்றுங்காத்து, முந்தைவினை நிரைவழியிலொழுகாதெம்மை முந்நிலையாந் தேசிகர்தம் முன்னே சேர்த்து, மந்திரமும் மந்திரத்தின் வழியுங்காட்டி வழிப்படுத்தி வானேற்றி யடிமைகொள்ளத் தந்தையென நின்ற தனித் திருமால் தாளில் தலைவைத்தோம் சடகோபனருளினாலே. (28) என்ற ஒரு பாசுரமே போதும்.

40. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் சிறந்த மெய்யடியார்களாகக் கொண்டாடப்படுகின்ற 'பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசையையன் அருள்மாறன் சேரலர்கோன் துய்யபட்ட நாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் நன்கலியன்' என்னும் ஆழ்வார்கள் பிறந்து வளர்ந்தகாலம் எது? என்பதைப் பலர் ஆராயப்புகுந்து பல பல வகையாக வரைந்திருக்கின்றார்களென்பது இவ்வுலகில் பிரசித்தமானதே. இவ்வாராய்ச்சி விஷயமாகச் சிலருடைய கட்டுரைகள் அச்சாகி வெளிவந்துள்ளன; வேறு சிலருடைய கட்டுரைகள் அச்சிடப் பெறாது எழுத்தளவிலே நிற்கின்றன. இத்தகைய புத்தகங்களை நாம் பெரும்பாலும் பார்த்திருக்

கின்றோம். ஒவ்வொருவர் எழுதியிருப்பதும் மிக மிக விசித்திரமாகவே யுள்ளது. ஆழ்வார்களினுடைய வரிசைக்கிரமம் பூருவாசிரியர்களால் அநுஸந்திக்கப்பட்டவிதம் மணவாளமாமுனிகளால் உபதேச ரத்தினமாலையில் "ஈதிவர் தோற்றத்தடைவாமிங்கு" என்று காட்டப்பட்டிராநின்றது. புதிய ஆராய்ச்சியாளர்கள் இவ்வரிசைக் கிரமத்தையும் மாறுபடக் கூறுகின்றனர். ஆழ்வார்களெல்லார்க்கும் பிந்தியே நம்மாழ்வார் அவதரித்தாரென்றும், மதுரகவிகள் நம்மாழ்வார்க்கும் ஆசாரியரே யல்லது சிஷ்யரல்லர் என்றும், ஸ்ரீ ராமாநுஜரென்கிற உடையவருடைய காலத்திற்குப் பிறகும் சில ஆழ்வார்கள் தோன்றினர் என்றும் இப்புடைகளிலே அவரவர்கள் எழுதிவைத்திருப்பவை எடுத்துக் கழிக்கவும் தகாதவை.

41. சிலர், தாங்கள் மிகவும் பிராமாணிகமாக ஆராய்ச்சி செய்வதாகவும், தகுந்த சான்றுகள் காட்டுவதாகவும் கூறி, கி. பி. நாலைந்து நூற்றாண்டுகட்குப் பிறகே ஆழ்வார்கள் அவதரிக்க ஆரம்பித்தார்களென்றும், இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன் ஒரு ஆழ்வாரும் இருந்ததில்லையென்றும் வரைகின்றார்கள். ஆங்காங்குச் சில சிலாசாசனங்களும் செப்பேடுகளும் மற்றுஞ் சில ஆதாரங்களும் தங்கட்குத் துணைபுரிகின்றனவாகத் தெரிவிக்கின்றார்கள். இருளும் மருளுமே வடிவெடுத்த இவர்களது கட்டுரைகளை நேரிய நெறியிலே களைந்தொழிக்கவேணுமென்று பல பெரியார்கள் அடியேனுக்குப் பலகாலும் தெரிவிப்பதுண்டு. ஆனாலும் இந்த மறுப்புத் துறையிலே இறங்க எனது மனம் இசையவில்லை; ஏனெனின், ஆழ்வார்கள் எக்காலத்தில் அவதரித்தவர்களாயினுமாகுக; பல்லாயிரம் வருடங்கட்கு முற்பட்டவர்கள் என்கிற காரணத்தினாலேயே ஒரு ஏற்றமும், சில நூற்றாண்டுகட்குள்ளாகவே தோன்றியவர்கள் என்கிற காரணத்தினால் ஒரு தாழ்வும் எண்ணுவாரில்லை. "புராணமித்யேவ ந ஸாது ஸர்வம் நசாபி காவ்யம் நவமித்யவத்யம்" என்றார் காளிதாஸ மஹாகவி. உப்புக் கிணறானதொன்று நாலாயிரமாண்டுகட்கு முற்பட்டதெனினும் அதில் தண்ணீருந்தார்கள்; அமுதக் கிணறு இன்று நேற்றே தோன்றிற்றெனினும் அதனை ஆதரிக்கப் பின்வாங்குவார் ஒருவருமிருக்ககில்லார். வீடு பற்றுக்களுக்குக் குற்றமும் நற்றமும் காரணமேயல்லது பழமையும் புதுமையும் காரணமல்லவென்பது விவேகிகளுக்குத் தெரிவரிதன்று.

42. ஆனால் சிலர் சொல்லக்கூடும்; நூதனமாக அமைக்கப்படுகின்ற ஆலயங்களுக்குப் பெருமையில்லாமையும் புராதனங்களென்று புகலப்படுகின்ற ஆலயங்களுக்கே பெருமையிருப்பதும் காண்கின்றோம்; அதுபோல, திவ்வியப் பிரபந்தங்கட்கும் புராதனமென்கிற காரணத்தினால் பெருமையுண்டாகவேணுமென்று கருதியே சிலர் ஆழ்வார்களின் காலத்தை வெகு பண்டைக்காலமென்று காட்டப் புகுந்தார்கள்—என்று. இந்த வாதமே பெரும்பாலும் நமது செவியில் விழுகின்றது. இதற்கு நாம் கூறும் விடையை நடு நிலைமையிலுள்ளவர்கள் குறிக்கொள்ளவேணும். ஆழ்வார்களுக்கும் அவர்களது திவ்வியப் பிரபந்தங்களுக்கும் பெருமை ஏற்பட்டிராத காலம் யாருடைய புத்திக்காவது புலப்படுகின்றதா? என்று பார்க்கவேணும். வடமொழிப் புலவர்களாக மிக்க பிரசித்தி பெற்றிருந்த ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் ஸ்ரீராமாநுஜர் முதலான பூருவாசாரியர்கள் தாங்கள் உபநிஷத்துக்கள் முதலியவற்றால் போதுபோக்குவதை விட்டிட்டு திவ்வியப் பிரபந்தங்களையே ஓவாத ஊணாகக் கொண்டிருந்தார்களென்பது ஒருவராலும் அபலாபம் செய்ய முடியாத விஷயம். உடையவர் காலம் இற்றைக்குச் சற்று ஏறக்குறைய ஆயிரமாண்டு ஆகிறது. அப்போது எழுந்தருளியிருந்தவரான ஸ்ரீ பட்டர் [கூரத்தாழ்வான் திருக்குமாரர்] தாம் அருளிச்செய்த ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் முதல் சதகத்தில்,

"பராங்குசாத்யாஃ ப்ரதமே புமாம்ஸஃ நிஷேதிவாம்ஸோ த்ச மாம் தயேரந்" என்றருளியுள்ளார். இதனால், அக்காலத்திலேயே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் திருவரங்கம் பெரிய கோயிலில் விக்ரஹப் பிரதிஷ்டை நடந்து முடிந்திருக்கிறதென்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்றது. இப்போது ஒவ்வொரு ஆழ்வார்க்கும் தனித்தனி ஆலயம் காணப்படுவது போலன்றி அக்காலத்தில் பத்து ஆழ்வார்களும் ஓரிடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தார்களென்பது மேலெடுத்துக்காட்டிய சுலோகத்தினால் நன்கு விளங்குகின்றது. இந்த ஸந்நிவேசம் ஸ்ரீரங்கத்தில் நாளைக்கும் சந்திரபுஷ்கரிணியருகில் ப்ரத்யக்ஷ ஸித்தம். இதனால், ஆயிரமாண்டுகட்கு முந்தியே ஆழ்வார்கட்கு விக்ரஹ ப்ரதிஷ்டை நடைபெற்றிருக்கின்றமை விளங்கிற்று.

43. இனி ஆழ்வார்களுடைய திவ்வியப் பிரபந்தங்களுக்குத் தேவாலயங்களில் பாராயணம் எக்காலத்தில் ஏற்பட்டதென்று பார்ப்போம். கம்பனென்னும் கவிசக்ரவர்த்தியானவர் தாம் இயற்றிய சடகோபரந்தாதியில் "அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்த வரும்பொருளைச் செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும், தந்தம் விழாவுமழகுமென்னும் தமிழார்கவியின் பந்தம் விழாவோழுகுங் குருகூர்வந்த பண்ணவனே." என்று ஒரு பாசுரம் பாடியுள்ளார். ஆழ்வாரருளிச்செயல் அவதரியாதிருந்தால் ஸ்ரீ வைஷ்ணவர்களின் கதி என்னாகுமென்றும், ஆலயங்களில் நடைபெறும் உத்ஸவங்களின் கதிதான் என்னாகுமென்றும் உருகிப் பேசுகின்றாரிதில். கம்பர் தாம் கண்கூடாகக் கண்ட விஷயத்தை யன்றோ வரைந்துள்ளார். அக்காலத்து ஸ்ரீவைஷ்ணவ பிராமணர்கள் ஆழ்வாரருளிச் செயல்கொண்டே பெருமை பெற்றிருந்ததும், தேவாலய உத்ஸவங்கள் தமிழ்வேத பாராயணத்தினாலேயே பெருமை பொலிய நின்றதுமாகிய உண்மைகளை நிஷ்பக்ஷபாதமாகக் கம்பர் காட்டியிருக்கின்றாராதலால், முற்காலத்திலே ஆழ்வார்களுடைய பெருமை உலகிற் பொலிந்து வந்ததென்பது தமிழுலகில் மறுக்கத்தகாத விஷயமாகும். திவ்வியப் பிரபந்தங்கட்குத் தமிழ்வேதமென்னும் சிறப்புப் பெயர் கம்பர் காலத்திலேயே நிகழ்ந்து வந்ததென்றால், அக்கம்பருக்குப் பிற்பட்டவர்களான சில ஸ்ரீவைஷ்ணவாசாரியர்கள் ஆழ்வார்கட்கும் அருளிச்செயல்கட்கும் ஒரு பெருமையை ஸாதிக்கவேண்டி, புதிய காலத்தைப் பழைய காலமாக்கி யெழுதி வைத்திட்டார்கள் என்று வாதிப்பது சிறிதேனும் பொருத்தமுடைத்தோ?

44. ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஸ்ரீமந்நாதமுனிகட்கு முன் ஒரு ஆசாரியரும் வீறுபெற்று விளங்கினாராக நமக்குப் புலப்படவில்லை. நம்மாழ்வார்க்கும் நாதமுனிகட்கும் இடையே வெகுகாலம் சென்றிருக்கின்றதென்பது ஸ்ரீ வைஷ்ணவர்களின் கொள்கை. ஸ்ரீமத் வேதாந்த தேசிகரும் தாம் இயற்றியருளின குருபரம்பராஸாரமென்னும் ரஹஸ்ய நூலில் நாதமுனிகள் நம்மாழ்வாரை யோக தசையிலே ஸாக்ஷாத்கரித்து அருள் பெற்றதாகவே அருளிச்செய்துள்ளார். இதெல்லாம் பொய்யாக எழுதிவைத்தவை என்பது நவீன ஆராய்ச்சியாளர்களின் ஆதாரமற்ற வாதம். திவ்வியப் பிரபந்தங்களில் காணும் சில அரசர்களின் செய்திகளைப் பிடித்துக்கொண்டு, சாசனங்களின் உதவியையுங் கொண்டு தங்களுடைய ஆராய்ச்சியை ஆதாரமுடையதாகச் செய்யப் பார்க்கின்றனர், புதிய ஆராய்ச்சியாளர்கள். ஆதியந்த மற்றதாகப் பெரும்பாலோரால் இசையப்பட்டுள்ள வடமொழி வேதத்திலும் காண்கின்ற பல கதைகளைப் பற்றிக்கொண்டால் அந்த வேதமும் கி. பி. இத்தனையாவது நூற்றாண்டில் தோன்றியது என்று வாதிக்க இடமேற்படும் போலும். 'நமக்குத் தந்தை தாயர் இன்னார்' என்பதை ருஜுவான பிரமாணத்தினால் திண்ணமாகக் கண்டறிந்து நிஷ்கர்ஷிக்கமாட்டாதவர்கள் பலவகைகளாலும்

அதீந்திரியமான விஷயங்களை அநுமானங்களாலும் குயுக்திகளாலும் நிர்ணயிக்கப் புகுவது ஸாஹஸமான காரியமாகும். இவர்கள் காட்டுகிற சாசனங்கள் முதலியன எவ்வளவுதூரம் நம்பத்தகுந்தவை யென்பதும் அவற்றில் இவர்களுடைய மருள்மயக்கங்கள் எப்படிப்பட்டவை யென்பதும் இவர்கள் தாங்களே ஒருவரையொருவர் மறுத்து எழுதும் கட்டுரைகளினால் நன்கு அறியத்தக்கன. அதையும் சிறிது ஈண்டு விவரிக்கின்றோம்.

45. "தஞ்சாவூர்—கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெள்ளிவிழா நினைவு மலர்" என்று ஸ்ரீமான். த. வே. உமாமகேசுவரனவர்கள் (சங்கத் தலைவர்.) ஒரு புத்தகம் தயாரித்தார். அதில் திரு. கே. ஜி. சேஷையர், B.A., B.L., அவர்கள் (முன் உயர்நீதிமன்ற நீதிபதி. திருவனந்தபுரம்) எழுதிய கட்டுரையொன்று நம்மாழ்வார் காலவாராய்ச்சி. இதில் இப்பெரியார், ஸ்ரீமான் கோபிநாதராயர் என்பாரொருவர் 'ஸ்ரீவைஷ்ணவரின் சரித்திரம்' என்று ஒரு நூல் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதாகவும், அதில் ஆனைமலைச் சிலாசாசனமொன்றை ஆதாரமாகக்கொண்டு நம்மாழ்வார் கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தனராகக் காட்டப்பட்டிருப்பதாகவும் கூறி, அதற்கு மறுப்பு எழுதி வருகையில் அந்த கோபிநாதராயரவர்கள் சிலாசாசனத்திலுள்ள வாசகங்களின் பொருளை உள்ளபடி உணரகில்லாது மருண்டு தவறாக எழுதிவிட்டாரென்று நிரூபணம் செய்திருக்கின்றார். *மயர்வற மதிநலமருளப் பெற்றவராகத் தம்மை நினைத்துக்கொண்டு "நம்மாழ்வார் காலம் கி. பி. ஆறாவது நூற்றாண்டின் முற்பகுதி யென்று கொள்ளுதல் தகும்" என்று நிகமனஞ் செய்கிறார் அப்பெரியார். திருவாளர் சிவஞானமூர்த்தியார் என்கிற மற்றொரு பெரியார் அந்த சேஷையரவர்களது கட்டுரையையும் மறுத்து நம்மாழ்வார் காலத்தை இன்னும் இரண்டு மூன்று நூற்றாண்டுகட்கு முன்னே தள்ளலாம் என்றெழுதுகிறார். "முள்ளைக்கொண்டே முள்ளைக்களைவது" என்னும் பழமொழியும், வத்ஸாஸுரனைக்கொண்டு கபித்தாஸுரனை மோதி இருவரையும் தொலைத்த கண்ணபிரானது சரிதையும் நமக்கு நினைவுக்கு வருகின்றன.

46. இருள்துயக்கு மயக்கு மறப்பென்கிறவற்றுக்கெல்லாம் கொள்கலமாகிய நம் போலியர் தகர்க்குமளவிலே நிற்பதன்று உண்மைப்பொருள். ஆயினும் இவர்கள் சித்தாந்தம் செய்கிறபடியே ஆழ்வார்கள் மிகவும் பிற்காலத்தவர்களென்றே வைத்துக் கொள்வோம். கி. பி. ஆறாவது நூற்றாண்டிலிருந்தவர் நம்மாழ்வார் என்கிறார்கள். பதினாறாவது நூற்றாண்டிலென்றும் வைத்துக்கொள்வோம். நிகழும் நூற்றாண்டில் என்றும் வைத்துக்கொள்வோம். அருமருந்தன்ன திவ்வியப் பிரபந்தங்கள் "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றபடி அநுபவரஸிகர்களுக்குத் தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுதுமாக அமைந்திருக்கின்றமை அபலபிக்க முடியாத விஷயம். பதினாயிரமாண்டுகட்கு முற்பட்டவை யென்று வேறு சில நூற்கள் கிடைத்தாலும் அவற்றை ஒரு பொருளாக மதிப்பாரில்லை.

47. திருவாய்மொழியின் ஈற்றுப் பாசுரத்தின் வியாக்கியானத்தாலே (ஈடு முப்பத்தாறாயிரப்படியில்) நம்பிள்ளை அருளியுள்ள ஒரு அற்புதமான ஸ்ரீஸூக்தி காண்மின்; "ஆழ்வார்க்குப்பின்பு நூறாயிரம் கவிகள் போருமுண்டாய்த்து; அவர்கள் கவிகளோடு கடலோசையோடு வாசியற்று அவற்றைவிட்டு இவற்றைப்பற்றித் துவளுகைக்கடி இவருடைய பக்தியபிநிவேசம் வழிந்து புறப்பட்ட சொல்லாகையிறே." என்கிற இந்த ஸ்ரீஸூக்திகள் விலையுயர்ந்தவை. இங்ஙனமாக நம்பூருவாசாரியர்கள் விசேஷித்து ஈடுபட்டிருத்தற்கு 'இலக்கான

திவ்யப்பிரபந்தங்கள் உபய விபூதிக்கும் பரமபோக்யமாக அமைந்திருக்குமழகு வேறு எந்த நூலுக்கும் அமையமாட்டாதது. இப்படிப்பட்ட திவ்யப் பிரபந்தங்களும் இவற்றுக்கு வக்தாக்களான ஆழ்வார்களும் என்றைக்கு அவதரித்தாலென்ன?

48. ஆழ்வார்களுடைய அவதாரம் ஏற்கெனவே மஹர்ஷிகளாலும் புராணங்களிலே காட்டப்பட்டிரா நின்றது. வடமொழிப் புராணங்களில் ஸ்ரீபாகவதமென்பது மிகவும் ப்ரஸித்தமாகவும் பெருமை பெற்றதாகவும் விளங்குகின்றது. அதில் பதினோராவது ஸ்கந்தத்தில் ஐந்தாவது அத்தியாயத்தில் 38, 39, ஆம் ச்லோகங்கள் ஸ்மார்த்தர் மாத்வர் வைஷ்ணவர் சைவர் என்னும் வாசியின்றி ஸகல ஜனங்களாலும் நிர்விவாதமாகப் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றன; அந்த ச்லோகங்களாவன :—

"கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணாः, க்வசித்க்வசித் மஹாபாகாத்ரமிடேஷு சபூரிசः,
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ, காவேரீ ச மஹாபுண்யா ப்ரதீசீ ச மஹாநதீ. ஸாரவர்த்மகா."

என்பனவாம்.

கலியுகத்திலும் ஸ்ரீநாராயணனையே உபாயோபேயமாகக்கொண்ட பரம பக்தர்கள் சிற்சில விடங்களில் அவதரிக்கப்போகிறார்களென்றும், தமிழ்நாடுகளிலே (அதாவது) தாமிரபர்ணி, க்ருதமாலை, பாலாறு, காவேரி முதலிய புண்ணிய நதிகள் பெருகுமிடங்களிலே விசேஷித்து பக்தர்கள் அவதரிக்கப் போகிறார்களென்றும் இந்த ச்லோகங்களில் கூறப்பட்டுள்ளது. மேற்கூறிய புண்ணிய நதிகளின் கரைகளிலே ஆழ்வார்கள் பதின்மர்தாம் அவதரித்துள்ளார்கள் என்பது கையிலங்கு நெல்லிக்கனி போன்றதாகும். இங்ஙனே மஹாமுனிவர்களின் அகக்கண்ணுக்கு இலக்காகி நின்ற பேராசிரியர்கள் எக்காலத்தில் அவதரித்தவர்களானாலும் அவர்களது ஒப்புயர்வற்ற பெருமைக்கும் அவர்களது திவ்ய ஸ்ரீஸூக்திகளின் மஹிமைக்கும் ஒருவராலும் ஒருநாளும் ஒருகுறையும் சொல்லப்போகாதென்பது திண்ணம். ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் மிகச் சிறந்ததோர் வார்த்தையை அருளியுள்ளார். அதாவது, "ததாத்வே நூதநம் ஸர்வம் ஆயத்யாஞ்ச புராதநம்" என்பதாம். எதுவுமே தோன்றும்போது புதிதாயும் நாளடைவில் பழையதாயும் ஆய்விடுமென்பது இதன் கருத்து. இந்த ரீதியிலே நோக்குமவர்கள் காலவிசாரத்தில் சிறிதும் கைவைக்க மாட்டார்கள்.

49. சிலர் எழுதியுள்ளார்கள்—"நம்மாழ்வார் காலத்தில் சைவ வைணவ சம்வாதமில்லை யென்பதற்குத் திருவாய் மொழியே சான்று பகரும்; அக்காலத்தில் வைணவரும் திருநீறிட்டு வந்தார் போலும்; "கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்" (4-5-6) என்றும், "நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும்" (4-4-7) என்றும் நம்மாழ்வார் கூறியிருக்கின்றார்". என்று. நமது திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையுரையை, அல்லது பூருவாசாரியர்களின் வியாக்கியானத்தைச் சிறிதேனும் நோக்கி யிருப்பரேல் இங்ஙனம் எழுதத் துணிந்திரார். எமது தீபிகையுரை வாக்கியங்களை அப்படியே யிங்கெடுத்துக் காட்டுகின்றோம். "[கரியமேனி மிசை வெளிய நீறு சிறிதேயிடும்] இதற்குப் பலவகையாகப் பொருள் பணிப்பர்கள். மேலே * பெரிய கோலத் தடங்கண்ணன் * என்று திருக்கண்களின் ப்ரஸ்தாவமிருக்கையாலே கரியமேனிமிசை என்றது—திருக்கண்களில் கருவிழியினுடைய கறுத்த நிறத்தால் வந்த அழகுக்குமேலே என்றபடி. வெளியநீறு சிறிதேயிடும்—அஞ்சன சூர்ணத்தை மங்கலமாகச் சிறிது அணிந்து கொள்ளுகிற என்றபடி. 'வெளியம்—அஞ்சனம்.' என்று பன்னீராயிரம். வேதாந்த தேசிகன் தாத்பர்ய ரத்நாவளியில் இப்பாசுரத்திற்காக * கர்ப்பூராலேப சோபே* என்று

அருளிச் செய்திருக்கக்காண்கையாலே, சாமளமான திருமேனியிலே பச்சைக்கருப்பூர தூளியை அணிந்து கொள்ளுகிற என்றும் பொருள் கொள்ளலாம். வெளிய என்றது வெள்ளிய என்றபடி. கரி அம்மேனிமிசை வெளிய, நீறு சிறிதேயிடும் என்று கொண்டு, கரி-குவலயாபீட யானையானது, அம்மேனிமிசை-கண்ணபிரானது அந்தத் திருமேனியிலே, வெளிய-சீறிப்பாய்ந்தவளவிலே, சிறிதே-க்ஷணகாலத்திறகுள், நீறு இடும்-அந்த யானையைப் பொடிபடுத்தின, என்றானும் ஒரு தமிழன்."

50. இனி, * நீறு செவ்வேயிடக்காணில் * என்றவிடத்தும் எம்முடைய தீபிகையுரைவாக்கியங்களை யெடுத்துக்காட்டுகின்றோம் ;—"நீறு சேவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும்—திருமாலடியார்களுக்கு பஸ்மதாரணம் சாஸ்த்ர நிஷித்தம் என்னுமிடம் ஆழ்வாரறியாததன்று; நீறு இடுமவர்களை நெடுமாலடியாரென்று பிரதிபத்திபண்ண ப்ரஸக்தியில்லை; அப்படியிருக்க இங்கு அருளிச்செய்வதற்குக் கருத்து என்னென்னில்; இங்கே ஆறுயிரப்படியருளிச்செயல்—'த்ரவ்யம் ஏதேனுமாகிலும் ஊர்த்த்வமாக இடக்காணில் நெடுமாலடியாரென்றோடும்' என்பதாம். இதனை அடியொற்றிய மற்ற வியாக்யானங்களுமுள்ளன. பஸ்மதாரணம் பண்ணினவர்களேயாயினும் அந்த பஸ்மத்தைக் குறுக்கே பூசாதே நெடுக இட்டால் 'ஊர்த்வ புண்ட்ரதாரிகளிவர்கள்' என்று அவ்வளவுக்காக ப்ரதிபத்தி பண்ணுமென்றபடி. ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸச்சரித்ர ரக்ஷையில் ஊர்த்வ புண்ட்ரதாரண விதிப்பகுதியில் * நநு ஸமஸ்தபாகவத ஸார்த்த ஸங்க்ருஹீத....... * என்று தொடங்கி அருளிச்செய்யப்பட்டிருக்கும் விஷயங்களும் குறிக்கொள்ளத் தக்கவை. (அவற்றின் சுருக்கம் வருமாறு;) ஸகல பாகவதர்களாலும் சிரமேற்கொள்ளப்பட்ட தமிழ் வேதமாகிய திருவாய்மொழியில் 'நீறு செவ்வேயிடக் காணில் நெடுமாலடியாரென்றோடும்' என்கிற பாசுரத்தினால் பகவத் பக்தர்களுக்கு பஸ்மதாரணம் லக்ஷணம்போல் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே, இது எப்படி? என்று க்ஷேபித்துக் கொண்டு சில ஸமாதானங்கள் அருளிச்செய்யப்பட்டுள்ளன; கீழே நாம் காட்டிய வகையிலே ஒரு ஸமாதானம். மற்றொரு ஸமாதானமாவது-நீறு என்னுஞ்சொல் பஸ்மத்தையே சொல்லும் என்கிற நியதியில்லை; ஆழ்வார்தாமே 'மாயன்தமரடி நீறு கொண்டு அணிய முயலில்' என்று வேறோரிடத்தில் அருளிச் செய்திருக்கையாலே பாகவதர்களின் திருவடிப் பொடியையும் பொருளாகக் கொள்ளலாமென்பதாம். பஸ்மதாரணம் பண்ணுகிறவர்கள் குறுக்கே பூசக் காண்பதொழிய ஊர்த்த்வமாக இடுவது முண்டோவென்று சிலர் முற்காலத்திலேயே சங்கித்தார்கள்; அதற்குப் பரிஹாரமும் நம்பிள்ளை யருளிச்செய்தார். ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின் :— 'அவர்கள் செவ்வேயிடுவர்களோ வென்னில் அதுவுமன்றிக்கே இதுவுமன்றிக்கே மசகப்ராயராயிருப்பவர்கள் தரிப்பர்களிறே.' (அதாவது) இரண்டுங் கெட்டான் என்று சொல்லப்படுகிற சிலர் பஸ்மத்தையே ஊர்த்வ புண்ட்ரமாகவும் தரிப்பர்கள் என்றபடி.

51. நம்மாழ்வார் தமது திருநெற்றியில் விஷ்ணு பாதாகாரமான திருமண்காப்பையே தாம் அணிந்து கொண்டிருந்தமையைத் திருவாய்மொழியிலே * நெற்றியுள் நின்று என்னையாளும் நிறை மலர்ப்பாதங்கள் சூடி * என்கிற பாசுரத்தினால் ஐயந்திரிபறக் காட்டி யிருக்க, அபார்த்தங்களுக்கு அவகாச லேசமுமில்லை யென்றுணர்க. சிவபிரான் முதலான தெய்வங்களுங்கூட விஷ்ணு பாதாகாரமான திவ்யோர்த்வ புண்ட்ரத்தை அணிந்து கொண்டிருந்ததாக நம்மாழ்வார் அப்பாசுரத்தில் காட்டியிருக்கின்றாரென்பதையும் அறிவுடையார் கண்டு தெளிக.

52. 'சாப்பிடுதல்' என்னுஞ் சொல்லை நாம் புராதன நூல்களில் காண நேராதென்றே நினைக்கிறோம். இக்காலத்தவர்கள் எழுதும் சில சிறு சுவடிகளிலும் வியாஸங்களி

னுமே இச்சொல் பெரும்பாலும் காணப்பட்டு வருகின்றது. இந்தச் சொல் எவ்விதமாக உண்டாயிற்றென்று கண்டு பிடிக்க நாம் சிறிது முயலவேண்டாவோ? முயன்றால், 'சாப்பிடுதல்' அல்ல; 'சாப்படுதல்' தான்—என்று விவேகிகளுக்குப் புலனாகும். பழைய குருபரம்பராப்ரபாவம் முதலிய நூல்களில், புஜித்து என்று சொல்ல வேண்டு மிடங்களில் 'ப்ரஸாதப்பட்டு' என்று அடிக்கடி எழுதப்பட்டிருப்பதை யாவரும் காணலாம். 'ப்ரஸாதப்படுதல்' என்னுஞ் சொல்லில் (ப்ர) என்கிற உபஸர்க்கம் விடுபட்டது. அதன் பிறகு 'ஸாதப்படுதல்' என்பது 'ஸாப்படுதல்' என மருவிற்று. தமிழில் ஸகாரம் கிடையாதாதலால் சாப்படுதல் ஆயிற்று. ஆகவே, சாப்படுகிறான், சாப்படுதல் என்று சொல்லவும் எழுதவும் தகுதியுண்டேயல்லது 'பிடு' என வருதற்கு ப்ரஸக்தியேயில்லை. கூப்பாடு, கூப்பீடு என இரண்டு வகையான சொல் வடிவங் களு முண்டாதலால் கூப்படுதல், கூப்பிடுதல் என்பன பொருந்தும். 'சாப்பாடு' உண்டேயல்லது 'சாப்பீடு' கிடையாதாதலால் சாப்பிடுதலுக்கு ப்ரஸக்தி கிடையாது.

53. ஹவ்யகவ்யவைதிக கருமங்களை நடத்திவைக்கும் புரோஹிதர்களை நமது நாட்டில் உபாத்யாயர்களென வழங்குவதுண்டு. இவர்கள் பெரும்பாலும் ஸம்ஸ்க்ருத வ்யுத்பத்தியில்லாதவர்களாயும் வேதத்தை ஆநுபூர்வியாக ஓதாதவர்களாயுமிருப்பர்கள். அதனால் அவர்கள் உச்சரிக்கும் மந்த்ரங்களிலும் ப்ரயோக வாக்யங்களிலும் பலவகையான பிறழ்வுகள் இடம் பெறுகின்றன. காவ்ய நாடகங்கள் வாசித்து வ்யுத்பத்தி பெற்றவர்களுங்கூட கவனிப்பு இல்லாமலே பல பிழைகளைக் கையாண்டு வரக் காண்கிறோம். உதாஹரணமாக இரண்டொரு விஷயங்களை இங்கெடுத்துக்காட்டுவோம். "அசேஷே ஹே பரிஷத்!" என்று தொடங்குகிற வாக்கியத்தை முடிக்கும்போது எவ்விதமாகச் சொல்லி முடிக்கிறார்களென்பதை விவேகிகள் பராமர்சிக்க வேண்டும். [யோக்யதாஸித்திமநுக்ரஹாண] என்றே எந்த ஊரிலும் எந்த உபாத்தியாயரும் சொல்லிவரக் காண்கிறோம். அநுக்ரஹம் என்று சொல் வடிவமிருப்பதால் 'அநுக்ரஹாண' என்றுதான் க்ரியாபதமான சொல் வடிவம் தேறும் என்று நினைத்துவிடுகிறார்கள். अनुगृह्णन्तु (அநுக்ர்ஹ்ணந்து) என்பதுபோல अनुगृहाण (அநுக்ர்ஹாண) என்றுதான் சொல்ல வேண்டுமென்பதை ஒருவரும் விமர்சிப்பாரில்லை. गकार-த்தின் மேல் ऋकार மேயொழிய रेफ மில்லையென்பதை இனியாகிலும் அவரவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேணும். இது மிகச் சிறு விஷயமென்று விட்டுவிடக்கூடாது; அபசப்தத்தில் சிறுமை பெருமையுண்டோ?

54. மற்றொன்றுங் கேண்மின்; ச்ராத்த ப்ரயோகத்தில் "இதம் க்ஷேத்ரம் கயாக்ஷேத்ர ஸத்ருசம் பூத்வா" என்று சொல்லுவது எங்குமுள்ளது. இதில் [பூத்வா] என்பது எங்கே அந்வயிக்கிறதென்பதைப் பண்டிதர்கள் பராமர்சிக்கவேணும். இப்படிப்பட்ட அவ்யயங்கள் க்ரியா பதத்திலேயே நியமேந அந்வயிக்கவேண்டியவைகள். ஸமாநகர்த்ருகத்வமும் இருக்க வேண்டும். ப்ரக்ருத ஸ்தலத்தில் இந்த நியமங்களுக்குச் சிறிதும் உபபத்தி இல்லையாகிறது. ரகுவம்சத்தில் நான்காவது ஸர்க்கத்தில் இரண்டாவது ச்லோகமாகிய "திலீபாநந்தரம் ராஜ்யே தம் நிசம்ய ப்ரதிஷ்டிதம், பூர்வம் ப்ரதூமிதோ ராஜ்ஞாம் ஹ்ருதயே அக்நிரிவோத்திதஃ." என்கிற ச்லோகத்தில் (நிசம்ய) என்கிற அவ்யயம் எங்கே அந்வயிக்கிறது? அங்கே ஸமாநகர்த்ருகத்வமில்லையே! என்று சிலர் பிரதிவாதம் செய்யக்கூடும்; அவர்கள் அவ்விடத்தில் மல்லிநாதருடைய வியாக்கியானத்தை ஆழ்ந்து நோக்குக. "கயாக்ஷேத்ரஸத்ருசம் பூத்வா" என்கிற வாக்கியம் அநாதிகாலமாக அனைத்திடங்களிலும் அவிகீதமாக ப்ரசாரத்தில் வந்திருக்கும்போது இதைப் பிசகென்று சொல்லலாமோ? என்று ஆக்ஷேபிக்கக்கூடியவர்களும் பலர் இருப்பர்கள்.

"புராணமித்யேவ ந ஸாது ஸர்வம்" என்கிற மஹாகவி ஸுபாஷிதத்தை மனத்திற்கொண்டு, உபபத்தி அநுபபத்திகளை மாத்திரம் வித்வான்கள் விமர்சிப்பது நன்று. "இதம் க்ஷேத்ரம் கயாக்ஷேத்ரஸத்ருசம் பூயாத்" என்று தனி வாக்கியமாகவே பல பெரியார்கள் சொல்லி வருகிறார்கள்.

55. நமது பாரத பூமியில் பலவிதமான மதங்கள் இருக்கின்றன. அவற்றுள், துறவியானவர்களே மோக்ஷமடையக்கூடுமென்றும், க்ருஹஸ்தர்கள் மோக்ஷமடைய வழியில்லையென்றும் ஒரு மதமுண்டு. க்ருஹஸ்தர்களும் மோக்ஷமடையலாம்; ஸம்யாஸிகளும் மோக்ஷமடையலாம்-என்பது ஒரு மதம். க்ருஹஸ்தர்களா யிருந்துகொண்டே மோக்ஷமடைவது மேலா? ஸம்ந்யாஸாச்ரமத்தில் புகுந்து மோக்ஷமடைவது மேலா? என்று ஒரு விசாரம் வந்தது; அதைப்பற்றிச் சொல்லுகிறோம். சென்னைத் துறைமுகத்திலிருந்து ஒரு நாள் இரண்டு கப்பல்கள் பல சரக்குகளையும் யாத்திரிகளையும் ஏற்றிக்கொண்டு த்வீபாந்தரம் செல்லப் புறப்பட்டன. ஒன்றிரண்டு நாள் யாதொரு விசேஷமான ஸம்பவமும் உண்டாகவில்லை; கடல் சாந்தமாக இருந்தது. ஆகாயம் நிர்மலமாயிருந்தது. காற்றும் அநுகூலமாக வீசிற்று. எல்லாம் சுகமாகவேயிருந்தது. மூன்றாவது நாள் புயல் காற்றடிக்க ஆரம்பித்தது. அது மேன்மேலும் விருத்தியடைந்துகொண்டே போயிற்று. ஆகாயம் கறுத்து இருண்டு எங்கும் மூடிக் கொண்டது. கடலின் கொந்தளிப்புக்கு அளவேயில்லை. பெருப்பெருத்த அலைகள் மலை போல் எழுந்தன. நிலைமை பயங்கரமாயிருந்தது. கப்பல்கள் ஒரு ஸமயம் பாதாளத்தை நோக்கிப் போகவும் மற்றொரு ஸமயம் வானத்தைத் தீண்டவும் ஆரம்பித்தன. யாத்திரிகள் எல்லாரும் அஞ்சி நடுங்கினர். எந்த க்ஷணமும் கப்பல் முழுகிப்போகலாமென்று அவர்கள் நினைத்தனர். தம் தம் இஷ்ட தேவதைகளைத் துதிக்க ஆரம்பித்தனர். எல்லோரும் பிராணனுக்கு மன்றாடிக்கொண்டிருந்தார்கள். கப்பலின் பிரதான அதிகாரியான காப்டனின் நிலைமை மிகவும் ஸங்கடமானதாயிருந்தது. இன்னதுதான் செய்யலாமென்று அவனுக்குத் தோன்றவில்லை. பெரிய ஆபத்தில் எல்லார்க்கும் புத்தி தடுமாறுதல் ஸஹஜமேயாம். எப்படியாவது கப்பலைக் காப்பாற்றினால் போதுமெனக் காப்டனின் நினைவு. என்ன உபாயம் செய்யலாமென்று ஆலோசனை செய்ய ஆரம்பித்தார்கள். ஒரு கப்பலின் காப்டனுக்கு ஒரு ஆலோசனை தோன்றியது. கப்பலிலுள்ள சரக்குகளை யெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு யாத்திரிகளையும் தோணிகளில் இறக்கிவிட்டால் கப்பலின் பாரம் குறைந்து போய்விடும்; அப்போது கப்பல் காப்பாற்றப்பட்டாலும் படலாம்- என்பது அவனுடைய நினைவாயிருந்தது. இவ்வண்ணம் நிச்சயம் செய்துகொண்டு அப்படியே காரியமும் செய்ய ஆரம்பித்துவிட்டான். கப்பலிலுள்ள யாத்திரிகளில் எவ்வளவு பேர் தோணிகளில் ஏறிக்கொள்ள முடியுமோ அவ்வளவு பேரையும் தோணிகளில் இறக்கிவிட்டான். அதன் பிறகு கப்பலிலுள்ள ஸாமான்களை யெல்லாம் ஒவ்வொன்றாகக் கடலில் எறிந்தான். பல விலையுயர்ந்த ஸாமான்களையும் போட்டுவிட நேர்ந்தது. கப்பலுக்கே ஆபத்து வந்திருக்கும்போது ஸாமான்களைப்பற்றி அவன் கவலைப்பட ப்ரஸக்தியேது? மற்றொரு கப்பலின் காப்டனோவென்றால், கப்பல் முழுகிப்போவதாயிருந்தால் என்ன? ஸாமான்களைத் தனியாக எடுத்தெறிவதால் யாதொரு லாபமும் இல்லை. இந்த மஹத்தான ஆபத்திலிருந்து கடவுள் தப்பவைத்தால்தானுண்டு. அவர் பேரில் பாரத்தைப்போட்டு நாம் நம்முடைய கடமையைச் செய்துவருவோம்; யாத்திரிகளைப் பெரிய கப்பலிலிருந்து சிறிய தோணிகளில் இறக்குவதும் நியாயமன்று—என்று இவ்விதம் நிச்சயித்துக்கொண்டு ஸாத்யமான உபாயங்களைச் செய்து வந்தான்.

56. மறுநாள் புயல்காற்று அடங்கிற்று. கடலின் கொந்தளிப்பும் நின்றது. வானமும் நிர்மலமாயிற்று. இரண்டாவது கப்பலில் காப்டன் தன்னுடைய கப்பல் எல்லாச் சாமான்களோடும் யாத்திரிகளோடும் ஆபத்திலிருந்து தப்பினதைக்கண்டு பேரானந்தமடைந்தான். கடவுளைப் புகழ்ந்தான். மறுநாள் துறைமுகத்திலே கப்பல் சேர்ந்தபோது பெருந்திரளான ஜனங்கள் பேராரவாரத்துடன் கப்பலை எதிர்கொண்டார்கள். காப்டனின் தைரியத்தையும் புகழ்ந்தார்கள். அவனுக்குப் பெருத்த வெகுமானம் செய்வதாகவும் நிச்சயித்தார்கள். மஹாஜனங்களின் ஸன்மானம் ஒருபுறமிருக்க, கப்பலின் சொந்தக்காரர்களும் காப்டனை விசேஷமாகக் கௌரவித்துப் பெருத்த ஸன்மானம் அவனுக்களித்தார்கள். இஃது இங்ஙனமிருக்க, கப்பலிலிருந்து ஸாமான்களைக் கடலில் வாரியெறிந்த முதல் கப்பலின் காப்டன் நிலைமை என்னவென்பதைக் கேண்மின். கப்பலை அவனும் காப்பாற்றினான் என்பது வாஸ்தவமே. ஆனால் கப்பலிலிருந்த விலையுயர்ந்த ஸாமான்களை யெல்லாமிழந்து, யாத்திரிகளையும் கப்பலிலிருந்து சிறு ஓடங்களில் இறக்கிவிட்ட பின்பு மிகுந்ததென்ன? அச்சிறு ஓடங்களில் இறக்கப்பட்ட யாத்திரிகளும் க்ரமமாகத் துறைமுகம் வந்து சேரவில்லை. மஹத்தான ஆபத்துக்கு ஆளானார்கள். சிலர் போனவிடமே ஏற்படவில்லை. சிலரோவெனில், பல தினங்களுக்குப்பின்பு மிக்க கஷ்டங்களுடன் பலவிடங்களில் இறங்கினார்கள். உடுத்த துணி தவிர எல்லாம் இழந்தார்கள். கப்பலின் காப்டனுக்கு உண்டான மனவருத்தத்திற்கும் லஜ்ஜைக்கும் அளவேயில்லை. அவனும் தனது கப்பலை யாருமறியாமல் இராக்காலத்தில் துறைமுகம்கொண்டு வந்தான். எதிர்கொள்வார் ஆருமில்லை. அவன் தன்னுடைய பயங்கொள்ளித் தனத்திற்காகத் தன்னைத்தானே இகழும்போது வேறு மனிதர்கள் அவனைக் கொண்டாடுவார்களா? அவனைக் கௌரவிக்கவும் சன்மான மளிக்கவும் யார் முன் வருவார்? எல்லாச் சாமான்களையும் இழந்து கப்பலை மாத்திரம் காப்பாற்றுவதில் என்ன ஸாமர்த்தியம்? கப்பலின் சொந்தக்காரருக்குத்தான் அவனிடத்தில் அபிமான முண்டாக என்ன காரணமிருக்கிறது?

57. இந்த த்ருஷ்டாந்தத்தால் நாம் தெரிந்துகொண்ட தென்ன? வீடு வாசலை விட்டு மனைவி மக்களை விட்டு பந்துபாந்தவர்களையும் விட்டு ஸம்ந்யாஸியாய்க் காடேறப் புகுந்து தனியே நின்று, ஸம்ஸாரமாகிற பெருங்கடலில் முழுக விருக்கும் தன் ஆத்மாவைக் காப்பாற்றி ஒருவன் மோக்ஷ பதவியை அடைந்தால் அதில் ஆச்சரியமென்ன? அவனால் யாருக்கு என்ன லாபம்? க்ருஹஸ்தாச்ரமத்திலேயே யிருந்து எல்லோரையும் காப்பாற்றி நிர்ப்பயனாய் நின்று தன்னைப் பாழுங் கடலில் மூழ்கிப் போகாமல் காத்து மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை ஒருவன் பெறுவானேயானால் அதுவே விசேஷம். இந்த ஆத்மாவாகிற கப்பலுக்கு ஸ்வாமியான கடவுள் அவனை விசேஷமாகக் கொண்டாடுவார். அடுத்து நின்றவர்களும் அவனைப் போற்றுவார்கள். பேராபத்தில் புத்தி தடுமாறாமல் தைரியமாய் நின்ற கப்பலின் காப்டனைப்போல், க்ருஹஸ்தனான முமுக்ஷுவும் தைரியமாய் நின்று தன்னைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. பேராபத்தில் புத்தி கலங்காமல் தைரியமாய்ப் போராடவேண்டியிருக்கிறது. ஆனால் அதுவே விசேஷமாம். மோக்ஷமடைய க்ருஹஸ்தர்களுக்கும் ஸம்ந்யாஸிகளுக்கும் ஸமமான அதிகாரமேயுள்ளது. க்ருஹஸ்தாச்ரமியை யண்டியே மற்ற ஆச்ரமிகள் ஜீவிக்கவேண்டியிருக்கிறது. க்ருஹஸ்தாச்ரமி தான் மற்ற ஆச்ரமிகளை அந்நபாநாதிகள் கொடுத்துப் போஷிக்க வுரியவன். இப்படி மற்ற ஆச்ரமிகளையும் போஷித்து ரக்ஷித்துக் கொண்டு தானும் நற்கதியடைய க்ருஹஸ்தனுக்கு

யோக்யதையுண்டு. ஆகவே, மோக்ஷமடைவதற்கு ஸம்ந்யாஸியாக வேண்டிய அவசியமில்லை யென்பது அறியத்தக்கது.

58. திருவாய்மொழி அஞ்சாம்பத்தில் பிறந்தவாறும் என்கிற பத்தாந் திருவாய்மொழியின் ஆறுவது பாசுரத்தின் ஈட்டிலே * கிடந்தவாறும் என்ற விடத்து— "கருணை யென்னுங் கடல் கருங்கடலை நோக்கிக் கிடந்ததே என்றானிறே" என்கிற வாக்கியம் எல்லாப் பதிப்புகளிலும் வாசியின்றிக்கே காணப்படுகிறது. இதில் "என்றானிறே" என்றிருப்பதனால் அதற்கு முந்தின வாக்கியம் ஒரு தமிழ் நூலிலிருந்து ஸம்வாத ப்ரமாணமாக எடுத்தாளப்பட்ட தென்பது ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. இது கம்பன் கவியென்று அரும்பதவுரைகாரர் எழுதுகின்றார். "கருணை யென்னுங் கடல் கருங்கடலை நோக்கிக் கிடந்ததே" என்று இவ்வண்ணமாகக் கம்பருடைய கவி எங்கும் காணப்படவில்லை. மிகப் பெரும் புலவர்களை விசாரித்தும் விளங்கவில்லை. தமிழ்ப் பண்டிதரான (கீர்த்தி மூர்த்தியான) திருவல்லிக்கேணி, சே. க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமியின் பகவத் விஷயப்பதிப்பிலும் மேலே காட்டின வண்ணமாகவே உதாஹரிக்கப்பட்டிருக்கக் காண்கையாலே, 'அப்படித்தான் கம்பர் எங்கேனும் பாடியிருக்கக் கூடும்' என்றே பலரும் நினைக்கிறார்கள். உண்மை யாதெனில்; கம்ப ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் வருணனை வேண்டுகோட் படலத்தில் ஐந்தாவது செய்யுள் ;—

"தருண மங்கையை மீட்பதோர் நெறிதருகென்னும்
பொருணயந்து நன்னூல் நெறியடுக்கிய புல்லில்
கருணையங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி
வருண மந்திரம் விதிமுறை யெண்ணினன் வணங்கி." என்பது.

இதில் மூன்று மடியையே நம்பிள்ளை யெடுத்து உபந்யஸித்தருளியுள்ளார் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆகவே, "கருணை என்னுங் கடல் கருங்கடலை நோக்கிக் கிடந்ததே என்றானிறே" என்கிற ஸ்தானத்தில், "கருணையங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி என்றானிறே" என்று திருத்திக் கொள்ளவேணும். தேடிப் பார்த்த வரையில் ஓலை ஸ்ரீகோசங்களிலும் தவறான பாடமே காணப்படுவதால் இப்பிழை எப்போது புகுந்ததென்று கண்டுபிடிக்க முடியாமலிருக்கிறது. இவ்வண்ணமாகப் பல பிழைகள் ஊடேயூடே புகுந்துள்ளனவாதலால் ப்ராமாணிகர்கள் ஆழ்ந்து ஆராய்வது நலம். கம்பருடைய செய்யுளை அப்படியே உதாஹரிப்பது நம்பிள்ளைக்கு விவக்ஷிதமன்று என்றும், அர்த்தாநுவாதமாகச் செய்தவத்தனையே என்றும் சொல்லி விடலாமென்று சில பெரியார் திருவுள்ளம் பற்றவுங்கூடும். அப்படியானால், அந்த வாக்கியத்திற்கு மூலமான செய்யுளை நாம் எடுத்துக் காட்டினதாகக் கொள்வது நலம்.

59. ஸம்ஸ்க்ருத பதங்களை உலக வழக்கில் பெரும்பாலும் கொண்டிருக்கிறார்கள். அவ்வழக்கில் பலபல சப்தங்கள் அபசப்தங்களாகவும் இருப்பதுண்டு. ஸ்தூலத்ருஷ்டியில் அபசப்தங்கள் போல் தோன்றி ஸூக்ஷ்மத்ருஷ்டியில் ஸுசப்தங்களாயிருப்பவைகளும் பலவுண்டு. ஒரு சப்தத்தைப்பற்றி முக்கியமாக இப்போது விஜ்ஞாபிக்கிறேன். असर्वज्ञदुर्ज्ञेयम् என்று பெரிய பெரிய பண்டிதர்களும் வழங்கிவருகிறார்கள். दुर्ज्ञेयम् என்பதற்கு என்ன பொருளென்றால், அறியமுடியாதது என்பதாம். வியாகரண சாஸ்த்ரப்படி இப்பதம் எவ்விதமாக நிஷ்பந்நமாகவேணுமென்றால், दुर्ज्ञानम् என்றே நிஷ்பந்நமாகவேண்டும். அஷ்டாத்யாயியில்

" ईषद्दुस्सुषु कृच्छ्राकृच्छ्रार्थेषु खल् " என்பது ஒரு ஸூத்ரம். இதனால் விதிக்கப்பட்ட கல்லுக்கு அபவாதமாக " आतोयुच् " என்பது மற்றொரு ஸூத்ரம். இந்த ஸூத்திரத்தின்படி दुर्ज्ञानम्, सुज्ञानम् என்றுதான் ஶப்தஸ்வரூபம் தேறும். ज्ञेयम् என்கிற ஶப்தம் ஸாதுவேயானாலும் (दुः) என்பது முன்னே उपसर्गமாக வரும்போது दुर्ज्ञानम् என்று ஆய்விடுமேயல்லாது दुर्ज्ञेयम् என்று ஆவதற்கு வழியில்லை. நம் ஸ்ரீ பாஷ்யகாரர் கீதாபாஷ்யத்தில் நான்காவது அத்தியாயத்தில் 16, 17-சுலோகங்களின் அவதாரிகையில் दुर्ज्ञान மென்றே பிரயோகித்தருளியிருப்பதைப் பார்க்கலாம். * वक्ष्य माणस्य कर्मणो दुर्ज्ञानत्वमाह * कुतोऽस्य दुर्ज्ञानतेत्यत्राह * என்றவை காண்க.

வேதாந்த தேசிகனும் பாதுகா ஸஹஸ்ரத்தில் " रामे राज्यं पितुरभिमतम् " என்கிற ச்லோகத்தில் " दुर्विज्ञानस्वहृदयमहो दैवमत्र प्रमाणम् " என்று பிரயோகித்தருளியிருப்பதும் நோக்கத் தக்கது. ஸ்ரீ ராமாயணத்தில் வாலியை நோக்கிப் பெருமாள் அருளிச் செய்யுமிடத்து * सूक्ष्मः परमदुर्ज्ञेयः सतां धर्मः प्लवङ्गम * என்றதில் दुर्ज्ञेयः என்றிருப்பது ஆர்ஷ ப்ரயோகம் என்று கொண்டுவிடலாம். ஈடு முப்பத்தாறாயிரப்படி முதலான மஹாக்ரந்தங்களில் दुर्ज्ञेय மென்கிற ப்ர யோகம் காணப்படுகிறது. திருவாய்மொழியில் (5—3—5) "அறிவரு மேனி மாயத்தன்" என்ற விடத்து ஒன்பதினாயிரப்படியில் " दुर्ज्ञेय स्वभावனாய் " என்றும், ஈட்டில் " அவன் दुर्ज्ञेय னென்றால் அவன் दुर्ज्ञेयதையை இப்போதே அறியவேணும்" என்றும் காண்கிறது. ஸர்வஜ்ஞர்களான ஆசாரியர்கள் இப்படி அருளிச்செய்தது எதுகொண்டு? என்கிற விசிகித்ஸை அடியேனுக்கு நெடுநாளாக இருந்தது.

60. ஸாயணமஹாதேவர் எழுதிய ஸர்வதர்சந ஸங்க்ரஹம் என்னும் உயர்ந்த க்ரந்தத்தைப் பார்த்துக்கொண்டு போம்போது ஜைமிநி தர்சந ப்ரகாணத்தில்— " सर्वोसरणस्य असर्वज्ञ दुर्ज्ञानत्वात् " என்று காணப்பட்டது. அதிலேயே மேலே शाङ्करदर्शनப்ரகரணத்தில் — " सर्वथा बाधवैधुर्यस्य असर्वज्ञ दुर्ज्ञेयत्वात् " என்றும் காணப்பட்டது. ஒருவரே ஒரு க்ரந்தத்திலேயே दुर्ज्ञान மென்றும் दुर्ज्ञेय மென்றும் பிரயோகித்திருக்கின்றாரே, இது எப்படி? என்கிற விசிகித்ஸையுமிருந்தது. साधुत्वसमर्थनத்திற்காகவே பிறந்ததான दुर्घटवृत्ति யென்னும் வியாகரண க்ரந்தத்தைக் கொண்டு பார்த்ததில் ஒரு தெளிவு ஏற்பட்டது. அதில் (பக்கம் 70-ல்) ' आतोयुच् ' என்கிற ஸூத்ரத்தை யெழுதி " कथं दुर्विज्ञेयमपि धर्मं श्रद्दधात्युदारधीरिति प्रयोगः ? " என்று ஆஶங்கித்துக்கொண்டு " उच्यते । दुःखेन ज्ञेयमिति प्रादिसमासः " என்று உபபத்தி வெளியிடப்பட்டது. ஆகையாலே दुर्ज्ञेय மென்று காண்கிற விடங்களில் இப்படியே உபபத்தி கொள்ளவேணு மென்று நிச்சயித்துக்கொண்டேன். இப்படி சிரமப்பட்டு ஸமாதானம் சொல்லவேண்டும் படியான பிரயோகத்தை மஹான்கள் ஏன் கைக்கொள்ளவேணும்? என்று சிலர் கேட்கக்கூடும். दुर्ज्ञान மென்றால் दुरवगमं என்கிற அர்த்தத்திற்கு झटिति बोधம் உண்டாவது அரிது என்கிற எண்ணமே காரணமாயிருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

61. அச்சுப்புத்தகங்களில் காணப்படும் பிழைகளை அனேகமாய் ஓலை ஸ்ரீகோசங் களிலிருந்து திருத்திக்கொள்ள நேருகின்றது. ஓலை ஸ்ரீகோசங்களில் பிழையே கிடையாதென்று சொல்லமுடியாது. அவற்றிலும் பிழைகள் காணப்படுகின்றன. பிழையுற்றிருந்த ஒரு ஓலை ஸ்ரீகோசத்தை மாத்ருகையாகக் கொண்டு புத்ரிகைகளாக அனேக ஓலை ஸ்ரீகோசங்கள் அவதரிக் கின்றன. மாத்ருகையில் இருந்த பிழைகள் புத்ரிகைகளெல்லாவற்றிலும் வாசியற விழுந்து விடுகின்றன. ஆகவே, நாலைந்து ஓலை ஸ்ரீகோசங்கள் கிடைத்தாலும் பிழைகள் துல்யமாகவே யிருப்பதால் த்ருப்தி ஏற்படுகிறதில்லை. இதைப்பற்றி ஒரு பெரியவிஷயம் இங்கே எடுத்துக்காட்டு கிறேம். ஸ்ரீமத் ரங்கராமாநுஜஸ்வாமி [உபநிஷத் பாஷ்யகாரர்] ச்ருத ப்ரகாசிகைக்கு ஒரு வியாக்கியானமாக भावप्रकाशिकै பணித்திருப்பது ப்ரஸித்தம். அதில் (முதல் அத்யாயம் இரண்டாவது பாதத்தில், அந்தர்யாமியதிகரணத்தில்) [பக்கம் 253, வரி 3.] " एवं प्राप्त इतीत्यस्यानन्तरं सूत्र इति क्वचित् कोशे पठ्यते ; न तस्य प्रयोजनं पश्यामः । " என்கிற பங்க்திகள் காணப் படுகின்றன. அந்தர்யாம்யதிகரணச்ருதப்ரகாசிகையில் * एवं प्राप्त इति * என்கிற வாக்கியத் திற்குப் பிறகு ' सूत्रे ' என்று ஒரு பதம் சில ஸ்ரீகோசங்களில் காணப்படுகின்றதாகவும், அது தமக்கு அந்வயிக்கவில்லையென்பதாகவும் ஸ்ரீமத் ரங்கராமாநுஜ ஸ்வாமி ஸாதித்திருப்பதாகத் தேறுகின்றது. ' सूत्रे ' என்பது இல்லாமலே சில ஸ்ரீகோசங்கள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் இதனால் காட்டினராகிறர். இப்போதுள்ள ச்ருதப்ரகாசிகை அச்சுப்பதிப்புகளில், பூர்வபக்ஷம் முடிந்து ஸித்தாந்தம் ஆரம்பிக்கையில் * एवं प्राप्त इति * என்பதற்குப்பிறகு [सूत्रे] என்பது காணப்படுகிறது. இது அந்வயிக்கவில்லையென்று பாவப்ரகாசிகாகாரர் ஸாதித்திருக்கிறபடி அந்வயிக்காமலிருப்பதும் வாஸ்தவம்தான். இதைப்பற்றின உண்மையை ஆராய்ந்து போந்த தில், [सूत्रे] என்பதற்குப் பிறகு சில வாக்கியங்கள் விட்டுப்போயின வென்று ஸ்பஷ்டமாகத் தெரியவந்தது.

" सूत्रे अधिदैवम् अधिलोकमिति न निर्दिष्टम् । दैवलोकादिष्वित्यपि न निर्दिष्टम् । अधिदैवाधिलोकादिष्वित्येव निर्दिष्टम् । तस्मान्नार्थपरम् । तथा सति अधिशब्दसप्तम्योः पौनरुक्त्यात् । अपि तु वाक्यपरमित्यभिप्रायेण व्याचष्टे— अधिदैवाधिलोकादिपदचिह्नितेषु वाक्येष्विति ।"

என்று இவ்வளவு பங்க்திகள் ச்ருதப்ரகாசிகாசார்யர் அருளிச் செய்தவை. இவற்றுள் [सूत्रे] என்பதற்கு மேல் [व्याचष्टे] என்கிற வரையிலும் உள்ள பங்க்திகள் விடுபட்டுப்போயிருக் கின்றன. व्याचष्टे என்பதில் அந்வயிக்கும்படியாக * अधिदैवाधिलोकादिपदचिह्नितेषु वाक्येष्विति * என்று முற்றுப்புள்ளி போட்டுத் தனியே நிறுத்தப்படவேண்டும். அச்சுப்பதிப்பில் அப்படி நிறுத்தாமல் ....वाक्येष्वित्यनेन - என்று மேலோடே சேர்த்துப் பதிப்பித்துள்ளார்கள். இது நிற்க.

அச்சில் விடுபட்டுப் போயிருக்கின்றன வென்று மேலே நாம் எடுத்துக்காட்டின வாக்கியங்கள் அச்சில் மாத்திரம் விடுபட்டுப்போயிருக்கவில்லை; ஓலைப்புத்தகங்களிலும் விடுபட் டன என்பது முன்னம் எடுத்துக்காட்டிய भावप्रकाशिकासूक्तियிலும் ஸ்பஷ்டமாகிறது. முந்நூறு நானூறு வருஷங்களுக்கு முன்னமிருந்த ஓலை ஸ்ரீகோசங்களிலும் இத்தகைய கோளாறுகள்

விளங்கிருக்கின்றனவென்று நன்கு விளங்குகின்றது. [सूत्रे] என்பதற்கு மேல் இருக்க வேண்டிய வாக்கியங்கள் இல்லாமையினாலே सूत्रे என்பது அநந்விதமாய்ப் போகவே அதையும் விட்டுவிட்டுச் சில ஸ்ரீகோசங்கள் எழுதியருளப்பண்ணப் பட்டனபோலும். அப்படிப்பட்ட ஸ்ரீகோசமும் भावप्रकाशिकाकारர்க்குக் கிடைத்ததாக ஸ்பஷ்டமாகிறது.

62. திருமழிசைப்பிரான் திருவாய்மலர்ந்தருளிய நான்முகன் திருவந்தாதியில் அறுபத்து மூன்றும் பாசுரம்—" தரித்திருந்தேனாகவே தாராகணப்போர், விரித்துரைத்த வெந்நாகத்துன்னை " இத்யாதி. இவ்விடத்துப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தை மறுத்து ' ஆழ்வார்கள் காலநிலை ' என்னுமோர் புத்தகத்தில் புலவரொருவர் எழுதியிருப்பதாவது :—

" இதன் முதலிரண்டடிகட்கு— ' நக்ஷத்ர கதியாயிருக்கிற ஜ்யோதிஸ்-சாஸ்த்ரத்தைச் சொன்ன திருவனந்தாழ்வானுக்கு ஆத்மாவாயிருக்கிற உன்னை ' என்பது பூர்வ வியாக்கியானம். இதன்படி ' தாராகணப்போர் விரித்துரைத்த ' என்ற விசேடணம் ஆதிசேடனுக்கு உரியதாகும். ஆனால் அவனை இவ்வாறு விசேடிப்பதற்குரிய நேரான பொருத்தமொன்றுங் காணப்படவில்லை. ஆதிசேடன் செய்த சோதிடநூல் இன்னதென்பதும் தெரிந்திலது. அதனால் ' வெந்நாகத்துன்னை ' என்றுள்ள பாடம் ' விரித்துரைத்த வென்னாகத்துன்னை ' என்றிருந்த பழம் பாடத்தினின்றும் மாறியதோ என்று கருத இடந்தருகின்றது. ' (சோதிடநூலை) விரித்துரைத்த (என்+ஆகத்து =) எனது நெஞ்சிடமாகவுள்ள, உன்னை ' என்பது இப்பாடப்படி பொருளாகும்.......இங்ஙனம் ' தாராகணப்போர் விரித்துரைத்த, என்பது ஆழ்வார்க்குரிய விசேடணமாயின், தம்மாற் செய்யப்பெற்ற சோதிடநூலொன்றைப்பற்றி அவர் குறிப்பிட்டனராவர். அத்தகைய நூல் யாது என்பது ஆராய்ந்து அறிதற்குரியது. " என்றும்.

பகவத் கிருபையாலும் ஸதாசார்ய கடாக்ஷத்தாலும் ஆழ்வார்களருளிச்செயல்களின் உண்மைப் பொருள்களை நன்குணர்ந்து உலகமுகக்க அருளிச்செய்தவரும், இற்றைக்குச் சற்றேறக்குறைய எழுநூறு ஆண்டுகட்கு முன்பு ஸர்வஜ்ஞராய்ப் புகழ்பெற்று விளங்கினவருமான பெரிய வாச்சான் பிள்ளை பிழையான பாடமொன்றைக்கொண்டு தவறாக வியாக்கியானஞ் செய்து விட்டாரென்று எழுதத் துணிந்தது மிக்க ஸாஹஸமே. " வெந்நாகத்து " என்பது பெரிய வாச்சான் பிள்ளை உரைசெய்தருளின பாடம். " என் ஆகத்து " என்பது இப்புதிய புலவர் கற்பிக்கும் பாடம். பழைய பாடத்திற் பொருத்தமின்மை கூறப்புகுமவர் தாங் கூறும் பாடத்தில் ஒரு பொருத்தம் காட்டித் தீரவேண்டும். ஆதிசேஷன் செய்த சோதிடநூல் இன்னதென்று தெரியவில்லை யென்னுமிவர், திருமழிசைப்பிரான் செய்த சோதிடநூல் இன்னதென்று தெரிந்துகொண்டவராதல் வேண்டும். " பார்க்கவம் பிருகு சூத்திரம் முதலிய கணித சோதிட கிரந்தங்கள் உள்ளன ; இவைபோன்றதொன்றே பிருகுவமிசத்தவரான ஆழ்வார் அருளிச் செய்ததாக வேண்டும் " என்று அநுமானங் கூறுகின்றாரிப்பெரியார். இத்தகைய அநுமானம் ஆதிசேஷன் பக்கல் கூடாமைக்குக் காரணமறிகின்றிலோம். வேதாங்கங்களுள் ஒன்றான ஜ்யோதிஷத்திற்கு ஆதிசேஷன் ப்ரவர்த்தகன் என்னுமிடத்தை நாம் பல பிரமாணங்கள் கொண்டு மூதலிக்கவல்லோம்.

ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ராத்நத்தில் திருவனந்தாழ்வானைப் பற்றின ச்லோகமொன்றில் * " ப்ரக்ருஷ்ட விஜ்ஞாநபலைகதாமநி " * என்ற விடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளாநின்ற ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் (ஸ்தோத்ரபாஷ்யத்தில்) " पञ्चविधज्योतिस्सिद्धान्त प्रवर्तकत्वेन ज्ञानप्रकर्षोऽस्य प्रसिद्धः " என்று அருளிச்செய்திருப்பதொன்றே போதும். " बभासे ज्योतिषी विद्या

यदुपज्ञं धरातले । तमनन्तमनन्तस्य तल्पं संश्रये हृदि ॥ " என்கிற பிரமாண வசனமொன்றும் ப்ரஸித்தமாகவுள்ளது. இன்னமும் ஊன்றி ஆராயப்புகில் இத்தகைய பிரமாணங்கள் பல கிடைக்கக் குறையில்லை. இது நிற்க. திருமழிசைப்பிரான் பல மதங்களிலும் புகுந்து அந்தந்த மதங்கட்குச் சார்பாகப் பல நூல்களுமியற்றினரென்னும் ப்ரஸித்தியிருந்தாலும் சோதிடநூல் இயற்றியருளினராக எங்குங் கூறப்படவில்லை. அங்ஙனே ஏதேனுமொருநூல் தாம் செய்தருளியிருந்தாலும் அதனை இங்கு அநுவதித்தருளிச் செய்தற்கு ப்ரஸக்தி யொன்றுமில்லை. இவ்வண்ணமருளிச்செய்யும் வழக்கம் ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தங்களிலொன்றிலுமில்லை. ஆகவே, ' என் ஆகத்து ' என்று பாடத்தை மாறுபடுத்தல் பயனற்றது. ஸர்வஜ்ஞர்களான பூர்வாசார்யர்களின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளில் அல்பஜ்ஞரான நாம் குறை கூறுதற்குச் சிறிதுமதிகாரமுடையோமல்லோம். ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி நம் மணவாளமாமுனிகள் வரையிலுள்ள ஸதாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் வேதவாக்கினுஞ் சிறந்து பிரமாணமாவனவென்று திண்ணிதாகக் கொள்வாரது திருவடிகளே சரணம். பூருவர்களருளிச்செய்த பொருள்கட்கு முரண்படாமல் விசேஷார்த்தங்களை விவேகித்துக் கூறவல்லார் எவ்வளவும் கூறலாம். இதுவே கலையறக்கற்ற மாந்தர் பணியாம்.

63. ஸாமாந்ய கவிகளின் அருமையான வாக்குகளில் நேர்ந்துள்ள சில பிறழ்வுகளை எண்டெடுத்துக் காட்டி ரஸிகமநோவிநோதநம் செய்வோம். குவலயாநந்தத்தில் துல்யயோகிதாலங்காரப்ரகரணத்தில்—" संजातपत्रप्रकरान्वितानि समुद्वहन्ति स्फुटपाटलत्वम् । विकस्वराण्यर्ककराभिमर्शात् दिनानि पद्मानि च वृद्धिमीयुः ॥ " என்கிறவொரு ச்லோகம் உதாஹரிக்கப்பட்டுள்ளது. இதில் க்ரீஷ்மருதுவின் தினங்களுக்கும் பத்மங்களுக்கும் சிலேடையினால் ஸாம்யம் நிர்வஹிக்கப்பட்டுளது. இதில் " ஸஞ்ஜாதபத்ரப்ரகராந்விதாநி " என்கிற முதல் விசேஷணத்தை விவேகிகள் நன்கு பராமர்சிக்கவேண்டும். பத்மங்களுக்கு ஸஞ்ஜாதபத்ரப்ரகராந்விதத்வம் உள்ளது தான்; இது திநங்களுக்கு எப்படி ? என்று விமர்சிக்கவேணும். இங்கு வியாக்கியானம் செய்தவர் ஏதோ எழுதியிருக்கிறார். அதனால் விவேகிகள் த்ருப்தி பெறார்கள். இங்கு ஒரு பிறழ்வு ; ஸஞ்ஜாத என்பதை [सज्जात] என்று திருத்தி வாசித்துப் பாருங்கள்; [सज्जैः आतपत्रप्रकरैः अन्वितानि ग्रीष्मर्तुदिनानि] வேனிற் காலத்தில் எங்குப்பார்த்தாலும் குடைமயமாகவே யிருக்குமன்றோ ? ஸஜ்ஜங்களான [ஸந்நத்தங்களான] आतपत्रप्रकரங்களோடே - குடைகளின் கூட்டங்களோடே, अन्वितानि என்றபடி. पद्मपक्ஷத்திலும் सद्भिः—श्लाघ्यैः, जातैः—प्रादुर्भूतैः, पत्रप्रकरैः—दलसमूहैः अन्वितानि என்றாகிறது. இப்போதுள்ள ஸ்வாரஸ்யாதிசயத்தை ரஸிகர்கள் நன்கு உணர்வார்கள்.

64. குவலயாநந்தத்திலேயே விஷமாலங்கார ப்ரகரணத்தில், " யதா மதீயே வரதராஜஸ்தவே " என்று தொடங்கி " भानुर्निशासु भवदङ्घ्रिसरोजशोभालोभात् प्रताप्य किरणोत्करमाप्रभातम् । तत्रोद्धृते हुतवहात् क्षणलुप्तरागे तापं भजत्यनुदिनं स हि मन्दतापः " என்கிற ச்லோகமுதாஹரிக்கப்பட்டுள்ளது. இது தேவப்பெருமாள் விஷயமாக அப்பய தீக்ஷிதர் இயற்றிய ச்லோகம். இதன் கருத்தாவது—பேரருளாளனே ! ஸூர்யனானவன் உன்னுடைய திருவடித்

தாமரையின் மிகச்சிவந்த சோபையைத் தான் அடைய விரும்பினன். [ஸூர்ய கிரணங்கள் இரவில் அக்நியை ஆவேசிக்கின்றனவென்று வேதத்திற் கூறப்பட்டிருப்பதை ஸ்மரிப்பது.] என்ன செய்தால் தன் கிரணங்கள் தேவப்பெருமாளுடைய திருவடிபோல் சிவக்கும் என்று பார்த்து இரவெல்லாம் தன் கிரணங்களை அக்நியில் புகுவித்து பொழுது விடியுமளவும் நன்றாகக் காய்ச்சினன். நல்ல சிவப்பு உண்டாய்விட்டது என்று கண்டு அக்நியில் நின்றும் கிரணங்களை யெடுத்து வெளியில் பரப்பினன். அவை முதலில் ப்ரஸரிக்கும்போது சிவந்திருந்தாலும் க்ஷணகாலத்திற்குள் சிவப்பு மாறிப் போகவே, ஐயோ! நாம் மிகவும் சிரமப்பட்டுச் செய்த காரியம் அற்ப பலனைத் தலைக்கட்டிற்றே!' என்று ஹ்ருதயத்தில் தாபத்தை யடைந்திட்டான். அந்தத் தாபமே வெய்யிலாகக் காண்கிறது. இவ்விதமாக அவன் முயற்சி செய்வதும், அது அற்ப பலனாவதும், அதனால் அவன் தாபமடைவதும் ஒருநாள் இரண்டு நாள் அன்று; அநாதி காலமாக நாடோறும் இந்த ஸம்பவம் நிகழ்ந்து வருகின்றதென்பதாம். இந்த ச்லோகத்தில் "ஸ ஹி மந்ததாப: என்பதற்கு எங்கே அந்வயம்? என்ன அர்த்தம்? என்று பராமர்சிக்கவேணும். வியாக்கியானம் செய்தவர் எழுதியிருக்கும் பொருள் விரஸமேயாகும். "ஸ ஹி மந்ததாத:" என்று திருத்தி வாசித்துப் பாருங்கள். இப்போது மிகவும் ரஸ்யமான பொருள் கிடைக்கும். ஸூர்யன் செய்த காரியம் பயன்படவில்லையாகில் அவன் அதை விட்டுத் தொலைக்கலாமே; ஒவ்வொரு நாளும் முயற்சி செய்வதும் வருந்துவதுமாக இருப்பானேன்? "தாபம் பஜதி அநுதிநம்" என்கிறீரே, இவ்வளவு மூடனா அந்த ஸூர்யன்? என்று கேள்வியுண்டாக, அதற்கு விடை கூறுகிறார் "ஸஹி மந்ததாத:" என்று;* சநிமந்தௌ பங்குகாலௌ * என்ற அமரகோசத்தின்படி மந்தனென்னும் பெயரையுடையனாகிய சநியானவன் ஸூர்யனது புத்திரன் என்பது ப்ரஸித்தம். "காரணகுணா: கார்யே ஸங்க்ராமந்தி" என்கிற நியாயத்தின்படி பிதாவான ஸூர்யன் மூடனானபடியால்தான் புத்திரனும் மூடனாகப் பிறந்தான். புத்திரனுடைய ஸுப்ரஸித்தமான மந்தத்வத்தைக்கொண்டு பிதாவின் மந்தபுத்தித்வத்தை அனைவருமறியலாமென்று வெகுசமத்காரமாகக் காட்டினாராயிற்று. இங்ஙனே கவியின் விவக்ஷையைக் கொள்ளாவிடில் (ஸ ஹி) என்றது மிகவும் பயனற்றொழியும். இந்தத் திருத்தங்கள் ஸஹஸா அடியேன் செய்பவையல்ல. ஒரு அக்ஷரத்தின் விபர்யாஸத்தினால் ஏற்படுகிற ரஸபங்கம் எவ்வளவென்பதை விவேகிகள் ஆழ்ந்துணரவேணும். .... *

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்

எழுதிய

அறுபத்துநான்கு நன்மொழிமாலை

முற்றிற்று.

ரத்னம் பிரஸ், மதராஸ் - 1.

(1) க்ரந்தமாலா ஆபிஸ், காஞ்சீபுரம்.

(2) கரலபாடி ராதாகிருஷ்ணய்யர்,
147, அண்ணாப்பிள்ளை தெரு, மதராஸ்.

G. ரங்கைய நாயுடு, மதராஸ்.

(இவர் சென்னையில் பிரசாரம் செய்ய நியமிக்கப்பட்டவர்.)

If Un-delivered please return to:

P. B. Annangaracharya, Kancheepuram.

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Sathgrantha Prakasana Sabha
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press,
Sannidhi Street, Little Kancheepuram.